# அண்மைக்காலத்து இந்திய மெய்ப்பொருளியல்

(RECENT INDIAN PHILOSOPHY)

சி. இராமலிங்கம்

கற்க கசடற

நாட்டுப் பாடநூல் நிறுவனம்

QMGC-W
GEN-LIB
08362 34-3
HISTORY

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—680

# அண்மைக்காலத்து இந்திய மெய்ப்பொருளியல்

(மேற்பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத் திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்
**சி. இராமலிங்கம்**, எம்.ஏ.,
ரீடர்,
மெய்ப்பொருளியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

*First Edition—March, 1976*

T.N.T.B.S. (C.P.). No. 680

© Government of Tamilnadu

# RECENT INDIAN PHILOSOPHY

C. RAMALINGAM

Price Rs. 7-85

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

*Printed by*

M/s. THOZHAN ACHAGAM,
28, Katchaleeswarar Garden Street,
Madras-600001.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | தோற்றுவாய் | ... | 1 |
| 1. | பிரம்ம சமாஜம் முதலியன | ... | 19 |
| 2. | இராமலிங்க அடிகள் (1823–1874) | ... | 62 |
| 3. | இராமகிருஷ்ண பரமஹம்ஸர் (1836-1886) | ... | 80 |
| 4. | விவேகானந்தர் (1863–1902) | ... | 106 |
| 5. | இரவீந்தரநாத் தாகூர் (1861–1942) | ... | 127 |
| 6. | காந்தி அண்ணல் (1869–1948) | ... | 174 |
| 7. | பகவான் இரமணர் (1879–1950) | ... | 222 |
| 8. | அரவிந்தர் (1872–1950) | ... | 244 |
| 9. | இராதாகிருஷ்ணன் (1888–1975) | ... | 290 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | ... | 338 |
| | கலைச்சொற்கள் | ... | 341 |

# பதிப்புரை

அண்மைக்காலத்து இந்திய மெய்ப்பொருளியல் என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 680ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 715 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

# தோற்றுவாய்

இந்தியப் பெருநிலப் பரப்பில் பல்வேறு இனமக்கள் ஒன்றி வாழ்ந்துள்ளனர். இந்தியாவில் பயிலப்பெறும் மொழிகளும் பலவாகும். இவற்றுள் ஒரு சில திருந்திய செப்பமுற்ற மொழிகளாகும்; வேறுசில பேசப்பெற்று மட்டும் வருகின்றன; அவற்றிற்கு எழுத்து வடிவம் இல்லை. இம் மொழிகளில் சிலவற்றுள் பிறந்த இலக்கியங்கள் தொன்மை வாய்ந்தன. இவ் இலக்கியங்களால் மக்களிடையே தொடர்புமிகுந்து கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்து வந்துள்ளது. பழங்காலத்திலும் இன்றும் நமது நாட்டு மக்களிடையே இதிகாசங்களும் புராணங்களும் பெற்றுள்ள செல்வாக்கு ஏனைய தத்துவ சமய நூல்களை நோக்க மிகுதியே என்று கொள்ளுதல் வேண்டும். நமது நாட்டில் மிகப் பழைய காலந் தொடங்கி இன்றுவரை நிலவிவரும் சமயம் சைவ சமயமாகும். வேதம் உபநிடதம் போன்ற மூல இந்து சமய நூல்களில் பரக்கக் காணும் சமய தத்துவக் கருத்துகள் தொடர்ந்து இந் நூற்றுண்டுவரை விரித்துரைக்கப்பெற்றும், விளக்கப்பெற்றும் வந்துள்ளன. உபநிடத காலத்திலேயே வேள்விகட்கு உட்பொருள் காணத்தலைப்பட்டனர். இராஜசூய யாகம் செய்கின்ற ஒருவன் சக்கரவர்த்தியாக விரும்புன்றவன் ஆவான். இந்த யாகத்தின் உட்பொருள் யாதெனில், தன்னை வெல்லுபவன் தனது புற இயற்கையை வெல்லுபவன் உயர்ந்த குறிக்கோளாகிய தன்னுணர்வு (Self-realization) அடைந்தவனுவான் என்பதாகும். பின்னர் சமணம், பௌத்தம் முதலிய சமயங்கள் தோன்றின. தத்துவச் சிந்தனைகளில் மக்கள் ஆழ்ந்திருந்த காலம் அக் காலம். 'வறட்டுத் தத்துவம் ஒருவனையும் தூய்மைப்படுத்தாது. அமைதியே தூயதாக்கவல்லது' என்பது புத்தர் கருத்தாகும். வேள்விகள் புரிவதிலே மிகுந்த நாட்டம் உடையவராக அன்று

மக்கள் திகழ்ந்தனர். இத்தகைய மனநிலையை மாற்றி, மனிதன் துன்பப்படுவதற்குக் காரணம் அவனது ஆசையே என்றும், அவ் ஆசையை அறவே நீக்குதல் இயலும் என்றும், நீக்குதற்குரிய நெறி ஒன்று உண்டென்றும் புத்தர் அருளிய வாய்மைகளால் அறிகின்றோம். சமணமும் பௌத்தமும் இறையுண்மையை ஏற்காத சமயங்கள். ஆனால், மறுபிறப்பு உண்டு என்று ஏற்றவை. புத்தரும், மஹாவீரரும் விளைத்த புரட்சிகள் கருத்துலகில் முதலிலே அமைந்தன. அவர்களிருவரும் அறவாழ்வில் நாட்டம் மிக்கவர்களாக விளங்கிய காரணத்தால் மக்கள் இவ்விரு சமயங்களால் பெரிதும் ஈர்ப்புற்றனர். இன்றும் பௌத்தமும், சமணமும் நம்மிடையே வாழ்கின்ற சமயங்களாகும். பௌத்தம் நமது நாட்டினின்று கடல் கடந்து சென்று கீழைநாடுகளிலெல்லாம் செல்வாக்குப் பெற்றது. ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் உலகின் பல பகுதிகளில் பௌத்தம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த பின்னே, தனது தாயகத்தில் தத்துவ மேதை இராதாகிருஷ்ணன் குடியரசு தலைவராக விளங்கிய காலத்தில் வரவேற்கப் பெற்றது. பௌத்தம் அயல்நாடுகளில் பரவத் தலைப்பட்டபோது நமது நாட்டில் அச் சமயத்தின் செல்வாக்குக் குறைந்தது. சமணம் தொடர்ந்து நிலவி வருகின்றது. காந்தி அண்ணலின் வாழ்க்கையில் சமணக் கருத்துகள் பெற்ற பெரும் பங்கினை அறிவோம்.

சங்கரர் தோன்றி அத்துவித வேதாந்தத்தின் தனிச் சிறப்புகளை நிறுவினார். வேதாந்த சூத்திரங்கட்கும் பல பேருரைகள் எழுந்தன. அவற்றுள் சங்கரர், இராமானுஜர், மத்துவர் என்ற மூன்று ஆசாரியர்கள் எழுதியவை பெருவழக்காக உள்ளன. உபநிடதக் கருத்துகள் பலதிறப்பட்டுக் காணப் பெற்றதால் அவற்றிடையே நிலவும் ஒருமைக் கருத்துகளைத் திரட்டி, வரன்முறைக்குட்படுத்தி முறைமையான தத்துவ நூலாக அமைக்க முயன்ற முயற்சியே பிரம்ம சூத்திரங்களாக முகிழ்த்தன. இச் சூத்திரங்கட்கு உரைகண்ட ஆசாரியர்கள் தத்தம் உரைகளின் மூலம் தாம்தாம் கண்ட அத்துவித, விசிட்டாத்துவித, துவைத உண்மைகளையே முடிந்த முடிபுகளாக காட்டவும், நிறுவவும் முயன்றனர். இவ்வகை முயற்சிகளால் தத்துவக் கொள்கைகள் பலவாயின. இக் கொள்கைகளுள் இரண்டு முக்கியமானவை: ஒன்று பரம்பொருளை அருவ நிலையினதாகக் குறிப்பிடும்; மற்றொன்று உருவ நிலையினதாகக் கூறும். முன்னது ஞானநெறியையே நெறியெனக் கூறும். பின்னது பக்தி நெறியே சிறந்தது என்று போற்றும். சங்கரர் தத்துவ உலகில் தன்னிகரற்ற தத்துவக் கதிரவனாக விளங்கிய போதிலும், அந் நாளில் நிலவிய அறுவகைச் சமயங்

களையும் இணைத்தார். அவை ஒருவகையில் உருப்பெற்று நிலவ வழிசெய்தார் எனலாம். ஆதலால், 'ஷண்மத ஸ்தாபனசாரியர்' என்று இன்றும் சங்கரரைப் போற்றுகின்றோம்.

பக்தி இயக்கம் விரைந்து பரவியது. தென்னிந்தியாவில் சைவர்களும் வைணவர்களும் பக்திப் பயிர் தழைத்து ஓங்க எண்ணிறந்த பாடல்களை அருளிச் செய்தனர். வைணவத் திருப்பதிகளாகிய நூற்றெட்டுப் பதிகளும் வைணவக் குரவர்களால் பாடப்பெற்றன. இதேபோன்று தமிழகமெங்கணும் பரந்து கிடக்கும் ஆலயங்கள் பெரும்பான்மையன சைவசமயக் குரவர்களால் பாடப்பெற்றன. பக்தி நெறி வேரூன்றியது எனலாம். இந் நெறி வடக்கேயும் பரவியது. சைதன்யர், கபீர் போன்ற பெரியவர்கள் பக்தியியக்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஏற்றனர். இராமானுஜர் பதினொன்றும் நூற்றாண்டில் வைணவ தத்துவக் கோட்பாடாகிய விசிட்டாத்துவிதத்தைத் தமது ஸ்ரீபாஷ்யத்தால் நிறுவினார். பின்னர் மத்துவர் தமது சித்தாந்தமாகிய துவைதத்தை நிறுவினார். இவர்களிருவரும் பிரம்ம சூத்திரங்கட்குப் பேருரை கண்டதுமன்றி, உபநிடதங்களுள் பத்திற்கும் பகவத்கீதைக்கும் தத்தம் மதம் பற்றி உரை கண்டார்கள். பிரம்ம சூத்திரம், உபநிடதம், பகவத்கீதை ஆகிய இம் மூன்று நூல்களை முக்கிய மூல, மூன்று நூல்களெனத் தொன்றுதொட்டு போற்றி வருகிறோம் (பிரஸ்தான திரயம்). வல்லபர், நிம்பார்க்கர், பாஸ்கரர் போன்ற சிந்தனையாளரும் வேதாந்த உண்மைகள் நன்கு மக்களிடையே பரவும் வகை தமது சிந்தனைகளை விளக்கினர். என்றாலும், இந் நூற்றாண்டின் முதல் முப்பதாண்டுகள் வரை நமது நாட்டில் கற்றறிந்தோர் யாவரும் வேதாந்தம் என்றால் அது அத்துவிதமே என்று எண்ணி வந்தனர். சுவாமி விவேகானந்தர் அத்துவித உண்மைகளைப் பெருமளவு ஏற்றாலும், நடைமுறைக்கு ஒவ்வும் வகையில் வேதாந்தத்தை விளக்கினார். தாம் மேற்கொண்ட பெரும்பணிக்கு இயைய இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் மக்களது துன்பம் நீக்கும் பணிகளில் ஈடுபடும் வகையில் வேதாந்தம் செய்முறை வேதாந்தமாக (Practical Vedanta) வளர்வதாயிற்று.

பதினான்காம் நூற்றாண்டு தொடங்கித் தென்னிந்தியாவில் சைவ சித்தாந்தம் என்ற தத்துவக் கொள்கை வளர்வதாயிற்று. பதினான்கு மூல நூல்களைக் கொண்டது இக் கொள்கை. பன்னிரு திருமுறைகளைச் சைவ சமயத்தின் அடிப்படை நூல்களெனலாம். சைவ தத்துவ நூல்கள் இன்றும் தோன்றிய வண்ணமுள்ளன. சைவ சமயக் குரவர்கள் முதலாகச் சேக்கிழார் ஈறுகப் பாடிய நூல்களையே நாம் பன்னிரண்டு திருமுறைகளெனப் போற்றுகிறோம்.

பன்னிரண்டெனத் திருமுறைகள் வகுக்கப் பெற்ற பிறகு அருணகிரியார், பட்டினத்தடிகள், தாயுமானுர், இராமலிங்க அடிகள் போன்றவர்கள் பாடியருளிய பாக்கள் எண்ணிறந்தன. இவை யாவும் மனத்தை உருக்கி எளிதில் ஒருமை எய்துவிப்பன. இவற்றைச் சைவவுலகம் தமது மூல நூல்களோடு சேர்த்து எண்ணுவதற்குத் தயங்குகிறது. என்ருே, பன்னிரண்டு திருமுறை என்று நிறுவப் பெற்றதை அடிப்படையாகக் கொள்கின்றனர். தாயுமானுர் பெருந்தகை பக்தி நெறியில் தலைசிறந்தவர் என்ருலும் அவரது பாக்களுள் அடங்கியிருக்கும் தத்துவ உண்மைகள் பலவாகும். தத்துவக் கோட்பாடுகளுள் வேதாந்தமும் சித்தாந்தமும் முக்கியமானவை. இவ்விரண்டையும் இணைக்க அரும்பாடுபட்டார் தாயுமானுர். வேதாந்தம் உள்பொருள் ஒன்றே என்பதில் ஊன்றி நிலைத்து நிற்பது. சித்தாந்தம் முப்பொருள்—பதி, பசு, பாசம்—உண்மையை வலியுறுத்துவது. மாயை என்பது சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் பொதுவான ஒரு கோட்பாடு. ஆனுல், மாயையைப் பற்றி வேதாந்திகள் ஏதும் வரையறையாகக் கூற இயலாது என்று கருதுகின்றனர். சித்தாந்திகள் மாயையை உள் பொருளாகவே மதிக்கின்றனர். வீடுபேற்றில் ஜீவாத்மா, பரமாத்மாவினேடு ஒன்றி விடுகின்றது என்கிறது அத்துவிதம். ஜீவாத்மா தனது உண்மையான ஸ்வரூபத்தை உணர்வதே வீடுபேறு என்றும், இதனுல் நாம் அடையத் தகுந்தபேறு, வேறு உலகில் இல்லை என்றும், நம்மை நாம் உண்மையான நிலையில் ஊன்றி அறிவதே பிரம்மஞானம் என்றும், பக்தியினுல் நாம் ஒருமை எய்தி இறைவனை வழிபட இயலும் என்றும், ஞானத்தினுல் நாம் இறைவனை உணர இயலும் என்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

'ஷட் தரிசனங்கள்' என்று கூறப்பெறுகின்ற ஆறு தரிசனங்கள் நையாயிகம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை ஆகும். இவை ஒருபுறம் வளர்ச்சியுற்றன. பூர்வ மீமாஞ்சையைக் கருமமீமாஞ்சை என்பர். வேதங்கள் என்றுமுள்ளன; அவை பிழையற்றன; அவை விதிக்கும் வழி நாம் ஒழுகினுல் சாலும் என்பது பூர்வ மீமாஞ்சையின் திரண்ட கருத்து. வேதங்கட்குத் தலைமைதந்து இறைவனைப் பின்னணியில் சேர்த்தனர் இம்மீமாஞ்சகர்கள். உத்தர மீமாஞ்சை என்பது வேதாந்தமாகும்.

வேதாந்தக் கொள்கைகள் கிளைத்த வரலாற்றினை மேலே கண்டோம். சங்கரரது அத்துவித வேதாந்தமே எங்கும் ஆட்சி பெற்று விளங்கிய காலம் ஒன்றுண்டு. கடந்த இருபது ஆண்டுகளில் வைணவ, சைவ சித்தாந்தங்களும் இன்று நமது நாட்டிலும் அயல்நாடுகளிலும் நன்கு பயிலப்பெற்று வருகின்றன. இச் சித்தாந்தங்களை விளக்கி ஆங்கில மொழி

யில் நூல்கள் வெளிவந்துள்ளன. ஆகவே, இன்று தத்துவ உலகில் இறைக்கொள்கையை ஏற்போர் ஒருபுறம், பரம்பொருள் கொள்கையை ஏற்போர் மறுபுறம் என்ற நிலையை நாம் எய்தி யுள்ளோம். இறைக்கொள்கை மக்கள் மனத்தில் நன்கு பற்றி யிருக்கின்றது எனலாம். தத்துவக் கொள்கையாகப் பரம்பொருள் கொள்கையை ஏற்றாலும், வழிபடும் தெய்வம் என்று ஒன்றை வகுத்துக்கொண்டு, வழிபட்டு மேன்மை எய்த முற்படுவோர் பலராக விளங்கக் காண்கின்றோம். இறைக்கொள்கையையும் பரம்பொருள் கொள்கையையும் இணைக்க முயன்ற முயற்சிகள் உள. சிறப்பாக, இவ்விரு கொள்கைகளை நன்கு இராம கிருஷ்ணர் விளக்கக் காண்கிறோம். இரவீந்தர், அரவிந்தர் போன்றாரது முயற்சிகளும் பாராட்டத்தக்கன. இதற்கிடையே, அத்துவித உண்மையே தலைசிறந்த உண்மை என்று நமக்கு நினைவூட்டுவதுபோல இரமணர் தோன்றினர். இராதாகிருஷ்ணன் அவர்களும் தமது பரமகருத்து முதற்கொள்கையை ஏற்றாலும், இவ்விரு கொள்கைகட்கும் இடம் தரக் காண்கின்றோம். இவ்விரு கொள்கைகளது இணைப்பு முயற்சி இராமகிருஷ்ணரது வாழ்வில் சிறந்து விளங்கியது எனலாம். பரம்பொருளைச் சமுத்திரத்தின் நீர்ப்பரப்பிற்கு ஒப்பிடுகிறார். நீர்ப்பரப்பில் சில பகுதிகள் தட்பம் மிகுதியாகும்போது, நீர் உறைந்து பனிக்கட்டியாகின்றது. இது போல் தூய உணர்வு நிலையில் உள்ள பரப்பிரம்மம் உறைந்து பக்தனது வழிபடு கடவுளாக உருவங்கொண்டு விளங்குகின்றது. பின்னர், கடந்த நிலையுணர்வு தலைப்படும்போது மீண்டும் நீராகின்ற நிலையைக் காண்கின்றோம். பரம்பொருள், நமது மாற்றம், மனம் கடந்து விளங்குவது. அளவை முறையில் இயங்கும் நமது சிந்தனை பரம்பொருளை அறியத் துணை செய்யாது; அகவுணர்விலேயே இவ் உள்பொருளை நாம் அறிதல் கூடும். இறைவனுக்கு இரு நிலைகள் உள. ஒன்று கடந்த நிலை; மற்றொன்று, கலந்தநிலை. கடந்த நிலையில் பரம்பொருள் கருதுதற்கரியது. இயற்கையில் யாண்டும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற நிலையே நம்மனோர்க்கு எளிதில் அறிந்து இன்புறுகின்ற நிலையாகும். இந் நிலையைத் தாகூர் நன்கு விளக்கியுள்ளார். அரவிந்தர் பரம்பொருளையும் நம்மையும் இணைக்கக்கூடியது விஞ்ஞான மனம் (Supermind) என்றுகூறி இவ்விரு கருத்துகளும் தனித்தனியே கொள்ள வேண்டுவன என்று சொல்லாமல் இவ்விரண்டையுமே ஒருங்கே கொள்ளலாம் என்கிறார். இராதாகிருஷ்ணன் கருத்தும் இதுவே யாகும்.

பகவத்கீதைக்கும் முற்பட்ட காலம் தொடங்கி ஞானம், பக்தி, கருமம் ஆகிய மூன்றையும் இறைவனோடு ஒன்றுவிக்கும்

நெறிகளே இவை என்று கூறி இவற்றை முறையே ஞானயோகம், பக்தியோகம், கருமயோகம் என்று வகுத்தனர். இவ் யோகங்களுள் எது தலைமை உடையது என்பதிலும் கருத்து வேறுபாடு வளர்வதாயிற்று. இம் மூன்று நெறிகளையும் இணைத்த முதன் முயற்சி, பகவத்கீதையைச் சாரும். அரவிந்தர் தமது யோகசாதனையால் இம் மூன்று மார்க்கங்களும் இணைந்து தொழிற்பட வேண்டும் என்றும், மனிதனின் அகவாழ்வு மூன்று நிலைகளை யுடையது என்றும், சிந்தனை, பக்தி, கருமம் ஆகிய மூன்று பாகுபாடுகளைக் கொண்டதென்றும், மனிதன் முழுமையான வளர்ச்சி பெறுவதற்கு இம் மூன்று யோக நெறிகளையும் ஒருங்கே பயிலவேண்டும் என்றும் தாம் தனியே ஒரு நெறி இதற்கென வகுத்தார். இதனையே 'பூரண யோகம்' (Integral Yoga) என்கிறோம். விஞ்ஞான மன உணர்வு (Supramental consciousness) படிமுறையே கீழிறங்கி வருவதாலும், மனித முயற்சி மேலோங்குதலாலும், பூரண யோகம் அரவிந்தரது சிந்தனையில் ஒரு தனித் தன்மையைப் பெறுகின்றது.

கீதை தோன்றிய காலத்திலேயே 'பிரவிருத்தி' என்றும் 'நிவிருத்தி' என்றும் இரு நெறிகள் நிலவின. ஒன்று, உலகியல் வாழ்க்கையில் நம்மை ஈடுபடுத்துவது; மற்றொன்று உலகியலினின்று நீங்கித் தனித்து, யோக ஞானநெறிகளில் நின்று பரம் பொருளை உணர்த்துவதாகும். பிரவிருத்தி, நிவிருத்தி ஆகிய இவ்விரு நெறிகளில் விளங்கும் சிறந்த கூறுகளைக் கொண்டு இவற்றை இணைக்க முற்பட்டார் கிருஷ்ணபரமாத்மா.

உணர்வில் உறுபொருளாக விளங்குகின்ற உள்பொருளை அடைவதே நமது குறிக்கோளாகும். பிரவிருத்தியில் உள்ள குறை அந் நெறி நம்மை உலகியல் வாழ்க்கையில் ஆழ்த்திவிடுவதாகும். நிவிருத்தி நெறியில் உள்ள குறை, பற்றுநீக்கம் என்பதன், பெயரில் மனை, மக்கள், சமுதாயம் ஆகிய யாவற்றையும் துறந்து கானகம், மலைஉச்சி போன்ற இடங்களை நாடித் தனித்திருந்து தவம் மேற்கொள்ளுதலை வலியுறுத்தும். பிரவிருத்தி மார்க்கம் செயலையே வற்புறுத்துகிறது: இங்கு வேண்டுவது செயல் திறனுகும். நிவிருத்தி செயலினின்று நீங்குவதை வற்புறுத்தும். பற்றின்றி நமது கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதன் மூலம் நமக்குரிய கருமத்தை ஸ்வதருமம் (தற்கருமம்) புரிவதன் மூலம், பிரவிருத்தி, நிவிருத்தி மார்க்கங்களின் உட்கிடை நிறைவேறுகிறது. இவ் வுண்மையைத் தாகூர் நன்கு வலியுறுத்துகிறார். காந்தி அண்ணல் சிறந்த கருமயோகி. இராதாகிருஷ்ணனும் பிற சிந்தனையாளரும் பற்றின்றிப் பயன் கருதாமல் ஆற்றுகின்ற தொண்டிற்கு ஏற்றம் தந்து விளக்கியுள்ளனர். இராமகிருஷ்ணர்

மணம் புரிந்து இல்லற வாழ்வை ஏற்றார்; மக்களிடையே வாழ்ந்து உயரிய பக்தி நெறியின் உண்மைகளைத் தாம் உணர்ந்து மக்கட்கு அறிவுறுத்தினார்; உயர்ந்த ஞான நெறியின் உட்கிடையாகத் தன்னுணர்தலையும் தெளிந்தார். காந்தி அண்ணல், தமது வாழ்க்கையின் குறிக்கோள் இறையையுணர்தல் என்றார். அரசியலுலகில் பெருங் கிளர்ச்சிக்குத் தலைமை பூண்டு, வெற்றிகரமாக நடத்தி இந்தியச் சுதந்திரத்திற்குத் தந்தையாக விளங்கினார். அவர் உலகில் நம்மிடையே வாழ்ந்து, பலதிற அலுவல்களைச் செம்மையாக ஆற்றிக் கருமயோகத்தின் சிறப்பை உணர்த்தினார். அரவிந்தர் ஞானயோகத்தின் சிறப்பை நமக்கு எடுத்துக்காட்டுவது போல் தோன்றினாலும் பக்தி, ஞானம், கருமம் ஆகிய முந்நெறிகளையும் முறைமையாகப் போற்றும் பூரண யோக நெறியினை உணர்த்தினார். இவர் இல்லற நெறியினைத் தமது வாழ்க்கையில் போற்றவில்லை எனினும், உலகிற்குத் துறவு நெறியை வற்புறுத்தவில்லை. மக்களிடையே வாழ்ந்து தொடக்கக் காலத்தில் அரசியல் விடுதலைக்காக அரும்பாடுபட்டு, பின்னர்த் தமது யோகசாதனையை மேற்கொண்டார். அவர் கலையுலகுக்கும், தத்துவ உலகிற்கும் ஆற்றிய அருந்தொண்டு போற்றத்தக்கது. கவிஞர் தாகூரும் கடுந்துறவறத்தைப் போற்றவில்லை. ஆதலால், அண்மைக்காலத்து இந்திய மெய்ப்பொருளியல் வரலாறு நமக்கு உணர்த்தும் பேருண்மை இல்லறத்தைத் துறந்து தனியே நாம் ஒதுங்கியிருந்து பரம்பொருளை உணர முற்பட வேண்டுவதின்றி, உலகியல் கடமைகளை ஆற்றியே உயர்ந்த ஞான நெறி நிற்கலாம் என்பதாகும். கரும, பக்தி, ஞான யோகநெறிகள் ஒன்றையொன்று நீக்குவனவல்ல. மனிதன் தனது பக்குவ நிலைக்கு ஏற்ப இந் நெறிகளுள் ஏதேனும் ஒன்றைப் போற்றலாம். அல்லது வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகட்கு ஏற்ப அனைத்து நெறிகளையும் அவ்வப்பொழுது போற்றலாம். அல்லது அரவிந்தரது பூரண யோக நெறியைப் போற்றி ஒழுகலாம்.

இடைக் காலத்தில் இஸ்லாமிய சமயம் நமது நாட்டில் பரவியது. இஸ்லாமிய சமயத்தின் அனுபூதி முறையாகிய சூபி நெறி (Sufism) நமது நாட்டில் நன்கு வேரூன்றியது எனலாம். குருநானக் இஸ்லாமிய - இந்து சமய நெறிகளிலுள்ள அடிப்படை உண்மைகளை இணைத்தார். இது சீக்கிய சமயமாக உருப்பெற்றது. இன்றும், சீக்கிய சமயத்தைப் பின்பற்றுவோர் உளர். சீக்கிய சமயம் வாழ்க்கை முறையை நன்கு திருத்தி அமைத்தது. சீக்கிய சமயம் வாழ்வோடு ஒன்றி வாழ்க்கை முறையை உயர்ந்த நெறியில் செலுத்தியது. இஸ்லாமிய சமயம், இறையொருமையை வலியுறுத்தியது. ஆண்டவன் திருமுன் நாம் அனைவரும் உடன்

பிறந்தோரே ஆவோம் என்பது இச் சமயத்தின் அடிப்படைக் கொள்கை. பக்திநெறியின் உயிர்நாடியான பிரார்த்தனை இஸ்லாமிய சமயத்தில் சிறந்த இடம் பெறுகின்றது. சமுதாயத்துள் தாழ்ந்த நிலையில் வறுமையில் வாடுவோருக்கு ஒவ்வொரு மனிதனும் உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளான் என்பதையும் வற்புறுத்துகிறது. இச் சமயத்தின் இறையொருமைக் கொள்கையைப் பெரிதும் இந்திய மக்கள் வரவேற்றனர். பல்சமயக் கொள்கைப்படியே சாய்ந்தது. இந் நிலையில் ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் அமைந்தது. அரசியலில் நிருவாகம் சிறந்தது. இந்திய நாடெங்கும் ஒருமை பெற்று ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டது. மேலைநாட்டுக் கல்விமுறை பரவுவதாயிற்று. ராஜாராம் மோகன்ராயின் தோற்றம், இந்தியச் சமுதாயத்தில் சீர்திருத்தங்கள் பலவற்றைக் காண நேர்ந்தது. கிறித்தவச் சமயத்தை நன்கு அறியலாயினர். கிறித்தவம் அன்புநெறியே என்பதனை உணர்ந்து நல்லறிஞர் அந் நெறியினை உணர்த்த முற்பட்டனர். கேஷப் சந்திரஸென் போன்றவர்கள் கிறிஸ்தவ சமய நெறியில் கண்ட சிறப்புகளைப் போற்றினர். இவரது காலத்தில் மூத்தவராக விளங்கிய இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சமயத்துறையில் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அனைத்துச் சமயங்களும் பரம்பொருள் ஒன்றென ஏற்கின்றன என்றும், நாம் எச் சமயநெறி நின்றும் ஒழுகலாம் என்றும், இவற்றிடையே ஏற்றத்தாழவுகள் இல்லை என்றும் பரமஹம்ஸர் தமது சமய அனுபவங்களால் உணர்த்தினர். சமய நெறிகள் ஒவ்வொன்றையும் தாம் மேற்கொண்டு அவ்வந் நெறிகள் உணர்த்தும் உயரிய உண்மைகளைப் பரம ஹம்ஸர் தமது அனுபவத்தில் உணர்ந்து சமயங்கள் பலவாகக் கிளைத்து வளர்ந்திருந்தாலும் அவை உணர்த்தும் உண்மைகள் மக்கள் ஒருமை எய்த துணைசெய்வன என்று விளக்கினர். சமயப் பொறை வளர்ந்தது. உயிரினங்கட்கு ஊறு செய்தலாகாது என்ற உண்மை உணரப்பெற்றது. இறைவனை அன்பு மூலம் எளிதில் உணரலாம் என்பது பலரும் ஏற்கும் உண்மையாக ஆகிற்று. வங்கத்தில் தோன்றிய பரமஹம்ஸர் உலகியல் கல்வியைக் கற்றவ ரல்லர். ஓதாமலேயே உண்மைகள் பலவற்றை உள்ளுணர்வினுலே தெளிந்தார். ஒரு சிறந்த செயல் வீரராகிய விவேகானந்தர் அவருக்குச் சீடராக வாய்த்தார். பரமஹம்ஸரது ஆற்றல் முழுமையையும் விவேகானந்தர் பெற்று உலக நாடுகளிடையே சமயத்தின் சிறப்பினை உணரச் செய்தார். இந்தியாவின் அன்றைய நிலை, மக்கள் அவதிகள் பலவற்றிற்கு உட்பட்டிருந்த காலம். சமூக வாழ்வைத் தழுவியே சமயம் வளர்தல் வேண்டும் என்பதை விவேகானந்தர் நன்கு உணர்ந்ததால், இந்து சமயத்தைச் சமூகத் தொண்டின் மூலம் விளக்கலானர். இராமகிருஷ்ண இயக்கம்

கால்கொண்டது; இது இன்று உலகெங்கணும் பல கிளைகள் கொண்ட பேரியக்கமாக விளங்குன்றது. உயரிய சமய, தத்துவ உண்மைகளை நூல்கள் வடிவில் பல மொழிகளில் வெளியிட்டு உள்ளனர். உலக மொழியான ஆங்கிலத்தின் மூலம் வேதாந் தத்தின் உட்பொருளை அகில உலகமும் அறியும் வகையில் இவ் இயக்கம் தொண்டாற்றி வருகின்றது. ஏழை எளியவர்கட்கு இலவச மருத்துவ வசதி அளிக்கப்பெற்று வருகின்றது.

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளில் பல துறைகளில் சிறந்த நூல்கள் எழுதப்பெற்றன. ஓவியம், இசை, இலக்கியம் போன்ற துறைகளில் வெளிவந்துள்ள நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த நூற்றுண்டில்தான் இந்தியத் தத்துவ வரலாற்றை முறை யாக எழுதுகின்ற முயற்சி தோன்றியது எனல் வேண்டும். இராதாகிருஷ்ணன், ஹிரியன்ன, தாஸ் குப்தா போன்றோர் இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றை வரன்முறைக்கு உட்படுத்தி எழுதியுள்ளனர். இவ் வரலாறுகள் யாவும் ஆங்கில மொழியிலேயே எழுதப்பெற்றுள்ளன. இவை யாவும் வேதகாலந் தொடங்கி மத்துவரது சித்தாந்தமாகிய துவைத விளக்கத்தோடு நின்று விடுகின்றன. இவை அண்மைக்காலத்து இந்திய மெய்ப் பொருளியல் வரலாற்றை விளக்குவனவல்ல. ஸ்ரீவஸ்தவா, நரவனே, நிலிமாசர்மா போன்றோர் அண்மைக்கால வரலாற்றைப் பற்றி எழுதியுள்ளனர்.

மேலைநாட்டினர் இந்தியத் தத்துவ வரலாற்றில் காட்டிய அக்கறையும் நமக்குத் துணை புரிவதாயிற்று. மாக்ஸ்முல்லர் போன்ற பேரறிஞர் ஆற்றிய தொண்டிற்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். 'கீழைநாட்டுப் புனிதநூல்கள்' என்ற வரிசையில் பல நூற்றெகுதிகளை அவர் மொழிபெயர்த்து வெளி யிட்டார். அண்மைக்கால இந்தியத் தத்துவ வரலாற்றில் நாம் தத்துவ அமைப்புகளைக் காண இயலாது. தத்துவப் பேரறிஞர் களையே காண்கின்றோம். புதிய தத்துவ அமைப்புகள் காணப்பெற வில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பெறுகிறது. இது ஓரளவிற்கு உண்மையே என்றாலும், நாம் இதனை ஒரு பெரிய குறையாகக் கொள்வதற்கில்லை. தொரௌ (Thoreau) என்பார் இந்தியச் சிந்தனையால் பெரிதும் ஈர்க்கப்பெற்றார். அவரது கருத்தொன்று ஈண்டு ஊன்றி அறியத்தக்கது. 'தத்துவ அறிஞனாக விளங்குதல் என்பது நுண்ணிய கொள்கைகளைச் சிந்தித்தல் மட்டுமன்று. தமது பெயரால் தத்துவக் கொள்கைகளை வகுத்தல் அன்று. ஆனால், ஞானத்தைப் போற்றி அதற்கு ஏற்ப ஒழுகுதல்' என்று கூறுகிறார். மேலும் வாழ்க்கையில் எளிமை, சுயசிந்தனை, பெருந்தன்மை போன்றவை விளங்குமாறு ஒழுகுதலாகும் என்றும் கூறுகிறார்.

இவ் வகையில் நோக்கும்போது, அண்மைக்காலத் தத்துவ அறிஞர்களாகிய இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியண்ணல், தாகூர், அரவிந்தர் ஆகியோர் தொரெள குறித்த உயர்பண்புகள் ஆகிய யாவும் ஒருங்கேகொண்டு விளங்கியவராவர். வில் டூரான்ட் (Will Durant) என்பவரும் 'இன்று தத்துவத்தைக் கருத்தியல்பான சிந்தனைகளில் நாம் தேட வேண்டுவதிலது. இச் சிந்தனைகளைக் கொண்ட மேதைகளது வாழ்க்கையைப் பின்பற்றுவோம்' என்று கூறுகிறார். நாம் தத்துவக் கொள்கைகளைப் பயில்வதை விடுத்துத் தத்துவ அறிஞர்களை அவர்களது வாழ்க்கையின் மூலம் பயில்வோம் என்கிறார். இவ்வகையில் நாம் அண்மைக்கால அறிஞர்களைப் பயில்வது முறையாகும். இவ் அறிஞரது சீரிய வாழ்வு நமக்கு உயர்ந்த படிப்பினைகளைத் தருவதாக அமைகின்றது. வில் டூரான்ட் முறையையே பின்பற்றி அண்மைக் காலத்தில் தோன்றிய அறிஞரது கொள்கைகளை இந் நூலுள் ஆராய்ந்துள்ளேன்.

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தனை சமாஜம் போன்றவை சமய சமுதாயத்துறைகளில் சிறந்த தொண்டாற்றின. நமது பண்டைய நூல்களை மீண்டும் பயிலும் சூழ்நிலை அமைந்தது. ஒருபுறம் வேதத்திற்கு மீண்டும் ஏற்றம் தரப்பெற்றது. மறுபுறம் உபநிடதங்களே உயர்ந்த ஞான நெறியை உணர்த்துவன என்றும் கூறப்பெற்றது. சமயப்பொறை வளர்ந்தது. இராமகிருஷ்ணர் உணர்த்திய சமயப் பொதுமை, அந் நாளில் வலுத்து விளங்கிய பிரம்ம சமாஜ வழிபாட்டு முறைகளில் இடம்பெற்றது. பின்னர், காந்தி அண்ணலின் பிரார்த்தனைக் கூட்டங்களில் நன்கு வற்புறுத்தப் பெற்றது. சமயத் திருநூல்களினின்று பல ஒப்புமைப் பகுதிகள் பாடப்பெற்றன. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் தோன்றிய இராமலிங்க அடிகள் சன்மார்க்க நெறியினைப் பரப்பினர். இறைவன் ஒளி வடிவினன் என்பதை வற்புறுத்தினர். ஒளி வழிபாடே அவர் புகுத்திய புதுமை எனல் வேண்டும். ஒளி வழிபாட்டில் அனைத்துச் சமயத்தினரும் இணைதல் கூடும் என்பதை அடிகள் வலியுறுத்தினர்.

நமது நாட்டில் தத்துவமும் சமயமும் இணைந்தே செல்கின்றன; இவை இரண்டும் இணைந்தே நிற்கின்றன. மேலை நாட்டில் தத்துவ ஆராய்ச்சி சமயத்தை நீக்கியதெனல் வேண்டும். அண்மைக் கால அறிஞர் யாவரும் தத்துவத்தையும் சமயத்தையும் இணைத்தே போற்றி வந்துள்ளனர். சமயப் புனரமைப்பின் மூலம் சமுதாயத்தை உயிர்த்தெழச் செய்யக்கூடும் என்பதை இவ் அறிஞர்கள் யாவரும் ஏற்றனர்.

அறிவியலாராய்ச்சி பத்தொன்பது, இருபதாம் நூற்றுண்டுகளில் விளங்கிய சிந்தனையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது. விவேகானந்தர் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் தத்துவ உண்மைகளை, அறிவியல் உருவகங்களை உவமைகளைக் கொண்டு விளக்கினுர். திலகர், கணித இயல் வானவியல் போன்ற துறைகளில் காணப்பெற்ற புதிய உண்மைகளைத் தெளிந்தார். வேதத்தின் கால எல்லையை நிர்ணயிப்பதற்கு வானவியல் உண்மைகளைப் பயன்படுத்தினுர். தாகூர் தமது சாந்திநிகேதன் மாணுக்கர்கட்கு இயற்பியல், வேதியியல் சம்பந்தமான நூல்களை எழுதினுர். ஆனந்த குமாரசாமி மேலைநாட்டு நாகரிகம், விஞ்ஞானத்தை அல்லது அறிவியலை மையமாகக் கொண்டது என்று அந் நாகரிகத்தில் குறைகண்டவர். ஆனுல் அவர் தமது வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது, தேர்ச்சி பெற்ற நிலஇயல் வல்லுநராக இருந்தார். உயிரியல் துறையில் விளங்கும் படிமுறை வளர்ச்சிக் கொள்கையையும், இயற்பியல் துறையில் விளங்கும் சார்பு கொள்கையையும் அரவிந்தர் பயன்படுத்தி ஆன்மீகச் சமுதாய அமைப்பு வருங்காலத்தில் எவ்வாறு அமையும் என்று விளக்கினுர். இவ்வாறு அறிவியலில் அண்மைக்காலத்து இந்தியத் தத்துவ அறிஞர் ஈடுபாடு கொண்டிருந்தாலும், இந்திய அறிஞர் அனைவரும் மேலைநாட்டுப் பொருள்முதற்கொள்கையை அறவே மறுத்தனர். அறிவின் பெருக்கத்திற்கும், உயர்கல்வி பெறுவதற்கும் அறிவியல் தேவையே ஆகும். மனிதச் சமுதாய மேம்பாட்டிற்கும் அறிவியல் மிகவும் பயன்படுவதாகும். நாம் கருதிய இந்தியச் சிந்தனையாளர் அனைவரும் தமது உலக ஒற்றுமை– நோக்கைச் சமய அடிப்படையிலேயே அமைத்தனர். ராஜாராம் மோஹன்ராய் முதலாக இராதாகிருஷ்ணன் ஈருக அனைத்து அறிஞர்களும் இந்தியச் சிந்தனையின் புனரமைப்பு சமயத்தினின்று பிரிக்கவொண்ணுதது என்று வலியுறுத்தியுள்ளனர் என்று பேராசிரியர் நரவனே கூறுகிருர். இந்தியன், அரசியலைக்கூடச் சமயத்தின் மூலம் எளிதில் புரிந்து கொள்வான். ஒருசமயம் இவ் வுண்மையை விவேகானந்தர் நன்கு உள்ளத்தில் பதியும்வகை எடுத்துக்காட்டு மூலம் விளக்கினுர். மேலைநாட்டில் ஒருவனை அடுத்து அவனது சமயம் யாது என்று கேட்டால் அவன் தனக்குத் தெரியாது என்றும், தான் தனது ஆலயம் சென்று வருவதாகவும் கூறுவான். இங்கே அரசியலைக் குறித்து, கேள்வி கேட்டால் தனக்குத் தெரியாது என்று கூறித் தான் வரிப்பணத்தைச் செலுத்துவதாகக் கூறுவான். ஆனுல் இங்கே சமயத்தைப் பற்றிக் கேட்டால், தான் ஒருமைக் கொள்கையினனு அல்லது இருமைக் கொள்கையினனு என்று கூறுவதோடு மாயைக் கொள்கையினனு என்று விவாதிக்கத்

தயாராக இருப்பான். இதிலிருந்து இந்தியனுக்குச் சமயம் என்பது வாழ்வில் ஊறிய ஒன்றெனப் புலப்படுகின்றது.

அண்மைக்காலத்து இந்தியத் தத்துவச் சிந்தனை எந்த அளவு கடந்த காலச் சிந்தனையைத் தழுவியது, எந்த அளவு புதுமையானது என்ற கேள்வி எழுவது இயல்பாகும். கழிந்த கால சிந்தனை என்பதற்குப் பொருள் யாது? இதனைக் குறிக்க மரபு வழிச் (Tradition) சிந்தனை என்ற சொல்லும் பயன்படுத்தப் பெறுகின்றது. இச் சொல்லிற்குப் பொருட்செறிவு உண்டு. ஆனால் இச் சொல்லின் ஆட்சி, வரையறை பெற்ற ஒன்றன்று. இச் சொல்லைப் பயில்வோர் ஒவ்வொரு பொருளில் வழங்கியுள்ளனர். கீழைநாட்டு நாகரிகம் திடீர் மாறுதல்களை ஓரோவமயம் ஏற்றுள்ளது. பெரும்பாலும் ஏற்பதில் தயங்கும் புதிய கருத்துகளை ஏற்றுத் தனது நாகரிகப் பண்புக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் பண்பு கீழைநாட்டினரிடம் உண்டு. கழிந்தகால வுணர்வுகள் நிகழ்காலத்தில் நிலவிய காட்சியினை மாக்ஸ்முல்லர் எடுத்தியம்பியுள்ளார். ஒரு பெரிய ஆலமரம் வளர்ந்து பல கிளைகளாகப் பிரிந்து, புதிய வேர்களை வீழ்த்தி மீண்டும் வளர்வதைப் போன்றது இந்தியப் பண்பாடு. இந்தியாவில் பெரும் புரட்சியாளர் தோன்றியுள்ளனர். இவர்களுள் எவரும் தம்மைப் புரட்சியாளரெனக் கூறிக்கொண்டதில்லை. மரபுவழி நிற்போரை நமது நாடு போற்றியுள்ளது. புதிய சிந்தனை அமைப்புகளைத் தோற்றுவிப்போரைத் தயங்கியே ஏற்றுள்ளது. புத்தரும் மகாவீரரும் வேத மரபிற்கு எதிரான இயக்கங்களைத் தோற்றுவித்தனர். இவர்களுள் மகாவீரர் தாம் தீர்த்தங்கரர்களுள் கடையாயவர் என்றே தம்மைப் பற்றிக் கூறிக்கொண்டார். புதிய அமைப்புகளைக் கண்டோர் அனைவரும் தாம் பழைய மரபுகளையே பின்பற்றியுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

மரபைப் பற்றி நிற்கின்ற இவ்வியல்பு நமக்கு வன்மை தருவதாகும். புரட்சியாளரும், மரபுவழித் தோன்றியவர்களே ஆவர். ராஜாராம் மோஹன்ராய் மரபு வழியை எதிர்த்தார். ஆனால், தமது கொள்கைகட்கு அரண் செய்யும் பகுதிகளை வேத உபநிடதங்களிலிருந்து எடுத்துக் காட்டினார். தாகூரும் மரபுவழிச் சிந்தனை அமையும் போது அது (சிந்தனை) வளர்ச்சிக்கு வழி கோலாது என்று கருதினார். இந்தியாவில் தோன்றிய கருத்துப் புரட்சிகள் எல்லாம் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப எழுந்தவை என்று கூறுதல் வேண்டும். உபநிடதச் சான்றோர் தமது நோக்கை அகமுகப்படுத்தினர். இவ்வாறு அகமுகப்படுத்தியதனால் வேத வேள்வியினின்று சிந்தனை மாறியது—திரும்பியது எனல் வேண்டும். சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னர்

பௌத்தம் தோன்றியது. ஆன்மா என ஒன்று நிலைத்திருப்பது அன்று என்று அனாத்மக் கொள்கையைப் புத்தர் வலியுறுத்தினார். யாவும் மாற்றம் கொள்கின்றன. மாற்றமே உண்மை, மாறா நின்ற பொருள் என ஒன்றிலது என்பது புத்தரது துணிபாகும். இக் கருத்துகளை ஆராய்ந்த அண்மைக் காலத்தறிஞர், இவை உபநிடதக் கருத்துகளின் விரிவே என்றனர். நிலையுறுதல் இல்லாத ஆன்மா எவ்வாறு பிறப்பு இறப்புகட்கு உட்படும்? அல்லது எது உட்படுகின்றது என்பன போன்ற கேள்விகட்கு ஹிரியன்னா தக்க விடைகளைத் தருகிறார். ஆதலால், எக் கருத்துத் தோன்றினாலும் அக் கருத்தை ஆராய்ந்து அதிலுள்ள பழைமைக் கூறுகள் யாவை என்று அறிய முற்படுகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவம் இந்த நாட்டில் ஊன்றத் தொடங்கிற்று. பின்னர் அறிவியலும் நமது நாட்டில் விரைந்து பரவத்தலைப்பட்டது. கிறித்தவச் சமயத்தையும் அறிவியலையும் ஒருங்கே ஏற்க வேண்டிய சூழ்நிலை இந்தியனுக்கு ஏற்பட்டது. அறிவியலின் சிறப்பு அறிந்து அது அறிவு வளர்ச்சிக்கும், வாழ்க்கை மேம்பாட்டிற்கும் தேவையானது என்று இந்தியன் ஏற்றான். அறிவியலுக்கு என்றும் ஆட்படாது அதனைப் பயன்படுத்துகின்ற முறைகளையே இந்தியன் வலியுறுத்தினான். கிறித்தவச் சமயம் கீழைநாட்டிலே தோன்றியதொன்று. அன்பு நெறியை வலியுறுத்துவது. இதன் காரணமாகக் கிறித்தவமும் ஏற்புடையதாயிற்று. ஆனால், காந்தியண்ணலைப் போன்றோர் கிறித்தவச் சமய உண்மைகளை ஏற்றனர்; கிறித்தவராகச் சமயம் மாறவில்லை. இந்தியன் எந்தப் புதிய சிந்தனையானாலும் ஏற்கத்தக்கனவற்றை ஏற்று, ஏலாதனவற்றைப் புறக்கணித்துத் தனது சிந்தனையை வளப்படுத்திக்கொள்வான். இவ் வியல்பு இந்தியப் பண்பாட்டின் சிறப்பாகும்.

இரமணர் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் அருணையம்பதியில் வாழ்ந்து ஆன்ம விசாரணையை வற்புறுத்தினார். இவர் அத்துவித மரபிலே வந்தவர் என்று நாம் கொண்டாலும், ஆன்ம விசாரணை என்னும் அரிய முறையைத் தாமே வகுத்து அதனை முறையாக எவ்வாறு பயன்படுத்தி ஆன்ம உணர்வு பெற இயலும் என்று நிறுவிக் காட்டினார். அத்துவித மரபு பழையதே. எனினும் அத்துவித உண்மையை உணர்வதற்குரிய புதிய நெறியினை வகுத்த பெருமை இரமணரைச் சாரும். அவர் ஏனைய ஆசிரியர்களைப் போன்று கீதை, உபநிடதம், பிரம்மசூத்திரம் போன்றவற்றிற்குப் பேருரை காண முற்படவில்லை. வெளிவந்துள்ள பேருரைகட்கு விரிவுரையும் காணவில்லை. 'உள்ளது நாற்பது' என்னும் ஒரு

சிறந்த நூலொன்றின் வாயிலாகத் தாம் உணர்ந்தவற்றை நமக்கு உணர்த்தியருளினார். ஐம்பது ஆண்டுகள் ஆத்ம சாட்சாத்காரம் பெற்று (சாட்சி மாத்திரமாக விளங்கி) சிறந்த ஜீவன்முத்தராக இலங்கினார்.

ஏ. இ. டெய்லர் (A. E. Taylor) என்பவர் இரு வரையறைகளைக் கொண்டு மெய்ப்பொருள் சிந்தனையின் தரத்தினை நிர்ணயிக்க வேண்டும் என்கின்றார். ஒன்று சிந்தனை மூலமானதாகப் பிறிதின் சார்பற்றதாக இருத்தல் வேண்டும். மற்றொன்று, ஆயும் திறனுடையதாக அமைதல் வேண்டும். மூலமான சிந்தனை என்னும்போது டெய்லர் அச் சிந்தனை புரட்சிகரமாக இருக்க வேண்டும் என்று பொருள் கொள்ளவில்லை. சிந்தனையாளர் தமது சுய சிந்தனையால் தேர்ந்த உண்மைகளாக அமையின் நன்று. தாமே சிந்தித்தும், ஆழமாகச் சிந்தித்தும் அறிந்த உண்மைகளாயின், அவை மூலமான சிந்தனையென ஏற்கத்தக்கன. ஆயும் திறன் இருக்க வேண்டும் என்னும்போது பிறரது சிந்தனைகளில் உள்ள குறைகளைக் காணவேண்டும் என்பதும் இல்லை; சிந்தனை நன்கு அமைந்திருத்தல் வேண்டும். பல கூறுகளையும் உள்ளடக்கியதாக அமையின் நன்று. இவ்வகையில் நாம் கருதியுள்ள மெய்ப்பொருள் சிந்தனையாளர் அனைவரும் தாமே சிந்தித்த தெளிந்த உண்மைகள் பல உள. இவை திறனும் பெற்றியும் வாய்ந்தவையே. அரவிந்தர் மேலைநாட்டு மெய்ப்பொருளியல் சிந்தனை அமைப்புகளை நன்கு அறிந்திருந்தார். நமது நாட்டு ஆத்திக நாத்திக தரிசனங்களையும் தெளிந்திருந்தார். அவர் உணர்த்திய பூரண யோகம் ஏற்கெனவே நிலவிவந்த யோக முறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அவற்றை இணைத்து வழங்கிய சிறப்பு அரவிந்தரைச் சாரும். மேலும், தாம் விளக்கிய படிமுறை வளர்ச்சிக் கொள்கையிலும், பிறநாட்டுப் பரிணாமக் கொள்கைகளினின்று வேறுபட்டார். சிறப்பான வேறுபாடு படிமுறைத் தோற்றத்தை (Evolution) ஏற்றதுபோலவே ஒடுக்கத்தையும் (Involution) ஏற்க வேண்டும் என்றார். விலங்குலகில் காணப்பெறும் 'தகுதியுள்ளன பிழைத்தல்' என்ற அடிப்படை உண்மையை மட்டும் அரவிந்தர் ஏற்கவில்லை. 'படிமுறை சிறத்தல்' என்பது ஆன்மீக நோக்கு உடையது என்றும், மனிதன் இனி உணர்வு நிலையிலேதான் சிறக்க வேண்டும் என்றும் இத்தகைய வளர்ச்சிக்கு விஞ்ஞான மனம் (Super mind) பெரிதும் துணைபுரிவது என்றும் வலியுறுத்தியுள்ளார். அறிவு சான்ற பெருமக்களுள் ஆன்மிக நலமும் திகழப் பெற்றோர் (Gnostic Beings) இனி வருங்கால உலகை உருவாக்குவர் என்பது அரவிந்தரது கருத்தாகும். இந்திய மெய்ப்பொருளியல் புதிய வளர்ச்சி பெறவில்லை என்று கூறப்பெறும்

குறையை மறுப்பது அரவிந்தரது சிந்தனை அமைப்பு. காந்தி அண்ணல், தாகூர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராதா கிருஷ்ணன் ஆகியோர் பழைய வேதாந்த உண்மைகளையே கூறிவந்தனர் என்பது பொருந்தாது. இச் சிந்தனையாளர் வாழ்ந்த காலம் அறிவியல் வளர்ச்சி பெற்ற காலம். மனிதப் பற்றுக் கோட்பாடு இன்றைய வளர்ச்சி பெற்ற காலம். மனிதப் பற்றுக் கோட்பாடு (Humanism) இன்றைய உலகத்தில் பெரிதும் வற்புறுத்தப் பெறுகின்றது. இந் நாளைய வழக்கில் பழைய உண்மைகளை வெளியிட்டனர் என்றாலும், அவ் விளக்கம் படைப்புச் சார்ந்த விளக்கமாக (Creative interpretation) அமைகின்றது. பழைய வேதாந்த உண்மைகள் மீண்டும் வலியுறுத்தப்பெற்றன என்றாலும், இந்த நூற்றாண்டில் இந்திய மெய்ப்பொருளியல் அறிஞர் தாம் வாழ்ந்த காலச் சூழ்நிலைக்கு ஏற்ப இறைக்கொள்கையோ பரம்பொருட் கொள்கையோ சிறப்பாகச் சில சிந்தனையாளர்களால் எடுத்தியம்பப் பெற்றன. மனிதப் பற்றுக் கோட்பாடு அயல்நாடு களில் இறைக்கொள்கையைத் தழுவவில்லை. இங்கே சமயம், இறைக்கொள்கையைச் சார்ந்தே இக் கோட்பாடு எழுந்தது (Theocentric Humanism).

மேலைநாடுகளோடு இந்தியா தொடர்புகொண்ட காலத்திலும், ஆங்கிலேயர் இந் நாட்டில் ஆட்சிபுரிந்த காலத்திலும் மேலை நாட்டுக் கருத்துகள், குறிக்கோள்கள் நமது நாட்டில் பரவின. பரவியபோது மரபுவழி நின்றோர் அயல்நாட்டுக் கருத்துகளை ஏற்கத் தயங்கினர். இவர்கள் தமது நாட்டுக் கருத்துகளின் தூய்மையைக் காக்க முயன்றனர். இம் முயற்சி அக் கருத்துகளை இறுகச் செய்தன; உயிரற்றனவாகத் திரிந்தன. மற்றொரு கூட்டத்தார் மேலைநாட்டுக் குறிக்கோள்களில் மோகங்கொண் டனர் எனலாம். ஆதலால், அவர்கள் தாம் பிறந்த நாகரிகத்தின் பண்பாட்டின் இயல்புகளை மறந்தனர். முற்றிலும் மேலைநாட்டுப் போக்குகட்கு அடிமையாயினர். பிறிதொரு கூட்டத்தாரே மறுமலர்ச்சிச் சிந்தனையாளர் என்று குறிக்கலாம். இவர்கள் ஒரு சிலரே ஆவர். இவர்கள் மேலைநாட்டு மரபுகளில் கொள்ளத் தக்கன கொண்டு தள்ளத்தக்கன தள்ளி ஏற்றதைத் தமது மரபுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டனர். காந்தி அண்ணல் கூறியது ஈண்டு நினைவுகூரத்தக்கது. 'எனது இல்லத்திற்கு நாற்புறமும் சுவர்களை எழுப்பிச் சன்னல்கள் வாயிலாக வரக்கூடிய காற்றோட் டத்தைத் தடுக்க நான் விரும்பவில்லை. எல்லா நாடுகளுடைய பண்பாடும் எனது இல்லத்தில் (நாட்டில்) தங்குதடையின்றிப் பரவ வேண்டும் என்பது எனது விருப்பம். ஆனால், நான் இவற்றால் அலைப்புண்ண மாட்டேன். நான் எனது இல்லத்தில் ஊன்றி

இருப்பேன்.' அண்ணலைப் போன்று திறந்த உள்ளத்துடன் பிறநாட்டுக் கொள்கைகள் உணர்த்தும் மெய்ப்பொருளியல் உண்மைகளை ஏற்றோர் உளர்.

இராதாகிருஷ்ணன் மெய்ப்பொருளியல் பயின்று, பேராசிரியராகத் திகழ்ந்து, தலைசிறந்த தத்துவ அறிஞராக விளங்கியவர். இவரது நூல்களுள், சமயம் பெறுகின்ற தனி இடத்தை நாம் உணர முடிகின்றது. இவரது முற்பட்ட நூல்களுள் தத்துவம், சமயத்தினின்று பிரிந்து பின்னர் சமய அனுபவ அடிப்படையில் தத்துவ உண்மைகளை ஆராய்ந்தார். அகவுணர்வு அல்லது உள்ளுணர்வின் தனிச்சிறப்பை உணர்த்தினார். இந்தியத் தத்துவ அறிஞருள் தலையாயவர் இவர் என்று குறிப்பிடலாம். இந்தியத் தத்துவ வரலாற்றை நமக்கு முதன் முதலாக வழங்கியவர் இவர். இவரது தத்துவக் கொள்கைகளை முறையாக உலகப் பேரறிஞர் ஆராய்ந்து எழுதிய நுலொன்று வெளியிடப்பெற்ற பெருமை இவருக்கு உரியது. இவர் எழுத்தாலும் நாநலத்தாலும் உலக அவைகளில் நமது இந்தியத் தத்துவத்திற்குரிய சிறப்பைத் தேடித் தந்தார். இன்று உலகில் வெவ்வேறு இடங்களில் இந்தியத் தத்துவம் சிறப்பாகப் பயிலப் பெறுகிறது என்றால், இவரது செல்வாக்கும் எழுத்துத் திறனுமே பெருங்காரணமாகும்.

நோபெல் பரிசு பெற்ற கவிஞர் பெருமானாகிய தாகூர் தமது கீதாஞ்சலியின் வாயிலாக உலகப் புகழ் ஈட்டினார். 'மனிதனின் சமயம்,' 'சாதனா' போன்ற நூல்கள் இவரது தத்துவக் கொள்கைகளை நமக்கு நன்கு வெளியிடுகின்றன. பக்தியியக்கம் இவரது சிந்தனையைக் கவர்ந்தது. என்றாலும் அத்துவித உண்மைகளை இவர் ஏற்று அவற்றிற்குத் தரும் விளக்கம் அறிவிற்கு விருந்தாகும். கலைஞன் எவ்வாறு மெய்ப்பொருளியலை அணுகுகின்றான் என்பதைத் தாகூரினிடத்துக் காணலாம்.

இராமலிங்க அடிகள் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்தவர். இவருக்கு விவேகானந்தர் போன்ற சீடர் அமையாததனால் உலகம் இவரது கருத்துகளை இன்னும் நன்கு அறியவில்லை. யோகி சுத்தானந்த பாரதியார் 'தமிழர் இன்னும் அறியாதானை' என்று முப்பது ஆண்டுகட்கு முன்னர்ப் பாடினார். இன்று ஓரளவு தமிழர் அறிந்து வருகின்றனர். ஒருசில நூல்களே அடிகளாரைப் பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவையும் அடிகளாரது தத்துவ, சமய, அனுபூதி நெறிகளை முற்றிலும் பழுதற விளக்குவனவாக அமைந்தில. அடிகள் தமது பெறற்கரிய பேற்றால்—இறவா வரத்தால்—அண்மைக் காலத்தில் சமய உலகில் ஞாயிறெனத் திகழ்கிறார். இவரது தத்துவ, சமயக் கொள்கைகளும்

தனிச் சிறப்பு வாய்ந்தவை.

இந்நூலுள் கருதப் பெறும் அறிஞர் பலதிறத்தவர் என்றாலும், தாய் நாட்டிற்கு அருந்தொண்டு புரிந்தவர்களாவர். இவர்களுள் காந்தி அண்ணல் அரசியல் சுதந்திரம் நமக்கு வழங்கிய காரணத்தால் இவரை உலகம் நன்கு அறியும். அண்ணல் அரசியலுலகை ஆன்மிக அடிப்படையில் அமைத்தார் (Spirutualisation of Politics). உயர்ந்த குறிக்கோள் வாழ்வு வாழ்ந்தார். பகவத்கீதைக்கு அனுசக்தி யோகம் என்ற தலைப்பில் சிறப்பானதொரு விரிவுரை நல்கியுள்ளார். சமயக் காழ்ப்பின்றி கிறிதவ இஸ்லாமிய சமயங்களையும் தழுவிய பெரியார். ஆனால், இவர் மதமாற்றம் செய்து கொள்ளவில்லை. இவரைக் கிறிஸ்தவ சபையைச் சேராத கிறித்தவர் என்றே அந்நாளைய கிறிஸ்தவப் பெருமக்கள் போற்றினர்.

கிறிஸ்தவ குறிக்கோளாகிய அன்பு, சமுதாயத் தொண்டு ஆகிய இவ்விரண்டும இந்திய மக்களிடையே பெரிதும் வரவேற்கப் பெற்றன. மனிதப் பற்றுக்கோட்பாடு சமூகப் பொதுவுடைமை போன்ற கொள்கைகள் ஏற்கப்பெற்றன. அறிவியல் தொழில் நுணுக்க அறிவு பெரிய அளவில் வளர்ச்சி பெற்றிருந்தும், சமய உண்மைகளை மறவாமல் அவற்றின் இன்றியமையாமையை நாம் கருதிய அறிஞர் போற்றினர். சாதிப் பாகுபாடு அற்ற வகுப்பு, வர்க்க பேதமற்ற சமுதாய அமைப்புக் காணவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள், நமது இந்திய அரசியலமைப்பிலேயே இடம் பெற்றுள்ளது. மக்கட் சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறுவதாயிற்று. தனியொருவன் பெறுகின்ற மோட்சத்தை விட மக்களனைவரும் வீடுபேறு அடைய வேண்டும் என்ற சர்வ முத்திக் கொள்கை இராதாகிருஷ்ணனால், காந்தி அண்ணலால் வற்புறுத்தப்பெற்றது. அரவிந்தரும் மனித இன மேம்பாடு விஞ்ஞான மனம் இறங்கித் தொழிற்படும்போது அமையும் என்றும், அம் மனம் தொழிற்படத்தக்க சூழலை நாம் உருவாக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

காந்தி அண்ணல் கண்ட சர்வோதய அமைபபு, கடையவனுக்கும் கடைத்தேற்றம் காண விரும்புவது. உடலுழைப்பிற்கு ஏற்றம் தருவது. ஏற்றத் தாழ்வற்ற, சுரண்டல் அறவே அற்ற, வறுமைகள் பல இல்லாத சமுதாய அமைப்பு சர்வோதய சமுதாயமாகும். பண்டைய புலன்கடந்த பொருளியலமைப்பில் உள்ள கருத்தமைவுகளை இந்நாளைய சராசரி மனிதனும் புரிந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் இவை விளக்கப் பெற்றன. திலகர், அரவிந்தர், காந்தி, இராதாகிருஷ்ணன் ஆகியோர் பகவத் கீதைக்குத் தந்துள்ள விளக்கங்கள் மேற்கண்ட முயற்சியின்பாற் படும். மெய்ப்பொருளியல் என்பது அறிவுகொண்டு கற்பனையான

உலகில் கருத்தியல்பானவற்றை மட்டும் ஆராயும் முயற்சியன்று. இது அன்றாட வாழ்வில் எழுகின்ற சிக்கல்களையும் ஆராய்ந்து வழிகாட்ட வல்லனவாதல் வேண்டும், இதே சமயத்தில் கடந்த நிலை வாழ்வையும் போற்றுவதாதல் வேண்டும் என்பது நாம் கருதியுள்ள அறிஞரது ஒருமித்த கருத்தாகும். உலகைப் பற்றிய ஒற்றுமை நோக்க அமைவாக மட்டும் தத்துவத்தைக் கொள்ள வில்லை. வாழ்க்கையைப் பற்றிய நோக்க அமைவாக என்றும் கருதினர் (Welten cheuung and Lebensan chevung) வாழ்க்கைக்கு வழிகாட்ட வல்லதாகவும் தத்துவம் அமைய வேண்டும் என்பது இவ்வறிஞரது கருத்தாகும். அரவிந்தர் குறிப்பாக, நமது அறிவாற்றலின் எல்லைகளை உணர்த்தினர். இராதாகிருஷ்ணன் அறிவாற்றலோடு அகவுணர்வும் இணைய வேண்டும் என்றார். கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் தலைமை சான்றவர்களாகத் திகழ்ந்த பேரறிஞர்களது தத்துவக் கருத்துகளை விளக்குவதே இம் முயற்சியாகும். ஒவ்வோர் அறிஞரும் தேர்ந்த துறை வெவ்வேறாகும். தத்துவம், சமயம், சமுதாயத் தொண்டு என்ற தலைப்புகளில் இவ் அறிஞரது கருத்துகளை அறிய முற்படுகிறோம். இவ் அறிஞர் அனைவருக்கும் பின்னணியாக அமைவன, பிரம்ம, ஆரிய, பிரார்த்தனை சமாஜத்தின் தொண்டுகளாகும்.

# 1. பிரம்ம சமாஜம் முதலியன

இராஜாராம் மோஹன்ராய், இந்திய நாடு விடுதலை பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று விரும்பினார். மக்கள் விடுதலைபெற, பலதுறைகளிலும் சிறந்து விளங்க அவர்கள் நல்லறிவு பெற வேண்டும் என்று இவர் நம்பினார். மேலை நாட்டுக் கல்வி முறையை இந்திய மக்கள் ஏற்க வேண்டும் என்று கூறினார். விஞ்ஞானக் கல்வி முறையை வற்புறுத்திப் பெருமகன்ஆம்ஹர்வ்ட்டுக்குக் கடிதம் எழுதினார். இவர் விரும்பிய கல்விமுறை வழக்கிற்கு வரும்போது இவர் மறைந்து விட்டார். ஆங்கிலக் கல்வி, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று நம்பியதோடு ஆங்கிலப் பள்ளிகளை நிறுவினார். இவர் சமய சமுதாயச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

இராய், இராதாநகர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவ்வூர் வங்கத்தில் ஹூக்லி என்னும் மாவட்டத்தில் உள்ளது. இவரது பெற்றோர், இராமகாண்ட் தாய், தாரினிதேவி என்பவராவர். இவருக்கு மிக்க இளையவராக இருந்தபோதே மும்முறை திருமணம் செய்விக்கப்பெற்றது. இளமைத் திருமணம் இந்து சமுதாயத்தில் உள்ள தீமைகளை இவருக்குப் புலப்படுத்தியது. இவரது தந்தை பண்டைய மரபுகளைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாக விளங்கினார். இராய் அவர்கட்குப் பன்னிரண்டாண்டுகள் நிரம்புவதற்குள் தந்தையுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. இதனால் இவர் வீட்டைவிட்டு வெளியேறினார். இவர் தாம் விரும்பியவாறு தமது கல்வியை அமைத்துக்கொள்ள உறுதி பூண்டார். பாட்னா நகரில், பாரசீகம், அரபி ஆகிய இவ்விரு மொழிகளையும் பயின்றார். இம்மொழிகளில் இவர் பெற்ற தேர்ச்சி காரணமாக இஸ்லாமிய திருநூலாகிய குரானை அரபி மொழியிலிருந்து தமது தாய்மொழியாகிய வங்காளியில் பெயர்த்தெழுதினார். அரபு மொழியில் வெளிவந்திருந்த அறிவியல் மெய்ப்பொருளியல் ஆகிய துறை சார்ந்த நூல்களை ஊன்றிப் பயின்றார்.

பாரசீகக் கவிஞர்களாகிய ஹபீஸ், ரூமி போன்றோர் இவரைப் பெரிதும் கவர்ந்தனர். இஸ்லாமிய சமயத்திலும், இலக்கியத்திலும் இவர் பெற்றிருந்த தேர்ச்சியை வியந்து, 'ஜபர்தஸ்து மௌல்வி' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார்கள். இத்தொடருக்கு 'ஆற்றல் மிக்க தூயோர்' என்பது பொருளாகும்.

பின்னர், காசி நகரம் சேர்ந்து சமஸ்கிருதம் பயின்றார். சமஸ்கிருதத்தில் முதன்மை சான்ற நூல்களாக மதிக்கப் பெறுகின்ற உபநிடதம், கீதை போன்றவற்றை நன்கு படித்தார். பண்டைய இலக்கியங்களிலும் சமயம், தத்துவம், போன்ற துறைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றார். இத் துறைகளில் வல்ல பண்டிதர்களோடு வழக்குரையாடவும் துணிந்திருந்தார்.

இவர் பன்னிரண்டாண்டுகள் காசிநகரத்தில் தங்கியிருந்தார். மூர்ஷிதாபாத்திற்கு மீண்டும் இராய் வந்து, அரபி இலக்கியங்களை மீண்டும் பயின்றார். அவர் முதன் முதலாக எழுதிய நூல் துஷ்பத்–உல்–மூவாஷ்தீன் என்பதாகும். இந்நூல் இறையொருமையைப் பற்றியதாகும். இது பாரசீக மொழியில் முன்னுரை தரப்பெற்றது. சமயத்துறையிலும் புலன்கடந்த பொருளியல் துறையிலும் இவர் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததை இந்நூல் வெளிப்படுத்தியது. கிழக்கிந்தியக் கம்பெனியில் கல்கத்தாவில் பணி ஏற்றார். தமது நாற்பதாவது வயதில் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் தமது வாழ்நாளை உண்மை நாட்டத்திற்கென்றே செலவழிக்க எண்ணினார். கல்கத்தாவில் உள்ள தமது இல்லத்திற்கு 'வானப்பிரஸ்தாஸ்ரமம்' என்ற பெயரைச் சூட்டினார். இந்து சமயத்தில் பெருவழக்காய் விளங்கிய உருவ வழிபாட்டை வன்மையாகக் கண்டிக்க முற்பட்டார்.

ஸுபிஸம் என்பது, இந்து சமயமும் இஸ்லாமிய சமயமும் இணைந்து வாழுங்காலத்தில் சமயக் கருத்துகளை இருசாராரும் தழுவிய நிலையில் பிறந்ததாகும். பாரசீக மொழியில் மூலநூலாக விளங்கும் முட்டாஜுலா என்பதை இராய் பயின்றார். மேலும் அரபு நாட்டு மெய்யறிஞரது கருத்துகளையும் நன்கு பயின்றார். இத்தகைய இஸ்லாமிய மூல நூல்களின் பயிற்சியால் இஸ்லாமில் நல்ல தேர்ச்சியுடையவரானார்.

இராய், இரஸ்பூர் என்னும் ஊரில் தங்கியிருந்தபொழுது (1809–1814) வைணவம், தாந்திரிகம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களைப் பயின்றார்.

பின்னர் ஹீப்ரு, கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பயின்று கிறித்தவத்தை முறையே அதன் மூல நூல்களின் வாயிலாகப் பயின்று தேர்ச்சி பெற்றார். விவிலிய நூலைப் பயின்றதன் விளைவு இவரது வாழ்வில் பின்னர் நன்கு புலனாயிற்று. கிறித்தவம்

இவரைப் பெரிதும் ஈர்த்தது. இவ்வீர்ப்பால் ஏசுநாதரின் போதனைகளை மதிக்கலானார். கிறித்தவப் பாதிரிமார்களது தொண்டுகளையும் ஊன்றி அறிந்து வந்தார். 'ஏசுநாதரின் போதனைகள்', 'கிறித்தவச் சமயத்தினருக்கு முறையீடு' 'ஏசுநாதரின் உயர்-மனிதாயதம்' 'சம்வாத கௌமுதி' ஆகிய நூல்கள் இராய் அவர்களுக்கு கிறித்தவச் சமயத்தில் இவருக்கு இருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவனவாகும். கிறித்துவின் உயர்ந்த வாய்மொழிகளில் இவருக்குப் பற்று மிகுதியாக இருந்ததெனினும் கிறித்தவ சமயத்தை ஏற்க இவரது மனம் இடந்தரவில்லை. இதற்கு மாறாக கிறித்தவப் பாதிரிகள் மேற்கொண்ட மதமாற்றத்தினை வன்மையாக எதிர்ப்பவரானார். இவர் நிறுவிய பிரம்ம சமாஜத்தின் குறிக்கோள்களுள் ஒன்று, மதமாற்றத்தைத் தடுப்பதாகும். 'சம்வாத கௌமுதி' என்னும் நூல், கற்பனை உரையாடலாகும். கிறித்தவப் பாதிரி யொருவருக்கும், சீனி கிறித்தவர் மூவருக்குமிடையே (மதம் மாறியவர்கள்) நிகழ்வதாகக் கற்பனை செய்த உரையாடல் இந் நூல். மத மாற்றத்தை நினைந்து, மிகவும் வருந்தி வரையுரையாக எழுந்த நூல் இதுவாகும்.

கல்கத்தாவில் இராய் வாழும்போது, விரிந்த கல்வி விரும்பும் சிலருடன் கூடி வாழ்ந்தார். கீழ்த்திசை நாட்டு மொழி, கலை, சமயம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி அப்போது மேலை நாட்டறிஞரால் போற்றப் பெற்ற காலம் அது. ஜோன்ஸ், கேரி, கோல்புருக் போன்றோருடன் தொடர்பு கொண்டார். 'ஆத்மீய சபா' என்னும் கழகத்தை 1815-ல் நிறுவினார். இக் கழகம் கலந்து உரையாடுவதற்கென்றே அமைக்கப்பெற்றது. சமயம் மெய்விளக்கம் ஆகிய துறைகளில் எழுகின்ற சிக்கல்களைக் குறித்து உரையாட அமைந்தது இக் கழகம். ஆனால் இக் கழக உறுப்பினர் சில ஆண்டுகட்குள் சமூகப் பிரச்சினைகளைக் குறித்துச் சிந்திக்கத் தலைப்பட்டனர். இக் காலத்தில்தான் இராய் இந்து சமூகத்தில் விளங்கிய தீமைகளை எதிர்க்கலானார். தீமைகளுள் முதன்மையாக இவர் எதிர்த்தது 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கமாகும். இராய் அச்சகம் ஒன்றை நிறுவினார். கல்வித் துறையில் மாணவர் முன்னேற்றத்திற்குரிய திட்டங்களைத் தீட்டினார். செய்திகளை வெளியிடுவதில் உரிமை வேண்டும் என்று வற்புறுத்தினார். இன்று உரிமை பெற்றுள்ள நிலையில் நாம் அன்று நிலவிய சூழ்நிலையை அறிதல் அரிதாகும். இந்திய மக்கள் பல்துறைகளிலும் முன்னேற வேண்டும் என்று திட்டமிட்டு ஆக்கமான பல முயற்சிகளை இராய் மேற்கொண்டார். ஆனால் அவரது முயற்சி பெரிதும் சமுதாயம், சமயம் ஆகிய இருதுறைகளிலே சிறக்க அமைந்தது என்பது பொருந்தும். 'வேதாந்த

சாரம்' என்னும் நூலை, 1816-ல் வெளியிட்டார். இந்நூலில் இராய் வற்புறுத்தியது, வேதாந்த இறையொருமைக் கொள்கை யாகும். இவரது காலத்தில் நிலவிய சமயம் பல கடவுட் கொள்கையைக் கொண்டதாகும். வேள்விகளும் சடங்குகளும் மலிந்திருந்தன. கடவுட் பன்மையையும் உருவ வழிபாட்டையும் எதிர்த்தார். இராய் அவர்களது வாழ்வில் குறிக்கத்தக்க நிகழ்ச்சி, இவர் பிரம்ம சமாஜத்தை (1828) நிறுவியதாகும்.

இராய் அவர்களைக் கொலம்பஸ் என்பவரோடு ஒப்பிட்டு நிக்கொல் மெக்னிக்கால் என்பவர் கூறுவது: 'உண்மையின் புதிய கண்டத்தைக் கண்டுபிடித்த இந்திய கொலம்பஸ்'—இராய் ஆவார். இராய் பெற்றிருந்த பன்மொழிப் பயிற்சி, பல்சமயத் தேர்ச்சி, இலக்கிய ஆய்வுத்திறன் போன்ற புலமைப் பண்புகள் அயல்நாட்டறிஞரது வியப்பையும் பாராட்டையும் பெற்றன. தீவிரக் கொள்கைகளைத் தவிர்த்தல், தன்னலமற்ற தொண்டு, பல்துறைப் புலமை, இன்னோரன்ன நலன்கள் இவரது புகழ் விரைந்து பரவுவதற்குக் காரணமாயின. கற்றோருலகு இவரைப் பாராட்டியது என்றாலும், இவருக்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. ஒருபுறம் இந்திய மரபுவழி நின்றோர்; மறுபுறம் நன்கு ஊன்றி நிறுவனமாகக் கிளைத்தெழுந்திருந்த கிறித்தவ சமயத்தவர்கள். இவ்விரு சாராரையும் எதிர்த்துத் தாம் கண்ட உண்மைகளை வற்புறுத்தினார். இந்திய மக்களுக்கு அறிவு புகட்டியதால் அன்றைய ஆட்சியாளருக்கு இவரிடம் நம்பிக்கை குறைந்தது. எதிர்ப்புகளிடையே வளர்ந்த இவரது வாழ்வு, சில அரிய சாதனை களைக் கண்டது. இராய் அவர்களது சமய, தத்துவ சிந்தனைகளை இனி முறையே காண்போம்.

சமுதாய சீர்திருத்தம் கண்ட பெரியவர்களுள் முதன்மை யானவர், இராய் அவர்கள். காந்தியண்ணல் அவர்களுள் இறுதி யாகத் தோன்றியவர். இவ்விருவருமே வருங்காலச் சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நன்கு சிந்தித்து வகுத்தவர் களாவர். காந்தியண்ணலுக்கு இருந்த காலச்சூழ்நிலை இராய் அவர்கட்கிலது. மேலும், அரசியல் விடுதலைப் போர் காரணமாக அண்ணலுக்குப் பாமர மக்களிடையே பெருமதிப்பும் செல் வாக்கும் இருந்தது. ஆங்கிலக் கல்வி பெற்றோரிடையே மட்டும் இராய் அவர்கட்குச் செல்வாக்கு இருந்தது. பாமர மக்களிடையே பிரம்ம சமாஜத்தினரது கொள்கைகள் பரவவில்லை என்பது ஒரு குறையாகும். முற்பட்ட பௌத்தம் அறவாழ்க்கையை வற்புறுத் தியது. நற்பண்புகளைப் போற்றும் வாழ்க்கை வாழ்ந்தால், மனிதன் உயர்ந்த குறிக்கோளை அடைய இயலும் என்றது. மனிதன் சாத்திரத்தின் விதிகளினின்றும் சடங்குகளினின்றும்

விடுதலை பெற்று விளங்குதல் வேண்டும் என்று பௌத்தம் கூறியது. பௌத்தம் அன்று நிலவிய மரபுகளை எதிர்த்துப் போராடி அறிவிற்குப் பொருத்தமான அறச் சமயத்தை வலியுறுத்தியது. சாதி சமய—சடங்குகள் மலிந்து விளங்கிய சமுதாயத்தில் மனிதன் தன்னை உணர வேண்டும் என்று பௌத்தம் அறைகூவியது.

பௌத்தமும் சமணமும் சமகாலத்தில் தோன்றியவை. சமணமும் பௌத்தத்தைப் போலவே, புரோகிதர்களை எதிர்த்தது. சடங்குகட்குப் புரோகிதர்கள் தந்த சிறப்பை முறியடிக்க சமணம் எழுந்ததெனலாம். பிராமணர்களே துறவு பூணுவதற்குரியவர்கள் என்ற நிலையை மாற்றியது சமணம். பல நூற்றுண்டுகட்குப் பின்னர் பஸவர் தமது போதனைகளால் சமுதாய—சமயப் புரட்சிகளை ஏற்படுத்தினுர். இவ்விரு புரட்சிகளும் ஒருங்கே நிகழ்ந்தன. மகாராட்டிரத்தில் தாய்னேஷ்வர், துக்காராம் போன்றவர்கள் சமுதாய சமயச் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். சாதிச் செருக்கின் வேகத்தைக் கெடுத்து மக்களனைவரும் சம நிலையில் மதிக்கத்தக்கவர்கள் என்றனர். சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் என்று கருதப் பெற்றவர்களை உயர்த்தி—மேல் மட்டத்தில் இருப்பவர்களோடு ஒப்ப—மதிக்கத்தக்க நிலையினை இவர்கள் ஏற்படுத்தினர். பௌத்த, சமண, மகாராட்டிரச் சான்றேர் ஆற்றிய தொண்டுகளைப் பின்னணியாக வைத்து இராய் அவர்களது தொண்டின் சிறப்புகளைக் காண முற்படுவோம்.

சமுதாயத்தில் மிகவும் கொடிய பழக்கமாக நிலவியது, சதி என்பதாகும். இந்த உடன்கட்டை ஏறுதல் என்ற தீய பழக்கத்தை இராய் அவர்கள் ஒழித்த ஒன்றிற்காக, நாம் அவரை என்றும் போற்றக் கடமைப்பட்டிருக்கிறேம். மக்கட் கருத்தைத் திரட்ட, பல துண்டு வெளியீடுகளை, 1818 கி.பி. தொடங்கி, இராய் எழுதலானுர். தமது கருத்துகளை எழுதும்போது தமக்கு ஆதார மாகக் காட்டிய பகுதிகள், மனு போன்றவர்களது நூல்களி னின்று எடுத்தவையாகும். உடன்கட்டை ஏறுதல் என்பதை பிற்கால சட்ட வல்லுநர்களும் மக்கள் விரும்பி ஏற்கலாம் என்றனரே தவிர, அப்பழக்கம் யாவருக்கும் உரியது என்று கூறவில்லை. இராய் அவர்கள் தொடர்ந்து முயன்ருர். 1829 கி.பி. வில்லியம் பெண்டிங்க் பெருமகனுரால் சட்டத்தின்படி ‘சதி’ தவருனதாகும் என்ற நிலையைக் கொணர்ந்தார்.

இராய் அவர்களது காலத்தில் பல மனைவியரை மணத்தலும் பரவியிருந்தது. இந்து சமய சட்ட வல்லுநர் என்று மதிக்கத்தக்க யாக்ஞவல்கியர் போன்றேரது உரைகளை ஆதாரமாகக் கொண்டு இராய் அவர்கள் பல மனைவியர் மணத்தையும் கண்டித்தார்.

மகளிரது உரிமைகட்காகவும் இவர் முழங்கினுர். இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும்போது இராய் அவர்கள் தாம் என்றும் இந்த நாட்டின் சிறந்த மரபுகட்கு மாறு காணவில்லை என்றும், ஆழ்ந் துள்ள மூல கேடுகளேயே தவிர்க்க விரும்புவதாகவும் கூறினுர். இந்நிலேயே சமயத்துறையில் அவர் காண விரும்பிய திருத்தங் கட்கும் பொருந்தும்.

உருவ வழிபாட்டை எதிர்த்தபோதும் உபநிடதங்களேயும், பிரம்மசூத்திரங்களேயுமே தாம் தழுவிக் கூறுவதாக இயம்பினுர். முன்னேர் கண்ட சமயத்தினின்று விலகிச் செல்லத் தாம் விரும்ப வில்லே என்றும், அதனேத் தூய்மைப்படுத்தவே விரும்புவ தாகவும் கூறினுர். இந்து சமயத்தின் அடிப்படையான நூல்கள் பிரம்மத்தைத் தியானிக்க வேண்டுமென்கின்றன. ஆன்மீக வளர்ச்சி குறைந்தவர்கள் உருவ வழிபாட்டை ஏற்கலாம் என்றும், சடங்குகள், வேள்விகள் முதலாயினவற்றை மேற்கொள்ளலாம் என்றும் கூறுகின்றன. இராய் அவர்கள் உருவ வழிபாட்டைப் பற்றிக் கூறுவதாவது: 'காண்டற்கரிய இயற்கைக் கடவுளேத் தியானம் செய்ய இயலாதவர்கட்கு வேதங்கள் விக்ரக வழிபாட்டை வகுத்தன. அவை மீண்டும் மீண்டும் இவ்வழிபாட்டின் சடங்கு களேத் தவிர்த்து, தூய சமயத்தை நிறுவ முற்பட்டுள்ளது. விக்ரக வழிபாடு உண்மையான பேரின்பத்தை நல்காது.'

பிரம்மசமாஜத்தின் உட்கிடையை உணர்த்தும் பத்திரத்தில் இராய் அவர்கள் கூறுவது 'செதுக்கப் பெற்ற வடிவம், சிலே, உருவம், ஓவியம், படம், இவையனேய எவ்வடிவும் பிரம்ம சமாஜக் கட்டிடத்துள் இடம் பெறுதல் கூடாது' என்பதாகும். இவ்வாசகம் நமக்கு இஸ்லாமியர் கூறுவதை நினேவுபடுத்துவதாகும். ஆனுல் விக்ரக வழிபாட்டை வன்மையாகக் கண்டிக்கும் இராய், சமயப் பொறை மிகுந்தவர் என்பதை நமக்கு நன்கு எடுத்துக் காட்டு கிறது. மற்ருெரு வாசகத்தில், தனியொருவரோ, குழுவினரோ, விக்ரக வழிபாட்டைக் குறைத்துக் கூறுதலோ, பழித்தலோ கூடாது என்றும் வற்புறுத்தியுள்ளார்.

இல்வாழ்வான் ஆற்ற வேண்டிய கடமைகளே, செவ்வனே ஆற்ற வேண்டும் என்று வலியுறுத்தினுர். ஆதலால், இராய், இந்து சமயத்தின் அடிப்படையையே மாற்றி அமைக்க முற்பட வில்லே. இதேபோல் இந்து சமுதாயத்தையும் அடியோடு மாற்ற முற்பட்டாரிலர் என்றே கொள்ளவேண்டும். வெளிப்படையாகத் தோன்றிய தீமைகளேக் களேய முனேந்தார். பிரம்ம சமாஜத் தினருக்கு அவர் வகுத்த சாதனம், காயத்திரி மந்திரம், உபநிடதப் பகுதிகள் ஆகிய இவற்றைக்கொண்டு பரம்பொருளேத் தியானிக்க வேண்டும் என்பதாகும். இத் தியானத்திற்குப் பிறகு மஹாநிர்வான

தந்திரத்தினின்று பாடல் ஒன்றும் படிக்கப்பெறும். இவற்றை நோக்கும்போது இராய், அடிப்படை மாற்றங்களை விழைந்தாரிலர் என்பது புலப்படும். பிரம்ம சமாஜத்தின் தொடக்க கால கூட்டங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்று நாம் அறிய இயலு கின்றது. ' இரு தெலுங்கு பிராமணர்கள், வேதத்தினின்று உரத்தக் குரலில் இசைப்பார்கள்; வங்கத்தைச் சேர்ந்த உத்ஸவானந்த வித்யவாக்ஹ் என்னும் பண்டிதர் ஒருவர் உபநிடதங்களினின்று சில பகுதிகளைப் படிப்பார்; சில சமயங்களில் ஐரோப்பிய பாதிரி மார்களில் சிலர் சில பாடல்களைப் பாடுவார்கள்; கோலம் அப்பாஸ் என்கின்ற இசையறிஞர் தமது கருவியில் சில பாடல்களை இசைப்பார். இம் மேற்கோளினின்று நாம் அறிவது இராய் அவர்களின் பரந்த மனப்பான்மை, சமயச் சமரசம், சமயப் பொறை போன்றவையாகும். பிரம்ம சமாஜத்தின் வளர்ச்சியால் விளைந்த நன்மைகள், பரந்த நோக்கம், அறிவிற்கியைந்த கோட் பாடுகள், தற்காலத்திற்கு உரிய சிந்தனைகள் எனலாம். மாக்ஸ் முல்லர், புதிய சமயம் என்றென்று உருவாகுமானால் அச் சமயம் இராய், தீதபேந்திரநாத் தரகூர், கேஷப்சந்திரஸென் ஆகி யோருக்குப் பெரிதும் கடமைப்பட்டதாகும் என்றார். ஆனால், இராய் அவர்கள் தாம் புதிய சமயம் நிறுவும் நோக்கம் கொண்டவர் என்று கூறுவதற்கில்லை. அவரே தமக்கு அத்தகைய எண்ண மில்லை என்று தெளிவாகக் கூறியுள்ளார். இந்து சமயத்தின் வரலாற்றில் அவ்வப்போது சீர்திருத்த இயக்கங்கள் தோன்று வதைக் காண்கிறோம். பௌத்தம் ஒரு காலத்தில் தோன்றி இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை மறுத்து வீறு கொண்டு எழுந்தது. பின்னர் இச் சமயத்தின் வளர்ச்சியெல்லாம் கடல் கடந்த நாடுகளிலே அமைந்தது. அண்மைக் காலத்தில் ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் பௌத்தத்தை நாம் மீண்டும் இந்தியாவில் வரவேற்றோம். பௌத்தத்தையும் வென்று இந்து சமயம் அதன் சிறப்பைப் புலப்படுத்தியது. இதே போன்று பிரம்ம சமாஜத்தினையும் வென்றுள்ளது. ஆதலால் மாக்ஸ்முல்லர் கூறியதைப் போன்று புதிய சமயம் தோன்றவில்லை. பிரம்ம சமாஜத் தலைவர்கள் வற்புறுத்திக் கூறிய கருத்துகள் அன்றைய அறிஞர்கட்கு உகந்தனவாக அமைந்தன. இந்தியாவின் ஆன்மீக வளர்ச்சிக்கும் அவை இன்றியமையாதனவாயின. பிரம்ம சமாஜம் செல்வாக்குப் பெற்று விளங்கிய நாள்களில் அதன் கருத்துகள் ஆக்கத்திற்கு வழி வகுத்தன. எவரையும் புண் படுத்தாத நிலையில் வற்புறுத்தப் பெற்றன. வன்முறைகளை அறவே ஒதுக்கியது சமாஜம். சமாஜம் தொடக்கத்தில் கருத்துப் புரட்சியையே விளைக்க எண்ணியது. பின்னர், அந் நாளைய தேவைக்கு ஏற்பச் சில சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

ஐம்பதாண்டுகட்கு முன்னர் பிபின்சந்திரபால் என்பவர் பிரம்ம சமாஜத்தைப் பற்றிக் கூறியது இங்கே நினைவிற் கொள்ளத்தக்கது. 'பிரம்ம சமாஜம் மேற்கொண்ட வாழ்க்கைப் பணி யாதெனில் சாதிப் பாகுப்பாட்டால் விளைந்த சீர்க்கேடுகளையும், இழிவுகளையும் நீக்குதல் மட்டுமன்று. அதன் பணி, ஒவ்வொரு மனிதனிடத்திலும் இறையைக் கண்டு உணர்தலாகும்.'

இராய் இந்து சமயத்தின் வளர்ச்சியில் ஆர்வங் கொண்டிருந்தார். இந்தியாவின் பழம் பெருமைகளைப் பற்றி நினைத்து வீறுகொண்டார். பண்டைய சமயத்தின் சிறந்த கூறுகளையெல்லாம் பாதுகாக்க எண்ணினார். அவர் வாழ்ந்த காலத்திற்குரிய சீர்திருத்தங்களைத் துணிந்து சொன்னார்; நிறைவேற்றினார். இராய் தமது பரந்த நூலறிவாலும் காலத்திற்கேற்ற, தற்கால சிந்தனைத் திறத்தாலும் இந்து சமயத்தில் ஏற்பட்டிருந்த கேடுகளைக் களைந்தார். அவர் தமது 'தற்சரித்திரத்தில்' கூறுவதை நாம் ஏற்கலாம்.

'நான் மேற்கொண்ட கருத்து மாறுபாடுகளில் எல்லாம் இந்து சமயத்தை எதிர்க்கவில்லை. உண்மைக்கு மாறுக நெறிக்குப் புறம்பானதாகக் காட்ட எழுந்த முயற்சிகளையே எதிர்த்தேன்'.

இராய் வேதாந்த உண்மைகளைச் சுருக்கித் தெளிவாகக் கூறினார். வேதாந்தம் என்பது உபநிடதங்களைக் குறிக்கும். உபநிடதங்கள் பலவெனினும் பத்து உபநிடதங்களே சங்கரர், இராமானுஜர், மத்வர் போன்றோரால் பெரிதும் பயிலப்பட்டும் விரித்துரைக்கப்பட்டும் உள்ளன. வேதத்தின் துணிபு, அல்லது உட்கிடை வேதாந்தம் எனலாம். சங்கரரது அத்துவித வேதாந்தமே, வேதாந்தம் என்று கொள்ளத்தக்கது என்பது சிலர் கருத்தாகும். இராய் சங்கரர் கருதுவதைப் போன்று பிரம்மத்தை நிர்க்குணமாகக் கருதவில்லை. பரம்பொருள், பிரம்மம் என்றென்றும் ஒருமையாகச் செயலற்ற நிலையில் இருப்பதே என்று இராய் கருதினார். பிரம்மம் இவ்வுலகையும் உயிரினத்தையும் படைத்தவர் என்றார். தாம் கொண்ட கருத்திற்கு அரண் செய்யும் பகுதிகளை தைத்திரீயம், கௌசிதகி போன்ற உபநிடதங்களினின்று எடுத்துக் கூறினார். இவ்வுலகப் படைப்பினின்றே பிரம்மத்தின் இருப்பை உண்மையை நாம் உணருகிறோம் என்றார். பிரம்மம், தாம் பலவாதல் வேண்டும் என்று விரும்பியது. ஆதலால் இவ்வுலகு படைக்கப் பெற்றது. பிரகிருதி, பொருள் காரணமாக விளங்கியது. முதற்காரணன் பிரம்மமே. இக்கருத்துகளை அடிப்படையாக மக்கள் தம் வாழ்வில் கொண்டால், சடங்குகளும், மூட நம்பிக்கைகளும் இடம் பெறு என்பது இராய் அவர்களது கருத்தாகும்.

மனவெழுச்சிகளையும் புலனின்பங்களையும் ஒருவன் அறவே நீக்கி, இறைவனிடத்தில் பக்தியோடு விளங்குவானேயானால் அவன் சமய நெறியில் ஒழுகுகின்றவனாவான். சடங்குகளில் ஒருவன் விரும்பினால் ஈடுபடலாம். இல்லையேல் அவற்றைப் புரிய வேண்டும் என்ற இன்றியமையாமையில்லை என்பது உபநிடதக் கருத்தாகும். இவ்வாறு இராய் அவர்கள் தாமே எதையும் புதிதாகக் கூறவில்லை என்றும், தாம் கூறுவன அனைத்தும், மூல நூல்களினின்று எடுத்துக் கூறப்பெறுபவை என்றும் விளக்கினார்.

சமயத்திற்குப் புறநிலையில் வளர்ச்சி பெற்றுள்ளது விக்ரக வழிபாடு. இதைக் கண்டிப்பதையே முக்கிய நோக்கமாக இராய் கொண்டிருந்தார். விக்ரக வழிபாடு ஏற்றற்குரிய காரணங்கள் யாவை என்றும் அதை மறுத்தற்குரிய காரணங்கள் யாவை என்றும் நன்கு வரையறுத்துக் கொண்டு இராய் தமது வழக்குரைகளைத் தொடுத்தார். விக்ரக வழிபாட்டை வற்புறுத்துவோர் கூறுவது, பிரம்மத்தை நாம் நேரில் புலக்காட்சியில் அறிய இயலாது ஆதலால், வடிவத்தை வைத்தே நாம் பிரம்மத்தை அறிய வேண்டும் என்பதாகும். உபநிடதம்-'ஆத்மனையே வழிபடு' என்று கூறுகிறது. - இவ்வாறு ஆத்மனை வழிபடுதல் இயலும் என்பதனால்தான் உபநிடதம் வற்புறுத்துகிறது. இயலாத ஒன்றை உபநிடதம் இதனை வற்புறுத்தாது என்பது இராய் அவர்களது வழக்காகும். மேலும், புராணங்களிலும், தந்திரங்களிலும், கூறப்பெறும் சடங்குவழிபாட்டு முறைகளை ஈசோபனிஷத் வெளிப்படையாகவே மறுத்துள்ளது.

பிரம்மத்தைத் தூய நிலையில், அதாவது அதன் உண்மை நிலையில் வழிபடுவது இல் வாழ்வோருக்கு இயலாத ஒன்றென்றும், அத்தகைய வழிபாடு துறவிகட்கே இயலுவதென்றும் கூறப்பெறுகின்றது. இக் கருத்தை மறுக்கும் பகுதிகளும் உபநிடதங்களில் உள. இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளோரும் ஆத்மனைத் தியானித்தல் வேண்டுமென்பதே உபநிடதம் கூறுவதாகும். ஆன்மீக வளர்ச்சியில் பின்தங்கியவர்கள் உருவ அல்லது விக்ரக வழிபாட்டை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும், இக் கருத்தை இராய் அவர்கள் ஏற்கவில்லை. பாமர மனிதன் சமயத்தின் உயர்நிலை எய்துதல் வேண்டாமா என்று கேட்கிறார். அவன் என்றென்றும் தாழ்ந்த நிலையில் விக்ரக வழிபாட்டிலேயே அமிழ்ந்துவிட வேண்டுமா என்று கேட்கிறார்.

நம்பிக்கையே அடிப்படையாகும். விக்ரகத்தை வழிபடும் போது, அது இறைவனின் குறி, அல்லது அடையாளம் என்று வழிபட்டால் அது இறைவழிபாடேயாகும். என்பது பிறிதொரு வழக்காகும். இக் கருத்தையும் இராய் ஏற்கவில்லை. ஒருவன்

நஞ்சை, பால் என்ற உறுதியான நம்பிக்கையுடன் கொண்டால் அது நஞ்சாகாமல் பால் ஆகுமா? அன்றாட வாழ்வில், நாம் வீட்டிற்குப் பொருள்கள் வாங்கும்போது தக்கன உயர்ந்தன. இவற்றைத் தேர்ந்து தெளிந்து கொள்கிறோம் அல்லவா? ஆன்மீகத்துறையில் உயர்ந்தது எது என்று தேர்ந்து வழிபடற் குரியது பிரம்மம் என்று கொள்ள வேண்டாமா? இவ்வகையில் தான் விக்ரக வழிபாட்டை இராய் அவர்கள் கண்டித்தார்.

பிரம்ம சமாஜத்தினருள்—தேபேந்திரநாத் தாகூர், கேஷப் சந்திரசென் போன்றவர்கள் இராமகிருஷ்ண பரமஹம்சரை அடுத்துஅவருடன் உரையாடிஅவரதுபெருநிலையைஅறிந்தவர்கள். இராமகிருஷ்ணர் துர்கையைத் தமது வழிபடும் தெய்வமாக முதலில் கொண்டதன்றி முடிவுவரை அவ் வழிபாட்டில் நிலைத்து நின்றார். இவர் நிருவிகல்ப சமாதி 'மிகவும் எளிதில் கைகூடப் பெற்றவர். இவர் விக்ரக வழிபாட்டைக் கைவிடுமாறு கூறவில்லை. யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளையே துர்கையினிடத்து இராமகிருஷ்ணர் கண்டார். இவ்வன்னையையே எவ்வுயிரிடத்தும் கண்டார். ஆதலால், இவர் கொண்ட வழிபாடு எல்லாருக்கும் வாய்த்தல் அரிது எனலாம். இராமகிருஷ்ணர் தமது உபதேசங்களில் வற்புறுத்தியுள்ளது இறைவனிடத்து முறுகிய அன்பு அல்லது பக்தியை நாம் கொள்ள வேண்டுமென் பதாகும். இராமகிருஷ்ணர்-அன்னை துர்கையிடத்தில் தாம் வேண்டிய அனைத்தும் பெற்றார். அன்னையைக் காண ஓயாது முயன்று பெற்றார். தாம் மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சிக்கும் அன்னையின் ஆசியை வேண்டினார். ஆதலால் விக்ரக வழிபாடு அறவே புறக்கணிக்கத் தக்கதன்று. நமது நாட்டில் பல சமயச் சான்றோர் விக்ரக வழிபாட்டை வலியுறுத்தியுள்ளனர். வழிபடு வோனின் மனப்பக்குவத்திற்கேற்ப வழிபடும் பொருள் அமைதல் வேண்டும். வழிபாடும் தூயதாய் அமைய வேண்டும்.

மரபுவழி அமைந்தன யாவும் நாம் ஏற்றற்குரியன என்று கொள்வது தவறாகும். இராமனந்த சாட்டர்ஜி கூறுவதைப்போல், 'பிரம்ம-அறிவும் இஸ்லாமின் இறையொருமையும் ஒருங்கே (இராய் அவர்களது) சிந்தனையை வளர்த்தன' என்பது பொருந்தும். மானியர் வில்லியம்ஸ் என்பவர், இராய் முதன் முதலாக மிகுந்த ஈடுபாட்டுடன் சமய ஒப்புமை என்னும் அறிவியலுக்கு அடிப்படைஅமைத்தார் என்கிறார். இந்து சமயத்தின் உட் பிரிவுகளிடையே உள்ள வேறுபாடுகளை நீக்கி, அவற்றின் இயைபுகளை ஒருங்கு திரட்டினார் என்பது இராய் அவர்கட்குச் சிறப்பாகாது. ஏனெனில், இத்தகைய முயற்சி பல இடைக் காலத்து மெய்யறிஞராலும் கவிஞர் துறவிகளாலும் மேற்

கொள்ளப்பெற்றதே ஆகும். இராய் உலகப் பெருஞ் சமயங்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளைக் களைய முற்பட்டார். மேலும், இச் சமயங்களைப் புரிந்து கொள்வதில் இருந்த இடர்ப்பாடுகளை நீக்கினர். இத்தகைய சீரிய பெரிய முயற்சியை மேற்கொள்வதற்குரிய தகுதி இராயிடம் இருந்தது. உலகச்சமயங்களை அவ்வவ்வற்றின் மூல மொழிகளிலே பயின்று அவற்றின் அடிப்படை உண்மைகளைத் தெளிந்தார். உலகப் பொது சமயம் ஒன்று காண்டல் இயலும் என்பது அவர் கொண்டிருந்த கருத்தாகும். பொதுச் சமயம் உலகு ஏற்கும் என்றும் கருதினர். 'மக்கட் தொண்டே, மகேசனின் தொண்டு' என்பதும் பிரம்ம சமாஜத்தின் அடிப்படையான கருத்தாகும். இறைவன் ஒருவனே என்பது அனைத்துச் சமயங்களும் ஏற்கும் உண்மையாகும். சமயங்களைப் பிரிப்பன எவ்வெவையோ அவற்றையெல்லாம் களைந்து, சமயங்கள் இயையக் கூடிய அடிப்படை உண்மைகளைத் திரட்டி 'பொதுச் சமயம்' என்ற தலைப்பில் வெளியிட்டார். இறையொருமைக் கருத்தை இராய் அவர்கள் ஏற்று வற்புறுத்தியதற்கு மூல காரணம் அவரது இஸ்லாமியப் பயிற்சியாகும் என்பது பேராசிரியர் நரவனே என்பவரது கருத்தாகும். வேறு சிலர், கிறிஸ்தவ சமயப் பயிற்சியே காரணம் என்பர். ஆனல், கிறிஸ்தவ மூல நூல்கள் பயில்வதற்கு முன்னரே இவரது உள்ளம் இறைவன் ஒருவனே என்ற தெளிவான முடிவை உணர்ந்திருந்தது என்று நரவனே சுட்டிக்காட்டி இஸ்லாமிய நூல்களின் பயிற்சியே இராய் அவர்களது இறையொருமைக் கருத்திற்குக் காரணமாகும் என்று கூறுகிருர்.

## ஆரிய சமாஜம்

ஆரிய சமாஜம் 1875-ல் பம்பாய் நகரத்தில் சுவாமி தயானந்தரால் நிறுவப் பெற்றது. பின்னர் லாகூர் என்னும் பகுதியை சமாஜப் பணிகட்கு உகந்த இடமாகக் கொண்டது. இச் சமாஜம் அண்மையில்தனது நூற்றுண்டுவிழாவைக் கான்பூரில் கொண்டாடியது. சமாஜம் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டது. இந்திய மக்கள் உண்மையான அறிவு பெற்று தெளிவு எய்த வழி வகுத்தது ; கொடிய பழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடியது. பாமர மக்கள் விடாப்பிடியாகப் பொருளற்ற பயனற்ற சமுதாயப் பழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். இத்தகைய வாழ்வுதான் ஆரிய சமாஜத்தின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. அந்நாளில் ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் தமது நாட்டுப் பண்டைய நூல்களைப் புறக்கணித்தனர்.

சுவாமி தயானந்தர் (1824–1883) இந்திய மரபுகளை நன்கு அறிந்தவர். இந் நாட்டின் பழம் பெருமைகளைப் பற்றிப் பெருமை கொண்டிருந்தார். இத்தகையவர்தாம் வழக்கொழிந்த, தீமை பயக்கும் சமுதாய பழக்க வழக்கங்களை மக்கள் நீக்கி வாழ வேண்டும் என்று சொல்வதற்குரியவராவர். இவர், தாம் ஊக்கமும் உணர்வும் பெற்றதெல்லாம் இந்திய ஞானத்தின் கருவூலங்களாகிய வேதங்களிலிருந்து ஆகும். வேதங்களை ஆயப் பதிவேடுகளாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் இவர் மதித்தார். வேதங்களோடு முரண் படும் நம்பிக்கைகளையும், பழக்கங்களையும் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று இவர் கூறினர். இவர் சமஸ்கிருதத்தில் பெற்றிருந்த ஆழ்ந்த புலமை நிகரற்றதாகும். இவர் கூர்த்த மதியினர். கூர்மை மிகுந்து அவரது அறிவு விளங்கினுலும், பண்பட்டிருந்தது. நமது சமயத்திரு நூல்களில் ஆழ்ந்து அவை உணர்த்தும் உண்மையான வாழ்க்கை நிலையினை அறிந்தார். இந்து சமயம் தொன்மைக் காலத்தில் எளிய, இனிய வாழ்வை வற்புறுத்தியது என்று கண்டு தாம் கொண்ட கொள்கையில் உறுதி பெற்றூர். தாம் தெளிந்த உண்மைகளை மக்களுக்கு உணர்த்த முற்பட்டார். தயானந்தரைப் பற்றி ரோமன் ரோலந்த் கூறுவது : 'பிராமண மரபு வழி நிற்கும் தன்மையை (தயானந்தர்) தனது கால்களில் கீழ்வைத்து மிதித்தார்' என்பதாகும். தயானந்தர் விக்ரக வழிபாட்டை மூட நம்பிக்கைகளுள் பழமையானது என்று கண்டனம் தெரிவித்தார். மக்கள் யாவரும் ஒத்த நிலையில் வைத்து மதிக்கத் தக்கவர்கள் என்ற உண்மையினை சாதிப் பாகுபாடு மறுப்பதால் அதனைக் கடிந்தார். இந்து சமயத்தின் இரு தூண்களாக மதிக்கத்தக்கன விக்ரக வழிபாடும், சாதிப்பாகுபாடும் ஆகும். அவ்விரண்டையும் இவர் வெறுத்தார். மரபுவழி நின்ரேடன் கருத்துப் போர் தொடுத்தார். இவரது முயற்சிகள் இவருக்குப் பெரிதும் வெற்றியையே விளைத்தன. ஒருவன் வாழ்க்கையில் பெறுகின்ற இடம் தற்செயலாக அவனது பிறப்பினுல் அமைவதன்று. அவனது பண்பு நலத்தாலேயே அமைவதாகும் என்று உறுதியாக தயான்ந்தர் நம்பினர். வேதங்கள் சாதிப் பாகுபாட்டை வற்புறுத்தவில்லை. இப் பாகுபாடு பின்னர் ஏற்பட்டது என்பதில் அவருக்குச் சிறிதும் ஐயமில்லை. சாதிப்பாகுபாடுகள் இன்றைய சமுதாயத்தில் வேரூன்றி விட்டன, இவை சிறிதும் வளைந்து கொடுக்காத இயல்புடையனவாக விளங்கின. ஆதலால் சாதிகளிடையே தொடர்பு, உறவு, ஆகியவை குலைந்தன. சாதிகள் தனித்தனியே தழைத்தன. சாதிகளுக்கிடையே பிரிவுகள் பெருகின; பிளவுகள் ஏற்பட்டன. ஆதலால் சாதிக்களுக்கிடையே நல்லுறவும் தொடர்பும் ஏற்படுதல் வேண்டும் என்று தயானந்தர் விரும்பினர். தயானந்தர் பிறப்பால் பிராமணர் என்ருலும், அவ்

வகுப்பின் மேன்மையை உயர்வை ஏற்க மறுத்தார். பிராமணர்களது ஒழுகலாறும் பேச்சும் இன்னபிற நடைமுறைகளுமே இந்து சமயம் இகழப் பெறுதற்குக் காரணம் என்று இவர் கருதினர். இரு பிறப்பாளரே வேதங்களைப் பயிலுதற்குரியவர், கல்வி கேள்விகட்குரியர் என்ற கருத்தை வன்மையாக இவர் மறுத்தார். மகளிரது உரிமைகட்காக வாதாடினர். மகளிர் தத்தம் வீடுகளிலிருந்து வெளியேறி ஆடவருடன் போட்டியிட்டுக் கல்வி பெற வேண்டும் என்றார். இந்து சமயம் விழிப்படைந்து சமுதாயத்தில் உள்ள குறைகளை நீக்க முற்பட்டால், கிறித்தவம் போன்ற சமயங்கள் மதமாற்றம் செய்ய இயலாது. ஹிந்து சமுதாயத்தில் உள்ள உறுதியற்ற நிலையே பிற சமயங்கள் இந்தியாவில் தழைப்பதற்குக் காரணம் என்று கண்டார். இராஜாராம் மோஹன்ராய் அறிவாற்றலைப் பெரிதும் நம்பினர். மக்களிடையே அறிவு வளரும்போது மூட நம்பிக்கைகள் தாமே நீங்கும். ஆதலால் தயானந்தர், பல கல்வி நிலையங்களை நிறுவினர். இவர் மேலை நாடுகளினின்று நம் நாட்டிற்குப் போந்தவை எல்லாம் தீயன என்று கூறவில்லை. எனினும் மேலைநாட்டுச் சமயம், தத்துவம், கலை போன்ற யாவும் புனிதமானவை என்று ஏற்கவும் மறுத்தார். தயானந்தரது காலத்தில் மேலைநாட்டு நாகரிகத்தில் மக்கள் அளவுக்கு மீறிய ஆர்வம் கொண்டிருந்தனர். மக்கள் தம் சிந்தனைத் திறனை இழந்து மேலைநாட்டுச் சிந்தனைகளை அவை போந்தவாறே ஏற்றனர். இத்தகைய மன நிலையினல் இளைஞர் தமது நாட்டையும் அறியாது மேலைநாட்டையும் அறியாது பிறநாட்டுப் புறக்கோலங்களில் மனத்தைப் பறிகொடுத்தனர். மேலும் அந்நாளைய கல்வி, நமது நாட்டுப் பாரம்பரியத்தைப் பழிப்பதாக அமைந்தது. ஆதலால் இந்தியக் கல்வி நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதாக அமைய வேண்டும் என்றும், அதே சமயத்தில் இந்தியப் பண்பாட்டின் தனிச் சிறப்பும் விளங்குவதாதல் வேண்டும் என்றும் இவர் வற்புறுத்தினர். நாம் தொன்மை வாய்ந்த பண்பாட்டிற்கு உரியவர்கள்; இப் பண்பாட்டைக் காக்கவும், வளர்க்கவும் நாம் கடமைப்பட்டவர்கள் என்று நமது நாட்டு மக்களை நோக்கி அறைகூவினர். ஆரிய சமாஜத்தினரால் நிறுவப்பெற்ற டி. ஏ. வி. கல்லூரி சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைப் பற்றியதோடு, ஆங்கிலம், பாரசீகம் ஆகிய மொழிகளையும் பயிற்றுவித்தனர். தயானந்தர் கண்ட ஆரிய சமாஜம் இயக்கம் சார்ந்தது. குடியாட்சி அமைப்பைக் கொண்டது. அந்நாளைய மக்கள் கொண்டிருந்த தோல்வி மனப்பான்மையை நீக்கினர். தாய்நாட்டின் பண்டைய பெருமைகளில் உண்மையான பற்றும் பெருமையும் கொள்ளுமாறு செய்தார். சாதி அமைப்பை எதிர்த்துப் போராடினர். இவ்

வமைப்பின் புறவொட்டலேய தீண்டாமையை வன்மையாகச் சாடினர். கற்றறிந்தவர்கள் ஆரிய சமாஜத்தின் பணிகளால் விழிப்படைந்தனர்; தூண்டப்பெற்று குறைகளேக் களேந்து புதிய வாழ்வை மேற்கொண்டனர். ஆரிய சமாஜத்திற்கு இவ்வாண்டோடு (1974) ஒரு நூற்ருண்டு நிறைவுபெறுகிறது. அது தொடங்கிய பணிகள் இன்னும் முற்றுப்பெறவில்லே. சமுதாய சீர்திருத்தத் துறையில் இவ்வமைப்பின் பணிகள் மேலும் தேவைப் படுகின்றன. தீண்டாமை, இந்து சமயத்தின் பகுதியென்று தயானந்தர் கொள்ளவில்லே. அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் சமைத்த உணவை உட்கொண்டார். மனிதன் யாண்டும் ஒரே தன்மையன் என்ற சமரச நோக்கு உடையவராக விளங்கினர்.

சுவாமி தயானந்த சரஸ்வதி கத்தியவார் பிராமணராவார். அவர் 1824-ல் பிறந்தார். அவரது தந்தை சிவனே மிகுந்த ஈடுபாட்டுடன் வழிபட்டு வந்தார். தயானந்தரது கல்வி சமஸ் கிருதத்தின் மூலமாகவே அமைந்தது. பதினன்கு ஆண்டுகள் நிரம்பப்பெறும்போது வேதங்களனைத்தையும் மனப்பாடம் செய் திருந்தார். இவரது உடன் பிறந்தவள் இறக்க நேர்ந்தது. இவ்விழப்பு இவரை சமய வாழ்வு மேற்கொள்ளத் தூண்டியது. அவர் அத் தூண்டுதலால் 1846-ல் வீட்டைவிட்டு வெளி யேறினர். இவரது பெற்ருேர் அவருக்குத் திருமணம் செய்விக்க நினைத்தனர். இல்வாழ்க்கையை அவர் அறவே வெறுத்ததால் வீட்டைவிட்டு வெளியேறினர்.

தயானந்தர் வேதங்கள் பிழையற்றன என்ற கொள்கையில் ஊன்றி நின்ருர். பிரம்மசரியம், சந்நியாசம் ஆகிய இரு ஆசிரம நிலேகளும் மனிதனுக்கு இன்றியமையாதன என்ருர். கருமக் கொள்கையிலும் மறுபிறப்புண்மையிலும் அவர் நம்பினர். இஸ்லாம் கிறிஸ்தவம் ஆகிய இருபுறச் சமயங்களேயும் அறவே புறக்கணித்தார். பிரம்ம சமாஜம் நிறுவிய இராய் அவ்விரு சமயங்களேயும் தழுவினர்; இச் சமயங்களின் அடிநிலே உண்மை களே அவர் ஏற்ருர். ஆனல், தயானந்தர் அச் சமயங்களே ஏற்க வில்லே. இவர் ஆங்கிலம் அறியாத காரணத்தால் சமஸ்கிரு தத்தின் மூலமாகவே யாவையும் கற்கலானர். இந்நூல்களே இவருக்குப் பேருக்கம் தந்தன. இவர் வீட்டை விட்டு வெளியேறி, பதினன்கு ஆண்டுகள் அலேந்து திரிந்து பல ஏமாற்றங்கள் அடைந்தார். பின்னர் மட்ரா என்னும் ஊரில் புலமையாளர் ஒருவரை 1860-ல் சந்தித்து அவரிடம் உபதேசம் பெற்ருர். அவர் அந்தகர். அவர் 1863-ல் வேதக்கல்வி மீண்டும் பரவுதற் பொருட்டு தயானந்தரைப் பணித்தார். 1868-ல் விக்ரக வழி பாட்டை எதிர்த்து உரையாற்றத் தொடங்கினர். பல சமஸ்கிருதப் பள்ளிகளே நிறுவினர். 1872-ல் பிரம்ம சமாஜத்தின் முக்கிய

உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டார்.. கேஷப் சந்திரஸென் என்பவரது தொடர்பு இவரைப் பெரிதும் ஊக்கியது. 1874-ல் தயானந்தர் தமது பெருநூலாகிய 'சத்யார்த்த பிரகாசம்' என்பதை அலகாபாத்திலிருந்து வெளியிட்டார். இந்நூலின் இறுதியில் தாம் கண்ட நெறியின் அடிப்படைக் கொள்கைகளை ஐம்பத் தொன்று சட்டங்களாக வகுத்துள்ளார். பின்னர் 1875-ல் ஆரிய சமாஜத்தைப் பம்பாயில் நிறுவினார். இரு ஆண்டுகள் கழிந்த பின்னர், ஆரிய சமாஜம் லாகூருக்கு மாற்றப் பெற்றது. இப் பதியே சமாஜத்தின் தலைமைச் செயலகமாக நிலவி வருகிறது. தயானந்தர் 1883-ல் மறைந்தார். ஆரிய சமாஜத்தின் கொள்கைகட்கும் பிரம்ம சமாஜத்தின் கொள்கைக்கும் இடையே வேறுபாடுகள் அதிகமாக விளங்கின. தாயானந்தர்-பிரம்மஞான சபையினரோடு (தியோசபிகல் கழகம்) நான்கு ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தார். கேஷப் அவர்களது யோசனையினால், சமஸ்கிருதத்தில் பயிற்றுவிப்பது தவிர்க்கப் பெற்றது. இந்தியில் பயிற்சி தொடங்கப் பெற்றது இம் மொழி கருத்துகள் விரைந்து பரவக் காரணமாயிற்று. ஆன்மா மறுபிறப்பிற்கு உட்படுகிறது என்னும் கருத்தையும், வேதங்கள் பிழையற்றன என்னும் கருத்தையும் ஆரிய சமாஜம் அடிப்படைக் கொள்கைகளாக ஏற்றன என்று கண்டோம். இவ்விரு கொள்கைகளையும் தேவேந்திரநாத் தாகூரும், கேஷப் சந்திரசென்னும் முழுமையாக ஏற்க இயலவில்லை.

தயானந்தர் வன்மையாக வாத எதிர்வாதங்கள் புரிந்து வேதத் தலைமையை நிலைநாட்டினார். இந்து சமயத்தைத் தூய்மைப்படுத்த முயன்றார். பிற, புறச் சமயங்களை அறப்போர் முறையில் பிரகடனம் செய்தார். இதனால் ஆரிய சமாஜத்தின் சமுதாயச் சீர்திருத்தங்கள் பரந்த அளவில் இதற்குப் புகழைத் தேடித் தந்தன. சாதிப்பாகுபாடு, இளமைத் திருமண எதிர்ப்பு ஆகிய இவ்விரண்டும் சமாஜத்தின் தொண்டுகளில் சிறந்தன எனலாம். இதுகாறும் புறச்சமயம் சார்ந்தவர்கள் மீண்டும் தமது தாய்ச் சமயத்தில் சேர விரும்பினர். இதற்கும் சமாஜம் வழிவகைகளைக் கண்டது; இவற்றைப் பின்னே காண்போம். மகளிர் இளமையில் மணந்து, மணவாழ்வு நிறைவேறப் பெறுமல் இருந்தால், இவர்கள் மறுமணம் புரிந்து கொள்ளலாம் என்று தயானந்தனர் கூறினார். 'நியோகம்' என்னும் முறை பழைமை வாய்ந்தது. மகப்பேறில்லாதவனுடைய மனையாள் மகப்பெறுவதற்கு ஞாதியொருவனை நியமிக்கும் முறையே இம் முறை. இம் முறையினை மீண்டும் வழக்கிற்குக் கொண்டு வரச் சிலர் விரும்பினர். இம் முறையினைச் சீர்திருத்தக்காரர் வெறுத்தனர். சமய அறிவை மக்கட்கு ஏற்படுத்தி அறியாமையை அகற்றுவதே ஆரிய சமாஜத்தின் முக்கியக் குறிக்கோளாகும். சமாஜம் நிறுவிய கல்வி

நிலையங்களில் கல்விக் கட்டணம் மிகக் குறைவாகும். அறப் போதனை வலியுறுத்தப் பெற்றது. ஆசிரியர்கள் இந்தியர்களாவர். அந்நாளில் அயல் நாட்டவர் பலர் கல்வி நிலையங்களில் பணிபுரிந்த நிலையில் இந்தியர்களே ஆசிரியர்களாக அமைதல் வேண்டும் என்று சமாஜத்தினர் வற்புறுத்தியது புரட்சியேயாகும். மகளிர் கல்வி பெறுவதற்கு வாய்ப்புகள் நல்கப்பெற்றன. தயானந்தர் கடுமையான எதிர்ப்புகட்கிடையே பணிபுரிந்தார். சர்மா கூறுவது : இந்து சமயத்துள் ஆரிய சமாஜம் எதிர்ப்பார்வம் மிக்க சமயப் பிரிவாகும். பிரம்ம சமாஜத்தைப் பார்க்கிலும் இந்து சமயத்தோடு இணைந்தது, சமாஜம். ஆரிய சமாஜம் தோன்றிய காலத்திலுஞ்சரி பின்னாட்களிலுஞ்சரி, புகழத்தக்க தொண்டாற்றியுள்ளது; இந்து சமயத்தின் மறுமலர்ச்சியிலே ஆரிய சமாஜம் முக்கிய பங்கேற்றுள்ளது; இச் சமயத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டியது எனலாம்.

'சத்யார்த்த பிரகாசம்' என்னும் நூலில் தயானந்தர் குறித்துள்ள அடிப்படையான கொள்கைகளை, ஐந்து தலைப்புகளில் அடக்கிக் காணலாம். இவ்வாறு அவற்றை அடக்கி வகுத்துக் கூறுபவர் பேராசிரியர் சர்மா ஆவர். இனி அவற்றை விளக்கு வோமாக.

(1) தலைமையான நூல்கள் : நான்கு வேதங்களாகிய ரிக், சாம, யஜுர், அதர்வணம் ஆகியவை இறைவனினின்றும் தோன்றியவை. இவை இறையின் வாய்மொழிகளாகும். இவ்வேதங்கள் பிழைகளற்றன. ஆதலால் தலைமையாகக் கொள்ளத்தக்கன. வேதங்களின் முக்கிய பகுதிகள், சம்ஹிதைகள் அல்லது மந்திரப் பகுதிகளாகும். பிராமணங்கள், ஆறு வேத அங்கங்கள், ஆறு உப அங்கங்கள், நான்கு உப வேதங்கள், 1127 சாகைகள் யாவும் வேதப் பகுதிகளை விளக்க எழுந்தனவாகும். இவை விளக்கங்கள் ஆதலால் வேதங்களைச் சார்ந்தன. தனித்த நிலையில் இவற்றிற்குச் சிறப்பு இலது. பாகவத புராணம், பிற புராணங்களும் உண்மையில் புராணங்களல்ல என்பது இவரது கருத்தாகும். குறிப்பாக கிருஷ்ணனைப் பற்றி புராணங்களில் காணப்பெறும் நிகழ்ச்சிகள் இவருக்கு வெறுப்பை விளைத்தன.

(2) தத்துவம் அல்லது மெய்விளக்கம் : பிரம்மம் யாவற்றிற்கும் மேலானது, உயர்ந்தது. இதனைப் பரமாத்மன் என்று வழங்குகிறோம். பிரபஞ்சம் முழுமையும் பிரம்மம் நிறைந்து விளங்குகிறது. சத், சித், ஆனந்தம் என்பதன்

வடிவமே பிரம்மமாகும். பிரம்மம் எல்லாவற்றையும் அறிய வல்லது. உருவமற்றது ; எங்கும் நிறைந்தது; பிறவாதது ; எல்லையற்றது ; ஆற்றல் சான்றது; இரக்கமிக்கது. படைத்து, காத்து, அழிக்கவல்லது. உயிரினத்திற்கு அவ்வவற்றின் கருமத் திற்கு ஏற்ற பலன்களைத் தருவது; நீதி வழுவாதது என்று இறை வனின் பெருமையை விரித்துக் கூறி முடிக்கிறார்.

இறைவனும், ஆன்மாவும் தனித்த இருப்புடையன. இவை இயல்பில் வேறுபடுவன. இவற்றின் குணநலன்களும் வேறாகும். இவை ஒன்றையொன்று பிரியாமல் விளங்குவன. இறைவன் எங்கும் நிறைபவன். ஆன்மா இறை–நிறைவில் ஒடுங்குகிறவன். பிரகிருதி-பிரபஞ்ச முதற் காரணமாகும் (உபாதானம்). இறைவன், ஆன்மா பிரகிருதி ஆகிய இம் மூன்றும் தொடக்க மற்றன. உலகத்தை இறைவன் பிரகிருதியினின்று தோற்றுவிக் கிறான். இறைவனின் படைப்பாற்றல் வெளிப்படுவதே படைப் பாகும். இவ் வெளிப்பாடு இயல்பானது, இன்றியமையாதது. ஆன்மா, அறியாமையினால் கட்டுண்டு, வாழ்கிறது. இவ்வறி யாமையே அறமல்லாத செயல்கட்குக் காரணமாகும். இறை யல்லாத பிறபொருள்களை வழிபடச் செய்வதும் இவ் அறியாமையே யாகும். ஆன்மாவிற்குச் செயலுரிமை உண்டு. தேர்ந்து, தக்க செயல்களை மேற்கொள்ளலாம். ஆனால், இச் செயல்கட்குரிய பலன்களை நுகர்வதில் இறைவனுக்கு ஆட்பட்டு விளங்குகின்றன. மோட்சம் அல்லது வீடுபேறு என்பது துன்பத்தினின்று ஆன்மா நீங்குதலாகும். நீங்கி, பின்னர் குறித்த காலம் வாழ்ந்து, மீண்டும் இந் நிலவுலகில் பிறப்பதாகும். சுவர்க்கம் என்பது பேரின்பத்தை நுகர்தலாகும். இந்நுகர்விற்குரிய சாதனங்கள் கைவரப்பெறுத லாகும். நரகம் என்பது, எல்லையற்ற துன்பத்திற்கு உட்படு தலாகும். இத்தகைய துன்பங்களை அனுபவிப்பதற்கேற்ற சாதனங்கள் உடைமையாகும்.

(3) தருமம் : தருமம் என்பது நேரிய ஒழுக்கமுடைமை யாகும். நேர்மை குன்றாது, ஒழுகுதலாகும்; எண்ணம், சொல், செயல் ஆகிய முந்நிலைகளிலும் சத்தியம் தவறாது வாழ்தலாகும். சுருங்கக் கூறின், இறைவனின் சித்தத்தின்படி ஒழுகுதலாகும். இறைவனின் சித்தத்தை வேதங்களின் வாயிலாக அறியலாம். ஆதலால் வேதம் விதித்தவாறு ஒழுகலே தருமம் என்பதாகும். நேரிய முறையில் ஈட்டியபொருள் தான் 'அர்த்த' என்று கூறுதல் தகும். தீய, நேரியதல்லாத முறைகளினால் ஈட்டியபொருள் அனர்த்தமாகும் (பொருளல்லாதது). தீதின்றி வந்த பொருள் கொண்டு நுகரும் இன்பமே, சிறப்புடையது. இங்கேயும் முறை

யான இன்ப நுகர்வு வலியுறுத்தப் பெறுகிறது. ஒருவனது வருணமும், ஆசிரமும் அவனது உயர் பண்புகளை வைத்து உறுதி செய்யப் பெறுவன. கற்றறிந்த ஞானிகளாகத் திகழ்வோர் தேவராவர். தேவபூசை என்பது கற்றோர், ஞானிவழிபாடாகும். தந்தை, அன்னை, ஆசிரியன் (குரு), நேர்மை குன்றாத மன்னன், நேரிய வாழ்வு வாழும் பெரியோர், கணவனிடத்து மாறாத அன்பு பூண்டொழுகும் மகளிர், மனைவியிடத்து மாளாத காதல் கொண்டு இல்லறம் நடத்தும் ஆடவர் ஆகியோர் தேவ பூஜைக்குரியவர்கள். அறியாமை வயப்பட்டு வாழ்வோர் அசுரர்கள். கருத்தொருமித்து, மகனும் மகளும் ஏற்றுக் கொள்ளும் வாழ்க்கையே திருமண மாகும். இது வேத நெறிக்குட்பட்டே அமைதல் வேண்டும்.

(4) வீடுபேறு: மோட்சம் அல்லது விடுதலை பெறுதற்குக் காரண மான சாதனங்களுள் சிறந்தது இறைவழிபாடாகும். நேரிய செயல்களைப் புரிதலும் விடுதலை நல்கும். இறைவழிப்பாட்டில் முந்நிலைகள் கருதப்பெறுகின்றன. துதி, பிரார்த்தனை, உபாசனை ஆகியவை மூன்று படிநிலைகளாகும். துதி என்பது இறைவனின் பொருள்சேர் புகழை இடையறாது ஓதுதலாகும். இறைவனிடத்து இடையறாத அன்பு பூண்டு ஒழுகுவதற்கு இறைவனின் புகழ் ஓதுதல் துணைநிற்கும். உயர்ந்த ஞானத்தை இறைவனிடத்தில் வேண்டுதல் பிரார்த்தனையாகும். பிற நலன்கட்காக வேண்டு தலும் பிரார்த்தனையின்பாற்படும். தூய்மை, புனிதத்தன்மை, இறையிருப்பு உணர்வு போன்றவற்றை யோக நெறிகளால் மேற் கொண்டு இறையொடு ஒன்றுதல் உபாசனையாகும். துதி, பிரார்த்தனை, உபாசனை ஆகிய மூன்றும் (ஒவ்வொன்றும்) இருவகை யாகப் பகுப்புக் கொள்ளும். சகுண, நிர்குண நிலைகளாகப் பகுக் கலாம். இறைவனிடத்துச் சரண் புகுதல், சகுண வழிபாட்டின் சிறந்த கூறாகும். இறைவனுக்குக் குணநலன்கள் இருப்பதாகக் கொள்ளுதல் சகுண வழிபாடாகும். இறைவனை குணங்களற்ற வனாகவும், குணங்கள் கடந்தவனாகவும் கொள்ளுதல் நிர்க்குண வழி பாடாகும்.

(5) சடங்குகள்: சம்ஸ்காரங்கள் என்றும் இவற்றை வழங் குவர். மனிதனின் உடல், உள்ளம் ஆன்மா ஆகிய மூன்றும் தூய்மை பெறுவதற்காக மேம்பட்டு விளங்குவதற்காக மேற் கொள்ளப்பெறும் சடங்குகளே சம்ஸ்காரங்களாகும். கருவுறுதல் முதல் சுடுகாட்டில் பிணம் எரியுண்ணும் வரை பதினாறு சம்ஸ் காரங்கள் கூறப்பெற்றுள்ளன. இவற்றை ஒருவன் வாழ்வில் கடைப் பிடித்தல் கடப்பாடாகும். இறந்த உயிர்க்கு ஏதும் செய்த லாகாது என்று தயானந்தர் குறிக்கின்றார்.

அக்னிஹோத்ரம் (தீ வேட்டல்) போற்றத்தக்கது. காற்றைத் தூய்மைப்படுத்துவது, அனைத்துயிரையும் வாழவைப்பது, இவ் வேட்டலாகும். யக்ஞங்கள் (வேள்வி), தீர்த்தங்கள் (புனிதத் தலங்கட்குச் சென்று வழிபடுதல்) ஆகிய இவ்விரண்டும், சடங்கு களின் நிலையினின்று உயர்த்தி அறங்களாக இவை பேசப்பெறு கின்றன. தீர்த்தங்கள், புனிதத் தலங்களைச் சென்று வழிபடுதல் மட்டுமன்று, இத் தலங்களில் நீராடுதல் மட்டுமன்று, சம்ஸாரம் என்னும் இவ்வுலக வாழ்க்கையைக் கடத்தல் என்பது தீர்த்தங் களின் உட்பொருளாகும். வாய்மை, உண்மையான அறிவு பெறுதல் சத்சங்கம் (நல்லோர் தூயோர் உறவு) பெற்ற ஞானத்தைப்பரப்புதல், அறப்பணிகளைமேற்கொள்ளுதல் ஆகியவை தீர்த்தங்கள் எனலாம். இவ்வாறு தயானந்தர் கூறுவது சடங்கு களின் உட்கிடையை உணர்ந்து போற்றுவதாகும். சத்யார்த்த பிரகாசம் என்னும் நூலில் இறுதியில் ஐம்பத்தொன்று அடிப்படைக் கொள்கைகளை வகுத்தார். பின்னர் ஆரிய சமாஜம் நிறுவிய காலத்தில், அவற்றைக் குறைத்து இருபத்தெட்டு தத்துவங் களாகத் தயானந்தர் வழங்கினார். இவ்வழக்கு பம்பாயில் 1875-ல் சமாஜம் நிறுவப்பெற்றபோது ஏற்பட்டது. பின்னர் 1877-ல் லாகூரில், மேலும் தத்துவங்கள் குறைக்கப்பெற்று பத்து என்று வழங்கலாயின. இந்தப் பத்து தத்துவங்களுள் எட்டு பொதுவாகச் சீலத்தை—சிறந்த ஒழுக்கத்தை—வற்புறுத்துவன. மற்றிரண்டு தத்துவங்களுள் ஒன்று இறையொருமைக்கொள்கை. மற்றொன்று, வேதங்கள் பிழைபடாமல் விளங்குவன என்பதாகும். ஆரியன் என்று கூறப்பெறுவான் வேதங்களைப் பயின்று, பிறருக்கும் போதித்தல் வேண்டுமென்பதாகும்.

தயானந்தர் மறைவிற்குப் பிறகு கருத்து வேறுபாடுகள் எழுந்தன. சமாஜ உறுப்பினர் கருத்துரிமையை விரும்பினர். தயானந்தர் நிறுவிய கல்வி நிலையங்கள், தற்கால முறையில் இயங்குதல் வேண்டுமா அல்லது பழங்கால முறையில் இயங்குதல் வேண்டுமா என்றெல்லாம் கருத்து வேறுபாடுகள் தோன்றின. சமாஜ உறுப்பினர் புலையுணவு தவிர்த்தல் வேண்டுமா என்பதும் வாதப் பிரதிவாதங்கட்கு இடம் தந்தது.

வேதங்கள் தவறில்லாதவை என்பது ஆரிய சமாஜத்தின் அடிப்படையான கொள்கை. கருமம், மறுபிறப்பு இவ்விரண்டிலும் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். பசுவின் புனிதத் தன்மையை ஏற்றல், ஹோமம், சம்ஸ்காரங்கள் இவற்றை முறையே புரிதல், விக்ரக வழிபாடு தவிர்த்தல், விலங்குகளை வேள்வியில் சேர்த்தலைத் தவிர்த்தல் போன்றவற்றைச் சமாஜம் வலியுறுத்தின. சாதிப் பாகு பாடு, தீண்டாமை, இளமைத் திருமணம் ஆகியுவற்றிற்கு வேதத்தில் ஆதாரம் இல்லை. பொதுச் சமயம் ஒன்றைச் சமாஜம்

காண விரும்பியது. சாதி, இனம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து ஒன்றி வேதத் தலைமையை ஏற்று வழிபடுவதுதான் சமாஜத்தின் நோக்கமாகும்.

ஆரிய சமாஜம் வருங்காலம் போற்றும் வகையில் ஆற்றிய தொண்டுகளை மூன்று இயக்கங்களாகக் காணலாம். அவை, சுத்தி சங்காதன், கல்வி முறையாகும். இந்துக்கள் அல்லாதவர்களை மீண்டும் ஏற்பதற்குத் தூய்மைப்படுத்தும் சடங்கிற்குச் சுத்தி என்று பெயர். தாழ்த்தப்பட்டோர் தீண்டாதவர்கள் ஆகியவர்களை இந்து சமயம் ஏற்பதற்குரிய சடங்கு, சுத்தியாகும். இவர்களைத் தூய்மை செய்து, பூணூல் அணிவித்து, பிற இந்துக்களுக்குச் சமமாக மதிக்கும் பணியினைச் சமாஜம் ஏற்றது. இஸ்லாம், கிறித்தவம் ஆகிய சமயங்களைத் தழுவியர்களும் மீண்டும் தமது தாய்ச்சமயத்திற்குத் திரும்ப விழைந்தால், அவர்களை ஏற்றற்குரிய வழியை வகுப்பது சுத்தியாகும். இத்தொண்டு இந்து சமயம் தொன்றுதொட்டு செய்து வருவதாகும். சமாஜம் சுத்தியின் மூலம் பலருக்கும் சமய வாழ்வு நல்கியது போற்றற்குரியதே.

சங்காதன் என்பது ஒன்று சேர்தல் என்று பொருள்படும். இந்துக்கள் தற்காப்பின் பொருட்டு இவ்வமைப்பைக் கண்டனர். பிற சமயத்தவர் இந்து சமயத்தை நோக்கிப் பழிப்புரைகளைக் கூறும்போது அவற்றை வாளா கேட்டு இருத்தல் பொருந்தாது; கிளர்ந்து எழுதல் வேண்டுமென்றனர்கள். வீரமனப்பான்மையைச் சமாஜம் புகுத்தியது எனல் வேண்டும். இந்து சமுதாயத்தில் ஆண்மையை, தன்மதிப்பைப் புகுத்தி வீரர்களாகத் திகழ வைத்தது சமாஜம் என்று கூறினல் அது மிகையாகாது.

தேசியக் கல்வியின் தேவையைத் தயானந்தர் உணர்ந்தார். சம்ஸ்கிருதப் பள்ளிகளையும் வேத பாடசாலைகளையும் பல இடங்களில் நிறுவினர். ஆரிய சமாஜத்தினரது கல்வித் தொண்டு என்றென்றும் நின்று நிலவும் வகையில் அமைந்தன இரு நிறுவனங்கள்; அவற்றுள் ஒன்று, லாகூரில் ஆங்கில—வேதக் கல்லூரியாகும்; மற்றொன்று கங்ரி என்னுமிடத்தில் எழுந்த குருகுலமாகும்.

வேதத் தலைமையை வற்புறுத்திய தயானந்தர் உபநிடதங்களின் சிறப்பை வலியுறுத்தாது விடுத்தது வருந்தத்தக்கது என்று சர்மா கூறுகிறார். உபநிடதங்களை சம்ஹிதைப் பகுதியில் உள்ளனவற்றை விரித்தும் விளக்கியும் கூறுகின்றன. ஆதலால், வேத உண்மைகளை விளக்க உபநிடதங்கள் தேவையேயாகும். மேலும், கீதையின் பெருமையினையும் தயானந்தர் யாண்டும் கூறவில்லை. இவ் உண்மையையும் சர்மா சுட்டிக் காட்டுகிறார். கீதை உணர்த்தும் தொண்டு நெறி, தயானந்தரது உள்ளம்

உவக்கத் தக்கதே ஆகும். ஹிந்து மூல நூல்கள் என்று கொள்ளத் தக்கன, வேதங்கள் மட்டுமே என்று வரையறுத்துக் கூறியதன் மூலம் இந்து சமயத்தை அன்று தயானந்தர் காப்பாற்றினார். புறச் சமயத் தாக்குதல்களினின்று காப்பதற்கு வரையறை (குறுகிய) தேவைப்பட்டது எனலாம்.

இறையொருமைக் கொள்கையை வற்புறுத்திய தயானந்தர், உபநிடதங்களில் பரக்கப் பேசப்பெறும் பிரம்மத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால் எளிதில் ஒருமை ஏற்படும். ஆனால், தத்துவம் என்னும் தலைப்பின்கீழ் மேலே நாம் கண்டது சகுண நிர்க்குண வழிபாடுகளை தயானந்தர் ஏற்றார் என்பதாகும். சர்மா கூறுவதைப்போல, உபநிடதங்களைத் தயானந்தர் புறக்கணிக்க வில்லை. அவற்றிற்குத் தனித்த சிறப்பும் தரவில்லை. விக்ரக வழி பாட்டை எதிர்த்த நிலையிலும் வேத வேள்விகளை மறுத்த நிலை யிலும் உபநிடதங்களைத் தயானந்தர் புறக்கணிக்கவில்லை. அவற் றிற்குத் தனித்த சிறப்புத்தரவில்லை. விக்ரக வழிபாட்டை எதிர்த்த நிலையிலும், வேத வேள்விகளை மறுத்த நிலையிலும் உப நிடதங்கள் தயானந்தர் கருத்திற்குப் பெருவிளக்கம் தந்திருக்கும். உபநிடதங்களில் மேற்கூறியவற்றைக் கண்டனம் செய்யும் பகுதி கள் பலவாகும். வேதத் தலைமையை ஒருபுறம் உயர்த்திப் பேசும் தயானந்தர் வேதங்கள் வற்புறுத்தும் வேள்விகளை மறுபுறம் கடிந்தது, வியப்பே ஆகும். ஆனால் தாயனந்தர் காலத்தில் நிலவிய சமயச் சூழ்நிலையை நினைவில் வைத்துப் பார்த்தால், ஒரு சில கொள்கைகளை ஆணித்தரமாக வற்புறுத்த வேண்டிய நிலை புலனாகும். சமாஜத்தின் 'சமுதாய சீர்திருத்தத் தொண்டுகளையும், கல்வித் தொண்டுகளையும்' லாலா லஜபதிராய் பஞ்சாப் மாகா ணத்தில் விரிவாக ஆற்றினார். ஸ்வாமி ஸ்ரத்தானந்த்–தீண்டாமை ஒழிப்பில் முனைந்திருந்தார். பத்தொன்பதாவது நூற்றாண்டில் தோன்றிய இயக்கங்களுள் ஒன்று ஆரிய சமாஜம். இச் சமாஜம், சமுதாயத்தையும் தழுவியே தனது சமயத்தொண்டை ஆற்றியது. எச் சமுயமும் சமுதாயத்தைப் புறக்கணித்தால் நெடிது வாழ இயலாது. ஆரிய, பிரம்ம சமாஜங்கள் இவ்விரண்டும் சமுதாயச் சீர்த்திருத்தங்களில் முன்னின்று ஆற்றிய தொண்டுகள் நம்மால் என்றென்றும் போற்றற்குரியன. பிரம்ம சமாஜத்தின் வளர்ச்சியில் இரண்டாவது பகுதி தேவேந்திரநாத் தாகூரின் நுழைவிலிருந்து தொடங்குகிறது. இராஜாராம்மோஹன்ராய் அறிவை அடிப்படையாகக் கொண்டு சமாஜப் பணிகளை மேற்கொண்டார். தேவேந் திரர் அறிவைச் சில சமயங்களில் மேற்கொண்டார். பிற சமயங் களில் உள்ளுணர்வை ஏற்றார். இவர் கவிஞர், நடைமுறையைப் பின்பற்றிச் செயல்களைப் புரியலானார். இவர் 1817–ல் மே மாதம் பிறந்தார். 1842-ல் சமாஜத் தலைமையை ஏற்றுத் தமது பணி

களைத் தொடங்கினர். இவரது பதினெட்டாவது வயதில் ஓர் ஆன்மிக அனுபவம் பெற்றார். அப்பொழுது உலகில் உள்ள அனைத்தும் நிலையாதன என்ற உணர்வு இவருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகப் பொருள்களிடத்து ஒரு வெறுப்பு தோன்றியது. பின்னர் தற்செயலாக ஈசாவாஸ்யோபனிடதத்தினின்று ஒரு பாடற் பகுதியைப் படிக்க நேர்ந்தது. அப் பகுதி பின்வருமாறு :

'யாவும் (உலகில் இயங்குவன அனைத்தும்) இறைவனால் ஊடுருவப் பெற்றுள்ளன. (இறைவன்யாண்டும் நிறைந்துள்ளான்). உன்னிடம் உள்ள அனைத்தையும் இறையினிடம் ஒப்படைத்து சரண்புகுவாயானால் நீ மகிழலாம். பிறருடைய உடைமையை நீ விரும்பாதே'. இப் பகுதியைப் படித்த காரணத்தால் சில முக்கிய உபநிடதங்களைப் படிக்கலானார். சில நண்பர்களையும் உடன் சேர்த்துக் கொண்டு 'தத்துவபோதினி' சபை என்று அமைத்தார். பின்னர் இச் சபை பிரம சமாஜத்தில் ஒன்றிவிட்டது. 'தத்துவ போதினி பத்திரிகை' யொன்று மாதம் ஒரு முறை வங்கமொழியில் வெளியிடப் பெற்றது. 'தத்துவ போதினி பாடசாலை' யொன்று நிறுவப்பெற்றது. இதன் நோக்கு பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களைத் தயார் செய்வதாகும். மேலும், பரப்புநர்களையும் ஆயத்தம் செய்யும் பொருட்டு நிறுவப்பெற்றது. சமாஜத்தில் உறுப்பினராவதற்கு முன் சில வாக்குறுதிகளை ஏற்க வேண்டும் என்று வாக்குறுதிகளை வகுத்தார். சமாஜ வழிபாட்டிற்காக 'பிரம்மோபாசனை' தொகுக்கப்பெற்றது. உபநிடதங்களினின்றும் சில பகுதிகளும், மகா நிருவாண தந்திரத்தினின்று சில தோத்திரங்களும் இவ் வுபாசனையில் இடம் பெற்றன. நான்கு மாணவர்கள் வேதத்தைப் பயில்வதற்காகக் காசிக்கு அனுப்பப் பெற்றனர். இம் மாணவர்கள் பயிற்சி முடிந்து வந்தபிறகு உபநிடதங்கட்குத் தகுந்த விளக்கம் காண இயலும் என்று நினைத்தார். இம்மாணவர்கள் திரும்பிய பிறகு வேதப் பகுதிகட்குத் தந்த விளக்கம் வேதத்தலைமையை அதன் பிழையின்மையின் அடிப்படையில் அமைக்க இயலாது என்ற முடிவிற்குக் காரணமாகியது. வேதங்கள், உபநிடதங்கள், பிற பண்டைய நூற் பகுதிகள் யாவும் பிழையற வழிகாட்டுவன என்று கொள்ளலாகாது. எந்த நூற் கருத்தையும் அறிவாற்றல், மனச்சான்று ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆராய வேண்டும், அக ஒளியினோடு பொருந்தி வந்தால் எந்த நூற் கருத்தும் ஏற்கத்தக்கது. ஜீவன், பரமாத்மனோடு முற்றொருமையுடையது என்பது உபநிடதத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இக் கருத்து தேவேந்திரருக்கு உடன்பாடில்லை. ஒருமைக் கொள்கையைப் பெரிதும் வற்புறுத்தியவர் சங்கரர் ஒருவரே. சங்கரரது கருத்தைத் தேவேந்திரர் ஏற்கவில்லை என்றாலும், உபநிடதங்கள் ஏற்றற்குரியன

என்றார். 'ஸோகமாஸ்மி' 'தத்துவமசி' போன்ற மகாவாக்கியங்களைப் படித்தபோது அவர் ஏமாற்றமடைந்தார். உபநிடதங்கள் ஒருவனது எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யாது என்பது அவர் கருத்தாகும். சடங்குகள், விக்கிரக வழிபாடு ஆகிய இவ்விரண்டு கொள்கைகள் குறித்து தேவேந்திரர் இராய் அவர்களையே பின்பற்றினார். நவராத்திரி விழாவின்போது, விக்கிரக வழிபாடு யாண்டும் நிகழ்வதால் அக் காலத்தில் ஊரைவிட்டுத் தேவேந்திரர் போய் விடுவார். சடங்குகளை அவர் தமது வாழ்வில் அறவே ஒதுக்கினார். தமது தந்தையின் சிரார்த்த தினத்தன்று வெளியே சென்று விட்டார். இச் செயல் மரபு வழி நின்றோரைப் பெரிதும் வருத்தியது. ஆனால், தேவேந்திரர் சலனமற்று இருந்தார்.

வேதத் தலைமையை, அதன்பிழையற்ற தன்மையைதேவேந்திரர் மறுத்தார் என்று நாம் கண்டோம். அதற்குப் பதிலாக அகவுணர்வை ஏற்குமாறு சொன்னார். அவர் நமது நாட்டுப் பழமையான நூல்களை எந்த அளவிற்குப் பயன்படுத்த இயலுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்த விரும்பினார். இவ் விருப்பத்தினால் பிரார்த்தனை நூலொன்றைத் தொகுத்தார். இந்நூல் பிரம்மதரும கிரந்தம் என்று வழங்கப்பெற்றது. உபநிடதங்கள், ஸ்மிருதிகள், மகாபாரதம் போன்ற நூல்களிலிருந்து பல பகுதிகளை எடுத்துத் தமது கிரந்தத்தில் சேர்ந்தார். சில பகுதிகளை, இவர் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைத்தார். இத் தொகுப்பு பிரம்ம சமாஜ உறுப்பினரால் பெரிதும் வரவேற்கப் பெற்றது. தேவேந்திரர் அக் காலத்தில் ஆற்றிய சமய உரைகள் அவரது ஆழ்ந்த சிந்தனைகளையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தின. பின்னர் இச் சமய உரைகள் 'பிரம்ம தரும வியாக்யானம்' என்ற தலைப்பில் வெளியிடப்பெற்றன.

1856-ல் தேவேந்திரர் இமாலயத்திற்குச் சென்றார். இமாலயப் பகுதியில் நெடுங் காலம் தங்கினார். இயற்கையோடு இயைந்த தியானத்தில் காலத்தைக் கழிப்பதைப் பெரிதும் விரும்பினார். இமாலயத்தினின்று திரும்பியபோது சமாஜம் அவரைத் தன்னிகரற்ற தலைவராக ஏற்றது. இவரது சமய உரைகளால் பெரிதும் ஈர்க்கப் பெற்றவர்களுள் கேஷப்சந்திரஸென் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் தமது பத்தொன்பதாவது வயதில் பிரம்ம சமாஜத்தில் உறுப்பினரானார். இந்து சமயத்தில் பல சடங்குகள் இடம் பெறுகின்றன. இவற்றை ஏற்பதா, மறுப்பதா என்பது பற்றி சமாஜ உறுப்பினரிடையே பேச்சுகள் நிகழ்ந்தன. சடங்குகள் பல உருவ வழிபாட்டைச் சார்ந்தன ஆதலால் அவற்றைச் சமாஜ உறுப்பினர் ஏற்க மறுத்தனர். சடங்குகளைச் சமாஜக்கொள்கைகட்கு ஏற்ப மாற்றி அமைத்து 'அனுஷ்டான பத்ததி' என்னும் நூலொன்றைத் தேவேந்திரர் வெளியிட்டார்.

சாதிப்பாகுபாடு குறித்து அடுத்து உறுப்பினர் கருதினர். பிராமணர், க்ஷத்திரியர், வைசிரியர் ஆகிய இம் மூன்று வருணத்தினரும் தாம் சாதியைத் துறந்ததற்கு அடையாளமாக தாம் அணியும் பூணூலைக் கழற்றி எறிந்துவிட வேண்டும் என்று ஸென் குழுவினர் தெரிவித்தனர். இதனை ஏற்று, தேவேந்திரர் உட்படத் தத்தம் பூணூலைத் துறந்தனர். ஸென் குழுவினர் புரட்சியான சில மாற்றங்களை விரும்பினர். இவற்றுள் ஒன்று பூணூலைத் துறத்தலாகும். சமாஜ வழிபாடு முதலியனவற்றை ஆற்றுபவரும் பூணூலைத் துறக்க வேண்டுமென்றனர். இதற்கு உடன்படாதவர்கள் சமாஜத்தினின்று வெளியேற்றப் பெற்றனர். பூணூலைத் துறந்தவர்கள் பணியேற்றனர். சமாஜத்தில் பழைய மரபுகளைக் காக்கும் விருப்பம் உடையவர்கள் மேற்குறித்த புரட்சிகளை விரும்பவில்லை. ஆதலால், தேவேந்திரரைச் சிந்தித்து செயலாற்ற வேண்டினர். சீர்திருத்தங்கள் செய்யும்போது, வற்புறுத்தலன்றிச் செய்ய வேண்டுமென்பது தேவேந்திரர் கருத்தாகும். சமாஜ உறுப்பினர்கள் தத்தம் சாதியைத் துறக்க வேண்டுமென்பதில் வற்புறுத்துதல் இருத்தல் ஆகாது என்பது தேவேந்திரர் கொண்ட கருத்தாகும். வெவ்வேறு சாதியினரிடையே திருமணங்கள் நிகழ்வதையும் இவர் விரும்பவில்லை. ஆனால், இத்தகைய திருமணங்கள் பல ஸென் அவர்களால் ஊக்குவிக்கப் பெற்றன. ஸென், கிறிஸ்துவச் சமயத்தில் நிறையப் பயிற்சியுடையவராயும் அச் சமயத்தை மெச்சி நடப்பவராயும் விளங்கினர். இந் நிலையும், தேவேந்திரருக்குப் பெரிதும் விருப்பமில்லை. இவர், அறிவு கொண்டு யாவற்றையும் ஆராய வேண்டுமென்றாலும் தாம் பிறந்த சமயமாகிய இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். இவர், படிமுறையே விழிப்புடன் சமய சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பினர். இவரது ஆன்மிக வாழ்வு, உபநிடதங்களாய் ஊக்கமும் ஊட்டமும் பெற்றது. ஆனால், இதற்கு மாறாக ஸென் சீர்திருத்தங்களை விரைந்து புகுத்தவும் எண்ணினர். அத் திருத்தங்களுள் சில அடிப்படை மாற்றங்களாக அமையவும் வேண்டும் என்று கருதினர். இயேசு பெருமானைப் பெரிதும் மதித்தவர் ஸென். தீவிர சீர்திருத்தங்களை ஸென் விரும்பியதால் தேவேந்திரநாத் தாகூருக்கும் இவருக்குமிடையே கருத்து வேறுபாடு வளர்ந்து வந்தது. தாகூர் ஸென் அவர்களிடம் பெருகிய அன்பு பூண்டு இருந்ததால், கருத்து வேறுபாடு முதிரவில்லை. 1864-ல் மாறுபாடு முதிர்ச்சி அடைந்தது.

வங்கத்தில் 1864-ல் பெரும்புயல் ஏற்பட்டது. சமாஜக் கட்டிடம் பழுதடைந்தது. இதனால் சமாஜ வழிபாடும் பிற அலுவல்களும் தேவேந்திரநாத் தாகூரின் இல்லத்தில் நிகழ்ந்தன. வருண தருமத்தின் அடையாளமாகிய பூணூலை எடுக்க மறுத்து சமாஜத்

தினின்று நீங்கியவர்கள் மீண்டும் அலுவல்களில் அமர்ந்தனர். தேவேந்திரர் தமது இல்லத்தில் நிகழ்ந்ததால், தாம் விரும்பிய திருத்தங்களை மேற்கொண்டார். ஸென் குழுவினர் தமது புரட்சிக் கருத்துகட்கு மாறுகாண தேவேந்திரர் விரும்பியதால், எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் இக் குழு வெளியேறி 'இந்திய நாட்டு பிரம்ம சமாஜம்' என்ற பெயரில் 1866-ல் நிறுவியது. இப் பிளவு ஏற்பட்ட பிறகு பல ஆண்டுகள் தேவேந்திரர் வாழ்ந் தார். பழமையை விரும்பியவர்கள் 'ஆதி பிரம்ம சமாஜம்' என்று தமது சமாஜத்திற்குப் பெயரிட்டனர். தேவேந்திரர் அமைதியாக தமது வாழ்வைக் கழித்து 1905-ல் இறந்தார்.

தேவேந்திரர் இராமகிருஷ்ணரோடு தொடர்பு கொண்டு வந்தார். இத் தொடர்பு சில நாள்களே அமைந்தது. எனினும் இவ்விருவரிடையே ஏற்பட்ட நட்பு சிறந்ததென்று எனலாம். தொடர்பு கொண்ட முதலியே இராமகிருஷ்ணர் தேவேந்திரரை பெரியவர்' என்றே பணித்தார். தேவேந்திரரைப் பற்றி நாம் நினைக்கும் போது அவரைப் பெரிய புரட்சியாளராகவோ, புலமை யாளராகவோ, நாவன்மை படைத்தவராகவோ, தேர்ந்த அமைப் பாளராகவோ நாம் கருதுவதில்லை. அவரைத் தனித்திருந்து சமுதாயத்தினின்று ஒதுங்கியவராகவோ கருதுவதும் இல்லை. அவரைச் சிறந்த பண்பாளராக, பெருந்தன்மையுடையவராக, அன்புமிக்கவராக பணிவுடையவராகவே கருதுகிறோம். உலகத் தொடர்புகளை நீக்காமல், இல்லறத்தில் இருந்து கொண்டே பற்றற்ற பெரியவராகத் துறவியாக வாழ்ந்தகாரணத்தால், அவரை மக்கள் 'மகரிஷி' என்றே போற்றினர்.

தேவேந்திரர் தமது இளமையில் உலகியல் இன்பங்களை நன்கு துய்த்தார். ஆனால், அவ்வின்பங்களுள் அழுந்தவில்லை. செல்வச் செழிப்பு இருந்தது. ஆனால், அதன் காரணமாக முனைப்புத் தோன்ற வில்லை. பெருமிதம் போன்ற அவர் வாழ்க்கை நடத்தினார். எல்லோ ரிடத்திலும் இனிய உரையையே பகர்ந்தார். பணிவுமிக்கவராகவே பழகினார். தன்முனைப்பு என்பது அவரது வாழ்க்கையைத் தீண்ட வில்லை. அவர் கூறுவது: 'ஆற்றைப் போல படிந்து பணிந்து அருவிகள் குன்றுகளினின்று ஆறு நிலத்தில் பாய்ந்து வளம் படுத் துகிறது. இவ்வாறு பாய்வதால் மண்ணும் பிறவும் கலக்க நேர்ந் தாலும் ஆறு பாய்ந்து நிலத்தைப் பண்படுத்துவது போல தனது நீர்மை குன்றாதது போல வாழ வேண்டும்.' இமாலயம் சென்று திரும்பியதிலிருந்து அவரது குணநலன்களில் இயற்கையின் அமைதி பிரதிபலித்தது. இயற்கையின் அழகை அவர் நன்கு உணர்ந்திருந் தார். இயல்பில் அவ்வழகில் ஈடுபட்டார். அவர் ஈராண்டுகள் இமா லயத்தில் தங்கியிருந்தபோது தாம் பெற்ற அனுபவத்தைக் கூறுகிறார். இமயமலையில் ஏற ஏற அவரது மனமும் உயர்ந்தது

என்கிறார். இவ்வாறு இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினால் அவரது உள்ளம் மிகவும் மாற்றம் கொண்டது எனல் வேண்டும். மலையினின்று இழிந்த நீரருவியை ஒருநாள் அவர் காண நேர்ந்தது. அக் காட்சி அவரை ஒரு முடிவிற்கு வரத் தூண்டியது. 'எனது கல்வி முடிந்துவிட்டது என்ற முடிவிற்கு நான் உந்தப் பெற்றேன். தீவிர முயற்சிகள் மிகுந்த வாழ்க்கையினை நான் மீளவும் மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்துள்ளேன்' என்று கூறுகிறார். இமயக்காட்சி அவரது பிற்கால வாழ்விற்குப் பின்னணியாக அமைந்தது.

தேவேந்திரர் வாழ்வில் கிறித்தவச் சமயத்தினரால் விளைந்த மாற்றங்கள் ஏதுமில எனலாம். இளமையில் கிறித்தவ சமயத்தை அவர் புறக்கணித்திருந்தார் எனலாம். இந்துக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மதமாற்றம் செய்ய அந் நாளில் கிறித்தவப் பாதிரிமார் பெருமுயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். மத மாற்றங்களை எதிர்த்து எழுந்த கிளர்ச்சியில் தேவேந்திரர் பங்கேற்றார். அவர் எழுதியுள்ளனவற்றில் ஏசுநாதரைப் பற்றி எங்கும் ஏதும் குறிப்பிடக் காணவில்லை. அவர் கிறித்தவ சமயத்தால் ஈர்ப்பு அடையவில்லை எனினும் சில, பாதிரிமார்களது புனிதமான, தூய தன்னலமற்ற தொண்டுகளைப் பாராட்ட அவர் தயங்கவில்லை. இப் பாதிரிகளால் இந்திய சமுதாயத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியை அவர் உணர்ந்திருந்தார்.

மேலைநாடுகளில் சமயச் சார்பு அற்ற சிந்தனை வளர்ந்து வந்தது. ஆங்கிலேயர்கள் பரந்த கல்வியைப் போற்றினர். ஐரோப்பிய நாடுகளில், நேர்முகக் காட்சிவாதம் போற்றப் பெற்றது. இவற்றைகளை தேவேந்திரர் நேர்முகமாகவும் நூல்களின் வாயிலாகவும் அறிய நேர்ந்தாலும், அவற்றால் தொடக்குறாது தம் தாய்நாட்டுப் பழைய மரபுகளிலே ஊன்றியிருந்தார். தேவேந்திரர் உலகைப் பற்றிக் கொண்டிருந்த நோக்கு முழுமையும் இந்திய மணம் கொண்டதாக விளங்கியது. தேவேந்திரரது மகள் கூறுவது: 'தேவேந்திரர்—பழைய இந்தியாவை சமயம் ஒழுக்க இயல் ஆகிய துறைகளில் விளங்கும் தூய உண்மைகளனைத்தையும் காத்த பெட்டகம் என்று கொண்டார். இக் காலத்தில் வாழ்ந்தவர் என்றாலும் பழைய மரபுகளில் நன்குதோய்ந்த உள்ளத்தவராக விளங்கினார். இதனால், பழங்காலத்து முனிபுங்கவரது உள்ளம் இவரிடத்துப் பொலிவு எய்தியது எனலாம்.' தேவேந்திரர் பிறந்த காலத்திலேயே, இஸ்லாமிய நாகரிகப் பண்பாடு, இந்து சமய நாகரிகப் பண்பாடு ஆகிய இவற்றிடையே கலப்பு நேர்ந்திருந்தது. தேவேந்திரர் உபநிடதங்களை ஊன்றிப் பயின்றார் என்று முன்னர் கூறப்பெற்றது. இஸ்லாமிய சமயத்தின் இறையொருமைக் கொள்கை இவரது உள்ளத்தில் நன்கு பதிந்திருத்தல் வேண்டும்.

மேலும், இராய் அவர்களது சிந்தனையில் இவ்விறையொருமைக் கருத்து பெற்றிருந்த இடத்தை இவர் நன்கு அறிவார். பாரசீக இலக்கியத்தில் இவருக்கு மிகுந்த தோய்வு இருந்தது. இவர் 'ஹபீஸ்' என்ற பாரசீகக் கவிஞரைப் பெரிதும் போற்றினார்.

வங்க நாட்டில் தோன்றிய பிபின் சந்திரபால் என்பவர் மிகுந்த நாட்டுப்பற்று உடையவர். நாநலம் மிக்கவர், இந்திய மக்களுக்கு உரிமை வேட்கை எழுதல்வேண்டும் என்று அயராது பாடுபட்டு மக்களைத் தட்டி எழுப்பியவர். இவர், தேவேந்திரரது உபநிடத விளக்கங்கள், வேதாந்தத்தைச் சார்ந்து எழுந்தனவல்ல என்றும் வைணவச் சார்பும் உடையனவல்ல என்றும் கூறி, அவை இஸ்லா மியச் சார்பையே முதன்மையாகப் புலப்படுத்துகின்றன என்றார். வழிபாட்டில், இறைவனுக்கு எவ்வித உருவும் தருதல் கூடாது என்பது இஸ்லாம். மனித உருவில் இறைவனைக் கருதுதலோ அவனது வடிவத்தை அமைத்தலோ இஸ்லாம் கடிந்து ஒதுக்குவ தாகும். இறைவனிடத்துக் கொள்ளும் அன்பும் எவ்வித வடிவும் பெறுதலாகாது என்பதும் இஸ்லாமியக் கொள்கையாகும். குணம், குறிகள் தவிர்த்த இறை வழிபாடே இஸ்லாமின் தனிச்சிறப்பு. இச் சமயம் தேவேந்திரரைப் பெரிதும் கவர்ந்தது. விக்கிரக வழி பாட்டை வன்மையாக இவர் மறுத்தார் என்று கண்டோம். தத்துவக்கருத்துகளுள், சங்கரர் தருகின்றஉபநிடத விளக்கங்களைத் தேவேந்திரர் ஏற்கவில்லை. 'பிரம்மதர்ம கிரந்தம்' என்ற நூலை இவர் தொகுத்த பொழுது சங்கரரது கொள்கைகள் இவருக்கு உடன்பாடில்லை என்பது நன்கு புலப்பட்டது. மாயைக்கொள் கையை வன்மையாகக் கண்டித்தார். இறையும் அதாவது பரமாத் மாவும் ஜீவாத்மாவும் முற்றிலும் ஒருமை எய்திய நிலையில் விளங்கு வன என்ற உபநிடதக் கருத்து இவருக்கு உடன்பாடில்லை. ஆன்மா தனித்த உண்மையுடையது என்றும், எவ்வகையிலும் இவ்வான்மா, பரம்பொருளாகி இறையோடு ஒற்றுமையுடையது என்றும் இவர் கொள்ளவில்லை. இக் கருத்து இறையொருமைக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இராமகிருஷ்ணரோடு இவர் ஒரு சமயம் உரையாடும் பொழுது பிரபஞ்சம் ஒரு சர விளக்கை போன் றது என்று குறிப்பிட்டு, வாழும் உயிர் ஒவ்வொன்றும் அப் பிரபஞ்ச சரவிளக்கு ஒளியில் இடம் பெற்று ஒளி தருகின்றது என்று குறித் தார். மனிதன் இறைவன் பெருமையினை வெளிப்படுத்துகின்றான். இல்லையேல் நாம் பிரபஞ்சத்தை எவ்வாறு அறிய இயலும் என்றார். இந்தத் தனி விளக்குகள் இலவானால் பிரபஞ்ச விளக்கொளியை நாம் காண்பதற்கில்லை என்று கூறினார். ஆதலால், தேவேந்திரன் இறையொருமைக் கொள்கையை மறுத்தனர் என்பது நன்கு புலனா கிறது. வேதாந்தத்தின் கொள்கை பரப்பிரம்மம் ஒன்றே உள்ளது என்கின்றது. இது குறி, குணங்களற்றது என்பதால் தேவேந்திரர்

மறுக்க நேர்ந்தது. இம்மறுப்பு சிலருக்கு மன நிறைவைத் தர வில்லை. பண்டிதர் சீதாநாத் தத்துவபூஷன் என்பவர் கூறுவது: 'தேவேந்திரர் தலைமையில் பிரம்ம சமாஜம் வேதாந்தத்தை நீக்கியது பொருந்தவுருகும். இம்மறுப்பு மறைகளைப்புறக்கணிக்கத்துணை செய்தது. ஆன்மிக வளங்குன்றியது; பழமைக்கும் புதுமைக்கும் இடையே தேவையற்ற பிளவினை ஏற்படுத்தியது.' இவ்வாறு கூறுவது சிறிதும் பொருந்தாது. பழமைக்கும் புதுமைக்கும் இடையே வேறுபாட்டை, தேவேந்திரர் ஏற்படுத்த விரும்பவில்லை. இதற்கு மாருகப் பழைமையைப் புதுமை ஏற்கும் வகையில் அவர் கருத்துகளை வழங்கினுர்.

பின்னுளில் தேவேந்திரர் அனுபூதி நெறியினுல் ஈர்க்கப் பெற்ருர். இவரது தியானப் போக்கும் இயற்கையின் பால் கொண்டிருந்த ஈடுபாடும் அறிவு கடந்த நிலையில் உள்பொருளை அணுகத் தூண்டியது. அனுபூதிச் செல்வர்கள் அனைவரது அக வாழ்விலும் மனநிறைவின்மை காணப்பெறுவதாகும். அண்டர்ஹில் என்பவர் தேவேந்திரரது சமய—ஆன்மீக வாழ்வில் அவர் அடைந்த துன்பம் சோர்வு முதலியனவற்றைக் கிறிஸ்வத் துறவிகள் அனுபவித்த வறட்சி நிலையினேடு ஒப்பிட்டார். இவ்வறட்சி அத் துறவிகள் ஒளி பெற்று ஆனந்தம் அடைவதற்கு முன் நிகழ்வதாகும். உணர்வு உயரிய நிலைகட்கு ஏறுவதற்கு முன்னர் நிலைத்தல் இல்லாத நிலைகள் நிகழ்கின்றன. தேவேந்திரர் கொண்ட இறைக் கொள்கையின் நிறைவு அன்னுரது அனுபூதிக் கொள்கையாகும். இவ்வனுபூதி நிலையில் அவர் கொண்ட இறைக் கொள்கை—விரிந்த ஒன்ருகும். வேறுபடும் நோக்குகள் தனித் தனியே விளங்குவன அல்ல. அனுபூதியில் எழுகின்ற உயர்ந்த உணர்வினுல் அடைவது இணைப்புக் கொள்கையாகும். இறைவனின் கடந்த, கலந்த ஆகிய இருநிலைகளும் இணைந்தன. உருவஞ் சார்ந்த நிலையும் உருவமற்ற நிலையும் ஒருங்கிணைவதற்குக் காரணம் அக உணர்வாகும். இறைவன் யாண்டும் நிறைந்து விளங்குகின்றவன்; யாவற்றிலும் உள்ளார்ந்த நிலையில் இறைவன் திகழ்கிருன். இவ்விரு நிலைகளும் கருத்தளவில் இல்லாது அனுபவமாக உணரப்பெற்றன. தேவேந்திரர் யாண்டும் இறையின் இருப்பை உணர்ந்தார். இவ்வுணர்வு கவிதை வடிவிலே வெளியிடப்பெற்றது. தேவேந்திரர் தம் வரலாற்றில் கூறுவது: 'நம் முன்னர் நிற்கும் மரத்தை நாம் காணலாம்; தொடலாம். ஆனுல் இம்மரத்தைத் தாங்கும் இடத்தை நாம் காணவும் இயலாது; தொடவும் இயலாது. நாம் மரத்தின் கிளைகளையும் மலர்களையும் காண்டல் இயலும். இம் மரத்தின் வளர்ச்சியானது காலக் கழிவில் நிகழ்கின்ற ஒன்ருகும். இக் காலத் தத்துவத்தை நாம் காண இயலாது. இதேபோல உணர்வுப் பொருள் ஒன்று இம் மரத்

தினூடே நிலவுகின்றது. இப் பொருளையும் காணவும் தொடவும் இயலாது.'

1864-ல் ஆதி பிரம்ம சமாஜத்தினின்று கேஷப்சந்திரஸென் பிரிந்தார். இவரும்- இவரைச் சார்ந்தவர்களும் கிறிஸ்தவச் சமயத்தினை ஆர்வத்துடன் பயின்றனர். ஸென் கிறிஸ்தவச் சமயத் திற்குத் தன்னை மதமாற்றம் செய்து கொள்வாரோ என்று பலரும் எதிர்பார்த்தனர். 1866-ல் இந்திய பிரம்ம சமாஜம் நிறுவப் பெற்றது. இச் சமாஜம் நிறுவப் பெறுவதற்கு முன்னர் ஆற்றிய சொற்பொழிவுகளில் ஏசுநாதரைப் புகழ்ந்தார். அவர் வருமுன் உரைப்பொருள் தலைவராக மதிக்கத்தக்கவர் என்றார். ஏசுநாதர் மடிந்த சிலுவை—கிறிஸ்தவ சமயத்தினரைத்—தன்னலமற்ற வாழ்வில் ஈடுபடுத்த வல்லது என்பது அவர் கருத்தாகும். இவர் இறைவனின் அவதாரமாக ஏசுவைக் கருதவில்லை. மக்கள் ஆர்வ மிகுதியினால் தீர்க்கதரிசியைத் தெய்விகத்தன்மை பொருந்திய வராகக் கருதிப் பின்னர் இறையாகவே கருதத் தலைப்படுகின்றனர் என்று கண்டித்தார். இக் கருத்துகள் கிறிஸ்தவப் பாதிரிமார் கட்கு மனநிறைவு தரவில்லை. ஸென் தாம் புதியதாக நிறுவிய இந்திய பிரம்ம சமாஜத்தின் செயலாளராக அறிவித்துக் கொண் டார். சமாஜ அமைப்பு விதி முறைகள் முறையான தலைவர் தேர்வு போன்றவற்றை ஸென் காணவில்லை. இறைவனே தமது சமா ஜத்தின் தலைவர் என்றார். மனிதர்களுள் எவரும் தலைமை ஏற்க வேண்டுவதிலது என்பது இவர் கருத்து. இந்திய பிரம்ம சமாஜ பிரார்த்தனை முதலிய அலுவல்கட்குத் தேவையான பகுதிகளை 'சுலோக சங்கிரகம்' என்ற தலைப்பில் தொகுத்தார். இத் தொகுதி யினுள் அனைத்துச் சமயங்களினின்றும் பகுதிகள் தேர்ந்து எடுக்கப் பெற்றன. இந்து, பௌத்தம், யூத, கிறிஸ்தவம், இஸ்லாம், சீனம் முதலியவற்றினின்று பல பகுதிகள் இத் தொகுப்பில் இடம் பெற்றன. வங்கநாட்டில் தோன்றி பக்திநெறியை நன்கு பரப்பியவர் சைதன்யராவர். இவரைப் பின்பற்றியோர் மேற்கொண்ட பக்தி முறைகளை ஸென் அவர்கள் தமது சமாஜத்தில் புகுத்தினார். இச் சமாஜ உறுப்பினர்களுள் கிருஷ்ணகோஸ்வாமி என்பவர் சைதன்யரின் நேர் சீடர்களுள் ஒருவராவார். இசைக் கருவிகளோடு பஜனை செய்யும் முறைகள் சமாஜ வழிபாட்டில் புகுத்தப்பெற்றன. வீதிதோறும் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு சென்றனர். இடைக்கிடையே உணர்ச்சிப்பெருக்கு வெளிப்பட்டது. மேற்கண்ட மாற்றங்கள் ஆதி பிரம்மசமாஜத்தினின்று மாறுபட்டவை. உணர்ச் சிக்கூறு பலரைக் கவர்ந்தது. ஸென் அவர்களை வானளாவப் புகழ்ந்தனர். எனினும் இச் சமாஜம் விதி முறைகளை வகுத்து, அமைப்பு காணாததால் அதிருப்தி சிலரிடையே நிலவுவதாயிற்று. ஸென் அவர்கள் தாம் இறையின் ஆணை பெற்றே பல திருத்தங்களை

மேற்கொள்வதாகக் கூறினர். அவ்வப்பொழுது இறைவனிட மிருந்து நற்செய்தி பெறுவதாகும். அத்தகைய ஆதேசத்தைத் (செய்தி) தானே நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளதாகவும் கூறினர். இத்தகைய செயல்களை மக்கள் சில சமயங்களில் சரி பார்த்து அவற்றின் உண்மையினை ஆராயத் தொடங்கினர். ஆராய்ந்ததில் அவர்கட்கு ஏமாற்றம் விளைந்தது. அதனால் சிலர் பிரிந்து சாதாரண பிரம்ம சமாஜம் என்று நிறுவினர். இவ்வாறு தம்மை எதிர்த்துப் பிரிந்து தனியே சமாஜம் நிறுவியதானது ஸென் அவர்கட்குப் பேரிடியாயிற்று, நோய்வாய்ப்பட்டார். நலம் பெற்றவுடன் தீவிரமாகச் செயல்பட முற்பட்டார். உலகச் சமயங்கள் அனைத்தையும் தமது சமாஜத்தின் அடிப்படையில் கொணர முனைந்தார். இத்தகைய உலகப் பொது சமயத்தின் தீர்க்கதரிசியாகத் தம்மையே நியமித்துக் கொண்டார். வளமான சிக்கலான சடங்குகளைப் புகுத்திப் பாமர மக்களைக் கவர்ந்தார். இத்தகைய புதுச் சமயத்தினை உலகில் பரப்புவதற்குத் திருத்தூதர் களைத் தேர்ந்து எடுத்தார். இந் நிலையில் தமது அமைப்பைப் பிரம்ம சமாஜம் என்று அழைப்பதை நீக்கி நவவிதான் என்று அழைக்க லானர். அனைத்து சமயங்களின் நிறைவாகத் தமது புதிய அமைப்பைப் பற்றிக் கருதினர். தாமே இறைவனால் தலைமை ஏற்று நடத்துதற்குரியவர் என்று நியமனம் பெற்றுள்ளதாகவும் ஸென் கூறத் தயங்கவில்லை.

சிந்தனை அல்லது பகுத்தறிவிற்குப் பதிலாக அகவுணர்வு தேவேந்திரரால் வலியுறுத்தப்பெற்றது. பின்னர் இவ்வகவுணர்வு ஸென் அவர்களால் ஏற்கப் பெற்றார்; வளர்ச்சியும் கண்டது. கிறித்தவம், இந்து சமயம் ஆகிய இவ்விரண்டின் கொள்கைகளை ஸென் தம் மனம் போனவாறு விளக்கினர். மற்றும் ஒரு கொள்கை ஊக்கமும் உணர்ச்சியும் தாம்பெற்றதாகக் கூறி ஸென் தமது பணி களில் ஈடுபட்டார். இறைவன் சில சமயங்களில் தமது உள்ளத்தை வெளிப்படுத்துதல் உண்டு. ஸென் அவர்கள் மூலம் வெளிப்படுத்தி யுள்ளதாக அவரே கூறிக் கொண்டார். இராமகிருஷ்ண பரம ஹம்சரோடு தொடர்பு கொண்டார். ஸென் அவர்கள் கண்ட நவ விதானில் காணப்பெற்ற கூறுகள்: பிரம்ம சமாஜத்தின் அறிவு அடிப்படை; வைணவத்தின் உணர்ச்சி; கிறித்தவத்தின் இயற்கை இறந்தநிலை; வேதாந்த அனுபூதி ஆகியவையாகும். இவை யனைத்தையும் ஒருங்கு இணைக்கின்ற பேரறிவு ஸென் அவர்களிடம் அமையவில்லை என்றே கருத வேண்டும். மேற்குறித்த கூறுகள் இணைந்து முழுமைபெற வேண்டும். முழுமை பெறுததால் ஸென் அவர்களின் மறைவிற்குப் பிறகு அவரது சமாஜ அமைப்பு சிதைந்தது.

சென் அவர்கள் தாம் இறையின் ஆணையைப் பெற்றுப் பல சீர்திருத்தங்களைச் செய்வதாகக் கூறினார். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே தாம் இணைக்கும் பாலமாக இருப்பதாகக் கூறியதை சமாஜ உறுப்பினர் மறுத்தனர். 'ஆன்மாவைப் புனிதப் படுத்தக் கூடிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலும் பண்புநலனை உயர்த்தக்கூடிய நூலும் ஏற்கத்தக்கது. இத்தகைய நூல்களைப் பயிற்றவல்லவர் ஆசிரியராவர், வழிகாட்டியாவார்.' 'சமாஜம் மலர்கள் நன்கு மலர்ந்து விளங்கும் மரமாக, அதன் வேர்கள் நிலத்தில் நன்கு ஊன்றியுள்ளதாக இருத்தல் வேண்டுவதின்று. பல்வேறு மரங்களினின்று எடுக்கப் பெற்ற மலர்களினால் தொடுக்கப்பெற்ற மாலை போல்வதாகும்.' இவ்வாறு சமயங்களிடையே இயைபு காணுவது பொருந்துவதன்று. எச் சமயத்தைச் சார்ந்தவரானாலும் அவரவர் அச்சமயத்தில் ஊன்றி நிற்கவேண்டும்; பிற சமயங்களை மதிக்க வேண்டும். சமயப்பொறை இருத்தல் வேண்டும் என்று இந்து சமயம் வற்புறுத்தி வந்துள்ளது. பகவத் கீதையும் இவ்வுண்மைகளையே வலியுறுத்துவதாகும். 'மக்கள் எந்நெறி பற்றியாயினும் என்னை அணுகலாம், அவர்களை நான் ஏற்கிறேன். மக்கள் அவரவர்க்குரிய தருமத்தை இடையறாது பற்றி நிற்றல் வரவேற்றற்குரியது. தமக்கு அயலான பிறரது தருமம் ஏற்கலாகாது.' முதலில் கூறிய இந்து சமய உண்மைகள் நமக்குக் குறுகிய நோக்கமும் மத வெறியும் ஏற்படாமல் காக்கின்றன. பின்னர்க் கூறிய பகவத்கீதை, நம்மை நமது சமயத்தில் ஊன்றி வாழ வழி செய்கிறது.

பிரம்ம சமாஜம் மேற்கூறியவாறு உயிர்ப்பற்ற நிலையில் சமயங்களை இணைக்க முற்பட்டது. இஃது ஒரு குறையாகும். பண்டிதர் சீதாநாத் தத்துவபூஷன், நாகேந்திரநாத் சாட்டர்ஜி ஆகிய இருவரும் தமது போதனைகள் மூலம் தத்துவக் கருத்துக்களின் வளர்ச்சிக்கு வழிகோலினர்.

'பிரம்ம-தத்துவம்' என்ற நூலில் பண்டிதர் சீதாநாத் தத்துவ பூஷன் கூறுவது: 'சென் அவர்கள் போதித்த பிரம்மதத்துவம் அறிவு சார்ந்த ஒருமையை வற்புறுத்தும் அனுபூதி நெறியை விட ஜீவாத்மா—பரமாத்ம ஐக்கியத்தை ஏற்கிறது' என்றார்.

சர்மா அவர்கள் பிரம்ம சமாஜம் இராய் காலந்தொடங்கி தத்துவபூஷன் காலம்வரை அடைந்துள்ள மாற்றங்களை எல்லாம் குறிப்பிட்டு சமாஜத்தினர் வகுத்த புதிய இறைக் கொள்கை பழைய வைணவ, சைவ, சாக்த இறைக் கொள்கைகளினின்று எவ்வாறு வேறுபடுகின்றது என்று எடுத்துக் கூறியுள்ளார்.

(1) திருநூல் எதையும் தலைமையாகக் கொண்டு அந் நூலினிடத்து மதிப்பு வைக்கவில்லை.
(2) அவதாரங்களில் நம்பிக்கை இல்லை.
(3) பல கடவுட் கொள்கையையும், விக்கிரக வழிபாட்டை யும், பாவச் செயல்கள் என்று மறுத்து ஒதுக்குகின்றது.
(4) சாதிப் பாகுபாடுகளை மறுக்கின்றது.
(5) கருமக் கொள்கையிலும், மறுபிறப்பிலும் நம்பிக்கை கொள்வதை உறுப்பினர் விருப்பத்திற்கு விட்டது.

மேற்கூறியவை புதிய இறைக் கொள்கையின் அடிப்படைக் கூறுகளாகும். பிற இந்து சமய உட்பிரிவுகளின்று இப் புதிய சமயம் வேறுபடுவதெல்லாம் அதன் மறுப்புக் கொள்கைகளாகும்.

மேலும் தத்துவபூஷன் தமது புதிய கொள்கையை விளக்கும் போது 'பிரம்மவாதம் அயற் பண்புடையது என்பதும் பழைய இந்து சமய இறைக் கொள்கைக்குப் புறம்பானதென்றும் நாங்கள் ஏற்கிறோம். இந்து சமயத்தைச் செயல்படுத்துவதிலும் விக்கிரக வழிபாட்டை நீக்குவதிலும் புரட்சி செய்தது. இவ்வகையில் (பிரம்மவாதம்) கிறிஸ்தவ இஸ்லாமிய சமயச் சார்பைப் புலப் படுத்துகின்றது எனலாம். நமது பண்டைய இறையொருமைக் கொள்கை உடன்பாட்டு நிலையில்ஏற்றத்தக்கது என்றாலும், அதற்கு மறுப்புக் கொள்கை ஒன்று தேவைப்பட்டது. இம் மறுப்புக் கொள்கையைப் பிரம்மவாதம் தந்துள்ளது எனல் வேண்டும். இவ் வகையில் சமய வளர்ச்சியில் முக்கியப் பங்கு ஏற்றது எனலாம்.'

'பிரம்ம சமாஜம் 1828-ல் நிறுவப்பெற்றது. அது நிறுவப் பெற்ற நாள் தொடங்கி, கிறிஸ்தவச் சமயத்தின் செல்வாக்குப் பெருகி வந்தது என்றே கொள்ளுதல் வேண்டும். ஒரு காலத்தில் இஸ்லாம் சமயத்தை இந்திய சமய சிந்தனை ஏற்று அதற்கேற்ற வாறு அமைத்துக் கொண்டது என்பது உண்மை. இதே போன்று கிறிஸ்தவத்தையும் ஏற்க வேண்டும் என்பது ஸென் அவர்களது கருத்தாகும். சமாஜத்தை இதுகாறும் வளர்த்தவர்கள் அறிவிற்கு முதன்மை தந்தனர். தற்போது ஸென் அவர்கள் சமாஜப் போதனை களில் உணர்ச்சிக்கு இடம் தருவாராயினர். பக்தி நெறி வற்புறுத்தப் பெற்றதற்குக் காரணம் ஸென் அவர்கள் இராம கிருஷ்ணரோடு தொடர்பு கொண்டமையாகும். இத் தொடர்பு ஏற்படுவதற்கு முன்னரே வங்கத்தில் ஊன்றியிருந்த சைதன்யரது இயக்கம் பக்தி நெறியை நன்கு பரப்பியிருந்தது மற்றும் ஒரு காரணமாகும்.

பதினாறும் நூற்றாண்டு தொடங்கியே ஸென் அவர்களது குடும்பம், சைதன்யரது இயக்கத்தில் குறிக்கத்தக்க பங்கு

ஏற்றிருந்தது என்று கூறுதல் வேண்டும். ஸென் அவர்கள் தமது மூதாதையரிடமிருந்து இந்த உணர்ச்சிக்கூறை—பக்திநெறியினை—பெற்றிருந்தார். பின்னர் வங்க இலக்கியத்தைப் பயின்ற பின்னர், பக்திக்கூறு வெளிப்படுவதாயிற்று. பிரம்ம சமாஜ வழிபாட்டு முறைகளில் வைணவ பஜனை முறைகள் புகுத்தப்பெற்றன. சிவநாத் ஸாஸ்திரி கூறுவது: 'ஸென் பிரம்ம சபையை பக்தி மார்க்கமாக மாற்றினார். அவர் அறிவு பூர்வமான வேதாந்தமாக பிரம்ம சமாஜம் மாறுவதினின்று தப்புவித்தார்'. சைதன்யரது சமயத்தை அந் நாளில் ஆங்கிலம் அறிந்த இளைஞரிடையே பரப்பிய முதல்வர் ஸென் ஆவார்கள். சைதன்யரை மிகவும் உயர்த்திப் பேசிய நிலையிலும் கிறித்தவத்தோடு தொடர்புபடுத்தியே ஸென் பேசி வந்தார். ஸென் கூறுவது 'சைதன்யரைப் பின்பற்றியவர்கள் ஏசுவின் அறக்கொள்கைகளை ஏற்று விளங்கினார் எனலாம்.' இறைவன் திருமுன்னர் யாவரும் ஒத்த நிலையில் விளங்குகின்றனர் என்றும், நாம் ஆன்மிக விடுதலை பெறுதற்கு இறைவன் திருவருளும் பக்தியுமே சிறந்த சாதனங்கள் என்றும் சைதன்யர் வற்புறுத்தினார்.

பிரம்ம சமாஜத்தின் அமைப்புமுறை வலிவு குன்றியது என்றே கொள்ளுதல் வேண்டும். கிறித்தவம், இஸ்லாம் போன்ற சமயங்களின் அமைப்பு முறைகள் வலிவு மிக்கன. இவ்விரு சமயங்கட்கும், திருநூல்கள் வரையறை பெற்றவை. இந் நூல்களின் தலைமையை ஏற்று அவ்வச் சமயத்தினர் ஒழுகினர்., பிரம்ம சமாஜத்திற்கு இவ்வகையில் தலைமை பொருந்திய நூல் இல்லை. சமாஜத்தினர் குறித்த ஆதாரம் எல்லாம் அறிவாற்றலும், அகவுணர்வுமேயாகும். இந்து சமய நூல்கட்கு முதன்மை தரவில்லை. மேற்குறித்த காரணங்களால் பிரம்ம சமாஜம் பெரும் பணியாற்ற இயலாது போயிற்று. பிரம்ம சமாஜத் தலைவர்கள் ஆற்றிய சமுதாயப் பணிகளை, சீர்திருத்தங்களை, நாம் மறுக்கவோ மறைக்கவோ, மறக்கவோ இயலாது. சமாஜத் தலைவர்கள் மிகப் பெரியவர்கள் என்பதையும் நாம் மறத்தற்கில்லை. பிரம்ம சமாஜத்தின் அமைப்பு முறை நன்கு அமைந்திருக்குமேயானல் அதன் பணிகள் சிறந்திருக்கும். மேலும், இந்து சமயத்தின் அடிப்படை நூல்களைப் பெரிதும் தழுவி அவற்றின் தலைமையை ஏற்றிருக்க வேண்டும். உருவ வழிபாட்டிற்கு உரிய இடத்தைத் தந்திருக்க வேண்டும். புறச் சமயங்களைப் பின்பற்றி வன்மையாக விக்கிரக வழிபாட்டைக் கண்டித்ததால் பொதுமக்கள் பெரும்பான்மையாகப் பின்பற்ற இயலாது போயிற்று.

1928ம் ஆண்டு பிரம்ம சமாஜம் தனது நூற்றாண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. சமாஜத் தலைவர்கள் பலரும்

பங்கு ஏற்று சொற்பொழிவுகளாற்றினர். அச் சமயத்தில் பிபின் சந்திரபால் கூறியது ஈண்டு நினைவுறத்தக்கது: 'இந்து சமயத்தில் நிலவும் சாதியினால் ஏற்படும் இழிவுகளினின்றும் இயலாமைகளினின்றும் மனிதனுக்கு விடுதலை பெற்றுத் தருவது மட்டும் சமாஜப் பணியன்று. சாதிப்பாகுபாடு இடைக்காலத்து எழுந்த தீமையாகும். இத் தீமையினால் விளைந்த கேடுகளை அகற்றுகின்ற பணி மட்டும் சாலது. எங்கேனும் மகன் ஒருவன் அல்லது மகள் ஒருத்தி தவிர்க்கக் கூடிய நோயினாலோ அல்லது கொடிய வறுமையினாலோ வாடுகின்ற நிலை உள்ளவரை சமாஜம் தமது பணியினை நிறைவேற்றியதாகாது. நீதியற்ற பொருளாதார அமைப்பு காரணமாக மக்கள் வருந்துவதாயினும் அவ்வமைப்பைச் சீர்படுத்துவது சமாஜத்தின் கடமையாகும். சமய மரபு காரணமாகவோ, சமுதாய அரசியல் காரணங்களாலோ தனியொருவன் தான் சார்ந்த அல்லது பிறந்த சமயத்தினைப் பின் பற்ற இயலவில்லை, என்றால், சமாஜம் அந்நிலையை மாற்ற முற்படல் வேண்டும்.' இவை சிறந்த நாட்டுப்பற்று உடையவராகிய பிபின் சந்திர பாலின் கருத்துகளாகும். உயர்ந்த கருத்துகளைக் கூறி யுள்ளார். பிரம்ம சமாஜத்தின் செல்வாக்கு, அது பிறந்த மண்ணிலேயே—வங்கத்திலேயே—குன்றுவதாயிற்று.

சர்மா அவர்கள் பிரம்மசமாஜப் பணியினைச் சுருக்கி அது மூவகைகளில் சிறந்தது என்கிறார். முதலாவது, சமுதாயச் சீர் திருத்தங்களைப் பொது மக்கள் விரும்பி ஏற்கும் வகை செய்த தாகும். 'கிறித்தவ சமயத்திற்குப் பலர் மதம் மாறுவதைச் சமாஜம் தடுத்தது இரண்டாவது சீரிய பணியாகும். சமாஜம் தமது வழிபாட்டு முறைகளில் இந்து சமயத்தையும் கிறித்தவ சமயத் தையும் தழுவியது என்று கூற வேண்டும். பழைய மரபுகளை விரும்புவோரை விழித்தெழச் செய்தது மூன்றாவது பணியாகும். இந்த விழிப்பால் முதலில் தமது சமாஜத்தை அமைப்பு முறைக்கு உட்படுத்தினர். பின்னர் அறிவுலகம் ஏற்கும் வகையில் மாற்றங் களையும் முறைகளையும் கண்டனர்.

## பிரார்த்தனை சமாஜம்

இச்சமாஜம் 1867-ல் மார்ச்சு மாதத்தில் பம்பாய் நகரத்தில் நிறுவப்பெற்றது. இச் சமாஜத்தின் வளர்ச்சியெல்லாம் மகாராட் டிரத்தில் அமைந்தது. சடங்குகள் சார்ந்த கடவுட் பன்மைக் கொள்கையைத் தவிர்த்து, கடவுள் ஒருமைக் கொள்கையை நிறுவுவதற்கு உரிய சூழ்நிலை உருவாகி வந்தது. பிரம்ம சமா ஜத்தின் பணிகள் இப் பகுதியில் பரவுவதன் முன்னரே, அறிவு அடிப்படையில் இந்து சமயத்தை நிறுவ முயற்சி தோன்றியது.

பிரார்த்தனை சமாஜம் இரானடே தலைமையில் தக்கவாறு வளர்ந்தது. பிரம்ம சமாஜம் செய்த பிழைகளை அறிந்து அவற்றைத் தவிர்க்க இரானடே முற்பட்டார். இந்து சமூகத்தினின்று பிரிந்து இச் சமாஜத்தைத் தனியொரு பிரிவாக அமைக்க அவர் விரும்ப வில்லை. கிறித்தவச் சமயத் தொடர்பினையும் கொள்ளவில்லை. புதிய ஏற்பாடுகள் எவற்றையும் தருவதற்கு ஒப்பவில்லை. மகாராட்டிரத்தில் நன்கு பரவியிருந்த சமய மரபினை ஒட்டியே பிரார்த்தனை சமாஜத்தை வளர்க்கலானார். சந்தேவ் ஞானதேவ், ஏக்நாத் நாமதேவ், துக்காராம், இராம்தாஸ், ஜனார்த்தனபந்த், மாலோபந்த் போன்ற தீர்க்கதரிசிகள் தூயோர் வழிநின்று சமய மரபினைக் காக்க முன்வந்தனர். இரானடே அவர்களது கருத்துப்படி, இத் துறவிகள் எல்லோரும் புரட்சியியக்கம் ஒன்றை இந்தியாவில் தோற்றுவித்தவராவர். ஐரோப்பாவில் லூத்தர், கால்வின் போன்றோர் செய்த புரட்சி அனையது மகாராட்டிரத் துறவி கள் மேற்கொண்டது. பம்பாய் மாநிலத்தின் மொழியாகிய மராத்தி மொழியையே இத் துறவிகள் அனைவரும் தத்தம் கருத் துகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தினர். ஆதலால், பாமர மக்கள் எளிதில் இவர்கள் கண்ட புரட்சியினைப் பின்பற்றுவரா யினர். அந் நாளில் கல்வியிற் சிறந்தோர் பயன்படுத்திய மொழி சமஸ்கிருத மொழியாகும். அம் மொழியை மகாராட்டிரத் தூயோர் பின்பற்றியிருந்தால் பக்தியியக்கமும், அதன் வாயிலாக விளைந்த புரட்சியும் தோன்றியிராது என்று உறுதியாகக் கூறலாம். இத் துறவிகள், பொருளற்ற சடங்குகளை எதிர்த்தனர். சடங்குகள் பொருளற்றனவாகத் தோன்றுவதற்குக் காரணம் அவற்றைப் புரி வோர் உயிர்ப்பற்ற நிலையில் இயந்திரம் போல் அவற்றைப் புரிந் தாகும். சாதி அமைப்பைத் தீவிர நிலையில் அவர்கள் பின்பற்ற வில்லை மகளிரது நிலையை உயர்த்தினர். இத் துறவிகள் பல சாதி களைச் சார்ந்தவர்கள்; உயர்ந்த சாதியினரும் உண்டு, இழிந்த சாதி யினரும் இவர்களிடையே உண்டு. புரோகிதர்களது தலையீட்டைத் தவிர்த்தனர். தூய வழிபாட்டை வற்புறுத்தியதோடு உள்ளத் திற்கு நிறைவு தரும் சமயத்தைக் காண முயன்றனர். பிரம்ம சமாஜம் மக்களியக்கமாக மலரவில்லை. ஆனால், இத் துறவிகள் கண்ட பக்தியியக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. பிரார்த்தனை சமாஜமும் மக்களிடையே பரவாததைக் குறையாக இரானடே உணர்ந்தார்.

இரானடே 1842-ல் பிறந்தார். பம்பாயில் எலிபின்ஸ்டன் கல்லூரியில் பயின்றார். இவர் கல்வி பயின்ற காலத்தில் விருப்ப மெல்லாம் அறிவியலின் வளர்ச்சியை அறிதலிலேயே அமைந்தது. விரைவில் சமுதாய இயல், வரலாறு ஆகிய துறைகளில் இவரது கருத்துச்சென்றது. பின்னர் சட்டத்துறையில் படிந்தது. இவர் புகழ்

வாய்ந்த நீதிபதியானர். அறிவியல் பயிற்சியினல் அத் துறையினல் விளைந்த நலன்களை இவர் பெற்ருர். அறிவு கொண்டு ஆராயும் போக்கு இவருக்கு அமைந்தது. இடைக்காலத்து மகாராட்டிர சமயச் சான்ருேரை நன்கு பயின்ருர். அறிவியல் பயிற்சியும் சமயப் பெரியோரது நூல்களில் பாடல்களில் பெற்ற தேர்ச்சியும் இவரைப் பிரார்த்தித்தன. எனவே, சமாஜத்தின் தகுதி மிக்க தலைவராக்கியது.

'இறைக்கொள்கையின் தத்துவம்' என்ற தலைப்பில் இரானடே ஆற்றிய சொற்பொழிவுகளிற் இந்திய இறைக்கொள்கை எவ்வாறு ஏற்கத்தக்கது என்பதை நிறுவினர். கிறித்தவத்தோடு இந்நாட்டுக் கொள்கையை ஒப்பிட்டு வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் விரித்துத் தெளிவாக உணர்த்தினர். பிற விரிவுரைகளில் இறையொருமைக் கொள்கை எவ்வாறு ஒருபுறம் அத்துவிதத்தையும், மறுபுறம் பொருள் முதற்கொள்கையையும் தவிர்க்கிறது என்று விளக்கினர். அத்துவிதம் தனி மனிதனுக்குச் செயலுரிமைக்கு இடம் வகுக்கவில்லை. பொருள் முதற்கொள்கை செயலுரிமையை மிகுதியாகத் தந்து குழப்பத்தை விளைக்கின்றது; அன்பு நன்மை போன்ற பண்புகள் பயனிலவாகின்றன.

இரானடே ஆழ்ந்த சமயப் பற்று மிக்கவராக விளங்கினர். ஆராயாமல் பிடிவாதமாக எக் கொள்கையையும் நிறுவ முற்படவில்லை. அனுபூதிக் கொள்கையையும், புரியாத புதிராக இவர் கொள்ளவில்லை. பழைய சமயக் கொள்கைகளை இவர் எடுத்துக் கூறும்போது அளவிற்கு இயையுமாறு சொல்லும் போக்கு இவர்பால் அமைந்தது. இவரது வெற்றிக்கு ஒரு காரணம் பக்தி நெறியினை விளக்கியபோதும் இவரது அறிவு வழிச் சிந்தனை புலனயிற்று. இந்து சமயம் இறையொருமைக் கொள்கையைக் கருத்தளவில் வற்புறுத்திய போதும், செயலில், பல கடவுட் கொள்கையை ஆதரித்தது. இம்முரண் இரானடேயைப் பெரிதும் வருத்தியது. இதனைப் புதிர் என்றே குறித்தார். சிந்தனையைத் திகைக்க வைக்கின்றது என்ருர். இரானடே இப் புதிருக்குத் தாம் தீர்வு கண்டதாகக் கூருது, அறிவிற்கேற்ற முரண்படாத விளக்கம் ஒன்றைத் தாம் சிந்தித்துத் தருவதாகக் கூறினர். இரானடேயைப் பின்பற்றினேர், இவரது கொள்கையை 'அறிவுவழி அமைந்த இறைக் கொள்கை' என்று குறித்தனர். இரானடேயின் தொண்டு பகட்டற்ற அமைதியானதாகும். துக்காராம் போன்ற மகாராட்டிரத் துறவிகளைப் பின்பற்றி மக்கள் வாழ்வில் புதியதொரு சமய நோக்கு மலரச் செய்தார்.

ஸென் அவர்கள்பம்பாய் நகரம்போந்தபோது, தமது ஆர்வமிக்க உரைகளால் மக்களை விழித்தெழச் செய்தார். இவரது உரையைக்

கேட்ட சிலர் சங்கம் ஒன்றை அமைத்தனர். இச் சங்கத்தின் நான்கு குறிக்கோள்களைச் சர்மா அவர்கள் குறித்துள்ளார். அவை யாவன: (1) சாதிப்பாகுபட்டினை ஏற்காமை. (2) விதவைத் திருமணத்தை வழக்கிற்குக் கொணர்தல். (3) மகளிரது கல்விக்கு ஊக்கம் தருதல். (4) இளமைத் திருமணத்தை ஒழித்தல். இத்தகைய நோக்கங்கள் கொண்டு தொடங்கினர். இவை யாவும் சமுதாய சீர்திருத்தத்தையே வலியுறுத்துவன. பின்னர் சமய சீர்திருத்தத்தையே அடிப்படையாகக் கொண்டே சமுதாயத்தைச் சீர்படுத்த எண்ணினர். தூய வழிபாட்டு முறையை வற்புறுத்தும் போது இறைவன் ஒருவனே என்பது நன்கு எடுத்துக் காட்டப் பெற்றது. வாரத்திற்கு ஒருமுறை வழிபாடு நடந்து வந்தது. டாக்டர் ஆத்துமராம் பாண்டுரங் அவர்களது இல்லத்தில் முதற் கூட்டம் நிகழ்ந்தது. பின்னர் இப் புதிய சங்கத்தின் விதிகள் வகுக்கப் பெற்றன. இவ்வகையில் பிரார்த்தனை சமாஜம் தோற்றம் கொண்டது. அறிவாற்றல் சான்ற தூய நடத்தையினரான இரானடே இச் சமாஜத்தின் தலைமை ஏற்றார். பல்துறைப் புலமை, உயர்ந்த தேசப்பற்று, சீர்திருத்த விழைவு போன்ற நற்பண்புகள் நாட்டிற்குப் பயன்படும் வகையில் பிரார்த்தனை சமாஜத் தொண்டு இரானடேக்குக் கிட்டியது. கோபாலகிருஷ்ண கோகலே, பந்தர்க்கர் போன்ற சீரிய சீடர் இவருக்கு வாய்த்தது நற்பேறே யாகும். ஏறக்குறைய முப்பதாண்டுகட்கு இரானடேயின் தலைமை அமைந்தது எனலாம். இக் காலத்தில் அவராற்றிய தொண்டுகள் இந்திய நாட்டின் உயர்ந்த சிந்தனைகளையும் விருப்பங்களையும் பிரதி பலித்தன எனலாம்.

இரானடே இறைக் கொள்கையை நன்கு விளக்கும் இரு சொற்களை வற்புறுத்தினர். அச் சொற்கள் பிறரை மதித்தலும், அன்பு செலுத்துவதும் ஆகியவையாம். பந்தர்க்கர் இரானடேயின் கருத்துகளைச் சுருக்கி உரைத்தது வருமாறு: 'பிரார்த்தனை சமாஜம் வகுத்துள்ள புதிய ஏற்பாட்டின்படி, உபநிடதம், கீதை இடைக்காலத் துறவோரது போதனைகள், பௌத்தம், விவிலியம் ஆகிய இவற்றினின்று சில பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட நூலை அடிப்படையாகக் கொள்ளுதலாகும். இந்து சமயம் என்ற பெயரில் வழங்குகின்ற பல கடவுட் கோட்பாடுகளை ஏற்கிறீர்களா அல்லது இந்து சமயத்தின் அடிப்படை நூல்களாகிய கீதை, உப நிடதம் போன்றவற்றினின்று திரட்டப்பெற்றதை ஏற்கிறீர்களா என்று மக்களை நோக்கிக் கேட்கப் பெற்றது. சடங்குகளை இயந் திரம் போல் ஆற்றுவதனால் அறவாழ்வில் ஏதேனும் முன்னேற்றம் உண்டாகிறதா? பிரார்த்தனை சமாஜம் அகந்தூய்மைக்காகவும், அதன் உயர்வுக்காகவும் ஏற்பட்டது. இவற்றால் அன்றாட வாழ்வில் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வையாக ஆற்ற இயலும்'

என்று பந்தர்க்கர் தெளிவாக அன்று நிலவிய நிலைமையை எடுத்துக் கூறினர்.

இறைவனைப் பிரபஞ்சத்திலும் மனிதனின் இதயத்திலும் காண வேண்டும். நமது முன்னோர் உரைத்தவற்றைச் செயல் படுத்த வேண்டும். இவ்வகையில் செயற்படுத்த துக்காராம் வழிகாட்டியாக விளங்குகிருர். சமயம் என்பது வாய்ப்பு உடைய ஒரு சிலருக்கே உரியதன்று. சீரிய ஒழுகலாறு இலதேல், சமய வாழ்வு சிறக்காது என்ற உண்மையினைப் பௌத்தம் நமக்கு உணர்த்து கின்றது. சீலமின்றி செய்யப்படும் வழிபாடு பொருளற்ற சடங் காகும். ஒழுக்கம் எவ்வளவு சீரியதாயினும் சமயம் சார்பிலதேல் மக்கள் மனத்தை அது ஈர்க்காது. மக்கள் உள்ளத்தை ஈர்க்க வல்லது வழிபாடாகும். பௌத்தம் நமது நாட்டில் வீழ்ச்சியுற் றதற்குக் காரணம் அச் சமயம் மக்களது உள்ளங்களைக் கவர்ந்து வழிபாட்டில் ஈடுபடுத்தாமை எனலாம். உபநிடதம் இதயத்தூய் மையயும் தியானத்தையும் வற்புறுத்துகிறது. கீதையும் பக்தி நெறியும் இறைவனுல்தான் ஆன்மா உய்தி பெற இயலும் என்று உணர்த்துகின்றன. இறைவனை பக்தி நெறித்தந்தையாகவும் தோழ னுகவும் காப்போனுகவும் அன்னையாகவும் நமக்கு உணர்த்துதலால், மக்களில் பலர் பக்தி நெறியினைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு நமது நாட்டில் தோன்றிய உயர்ந்த நூல்களின் திரண்ட கருத் துகளை இரானடேயும் பந்தர்க்கரும் வகுத்துக் கூறினர். ஆனல் இக் கருத்துக்களனைத்தையும் எவ்வாறு இயைபுற, முரணுகாத வகையில் எடுத்து மக்கள் ஏற்கும் வகையில் கூறுவது என்பதே முக்கியமாகும். நடைமுறையில் இவ்வியைபைப் புலப்படுத்த, மக்கள் பின்பற்றும் வகையில் நிறுவத்தக்க தலைவர் அமையவில்லை என்பது பேராசிரியர் நரவனேயின் கருத்தாகும்.

ஐரோப்பிய நாட்டில் தோன்றிய சமயப்புரட்சி சிந்தனையாளர் கட்கும், மகாராட்டிரத் துறவோர்கட்கும் இடையே இரு வேறுபாடுகள் உள என்று இரானடே குறிக்கின்ருர். இவ்விரு வேற்றுமைகளையும் சர்மா அவர்கள் எடுத்துக்கூறியுள் ளார்: (1) மேல்நாட்டில் லூத்தரும் அவரைச் சார்ந்தோரும் உருவ வழிபாடு மிகையாகப் போற்றப் பெற்றதைக் கண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தியாவில் இத்தகைய எதிர்ப்புத் தோன்றியதென்ருலும், ஐரோப்பிய புரட்சிப் பிரிவுகளைப்போல தீவிர நிலையில் பின்பற்றப் பெறவில்லை. தெய்வ உருவங்களை உடைக்கின்ற மனப்பான்மை இங்கே ஏற்படவில்லை. மகாராட்டி ரத்தில் தோன்றியதூயோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெய்வவடி வத்தை ஏற்றனர். இராம்தாஸ்-இராமனையும், ஏகநாத் கிருஷ்ணனை யும், துக்காராம் விட்டோபாவையும், நாகநாத் சிவனையும், ஜனுர்த்

தன் தத்தாத்ரேயரையும், கணேஷ்நாத் கணபதியையும் வழிபட்டனர். இப் பெரியோர் தாம்தாம் சிறப்பாக வழிபட்ட தெய்வங்கட்கு அயலான தெய்வங்களைக் கண்ணுற நேர்ந்தபோது அவரவர் வழிபடு தெய்வத்தையே அத் தெய்வங்களில் கண்டனர். ஆதலால், இறையொருமைக் கொள்கையை இவர்கள் கைவிடவில்லை. ஆதலால் இடைக்காலத்துச் சமயச் சான்றோராகிய இவர்களை விக்கிரக வழிபாடுடையவர்கள் என்று சொல்லுவது பொருந்தாது என்று இரானடே கூறுகிறார். உருவங்கள் பரம்பொருளை உணர்த்தாத நிலையில் அவை புறக்கணிக்கத்தக்கன என்றே இத் தூயோர் குறித்தனர். (2) வேத காலம் தொடங்கி ஆரியத் தெய்வங்கள் அன்புத் தெய்வங்களாகவே—ஒளித் தெய்வங்களாகவே—விளங்கி வந்துள்ளன. இனிமையும் ஒளியும் இத் தெய்வங்களின் பண்புகளாகும். இந்து சமயத்தில் ஒருபுறம் உபநிடதங்கள் உணர்த்தும் பரம்பொருட் கொள்கை நிலவும். மறுபுறம் மக்களிடையே தெய்வங்கள், பெண் தெய்வங்கள் நிலவின. வழிபடுவோர் உள்ளத்தில் இடம் பெறும் வகையில் இத் தெய்வங்கள் அமைந்தன. பெற்றோரன்பு போன்ற உயர்ந்த உணர்ச்சிகளைத் தூண்டும் இயல்பினவாகத் தெய்வங்கள் அமைந்தன. இந்தியாவில் இறைவனைப் பெரும்பாலும் தந்தையாக அல்லது அன்னையாக அல்லது உடன்பிறந்தவனாக அல்லது நண்பனாகக் கருதியுள்ளனர். இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களுள் வழிபடுவோனுக்கும், வழிபடு பொருளுக்குமிடையே பெரும்பிளவு இருந்ததில்லை. இஸ்லாம் போன்ற சமயங்கள், இறைவனைத் தொலைவில் உள்ளவனாக மக்கள் குறைகளைக் கடிந்து வெறுப்பவனாகக் காட்டுகின்றன. கிறித்தவம் பரம்பொருளை, தந்தையாகக் குறித்தது மட்டுமன்றி கிறித்து பெருமானின் மூலம் தானே இந் நிலவுலகில் தோன்றி மனித சமுதாயத்தின் பாவச்செயல்கட்குத் தாம் துன்புற்றுக் கழுவாய் தேடியது. இவ்வாறு கிறித்தவம் மக்கள் வாழ்வில் இடம் பெற்றாலும் இறைவனின் கடந்த நிலை அவனின் கடந்த நிலையைவிட வற்புறுத்தப் பெறுகிறது. மகாராட்டிரத் தூயோர் கண்ட இறைவன் தொலைவில் உள்ளவனல்லன்; நம்மை அச்சுறுத்துபவனல்லன். அவன் நாம் பழகும் நண்பனேயாவன். இறைவனை இத் தூயோர் தம் கண்ணால் கண்டதாகவும், செவிகளால் கேட்டதாகவும், கைகளால் தொட்டதாகவும் கூறுகின்றனர். இத்தகைய அனுபவக் கூறுகளைக் காணும்போது சமயம் என்பது அவர்களது வாழ்வில் நடுவனதாக அமைந்ததை உணரலாம். இறையுண்மையை அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். உபநிடதங்கள் நமக்கு இறைவனைத் தொலைவிலுள்ள தத்துவமாக உணர்த்தில. நமது ஆன்மாவே நாம் ஆழமாக உணர்கின்ற நிலையில் இறைவனாகும் என்பதனையே உபநிடதங்கள் ஜீவ–பிரம்ம ஐக்கியம் என்றன.

மகாராட்டிரச் சமயப் பெரியோர்கட்கும் ஐரோப்பாவில் சமய உலகில் புரட்சி செய்தவர்கட்கும் இடையே உள்ள இரு வேறு பாடுகளை இரானடே குறித்ததில் தம்மையும் அறியாமலேயே சமாஜ இயக்கம் பத்தொன்பதாம் நூற்றுண்டில் மக்கள் மனத்தைக் கவராமல் போனதற்குக் காரணம் கண்டார் எனல் பொருந்தும். நமது நாட்டில் முற்பட்ட நூற்றுண்டுகளில் பக்தி இயக்கங்கள் சமயப்பொறை மிகுந்ததாக விளங்கின. மகாராட்டிர அருட் செல்வர்கள் தாம் தாம் வழிபட்ட தெய்வங்களை உறுதியாகக் கொண்டனரே அன்றி பிறர் வழிபட்ட தெய்வங்களை குறை கூறினுரிலர். ஆனுல், பிரம்ம சமாஜம் கிறித்தவச் சமயம் வற்புறுத்திய விக்கிரக வழிபாட்டு நிந்தனையைத் தலையாயகடனுகக் கொண்டது. இறையொருமைக் கொள்கையையும் தீவிரமாகப் பின்பற்றியது. இறைவன் உருவமற்றவன் என்பதைப் பெரிதும் வற்புறுத்தி அவதாரங்களை சமாஜத்தினர் மறுத்தனர். இம் மறுப்பால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே தொடர்புபடுத்துகின்ற ஒன்றையும் நீக்கிவிட்டவராஞர்கள். இக் காரணிகளால் பிரம்ம சமாஜம் பாமர மக்களிடையே வளராது போயிற்று. மேலும், சமாஜம் தனது ஐம்பது ஆண்டு வளர்ச்சியில் இறைவன் தந்தை போல்வான் என்பதையும், மக்களனைவரும் உடன் பிறப்பாளர் களாவர் என்பதையும் வலியுறுத்தினரே அன்றிப் பிற சமயச் சிக்கல் கட்கு விடை காண முயன்ருரிலர். ஆதலால், மக்கள் இறைவனின் வெளிப்பாட்டிலேயே மிகவும் நம்பிக்கை செலுத்திஞர்கள். சமய சிக்கல்கட்கு விடைகளைக் கண்டு அவையனைத்தையும் திரட்டி பிரம்ம சமாஜத்தின் தத்துவமாக வழங்கியிருந்தால் மக்கள் மனத்தில் நிலவிய குழப்பங்கள் தீர்வதற்கு வழி ஏற்பட்டிருக்கும். மேலும், சமயம் என்பது உணர்ச்சிக்கூறு மட்டும் உடையது என்று எண்ணினரே அன்றி, அதில் அறிவுக்கூறும் அறிந்து வளர்த்தற் குரியது என்பதை மறந்தனர். இதன் காரணமாகவும் பிரம்ம சமாஜம் மக்களிடையே விரைந்து பரவிவில்லை என்று கருத இடமுண்டு.

பிரார்த்தனை சமாஜ இயக்கத்தில் தொண்டு புரிந்தவர்களுள் சிறந்தவர் கோபால் ஹரிதேஷ்முக் என்பவர் ஒருவர். இவரை லோகஹித வாதி என்றும் அழைத்தனர். இவர் விரும்பி உழைத்த துறை கல்வித்துறையாகும். ஆனுல் வாணுள் முழுமையும் மூட நம்பிக்கைகளையும், உள்ளச் சார்புகளையும் நீக்குவதன் பொருட்டு அரும்பாடுபட்டார். பிராமணர்களை மதித்தார். ஆனுல், அவர் களது போலியான நடத்தைகளை வெறுத்தார். வன்மையாகக் கண்டித்து பத்திரிகைகளில் எழுதிஞர். அவரது அறிவார்வம் எல்லையற்றது என்று கூறலாம். ஐரோப்பியரோடு நட்பு பூண்டு அவர்கள் போற்றும் பண்புகளை, வாழ்க்கை முறைகளை, குறிக்

கோள்களை அறிய விரும்பினர். இவரது காலத்தில் நிலவிய பல்வேறு இயக்கங்களின் தலைவர்களோடு தொடர்பு கொண்டார். சுவாமி தயானந்தர், பிளாவட்ஸ்கி அம்மையார், ஆல்காட் போன்றோரிடம் விவாதங்கள் புரிந்தார். இவர் துறவறத்தை வெறுத்தார். இவர் இக் கருத்தை நன்கு தெளிவு படுத்தினர்: 'உலகியலில் ஈடுபட்டுள்ளவர்கள் துறவிகளைவிட இறைவனிடம் நெருங்கி இருப்பவர்களாவர். நாம் துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று இறைவன் கருதியிருந்தால் நம்மை வனவிலங்குகளாகப் படைத்துக் குகைகளில் வாழச் செய்திருப்பான்.' இறைவெளிப்பாட்டை இவர் மறுத்தார். புலன்களும் மனமும் நாம் அறிவு பெறுதற்கும் ஆன்மிக வளர்ச்சி பெறுதற்கும் உரிய வாயில்களாகும் என்றும் கருதினர். சமயம் பயன் நோக்கியதாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியதால் 'சுககாரி தருமம்' என்ற தொடரை வழக்கிற்குக் கொணர்ந்தார்.

லோகமான்ய திலகர் இந்திய அரசியல் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களுள் பெரிதும் மதிக்கத் தக்கவர்; புரட்சியாளர். அத்துவித வேதாந்தமே உள்பொருளைப் பற்றித் தக்க விளக்கந் தருவதாகும் என்பது இவர் கருத்து. சங்கரர் வகுத்த விவர்த்த வாதத்தைத் தயக்கமின்றி ஏற்றூர். ஆனுல், அறக்கொள்கைகளை வற்புறுத்தும் போது அத்துவிதத்திற்கு மாருன நிலையினை மேற்கொண்டார். இந்து சமயம் மறுமலர்ச்சிபெற வேண்டும் என்று புரட்சியான கருத்துகளைக் கொண்டவர் திலகராவார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையுடன் இணங்கிப் பிணக்கின்றிவாழ வேண்டுமானுல் முஸ்லீம்கள் வேதாந்தம் பயில வேண்டும் என்பது திலகர் கருத்தாகும். உருவஞ்சார்ந்த இறைக்கொள்கை நமது இந்திய மரபிற்கு அயலானது என்று திலகர் கருதினர். சமய, தத்துவச் சிந்தனைகள்நமதுநாட்டில் வேதாந்தத்தினின்றே முகிழ்த்தன. துக்காராம் போன்ற பிற கவிஞர்களை-தூயோரை-நாம் நடுவு நிலைநின்று பயின்றால், அவர்கள் அத்துவைதிகள் என்பது தெரிய வரும் என்பது திலகர் கருத்தாகும். மனிதன் இறைவனை வழிபடுதலில் பெற்ற மனமகிழ்வை இராமனுஜரே வலியுறுத்தியிருந்தார். ஆனுல், திலகர் இத்தகைய மன மகிழ்ச்சி உலகஇன்பங்களினின்று வேருனதன்று என்றும்வேதாந்தம் உணர்த்தும்'ஆனந்தம்'என்பது பற்றற்ற நிலையில் தோன்றுவதாகும். இன்ப துன்பங்களால் தொடக் குருது மனத்தைச் சமநிலையில் வைத்துக் கொள்வதே சிறந்தஇன்பம் தோன்றுவதற்குக் காரணமாகும். இறைவனிடத்து அன்பு பூண்டு ஒழுகுதலையே இராமனுஜரே வற்புறுத்தினர். இந் நிலை, திலகர் காலத்தில் மாற்றங்கொண்டது; வேதாந்தம் இடம் பெறுவதாயிற்று.

பத்தொன்பதாவது நூற்றுண்டில் தோன்றி வளர்ந்த பிரம்ம, ஆரிய, பிரார்த்தனை சமாஜ நிலையின் சமய, தத்துவ சிந்தனைகளைச் சுருக்கமாக நாம் அறிந்தோம். இவ்வியக்கங்கள் தோன்றிய காலத்தில் சமுதாய சீர்திருத்தத்தையே தக்க நோக்கமாகக் கொண்டன. இராஜாராம் மோஹன்ராய், ஸ்வாமி தயானந்தர், தேவேந்திரர், கேஷப் சந்திரஸென், இரானடே, பந்தர்க்கர், திலகர் போன்றோர் இந்து சமயத்தினைச் சிறப்புற விளங்குவதற்கு ஆற்றிய தொண்டுகளை நாம் கண்டோம். இவர்கள் தொடக்க காலத்தில் சமுதாய சீர்திருத்தத்தையே தமது நோக்கமாகக் கொண்டிருந் தனர். பின்னர் சமய சீர்திருத்தத்தை மேற்கொண்டனர். இவர்களுள் ஒரு சிலர் அறிவு வழி சென்றவர்கள்; ஏனையோர் உணர்ச்சி வழியை வலியுறுத்தியுள்ளனர். ஆனுல், இவர்களனைவரும் ஏற்றது இறையொருமைக் கொள்கையாகும். சாதிப்பாகுபாட்டை ஒழிக்க முற்பட்டனர். கிறித்தவ, இஸ்லாம் ஆகிய சமயங்களின் தொடர்பால் விளைந்த நன்மைகள் உண்டு. இராய்அவர்களும் ஸென் அவர்களும் ஏசுபெருமான் பற்றியும் அன்னுரது போதனைகளைப் பற்றியும் நூல்கள் எழுதியுள்ளனர். வேதங்களைச் சிறப்புறப் பயில வேண்டும் என்பது தயானந்தர் கருத்தாகும். இரானடே, இடைக் கால மகாராட்டிர அனுபூதிச் செல்வர்களது போதனைகளைத் தழுவி இறையொருமைக் கொள்கையை நிறுவினுர். இறைவன் மன்னுயிர்க்குத் தந்தை, மக்களனைவரும் நமது உடன் பிறந் தோராவர் என்ற இவ்விரு கருத்துகளும் நன்கு வலியுறுத்தப் பெற்றன. இந்து சமயத்தின் வரலாற்றில் பௌத்தம், சமணம் போன்ற இருசமயங்களும் சீர்திருத்த இயக்கங்களாகவே தோன்றின. இவையிரண்டும் இந்தியாவிலேயே தோன்றியவையா தலால் இவற்றின் அடிப்படை உண்மைகளை உபநிடதங்களிலே காண இயலும். பின்னர் இடைக்காலத்தில் பக்தியியக்கம் தோன்றி இறைவனது உருவ நிலையை வற்புறுத்தியது. சாதி வேறுபாடுகள் நீங்கின. பின்னர் இஸ்லாமியத் தொடர்பு இந்தியருக்கு ஏற்பட்டு, இறையொருமைக் கொள்கை நன்கு ஊன்றத் தொடங்கியது. பத்தொன்பதாவது நூற்றுண்டில் கிறித்தவ சமயத் தொடர்பால் விளைந்த நலன்களுள் சிறப்பாகச் சமய உலகில் குறிக்கத்தக்கது இறைவனைத் தந்தை நிலையில் போற்றுவதாகும். இறைவனது கடந்த நிலையிலேயே வற்புறுத்தப் பெற்றது. பக்தியியக்கத்தின் வளர்ச்சியும் சிறப்பாக சைதன்யரது தொண்டு வழிபாட்டு முறை களில் பல திருத்தங்களைப் புகுத்தியது. இந்து சமயம் தன்னிலை யினின்று மாறுமல் தான் தொடர்பு கொள்ளும் சமயங்களின் சீரிய உண்மைகளை ஏற்றுத் தனக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள் ளும் இயல்பினது. இக் காரணம் பற்றியே இந்து சமயம் தொன்று

தொட்டு நிலவி வருவதோடு வலிவும் பொலிவும் ஒருங்கே தோன்ற நிலவி வருகிறது. அவ்வப்போது தோன்றிய இந்து சமயத்தலைவர்கள் காட்டிய பரந்த நோக்கமும் இந்து சமய வளர்ச்சிக்கு உறுதுணையாயிற்று. இவர்களது பரந்த கல்வி கேள்விகளும் இந்து சமயச் சீர்திருத்தங்கட்கு அரண் செய்தன.

# 2. இராமலிங்க அடிகள்

## (1823—1874)

தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்திற்கு மேற்கே உள்ள மருதூரில் இராமலிங்க அடிகள் பிறந்தருளினார். இவர் தம் பெற்றோர் இராமையபிள்ளை, சின்னம்மாள். இவர்கள் சைவ வேளாண் குலத்தைச் சார்ந்தவர்கள் கருணீகர் மரபைச் சார்ந்தவர்கள். 1823ஆம் ஆண்டு அடிகள் புரட்டாசித் திங்களில் (5-10-1823) ஞாயிறன்று பிறந்தார்.

இராமலிங்க அடிகள் இந் நிலவுலகில் ஐம்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து வாழ்க்கையின் பெரும்பயனாகிய இறவாப் பெருநிலையைப் பெற்றார். இவர்தம் வாழ்வு சென்னையிலும் வடலூரிலும் கழிந்தது. அடிகள் பிறப்பால் சைவசமயம் சார்ந்தவர். எனினும், வைணவச்சமயப் பற்றுடையவராகவே திகழ்ந்தார். இவர் வைணவ பரமான பாடல்கள் பாடியுள்ளதிலிருந்து இவருக்கிருந்த வைணவப் பற்று புலனாகின்றது. சைவசமய குரவர்களாகிய ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரிடத்தும் பெருமதிப்பும் பேரன்பும் பூண்டு ஒழுகினார். இவர் சமயங்கடந்த நிலையில் சன்மார்க்க நெறியிலே தலைநின்றார். சமயம் படிமுறையே வளர்ந்து சன்மார்க்கத்தில் நிறைவு கொள்கின்றது என்று அடிகளது வரலாற்றினின்றும் பாக்களிலிருந்தும் நாம் அறியக்கிடக்கின்றது. சன்மார்க்கத்தைச் சைவ சமயம் ஒரு நெறியாகக் குறிக்கின்றது. மாணிக்கவாசகர், சன்மார்க்க நெறி நின்ற பெரியார். இந்நெறியுள், ஆத்மா தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு ஒழுகும். அடிகள் சன்மார்க்கத்திற்குத் தனி விளக்கம் தந்துள்ளார். அடிகள் சித்தர் மரபைப் பெரிதும் போற்றினார் எனலாம். திருமூலர் அருளிய திருமந்திரத்தையும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தையும் தமக்குச் சிறந்த வழிகாட்டிகளாகக் கொண்டார் என்று கருதுதற்கு இடமுண்டு. நாமும் இவ்விரு நூல்களை வழி

காட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்று அடிகள் அருளியுள்ளார். இனி இராமலிங்கரது சமய தத்துவக் கொள்கைகளை முறையே காண்போம்.

இராமலிங்கர் தாம் இவ்வுலகில் இறைவன் இட்ட பணியினை நிறைவேற்றற் பொருட்டு தோன்றியருளினர். இவ்வுண்மையை அகச் சான்றுகள் வாயிலாக நாம் அறியலாம். ''அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்தடைவித்திட அவரும் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கென்றே எனை இந்த உலகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே''–உள்ள துரைத்தல்-9 (ஆறுவது திருமுறை.)

''பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்
பேய்ப் பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென உணர்ந்திடாதுயிர்கள் பல
பேதமுற்றங்கும் இங்கும்
போருற்றிறந்து வீண்போயினர் இன்றும் வீண்
போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்தசன்மார்க்க நெறிகாட்டி மெய்ப்
பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்றசுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிக என்றிட்டனன் மனத்தில் வே
றெண்ணற்க என்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்து இருளகற்றும் ஒளியே
நிர்க்குணானந்தபர நாதாந்த வரையோங்கு
நீதி நடராஜ பதியே!''

—நடராஜபதிமாலை—26.
(ஆறுவது திருமுறை)

இவ்விரு பாடல்களாலும் அடிகள் அவதரித்த நோக்கம் நமக்கு இனிது புலனாகின்றது. மக்கள் சன்மார்க்க சங்கத்தில் சேரவேண்டும் என்பதும், இகத்தே பரத்தைப் பெற வேண்டும் என்பதும் நிறைவேற்றற் பொருட்டு அடிகள் தோன்றினர். 'தான் இறைவன் வருவிக்க உற்றேன்' என்று கூறுவதால் இவர் சன்மார்க்கப் பணி நிறைவுறற் பொருட்டு அவதரித்தார் என்று கொள்ளத்தடையேதுமில்லை. சமய, மத, நெறிகள் பல்கி இவற்றால் மக்கள் அலைப்புண்டு அல்லலுற்றனர். இவ்வாறு மக்கள் அலைப்புறுது சுத்த சன்மார்க்க நெறி சார்தற் பொருட்டு இராமலிங்க அடிகள் தோன்றினர். இறைவனுக்கு உகந்த பிள்ளையாக இவர் விளங்கினதால் இப் பணியினை இவர் ஏற்கும்படி நேர்ந்தது.

வடக்கே வங்கத்தில் தோன்றிய அனுபூதிச் செல்வராகிய இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சமயநெறிகளையெல்லாம் பின்பற்றி இவை யாவும் உணர்த்தும் பரம்பொருள் ஒன்றே என்று தமது அனுபவத்தினுல் நிறுவினுர். இப் பெரியாரது தலைசிறந்த அனுபவப் பேற்றினுல், சமயப்பகை ஓரளவு குறைந்தது எனலாம். பிரம்ம சமாஜத்தினரது தொண்டும் சமயப் பொதுமையினை வளர்த்தது. சமாஜத்தினருள் தலைவராக விளங்கியவர்கள் கிறித்தவ சமயத்தினைப் போற்றினர். இச் சமயத்தின் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினர். பிரம்ம ஞான சபையினர் (Theosophists) பல்சமயத் தலைவர்களையும் தமது குருமார்கள் என்று போற்றினுர்கள். இவ்வாறு சமயப் பொதுமை கருத்தளவில் கற்றறிந்த சிலரால் ஏற்கப் பெற்றது. இவர்கள் தாம் உணர்ந்த உண்மையினை மக்கட்குப் போதித்து வந்தனர். இத்தகைய பின்னணி இராமலிங்க அடிகட்கு அமைந்தது. ஆனுல், இவ்வியக்கங்கள் பெரிதும் வடநாட்டிலேயே வளர்ந்தன எனல் தகும்.

### இறைக்கொள்கை

சைவ சமயம், அருவ, உருவ, அருவுருவ வழிபாட்டு முறைகளை ஏற்கின்றது. ஆலயந்தோறும் எழுந்தருளியுள்ள திருமேனி அருவுருவத் திருமேனியாகிய இலிங்க வடிவமாகும். பிக்ஷாடனர், ஸோமாஸ்கந்தர், கல்யாணசுந்தரர், திரிபுராந்தகர், அர்த்தநாரீஸ்வரர் போன்ற உருவத்திருமேனிகளையும் சைவர் வழிபடுதல் உண்டு. அருவநிலை என்று குறிக்கத்தக்கது ஜோதி வழிபாடாகும். மாணிக்கவாசகர் தமது திருவாசகத்துள் இறைவனை "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்ஜோதி" என்றும், "கேழில் பரஞ்ஜோதி" என்றும், "கேழில் பரங்கருணை" என்றும் திருவெம்பாவையுள் குறிக்கின்ருர். பெரும்பாலோர் அருவநிலை என்பது இறைவனின் உருவங்கடந்த நிலை என்று கூறுவர். ஆனுல், மாணிக்கவாசகரும் பிறரும் இறைவன் ஜோதி வடிவினன் என்று கூறுவது நாம் நினைவில் கொள்ளத்தக்கது. இராமலிங்க அடிகள் உணர்த்தியதும், தாம் உணர்ந்ததும், வழிபாட்டிற்கு நாம் புறத்தே அமைத்து அகத்தே உணர வேண்டியதும் இறைவனின் ஒளிநிலையாகும் என்று தெளிவுறுத்துகிருர். வடலூரில் தைப்பூசந்தோறும் காட்டப்பெறுவது "ஜோதி தரிசனம்" ஆகும். ஏழு திரைகளை நீக்கி ஒளிப்பிழம்பு ஜோதி வடிவில் நமக்குக் காட்டப்பெறுகின்றது. திரைகள் தத்துவக் கூட்டங்கள். இத்தத்துவங்களை எல்லாம் கடந்து நமது அகத்தே காண வேண்டுவது அருட்பெருஞ்ஜோதி தரிசனமாகும். இதனை உணர்த்தவே புறநிலையில் வைத்து நமக்கு ஆண்டுதோறும் ஜோதி தரிசனமாகக் காட்டப் பெறுகின்றது.

கடவுளை ஒளிவடிவிற் கண்டார் நமது அடிகள். ஒளி வழி பாட்டிற்கென்றே சத்திய ஞானசபை அமைக்கப்பெற்றது. அடிகள் தாம் பெற்ற அருட்பெருஞ்ஜோதி அனுபவத்தையே புறத்தே நமக்கு அமைத்துக் காட்டினார். அடிகள் தாம் பெற்ற அனுப வத்தை ''திருந்தும் என் உள்ளத்திருக்கோயில் ஞானசித்திபுரம் எனச் சத்தியம் கண்டேன்'', ''சத்திய ஞானசபை என்னும் கண்ட னன். சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன்'' என்று நன்கு விளக்கி அருளுகின்றார்கள். கடவுள் ஒருவரே என்பதும், அவர் அருட்பெருஞ்ஜோதியர் என்பதும், இராமலிங்க அடிகளது இறைக்கொள்கையாகும்.

இராமலிங்க அடிகள் ஆன்மாக்கள் பல என்ற கொள்கையர். இவர், ஏகான்ம வாதத்தை மறுக்கின்றார். ஆன்மா ஒன்றே என்பது ஏகான்மக் கொள்கையாகும். ஆன்மாவும், பிரம்மமும் ஒன்றே என்பது இவர்தம் கருத்தாகும். அடிகள் காலத்தில் ஏகான்ம வாதம் நன்கு விளங்கியிருத்தல் வேண்டும். இலதேல் அவர்தம் பாடல்களில் குறித்திரார். அடிகள் ''தெய்வமணி மாலை''யில் ''நாம் பிரமம் நமை அன்றி ஆம் பிரமம் வேறில்லை'' என்று பாட லில் இவ்வாறு கூறுகிறவர்கள் ''சாம்பிரமமாம் இவர்கள் தாம் பிரமம் எனும் அறிவு தாம்பு பாம்பு எனும் அறிவுகாண்'' என்று கூறு கின்றார். கயிற்றிடத்து அரவு தோன்றுகின்றது. பின்னர் உற்று ஒளியுடன் நோக்குகிறபோது அரவுக் காட்சி நீங்குகின்றது. இதே போல, உலகக் காட்சி, பிரம்ம உணர்வு தலைப்படும் போது நீங்கும் என்றும், பிரம்மம் அன்றி வேறு உள் பொருள் இல்லை என்றும் இவ் வேகான்ம வாதிகள் கூறுகின்றனர். ''நெறிஞ்சறிவுறுத்தல்'' என்னும் பகுதியில் ''நாமென்றும் நம்மையன்றி பிரமமில்லை ஆம் என்று சொல்பவர்பால் ஆர்ந்துரையேல்'' என்று நெஞ்சிற்கு அறி வுறுத்தி நமக்கும் உண்மையானதென தெளிவுறுத்துகின்றார். ''நாம் பிரம்மம்'' என்பவர்பால் ஆர்ந்துறைதல் ஆகாது என்பது அடிகள் உட்கிடையாகும். மேலும் ''தோழிக்கு உரிமை கிளத் தல்'' என்னும் பாடற் பகுதியில் ''பரமதனோடுலகுயிர்கள் கற்ப னையே எல்லாம் பகர் சிவமே என உணர்ந்தோம். ஆதலினால் நாமே பிரமம் எனப்பிறர்க்குரைத்துப் பொங்கி வழிந்தாங்கேப்பேசு கின்ற பெரியவர் தம் பெரியமதம் பிடியேல்'' என்று அம் மதம் பிடி யாதிருக்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

நலிதரும் சிறு தெய்வங்களை வழிபடல் கூடாது என்பது அடிகள் வற்புறுத்துகின்ற கொள்கையாகும். இச் சிறு தெய்வங் களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது என்றும் அடிகள் நமக்கு ஆணையிட்டுள்ளார். உயிர்கள்பால் அடிகள் கொண்டிருந்த இரக்கம் மட்டும் இவ் வுயிர்ப்பலிக்குத் தடையாகக் காரணமன்று.

தெய்வத்தின் பெயரால் நிலவிய மூடப்பழக்க வழக்கங்களை அவர் ஒழிக்கவே தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி செய்தல் கூடாது என்றார். ''கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப்போக'' என்று அடிகள் அருளியுள்ளார்.

## ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை

ஆன்மாக்கள் பல என்ற ஆன்மப் பன்மைக் கொள்கையை அடிகள் ஏற்றிருந்தார். ஆன்மாக்கள் பலவாக விளங்கும் இவ்வுலக வாழ்க்கையில் நாம் போற்ற வேண்டியது, ''ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை'' என்று கூறுகின்றார். இவ்வான்ம நேய ஒருமையை நாம் உணராதிருப்பதற்கும் கடைபிடியாதிருக்கவும் காரணம், சாதி மத சமய ஆச்சிரம வேறுபாடுகளை நாம் நிலையெனக் கொள்ளும் மயக்க உணர்வு ஆகும். அடிகள் ''ஊடல் செய் மதமும் சமயமும் இவற்றில் உற்ற கற்பனைகளையும்'' தாம் தவிர்த்ததாகக் கூறுகிறார். ''பன்னெறிச்சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர் பவநெறி இதுவரை பரவியதினால் செங்நெறி அறிந்திலர்'' என்று மற்றோரிடத்தில் சமயங்களில் உழல்வோர் பவநெறி உற்று செங்நெறி அறியாது அல்லலுறுகின்றனர் என்று கூறுகிறார். சற்குரு மணிமாலையில் ''ஓகாள மதங்களை முழுவதும் மாற்றி ஒரு நிலை ஆக்க என்றுரைத்த மெய்ப்பரமே'' என்று அடிகள் கூறுவதால் சமய மத நெறிகள் கடந்த சன்மார்க்க நெறியதனைத் தாம் நிறுவுவதும் தமக்கு அமைந்த பணியென நன்கு உணர்த்துகின்றார்.

பிறப்பால் எழுகின்ற வேறுபாடுகளைக் களைய மக்களிடத்தே உள்ளார்ந்த நிலையில் ஜீவநிலை கடந்து ஆன்ம நிலையை உணர வேண்டும் என்பதை வலியுறுத்தினார் அடிகள். இவர் மூன்று பாடல்களை அடுத்தடுத்து அமைத்து உயரிய உண்மைகளை நமக்குப் போதிக்கின்றார். இறைவன் யாண்டும் உளன். இவ்வுலகைக் கடந்தும், பரம்பொருளாகவும் விளங்குகின்றான். பேத உணர்ச்சிகள் ஒரு சிறிதும் இன்றி அன்பு பெருக உயிர்க்குலத்தினிடத்து இரக்கங் காட்டி வாழ்வோர் உள்ளத்தில் எம்பெருமான் சத்து சித்து உருவாய் நடம்புரிகின்றான் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். இத்தகையோரையே அடிகள் ''செவ்வியர்'' என்றும் ''திருவாளர்'' என்றும் நமக்குச் சுட்டுகிறார். அடிகள் அருவிய மூன்று பாடல்களை நாம் காண்போம்.

எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கி உப
கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர் தம் செயல் அனைத்தும் திருவருளின்
செயல் எனவே தெரிந்தேன் இங்கே

கவ்வையிலாத் திருநெறி அத்திருவாளர்
தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர் சீர் ஓதிடஎன்
வாய் மிகவும் ஊர்வதாலோ — 5296

எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணிஉள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்திருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்ததாலோ — 5299

கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
தம்உயிர் போல் கண்டு ஞானத்
தெருள் நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தா நின்ற
பொருள்நெறி சற்குண சாந்தப் புண்ணியர்தம்
திருவாயால் புகன்ற வார்த்தை
அருள்நெறி வேதாகமத்தின் அடிமுடி சொல்
வார்த்தைகள் என்றறைவராலோ — 5298

எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அடிகள் நமக்கு வழங்குகுகின்ற குறிக்கோளாகும். இவ்வாறு அனைத்துயிரையும் பொது நோக்குடன் நோக்கி உபகரிக்கின்றவர் அனுபூதிச் செல்வர்களாவர். இவர்களைச் செவ்வியர் என்கின்றார். இத்தகைய காட்சியும், அதன் பயனாக உயிர்களிடத்து இரங்குகின்ற பண்பும் கைவரப்பெற்றோர் தற்போதம் இழந்தவர்கள்; இவர்தம் செயலனைத்தும் திருவருட் செயலே என்று அடிகள் தெளிந்தார். அவர்கள் நிற்கும் நெறியே திருநெறியாகும். அத்தகையோரே திருவாளர் என்று கூறி அவர்கட்குத் தொண்டு உகந்து செய்யவும் அவர்களது சீரை ஓதிடவும் தாம் மிக விழைந்ததாக அடிகள் கூறுகிறார். ஆதலால், எவ்வுயிரையும் பொதுவாகக் காணும் காட்சியின் அருமையை நாம் உணர முடிகின்றது. அத்தகைய காட்சி பெற்றோர் நாம் வழிபடுதற்குரியர் என்பதும் அடிகள் உணர்த்தும் உண்மையாகும்.

எள்ளளவும் பேதமின்றி எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி, அகத்தே ஒத்து, உரிமையுடன் உவந்து பிற உயிர்கட்கு உபகரிக்கின்றவர் உள்ளத்திலே எம்பெருமான் சத்து, சித்துரு

வாய் நடம்புரிகின்றான் என்பது அடிகள் தாம் அறிந்து நமக்கு அறிவுறுத்துகின்ற உண்மையாகும். மீண்டும் அத்தகையோரை வித்தகர் என்று குறிக்கின்றார். ''வித்தகர்'' என்ற சொல்லாட்சி நமக்குத் திருக்குறளை நினைவுகூறச் செய்கின்றது.

''நத்தம் போல்கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது''

வித்தகர்க்கு ஏவல் புரிந்திட அடிகள் விழைகின்றார். காரணம், அவர் உள்ளத்தில் எம்பெருமான் சத்து, சித்துருவாய் நடனம் புரிதலாகும்.

கருணையே வடிவாக விளங்குகின்றவர்கள் புண்ணியர்; எவ்வுயிரும் தம்முயிர் போல் கண்டு ஞானத்தெருள் நெறியில் நிற்பவர்கள். இவர்கள் செலுத்தும் நெறி சுத்த சிவ சன்மார்க்க நெறியாகும். இவ்வாறு சன்மார்க்க நெறியினைச் செலுத்துகின்ற புண்ணியர் தம் திருவாயினின்று பிறக்கும் வார்த்தைகளே வேதாகம முடிபுகள். அவற்றின் அடிநிலை உண்மைகளையும் முடிநிலை துணிபுகளையும் ஒருங்கே உணர்த்துவன, இத்தகைய புண்ணியர் புகலும் வார்த்தைகள்.

ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை கைவரப்பெறுதற்கு நாம் பிறவுயிர்களிடத்து இரக்கங்கொளல் வேண்டும். உயிரினம் படுகின்ற துன்பத்தைக் கண்டு ஆற்றாத உள்ளம் அமையப் பெறல் வேண்டும். சுருங்கக்கூறின் சீவகாருண்யம் நமக்கு வேண்டுவதாகும். உடலோடு கூடிய நிலையிலேதான் உயிர்கட்குத் துன்பம். ஆதலால் சீவன்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு அத் துன்பத்தைத் துடைக்க முற்படுகின்ற இரக்கவுள்ளம் நமக்குத்தேவை. அடிகள் தாம் இறைவனிடத்து வேண்டும் பொழுது ''ஆருயிர்க்கட்கெல்லாம் நாம் அன்பு செயல் வேண்டும்'' என்று வேண்டுகிறார். ''சீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல்'' என்றும் நமக்கு அடிகள் அருளியுள்ளார். நாம் உயிர்க்குலத்தினிடத்துக் காட்டுவது சிறு கருணை. நாம் இறைவனிடத்து வேண்டிப் பெறத்தக்கது அவரது பெருங்கருணை. உயிர்களிடத்துச் சிறு தயவு காட்டினாலன்றி நாம் இறைவனது பெருந்தயவிற்கு உரியவர்களாக மாட்டோம். அடிகள் தமது உயிர் இரக்கமே என்றும், அவ்விரக்கம் தம்மிடத்தினின்று நீங்குமேல் உயிரும் நீங்கும் என்றும் அருளுகின்றார். நாம் ஏன் சீவர்கட்கு உபகாரம் செய்ய வேண்டும், அல்லது இரங்கி அவைதாம் படும் இடுக்கண்களை அகற்ற வேண்டும்? என்ற கேள்வி எழும். எம்பெருமான் உயிர்தொறும் நிலவி இருப்பதால், நாம் இவ்வுயிர்கட்கு ஆற்றுகின்ற தொண்டு, இறைவனுக்கு ஆற்றுவதாகும். அடிகள் இக்கருத்தை ''உயிரெல்

லாம் ஒருத் திருநடம்புரியும் ஒரு திருப்பொது என அறிந்தேன்'' என்கின்றார்.

## சைவ சமயக் குரவர்களும் இராமலிங்க அடிகளும்

சைவ சமயக் குரவர்களென்று போற்றப் பெறுவோர் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோராவர். இந் நால்வரைப் பற்றியும் பாடிப் பரவி மகிழ்ந்தோருள் தலையாயவர் என்றிருவரை நாம் போற்றுதல் தக்கதாகும். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், இராமலிங்க அடிகள் ஆகிய இவ்விருவரே சமயகுரவர் நால்வரிடத்தும் பேரன்பு பூண்டு ஒழுகியதோடு அவர்தம் போதனைகளையும், நமக்கு உணர்த்தியவர்கள். இவ்விருவருள்ளும் இராமலிங்க அடிகள் சைவ சமய ஆசிரியர்களது உண்மை நிலையை நமக்குத்தெள்ளிதின் புலப்படுத்தியவராவர். அடிகள் நால்வரையும் துதித்துப் பாடல்கள் அருளியுள்ளார். அடிகள் தமது இளமையில் முருகப்பெருமானை வழிபடு கடவுளாகவும், திருஞானசம்பந்தரை வழிபடு குருவாகவும், திருவாசகத்தை வழிபடு நூலாகவும் கொண்டார்கள்.

காழிவள்ளலைத் தமது குருவாக அடிகள் மதித்தார் என்று நன்கு உணரப்படுகின்ற செய்தியாகும். உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் என்ற அனுபவங்கள் முறையே வாய்க்கும் அருமையை காழி ஞானசம்பந்தர் உணர்த்த தாம் உணர்ந்ததாக அடிகள் கூறியுள்ளார். ''திருநெறித் தமிழ்த் தொண்டு தமது ஐயம் நீத்தருளிய அரசே'' என்றும் அடிகள் கூறுவதினின்று அவர் திருஞானசம்பந்தரிடத்துக் கொண்டிருந்த குருபக்தி புலனாகின்றது. ''ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை'' என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் அடிகள் அருளியுள்ளார். இப் பாடல்களுள் பல அரிய அனுபவ உண்மைகள் அடங்கியுள்ளன.

''சைவ ஒளி விளங்க நாவரசர் என்றொரு பேர் பெற்றுப் பொருத்தமுற உழவாரப்படையைக் கொண்ட புண்ணியன்'' என்று அப்பர் பெருமானை அடிகள் போற்றிப் பரவுகின்றார். வாகீசப் பெருந்தகை, திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் ''ஒண்ணுளே ஒன்பதுவாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்'' என்றருளுகின்றார். இவ்வரிகளை அவ்வாறே எடுத்தியம்பி இராமலிங்க அடிகள் ஆளுடைய அரசுமீது இயற்றிய பத்துப்பாக்களுள் ஒன்றில் போற்றுகின்றார்.

ஆளுடைய நம்பிகள் அருண்மாலையும், வன்தொண்டப் பெருந்தகை மாமறை நெறியையும், மெய்ந்நிலை ஆகம நெறியையும் விளங்க வைத்ததாக அடிகள் கூறுகிறார். வேதம் முதலியன அனந்தம் முறை ஓதியும் அவற்றிற்கு அணுத்துணையும் உணர்வரி

தாக விளங்கிய எம்பெருமான் பாதமலர், சுந்தரர்மீது பட அவர் புரிந்த மாதவம் யாது என்று வினவுகிறுர். ஆருரர் அருளிய திருப் பாட்டில் ''ஏழிசையாய்இசைப்பயனுய் என்னுடைய தோழனுமாய்'' என்ற அடிகள் காணப்பெறுகின்றன. அவ்வரிகளை எடுத்து அமைத்து அடிகள் ''ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் என்று முன் நீ சொன்ன பெருஞ்சொற் பொருளை'' என்று சுந்தரர் தேவாரத்தில் பொதிந்து உள்ள பெரும் பொருளை நன்கு வெளிப்படுத்துகிறுர். துரியம் எனும் பதத்திருந்த பரம் பொருளைத் தமது தோழராகப் பெற்ற ஆரூரது கீர்த்தியை அடிகள் பரவுகின்றுர்.

திருவாசகத்தை இராமலிங்க அடிகள் ''தமிழ் மாமறை'' என்று போற்றுகின்றுர். தமிழ் மறை என்று திருக்குறள் போற் றப்பெற்ற காரணத்தால் திருவாசகத்தைத் ''தமிழ் மாமறை'' என்கின்றுர் எனல் பொருந்தும். வாதவூரர் பெற்ற அனுபவத்தை ''அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர் இன்புருவம் ஆயினை எழில் வாதவூரிறையே'' என்றருளுவதால் அறிகின்றேம். மணிவாசகப் பெருந்தகை தமது திருவண்டப் பகுதியில் ''என்னையும் இருப்பதாக்கினன்'' என்றருளுகின்றுர். உலகம் எலாம் புகழ்கின்ற திருஅண்டப்பகுதி எனும் திருஅகவல் வாய்மலர்ந்த குருவாகிய மணிவாசகரை அவர் அருளிய ''இரு என்ற தனி அகவல் எண்ணம் தமக்கு இயம்ப வேண்டும்'' என்று இரரமலிங்க அடிகள் கேட்பதிலிருந்து திருவாசகத்தில் அடிகட்கு இருந்த தோய்ந்த நெஞ்சம் புலனுகின்றது. அடிகள் அடுத்தடுத்து திருவாசகத்தை ஓதி, உணர்ந்து, நெகிழ்ந்து, அதனுல் ஊற்றுப் போல் பெருக்கெடுத்த கண்ணீரால் தமது உடம்பு நனையப்பெற் றதை மாயூரம் வேதநாயகர் நமக்குக் கூறிப் போந்துள்ளார்.

இவ்வாறு திருமுறைகளுள் முதலேழு திருமுறைகளினின்றும் பற்பல பாடற்பகுதிகளை அடிகள் தாம் பல்கால் சுவைத்து அவற்றின் உட்பொருளை உணர்ந்து நெகிழ்ந்த நெஞ்சினராக விளங்கியுள்ளார். மேற்குறித்த நால்வரைப்பற்றியும் அடிகள் அருளியுள்ள பாமாலைகளை ஊன்றி உணர்வாருக்கு அரும்பெருங் கருத்துகள் புலனுகும். அனுபவப் பேற்றுண்மைகள் தெளிவதாகும். நால்வர் பெருமக்களை அண்மைக் காலத்தில் போற்றி அவர்தம் பாக்களுள் பொதிந்து கிடக்கும் உண்மைகளைத் தெற்றெனப் புலப்படுத்திய பெருமை இராமலிங்க அடிகட்கே சேர்வதாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றைச் சாதனை முறைகள் என்பார்கள். இவை ஒவ்வொன்றும் நாற்கூறுகளை உடையது. சரியையுள் நான்கு, கிரியையுள் நான்கு, யோகத்துள்

நான்கு, ஞானத்துள் நான்கு என விரிந்து பதினாறு படிநிலைகள் உள்ளன. அடிகள் இக் கருத்தை உரைக்கின்றது வருமாறு:

''சரியை நிலை நான்கும் ஒரு கிரியை நிலைநான்கும்
தனியோக நிலைநான்கும் தனித்தனி கண்டறிந்தேன்
உரிய சிவஞான நிலைநான்கும் அருள் ஒளியால்
ஒன்றொன்று அறிந்தேன் மேல் உண்மை நிலைபெற்றேன்
அரிய சிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலை அறிந்தேன் அப்பால் நின்றோங்கும்
பெரிய சிவ அனுபவத்தால் சமரச சன்மார்க்கம்
பெற்றேன் இங்கிறவாமை உற்றேன் காண்தோழி''

ஞானசபாபதி, நன்னூலுங் கடந்து ஒளிர்பவர் என்றும் அடிகள் பிறிதோரிடத்தில் கூறுகின்றார். சமரச சன்மார்க்க அனுபவம், ஆனந்தமும் கடந்தது என்று மேற்குறித்த பாடல் நமக்குத்தெளிவு படுத்துகின்றது. கலாந்தம், போதாந்தம், யோகாந்தம்,நாதாந்தம் சித்தாந்தம், வேதாந்தம் என்கின்ற அந்தங்களை எல்லாம் கடந்து விளங்குவது சமரச சன்மார்க்க அனுபவம்.

இராமலிங்க அடிகள் தமது அருட்பாடல்களுள், இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய மூன்று அனுபவப் பேறுகளும் வாய்க்கப் பெற்றதைக் குறிக்கின்றனர். ''ஓங்காரம்' என்னும் பொருள்பற்றியும் அடிகள் விரிவாகக் குறித்துள்ளார். ஓங்காரத்துப் பொருளை நமக்கு விளக்கியுள்ளார். '' ஓம் எனும் அருட்பாதம்'' என்று குறிக்கிறார். ''முருகன் பிரணவாகார சின்மய விமல சொரூபன்'' ''விநாயகர் பிரணவ ஒளியாய் விளங்குதல்'' ''சிவகாமவல்லி ஓங்கார பீடத்தில் இருத்தல்'' என்று முருக விநாயக சிவகாமவல்லி முதலியோரை வழிபடும்போது நமது உள்ளத்தில் இருத்த வேண்டிய உயர்ந்த, தத்துவ, அனுபவ உண்மைகளை நமக்கு அடிகள் அறிவுறுத்துகிறார். இறைவன் அடிகட்குப் பிரணவாகாரப் பரிசளித்ததையும், அவரை ஏகாக்கரப் பொற்பீடத்து ஏற்றியதையும், ஓங்கார அலைமீது இருக்கப் பெற்றதையும் கூறுகின்றார். இவை யாவும் அனுபவப் பேறுகள்.

மூவகை சித்திகளாகிய கரும, யோக, ஞான சித்திகள் தாம் கைவரப் பெற்றதாக அடிகள் தமது பாடல்களில் குறிக்கின்றார். சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் ஆகிய மூன்று தேகங்களும் தாம் அடையப் பெற்றதையும் பாடல்களில் நமக்குத் தெளிவுறுத்தியுள்ளார். தாம் ''சுத்தநல்லுடம்பு'' எய்தியதை நமக்குப் (4715) பாடலொன்றில் கூறியுள்ளார். பிரணவதேகத்தை ''ஓமயத்திருவுரு'' என்று அருட்பெருஞ்ஜோதி அகவலில் குறிப்பிட்டுள்ளார். பிரணவதேகத்தையே ''மந்திர ஒளிவடிவு'' என்றும் விளக்

கியுள்ளார். பிறிதோரிடத்தில் அடிகள் ''மன்னுகின்ற பொன் வடிவும், மந்திரமாம் வடிவும், வான்வடிவும்'' என்று பேசுகின்றார். இவ்வூனுடம்பே ஒளியுடம்பாக்கப் பெற்றதையும் அடிகள் நமக்குத் தெளிவு செய்கின்றார்.

## மரணமிலாப் பெருவாழ்வு

''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால்
உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்
சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே''

இப்பாடலுள் அடிகள் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் என்று நமக்கு ஆணையிட்டுக் கூறுகின்றார். அடிகள் தாம் பெற்ற பெரும்பேறும் இதுவே ஆகும். தாம் மரணமில்லா வரம் பெற்றுக் கொண்டதாகவும், மரணத்தை விடுவித்துக் கொண்டதாகவும் நமக்குத் தெளிவுபெறச் சொல்கிறார். ''இறவாதவனே சன் மார்க்கி'' என்றும், ''சாகாவரம் பெற்றவனே உண்மையான சன் மார்க்கத்தில் தலைநிற்பவன்'' என்றும் கூறுவதால், அடிகள் அதனை உயர்ந்த பேறென்றே நமக்குச் சுட்டுகின்றார் என்பது புலனாகின்றது. பஞ்ச பூதக் கூடாகிய இவ்வுடல், மரணம் நேரிடும்போது பஞ்ச பூதத் தோடும் கலக்கின்றது. ஐம்பூதச் சேர்க்கையாகிய இவ்வுடலினுள் இருந்து நம்மை இயக்கிய ஆன்மா பறந்து செல் கின்றது என்று நாம் கூறுகின்றோம். ''தோற்றம் உண்டேல் மரண முண்டு'' என்பது பொது உண்மை, தோன்றிய இவ்வுடல் மாற்றம் கொள்ள வகையுண்டு. அழியும் இவ்வுடல் அழியாத உடலாக ஆகும் நெறி ஒன்று உண்டு. பட்டினத்தடிகள் ''மாற்றிப் பிறக்க வகையறியாய் மனமே'' என்று கூறுவதினின்று மாற்றிப் பிறத்தல் என்பது சாத்தியமே என்பது போதரும். மாணிக்கவாசகரும் தமது திருவாசகத்துள் அழிதரும் இவ்யாக்கை ஒழிக்கப்பெற்று, ஒளி தரும் யாக்கை அடையப்பெற்ற செய்தியினைக் கூறுகின்றார். ''இருப்பதாக்கினன்'' என்று மாணிக்கவாசகர் கூறுவதும் தாம் என்றும் இருக்கின்ற வகை மாற்றப் பெற்ற வெற்றியையே கூறு கின்றார் என்று கொள்ளுதல் பொருந்தும். இத் தேகம் இன்றுள்ளது போல், பசி, தாகம் முதலியவற்றால் தாக்குறுமேல் அழிவது

திண்ணம். இவ்வுடலிற்கு நரை, திரை, மூப்பு ஆகியவை காலக் கழிவில் நிகழ்ந்து, இறுதியில் சாக்காடு நேர்வது உறுதி. ஆனால் அடிகளார் கூறுவது போன்று, சுத்தமாதி தேகங்கள் கைவரப் பெறுகின்ற நிலையில் இவ்வுடல் மாறி வெளியில் ஒளியாக மருவுதல் ஒருதலை. திருஞானசம்பந்தர் பெருமான் தமது திருமணத்தில் ஜோதிப் பிழம்பில் மறைந்தருளவில்லையா ? மாணிக்கவாசகர், எல்லையில் பெருங்கூத்து விளைக்கும் எம்பெருமானாகிய நடராஜப் பெருமானிடத்து மறையவில்லையா ? இராமலிங்க அடிகள், இப்பருவுடலே பொன்னுடலாக மாறுகின்றது என்பதனை நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார். துஞ்சும் இவ்வுடல் இம்மையே துஞ்சிடாச் சுக உடல் கொள்ளுதல் வேண்டும் என்றும், வீழுடல் இம்மையே வீழ்ந்திடா இயல் உடலாதல் வேண்டும் என்றும் பத்துப் பாடல்களில், அழிகின்ற இவ்வுடல் அழியாத பெருநிலை அடைதல் வேண்டும் என்று இறைவன் திருமுன் விண்ணப்பம் செய்கின்றார். (பாடல்கள் 3720-3729). ''அழிவுறு அருள் வடிவப்பேறு'' என்ற தலைப்பில் (3852-3864) பத்துப்பாடல்களில் இவ்வடிவு இம்மையே மந்திர ஒளிவடிவு பெறுதல் வேண்டும் என்றும், ஒளிர் இயல் வடிவு பெறுதல் வேண்டும் என்றும் இறைவனிடத்து விண்ணப்பம் செய்தருளுகின்றார். வேறிடங்களில் தாம் பெற்ற பெருவாழ்வினை, மரணமிலாப் பெருநிலையினை நமக்குக் கூறுகின்றார்.

ஐம்பூதங்களால் ஆன இவ்வுடல் இறுதியில் ஐம்பூதங்கட்கே இரையாதல் வேண்டும் என்று கூறுவாரது தடைக்கு விடை கூறுவது போல ஒரு பாடலில் அடிகள் அருளுவது:

''காற்றாலே புவியாலே ககனமதனாலே
கனலாலே புனலாலே கதிராதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவியாலே
கோளாலே பிற இயற்றும் கொடுஞ் செயல்களாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய் அளிக்க வேண்டும் என்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவென நினையாதீர் உலகீர்
எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே''

இப் பாடலில் அடிகள் மரணத்திற்குக் காரணமாக விளங்கக்கூடிய நிலைகளை எல்லாம் குறித்து இவற்றால் அழியாதே விளங்கும் மெய்யைத் தான் விரைந்து பெற்ற கீர்த்தியினை நமக்கு அருளுகின்றார். ஆதலால் அடிகள் பெற்ற உடல் நெடிது நிலவும் உடலன்று. நீட்டித்த வாழ்வன்று; எக் காரணத்தாலும் அழியாத உடலைத்தாம் பெற்றதாக அறிவுறுத்துகின்றார். மேற்குறித்த விண்ணப்பப் பாடல்களுள் அடிகள் தாம் விரும்பிய மெய் எத்தகையது என்பதனைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இராமலிங்க அடிகள் வாழ்ந்த காலத்தில் அவரை அறிந்த பெரியவர்கள் கூறுவது அடிகளது உடற்கு நிழலில்லை என்பதாகும். மேலும் அடிகள் தாம் கதிர்முடி சூட்டப்பெற்ற உண்மையினை நமக்கு அருட்பெருஞ்ஜோதி அகவலுள் கூறுகின்றார். இராமலிங்க அடிகளது திருவுருவத்தை நிழற்படம் எடுக்கப் பல்கால் முயன்றும் தோல்வியுற்றனர். நிழற்படம் எடுப்பதற்கு ஒளியும்நிழலும்ஒருங்கே தேவை. கதிரவனைப் படம் எடுக்க இயலாததினால் ஹீலியாஸ் கோப்(Helioscope) என்ற கருவி கொண்டு எடுக்கின்றனர். கதிரவன் பேரொளி வாய்ந்த பொருளாகும். முற்றிலும் ஒளியே இல்லாத இருளையும் படம் எடுக்க இயலாது. அடிகள் ஒளியுடம்பு வாய்க்கப் பெற்றவர். ஆதலால், அவரது உடல் நிழற்படக்கருவியில் விழவில்லை. மேலும், அவரது உடலிற்கு நிழலில்லை.

அடிகள் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் எனப் பெறும் மூவகைத் தேகசித்தியையும் பெற்றவர்கள். இவர்களது உடல் பிறர் காணும் வகையில் நிலத்தில் விழவில்லை. வெளியில் ஒளியாய்க் கலந்தது. வெளியாய அருளில் கலந்ததும் என்றும் கூறலாம். அடிகள் ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் 19 ஆம் நாள் (30-1-1874) வெள்ளிக்கிழமை இரவு 15 நாழிகைக்கு (12 மணிக்கு) சித்திவிளாகத் திருமாளிகையில் தமது திருவறைக்குள் நுழைந்து மறைந்தருளினார்கள். மறைந்த பிறகு அறையைத் திறந்து பார்த்தபோது, அங்கு ஏதுமில்லை.

இராமலிங்க அடிகள் நிறுவிய நிலையங்கள் மூன்று. அவற்றுள் ஒன்று சத்திய தருமச்சாலை. மற்றொன்று சத்திய ஞானசபை. பிறிதொன்று சித்திவளாகம். சத்தியதருமச்சாலை நிறுவப்பெற்ற ஆண்டு 1867. அடிகள் அற்றார் அழிபசி தீர்த்தற்பொருட்டு, இச் சாலையை நிறுவினார். அன்று அடிகள் ஏற்றிய அடுப்பு இன்று வரை அணையாமல் புகைந்து கொண்டே இருக்கிறது. ஏழை எளியவர்கட்கெல்லாம், உடற்குறையுள்ளவர்கட்கெல்லாம் பசி தவிர்த்தற் பொருட்டு இங்கே உணவு பரிமாறப்பெறுகின்றது. அடிகளது கொள்கைகளுள் தலையாயது மக்கள் தவறாமல் போற்றவேண்டுவது சீவகாருண்யமாகும். ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' என்றும் ''பாத்தூண்'' என்றும் வள்ளுவப் பெருந்தகையால் போற்றப் பெற்றதும் சீவகாருண்யமாகும். நிலக்கிழார் தம் நிலத்தில் விளைந்த நெல், கேழ்வரகு, கம்பு முதலியவற்றைக் காணிக்கையாகச் சத்திய தருமச்சாலைக்கு அளிக்கின்றனர். இவ்வாறு பெறுவன கொண்டு சத்திய தருமச்சாலையில் அன்னம் பாலிப்பு நாள் தோறும் நடைபெறுகின்றது. அடிகள் நமது இல்லங்களில் நடைபெறும் சிறப்பு நாள்களில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் ஏழைகட்கு அன்னம் வழங்கப்பெற வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தியுள்ளார். சாலையை நிறுவியபின் அதனையே அடிகள் தமது

உறைவிடமாகக் கொண்டார்கள். சத்திய தருமச்சாலை அடிகளது வாழ்வில் சிறந்த இடம் பெறுகின்றது. தாம் பெற்ற பெரும் பேறுகளெல்லாம் இச் சத்திய தருமச்சாலையிலே ஆகும் என்பதனை அடிகள் "அருள்விளக்கமாலையில்" கூறினர்.

"காலையிலே என்றனக்கு கிடைத்த பெரும் பொருளே
களிப்பே என் கருத்தகத்தே கனிந்த நறுங்கனியே
மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனும் விளைவை எலாம்தருமச்
சாலையிலே ஒருபகலில் தந்த தனிப்பதியே
சமரச சன்மார்க்க சங்கத் தலை அமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்த மொழி மாலை அணிந்தாடும்
மாநடத்தென் அரசேஎன்மாலையும் ஏற்றருளே"

சத்திய ஞான சபை நிறுவப்பெற்ற ஆண்டு 1872. அடிகள் இறைவனை அருட்பெருஞ்சோதியாகக் கண்டார். சோதி வழிபாட்டிற்கென வடலூரில் சத்திய ஞான சபையை அமைத்தார்கள். பிரசோற்பத்தி தை 13 வியாழக்கிழமை பூச நாளில் முதன் முதலாகச் சபையில் வழிபாடு தொடங்கப் பெற்றது. அகத்தே ஒவ்வொருவரும் தமது அனுபவப் பேறுகக் காண வேண்டுவது புறத்தே நமக்குக் காட்டி அறிவுறுத்துவது, சத்திய ஞானசபையாகும். அருட்பெருஞ்சோதியை மறைத்துக் கொண்டிருக்கும் வெவ்வேறு நிறமுள்ள ஏழுதிரைகளும் தத்துவப் படலங்களாகும். இப் படலங்கள் நீங்கும்போது, அருட் பெருஞ்சோதி தரிசனம் கிடைக்கும். சத்திய ஞான சபையும் அடிகளாரது அனுபவத்தில் பெரிதும் இடம் பெற்ற ஒன்றாகும். "ஓர் ஐந்தொழிலைச் செய்ய ஒளிவழங்கும் சித்திபுரம் என ஓங்கும் உத்தர சூழ்திசையில் சரணம் எனக் களித்தெனையும் தாணுக்க."

மாயா திரைகள் ஏழு என்று முன்னர் குறித்தோம். ஆன்ம பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய ஏழு திரைகளுண்டு. அவையாவன: (1) கறுப்புத்திரை–மாயா சத்தி (2) நீலத் திரை—கிரியா சத்தி (3) பச்சைத்திரை—பரா சத்தி (4) சிவப்புத் திரை — இச்சா சத்தி (5) பொன்மைத்திரை — ஞான சத்தி (6) வெண்மைத்திரை—ஆதி சத்தி (7) கலப்புத்திரை—சிற்சத்தி என்ற இவ் விளக்கம் அடிகள் அருட் பெருஞ்சோதிஅகவலில் திரைகட்குத் தந்துள்ள விளக்கம் வருமாறு:

"கரைவின் மாமாயைக் கரும் பெருந்திரையால்
அரைசரது மறைக்கு மருட் பெருஞ்ஜோதி
பேருறு நீலப் பெருந்திரை யதனால்
ஆருயிர் மறைக்கு மருட்பெருஞ்ஜோதி

பச்சைத் திரையாற் பரவெளி யதனை
அச்சுற மறைக்கு மருட்பெருஞ்ஜோதி
செம்மைத் திரையாற் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கு மருட்பெருஞ் ஜோதி
பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
வெண்மைத் திரையின் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
கலப்புத்திரையாற் கருதனுபவங்களை
அலப்புற மறைக்கு மருட் பெருஞ்ஜோதி''

—அருட்பெருஞ்ஜோதி அகவல்
வரிகள்—813-826

''தியானம் செய்யவேண்டுமானுல் ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிட்களமாயிருக்கப்படாது. உருவமாக இருக்க வேண்டும்; அருவமாகத் தியானிக்கப்படாது. பின் உருவங்கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால் அத்துவிதம் தானே ஆகும். எப்படியெனில் பார்க்கும் தான் கெடுவது அத்துவிதம். பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம்—சத்தியம்.'' இவ்வாறு அடிகள் உரைநடைப் பகுதியில் நாம உருவத்தைத் தியானிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிருர். புருவமத்தியில் வெண்டாமரை மலர் மலர்ந்திருப்பதாகக் கருத வேண்டும். அதன் நடுவில் ஓங்கார பீடம் இருப்பதாகக் கொள்ள வேண்டும். இப் பீடத்தில் நடுவில் ஒரு தீபம் இருப்பதாதக் கருதி அத்தீப நடுவில் கடவுள் இருப்பதாகப் பாவித்தல் வேண்டும். ''சிவாயநம'' என்ற நாவசையாமல் நினைக்க வேண்டும் என்று மேலும் தியானிக்கின்ற முறையை நமக்கு அடிகள் வகுத்துள்ளார்.

## சன்மார்க்கப் பெருநெறி முழக்கங்கள்

(1) இந்திரிய ஒழுக்கம் (2) கரண ஒழுக்கம் (3) சீவ ஒழுக்கம் (4) ஆன்ம ஒழுக்கம்.

**இந்திரிய ஒழுக்கம்:** இது இந்திரியங்களை நெறிப்படுத்துதல் என்று பொருள்படும். தீயனவற்றைக் கேளாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின்மீது விருப்பமினறியிருத்தல் இவையாவும் ஞானேந்திரிய ஒழுக்கம். இனிய வார்த்தைகளையே பயிலல், பொய் சொல்லாதிருத்தல், பிறவுயிர்க்குத் தீங்கு நேராவகை அவற்றைக் காத்தல் போன்றவை கருமேந்திரிய ஒழுக்கமாகும்.

**கரண ஒழுக்கம்:** சிற்சபையின் கண் மனத்தைச் செலுத்துவது. இதன் முக்கிய நோக்கம் பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை

மதியாதிருத்தல், சத்துவ குணம் மேலோங்குமாறு ஒழுகுதல். தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல் முதலியன.

**சீவ ஒழுக்கம்** : எல்லா மனிதரிடத்தும் சாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நிற்றல் முதலியன சீவ ஒழுக்கம்.

**ஆன்ம ஒழுக்கம்** : உயிர்தொறும் விளங்கும் ஆன்மாவினிடத்து இரங்கி அவ்வான்மாவே சபையாகவும், அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு, கலந்து பூரணமாக நிற்றல் என்று அடிகள் விளக்குகிறார்.

சத்விசாரம், பரோபகாரம் என இருநெறிகளை நமக்கு அடிகள் வகுத்தார். சத்விசாரம் என்பது (1) கடவுளது புகழையும், ஆன்மாவின் தரத்தையும் நமது சிறுமையையும் கடவுளின் தரத்தையும் இடைவிடாது விசாரித்து அறிய வேண்டும். (2) நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது சிறந்த பயிற்சியாகும். நமது சிறுமையை உணர்வதன் மூலம் ஆண்டவனது பெருமையை உணரலாம்.

பரோபகாரம் பிறவுயிரிடத்து இரக்கம் கொள்ளுதல்; இரங்கி அவ்வுயிர்கள் படுந் துன்பத்தைத் துடைத்தல்; நாம் நேராக நீக்க இயலாவிட்டால் பிறரைக்கொண்டு நீக்கலாம். இதுவும் இயலாத நிலையில் இறைவனிடத்துப் பிரார்த்தனை செய்யலாம். ''பசித்திரு'' ''விழித்திரு'' ''தனித்திரு'' என்று மூன்று தொடர்களை அடிகள் நமக்கு அருளியுள்ளார். பசித்திருத்தல், உடற் பசியைக் குறிக்கவில்லை. ஆக்கப்பசி, ஆன்மானுபவம் பெற தணியாவேட்கையோடு கூடியிருத்தலாகும். விழித்திருத்தல் ஆன்ம விழிப்பைக் குறிக்கும். கண் திறந்து இருந்தாலும் கருத்து கண் வழி அமையாது போனால் பயனின்று. தனித்திருத்தல் தத்துவக் கூட்டங்களினின்று தனித்திருத்தலாகும். நாம், ஆன்மா என்ற உணர்வோடு இருத்தல் இவ்வுணர்விற்குத் தடையாக விளங்குகின்றவற்றினின்று நீங்கித் தனித்திருத்தல். ஆன்மா சிற்றணு வடிவுடையது. இவ்வாறு, இவ்வணு கோடி சூரியப்பிரகாசம் உடையது. இதன் இருப்பிடம் லலாடஸ்தானம் ஆகும்.

அடிகளது கொள்கைகளுள் தலையாயது ஊனுணவு தவிர்த்தலாகும். புலைப்புசிப்பை ஒழிக்க வேண்டும். 'தன்னூன்பெருக்கற்குப் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்' என்று வள்ளுவர் கேட்பது அடிகளது கொள்கைக்கு அடிப்படையாகும். புலையும் கொலையும் தவிர்த்தவர்களே அகவினத்தாரென்றும். ஏனையோர் புறஇனத்தார் என்றும் அடிகள் அருளுகின்றார். உயிர்களிடத்து இரங்குவதற்குச் சைவ உணவு இன்றியமையாதது. சத்துவ குணம் மேலோங்குவதற்கும் புலைப்புசிப்பு பொருந்தாது.

அடிகள் இறந்த உயிர்களைச் சமாதிவைக்க வேண்டும் என்று அருளியுள்ளார். சிறு குழந்தைப் பருவத்தில் இறப்பவர்களை நாம் புதைக்கின்றோம். நன்னெறிநின்ற பெரியோர்களையும் சமாதி வைக்கின்றோம். கருவுற்று இறப்பவரைப் புதைக்கின்றோம். இடைப்பட்டவர்களையே சுடுகின்றோம். இப் பழக்கமும் நமக்கு ஆதியில் இல்லை என்று தெரிகிறது. முதுமக்கள் தாழி என்பது மூப்பு மிகுந்தவர்களைத் தாழியுள் அடைத்து அப்படியே புதைத்துவிடுதல் முன்னுளையப் பழக்கம் என்று அறிகின்றோம். புன்செய் எருவிற்கேனும் ஆகுமே என்று அடிகள் வருந்துகின்றார். சிரம் நெளியச் சுடுகின்ற கொடுமையை நோக்கி அவர் சமாதி வற்புறுத்தினார் என்று கொள்ளலாம். ஆனால், தக்க காரணங்களை அவர் எடுத்துக் கூறுகிறார். ''குணம் புதைக்க உயிர் அடக்கம் கொண்டது சுட்டால் அது தான் கொலையாம்'' என்றும் ''எணம் புதைக்கத் துயில்வார் நமது இல்லத்தில் துயில்வதற்கு அஞ்சுவர்'' என்றும் கூறுகிறார்.

அட்டாங்க யோகத்தில் சமாதி இறுதியான படிநிலை. இச் சமாதி நிலை உறுகின்றவர்கள் தமது எண்ணத்தைத் தம்முள் புதைக்கின்றனர். இவர்கள் தம்மை மறந்து விளங்குபவர்கள். இரவில் தூங்கி மறந்தவர்களைத் தீக்கிரையாக்குகின்ற நிலையைத் தவிர்த்தல் பொருட்டே சமாதி வற்புறுத்துகின்றார். சில பெரியவர்கள் மறைவைப் பற்றிக் கூறும்போது நாம் அவர்கள் அடங்கி விட்டதாகக் கூறுகிறோம். அவர்களது மூச்சு வெளியே போவதில்லை. உள்ளேயே அடங்குகின்றது. இன்றும்கூட, இறந்துவிட்டார்கள் என்று எண்ணி நாம் ஈமக்கிரியைகள் செய்து சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றவர்களுள் சிலர் மீண்டும் நனவு நிலை பெற்று வீடு திரும்பியதைச் செய்தித்தாள்களில் பார்க்கின்றோம். இது சாதாரண மனிதனுக்கே நேர்கிற நிலையென்னில், கலைத் தொழிலில் பெரியர் உள்ளம் வருந்திய வருத்தத்தை எண்ணிப் பார்க்க இயல்வதொன்றேயாகும். ஆதலால் ''எணம் புதைக்கத் துயில்வார் நமது வீட்டில் தூங்க அஞ்சுவர்'' என்கின்றார். இவர்களைநாம் இறந்தவர்கள் என்று எண்ணிச் சுடுகாட்டில் உய்த்துச் சுட்டுவிடுவோம். ஆதலால் எவர் பெரியர் என்று அறிதல் இயலாது புறத்தே தம்மைக் வெளிக்காட்டாது உயர்ந்த நெறிகளைப் பின்பற்றுவோருண்டு. ஆதலின் பொதுவாக எல்லோரையுமே புதைத்து விடுங்கள் என்கின்றார். எரித்தல் கூடாது என்றும், விளக்கிக் கருமாதி, திதி முதலிய சடங்குகளும் செய்ய வேண்டாம் என்றும் கூறுகின்றார்.

## இராமலிங்க அடிகள் அருளிய நூல்கள்

இராமலிங்க அடிகள் அருளிய பாடல்கள் திருவருட்பா என்ற பெயரைப் பெற்றுத் திகழ்கின்றன. இறைவனது அருளை இறைஞ்சி பாடப்பெற்ற பாடற்றொகுதி—திருவருட்பா எனலாம். இறைவனது அருட் பெருக்கினை அடிகள் பெற்ற காரணத்தால் அவ்வருள் மேலீடாக வெளிப்பட்டுப் பாடலாகப் பாடப் பெற்ற பாடல்களின் தொகுதியே திருவருட்பா ஆகும். இப் பாடல்களை ஆறு திருமுறைகளாகப் பகுத்துள்ளனர். ஆறுவது திருமுறை. அடிகளது அனுபவப் பேறுகளை விளக்குவன.

அடிகள் இயற்றிய நூல்கள் மனுமுறை கண்ட வாசகம், ஜீவ காருண்ய ஒழுக்கம் என்பனவாகும். ஜீவகாருண்ய ஒழுக்கமும் ஏழு பகுதிகளாக எழுதப் பெற்றதாக நாம் அறிகிறோம். இன்று கிடைப்பவை ஒருசில பகுதிகளே ஆகும். அடிகள் பதிப்பித்தவை: ஒழிவிலொடுக்கம் (1851), தொண்டமண்டல சதகம் (1855), சின்மய தீபிகை (1857).

இராமலிங்க அடிகளது கொள்கைகளை நன்கு உணரவும் அவர் பெற்ற பெறற்கரிய பெரும் பேறுகிய மரணமிலாப் பெருவாழ் வைப் பற்றி நாம் அறியவும் துணை நிற்பன அவர்தம் அருட்பாடல் களே ஆகும். இன்று திருவருட்பா திருந்திய முறையில் அச்சிடப் பெற்றுள்ளது. தவத்திரு ஊரன் அடிகள் வரலாற்றுமுறைப் பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அடிகள் தமது கொள்கைகளது தனித்தன்மையால் உயர்ந்து விளங்குகிறார். அடிகள் வகுத்த சன் மார்க்கநெறி, சமயம், மதம் முதலியவற்றைக் கடந்தது. ஆறந் தத்திற்கு அப்பாற்பட்டது. அது ஷடாந்த சுத்த சமரச ஞான நெறியாகும். அவர் மூவகைச் சித்தியும், மூவகை தேகமும் பெற்று நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு அணுகாத மரண மிலாப் பெருவாழ்வு பெற்று உடம்பை மண்ணிற்கோ, நெருப் பிற்கோ இரையாக்காது, இறைவனோடு வெளியில் ஒளியாக மருவினார்; கலந்தார்.

# 3. இராமகிருஷ்ண பரம ஹம்ஸர்

## (1836-1886)

இராமகிருஷ்ணரது பிள்ளைத்திருநாமம் காதாதர் ஆகும். அவர் பிப்ரவரித் திங்கள் பதினெட்டாம் நாள் 1836ஆம் ஆண்டு பிறந்தார். ஹூக்ளி மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில்-கமர் புக்கூரில் பிறந்தார். அவரது தந்தை குடிராம் சட்டர்ஜி ஆவார். அவர் கிராமத்தில் புரோகிதராகப் பணிபுரிந்தார். கதாதருக்கு இளமையில் பள்ளிப்படிப்பில் நாட்டம் செல்லவில்லை. துறவிகளது கூட்டுறவையே பெரிதும் நாடினர். இறைவனைத் துதிக்கும் பாடல்களை யாத்தலிலும், இதிகாசங்களினின்று கதைகளைச் சொல்லுதலிலும் அவரது இளமை கழிந்தது. அவருக்குத் தெய்வீக-அனுபூதிக் காட்சிகள் சில இளமையில் நேர்ந்தன என்று சொல்லப்பட்டுள்ளன. இக் காட்சிகள் நேரும்போதெல் லாம் பேருவகை தொடர்ந்தது.

கதாதரது அண்ணன் தக்ஷிணேசுவரத்து துர்கைக் கோயில் அர்ச்சராகப் பணி புரிந்து வந்தார். அவரோடு வாழ்வதற்காகத் தமது பதினேழாம் ஆண்டில் அங்குச் சென்றார். இவ் வாலயம் கல்கத்தா நகருக்கு அண்மையில் நான்கு மைல் தொலைவில் உள்ளது. மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் காதாதர் தமது அண்ணனை இழந்தார். அப்போது அவர் ஆலயப்பணி மேற் கொள்ள நேர்ந்தது. உலக அன்னைக்குத் தொண்டு செய்வதில் அவரது வாழ்க்கைத் தொடங்கியது. அன்னை காளியின் வடிவம் அவரது உள்ளத்தில் நன்கு படிந்தது. அது கற்சிலையாக அவருக்குத் தோன்றவில்லை. அன்னையின் வடிவமாகவே தோன்றியது. கதா தரது வாழ்க்கையைப் பற்றி எழுதுபவர்கள் அவரது வழிபாட்டைப் பற்றிக் கூறுவது : 'இராமகிருஷ்ணர் வழிபாட்டிற்காக அமரும் போது உலகைப் பற்றிய நினைவு அறவே நீங்கும். புற உலகிற்கும் அவருக்கும் இடையே ஒரு திரை இருப்பதைப்போன்ற உணர் விருக்கும். அவர் வழிபடும்போது அங்கு வழிபடச் செல்வோர் எவரையும் அறியார். அசைவறப்பல மணிநேரம் அமர்ந்திருப்பார். அவர் தன்னுணர்வு பெறுதல் அருமையாகும். தியானத்தில்

ஆழ்ந்து விடுவார். அவரது நெருங்கிய உறவினர் உணர்த்தினுலும் உணர்வு விரைவில் மீளாது அருச்சாகர் ஓதும் மந்திரங்களின் உட்பொருளை அவர் காட்சியாகக் காண்பார். ஆனுல், அருச்சகர் அப் பொருளைக் கற்பனையில்தான் காண இயலும். தியானத்தில் அவ்வப் பொழுது இராமகிருஷ்ணர் ஆழ்ந்து விடுதலால் அத் தியானத்தில் அவர் காணும் காட்சிகளின் விளைவாகப் பேருவகை அவரது உள்ளத்தில் தவழும். இத்தகைய அனுபவங்கள் அவரை மிகவும் ஊக்கின. இறைவியைக் காணவேண்டும் என்ற அவா அவருக்கு மேலோங்கி எழுந்தது. இவ்விழைவு அவரை இறையுணர்வைப் பெறப் பிற்காலத்தில் தூண்டியது. அவர் தமது அன்பர்களிடையே உரையாடும் போது, இறைவியைக் காண வேண்டும் என்ற தணியாத வேட்கை இறையுணர்விற்கு இன்றியமையாததென்றூர். அன்னை காளியின் ஸ்வரூபத்தை இராமகிருஷ்ணர் காண விரும்பியதனைச் சொல்லால் விரித்துரைக்க இயலாது. அன்பர்களை நோக்கி அவர் கேட்டது; 'இறையுணர்வு பெறுதற்காக நீ அழுததுண்டா?' இவ்வாறு பிறரைக்கேட்ட இராமகிருஷ்ணர் தாம் இடையருது அழுதும் அரற்றியும் இறைக்காட்சி கைவரப்பெற்ரூர் என்று நாம் ஊகிக்க இடமுண்டு. பன்னிரு ஆண்டுகள் இறைக்காட்சியை நாடி அந் நாட்டத்தில் உறைந்து அவர் இருந்துவந்தார். இவ்வாண்டுகளில் அவர் அனுபவித்த அல்லல்கள் பலவாகும். நள்ளிரவில் சுடுகாட்டில் தியானம் தொடர்ந்து செய்வார். தாயைப் பிரிந்த சேயைப் போல அழுவார். நிலத்தில் வீழ்ந்து புரள்வார். தாம் இறைக் காட்சி காணும் பேறு பெறவில்லையே என்ற ஏக்கத்தால் மிகவும் வாடினுர். மாலையில் ஆலய மணி அடிக்கும். அடிப்பதைக் கேட்ட இராமகிருஷ்ணர் வறிதே மற்ரேர் நாள் கழிந்தது என்று நினைத்து கவல்வார். அன்னையைக் காணவில்லையே என்று கவலை அவரை மிகவும் 'வாட்டியது. தம் வாழ்க்கையில் (அன்றளவில்) உண்மையை உணர்வதற்கியலாமற் போனதை நினைந்து நினைந்து வருந்தினுர். அன்னையை நோக்கி அவர் கேட்டது: 'நீ உண்மையிலே உள்ளாயா? அல்லது மனத்தின் படைப்பா? சமயம் என்பது கற்பனை தானு? ஆகாயத்தில் கட்டப்பெறும் கோட்டையா?' என்றெல்லாம் அவ்வப்பொழுது அவர் மனத்தில் தோன்றிய ஐயங்களை வெளிப்படுத்தினுர். இவ்வாறு பல்காலும் அன்னையின் காட்சிக்காக அவர் உருகி நின்றதால் அன்னை உவந்து அவரது உணர்வில் ஒளியைப் பாய்ச்சினுர். அவ் அனுபவத்தைப் பற்றி நமக்கு விரிவான குறிப்பு கிடைத்துள்ளது. இக் குறிப்பு அனுபூதி நெறியைப் பற்றி அறிய விரும்புவோருக்கு அரிய விருந்தாகும். அக் குறிப்பைக் காண்போம். 'தாளமுடியாத துன்பத்தில் நான் வருந்திக் கொண்டிருந்

தேன். அன்னையின் காட்சி அமையவில்லையே என்ற எண்ணம் என்னைத் துன்புறுத்தியது. ஈரத்துணியைப் பிழிவதைப் போன்று எனது இதயம் பிழியப்பெற்றது. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. இவ் வாழ்க்கையில் நான் இறைவியை உணர்வேனோ என்ற அச்சம் என்னைத் துன்புறுத்தியது. அன்னையைப் பிரிந்து என்னால் வாழ இயலவில்லை; வாழ்வதும் பயனற்றதாகத் தோன்றியது. வாழ்க்கையை முடித்துக் கொள்வதென்று தீர்மானித்தேன். அன்னையின் ஆலயத்தில் இருந்த வாளைக் கண்ட நிலையில் இந்நினைவு எழுந்தது. உணர்ச்சிப் பெருக்கில் குதித்தெழுந்து, வாளைப் பற்றினேன். திடீரென்று கருணைமிக்க அன்னை எனக்குத் தன்னை வெளிப்படுத்தினாள். நான் உணர்விழந்து தரையில் வீழ்ந்தேன். அதற்குப் பிறகு புறத்தே யாது நிகழ்ந்ததென்பதை நான் அறியேன். அடுத்தடுத்து சில நாள்கள் இவ்வாறு கழிந்துள்ளன. ஆனால், எனது அகத்தே ஆனந்தம் புதியதோர் அனுபவம் மெல்லப் பெருகுவதை உணர்ந்தேன். இறைவியின் இருப்பை நான் உணர்ந்தேன்.''

இவ் அனுபவம் நிகழ்ந்தபோது ஆங்கிருந்த கட்டடங்களும் பல்வேறு பகுதிகளும் ஆலயமும் பிறவும் அவரது காட்சியினின்று அகன்றன. அவை இருந்த இடத்தில் எல்லையற்ற அகண்டமான ஒளிகாலும் உணர்வுப் பெருக்கை அவர் உணர்ந்தார். அலையலையாக ஒளிப் பெருக்கு அவரை நோக்கி நெருங்கிய வண்ணம் இருந்தது. அது அவரை விழுங்கியது. ஒளியலைகளால் விழுங்கப்பெற்ற நிலையில் அவர் உணர்விழந்தார். இத்தகைய ஒளிக் காட்சியை—ஒளியினால் பெற்ற பேற்றினை—அனுபூதி இலக்கியத்தில் 'விழிப்பு நிலை' என்று கூறுவர். இவ் அனுபவத்திற்குப் பிறகு அவர் தமது உடலைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அவரது புறவாழ்வு பலருக்கும் புரியாத புதிராக இருந்தது. அவர் மனநிலை பிறழ்ச்சி உற்றதோ என்று பிறர் ஐயுற்றனர். அவரது விருப்பமெல்லாம் தாம் பெற்ற அனுபவத்தை—காட்சியைத்-தொடர்ந்து அனுபவிக்க எண்ணியதே ஆகும். இறைக்காட்சியை இடையறாது துய்க்க விரும்பியதால், தமது பிரார்த்தனைகளையும் தியானத்தையும் பன்மடங்காகப்பெருக்கினார். இதன் காரணமாக அவரது உடல் மெலிந்தது; நோயுற்றார்; மருந்துகள் பயனற்றனவாயின. அவரது உடல் நிலையைப் பற்றி அவர்தம் பெற்றோர் அறிந்தனர். அவரது அன்னை மிகவும் கவன்றார். அவருக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தனர். தடையேதும் சொல்லாது திருமணத்திற்கு இசைந்தார். தாம் மணக்க விரும்பிய பெண்ணையும் குடும்பத்தையும் தாமே குறித்தார். அப்போது அவருக்கு வயது இருபத்து மூன்று. அவரை மணந்த ஸ்ரீ சாரதா தேவிக்கு வயது ஆறு ஆகும். பல ஆண்டுகள் கழித்து அன்னை சாரதா தேவியார் தக்ஷிணேஸ்வரத்திற்கு வந்த

போது அவர்கள் இராமகிருஷ்ணருக்குத் தொண்டு செய்ய தமக்கு வாய்த்த பேற்றினை எண்ணி மகிழ்ந்தார். தாம் முதற் சீடராக அமைய நேர்ந்தமை குறித்தும் மிகவும் மகிழ்வெய்தினார்.

இராமகிருஷ்ணரைப் பொருத்தமட்டில் திருமணம் எவ்வித மாற்றத்தையும் அவரது வாழ்வில் புகுத்தவில்லை. அவர் திருமணம் முடித்து அன்னை காளி கோவிலை அடுத்தபோது தமது ஆன்மீகச் சாதனங்களைப் பெருக்க எண்ணினார். அவர் புரிந்த சாதனங்கள் பலப்பலவாகும். அவை தனித்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை; அவை உலகிற்குப் பெரும் படிப்பினையாக அமைந்தவை; அவற்றை இனி விளக்குவோம்.

முன்னர் அன்னை காளியின் காட்சி அவருக்கு அமைந்தது என்று கண்டோம். அவர் முதலில் இராம அவதாரத்தில் ஈடுபட்டார். இராமரை வழிபடுந் தெய்வமாக ஏற்றார். தம்மை அநுமனாகக் கருதத் தொடங்கினார். அநுமன் இராமபிரானுக்கு மிகவும் உகந்த தொண்டனல்வா? ஆதலால், தம்மை அநுமனாகப் பாவித்துத் தமது செயல்களை எல்லாம் அநுமனது செயல்களாகவே புரிந்தார். கனிகளையும் கொட்டைகளையும் உணவாக ஏற்றார். மரக் கிளைகளில் வாழத் தொடங்கினார். இச் சாதனத்தின் விளைவாகத் தாம் முன்னர் காளியைக் கண்டது போலவே சீதாப் பிராட்டியைக் கண்டார்.

அனுபூதிச் செல்வர்கள் இத்தகைய அனுபவங்களைப் பொறித்துச் சென்றுள்ளனர். அவர்கள் தாம் பெற்ற அனுபூதியை, காட்சியைத் தத்தம் மரபிற்கு ஏற்ப விளக்கியுள்ளனர். அவரவர் பிறந்த சமயத்தின் குறியீடுகளைப் பயன்படுத்தினர். தமிழகத்தில் வாழ்ந்த அனுபூதி செல்வர் தாம் கண்ட இறையைச் சிவனெனக் குறித்தனர். மகராட்டிரத்தில் வாழ்ந்தவர்கள் கிருஷ்ணனென்றனர். துறவி பால் கிறிஸ்து என்றார். இராமகிருஷ்ணர் அன்னை காளி என்று குறித்தார். அவர் தொடர்ந்து புரிந்த சாதனத்தால் தற்போது சீதையைக் கண்டார். இறைவனைக் காணத் துடித்தது அவரது உள்ளம். ஒரு காட்சியோடு அமைதி பெறவில்லை. இறையை எத்துணை வகைகளில் பக்தர் கண்டனரோ அவ்வவ் வகைகளிலெல்லாம் இறைக் காட்சியைப் பெற அவரது உள்ளம் மிகவும் விரும்பியது.

இராமகிருஷ்ணர் தமது பேரார்வம் காரணமாகத் தம்மைக் கடுமையான நோன்புகட்கு உட்படுத்தினார். ஹடயோகம் பயின்றார். இடுகாட்டில் பல மணி நேரம் தொடர்ந்து நள்ளிரவில் தியானத்தில் அமர்ந்தார். தோட்டியைப்போல சுத்தம் செய்தார். கழிவுப் பொருளிற்கும் சந்தனத்திற்கும் தாம் வேறுபாடு கருதா

திருந்தார். அன்னை காளியிடம் முறையிட்டார். தாம் சரண் புகுந்ததை நினைந்து அன்னை எவ்வாறு உணர்த்துகின்றாரோ அவ்வாறே இருக்க உறுதி பூண்டார். தமக்கு அன்னையே புகல் என்பதில் எத்துணையும் ஐயமின்றிப் பிரார்த்தித்து வந்தார். அவரது தூய பிரார்த்தனைகள் நிறைவேறும் நாள் அடுத்தடுத்து பைரவி பிராமணி என்ற வைணவ பக்தி நிறைந்த யோக மார்க்கத்தில் வல்ல ஓர் அம்மையார் தக்ஷினேஸ்வரம் வந்து சேர்ந்தார்கள். அவ்வம்மையாரை இராமகிருஷ்ணர் குருவாக ஏற்றார். மூவாண்டுகள் தொடர்ந்து தந்திர சாதனங்களை முறையே இராமகிருஷ்ணர் பயின்றார். ஆன்மீக நெறிகளுள் தந்திர சாதனங்கள் எளியவை அல்ல. புலனொழுக்கம் இல்லாதவர்கள் இச் சாதனங்களை மேற்கொண்டால் எளிதில் புலன்களால் அலைக்கப்பெறுவர். தந்திர நெறி மனிதனைப் புலவாழ்க்கையினின்று தெய்வீக நிலைக்கு உயர்த்தும். இந் நெறியாளர் உயர்த்துதற்குப் புலன்களையே பயன்படுத்துவர். புலனின்பங்களிலும் இறைவனது அழகை உணர்த்துவன, தந்திர சாதனம். ஆதலால் மிகவும் விழிப்போடு இச் சாதனங்களைப் பயில வேண்டும். இராமகிருஷ்ணர் தமது புலன்களைக் கட்டுப்படுத்தியவராதலால், எவ்வித இடையூறுமின்றி இச் சாதனங்களை மேற்கொண்டு முடித்தார். இவற்றை நெறி பிறழாமல் தூய நிலையில் மேற்கொண்டதால் இயற்கை இறந்த ஆற்றல்கள் இவருக்கு ஏற்பட்டன. இவற்றால் மயக்குறாது தம்மைக் காத்துக் கொண்டார். அவருக்கு இச் சாதனங்களால் உடற் பொலிவு நேர்ந்தது. அன்னை காளியிடம் தமக்குப் புற அழகுத் தேவையில்லை என்று கூறி அக அழகே—தூய ஆன்மீக ஆற்றலே—தேவை என்று முறையிட்டார். அன்னையினிடம் அவர் வைத்திருந்த அயரா அன்பினாலே தந்திர சாதனங்களால் ஏற்பட்ட வியத்தகு ஆற்றல்களையும் வெறுத்து ஒதுக்கினார். உடலில் தோன்றிய ஒளியையும் வேண்டாது ஒதுக்கினார். தந்திர சாதனைகளை ஒருவன் மேற்கொண்டு தூயனாக ஒருவன் ஒழுகவும் விளங்கவும் இயலும் என்பதனை இராமகிருஷ்ணர் தமது இச் சாதனைகளால் நிறுவினார்.

ஜடாதரி என்ற வைணவ துறவியின் தொடர்பு இராமகிருஷ்ணருக்கு அடுத்து அமைந்தது. பக்தி நெறியிலே இறைவனைப் பல்வேறு நிலைகளிலே வைத்து வழிபடுபவர். இறைவனைத் தந்தையாகவும் எஜமானனாகவும் நண்பனாகவும் குழந்தையாகவும் நாயகியாகவும் வழிபடுகின்ற முறைகள் பலதிறத்தன. இந் நெறிகளையெல்லாம் முறையே இராமகிருஷ்ணர் பயின்றார். இந் நெறிகளுள், 'வாத்ஸல்ய' சாதனம் ஒன்று. இறைவனிடத்தில் தாயன்பு செலுத்துதல் என்பது இதன் பொருள். தாய் செலுத்தும் தலையன்பை இறைவனைச் சேயாகக் கொண்டு இராமகிருஷ்ணர் செலுத்தினார். பின்னர் 'சக்யசாதனம்' பயின்றார். இறைவனைத் தோழனாகக்

கொண்டு ஒழுகுதல் என்பது இதன் பொருள். கிருஷ்ணனைத் தமது நண்பனாகக் கொண்டு சில காலம் வாழ்ந்தார். வைணவ சாதனங்களுள் தலையாயது இறைவனை 'நாயகியாக'ப் பாவித்தல் ஆகும். இச் சாதனத்தில் பக்தன் தன்னை இராதையாகக் கருதி அதன் காரணமாகக் கிருஷ்ணனிடம் உள்ள அளவு கடந்த பிரேமையால் தம்மைக் கரைத்துக் கொண்டார். அவர் தம்மை முற்றிலும் மறக்கக் கருதி, பெண்ணியல்புகளை மேற்கொண்டார். சில காலம் மகளிரோடு வாழ்ந்தார். இவ்வாறு தாம் மேற்கொண்ட இராதை பக்தியில் உறைந்து நின்ற காரணத்தால் கிருஷ்ணனது நிகரில்லாத பேரழகைத் தரிசிக்கும் பேறு பெற்றார். இத் தரிசனத்தால் இறைவன் அவரது உடலுட் புகுந்தார். இத் தெய்வ அருளிலே இரண்டு மூன்று மாதங்கள் திளைத்தார். தம்மை மறந்து கிருஷ்ணனையே தாமாக எண்ணினார். கிருஷ்ணன் உயிர்தோறும் விளங்கக்கண்டார். அவன் யாண்டும் நிலவுவதைத் தந்திரவைணவ சாதனங்களை முறையே பயின்று தமது பக்தியைப் பெருக்கினார். ஆளுமை சார்ந்த இறைக் கொள்கையின் பல நெறிகளைப் பின்பற்றினார். உதாரணமாக ஈஸ்வரனைத் தொழுதார். இந் நெறிகளில் இராமகிருஷ்ணர் அன்னை காளியின் தரிசனத்தைப் பெற்றது போலவே, சீதையை, கிருஷ்ணனைத் தரிசித்தார். மேலும் பல நிலைகளிலும் கிருஷ்ணனை அனுபவித்தார். அன்னை காளியின் அருள் தற்போது இராமகிருஷ்ணரை மேலும் ஓர் அனுபவத்திற்குத் தயாராக்கியது. அவர் இறையின் நிர்க்குண நிலையை அறிய வேண்டியிருந்தது. பரம்பொருளை, ஆளுமை சாராத நிலையில் நிர்க்குண நிலையில் உணருதல் எளிதன்று. இந் நெறியில் வல்ல தோதாதபுரி என்னும் அத்துவித வேதாந்தி இந் நிலையில் இராமகிருஷ்ணருக்குக் குருவாக அமைந்தார். இக் குரு ஞான நெறியைக் கடைப்பிடிப்பவர். இதுகாறும் இராமகிருஷ்ணர் பின்பற்றியது பக்தி நெறி. தோத்தாபுரி என்பவர் 1864-ல் தக்ஷிணேஸ்வரம் சார்ந்தார். தியானத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவராக இராமகிருஷ்ணரைக் கண்டார். அவரைச் சீடராக ஏற்றுக் கொண்டார். மிகக் குறைந்த கால அளவிலேயே இராமகிருஷ்ணர் நிருவிகல்ப சமாதியை அடைந்தார். இச் சமாதி வேதாந்தத்தின் உயரிய நிலையாகும். இராமகிருஷ்ணர் தமது மனத்தைப் புலனுலகினின்றும் முற்றிலும் ஆமைபோல் இழுத்துக் கொள்ளக் கற்றிருந்தார். நாம ரூப உலகிலிருந்து தம்மை நீக்கிக் கொண்டார். இரண்டற்ற உள்பொருளை அனுபவிக்கும்போது, அனுபவிப்பான், அனுபவிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடு நீங்குகிறது. மூன்று நாள்கள் நிருவிகற்ப சமாதியில் நிலைத்து நின்றார். பின்னர் நனவுலகிற்கு மீண்டார். இவ் வனுபவத்தைச் சொற்கள் கொண்டு விளக்க இயலாது.

தோத்தாபுரி அத்துவித வேதாந்தத்தில் மட்டும் தேர்ச்சியுடையவரல்லர். அவர் அதை நடைமுறையில் அனுட்டித்த பெரியாரும் ஆவார். அவர் இராமகிருஷ்ணரது தேர்ச்சியை அறிந்திருந்தார். ஆதலால் அவருக்கு நிருவிகல்ப சமாதி எளிதில் கைகூடும் வகையில் துணைபுரிந்தார். அன்னை காளியின் அனுமதி பெற்றே நிருவிகல்ப சமாதியனுபவத்தைப் பெற விழைந்தார். அன்னையின் அருள் கைகூடியது. தோத்தாபுரி இராமகிருஷணரது நிலையை நிருவிகல்ப சமாதியைக் கண்டு வியந்தார். தாம் நாற்பது ஆண்டுகள் வருந்திப் பெற்ற அனுபவத்தை மூன்றே நாள்களில் தமது சீடர் பெற்ற சீர்த்தியினை எண்ணி அகமிக மகிழ்ந்தார். உயர்ந்த உணர்வு நிலையினின்று இராமகிருஷ்ணர் இறங்கி சாதாரண நனவு நிலைக்கு வந்த பிறகு, தமது குருவைப் பணிந்தார். மகிழ்ச்சியால் குருவும் சீடரைக் கட்டித் தழுவினார். தோத்தாபுரி தமது ஆசிரமத்திற்கு ஏற்ப ஓரிடத்தில் நிலைத்து நிற்பதில்லை. ஆனால், இச் சீடரது பெருமையைக் கருதி அன்பினால் ஈர்க்கப்பெற்று பதினொரு மாதங்கள் தக்ஷினேஸ்வரத்தில் தங்கினார். இந்த நிருவிகல்ப சமாதியினால் இராமகிருஷ்ணர் ஞானியானார். - இதற்கு முந்தைய சாதனங்களால் சிறந்த பக்தராக விளங்கினார்.

இந்து சமயத்துள் இறைவனை அருவமாகப் போற்றுதலும் உண்டு. இந் நெறியே அத்துவிதம். உருவமாகப் போற்றுதலும் உண்டு. இந் நெறியே பக்திநெறி. இதனுள் பலவகையுண்டு. இராமகிருஷ்ணர் தமது தணியாத ஆர்வத்தின் காரணமாக இறைவனை உருவ நிலையிலும், அருவ நிலையிலும், சகுண நிலையிலும் நிர்க்குண நிலையிலும் உணர்ந்து மகிழ்ந்தார். இவரது வேட்கை இன்னுந் தணியவில்லை. புறச் சமயங்களாகிய கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் இறையனுபவத்தையும் பெற விழைந்தார். உருவங்கடந்த பரம்பொருளை அத்துவித சாதனத்தால் உணர்ந்ததால் அவரது மனம் மிகவும் விரிவுடையதாயிற்று. தாம் பிறந்த சமய உண்மைகளைத் தேர்ந்தபிறகு பிற சமயங்களின் உண்மைகளையும் அறிய அவாவினார். ஆனால், சமயத்தின் உண்மை இறையனுபவத்தையே பொறுத்தது. ஆதலால், இவ்வனுபவத்தையே நாடியது அவருள்ளம்.

இஸ்லாமியருள் அனுபூதி நெறியினைப் பின்பற்றியவர்களை ஸூபிகள் என்று வழங்குவர். ஸூபிகளுள் ஒருவர் குருவாக இராமகிருஷ்ணருக்கு வாய்த்தார். இஸ்லாமிய நெறி நிற்பவருக்கு இறைவன் எவ்வாறு அருள் புரிகின்றான் என்று அறிய விழைந்தது அவரது உள்ளம். ஆதலால், இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுவோர் ஒழுகுவதைப் போன்றே தாமும் ஒழுக முற்பட்டார். அன்றாடம் தொழுகையை முறையே செய்வாரானார். இக்

காலத்தில் இந்துக்கள் வழிபடும் இடங்கள் முறைகள் எல்லாம் ஒதுக்கி வைக்கப் பெற்றன. மூன்று நாள்களிலே தமக்கு அவ் வழி பாட்டின் பயன் கிட்டியது என்று அவர் கூறுகிறார். நபி நாயகத்தின் தோற்றம் அவருக்கு அமைந்தது. இவ்வாறு சமய உலகில் அரிய சாதனைகள் பல புரிய முற்பட்ட இராமகிருஷ்ணருக்கு உடல் மெலிந்தது. தமது சொந்த கிராமத்திற்குச் சென்று திரும்ப எண்ணினார்; சென்றார்.

இஸ்லாமிய இறை அனுபவம் விரைந்து அவருக்கு அமைந்த தெனினும், ஸூபிக் கொள்கையரது கருத்துகளனைத்தையும் அறிந்தார். அவர் வழங்கிய உவமைகளுள் பல அல்கஜாலி, ஜலாலுடின் ரூமி போன்ற அனுபூதிச் செல்வர்களிடமிருந்து பெற்றவையாகும். பின்னர் கிறித்தவ சமய அனுபவம் அமைந்தது. சம்புசரண் மல்லிக் என்பவர் விவிலியத்தை இராமகிருஷ்ணருக்குப் படித்துக் காட்டினார். பிற கிறிஸ்தவ அன்பர்களும் அவருக்காகப் படித்தனர். இராமகிருஷ்ணருக்கு ஏசுபெருமான் காட்சி அமைந்தது. ஏசுவின் அன்னை, குழந்தை (ஏசு)யுடன் உள்ள படக் காட்சியையும் அகத்தே கண்டார். இவ்வகைக் காட்சி களால் அவர் பேருவகை அடைந்தார். கிறித்துபெருமானை அடுத்தடுத்து அவர் பெரிய யோகி என்றே குறித்தார். மக்கட் சமுதாயத்திற்காகத் தமது இரத்தத்தைச் சிந்திய அருளாளர் கிறிஸ்து என்ற இராமகிருஷ்ணர் அவ்வப்பொழுது நினைவு கூர்வார்.

இராமகிருஷ்ணர் தாம் பிறந்த இந்து சமயத்தின் முடிநிலை உண்மைகளை அனுபவித்து உணர்ந்தார். புறச் சமயங்களாகிய இஸ்லாம், கிறித்தவம் உணர்த்தும் உயர்ந்த உண்மைகளையும் அனுபவமாகக் கைவரப் பெற்றார். இதனால் அவரது பரந்தநோக்கம் புலனுவதோடு அனுபூதிச் செல்வருக்கு நாடு, சமயம், மொழி போன்ற தடைகள் ஏதுமில என்பதும் தெளிவாகிறது. இறைக் காட்சியை விரும்புவோர் மொழி நாடு முதலியவற்றைக் கடந்து. செல்கின்றனர் என்பதை இராமகிருஷ்ணர் தமது சமய அனுப வங்கள் மூலம் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார். வாயளவில் சமயப் பொதுமை பேசுவது வேறு; அவ்வச் சமய நெறி நின்று அவ்வச் சமயம் உணர்த்தும் இறைநிலைகளை உணர்தல் வேறு. இராம கிருஷ்ணர் தத்துவ சிக்கல்களுள் புகாது, சமய அனுபவத்தையே தமது குறிக்கோளாகக் கொண்டு சமயந்தோறும் நின்று, அவ்வச் சமயம் உணர்த்தும் இறைக்காட்சிகளைக் கண்டு நமக்கு உணர்த் தியது நமது நற்பேறே என்று கொள்ளுதல் வேண்டும். சமயப் போரிடுவோரைப் பார்க்கினும் சமயங்களிடையே நிலவும் அடிநிலை உண்மைகள் யாவும் ஒத்தன; முடிநிலை அனுபவமும் ஒத்ததே

என்பதை தமது வாழ்க்கையின் மூலம் நிறுவியது பெருஞ் சிறப்பாகும். காந்தி அண்ணல் இராமகிருஷ்ணரது வாழ்க்கையை வியந்து போற்றி சமய வாழ்க்கை என்பது சமயங்களைப் போற்றி ஒழுகுதலாகும் என்று கூறினர். சமயம் செயல் நிலைப்பட்டதை இராமகிருஷ்ணர் வாழ்க்கையில் காண்கின்றோம் என்றார்.

இந்திய தத்துவ ஞானம் வாழ்க்கையைப் பற்றி நமக்கு ஒரு நோக்கினைத் (Life view) தருகின்றது என்று சிலர் கூறுவர். வேறு சிலர் அறிவு கொண்டு பல தரிசனங்களை ஆராய்ந்து ஒரு நோக்கினை நாம் பெறுகின்றோம். அது அறிவு நோக்கேயாகும் (Intellectual quest) என்பர். மற்றுஞ் சிலர், வாழ்க்கையைப் பற்றிக் கருத்தியல்பாக நாம் ஒரு நோக்கினைப் பெறுதல் மட்டுமன்று இத் தரிசனங்களது நோக்கம். நடைமுறையில் பயிலத்தக்க நோக்கினைத் (A way of life) தருவதே தரிசனங்களது உட்கிடை என்பர் இந்திய தத்துவத் தரிசனங்களைப் பற்றி எழுந்த மூவேறு கருத்துகளைப் பார்த்தோம். இவற்றை நாம் சமயங்கட்கும் பொருத்திக் காணலாம். சமயங்களைப் பயிலுதல் அவற்றின் உண்மைகளை அறிவு கொன்டு அறிதல் நமது நோக்காக அமைதல் கூடாது. அவ்வுண்மைகளைப் பயின்று அவற்றின் உட்பொருளைத் தெளிதலும் வேண்டும். இறைக்கொள்கையிலேதான் சமயங்கள் யாவும் இணைகின்றன. புறநிலையில் இறைவனை அருவமாகவும் உருவமாகவும் சமயங்கள் இறைநிலையை உணர்த்துகின்றன. ஆனல், இவ்விரு நிலைகளின் முடிவும் இறைக்காட்சியாக அமையக் காண்கின்றோம். இறையனுபவமே சமயங்களின் உட்கிடை எனலாம். இவ்வுட்கிடையை உணர்ந்து நமக்கு உணர்த்திய பெருமை இராமகிருஷ்ணரையே சாரும்.

இராமகிருஷ்ணரது வரலாற்றை எழுதிய ரொமேன் ரோலந்த் என்பார் இராமகிருஷ்ணரது வாழ்க்கை ஈராயிரம் ஆண்டுகள் வாழ்ந்த இந்திய ஆன்மீக வாழ்க்கையின் நிறைவாகும் என்கிறார். சமயம் சாராத உள்ளப்பாங்கு வலுத்து இருந்த காலத்தில், நமது நாட்டு மக்கள் நமது சமய மரபுகளினின்று விலகிப் போன காலத்தில், இராமகிருஷ்ணர் தோன்றி இந்து சமயத்தின் பரந்த மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர் காலத்தில் கிறித்தவப் பாதிரிகளுள் சிலர் இந்து சமயத்தைத் தாக்கி, வன்மையாகக் கண்டித்தனர். இச் சூழ்நிலையில் இராமகிருஷ்ணர் துணிந்து அவர்களது கிறித்தவச் சமயம் வழிபடும் ஏசு பெருமான் ஓர் அவதார புருஷரே என்று கூறி அவர் மனித சமுதாயத்திற்காக இறங்கித் தன்னையே உயிர்த் தியாகம் செய்த செம்மல் என்று போற்றினர். கல்வி கேள்விகளிற் சிறந்து அயல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கியவர்கள் கிறித்தவச் சமயச் சிறப்பினைப்

போற்றுதல் வேறு, நாகரிகக் கல்வி பயிலாது சமயச் சிந்தனையை மற்றும் உடையவராய், சமய அனுபவம் பெறும் வேட்கை மிகுந்த வராய் விளங்கிய இராமகிருஷ்ணர் உணர்த்திய சமயப் பொதுமை எளிதில் யாவரது உள்ளத்திலும் படியும் தன்மையது என்பதும் கவனிக்கற்பாலது.

இஸ்லாமிய இறையொருமைக் கொள்கை அந்நாளில் பலர் உள்ளத்தை ஈர்த்திருந்தது. இதன் காரணமாக இஸ்லாமிய சமயத்தின் ஏற்றத்தை உணர்ந்து போற்றியவர்கள் இருந்தனர். இஸ்லாமியத்தில் ஸுபி பிரிவினர் உணர்த்தும் இறைக் கொள்கையை அனுபூதி நெறி நின்று நமக்கு இராமகிருஷ்ணர் உணர்த்தினர். ஸுபி, அனுபூதிச் செல்வர் சிலரது வாய்மொழிகளையும் உருவகங்களையும் தாம் தமது உரையாடல்களில் பெய்து, அனுபூதி நெறி பொதுமை வாய்ந்தது என்றும், அனுபூதி எல்லாச் சமயத்த வரையும் இணைக்கும் பெரும் பாலம் என்றும் நமக்கு இராம கிருஷ்ணர் உணர்த்தினர். ஆதலால், சமயம் என்பது அறிவு கொண்டு ஆராயப்பெறுகின்ற ஒன்றன்று. சமயம் ஒருவனது வாழ்க்கையை முழுமையாக மாற்றி அமைத்தல் வேண்டும். இத்தகைய மாற்றத்தை விளைத்தலே சமயத்தின் உள்ளீடு என்று நமக்கு இராமகிருஷ்ணர் நன்கு உணர்த்தினர்.

இராமகிருஷ்ணர் தமது வாழ்வில் எந்த உண்மையையும் மாற்ற வில்லை. எச்சமய உண்மையையும் உண்மைக்கு மாறானது என்று மறுக்கவில்லை. அவ்வுண்மைகளை நிறுவவும் அவர் தோன்றினர் என்று கூற இயலாது. அவர் தமது வாழ்வின் மூலம் சமயத்தில் என்றென்றும் விளங்கும் சில முடிநிலை உண்மைகட்குத் தாம் சான்றாக விளங்கினர். அவர் பழைய சமயமரபுகளைக் காத்தார். அன்றைய மக்கட் சமுதாயத்தின் தேவைகட்கு ஏற்ப ஐயங்களை அகற்றி உண்மைகளை நிறுவினர். வருங்காலத் தேவைகளை உணர்ந்து தமது அரிய சீடரான விவேகானந்தர் மூலம் உலகிற்குச் சில உண்மைகளை ஆணித்தரமாக உணர்த்தினர். ஆதலால் இராமகிருஷ்ணரது வாழ்வு சென்ற காலத்தின் பழுதிலாச் சிறப் பாகிய இந்து சமய உண்மைகளைக் காத்தது; நிகழ்காலத் தேவைகளை உணர்ந்திருந்தது. வருங்கால மேன்மைகளைக் கருதி உலகிற்கே ஒரு பெரிய நெறியினைத் தந்தது. வேதாந்த உண்மை களைக் கடல் கடந்து சென்று விவேகானந்தர் முழங்கினர். இன்று உலகெங்கணும் இராமகிருஷ்ண மடத்தின் கிளைகளும் வேதாந்த நிலையங்களும் அரிய பணி செய்கின்றன என்றால் அந் நிலை இராமகிருஷ்ணரது தீர்க்க தரிசனத்தையே உணர்த்துவதாகும்.

மறுமலர்ச்சி இயக்கத்தைத் தொடங்கியவர் என்று இராம கிருஷ்ணரைப் போற்றலாம். சமுதாயத்தில் மறுமலர்ச்சி

விளங்கித் தோன்றலாம். சமய உலகில் அவர் விளைத்த மறு மலர்ச்சி என்றென்றும் நிலைபெற்று விளங்குவதொன்றாகும். இத்தகைய புத்துணர்ச்சியை இராமகிருஷ்ணர் தாம் தமது ஆளுமையின் சிறப்பால் புகுத்தினார் என்று சொல்ல இயலாது. அவர் ஆன்மீக வானில் உயரப் பறந்தவர். எளிய சொற்களின் வாயிலாகத் தாம் உணர்ந்ததைத் தம்மை அடுத்தவர்களிடையே உணர்த்தினார். அவர் எத்தகைய இயக்கமும் தோற்றுவித்த வரல்லர்; அவர் தம் வாழ்நாளில் திருச்சபை எதையும் காண வில்லை. எந்த ஒரு திருநூலையும் அடிப்படையாகக் கொள்ளுமாறு அவர் பணிக்கவில்லை. தமது அனுபவங்களையே அடிப்படையாகக் கொண்டு அவர் போதித்தார். ஆராயாமல் எவரையும் அவரது உபதேசங்களை ஏற்குமாறு வற்புறுத்தவில்லை. அவை அறிவிற்கு மிகவும் பொருந்தியே அமைந்தன. அவரது சமய அனுபவங்களே நமக்கு அறைகூவலாக அமைந்தன. காந்தி அண்ணல் இராம கிருஷ்ணரைப் பற்றிக் கூறியதை முன்னர் கண்டோம். மேலும் அவர் அதனை வலியுறுத்திக் கூறுவதை இனிக் காண்போம்.

''சமயம் செயற்பட்டு விளங்கும் வாழ்வே இராமகிருஷ்ணரது வரலாறாகும். அவரது வாழ்க்கை நம்மை இறைவனை நேருக்கு நேர் காண வழி செய்கிறது. இறைவன் ஒருவனே உள்ளவன். பிற அனைத்தும் மாயை, இல்லாதன என்ற உணர்வு பெற்றாலன்றி இராமகிருஷ்ணரது வரலாற்றையும் நாம் படிக்க இயலாது. அவரது வாழ்க்கை இறைமை வடிவு கொண்டாற் போன்றது. அவரது வாய்மொழிகள் வாழ்க்கையென்ற நூலினின்று எடுக்கப் பெற்ற பக்கங்களாகும். அவரது அனுபவத்தின் வெளிப்பாடு களாகும்.'

இராமகிருஷ்ணரது தலையாய சீடர், சுவாமி விவேகானந்தர் கூறுவது: 'இராமகிருஷ்ணர் போதித்ததைவிட அவரது வாழ்க்கை ஆயிரமடங்கு பெரியது. உபநிடதங்கட்கு இலக்கியமாய் அவரது வாழ்க்கை அமைந்தது. அவரது வாழ்க்கையில் உபநிடத உண்மைகள் உயிர்ப்பெய்தி ஒளிர்வனவாயின. அவரது வாழ்க்கையின் நிறைவு தனித்தன்மை வாய்ந்தது. அவரது வியக்கத்தக்க அன்பு கட்டுண்டு சம்சார பந்தத்துள் ஆழ்ந்த வனிடத்துச் செலுத்தப் பெற்றது. அவனிடம் பேரிரக்கம் கொண்டார். ஆண்-பெண், செல்வன்—வறியவன் கல்வியறி வுடையோன்—இல்லாதவன் ஆகிய வேறுபாடுகளை அறவே களைந்த வாழ்வு—கடந்த வாழ்வு—அன்னாரது வாழ்வாகும். கீழை—மேலை நாடுகளது நாகரிகங்களை இணைப்பதற்கென்றே அவரது வாழ்வு அமைந்தது. பல நூற்றாண்டுகளாக இந்தியா இத்தகைய நிலையில் சமயங்களை இணைத்ததோர் பெருவாழ்வைக் கண்டிலது'.

ஆல்டுவஸ் ஹக்ஸ்லி என்பவர் அமெரிக்க நாட்டில் பணி புரியும் வேதாந்த சங்கம் ஒன்றில் உறுப்பினராகத் திகழ்ந்தவர். அவர், இராமகிருஷ்ணரது உபதேசங்களின் திரட்டைச் சுட்டிக் கூறுவது: ‘பணிவு, சமயப்பொறை போன்றவற்றைப் பற்றி விரிவான பரந்த கல்வியை நாம் பெறுதற்குரிய’ நூலென்று பாராட்டியுள்ளார். மேலும், இராமகிருஷ்ணரை ‘இம் மண்ணின் உப்பு அனையர்’ என்றும் கூறுகிறார். இராமகிருஷ்ணரது சமய அனுபவத்தில் நாம் அனைத்துச் சமயங்களும் உணர்த்தும் ஒரு பெரிய உண்மையை உணர்கின்றோம். அவரது வாக்கிலேயே நாம் அவ் வுண்மையை உணர்வோம் ‘நான் இந்து சமயம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய சமய நெறிகளைப் பயின்றுள்ளேன். இந்து சமயத்தின் உட்பிரிவுகளின் வெவ்வேறு முறைகளைப் பின் பற்றி ஒழுகியுள்ளேன். ஒரே இறைவனை நோக்கியே வெவ்வேறு நெறிகள் வழிவகைகளை வகுப்பதை நான் அறிகிறேன். ஆதலால் அனைத்து நம்பிக்கைகளையும் ஏற்க வேண்டும்; வெவ்வேறு நெறி களையும் ஒரு முறையேனும் பயிலவேண்டும். நான் எங்குப் பார்த் தாலும் இந்துக்கள், மகமதியர்கள், பிராமணர்கள், வைணவர்கள், இன்னும் பிறரும் சமயத்தின் பெயரால் இகலி நிற்பதைக் காண் கின்றேன்; கிருஷ்ணன் என்று அழைக்கப்பெறுபவரே சிவன் என்றும் அழைக்கப்பெறுகிறார். இறையை, மூல ஆற்றல் என்றும், ஏசுவென்றும், அல்லா என்றும் ஆயிரந்திருநாமம் கொண்டு பரவு வதைக் காண்கின்றேன். குளத்திற்குப் பல படித்துறைகள் உண்டு. ஒரு துறையில் இந்துக்கள் நீரை இறைத்து, அதற்கு ‘ஜலம்’ என்று பெயரிடுகின்றனர். மற்றொரு துறையில் முஸ்லீம்கள் நீரை எடுத்து தமது தோற்பைகளில் நிரப்பி அதற்குப் ‘பாணி’ என்கின்றனர். வேறு ஒரு துறையில் கிறித்தவர்கள் அதற்கு ‘வாட்டர்’ என்கின்றனர். நாம் கிறித்தவர்கள் குறிப்பிடும் ‘வாட்டர்’ ஜலமாகாது என்று சொல்ல இயலுமா? இவ்வாறு சொல்ல முற்படுதல் எள்ளி நகையாடுதற்கிடம் தருமன்றோ! ஆதலால் பரம்பொருள் ஒன்றே; அதைப் பல பெயர்களைக் கொண்டு நாம் அழைக்கிறோம்: தட்ப வெப்ப நிலை, மனப்பாங்கு ஆகிய வற்றால் பெயர்கள் பலவாகின்றன. ஒவ்வொருவரும் தாம் தாம் போற்றும் நெறியையே பின்பற்றட்டும். அவன் மிகு ஆர்வத் துடனும், உண்மையுடனும் இறைவனை அறிய விரும்பினால் அமைதி அவனுக்குக் கிட்டுவதாக! அவன் உறுதியை இறைவனே உணர்வான்.’

இராமகிருஷ்ணர் தமக்கே உரிய எளிய முறையில் கூறியதை நமது இருக்கு வேதம் அன்றே தெளிவாக முழங்கியது. ‘உண்மை ஒன்றே. தூயோர் இவ் உண்மைப் பல பெயர் கொண்டு அழைக் கின்றனர்.’

இதுகாறும் நாம் கண்ட மேற்கோள்கள் இராமகிருஷ்ணரது பெருமையை உணர, அவரது தொண்டின் திறத்தை நன்கு அறியத் துணை நிற்பன. அவர் உணர்த்திய உண்மைகளை நாம் இனிக் காண்போம்.

பரம்பொருளிடம் சேர்க்கும் நெறிகள் பலவாகும். ஆன்மீக வாழ்விற்கே நாம் முதலிடம் தருதல் வேண்டும். இவ்வாறு ஆன்மீக வாழ்வு வாழ முற்பட்டால் ஏனைய நலன்கள் தாமே வந்தெய்தும். ஆன்மீகப் பண்பு எவ்வுயிரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுதலாக மலரும்; தன்னலமற்ற தொண்டாக வெளிப்படும். உண்மையான சமயம் நம்மை இயக்கும் ஓர் ஆற்றலாகும். அது சடங்குகளில் அடங்குவதன்று. அது நமது அகத்தே விளங்கும் ஆற்றலாகும். இவ்வாற்றல் தோல்வி அச்சம் மனமுறிவு போன்றவற்றை வெல்லுவதற்கும் துணையாகும். விவேகானந்தர் கூறியுள்ளதைப் போல சமயத்தின் ஆற்றலை மக்கட்கு உணர்த்திய பெருமை இராமகிருஷ்ணரையே சாரும். பிற சமயத் தலைவர்கள் தாம் கண்ட சமயங்கட்குத் தத்தம் பெயரையே சூட்டினர். அல்லது அவர்கட்குப் பின் வந்தவர்கள் தம் தலைவர்களது பெயரை வைத்தனர். ஆனால், இராமகிருஷ்ணரோ தாம் புதியதொரு சமயத்தை நிறுவியதாகவே கருதவில்லை. எச்சமய உண்மையையும் குலைக்காமல், அவர் இருந்ததற்குக் காரணம் தமது அனுபவத்தில் அனைத்துச் சமயங்களும் என்றென்றும் நின்று நிலவும் உயர்ந்த உண்மையின் கூறுகளே என்று கண்டதாகும். இராமகிருஷ்ணரது சிறந்த உப்தேசங்களுள் சிலவற்றைத் திரட்டி அதற்கு ''இராமகிருஷ்ண உபநிடதம்'' என்று இராஜாஜி பெயர் அமைத்தார். உபநிடதம் என்று சொல்லிற்குரிய பொருள் விரிவடைந்து கொண்டே வந்துள்ளது. சங்கரரது காலத்தில் அறியாமையை அகற்றுவது என்ற பொருளைத் தந்தது. பிரம்ம உணர்வை நல்குவது என்ற பொருளைஉட்படுத்துவதாக அமைந்தது. இராமகிருஷ்ணர் பத்தொன்பதாவது நூற்றுண்டில் வாழ்ந்தவர். மிகப் பழங்காலத்தில் வழங்கிய உபநிடதங்களைப் போன்று, இன்று நமக்கு அத்தகைய உண்மைகளை வழங்கியுள்ளார் என்று இராஜாஜி கருதி அவற்றைத் திரட்டித் தந்துள்ளார். அத் திரட்டிற்கு 'இராம கிருஷ்ண உபநிடதம்' என்றே பெயர் அமைத்தார்.

## சமய அனுபவம் முதன்மையானது

இராமகிருஷ்ணர் சிறந்த உண்மைகள் பொதிந்த கதைகளைப் பயன்படுத்தினுர். இவை நமக்கு எளிதில் அரிய உண்மைகளை உணர்த்துவதோடு அவற்றை நினைவில் இருத்தவும் பயன்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை நாம் அவர் போதித்த உண்மைகளை உணர்வதற்குக் கருதுவோம். பண்டிதர் ஒருவர்,

ஓடத்தில் ஏறி இக் கரையினின்று அக் கரை சேர விரும்புகிருர். ஓடத்தில் ஏறிச் செல்லும்போது பாமரஞகிய ஓடக்காரனைப் பார்த்து அவன் வேதாந்தம், சாங்கியம், மீமாம்சை போன்ற தரிசனங்களைக் கற்றதுண்டா என்று கேட்கிருர். அவன் தாம் அவற்றை அறிந்திலன் என்று கூறிஞன். கடும் புயல் சூழ்கிறது. இப்போது ஓடக்காரன் பண்டிதரை நோக்கித் தான் அவர் அறிந்ததையெல்லாம் தான் அறியான் என்றும், ஆஞல் தனக்கு நீந்தத் தெரியும் என்றும் கூறிஞன். இக் கதையினின்று நாம் அறிவது 'அறிவுகொண்டு தரிசனங்களையெல்லாம் நாம் நுணுகிக் கற்கலாம். ஆஞல் அவற்றின் உண்மையை வாழ்வில் உணராது இருந்தால் பயனிலது' என்பதாம்.

அறிவு ஒன்றே தலைமையுடையதென்கின்றவன் ஒருசமயம் பழத் தோட்டத்திற்குச் சென்ருன். ஆங்குக் கனிந்து தொங்கிய பழங்களைப் பறித்து உண்ணுது தோட்டத்திலுள்ள மரங்களின் கிளைகளையும் குலைகளையும் எண்ண முற்பட்டான். இவனது அறியாமை இரங்கத்தக்கது என்று இராமகிருஷ்ணர் கூறுகிருர். கழுகு உயரப் பறந்தாலும் நிலத்தில் கிடக்கும் மாமிசத் துண்டின் மீதே அதன் பார்வை படியும். அதுபோல புலமையாளர் தமது அறிவுச் சிறகுகள் கொண்டு உயரப்பறந்தாலும் அவர்கள் அற்ப மானவற்றிலேயே தமது கருத்தைச் செலுத்துகின்றனர். சிலர் பாலைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளனர்; வேறுசிலர் பார்த்துள்ளனர். மற்றும் சிலர் சுவைத்துள்ளனர். இங்கு வேண்டுவது பாலை அருந்தி நமது உடல் நலத்தைப் பேணுதலாகும். ஆதலால், சமய அனுப வத்தை நாம் பெற முயல வேண்டும். மரத்தினிடத்து எரியும் ஆற்றல் பொதிந்து விளங்குதலை அறிதல் வேறு. மரத்தை வைத்துத் தீ முட்டி எறித்துச் சமைத்து உண்ணுதல் வேறு என்கிருர். சமய அனுபவம் பெற்று இறைக் காட்சியை நாம் கைவரப் பெற வேண்டும் என்பதே அவர் வற்புறுத்தியதாகும்.

## பரம்பொருள் அல்லது உள்பொருள்

எந்தச் சிக்கல் குறித்தும் இராமகிருஷ்ணர் தாம் முடிவாக எதையும் கொள்கையாக வகுத்துக் கூற விரும்பவில்லை. ஆஞல், நம்மை எதிர்நோக்கி இருக்கும் சிக்கல்களில் அவர் அக்கறை கொள்ளாமல் இல்லை. ஆஞல், தமது கருத்துகளை ஒரு கொள்கை யின் வடிவத்தில் கூற விரும்பவில்லை. உள் பொருளைப்பற்றி அவர் கூறுவது, முழுமையாக உள்பொருளைப் பற்றிக் கருதும் போது அது பல வடிவங்களில் உள்ளதை உணரலாம். இவ் வடி வங்கள் அனைத்தும் உண்மையே. பச்சோந்தியைப் பலர் பார்த் துள்ளனர். ஒவ்வொருவரும் ஒருமுறையே அதனைப் பார்த்

திருத்தல் கூடும். ஒருவர் அதன் நிறம் சிவப்பு என்பர்; மற்ெருருவர் பச்சை என்பர்; பிறிதொருவர் மஞ்சள் என்பர். இவர்களிடையே பச்சோந்தியின் நிறத்தைப்பற்றிய கேள்வி தோன்றியது. இவர்கள் தாம் தாம்கண்டதை வைத்துத் தாம்கூறுவதே சரி என்று வாதிட்டனர். பின்னர் இவர்கள் மரத்தடியில் வசிக்கும் ஒருவனை அடுத்து அதன் நிறம் யாது என்று வினவினர். அப்போது அவன், அவர்கள் கூறும் நிறங்களெல்லாம் ஒருவகையில் பொருத்தமே. என்ருலும் மற்ெருரு வகையில் அவை சரியல்ல என்ருன். பச்சோந்தி எவ் வடிவத்தையும் மேற்கொள்ளும்; சூழ்நிலைக்கு ஏற்ப நிறத்தை ஏற்கும் என்ற உண்மையை அவன் உணர்த்தினுன். இஃதே போல் உள்பொருள், கருதுகின்றவன் அறிவு ஆராய்ச்சிக்கு ஏற்பப் புலனுகின்றது. அனுபவத்தில் அறிபவனுக்கு வேற்றுமைகள் அதிகம் புலனுவதில்லை.

'நிராகாரமான (நிர்க்குண) பிரம்மத்துக்கும் ஸாகாரமான சக்திக்கும் வேற்றுமை ஒன்றுமில்லை. பரமாத்மன் தொழிலொன்றும் செய்யாமலிருப்பதாய் நினைக்கப்படும் போது சுத்தப் பிரம்மம் எனப்படும். தொழிற்படும்போது, ஆக்கல், அளித்தல், அழித்தல் செய்வதாகக் கருதும்போது சக்தி எனப்படும்' என்று இராமகிருஷ்ணர் கூறுகிருர். மேலும், இக் கருத்தையே விளக்கும் போது அவர் கூறுவது: ஈஸ்வரன் ரூபமுடையவன், ரூபமில்லாதவன். எப்படியெனில் ஜலம் உறைந்து பனிக்கட்டியானுல் அதற்கு உருவமுண்டாகிறது. அதே பனிக்கட்டி நீராகக் கரையும் போது உருவம் மறைந்து விடுகிறது. பிரம்மம் தன்னுண்மை நிலையில், சுயரூபமாக விளங்கும்போது உருவமற்றதாகிறது. உலகைப் படைத்து, காத்து, அழிக்கும்போது ஈஸ்வரனுக உருவமுடையதாகிறது. பிரம்மமும் சக்தியும் முற்ெருருமையுடையன. நெருப்பும் எரிகின்ற ஆற்றலும் கதிரவனும் கிரணங்களும், பாலும் வெண்மையும் பிரிவற நிற்பன. இறைவனும் சக்தியும் பிரிப்பின்றி இருப்பன. இறைவன் கொள்கலனுகவும் கொள்ளப்பெறும் பொருளாகவும் ஒருங்கே விளங்குகிருன். வைரமும் அதன் ஒளியும் போன்றது—பிரம்மமும் சக்தியும்; வேறுபாடு நாம் கொள்ளும் நெறியைப் பொறுத்தது.

## மாயை

மாயை என்ற சொல் அன்ருட வழக்கில் இன்று வந்துவிட்டது. ஆனுல், மாயை என்னுஞ் சொல்லைத் தத்துவ ஞானிகள் பயன்படுத்துகின்ற பொருள் வேறு. பொதுவாக மாயையை மயக்கும் ஆற்றல் என்றே கருதுவர். இராமகிருஷ்ணர் மாயையினது ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தார். அவர் தருகின்ற சில விளக்கங்களைக் காண்போம்.

'மாயை குளத்துப் பாசியைப் போன்றது. நாம் அப் பாசியை ஒத்துக்கலாம். ஆனால், விரைவில் மீண்டும் படரும். ஸ்த்ஸங்கம் செய்யும் வரையில் மாயையினது உண்மை நிலை விளங்கும். சத்சங்கம் நீங்கியவுடன் மண்ணுலக ஆசைகள் நம்மைப் பற்றும்'. 'மாயையானது ஈஸ்வரனிடத்தில் நிலைத்து நிற்கினும், ஈஸ்வரன் அதன் வயப்படாது அதற்கு அதீதமாய் இருக்கிறார். நாம் மாயையான இப் பிரபஞ்சத்தில் மயக்குண்டிருக்கிறோம்'. 'மாயையென்னும் திரையே ஈஸ்வரனை நமக்குத் தோன்றவொட்டாமல் மறைத்து வைக்கின்றது. இந்தத் திரை நீங்கும் வரையிலும் பரமாத்மனை நாம் அறிய முடியாது. உதாரணமாக இராமர் இலக்குமணருக்கு இரண்டு மூன்றடிகள் முன் செல்வதாகவும் இவ் விருவருக்கும் நடுவில் சீதாபிராட்டியார் போவதாகவும் வைத்துக் கொள்வோம். இதன்படி இராமரே பரமாத்மன், இலக்குமணரே சீவன், சீதையே மாயை. ஜானகிப் பிராட்டியார் இருவருக்கும் நடுவில் இருக்கும் வரையில் இராமரை இலக்குமணரால் பார்க்க முடியாது. அன்னை சீதா தேவியார் கொஞ்சம் வழிவிட்டு நின்றால்தான் இலக்குமணரை இராமரால் பார்க்க முடியும்'.

'மாயை இருவகைப்படும்: ஒன்று வித்யா மாயை; அது நம்மை ஈஸ்வரனிடத்தில் சேர்ப்பிக்கும். மற்றொன்று அவித்யா மாயை; அது நம்மை ஈஸ்வரனிடத்திலிருந்து பிரிக்கும். வித்தை (வித்யா) விவேகம், வைராக்கியம் என இருவகைப்படும். அவித்தை காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாச்சரியம் என அறுவகைப் படும். இந்த மாயையே 'யான்' 'எனது' என்னும் உணர்ச்சியையுண்டு பண்ணுகிறது. இதுவே நம்மை இப் பொய் யுலகில் பந்தப்படுத்தும் சங்கிலி போன்றது. ஆனால் வித்தை தோன்றும்போது அவித்தை அடியோடு நாசமடைகின்றது. 'உலகனைத்தும் ஒளியைக் கொடுக்கும் சூரியனை நாம் காண முடியாதபடி சிறு மேகமானது மறைக்கின்றது. அதுபோல சர்வ அந்தரியாமியாயும், சர்வ சாட்சி பூதனுயும் விளங்கும் சத்-சித்-ஆனந்த பரம்பொருளை நாம் பார்க்காதபடி துச்சமான மாயையாகிய திரைமறைக்கின்றது.'

மாயையின் இயல்பையும் ஆற்றலையும் மேற்கண்ட மேற்கோள்கள் நமக்கு விளங்குவதோடு, மாயையைக் கடத்தற்கு நாம் இடையறாது இறை அருளை இறைஞ்சி நிற்க வேண்டும் என்ற உண்மையையும் அறிவுறுத்துகிறது. எவ் வுயிரிடத்தும் சமமாய்க் காட்டும் அன்பு கொண்டு நாம் மாயையை வெல்லலாம். எனினும், ஈசுவர அனுக்கிரகமின்றி மாயையை வெல்லுதலரிது.

## பக்தி, கருமம், ஞானம்

இம் மூன்று மார்க்கங்களின் சிறப்பை ஒருங்கே உணர்ந்து நமக்கு உணர்த்தியவர் இராமகிருஷ்ணர். இவற்றுள் எது சிறந்தது என்ற ஆராய்ச்சியில் அவர் ஈடுபடவில்லை. அவர் முழுமையாக எதையும் காணும் காட்சியுடையவர். எந் நெறியிலும் உண்மை காண்பவர். இந் நெறிகளிடையே ஒற்றுமைகாண்பவர். கருமமார்க்கத்தின் ஏற்புடைமையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். எனினும், அம் மார்க்கம் முறையே அன்றி முடிபாகாது என்ற கருத்துடையவர். எம்மார்க்கத்தைப் பின்பற்றினுலும் முடிபு, இறைவனை உணர்தலாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்து. கருமம் அல்லது செயல் எத்துணையளவு தன்னலமற்றதாக அமையினும் அது கருவியே ஆகும் என்னும் கருத்தினையும் வலியுறுத்தினர்.

இறைவனிடத்து நாம் கொள்ளும் அன்பு, ஞானத்திற்கு முதற்படி எனலாம். இறைவனிடத்தில் நாம் மாருத அன்பு பூண்டு விளங்குவோமேயாஞல், அகத் துறவு, நற்செயல் ஞானம் ஆகிய யாவும் தாமே தோன்றும். உலகப் பற்றுக்களினின்று நம்மைக் காக்கும். பெரிய காந்தக் கல் தனது சூழலில் உள்ள அனைத்தையும் ஈர்க்கும். இறையன்பு உலகத் தொடர்புகளால் விளையும் துன்பங்களின்று காக்கும் மருந்து போன்றது என்கிருர். பலாப் பழத்தை நறுக்குகின்ற ஒருவன், தனது கரங்களில் எண்ணெய் பூசிக் கொள்கிருன். முள் அடர்ந்த பாதையில் நடக்க வேண்டியவன் தனது பாதங்களைக் காலணிகள் கொண்டு காத்துக் கொள்கிருன். அதுபோல இறையிடத்து இடையருத பக்தி கொண்டு ஒழுக வேண்டும்· இப்பக்தி அவனை உலகப்பற்றுகள் சூழாவகையில் காக்கும். இறைவனிடத்து முழுமையாகச் சரண் புக வேண்டும். சரண் புகுந்தவனே தன் முனைப்பின்றி தொண்டு செய்ய இயலும். ஆதலால் இறைவனை முன்னிறுத்தி, பின்னரே நற்செயல்களைப் புரிதல் வேண்டும்.

அனுபூதிச் செல்வராக விளங்கிய இராமகிருஷ்ணருக்குப் பக்தி, ஞானம் ஆகிய இவற்றிடையே வேறுபாடு தொடக்க நிலையில் தான் விளங்க இயலும். முடிநிலையில் இவ் வேறுபாடுகள் நீங்குகின்றன. பக்தியும் ஞானமும் ஒருவகையில் ஞானமேயாகும். பக்தியில் பக்தி பக்தனது ஞானமாக விளங்குகின்றது. ஞானத்தில் அறிவானது ஞானமாக அமைகின்றது. பக்தனும் இறையின் பெருமையை எல்லாம் உணர்கின்ற நிலையில் தனது சிறுமையை உணர்கின்ருன். இதுவும் ஞானமே. அன்பையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்கிருர் இராமகிருஷ்ணர். அன்பின்

முதிர்ச்சியையே பக்தி என்கிறோம். அன்பு நம்மைத் தூய்மையாக்கு கிறது. பக்தியைக் குளிர்ச்சி என்றும் அது நிலவைப்போன்று குளிர் விப்பது என்றும், ஞானத்தை வெப்பம் என்றும், கதிரவனைப்போல் காய்வது என்றும் இராமகிருஷ்ணர் கூறுகிறார். மேலும் சில சமயங்களில் நிலவு மறையு முன்னர், கதிரவன் தோன்றிவிடுகிறான் என்று கூறுகிறார். பக்தி முதிர்ந்த நிலையில் ஞானம் தலைப்படு கிறது என்பது இதன் கருத்தாகும்.

பக்தி ஒருமை நோக்குடன் இயங்குதல் வேண்டும். ஏதேனும் ஒரு தெய்வத்தைக் குறித்துப் பக்தி நெறி அமைதல் வேண்டும். பக்தனது உள்ளம் உறுதியுடையதாக இருக்க வேண்டும். உடலின் ஆட்சிகளை வெல்லத்தக்கதாகப் பக்தி அமைதல் நன்று. மூட பக்தியை இராமகிருஷ்ணர் அறவே ஒதுக்கினார். மது வைத் திருந்த பானையைக் கங்கை ஜலம் கொண்டு கழுவினாலும் அது தூய்மை பெறாது. ஒருவன் மிகுந்த பக்தியுடன் கங்கையில் பன் முறை மூழ்கி எழுந்தாலும் அவனது பாவச் செயல்களின் விளைவு களினின்று தப்புதல் இயலாது என்று இராமகிருஷ்ணர் விளக்கு கிறார்.

விவேகம் வைராக்கியம் முதலியன கொண்டு ஒருவன் தன்னை ஞானநெறிக்கு ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். உயர்ந்த பொருளையே—பரம்பொருளையே—நாம் அறிய முற்பட வேண்டும். இங்கே சில விளக்கங்களை அவர் தருதல் மிகவும் பொருத்தமாக உள்ளது. ஈ சுத்தமான பொருளிலும் அமரும். அசுத்தமான பொருளிலும் அமரும். ஆனால், தேனீ மலர்களில்தான் அமரும். காக்கை நீரைப் பார்த்தவிடத்தில் அருந்தும். சாதகப் பட்சி மழை நீருக்காகக் காத்திருக்கும். ஆதலால் உயர்ந்த பொருளையே நாம் அறிய முயல வேண்டும். ஞான மார்க்கத்தை மேற்கொள் கின்றவன் முதலில் தன்னைத் தூயனாக்கிக் கொண்டு, மன வொருமையைப் பயில வேண்டும். குறித்ததொரு நெறியிலேயே மனத்தைச் செலுத்திப் பயின்றால் மனத்தை அடக்குதல் எளிதாகும். உறுதியுடன் மனம் நிலைத்திருந்தால் அதைக் கொண்டு சாதகன் முன்னேற இயலும். ஞானமும், படிநிலைகளிலே நமக்குவெளிப்படும். வெங்காயத்தை உரிக்கும்போது முதலிலேயே சிவப்பு நிறத்தோலை அகற்றுகிறோம். அதன் பின்னர் இளஞ் சிவப்பு நிறமுடைய தோலை நீக்குகிறோம். பிறகுதான் வெண்மை யான பகுதியை நாம் அடைகிறோம். இதேபோன்று, நாம் உருவமுள்ள நிலையில் இறைவனை உபாசிக்கின்றோம். இது தொடக்க நிலை. பின்னர் படிநிலையே உயர்ந்து அருவ நிலையை உணர்கிறோம். இந் நிலை கைவரப்பெற்றவனுக்கு உருவ வழிபாடு தானே நீங்குகிறது. உயர்ந்த ஞானத்திலும் அறிவான்—அறி

பொருள் வேற்றுமை தொடர்ந்து இருக்கும். இவ் வேற்றுமையைக் கடக்க வேண்டும்.

முடிபான நிலையிலும் அறிவு உள்பொருளை அளந்து அறிய இயலும் என்று நினைத்தல் தவருகும். உப்பினுல் செய்யப் பெற்ற பொம்மை கடலின் ஆழத்தைக்காண முயன்று கடலைச் சேர்ந்தது. கடல் நீர் அதன்மீது பட்ட அளவிலே அது கரையலாயிற்று. அது போன்று நமது மதிகொண்டு பரம்பொருளை அளக்க முற்படுதல் பயனில் முயற்சியாகும். புலமையாளரைப் போன்று இராம கிருஷ்ணர் உண்மைகளைப் பற்றிப் பேசவில்லை. ஆனுல், அவர் பெற்றிருந்த அனுபவம் காரணமாகப் பழைய அனுபூதிச் செல்வரது வாய்பாடுகள் உயிர்ப்புப் பெற்றன. சில சிக்கல்கள் குறித்து அவர் உரைத்தவை முடிபான உண்மைகளாகத் தோன்றின.

## தீமை

தீமை உண்மையா? இதன் இருப்பை நாம் ஏற்கலாமா? அல்லது இது பொய்த் தோற்றமா? இறைவனுக்கும் தீமைக்கும் உள்ள தொடர்பு யாது? தீமை உள்ளதெனின் இறைவனின் ஆட்சியில் இருவேறு ஆட்சிகள் நிலவுமா? இது இரட்டை யாட்சியாகாதா? இறைவன் தனது பேராற்றலால் தீமையை ஏன் ஒடுக்குதல் கூடாது? இவ்வாறு கேள்விகளை அடுக்கிக்கொண்டு ஆராய முற்படுதல் ஒருவகையாகும். இவற்றை விடுத்து அனுபவ ஞானத்தால் இராமகிருஷ்ணர் உணர்த்தும் உண்மை மற்ருெரு வகையாகும். பின்னரே விளக்கந் தருவதும், நமக்கு உறுதி பயப்பது மாகும். அவர் தரும் விளக்கம் வருமாறு:

'பாம்பினிடத்து விடம் உள்ளதைப் போல இறைவனிடம் தீமை உள்ளது. நமக்கு அது விடமேயன்றி பாம்பிற்கு விடமாகாது. அது பாம்பினிடத்துச் சுரப்பதாகும். இச் சுரப்பு இலதேல் பாம்பு நலமிழந்துள்ளது என்று கொள்ள வேண்டும். இந்தவிடம் பாம்பைக் கொல்லாது. ஆதலால், தீமை என்பது நமது நோக்கில் அமைவது. இறைவனது பார்வையில் தீமையாகாது. முடிந்த முடிபில் தீமை என்பது இலது. ஆனுல், இவ்வுலகில் தீமை என்பது உண்மையே. நம்மை ஆன்மீக நெறியில் உயர்த்துவதற்குத் தீமை தேவையே ஆகும்.'

## சடங்குகள்

சமய வாழ்வில் சடங்குகள் தேவையா? இவை தேவையற்ற பின் ஒட்டுகளன்ருே? சமயத்தில் சடங்குகள் உமி போன்றன அல்லவா? இராமகிருஷ்ணர், உமியின்றி நெல் முளைக்காது என்று விளக்கிச் சடங்குகள் நமக்கு உண்மை உணரும் வரை தேவை என்கிருர். நாம் நெல்லை வயலில் விதைக்கிருேம். ஆனுல்,

அரிசியையே பக்குவப்படுத்தி உண்கிறோம். ஆதலால் வேள்விகளும் இன்னோரன்ன சடங்குகளும் சமயங்கட்குத் தேவையே. அவை சமயத்தின் வளர்ச்சியில் முன்னர் அமையும் படிநிலைகளாகும் என்று விளக்கினார்.

## திருநூல்கள்

திருநூல்களின் பயன் யாது? வேதங்கள் என்றென்றும் நமக்கு இன்றியமையாதனவா? இவை வியவகார உலகிற்கு உரியன வன்றோ? பாரமார்த்திக நிலையில் இவற்றிற்குப் பயன் உண்டா? இவை பரம்பொருட் காட்சியில் பயனற்றன என்றால் இவற்றிற்குத் தரப்பெற்றுள்ள தலைமையை எவ்வாறு விளக்குதல் கூடும்? இக் கேள்விகட்கும் இராமகிருஷ்ணர் எளிய உவமையின் வாயிலாகத் தமது பதிலைத் தருகிறார். ஒருவனுக்கு முள் தைத்து விடுகிறது. இம் முள்ளைக் களையப் பிறிதொரு முள்ளை நாடுகிறோம். முள்ளை நீக்கியவுடன் இவ்விரு முட்களையும் ஒருங்கே எறிந்து விடுகிறோம். இதேபோன்று பரம்பொருளை உணர்ந்தவன் அறியாமை, அறிவு ஆகிய இரு நிலைகளையும் கடக்கின்றான். ஆதலால் அந் நிலையில், ஞானமும் அறியாமையும் அவித்தை யாகும். உபநிடதங்கள், வேதங்களை அபரவித்தையாகவே கருதுதல் ஈண்டு நினைவில் கொள்ளத்தக்கதாகும். நாரதர் பல்துறைப் புலமை சான்றவர்; பல்கலைச் செல்வர். எனினும், அவரது மனம் அமைதியற்றிருந்தது. அவர் சனத்குமாரரை அடுத்து தெளிவுபெறச் சென்றார். அப்போது சனத்குமாரர் நாரதரது அறிவைப் பெயரளவில் அமைந்த ஒன்றே என்று சுட்டுகிறார். என்றும் அழியாத பிரம்மத்தைப் பற்றிய அறிவே பரவித்தையாகும். இராமகிருஷ்ணர், முடிநிலையில் அறிவும் அறியாமையும் அவித்தையின் பாற்படுவன என்று கூறியது மிகவும் விளக்கமாக அமைகின்றது. ஒருவர் இராமகிருஷ்ணரை நோக்கித் தான் எப்போது விடுதலை பெறுதல் இயலும் என்று கேட்டார். அதற்கு மிகவும் சுருங்கிய ஆனால் ஆழமான பதில் உடன் அவர் இறுத்தார். 'தான்' அல்லது "நான்" அற்றபோது விடுதலை நேரிடும் என்றார். திருவள்ளுவரும் இக் கருத்தை 'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்று அருள்கின்றார். அகங்காரம் மமகாரம் இரண்டும் நீங்க வேண்டும். அகப்பற்றும், புறப்பற்றும் நீங்கினாலொழிய இறைவனை அடைதல் இயலாது. 'யான்', 'எனது' அற்ற இடமே திருவடி என்பர் என்றும் பெரியோர் கூறியுள்ளனர்.

## விக்கிரக வழிபாடு

பிரம்ம சமாஜத்தார் விக்கிரக வழிபாட்டை வன்மையாகக் கண்டித்தனர். புறச் சமயங்களாகிய கிறித்தவமும், இஸ்லாமும்

விக்கிரக வழிபாட்டை ஏற்பதில்லை. இந்து சமயம் இந்த வழிபாட்டிற்கு உரிய இடம் வழங்கியுள்ளது. அனைவரும் உருவ வழிபாட்டை ஏற்க வேண்டுமென்றோ அல்லது தவிர்க்க வேண்டுமென்றோ இந்து சமயம் சொல்லவில்லை. ஒருவன் தனது மனமொருமைக்கும் அமைதிக்கும் துணை நிற்பதாகக் கருதினால் அதனை மேற்கொள்ளலாம். இல்லையேல் தவிர்க்கலாம். விக்கிரக வழிபாடு முறையே தவிர முடிபன்று. இறையையுணர்வதற்கு எது துணையானாலும் அத் துணையை ஏற்க வேண்டும். இதுவே இராமகிருஷ்ணரது முக்கிய உபதேசம்.

## உலகியல் வாழ்க்கை

இராமகிருஷ்ணர் புறத்துறவு பூணவில்லை. அகத்துறவு பூண்டு வாழ்ந்தார். ஓர் அன்பர், தாம் துறவு மேற்கொள்ள மிகவும் விரும்புவதாக இராமகிருஷ்ணரிடம் கூறினார். அப்போது இல் வாழ்க்கை என்பது கோட்டை போன்றது. ஒருவன் கோட்டைக்குள்ளிருந்துகொண்டு தனது பகைவர்களை எதிர்க்கலாம். இவ்வாறு எதிர்த்தல் கோட்டைக்கு வெளியே இருந்து எதிர்த்தலைவிட எளிதாகும். பற்றின்றி வாழ்தல் வேண்டும் என்பது அவர் வலியுறுத்திய உண்மையாகும். கடுந் துறவை அவர் விரும்பவில்லை. என்றாலும் ஆன்மிக முன்னேற்றம் என்பது துறவு மனப்பான்மையை வற்புறுத்துகின்றது. உலகியலில் அழுந்தியுள்ள மனமானது ஈரம் மிகுந்த தீக்குச்சிகளடங்கிய தீப்பெட்டி போன்றதாகும். பெட்டி நெடுங்காலமாகத் தட்பமான இடத்தில் இருந்து வந்தது. ஆதலால் எத்தனை குச்சிகளைப் பயன்படுத்தினாலும் நாம் நெருப்பை மூட்ட இயலாது. மற்றொரு வகையாலும் அவர் அதை விளக்கினார். மனித மனம் மண்ணினால் மூடப்பெற்ற ஊசியனையது. மனம் என்னும் ஊசியைக் காந்தக் கல் ஈர்க்க வேண்டுமானால், அதன்மீது படிந்திருக்கும் தூசியை அகற்ற வேண்டும். மனத்தின்மீது மண் அடுக்குகள் பல படர்ந்துள்ளன. பேராசை, காமம், போன்றவை மனத்தைச் செயலிழக்கும்படி மேலே படிந்து துன்புறுத்துகின்றன.

விவேகமும் வைராக்கியமும் இவ்வுலக மாயையினின்று மீட்சி பெறத் தேவை. இராமகிருஷ்ணர் நாம் எறும்புபோல் வாழ வேண்டும் என்கிறார். எறும்பு மணலை, சர்க்கரையினின்று பிரித்து அறிகிறது. அன்னம் நீரைப் பாலினின்று பிரித்து அருந்துகிறது. கடலில் மீனின் மேனி மிகவும் பளிச்சென்றிருக்கும். மண்ணில் விழுந்தாலும் அதன் மேனியின் பொலிவு குன்றாதிருக்கக் காண்கிறோம். இவ்வாறு உலகிடையே வாழ்ந்தாலும் உலகின்பங்களில் தோயாது, பற்றின்றி உலகக் கடமைகளை ஆற்றிவர வேண்டுமென்பதே இராமகிருஷ்ணர் இல் வாழ்வானுக்கு அருளுவதாகும்.

## அநுபூதிச் செல்வர்

இறையுணர்வு கைவரப் பெறுதலே சமயத்தின் உட்கோளாகவும், ஒருவனது வாழ்க்கையின் குறிக்கோளாகவும் இருத்தல் வேண்டும். இராமகிருஷ்ணர் அன்னை காளியின் ஆலயத்தில் பணிபுரியத் தொடங்கிய நாளிலிருந்து அன்னையின் காட்சி அமைய வேண்டும் என்று மிகவும் அவாவினர். இவ்வவா அவரது பிடரியைப் பிடித்து உந்தியது எனல் வேண்டும். இறைக் காட்சி அவருக்கு அமைந்தது. பின்னர் அக் காட்சியிலேயே திளைக்க விரும்பினர். அக் காட்சி அகலுதல் கூடாது என்பது அவரது வேட்கை. இவ் வேட்கையின் விளைவே அவரைப் பல்வகைச் சாதனங்களை மேற்கொள்ளச் செய்தது. அன்னை காளியிடம் தம்மை முற்றிலும் ஒப்படைத்து அவளருள் செலுத்திய வண்ணம் வாழ்ந்தார். ஒவ்வொரு சமயமும் தாம் புதிய சமய பயிற்சி மேற்கொள்வதன் முன்னர் அன்னை காளியின் அனுமதி பெற்றே மேற்கொண்டார். இறைக் காட்சிகளும், அனுபவங்களும் அவருக்கு மிகவும் முழுமையாகவும் உண்மையாகவும் அமைந்தன. நம்மனோர்க்கு உலக அனுபவம் எத்துணை உண்மையானதோ அத்துணை உண்மை வாய்ந்தது அவருக்கு இறைக் காட்சிகள். ஒரு சமயம் அவர் கூறியது: 'இறைவன் என்னுடன் உரையாடினன்......கங்கையினின்று தோன்றி, ஆலமரத்தை நோக்கி அவன் வரக் கண்டேன். நாங்கள் இருவரும் சிரித்துப் பழகினோம். இச் சிரிப்பு நெடுநேரம் நிலவியது. எனது விரல்களைப் பற்றி மகிழ்ந்தார். பின்னர் பேசினர்......''

அனுபூதிச் செல்வர் குறித்த சில வகைகளிலே தம்மை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டுமென்பதில்லை. ஒரு சிலருக்குத் திடீரென்று அனுபவம் வாய்க்கும்; ஆற்றல் தோன்றும். அளவு கடந்த நிலையில் இது வெளிப்பட்டுப் பரம்பொருளோடு ஒன்றுவிக்கும். வேறு சிலருக்கு அனுபவம் படிப்படியே முதிர்ந்துவரும். நடுநாயகமாக விளங்குவதை நோக்கி முயற்சிகள் யாவும் அமையும். அனுபூதி திடீரென்று அமைந்தாலும் அமையலாம். அல்லது படிப்படியே அமையலாம். ஓர் உவமையைக் கொண்டு இராமகிருஷ்ணர் இதனை விளக்குகிறார்: இரு இருண்ட அறைகள், இவ்விரண்டு அறைகளிலும் ஒரே சமயத்தில் விளக்கை ஏற்றி வைக்கின்றோம். ஓர் அறை நெடுங்காலமாக அடைபட்டுக் கிடந்திருந்தது. மற்றோர் அறை சில மணிநேரம்தான் ஒளியின்றியிருந்தது. ஒளி ஒத்த அளவில் இரு அறைகளிலும் பரவும். அறைகளிலுள்ள இருளைப் பொருத்ததன்று, ஒளி பரவுதல். மற்றோர் உவமையையும் இராமகிருஷ்ணர் தருகிறார். அமிர்தம் தேங்கிக் கிடக்கின்றது. ஒருவன் படிகளில் மெல்ல இறங்கி

அமிர்தத் தேக்கத்தினுள் நுழையலாம். மற்றொருவன் நண்பனால் அங்கே தள்ளப் பெறலாம். பிறிதொருவன் அவ்வமிர்தத் தடாகத்தினுள் குதிக்கலாம். நாம் எவ்வாறு நுழைந்தாலும் அமிர்தத் துளிகள் சில நமது வாயினுள் செல்லுமேயானால் அதுவே இறவாமையை நமக்கு நல்கும்.

அனுபூதி நிலையை எவரும் விளக்க இயலாது. அனுபூதியை அடைந்தவன் அமைதியுறுகிறான். மௌனம் அவனுக்கு இயல்பாக நேர்ந்துவிடும். சில சமயங்களில் இத்தகைய அனுபூதி பெற்றவர்கள் தமது உவகையின் காரணமாகச் சில சொல்லமுற்படலாம். அனுபூதி நிறைவாகப் பெற்றவர்களது நிலையை இராமகிருஷ்ணர் பல உருவகங்களின் வாயிலாக விளக்குகிறார். 'தேனீ மலர்களில் உள்ள தேனை அருந்த முயலும்போது மலர்களைச் சுற்றி வந்து ரீங்காரம் செய்யும். தேனைக் குடிக்கும்போது ரீங்கார ஒலி நின்றுவிடும். அமைதியாகக் குடிக்கும். குடத்தினுள் நீரை முகக்கும்போது ஓசை எழும். நீர் நிரம்பியவுடன் ஓசை நின்றுவிடும். வெண்ணெய் நெருப்பில் உருகும்போது சத்தம் இருக்கும். நீர் சுண்டிய பிறகு சத்தம் இராது.'

அனுபூதியைச் சொற்களில் வடிக்க இயலாது; அனுபூதி பெற்றவர்கள் மௌனம் மேற்கொள்கின்றனர் என்ற இவ்விரண்டு கருத்துகளையும் இராமகிருஷ்ணர் மற்றொரு நீதிக் கதையைக் கொண்டு விளக்குகிறார்: உயரிய சுவர்களால் சூழப்பெற்று ஓரிடம் விளங்குகிறது. பல மனிதர் ஆங்கே திரள்கின்றனர். சுவர்களைத் தாண்டி உள்ளே யாது உள்ளது என்று அறிய அவாவுகின்றனர். ஒருவன் உயரிய சுவரின்மீது ஏறி உள்ளே எட்டிப் பார்க்கிறான். வியப்பில் ஆழ்ந்து உள்ளே குதித்து விடுகிறான். மற்றொருவனும் ஏறிப்பார்த்து முன்னவனைப் போலவே வியந்து குதித்து விடுகிறான். இவனைத் தொடர்ந்து மற்றுஞ் சிலர் ஏறிக் குதிக்கின்றனர். ஏறுகின்ற ஒவ்வொருவனும் அவ்விடத்தை விளக்க முற்படுகின்றான். ஆனால் ஏறியவுடன் வியப்பில் ஆழ்ந்து உள்ளே குதித்து விடுகின்றனரே அன்றி விளக்க எவரும் முற்படவில்லை. இராமலிங்க அடிகள் ஆளுடைய அடிகள் அருள் மாலையினுள் மணிவாசகர் அருளிய வாசகத்தைத் தாம் எண்ணுதொறும் 'காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற ஏமமுறு கற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதாக' இயம்புகிறார். இது இராமலிங்கர் தாம் திருவாசகத்தை அனுபவித்த பாங்கினை எடுத்தியம்புவதாக அமைந்தாலும், இச் சொற்கள் அனுபூதி நிலையை ஒருவாறு விளக்கத் துணை செய்வன. அருணகிரிநாதர் தாம் இறைவனாகிய முருகப்பிரான், 'சும்மா இரு; சொல் அற' என்ற சொல்லப் பெற்ற அந் நிலையிலேயே பொருள் ஒன்றும் அறிந்திலர் என்று கூறுகின்றார். அனுபூதி நிலை பெற்றவர்கட்குப் புற உலகக்

காட்சி நீங்குகிறது. ஆனந்தத்தின் மேலீட்டால் அமைதி ஏற்படுகிறது. அநுபூதி சொல்லொணுததெனினும், சொற்கள் கொண்டு சிலர் சொல்ல முற்பட்டதனுல்தான் நாம் ஒருவாறேனும் அந்நிலையைப் பற்றி அறிகிறோம்.

இராமகிருஷ்ணர் வாழ்ந்த அந் நாளில் சமூகத் தொண்டர் சிலருடன் உரையாடியுள்ளார். 'ஹிந்து தேசபக்தன்' என்னும் பத்திரிகையின் ஆசிரியரான கிறிஸ்தோதாஸ் பால் என்பவருடன் பேசும்போது சமூகத் தொண்டு இறைத்தொண்டின் பகுதியாக அமைய வேண்டும் என்று வற்புறுத்தினுர். 'பசியினுல் வாடும் சிலருக்கு உணவளித்தலும், நோயுற்ற ஒரு சிலருக்கு மருத்துவம் செய்தலும், நல்ல சாலை அமைத்தலும், கிணறு வெட்டுதலும் நற்செயல்களேயாகும். ஆனுல், பிரபஞ்சத்தின் பரப்பை நோக்க இச் செயல்கள் சிறு அளவேயாகும். நாம் எத்துணை நபர்களுக்கு உணவளிக்க இயலும் ? இறைவனே உலகைக் காக்க இயலும் ! முதலில் இறையுண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இறைவனை இடையருது எண்ணி, அவனது அருளை இறைஞ்சி நாம் அவனை உணர வேண்டும். பின்னர் அவனது ஆணையைப் பெற்று, ஆற்றலையும் அவன் தர நாம் பெற்று பிறருக்கு நன்மை செய்ய முற்பட வேண்டும். அகந்தை முதலில் நீங்க வேண்டும். நீங்கினுல் அன்னை நம்மை உலகுக்குப் பணி செய்ய அனுமதிப்பாள்' என்று இராமகிருஷ்ணர் கூறுகிருர்.

அடுத்து சமயத் தொண்டரிடையே இராமகிருஷ்ணர் உரையாடும்போது மற்றோர் உண்மையைப் புலப்படுத்தினுர். பிரம்ம சமாஜத் தலைவரும் பிறரும் தமது சமய உரைகளில் மனிதனது பாவச் செயல்களையே பன்னிப் பன்னிப் பேசினர். மனிதன் பாவியாகப் பிறந்து விட்டான் என்பது அவர்களது முடிபு. ஒருவன் தன்னைப் பாவியாகக் கருதத் தலைப்பட்டு விட்டால் அவனது மனம் பாவச் செயல்களிலேயே உழன்று உழன்று மேலும் மேலும் அவற்றிலேயே ஆழ்ந்து விடுகிறது. இதேபோல் ஒருவன் தான் கட்டுண்ட நிலையை நீள நினைக்க நினைக்க மேலும் கட்டுறுகிறுன். இராமகிருஷ்ணர் இவ்வாறு சமய போதனைகள் நிகழக் கூடாது என்று அறிவுறுத்தினுர். மனிதன் தன்னைப் பலம் பொருந்தியவனுக எண்ணி மனத் திட்பமுடையவனுகக் கருதித் தீய இயல்புகளையும் சிந்தனைகளையும் நீக்கி வெற்றி காண வேண்டும் என்பதே அவரது அறிவுரையாகும். இவ்வறிவுரையை விவேகானந்தர் செம்மையாக நிறைவேற்றினுர்.

பிரம்ம சமாஜத்தினர் இறைவனது பிரபஞ்சப் படைப்பினை வியந்து அவ் வியப்பின் அடிப்படையில் மனிதனை மேலும் அறவாழ்வில் மேன்மையுறச் செய்ய விரும்பினர். கதிரவன், நிலவு,

உடுக்கள், சமுத்திரம் போன்றவற்றைக் கண்டு அவற்றின் ஒளி, பரப்பு முதலியவற்றை வியப்பதனுல் மனிதன் தன்னையே முடிவில் வியப்பவனுகிருன். மகனெருவன் தனது தந்தையை நோக்கி அவருக்கு உள்ள செல்வச் சிறப்பை எல்லாம் எடுத்துச் சொல்வதில்லை. இதே போன்று இறைவனை அவனது படைப்பு வளத்திற்காக நாம் போற்றுகின்றபோது நம்மிடத்துப் பொதிந்து கிடக்கும் செல்வ வேட்கையையே நாம் போற்றுகின்ருேம். நாம் நமது செல்வங்களைப் போற்றுதல் உண்மை. ஆனுல், இறைவனுல் படைத்தவை அவருக்கு எளிமையாக நிகழ்ந்தவையாகும். ஆதலால் அவர் போற்றுதலிலர். நாம் இறைவனது உடைமைகளைப் போற்றுகின்ருேமா ? அல்லது இறைவனையே போற்றுகின்ருேமா? இறைவனைத்தான் போற்றுகின்ருேம். நாம் மிகவும் விரும்புகின்ற நண்பனை நேரே காண விரும்புவோமேயன்றி அவனது இல்லம், பணியாள், தோட்டம் போன்றவற்றை அறிதலிலே காலத்தைக் கழிக்க மாட்டோம்.

கேஷப் சந்திரஸென் போன்ற பிரம்ம சமாஜத் தலைவர்களிடம் இராமகிருஷ்ணர் பேரன்பு கொண்டு பழகினுர். என்ருலும், அவர்களது போதனை முறைகளில் உள்ள குறைகளை அவ்வப்பொழுது சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை. மேற்குறித்தவை, சில. இராமகிருஷ்ணர் தாம் போதித்தவற்றின் சாரத்தை அவர்கட்கு எடுத்துரைத்தார். துறவு மனப்பான்மை, மேற்கொண்ட சாதனத்தை உண்மையுடன் பின்பற்றுதல், இறைவனிடத்து நம்பிக்கை, உலகுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப்பயன் கருதாது ஆற்றுதல், நன்மை தீமை ஆகிய இவற்றை விவேகத்துடன் பிரித்தறிதல் ஆகியவையே இராமகிருஷ்ணரது போதனைகளின் சிறந்த கூறுகளாகும்.

சமயத்தலைவர்களில் பலருக்கு நூலறிவே இருந்ததைக் கண்டு இராமகிருஷ்ணர் கவன்ருர், நூலறிவே இல்லாமல் போனுலும் அதைக் குறைவாகக் கருதற்கில்லை. இவர்களுள் பலருக்குச் சிறந்த ஒழுக்கம் இல்லை. இது மிகவும் வருந்துவதற்குரியதென்று அவர் கருதினுர். காசி நகரத்திற்குச் செல்லாத ஒருவன் அந் நகரத்தின் படவரையை வைத்துக் கொண்டு பேசுதல் சரியன்று. இறைவனைப் பற்றி நேராக அறியாத நிலையில் நாநலம் தோன்ற மேடைப் பேச்சுகள் பேசுவதால் யாது பயன்? மலர் மலர்ந்தவுடன் தேனீக்கள் தாமே அம்மலரைச் சேருகின்றன. தேனீக்களுக்கு அழைப்பு விடுவதில்லை. சமயத் தலைவர்களை நோக்கி இராமகிருஷ்ணர் கூறுவது: 'உங்களை இனிப்புப் பண்டம் போன்று அமைத்துக் கொள்ளுங்கள்; எறும்புகள் தாமே வந்து சேரும். காந்தம் போன்றிருங்கள். இரும்புத் துகள் தாமே வந்துசேரும்' என்று இவ்வுவமைகளால்

சமயத் தலைவர்கள் தம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். ஆதலால், அவர் உலகியல் வாழ்வில் ஈடுபாடு கொண்டு விளங்குபவர்களது சமய உணர்வைத் தூண்டினார். இந்து சமய[சமயப் பேருண்மைகளைத் தமது வாழ்வில்வைத்துச் சோதித்தார். பிற சமயங்களின் அனுபவங்களையும் தாம் பெற்றார். சமயப் பொதுமையை வற்புறுத்தினார். அனைத்துச் சமயங்களும் இறைவனையே நாடுகின்றன என்றார். இதனால் நெறிகள் அனைத்தும் தோழமை கொண்டு விளங்குகின்றன. வேதகாலந்தொட்டு நிலவி வரும் அநுபூதி நெறிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். நமது நாட்டுச் சமய மரபுகளில் ஊன்றியே நின்றார். எனினும், புறச் சமயங்களை வெறுக்காது பழிக்காது அவை உணர்த்தும் உண்மைகளையும் முடிவான இறைக்காட்சிகளையும் உணர்ந்தார். வருங்கால உலகிற்கு வேதாந்த உண்மைகளைப் பரப்பவல்ல சீரிய தலைவர் ஒருவரைத் தமது சீடராகத் தேர்ந்தெடுத்தார்.

இராமகிருஷ்ணர் கல்கத்தாவிற்கு அண்மையில் அமைந்த ஆலயமொன்றில் தமது வாணாளெல்லாம் கழித்தார். செல்வர், வறியர், புலமையிலார், கல்வியறிவில்லாதவர், துறவிகள், இல்லறத்தார், யோகிகள் ஆகிய பல திறத்தாரும் இராமகிருஷ்ணரை அணுகி மன அமைதி பெற்றனர். தமது எளிய, தூய இறை நினைவு மாறாத வாழ்க்கையால் உயரிய சமய அனுபவங்களால் பலதிறத்தாரையும் ஈர்த்தார். விவேகானந்தரைத் தமது சீடராக இவர் பெற்றமையால் அவரது புகழ் நாளும் ஓங்கி வருகின்றது. அவர் அன்று தக்ஷிணேஸ்வரத்தில் ஆற்றிய தொண்டு இன்று உலகு எங்கணும் இராமகிருஷ்ண மடம் நடத்தும் வேதாந்த நிறுவனங்களின் மூலம் சிறந்து வருகின்றது.

# 4. விவேகானந்தர்

## (1863—1902)

விவேகானந்தர் இராமகிருஷ்ணரது சீடர்களுள் தலையாயவர். அவரது ஆன்மீக ஆற்றல் அனைத்தும் அவர் கொடுக்க இவர் பெற்று உலகுக்குத் தொண்டாற்றியவர். இன்றும் இராம கிருஷ்ணரது புகழ் நின்று நிலவுகின்றது என்றால் அதற்குக் காரணம் விவேகானந்தர் ஆற்றிய தொண்டுகளாகும். இந்தியா விலும், உலகு எங்கணும் இராமகிருஷ்ணர் மடங்களும் வேதாந்த சங்கங்களும் நிறுவப்பெற்று அரிய சேவை புரிந்து வருகின்றன. உலக அறிஞர்களைத் தம்பால் ஈர்த்த பெருமை அமெரிக்காவில் உள்ள வேதாந்த சங்கங்களைச் சேரும். ஆல்டுயஸ் ஹக்ஸ்லி, கிரிஸ்டாபர் இஷர்வுட் போன்றவர்கள் இந்து சமயத்தின் நிலையான உண்மைகளைக் கண்டு உலகுக்குப் போதித்துள்ளனர். மடங் களையும் சங்கங்களையும் இராமகிருஷ்ணர் பெயரால் நிறுவி அவற்றைச் செம்மையாக இயங்க வைத்த பெருமையும் விவேகானந்தரைச் சாரும். இவை ஆன்மீகத் தொண்டு மட்டும் ஆற்றுவன அல்ல. நமது நாட்டில் பல தலைநகரங்களில் ஏழை எளியவர்கட்கு மருத்துவ உதவி செய்து வருகின்றன. இயற்கையில் நேரிடுகின்ற நில அதிர்ச்சி, பூகம்பம், பெருவெள்ளம், பஞ்சம், பட்டினி போன்றவை நேரிடும் இடங்களிலெல்லாம் ஆங்கே இராமகிருஷ்ண மடத்தார் உடனே நிவாரணம் அளிக்க விரைந்து செல்கின்ற காட்சியைக் காண்கிறோம். இவ்வாறு உடற் தேவைகளையும் ஆன்மீகத் தேவைகளையும் ஒருங்கே நிறைவு செய்கின்ற பெரிய நிலையமாக இன்று இராமகிருஷ்ண மடத்தின் வளர்ச்சி அமைந்துள்ளது. இவ்வாறு இராமகிருஷ்ண மடத்தார் ஆற்றி வருகின்ற தொண்டுகளால் இந்து சமயம் வாழ்கின்ற சமயமாக நமக்கு விளங்குகின்றது. இந்துக்கள் தமது தேவை கட்காகப் புறச் சமயத்தில் சேருகின்றது பெரிதும் தவிர்க்கப் பெற்றுள்ளது. வேதாந்த உண்மைகள் இம் மடத்தைச் சேர்ந்த தலைவர்களால் உலகு எங்கும் பரப்பப் பெறுகின்றன. இவ்வகை களில் இந்து சமயம் நாடு போற்ற—உலகம் போற்ற—விளங்கு வதற்குக் காரணம் விவேகானந்தர் இராமகிருஷ்ணருக்குச்

சீடராக அமைந்தமையும், அச்சீடர் தமது கடமையை உணர்ந்து உலகிற்குத் தொண்டு ஆற்றியமையும் ஆகும். விவேகானந்தர் மகா சங்கராந்தி தினத்தன்று க்ஷத்திரியக் குடும்பத்தில் பிறந்தார். அவர் ஜனவரி 12, 1863-ல் கல்கத்தாவில் தோன்றினர். இவருக்குப் பெற்ருேர் இட்ட பெயர் நரேந்திரநாத் தத்தாவாகும். பிறகு இராமகிருஷ்ணரை அடுத்து, அவரிடத்து உபதேசம் பெற்று உலகுக்குத் தொண்டாற்றத் தொடங்கியபோது விவேகானந்தர் என்ற பெயரைப் பெற்ருர். இப் பெயரைத் தீட்சா நாமம் எனலாம். அனுபூதிச் செல்வர் இராமகிருஷ்ணர் தமது சீடரிடத்துக் கண்ட பேராற்றலே வியந்து, அவரைத் தமது பின் தோன்றலாகக்கொண் டார். விவேகம் என்பது நிலையுதல் உடையன எவை, நிலையுதல் இல்லாதன எவை, என்பதைப் பிரித்து அறியும் ஆற்றலாகும். இவ்வாறு பிரித்து அறிந்ததோடு அமையாது உலகுக்கும் அவ்வுணர்வைப் பரப்பி பேருவகை கொண்டார். ஆதலால், விவேகத்தினுல் விளேயும் ஆனந்தம் அவர்பால் இயற்கையில் அமைந்திருந்தது. அவ்வுணர்வை அவரது குரு வெளிப்படுத் தினுர். சீடர் அதை உணர்ந்து அதில் திளைத்தார். இவ்வாறு நோக்கும்போது அவருக்கு அமைந்த பெயர் விவேகானந்தர் எத்துணைப் பொருத்தம் என்பது புலனுகும்.

நரேந்திரர் இளமையில் கிளர்ச்சிமிக்கவராக விளங்கினுர். சிரித்தும் மகிழ்ந்தும் இருப்பவர். குத்துச் சண்டை, மல்யுத்தம், நீந்துதல், குதிரைசவாரி செய்தல் போன்ற ஆண்மகனுக்கு உரிய செயல்களில் எல்லாம் தேர்ச்சி மிக்கவராக அவர் விளங்கினுர். இறைவனருளால் அவருக்கு நல்லுடல் வாய்க்கப்பெற்றது. உடற் பயிற்சிகளேயும் அவர் விரும்பிச் செய்து உடல் நலத்தைக் காத் தார். அவர் பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலுங்காலத்து கூர்ந்த மதியினராக இருந்தார். அவரது நுண்மாண் நுழைபுலம் அவரது ஆசிரியர்களால் வியந்து பாராட்டப்பெற்றுள்ளது. அயல் நாட் டைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் தமது நாட்டு மாணவர்களேப் பார்க்கி லும் மேலான மதிநுட்பம் வாய்ந்தவராக நரேந்திரர் விளங்குவ தைப் பாராட்டியுள்ளார். ஜெர்மானிய தேசத்து ஹேஸ்டீ என்று அழைக்கப் பெற்ற அவர் கல்லூரி முதல்வர். அவர் கூறியது'நரேந் திரர் உண்மையிலேயே பேராற்றல் வாய்ந்தவர். நான் பல நாடு களேச் சுற்றி வந்துள்ளேன். இதுகாறும் அத்தகைய ஆற்றல்கள் உள்ள ஓர் இளேஞனே நான் கண்டதில்லே. ஜெர்மானிய நாட்டி லும் மெய்ப்பொருளியல் பயிலும் இளேஞரிடையேயும் கண்டதில்லே. இவ்விளேஞன் வாழ்க்கையில் பெருவெற்றி பெற்று தமது புகழை நிறுவுவான்'' என்று வருமுன் உணர்ந்தார்.

நரேந்திரருக்கு மனவொருமை இயல்பாகவே அமைந்திருந் தது. இவ்வாறு மனத்தை எடுத்த காரியத்தில் ஈடுபடுத்தி அரிய

பல சாதனைகளைப் புரிகின்ற ஆற்றல் அவர்பால் இருந்தது. அவ்வாற்றல் பலரிடத்தும் காணவொண்ணாத சிறப்புடையது. எப்பொருளைப் பற்றியும் தொடர்ந்து சிந்திக்கவல்லவர். பல துறைகளிலும் அவரது அறிவு நாட்டங் கொண்டிருந்தது. மெய்ப்பொருளியலிலும் கவிதையிலும் அவருக்கு ஆர்வம் அதிகம். கவிதையின்பத்தை அவர் வாணாள் முழுமையும் விரும்பி இருந்தார். அவர் பெரிதும் ஈடுபட்ட கவிஞர்கள் வொர்ட்ஸ்வொர்த்-ஷெல்லி என்பவராவர்.

அவரிடத்து அழகுணர்வும் அமைந்திருந்தது. அதனால் அவர் முரட்டுத் தனத்தைப் பலமென்று பிறழ்வாக நினைக்கவில்லை. கருநாடக இசையில் ஈடுபாடுடையவராக இருந்தார். இசைப் பயிற்சியும் பெற்றிருந்தார். சொற்போரில் அடுத்தடுத்து ஈடுபட்டார். பிறருடன் உரையாடுவதில் வல்லவர். இறைவனிடத்துப் பெருகிய அன்பு பூண்டு இருந்தார். தனிமையைப் பெரிதும் விரும்பினார். தியானத்தில் ஆர்வம் கொண்டிருந்தார். தனித்து சூழலைப் புறக்கணித்து வாழ்கின்ற விருப்பம் உடையவராகவும் (சில சமயங்களில்) விளங்கினார்.

அயல் நாட்டு மெய்யறிஞர்களாகிய மில், கான்ட், ஹெகல், ஸ்பென்ஸர் போன்றோரது நூல்களை நரேந்திரர் நன்கு கற்றிருந்தார். ஸ்பென்ஸரது கொள்கைகளின் திறன் ஆய்ந்து தமது கருத்துகளை அவருக்குத் தெரிவித்திருந்தார். நமது நாட்டு, சமய நூல்களாகிய உபநிடதங்கள், பகவத்கீதை முதலியவற்றில் நல்ல தேர்ச்சி அவருக்கு இருந்தது. பௌத்தம், சமணம், கிறித்தவம் முதலிய சமய உண்மைகளை நன்கு அறிந்திருந்தார். தாமஸ் கெம்பிஸ் ஏசுநாதரைப் பின்பற்றி எழுதிய நூலின் பல அதிகாரங்களைத் தமது வங்க மொழியிலே நரேந்திரர் பெயர்த்து எழுதினார். அந் நாளில் இந்தியாவெங்கும் சமய மொழியாக விளங்கிய சமஸ்கிருதத்தையும் நன்கு கற்று அதில் தேர்ச்சி அவர் பெற்றிருந்தார். தமது உரைகளில் பவபூதியையும், காளிதாசரையும் மேற்கோள் காட்டுவதுண்டு. இப் பகுதிகட்கு ஒத்த பகுதிகளை தாந்தே, மில்டன் ஆகியோர் நூல்களிலிருந்து அவர் மேற்கோள் காட்டும்போது அவருக்கு இருந்த சமஸ்கிருத ஆங்கில இலக்கியப் பயிற்சி நன்கு புலனாகும். ஒருசமயம் கல்கத்தாவில் உயிர்க் காட்சிச் சாலையில் உலவும்போது அச் சாலையின் மேற்பார்வையாளரிடம் பண்டைய தற்கால (பரிணாமம்) படிமுறை வளர்ச்சித் தத்துவங்களைப் பற்றி (Evolutionary Theories) விவாதித்துள்ளார். அமெரிக்க நாட்டில் அவர் தங்கியபோது ஹெல்ம், ஹோல்ட்ஸ், கெல்வின் போன்ற பௌதிக அறிஞரிடையே பழகிப் பௌதிக உண்மைகளை விவாதித்துள்ளார். இவ்வாறு

அவரது அறிவு வேட்கை அவரைப் பல துறைகளிலும் ஈடுபடச் செய்தது. அவர் அத்துவித வேதாந்தத்தை ஐயம் திரிபற நன்கு கற்றுத் தேர்ந்தார். சங்கரரது பிரம்ம சூத்திர பாஷ்யத்தைப் பயின்றபோது அவர் காட்டும் அளவைத் திறனை வியந்து பல அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அங்ஙனம் மொழி பெயர்த்த பகுதிகளை மாக்ஸ்முல்லர் என்கின்ற ஜர்மானிய அறிஞருக்கு அனுப்பிவைத்தார். தமது குறிப்பில் காண்ட் என்கின்ற ஜர்மானிய அறிஞரும், சங்கரரும் ஒத்துப் போகின்ற பகுதிகளையும் சுட்டினார். அப்பொழுதுதான் மாக்ஸ்முல்லர் 'கீழை நாடுகளது புனித நூல்கள்' என்ற நூலகளைத் தொடர்ந்து தொகுத்தும் எழுதியும் வந்தார். ஜர்மானிய அறிஞர் எழுதியனவற்றை அம் மூல மொழியிலேயே பயில விரும்பினார். எக் கருத்தையும் துல்லியமாக அறிய விரும்பினார் என்பதும் இதனால் விளங்குகிறது. வேதாந்திகளுள் முடிமணியாக விவேகானந்தர் விளங்குவதாக வில்லியம் ஜேம்ஸ் என்கின்ற அமெரிக்க நாட்டு அறிஞர் பாராட்டியுள்ளார்.

விவேகானந்தர் தமது நூல்களில் பயின்ற நடை அவருக்கிருந்த பல்துறைப் பயிற்சியைப் புலப்படுத்தியது. சில பகுதிகளில் மக்களை இணங்க வைக்கின்ற இனிய நடையைக் காணலாம். வேறு சில பகுதிகளில் அறிவிற்குப் பொருத்தமான நடையைக் காணலாம். இன்னும் சில பகுதிகளில் கம்பீரமான நடை அமையும். ஆனால், எழுத்து பேச்சு யாவற்றிலும் உருவகங்களை நிறைய அவர் பயன்படுத்துவார். விவேகானந்தரது நடையழகில் ஈடுபட்ட ரொமேன் ரோலந்த் கூறுவது: 'விவேகானந்தரது சொற்கள் அருமையான இசையைப் போன்றன; அவரது தொடர்கள் பீத்தோவனை நினைவுபடுத்தும்; சந்தம் ஹாண்டல் கூட்டம் (இராணுவ) நடை பயில்வதைப் போன்றிருக்கும். அவரது வாய்மொழிகள் அவரது நூல் முழுமையும் பரவிக்கிடக்கின்றன. எனக்கும் அவருக்கும் இடையே முப்பது ஆண்டுகள் இடைவெளி உள்ளது. அவரது மொழிகளைப் பயிலும்போது மின்சாரம் உடலைத் தாக்கினால் எவ்வாறிருக்குமோ அத்தகைய உணர்வைப் பெறுகிறேன்.' நரேந்திரருக்கு கல்வி நன்கு அமைந்திருந்தது. மெய்ப்பொருளியல் நூல்களில் ஆழ்ந்த புலமையிருந்தது என்றாலும் அவர் ஒரு சிறிதும் கல்விச் செருக்குக் கொள்ளவில்லை என்பது குறிக்கத்தக்கது. இவருக்கு இரு குறிக்கோள்கள் தலைமையானவை. ஒன்று துறவு, மற்றொன்று வைராக்கியம். இவர் துறவிகளைப் பெரிதும் விரும்பினார். தம்மிடத்து ஒரே ஒரு புதிய துணி இருந்தாலும் அதை விரும்பும் துறவிக்கு ஈந்து உவந்தார்.

விவேகானந்தர் இராமகிருஷ்ணரை அடுத்து அவரை அறிவதற்கு முன்னர் அவர் பிரம்ம சமாஜத்தினரின் கிளையான சாதாரண சமாஜத்தில் ஓர் உறுப்பினராக இருந்தார். அச்

சமாஜம் வகுத்திருந்த தெய்வக் கொள்கை, பக்திச் சூழ்நிலை அவருக்குப் பிடித்திருந்தது. அச் சமாஜம் மேற்கொண்டிருந்த சமுதாயச் சீர்திருத்தங்களில் பங்கேற்றார். சாதிப் பாகுபாடுகள், பல தெய்வ வழிபாடு, விக்கிரக வழிபாடு போன்றவற்றில் அவருக்குப் பிடித்தமில்லை. இவற்றை எதிர்த்த இயக்கங்களில் பங்கு பெற்றார். ஆனால், நரேந்திரரது உள்ளம் இறையனுபவத்தையே நாடியது. ஆதலால், பிரம்ம சமாஜத் தொண்டுகள் அவருக்கு உள்ள நிறைவைத் தரவில்லை.

நரேந்திரர் கல்வி பயிலும்போது அவரது ஆங்கில வகுப்பில் வொர்ட்ஸ்வொர்த் என்கின்ற ஆங்கில கவிஞரது பாடல்களுள் ஒன்றாகிய அனுபூதிப் பாடலை அவரது ஆசிரியர் விளக்க நேர்ந்தது. ஆசிரியர் ஷேஸ்டி அப் பாடலை விளக்கும்போது, அத்தகைய அனுபூதி தூய மனத்திலும் தியானத்திலும் தோன்றுவதாகும் என்றும் கூறினார். தான் அத்தகைய அனுபூதிச் செவ்வரைக் கண்டுள்ளதாகவும் அவர்தான் இராமகிருஷ்ணர் என்றும் குறிப்பிட்டார். இச் செய்தியை நரேந்திரர் கேட்டார். அவரது ஆசிரியரது அறிவுரையின்படி காளி ஆலயத்திற்குச் சென்றார். அனுபூதிச் செல்வரைக் கண்டார். ஆட்பட்டார். நரேந்திரரது வாழ்வு புதிய திருப்பம் கொண்டது. அத் திருப்பத்தால் இந்து சமய வரலாறும் ஒரு திருப்பம் கண்டது.

நரேந்திரர் இராமகிருஷ்ணரைச் சந்தித்த முதன் முறையே அவரைக் கேட்ட கேள்வி, 'நீங்கள் இறைவனைக் கண்டது உண்டா? என்பதாகும். இக் கேள்விக்கு இராமகிருஷ்ணர் 'நான் கண்டுள்ளேன். நான் உன்னை இங்கே காணுவதைவிட இன்னும் பன்மடங்கு உண்மையிலேயே இறைவனைக் காண்கின்றேன்' என்று பதிலிறுத்தார். மேலும் இறைவனை உணர்தல் இயலும் என்றும், இறைவனைக் காண்டல் கூடும் என்றும், அவனுடன் உரையாடுதலும் இயல்வதே என்றும் கூறினார். மக்கள் தம் மனைவி, மக்கட்காக, செல்வம் உடைமைகட்காக, கண்ணீரைப் பெருக்குகின்றனர். இறைவனுக்காக, இறைக் காட்சிக்காகக் கண்ணீர் உகுப்பார் இலரே என்று இராமகிருஷ்ணர் கவலைப்பட்டார். இறைவனைக் காணவில்லையே என்று ஆற்றாமையினால் கண்ணீர் விட்டால் இறைவன் உறுதியாக வெளிப்படுவான் என்றும் அவர் கூறினார். இச் சொற்கள் நரேந்திரரது உள்ளத்தைத் தொட்டன. அவர் இராமகிருஷ்ணரை நோக்கிக் கேள்வி கேட்ட அத்தருணம் தொடங்கி அவரது ஒளி பெருகலாயிற்று.

இரண்டாவது முறையாக நரேந்திரர் இராமகிருஷ்ணரைக் கண்டார். தமது குருநாதரது ஆன்மீக ஆற்றல்களைத் தெளிவாக உணர்வாரானார். அவரது சொற்களிலேயே அவர் பெற்ற அனுபவத்தைக் காண்போம் :

'இராமகிருஷ்ணர் தமக்குள் ஏதோ சொல்லிக் கொண்டே அவரது கண்கள் என்மீது பதிந்தவாறு எனது அருகே வந்தார். புதுமையாக (புதிராக) ஏதேனும் அவர் செய்யக்கூடும் என்று நான் எதிர்பார்த்தேன். கண் இமைக்கும் நேரத்தில் அவர் தனது வலது பாதத்தை எனது உடல்மீது வைத்தார். வைத்தவுடன் என்னுள் புதிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது. நான் அமர்ந்திருந்த அறையினுள் இருந்தன யாவும் சுவர்கள் உட்பட விரைந்து சுழல ஆரம்பித்தன ; பின்னர் சுவடு இல்லாமல் மறைந்தன. பிரபஞ்சம் முழுமையும் எனது தனித்தன்மையும் யாவற்றையும் தன்னுள் அடக்கும் புதிரான ஓர் வெறுமை, அல்லது சூனியத்துள் மறையத் தொடங்கின. நான் மிகவும் அஞ்சினேன். மரணத்தை எதிர் நோக்கி இருப்பதுபோல் எண்ணினேன். என்னை நான் கட்டுப் படுத்திக் கொள்ள இயலவில்லை. நான் அரற்றினேன். அவரை நோக்கி, 'யாது செய்கிறீர்கள். எனது பெற்றோர் வீட்டினில் உள்ளனரே' என்று கூறினேன். இதைக் கேட்டு இராமகிருஷ்ணர் உரக்கச் சிரித்தார். எனது மார்பினைத் தட்டி, சரி இப்போது அமைதி பெறட்டும் என்றார். யாவும் உரிய நேரத்தில் நிகழும் என்றார். இந்தச் சொற்களை அவர் சொன்ன அளவிலேயே எனது புதிய அனுபவம் மறைந்தது. நான் மீண்டும் எனது பழைய நிலைக்கு வந்தேன். அறையும் பிறவும் முன்னிருந்தது போல் விளங்கின. இந் நிகழ்ச்சிகள் மிக விரைந்து நிகழ்ந்தன. ஆனால் எனது உள்ளத்தில் அவை விளைத்த புரட்சியோ பெரிது.''

இவ் விரண்டாவது காட்சியே நரேந்திரரை விவேகானந்த வராக ஆக்கியது. ஏறக்குறைய ஆறாண்டுகள் இவர் தமது குருநாதராகிய இராமகிருஷ்ணரோடு பழகியிருப்பார். கிழமை தோறும் அவரைக் கண்டார். சில நாள்கள் அவருடன் தங்கினார். பழகப் பழக அவரது தொடர்பின் காரணத்தால் விவேகானந் தரது அக ஒளி பெருகலாயிற்று. ஒளியின் பெருக்கம் நிறைவுறும் நாளில் இராமகிருஷ்ணர் அவரைத் தமது பின்தோன்றலாக ஏற்றார். விவேகானந்தர் தொடக்கத்தில் அவரைக் குருவாக ஏற்பதில் சிறிது தயங்கினார். தமது குருவின் கருத்துகள் சில வற்றை எள்ளி நகையாடினார். ஆனால், தாம் மேற்கொண்டு இருந்த பிரம்ம சமாஜம் காந்தம்போல் பிறரை ஏற்கத் தகுந்த தலைவர்களைப் பெறவில்லை. இதுகாறும் விவேகானந்தர் அறிவு உலகத்தில் பயின்று வந்தார். இனி, அவர் ஆன்மிக உலகத்தில் பயில வேண்டி நேர்ந்தது. அவர் தத்துவ சாத்திரங்களை, குறிப் பாக வேதாந்தத்தைப் படித்திருந்தார். அவர் தற்போது ஆன்மீக அனுபவத்தைப் பெற விரும்பினார். வேதாந்தம் என்பது இத் தகைய அனுபவத்தின் விளக்கமேயாகும். விவேகானந்தர் தமது குருவினிடத்துப் பெற்ற அனுபவமே அவரை உலகப் புகழ் பெறு

மாறு செய்தது. இவ்வனுபவம் வாய்க்காதிருக்குமாஞல், அவர் ஒரு சிறந்த பேராசியராக விளங்கியிருக்கலாம். இராமகிருஷ்ணர் தமது சீடரை உலகப் பணிக்காக ஆயத்தம் செய்தார். இராமகிருஷ்ணர் 1886 ஆகஸ்டு மாதம் மறைந்தார். மறைவிற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் விவேகானந்தரை அழைத்தார், 'நான் இன்று உனக்கு என்னிடம் உள்ள அனைத்தையும் தந்து விட்டேன். நான் காசில்லாத ஏழைபோன்றவனுகியுள்ளேன். நான் உன்னிடம் செலுத்தியுள்ள பேராற்றல் காரணமாக உலகில் அரிய சாதனைகள் பல சாதிப்பாய் ! அச் சாதனைகள் நிறைவேறிய பிறகே நீ எங்கிருந்து வந்தாயோ ஆங்குத் திரும்புவாய்' என்று கூறினுர்.

இராமகிருஷ்ணரது சமயம் செயலுக்கு உகந்தது ; நம்மைச் செயற்படுத்துவது; இச் சமயம் இந்து சமயத்தில் வேரூன்றி உள்ளது. என்ருலும், காலத்திற்கு ஏற்ப கொள்கைகளையும், விவாதங்களையும் சுருதிகளின் விளக்கங்களையும் தவிர்த்து செயல் நிலையையே வற்புறுத்தியது. அந் நாளில் இந்து தன்னை சமயச் சடங்குகளில் ஈடுபடுத்தி அவற்றின் உள்பொருளை மறக்கநேர்ந்தது. அல்லது வறட்டு வாதங்களில் ஈடுபட நேர்ந்தது. விவேகானந்தர் தமது குருவின் பெயரால், அவரது ஆணையை மேற்கொண்டு இந்து சமயத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டினுர். துறவி, பால் என்பவர் கிறித்தவ சமயத்திற்கு ஆற்றிய தொண்டினைப் போன்றது விவேகானந்தரின் தொண்டு. மாக்ஸ்முல்லர், கீழை நாட்டுத் திருநூல்களை மொழிபெயர்த்த காலம் அதுவாகும். விவேகானந்தர் மாக்ஸ்முல்லரை நேரில் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார். அவரை அந்நாளைய சாயனுச்சாரியார் என்று வியந்து பாராட்டினுர். ஆதலால் விவேகானந்தர் தமது சீரிய பணியைத் தொடங்கும் போது இந்திய ஆன்மீக மரபு உயிர்ப்புடனும் வலிவுடனும் பொலிவுடனும் விளங்கியது. இச் சூழ்நிலை விவேகானந்தரது பணிகட்குப் பெரிதும் துணைபுரிந்தது. இராமகிருஷ்ணரது மறைவிற்குப் பிறகு அவரது சீடர்களை விவேகானந்தர் உடன்வைத்துக் கொண்டு தம் குரு நாதரது வாழ்க்கையின் உட்பொருளை விளக்கினுர். சீடர்கள் ஆர்வத்தின் காரணமாக யாவற்றையும் துறந்து ஒருங்கு கூடினர். பதினைந்து துறவிகள், சிதைந்த ஓர் இல்லத்தில் வதிந்தனர். இவர்கள் பலவித துன்பங்களுக்கு உள்ளாயினர். போதிய உணவின்றி உடையின்றி வாடினர். விவேகானந்தரது தளராத உறுதியும் ஆர்வமும் அவர்களனைவரையும் இணைத்தன. சீரிய தலைமைப் பண்புகள் விவேகானந்தரிடம் விளங்கின. தமது குருநாதரிடம் கொண்டிருந்த மதிப்பும் அன்பும் அவரை இடையருது ஊக்கின. தம் குருவின் பொதுமை வாய்ந்த நற்செய்தியினை உலகு எங்கும் பரப்பும் ஆர்வம் அவரிடம் மிகக் கூர்ந்து விளங்கியது. தமது பெயரைப் பலமுறை மாற்றிக் கொண்டார். தாம்

இன்னாரெனப் பிறர் அறிதல் ஆகாது என்பது அவரது விருப்பம். இரண்டு ஆண்டுகள் இவ்வாறு சீடர்களிடையே கழிந்தன. பின்னர் நாடெங்கும் சுற்றிவரப் புறப்பட்டார். இவ்வாழ்க்கையைப் பரிவிராஜக வாழ்க்கை என்று குறிப்பிடுவார்கள். ஏறக்குறைய ஐந்தாண்டுகள் கால்நடையாகவே இந்தியா முழுமையும் அவர் சுற்றியுள்ளார். தனித்துப் பாலைவனங்களிலும் கானகங்களிலும் திரிந்தார். அவரது வாழ்க்கை உண்மைத் துறவியின் வாழ்க்கையாக அமைந்தது. அவரது அனுபவங்கள் மாறி மாறி அமைந்தன. ஒருநாள் எங்கோ ஒரு கிராமத்தில் தமது உணவை பிட்சையாக ஏற்றார். மறுநாள் அரசரது விருந்தினராக அமைந்தார். எண்ணிறைந்த இந்தியரது வறுமையைக் கண்கூடாகக் கண்டார். அடுத்தநாள் அரசிளங் குமரரது சுகபோக வாழ்க்கையைப் பிரித்தார். இந்தியாவெங்கும் சுற்றிய காரணத்தால் பாரதத்தின் தனிச்சிறப்புகள் அவருக்குப் புலனாயின. பாரதம் சாதிகளால் இனங்களால், உட்பிரிவுகளால் பிரிந்துள்ளது போல் தோன்றினும், பாரதமக்களிடையே நிலவிய ஒருமைப்பாட்டை உணர்ந்தார். மக்களிடத்து விளங்கிய ஆழ்ந்த சமயப் பற்றையும் அறிந்தார். மக்களிடையே மனவுறுதியின்மையை அறிந்தார். அவர்களது வன்மையான கூறுகளையும் உணர்ந்தார். இத்தகைய அனுபவங்கள் அவருக்குப் பெரிதும் பின்னாளில் துணை நின்றன. மக்கள் அறியாமை, மூட நம்பிக்கைகள், வறுமை ஆகியவை அவரது உள்ளத்தை மிகவும் உருக்கின. மகளிர்க்குச் சமுதாயத்தில் உரிய இடம் தரப் பெறவில்லை. பெரும்பாலும் மக்கள் சோர்ந்து இருந்தனர். இவற்றைக் கண்ட விவேகானந்தர் தமது வருங்காலத் திட்டங்களை மனத்தில் உருவாக்கினார். ஆண்கள் வலுப்பெற வேண்டும் என்று விரும்பினார். மனிதனை மனிதனுக்கும் சமயம் காண விழைந்தார். இதற்கேற்ற கல்வியைத் தர நினைத்தார். மக்கள் அச்சமிகுந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பாரதியார் சொன்னதுபோல் மக்கள் அஞ்சி அஞ்சி செத்தனர்; அவர் அஞ்சாத பொருள் அவனியில் இல்லை எனலாம். மக்களுக்குத் தைரிய மூட்டி அவர்களது அச்சத்தை அகற்ற விவேகானந்தர் விரும்பினார். மக்கள் தமது தாழ்வு மனப்பான்மையை அகற்ற வேண்டும். அவர் கூறியது: 'எதைக்கண்டும் அஞ்சாதீர்கள். அச்சமே மக்கள் படுந்துன்பங்கட்குக் காரணம், அச்சமே மூட நம்பிக்கைகளுள் பெரியது ஆகும்.' அச்சமின்மையே விண்ணுலகை உடன் ஈண்டு கொணரும். அவர் தமது சமயத்தைப் பலம் பொருந்தியதாக—ஆன்மீக நலஞ்சான்றதாக—அமைக்க எண்ணினார். மக்கள் எஃகு போன்ற நரம்புகளையும் திண்ணிய உள்ளங்களையும் பெறத்தக்க சமயமாக அமைக்க எண்ணினார். 'பலமே நன்மை. மன உறுதியின்மையே,

தளர்வே பாவம் என்று முழங்கினர். வரையறை இல்லாத பலமே சமயமாகும் என்பது அவர் கொண்ட கருத்தாகும்.

விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு வந்து சேர்ந்தார். இவ்விடம் சேர்ந்தது, அவரது பரிவிராஜக வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைத் தந்தது. ஆங்குக் கோயிலில் உள்ள கன்னியா குமரியை உடல் நிலந்தோய விழுந்து வணங்கினர். பின்னர் அக் கோயிலுக்கு அருகில் இருந்த கடல்சூழ்ந்த பாறைக்கு நீந்திச் சென்றார். அப்பாறையில் அமர்ந்து தியானித்தார். ஆழ்ந்த சிந்தனையில் வருங்காலம் யாவற்றையும் நீள நினைந்தார். இந்தியாவின் பழம் பெருமையை எவ்வாறு மீட்பது என்று சிந்தித்தார். பின்னர் அவர் தாம் அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதமொன்றில் தாம் குமரிமுனையில் சிந்தித்ததைக் குறிக்கின்றார்.

'இந்தியாவின் கடைசியான பாறையின்மீது அமர்ந்து குமரி அன்னையின் முன்னர் நான் ஒரு திட்டம் தீட்டினேன். நாங்கள் சந்நியாசிகள் பலர். நாடெங்கும் திரிந்து, மக்களுக்குப் புலன் கடந்த வாய்மைகளைப் போதித்து வருகின்றோம். இவையெல்லாம் பைத்தியமாகும். நமது குரு (இராமகிருஷ்ணர்) 'வாடிய வயிறு சமயவாழ்விற்கு ஏற்றதன்று' என்று சொன்னார் அன்றோ' இவ்வேழை மக்கள் விலங்கு வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்றால், அதற்கு அறியாமையே காரணம். பற்றில்லாத சந்நியாசிகள் மக்களுக்கு நலம் செய்யக் கருதுவோர் கிராமந்தோறும் சென்று கல்வி பரப்பினால் என்ன ? அவர்களது நிலையை உயர்த்தப் பாடுபட்டால் நன்றாகாதா ? இப் போதனையும் நற்செயலும் சண்டாளன் வரைக்கும் எட்டுதல் வேண்டும். வாய்ப்போதனை மூலமும் படவுரைகளின் மூலமும் புகைப்படக் கருவிகளின் மூலமும் இன்னோரன்ன துணைக் கருவிகள் மூலமும் நாளடைவில் மக்கட்கு நன்மை செய்யலாம் அல்லவா ? இந் நாட்டு மக்களாகிய நாம் நமது தனித்தன்மையை இழந்து விட்டோம். இதுவே இன்றைக்கு உள்ள அவல நிலைக்கு மூலகாரணமாகும். நாம் நமது மக்களை அணுகி அவர்கள் இழந்ததை மீட்டுத்தர வேண்டும். பாமர மக்களின் நிலையை உயர்த்த வேண்டும்.''

இவ்வாறு அவர் தீட்டிய திட்டமே பின்னே அவரது உரைகளில் விளக்கம் பெற்றது. செயல் திட்டங்களாக உருப்பெற்றன. கன்னியாகுமரியில் அவர் பூண்ட உறுதி, அவரை நாட்டுப்பற்று மிக்க துறவியாக்கியது. அவர் போதித்த அதேசமயத்தில் இந்தியமக்களது நிலையினை உயர்த்த வேண்டும் என்றும் பெரும்பங்கு கொண்டார். குமரி முனையில்தான் தமது குருநாதர் உணர்த்தியதைப் பூரணமாக உணர்ந்தார். தமது வாழ்நாட் பணியினையும் தேர்ந்தார்.

குமரி முனையினின்று சென்னை திரும்பினார். பலர் அவருக்குச் சீடராயினர். அவர் அமெரிக்கப் பயணம் மேற்கொள்வதற்கு ஆயத்தமானார். அச் செலவிற்கு வேண்டிய தொகையைப் பல அன்பர்களின் மூலம் வசூலித்தார். அமெரிக்காவில் கூடிய உலகச் சமயப் பேரவையில் பங்கு கொண்டார். அவர் ஆங்கு முதலில் ஆற்றிய உரை சுருங்கியதெனினும், தமது உரையின் திட்பத்தால், அவ்வுரை அமைந்த நடையழகால், கருத்தால் அனைவரது உள்ளத்தையும் தொடக்கத்திலேயே ஈர்த்தார். அவர் கூறியது 'நாங்கள் (இந்தியர்)பொதுவாகச் சமயப் பொறையை விரும்புவதோடு அல்லாது சமயங்கள் அனைத்தும் உண்மையே என்றும் ஏற்கிறோம். சமயப் பகையினால் துரத்தப்பெற்றோருக்குப் புகலிடம் தந்த நாட்டினின்று நான் வந்துள்ளேன்'என்று தமது நாட்டின் சமயப் பொறை மிகுந்த நிலையினை நன்கு எடுத்து இயம்பினார். 'அன்று காலை ஒலித்த மணி, சமயப் பகைக்குச் சாவுமணியாகட்டும். பேனாவின் மூலமும், வாள் மூலமும் சமயப் பகை இனி நேராதிருக்கட்டும்' என்றார். 'அனைத்து மக்களும் ஒரே குறிக்கோள் நோக்கிச் செல்லட்டும்' என்று தமது உரையை அன்று முடித்தார். சமயங்களின் ஒருமையை உணர்ந்த இந்துவாதலால் வீரமிக்க, காருண்ய மிக்க உரையை அவர் நிகழ்த்த இயன்றது.

அமெரிக்க நாட்டில் அவர் தங்கியபோது அவர், வேதாந்த உண்மைகளை எடுத்துப் பல அவைகளில் சொன்னார். கீழை நாடுகளில் அன்று தேவையானது சமயமன்று என்று எடுத்துக்கூறி அவர்கட்கு உணவே தேவை என்றார். பசியால் வாடுகின்றவனுக்குத் தத்துவம் தருவது இழுக்காகும் என்றார். கிறித்தவப் பாதிரிமார்கள் உயிர் உடலில் ஒன்றும்வகையில் முதலில் பணி புரிய வேண்டும் என்றார். சமய ஒருமை என்பதை எவ்வாறு அடைதல் கூடும்? சமயங்களுள் ஏதேனும் ஒன்று வெற்றி பெற பிறசமயங்கள் அழிந்து போதலால் சமய ஒருமை நிலவாது. சமயங்கள் ஒவ்வொன்றும் பிற சமயங்களின் தலையாய உண்மைகளைப் படித்தறிந்து தனது சமயத்தோடு இயைபுபடுத்திக் காண வேண்டும். இவ்வாறு இயைபு காண முற்படும்போது எச் சமயமும் தமது தனித் தன்மையை இழக்காமல் காக்க வேண்டும். மூன்று ஆண்டுகள் அமெரிக்காவில் விவேகானந்தர் தங்கினார். பிப்ரவரி 1896-ல் வேதாந்த சங்கமொன்றை நியூயார்க் என்ற இடத்தில் நிறுவினார். இது சமயச் சார்பற்ற நிறுவனமாகத் தோற்றுவிக்கப் பட்டது. கருமயோகம், பக்தியோகம் ஞானயோகம், இராஜயோகம் ஆகியவற்றைப் பற்றிச் சொற்பொழிவுகளாற்றினார். விவேகானந்தர் இவ் யோகங்களைப்பற்றி ஆற்றிய உரைகளைச் சிறிது காண்போம்.

## பக்தி யோகம்

பரம்பொருளினேடு ஒன்றுவதற்கு முறையான பக்தி நெறியினை மேற்கொள்ளுதலே பக்தியோகம் என்று அவர் வரையறுத்துக் கொண்டார். பக்தியோகம் தொடக்க நிலையில் பக்தனுக்கு இறைவனது பெருமையைப் போதிக்கின்றது. மக்கள் பல திறத்தனர். உணர்ச்சிக் கூறுகள் மிகுந்த ஆளுமையுடையவர்கள் பக்தி நெறியினை மேற்கொள்ளலாம் சிந்தனை முறையை ஞான மார்க்கத்தை மேற்கொள்ள இயலாதவர்கட்கு இந் நெறியே சிறந்தது. புனித நூல்களைப் படிக்க இயலாதவர்கள்—யோகப் பயிற்சி முறைகளைப் பயில்வதற்குரிய ஆற்றல் இல்லாதவர்கள்—நுட்பமான தருக்க முறைகளைப் பின்பற்ற இயலாதவர்கள்—பக்தி நெறியினை மேற்கொள்ளலாம்.

பக்தி நெறியினைப் பின்பற்றுபவர்கள் உணவில் தூய்மைக் கொள்ள வேண்டும். பற்றுகளினின்று நீங்க வேண்டும். சமய அனுட்டானங்களைப் பிறழாமல் செய்தல் வேண்டும். பிறருக்கு நன்மை புரிதல் வேண்டும். எண்ணத்தில், சொல்லில், செயலில் தூய்மையைக் காக்க வேண்டும். எப்போதும் முகமலர்ச்சியுடன் ஒழுக வேண்டும்.

பக்தி நெறியில் இரு நிலைகள் உண்டு. ஒன்று பக்தன் தன்னை ஆயத்தமாக்கிக் கொள்ளுதல். மற்ருென்று பராபக்திக்கு—மேலான இறையன்பிற்கு—ஆயத்தம் செய்து கொளல். இவ்விரண்டும் பக்தனுக்குத் தேவை. மேற்குறித்த உணவு நெறி முதலியன பக்தனை ஆயத்தம் செய்யும். பின்னர் இறைவனிடத்தில் முறுகிய காதல் அவனிடத்து எழும்.

தக்க குருவை நாடி உபதேசம் பெற்று முறையான பக்தி நெறியில் நிற்கவேண்டும். குருவின் மூலமே சீடன் தனக்கு வேண்டிய ஒளி, அறிவு, யாவையும் பெறுகிருன். பின்னர் குரு உணர்த்திய உண்மையினைச் சீடன் தனது வாழ்வில் உணர்கின்ருன். குரு தன்னை உணர்ந்தவராக இருக்க வேண்டும். இராம கிருஷ்ணரைப் போன்ற குரு அமைதல் அருமையாகும். சங்கரர் தமது சதசுலோகியில் உயர்வான குரு எத்தன்மையராவார் என்று நன்கு விளக்குகிருர். இரசவாதம் செய்பவனைவிட உயர்ந்தவன் குருவென்று சங்கரர் கூறுகிருர். இரசவாதி (பொன் மாற்றுச் சித்தன்) சாதாரண உலோகத்தைப் பொன்மயமாக ஆக்குவான். ஆனல், அவ் உலோகத்திற்கு அவ்வாறு மாற்றுகின்ற ஆற்றலை உண்டாக்குதல் இயலாது. ஆனல், உண்மையான குரு தமது சீடனுக்கு இவ்வாறு மாற்றுகின்ற தத்துவத்தையும் போதித்து ஆற்றலையும் ஒருங்கே வழங்குகின்ருர். இதனல் இரசவாதியைவிட மேலானவர், குரு ஆவார். இராமகிருஷ்ணர் இத்தகைய உண்மை

யான உயர்ந்த குருவாக விளங்கினுர். தமது சீடருக்குத் தாம் பெற்றிருந்த ஆற்றலையெல்லாம் வழங்கியதோடு, மற்றையோரும் அச் சீடரால் அத்தகைய ஆற்றல்கள் பெறுகின்ற வகை செய்தார்.

விக்ரக வழிபாடு, பக்தனுக்குத் தொடக்க நிலையில் தேவை. பின்னர் இத்தகைய புற உதவிகளின்றி அவன் மனவொருமை பெறுதல் கூடும். விவேகானதர் கூறுவது: 'விக்கிரகங்கள் அல்லது ஆலயங்கள் அல்லது திருநூல்கள் முதலியன ஆன்மீக வாழ்வில் குழந்தைப் பருவத்தில் விளங்குவோருக்கு ஆதாரங்கள் ஆகும். உதவி செய்வன. அவன் முன்னேறுகின்றுன். பின்னர் பக்தன் தனது பக்தியில், முதிர்ச்சி அடைந்த பிறகு ஆலயங்கள் சென்று இறைவனைக் காண்பதில்லை. அவன் இறைவனைக் காணுத இடமே கிடையாது. ஆலயத்தின் உள்ளும் புறமும் இறைவனைக் காண்கின்றுன். தீயோனது தீமையிலும், துறவின் புனிதத் தன்மையிலும் இறைவனை பக்தன் காண்கின்றுன். ஏனெனில் தனது இதயத்தில் இறைவன் புகழோடு வீற்றிருக்க அவன் காண்பதால் இறைவனைப் பெருமை பொருந்தியவனுக—அணையாத விளக்காக— அன்பாக—என்றும் ஒளிர்வதாக—எங்கும் நிறைந்ததாக—இறையைக் காண்கின்றுன்.

இத்தகைய பக்தனுக்குக் கட்டுகள் இல்லை; பந்தங்கள் இல்லை. தெய்வீக அருள் வாய்க்கப் பெற்றிருப்பதால், அவன் பந்தங்களினின்று நீங்கி விடுதலை பெற்றவனுக விளங்குகின்றுன். இவனிடத்து இறையன்பு பூரணமாக விளங்குகின்றது. இவனுக்குத் துறவு இயல்பாகவே அமைகிறது. இறைவனிடத்தில் சரண் புகுந்து வாழ்க்கையை நடத்துகின்றுர். இறையன்பைத் தவிர வேறு எதையும் இவன் அறியான். உயர்ந்த அன்பை எவ்வாறு இயக்குவது என்றும் எவ்வாறு உயர்ந்த குறிக்கோளிற்காக அதை நெறிப்படுத்துவதென்றும் பக்தியோகம் நன்கு விளக்குகிறது. இறையல்லாத எப் பொருளிலும் பற்று வையாமையும், இறையிடத்தே மிகுந்த அன்பு வைத்தலுமே பக்தி யோகத்தின் தனிச் சிறப்பு ஆகும். ஹரி அல்லது இறைவன் எவ்வுயிரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுதல் பக்தியோகமாகும். இராமன் அல்லது இறைவன் பக்தனது உள்ளத்தில் குடிகொண்ட பிறகு பற்றுகள் எவற்றிற்கும் ஆங்கு இடமில்லை. இருளும் ஒளியும் சேர்ந்து இரா. இதுபோன்று பற்றுகளனைத்தும் இறைப் பற்றின்முன் நில்லா. அவை ஓடிப்போம்.

பக்தன் இறையோடு ஒன்றுதலைக் கூட விரும்புவதில்லை. இறைவன் திருமுன் அமர்ந்து அவனது அனந்த கல்யாண குணநல வைபவங்களை இடையருது அனுபவித்துக் கொண்டிருந்தால்

போதும் என்று நினைக்கின்றான். இல்லையேல் அவனுக்குத் தொண்டு உகக்கின்றார். எற்றைக்கும், ஏழேழ் பிறவிகட்கும் இறைவனுக்கே ஆட்பட்டு அடிமையாக விளங்கி தொழும்பு பூண்டு, அவனடி பணிந்து குற்றேவல் செய்யும் விருப்பினனாக பக்தன் விளங்குகிறான். பக்தன் தான் இடையறாத இறையின்பம் துய்க்க வேண்டி இருமை நிலையை விரும்புகின்றான். அவன் பக்தி செய்பவன், இறைவன் அவனது அயரா அன்பை ஏற்கின்றவன். பக்தனும் இறையை நோக்கி நெருங்குகிறான். இறைவனும் இவனை நோக்கி நெருங்குகிறான். அவன் கொள்ளும் பேரின் பத்துள் பெருகிய அன்பில் இறையோடு ஒன்றி விடுகிறான்.

## கரும யோகம்

இந்த யோகம் கருமத்தை, செயலை வற்புறுத்துகின்றது அறச் செயல்களின் மூலம் கருமம் செய்பவன் இறைவனோடு ஒன்ற விரும்புகிறான். பற்றின்றி செயல்புரிதல் வேண்டும் என்பது கரும நெறியாகும். உலகில் கடமைகளைப் புரியும்போது பற்றின்றி ஆற்ற வேண்டும் என்பதுதான் இந் நெறியின் உட்கோளாகும்.

இருவகை நெறிகள் உண்டு. ஒன்று பிரவிருத்தி; மற்றொன்று நிவிர்த்தி ஆகும். உலகப் பொருள்களிடத்து நமக்குப் பற்று ஏற் படும்படி செய்வது பிரவிருத்தி யாகும். பிரவிருத்தி மார்க்கத்தில் ஈடுபட்டவன் செயல்களனைத்தும் அவனது அகந்தையை நடுவான தாகக் கொண்டு விளங்கும். அவன் ஈட்டும் செல்வம், புகழ், இன்னபிற அவனது அகந்தையை, தன் முனைப்பை வலுப்படுத்தும். சுருங்கக்கூறின் பிரவிருத்தி ஒருவனை மென்மேலும் பந்தத்துள் ஆழ்த்துவதாகும். எவ்வெச் செயல்கள், தன்னல மறுப்பிற்கும், தியாகத்திற்கும், உண்மைத் துறவிற்கும் வழி வகுக்கின்றனவோ அவையெல்லாம் நிவிர்த்தியின்பாற்படும். இச் செயல்களே நம்மை நாம் உணர்வதற்குத் துணைபுரிவன.

விவேகானந்தர் கருமயோகத்திற்குத் தருகின்ற விளக்கம் வருமாறு: 'கருமயோகம் பற்றின்றிச் செயல்களில் ஈடுபடுதலாகும். நமது கடமைகளை ஆற்றும்போது எவ்விதப் பற்றுமின்றி இருத்தல் வேண்டும். நீ உலகினின்று பிரிந்து தனித்திருப்பதாக அறிய வேண்டும். ஆனால், நீ உலகில் மக்களிடையே வாழ்வதாக நினைக்க வேண்டும். நீ யாது செய்தாலும் உனக்காகச் செய்வதாக நீ நினைத்தல் கூடாது. கருமயோகம் கூறுவது: 'உலகை விட்டு நீங்காதே. உலகிடையே வாழ்க. நீ மகிழ்ந்திருக்கப் பாடுபடாதே. பிறருக்காக உழைக்க முற்படு.'

அகந்தையை-தன்முனைப்பை-சுயநலத்தை-அறவேநீக்கியவன் கருமயோகி. தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொண்டு, பற்றின்றி

செயல்புரிபவன் மகிழ்ந்திருப்பான். அவனே விடுதலை பெற்றவன் ஆவான். செயலற்று ஒருபோதும் விளங்குதலாகாது. தீமைகளை எல்லாம் எதிர்க்க வேண்டும். செயல்கள் மூலம் நாம் விடுதலை அடைய இயலாது. நற்பணிகளும் நம்மைக் கட்டுப்படுத்தும். நாம் வாணுளெல்லாம் பணிபுரிந்தாலும் விடுதலைபெற இயலாது. ஆதலால் பற்றின்றி செயல்புரிபவன் நன்மை தீமை ஆகிய இவ் விருமையைக் கடக்கின்ருன். செயல்களின் விளைவுகளைப் பற்றிக் கவலை கொள்ளாது, நாம் நமது கடமைகளைச் செய்ய வேண்டும். பெயரும், புகழும், செல்வமும், பதவியும் நாடும்வரை உண்மையான அமைதி நமக்கு ஏற்படாது. பற்று நீக்கம் என்பது எளிதன்று. உடற் பற்று, உடைமைப் பற்று, உள்ளப்பற்று என்று பற்றுகள் வகைகையாகக் கிளைத்து எழும். பற்றுகளனைத்தையும் பற்றற விட்டு நீங்கி அம்பலப் பற்றை ஒன்றே பற்றி நிற்க வேண்டும். எவனொருவன் உலகப் பற்றுகளினின்று அறவே நீங்குகிருனே, அவனே உண்மையில் விடுதலை பெற்றவனுவான்.

செயல்கள் முற்றிலும் தூயனவாக அமைதல் அருமை. ஆதலால், அவை முற்றிலும் நல்லனவாதலும் இல்லை; தீயனவாதலும் இல்லை. இவ்விரு நிலைகளும் விரவிய நிலையிலேயே செயல்கள் அமையும். நமது செயல்கள் யாவும் நன்மை, தீமை கலந்த கலவையேயாகும். அறச் செயல்கள் நமக்கு விடுதலையை நல்க மாட்டா. நமக்குப் பல்வகைக் கடமைகள் உள. நாம் நமது பெற்ருேருக்கு, குடும்பத்திற்கு, சமுதாயத்திற்கு, அலுவலகத்திற்கு என்றும் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள. மேலும் மேலும் கடமைகளை ஆற்றத் தலைப்படுகிருன். இவனுக்கு விடுதலை ஏது? மேலும் இக் கடமைகள் யாவும் உலக நன்மைகள் கருதியன; பொருள் பெருக்கத்திற்கே காரணமாவன. கடமைகள் கட்டுப்படுத்துகின்றன. நமது தலையாய கடமையாதெனில், பற்றின்றி இருத்தலாகும். பற்றின்றி, பலன்களில் நாட்டமின்றிவாழ்தலே மனத்திற்குஅமைதியைத் தரும். கருமயோகத்தின் குறிக்கோள், விடுதலை பெறுதலேயாகும். பற்றின்றி பயன் கருதாது கடமைகளை ஆற்றுதல் மூலம் விடுதலை பெறுதலே கரும யோகமாகும். விவேகானந்தர் இல்வாழ்வோனை நோக்கி, அவன் தியாக வாழ்வு வாழ வேண்டும், மற்றவர்கள் பொருட்டு தன்னலத்தைத் துறக்க வேண்டும் என்று வற்புறுத்துகிருர். துறவியை நோக்கி அவன் பணம், ஆற்றல் முதலியவற்றை அறவே துறக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிருர். அவர் கூறுவது 'நாம் ஒதுங்கி இருந்து இறைவனின் ஏவலாட்கள் என்று எண்ணுவோம். இறைவனுகிய எஜமானனை, தலைவனைப் பணிவோம். அவனுக்குக் கீழ்ப் படிவோம். செயல்புரியத் தூண்டும் ஒவ்வொரு தூண்டுதலும் இறைவனிடத்திருந்து அமைவனவாகக் கொள்ள வேண்டும்.

## ஞான யோகம்

யோகம் என்ற சொல்லிற்கு இரு பொருளுண்டு. ஒன்று நெறி, மற்றொன்று இந்நெறியினால் அடையும் பயன். நெறியென்று கொள்ளும்போது, அது முறையாக அமைகிறது. கட்டுப்பாடு அமைந்த வாழ்க்கையின் மூலம் முத்திப் பேற்றை அடைவது நெறியின் பயன் என்று யோகத்திற்குப் பொருள் கொள்ளின், இறைவனுடன் ஒன்றுதல் என்ற பொருள்படும்.

ஞானயோகம் என்பதற்கு விவேகத்தின் மூலம் தன்னையுணர்தல் என்று பொருள் கொள்ளலாம். நித்தியமானவற்றை அநித்திய மானவற்றினின்று பிரித்து உணர்தலாகிய விவேகம் படிப்படியே அநித்தியத்தினின்று நம்மை நீக்கி நித்தியத்துடன் ஒன்றுவிக்கும். நித்தியம் என்பது என்றும் நிலைத்து நிற்பதாகிய பரம்பொருளைக் குறிக்கும். பரம்பொருளை நோக்க, பிற யாவும் நிலையுதல் அற்ற வையாகும். உண்மையைப் பொய்யினின்றும் ஆன்மாவைச் சடத்தி னின்றும் நிலையுதல் உடையனவற்றை நிலையுதல் அற்றவற்றினின் றும் பிரித்து அறிதலே விவேகம் அல்லது ஞானம் ஆகும். இந்த ஞானயோகத்தின் அடிப்படை விவேகமாகும். சங்கரர் தமது விவேக சூடாமணியில் கூறுவது: 'அறியாமையின் காரணமாக மேலான பரம்பொருளாகிய நீ உன்னைக் கட்டுண்ட ஜீவாத்மாவாக நினைக் கின்றாய். இவ்வறியாமையினால் பிறப்பு இறப்புகட்கு உள்ளாகின் றாய். ஞானம் என்னும் தீயானது அறியாமையை அகற்றும். அறி யாமை அகல அகல ஞானம் உதயமாகும்.''

விவேகம் உடையவன், தியானத்தில் வல்லவன், நாமரூப உல கைக் கடக்க வல்லவனே ஞானயோகத்தைப் பின்பற்ற அருகதை யுடையவன். பரம்பொருளைச் சச்சிதானந்தம் என்று கொண்டு ஞான யோகி தியானம் செய்கின்றான். சத், சித், ஆனந்தம் என்பது முச் சொற்களாலானது. சத், என்றும் உள்ளது, சித் அறிவு, ஆனந்தம் மகிழ்ச்சி. பிரம்மம் என்றும் உள்ள பொருள். அது அறிவாகும், ஆனந்தமாகும். இவ் வியல்புகளைத் தியானிக்கின்றவன் தனது உண்மை நிலையை உணர்கின்றான். தோன்றுகின்ற பிரபஞ்சத்தி னின்று தன்னைப் பிரித்து அறிகின்றான், பிரம்மத்தை உணர் கின்றான்.

ஞானயோகம் இரு படிநிலைகளை உடையது. ஒன்று பிரபஞ்சத் தினின்று நீங்குவது, மற்றொன்று ஆன்ம சுவரூபத்தை அறிந்து அதனையே தியானித்தலாகும். விவேகத்துடன் பிரபஞ்சத்தினின்று நீங்கி, ஆன்மா, பரம்பொருளோடு தனது முற்றொற்றுமையை உணருகிறது. புற உலகினோடு எவ்விதத் தொடர்புமின்றி, என்று முள்ள மாறாத எல்லையற்ற பிரம்மத்தையே அவன் தியானிக்கிறான். விவேகானந்தர் இந்த முறையைப் பற்றிக் கூறுவது: 'விவேகி,

தனது அறிவின் துணைகொண்டு துணிந்து அறிவின் எல்லையை உணர்கின்றான். மறுக்கத்தக்கன யாவற்றையும் மறுக்கிறான். தானல்லாத யாவற்றையும் தானெனன எண்ணிய மயக்கம் தீருகின்றது. ஆராயுந் தன்னை, மறுக்க இயலாது என்ற முடிவிற்கு வருகிறான்.'' இவ்வாறு விவேகம் ஒன்றையே தனது முறையாகக் கொண்டு முன்னேறுகின்றவன், 'பிரம்மமே உள்பொருள், பிரபஞ்சம் மித்தை, ஜீவாத்மாவும் பரமாத்மாவும் (பிரம்மமும்) வெவ்வேறல்ல என்ற உண்மையை' உள்ளத்தே உறுதியாக உணர்கின்றான். இது உணர்வு, அறிவு கொண்டு அறிதல் மட்டுமன்று. பிரம்மமே உண்மை, பிற யாவும் உண்மையல்ல என்று உணர்வதையே விவேகம் என்று கண்டோம். இவ் விவேகம் தோன்றுவதற்கு உபநிடத முறையாகிய 'நேதி நேதி' என்னும் பயிற்சியினை ஞானயோகி மேற்கொள்கின்றான். இதன் பொருள் 'இதுவன்று' இதுவன்று' என்பதாகும். பிரம்மமே உள்பொருள் என்றால், பிற எதுவும் பிரம்மமாகாது. நாம் உடலன்று, அந்தக் காரணங்களும் ஆகோம். நாம் பிரம்மமே, எல்லையற்ற பரம்பொருளே என்ற உணர்வு மேலோங்குகிறது. ஞானயோகி அறிவை முற்றிலும் பயன்படுத்துகிறான். ஆத்மனே உண்மை என்று (ஆத்மன் பிரம்மம் என்ற இரு சொற்களும் ஒரே பொருளுடையவை. இவ்விரண்டும் முற்றொருமையுடையன. கொண்டு அல்லும் ஓயாது தான் ஆத்மனாக விளங்குவதாகப் பாவிக்கின்றான். இப் பாவனையின் முதிர்ச்சியினால் தன்னைப் பரம்பொருளாக, பிரம்மமாக உணர்கின்றான். ஞானயோகி வெவ்வேறு சமயங்களின் தெய்வங்களை எல்லாம் பிரம்மத்தின் வெளிப்பாடுகளாக உணர்கிறான். வரையறையுற்ற நாமமற்ற, வடிவமற்ற என்றுமுள்ள பிரம்மத்தின் வெளிப்பாடுகளே அனைத்துத் தெய்வங்களும் என்ற உணர்வு ஏற்படுகிறது. பிரம்ம ஞானம் தலைப்படும்போது தெய்வங்கள் அவ் வுணர்வில் மறைகின்றன. விவேகானந்தர் இந் நிலையை விளக்கிக் கூறுவது:

'மனித நிலையில் நமக்குத் தெய்வம் தேவை. இறை நிலையில் நமக்கு இவை தேவையில்லை. இராமகிருஷ்ணர் தெய்வீக அன்னையை எப்போதும் தம்முடன் இருக்கக் கண்டார். தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களைவிட அன்னை அவருக்கு உண்மையாகத் தோன்றினாள். சமாதி கூடியவுடன் பிற பொருள்கள் யாவும் ஆன்ம உணர்வில் ஒன்றிவிடுகின்றன. ஆளுமை சார்ந்த இறைவன் நெருங்கி விடுகின்றான். பின்னர் சமாதியில் மேலோங்கி நிற்கும் உயர்வில் மறைகின்றான். நான் என்னும் உணர்வு நீங்குகிறது.''

ஞானயோகி சமயப்பொறையை மேற்கொள்கின்றான். அனைத்துச் சமயங்களையும் உண்மையென்று ஏற்கிறான். தொடக்க நிலையில் ஆலயங்கள், கொள்கைகள், வடிவங்கள் ஆகியயாவற்

றையும் ஏற்கிருன். பின்னர் இவற்றைக் கடக்கிருன். கடந்த நிலேயில் தனித்த சமயங்கட்கு இடம் ஏது? ஒருமையுணர்வு ஏற்பட்ட பிறகு பன்மைக்கு இடம் இல்லே அன்ருே.

இருளில் கயிற்றை அரவு என்று நினேத்து மருள்கிருேம். கயிற்றின்மீது படிந்துள்ள தூசியை நீக்கி அதன்மீது ஒளியினேச் செலுத்தி நாம் அதன் உண்மை நிலேயை உணரும்போது முன்னர் கண்ட அரவுக் காட்சி நீங்குகிறது. இத் திரிபுக் காட்சியை வைத்து அத்வைதிகள் நமக்கு இப் பிரபஞ்ச உணர்வு ஏற்படுகின்ற வகையையும் பின்னர் அது நீங்குமாற்றையும் விளக்குவார்கள். விவேகானந்தரது விளக்கம் வருமாறு: 'நாம் கயிற்றைக் காணும் போது, அரவை நாம் காண்பதில்லே. அரவைக் காணும்போது கயிற்றை நாம் காண்பதில்லே. இவ் விருகாட்சிகளும் ஒருங்கே ஒரே சமயத்தில் நிகழா. ஆதலால் உலகை நாம் காணும்போது நமது உண்மை நிலேயை உணர்வதில்லே. பிரம்ம உணர்வில் 'நான்' நீங்குகிறது. உலக உணர்வும் நீங்குகிறது. ஒளி இருளே உணராது ஒளி தோன்றும்போது இருள் அழிகின்றது. இஃதேபோல பிரம்மமே யாவும் என்ற உணர்வு ஏற்படுகின்றபோது பிற யாவும் நீங்கு கின்றன.

## இராஜ யோகம்

இந்த யோகம் யோகங்களுள் தலேமையானது. இந்த யோகம் நேரியது; இறை யுணர்வை எளிதில் தரவல்லது. உடலே, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி உணர்வை அளிப்பது. இந்த யோகத்தை பதஞ்சலி அருளுகின்ருர். இதன் குறிக்கோள் சித்த விருத்தி நிரோதமாகும். எண்வகைப் பயிற்சிகளே இது விதிக் கின்றது. அவையாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணு யாமம், பிரத்யாகாரம்,தாரணே, தியானம்,சமாதி. இமயம் ஐவகை யாகும். ஒழுக்க நெறிகளால் இயங்குவது. பிறர்க்கு இன்னு செய்யாமை, உண்மை, பிறர் பொருள் வெஃகாமை, தருமம், பிறர் பொருள் ஏலாமை போன்றவற்ருல் ஒழுக்கம் தூய்மை பெறு கிறது. நியமம் நல்ல பழக்கங்களே மேற்கொள்ளுதல் ஆகும். உடற்தூய்மை, மனநிறைவு, தவம், ஈஸ்வரனிடத்துச் சரண்புகுதல் ஆகியவற்ருல் நல்ல பழக்கங்களே மேற்கொள்ளுதல் இயலும். ஆசனம் என்பது, நிலேத்து இருக்கக்கூடிய உடல் நிலேயாகும். உடலிற்கு ஏற்ற நிலேயினே அறிந்து மேற்கொளல் ஆகும். ஆசனங்கள் பலவகையாகும். உடலே நன்னிலேயில் நிறுத்துதல் பொருட்டு இவ்வாசன வகைகள் ஏற்பட்டுள்ளன. பிராணுயாமம் மூச்சுக் கட்டுப்பாடாகும். இப் பயிற்சியினுல் இதயத்தின் தொழிற் பாடு செம்மையுறும். இரத்த ஓட்டம் பெருகும். மூச்சை உள்ளே இழுத்தல், இறுத்துதல், வெளியே விடுதல் ஆகிய முந்நிலேகளிலும் இப் பயிற்சி நிகழும். மூச்சுக் கட்டுப்பாட்டால் மனம் ஒரு வழிப்

படும். பிரத்யாகாரம் புலன்களைப் புறப் பொருள்களிடத்து ஈடு படுத்தாது உள்ளே இழுத்துக் கொள்ளுதலாகும். ஆமைபோல் உள் ஐந்தடக்கலாற்றின் ஒருமை எய்துதல் எளிதாகும். புலன்களின் வழி மனம் செல்லும் பயிற்சியால் புலன்களை வெளிமுகப் படாமல் காத்தல் இயலும். இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்யாகாரம் என்ற இவ்வைந்தும் பகிரங்க சாதனங்களாகும். தாரணை, தியானம், சமாதி ஆகிய இம் மூன்றும் அந்தரங்க சாதனங்கள் ஆகும். தாரணை ஒரு பொருளினிடத்து மனத்தைப் பதித்தல் ஆகும். மூக்கு நுனி, சந்திரன், விக்கிரகம் (பிரதிமை) ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் மனத்தைப் பதித்தல் இயலும்.

ஒரு பொருளினிடத்து மனத்தைப் பதித்துத் தொடர்ந்து தியானம் செய்தல் இயலும். சமாதியில் மனம் பொருளினிடத்து ஒன்றும் சித்த விருத்திகள் எல்லாம் ஒடுங்குகின்றன. உணர்வோடு கூடிய சமாதி என்றும், உணர்விழந்த சமாதி என்றும் இருவகைகள் உண்டு. முன்னதை 'ஏகாக்ர' என்றும், பின்னதை, 'திருத்த' என்றும் கூறுவர். சமாதியின் உயர்ந்த நிலையில் இயற்கை இறந்த ஆற்றல்கள் தோன்றும். யோகி இவ் வாற்றல்களால் மயக்குறுது விளங்க வேண்டும். யோகியின் குறிக்கோள் பிரம்மத்தோடு ஒன்றுதல் ஆகும்.

விடுதலை அல்லது முத்திப்பேறு இருவகைப்படும். நமது உபநிடதம், வேதாந்தம் கூறுவதைப்போல் விவேகானந்தரும் ஜீவன் முத்தி என்றும், விதேக முத்தி என்றும் இருவகைகளாகப் பகுக்கிருர். ஜீவன் உள்ளபோதே ஒருவன் வாழ்நாளிலே முத்தி அடைதல் ஜீவன் முத்தியாகும். உடல் நீங்கிய பிறகு அடைகின்ற முத்தி விதேகமுத்தி எனப்பெறும்.

ஆத்மனும் பிரம்மமும் முற்றொருமை உடையன். ஆத்மன் தனது ஒருமையை உணர்தலே விடுதலையாகும். ஒருத்தி தனது கழுத்தில் அணிந்திருந்த அணியினை மறந்து அது காணுமற் போனதாக எண்ணி, தேடுதல் போன்றது. அது தனது கழுத்திலேயே இருந்ததை உணர்வதைப் போன்றது ஆத்மன் தனது ஒருமையினை உணர்தல் ஆகும். இந்நிலை புதுவதன்று. உள்ளநிலையே உணரப் பெறுகிறது.

### மாயை

நாம் இவ்வுலகை உண்மை என்று நினைக்கின்ருேம். ஆனுல், உள்பொருள் பிரம்மம் ஒன்றேயாகும். பரம்பொருளே உள்பொருள். ஆனுல் அது வெளிப்பட்டுத் தோன்ருது. கடந்த நிலையில் விளங்குதலால், நாம் அதன் உண்மையை அறியாதிருக்கின்ருேம். இந்த அறியாமையை மாயை எனலாம். உலகினேடு நாம் தொடர்பு கொள்கின்றவரை உலகு உண்மையாகும். நாம ரூப உலகம்

மாயையில் உள்ளது. உலகு இறைவனின் வெளிப்பாடாகும்; தோற்றமாகும். இவ்வுணர்வு ஏற்படும் வரையில் மாயை தனது ஆட்சியைச் செலுத்தும். மாயையைப் பற்றி விவேகானந்தர் கூறுவது: "ஒருவன் அறியாமை வயப்பட்டு இருக்கும் போது அவன் புற உலகை, தோன்றுகின்ற உலகை உண்மையென்று நினைக்கிறான். பிரம்மத்தை உணரும் போது பிரபஞ்சக் காட்சி அவனை விட்டு நீங்குகிறது." மேலும் அவர் அதன் இயல்பை விளக்குகிறார்:

"உலகைப் பற்றி விளக்க எழுந்த கொள்கையினின்று மாயை உள்ள நிலையை எடுத்துச் சொல்வதே மாயை. நமது இருப்பின் அடிப்படையிலேயே முரண்பாடு உள்ளது. நாம் இம் முரண்பாட்டிலேயே இயங்குகிறோம். யாண்டு நன்மையுண்டோ, ஆண்டு, தீமை உண்டு. தீமை உள்ள இடத்தில் நன்மை உண்டு.'

மாயை உள்பொருளன்று. காலம், இடம் காரணநிலை யாவும் இயைந்த மொத்தமான நிலையே, மாயை. காலத் தத்துவத்தைக் கருதுவோம். மனநிலையின் மாறுபாட்டிற்கு ஏற்பக் காலமும் மாற்ற மடைகிறது. காலம் நமது மனத்தையே பொறுத்தது. நனவு வாழ்க்கையில், சில சமயங்களில் ஒருமணி நேரம் ஒரு நாள் அல்லது பல நாள்களாகத் தோன்றும். வேறு சமயங்களில் ஒருமணி விரைந்து கழியும். இவ்வாறு கால உணர்வு மனத்தைச் சார்ந்தது. இரு நிகழ்ச்சிகளின் தொடர்பைக் கொண்டே காலத்தைக் கணிக்கிறோம். காலத் தத்துவத்தின் உண்மை நிலையை நாம் உணர்வதில்லை.

இடத் தத்துவமும், பொருள்களைக் கொண்டே உணரப்பெறுகிறது. நிறம், பொருள்கள், வடிவம் போன்றவை அன்றி இடத்தையும் உணர்வதரிது. காரண தத்துவமும், கால இடத் தத்துவங்களோடு பின்னிப் பிணைந்தே இருக்கிறது. இத் தத்துவத்திற்குத் தனித்த இருப்பு கிடையாது.- காலம், இடம், காரண தத்துவம் ஆகிய மூன்றும் உள்ளன எனலாம். இல்லன என்றும் கூறலாம். விவேகானந்தர் கருத்துப்படி புலப் பதிவுகள், புலக் காட்சிகள், கருத்துகள் ஆகியவற்றால் ஆன திரட்டே இவ்வுலகு ஆகும். நனவு, கனவு நிலைகளில், இவை யாவும் நிகழக் காண்கின்றோம். கனவு காண்பவனுக்கு அக கனவுலக நிகழ்ச்சிகள் யாவும் உண்மையே' மாயை இவ்வுலகத் தோற்ற நிலையை விளக்குகிறது. முடிபாக உலகு என ஒன்று கிடையாது. தோன்றுகின்ற உலகு உண்மையில் நிலைபேறுடையது அன்று என்று மாயை விளக்குகிறது.

விவேகானந்தர் ஆற்றிய தொண்டுகளைச் சுருக்கி சர்மா அவர்கள் தந்துள்ளார். அவை வருமாறு:

(1) பாமர மக்கட்குக் கல்வியறிவு தருதலின் வாயிலாக அவர்களது நிலையை உயர்த்த எண்ணினார்.

(2) இந்தியா பிற உலகங்களினின்று கலாச்சார நிலையில் தனித்து இருந்தது. தொடர்பு அற்று இருந்தது. இத் தன்மையைப் போக்க வேண்டுமென்று விவேகானந்தர் வற்புறுத்தினார்.

(3) விவேகானந்தருக்கு முன்னர் வேதாந்தம் நூல்களில் அடங்கிக் கிடந்தது. குகைகளில் முனிபுங்கவரிடத்து அடங்கி இருந்தது. மக்கட்கு விவேகானந்தர் வேதாந்த உண்மைகளை எடுத்துப் பரக்கப் போதித்தார். வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் வேதாந்த உண்மையியல் பயிலத் தக்கன என்று எடுத்துக் கூறினார்.

(4) கீழை நாடுகளையும் மேலை நாடுகளையும் இணைத்தார் உயர்ந்த வேதாந்த உண்மைகளை மேலை நாடுகளில் பரப்பினார். மேலை நாடுகளில் காணப்பெற்ற சமுதாயத் தொண்டிலிருந்த ஆர்வத்தை நமது நாட்டில் புகுத்தினார். வேதாந்த உண்மைகளை அயல் நாடுகளில் போதித்த அவர், நமது நாட்டில் செயல்படுகின்ற நிலையில் வேதாந்தம் அமைய வேண்டும் என்று வற்புறுத்தினார். தாழ்ந்தோர், நலிந்தோரிடத்துப் பேரிரக்கம் காட்டினார். அவர்களது உயர்வே தமது குறிக்கோள் என்றும் உணர்த்தினார். சமுதாய அமைப்பு செவ்வையாக அமைய வேண்டுமானால் நமது நாட்டு ஆன்மீகப் பண்பாட்டையும், சமயச் சார்பற்ற மேலைநாடுகளது பண்பாட்டையும், இணைக்க வேண்டும் என்பது விவேகானந்தர் கருத்தாகும். வேதாந்தத்தை அனைவருக்கும் உரியதாக்கினார். சாதி, நிறம், சமயம் என்ற வேறுபாடுகளை நீக்கி அனைவருக்கும் உரியது வேதாந்தம் என்ற நிலையில் போதித்தார்.

அயல் நாடுகளில் மகளிர் அடைந்திருந்த பண்பாட்டைக் கண்டு வியந்தார். அவர்கட்கு இருந்த உரிமையையும் மெச்சினார். நமது நாட்டில் மகளிர் உரிமையுடன் இயங்கி உயர்ந்த பண்பாடு அடைய அவர்கட்குக் கல்வி தருதல் வேண்டும் என்று உணர்த்தினார். கல்வி நிலையங்கள் பல ஏற்படுத்த எண்ணினார். அயல் நாடுகளில் சமுதாய அமைப்பு சீரியதாக அமைந்திருந்ததைக் கண்டார். அந்த அமைப்புத் திறனோடு இங்கே அமைக்க எண்ணினார். அயல் நாடுகளில் அவர் கண்ட பொருளாதார செழிப்பைக் கண்டு அச் செழுமை நமது நாட்டில் அமைய வேண்டும் என்று விரும்பினார். ஆனால், இச் செழிப்பு நமது நாட்டுப் பண்பாட்டு அமைப்பின் அடிப்படையிலேயே அமைதல் வேண்டும் என்பது அவர் கருத்து.

விவேகானந்தரது வாழ்க்கையில் மூன்று நிகழ்ச்சியில் குறிக்கத்தக்கன. அவை அவரது வாழ்க்கையில் திருப்பங்களை விளைத்தன. முதல் நிகழ்ச்சி 1880 ஆம் ஆண்டு இராமகிருஷ்

ணரை அடுத்து அவருக்குச் சீடரானது. இரண்டாவது நிகழ்ச்சி உலகச் சமயப் பேரவையில் 1893ஆம் ஆண்டு பங்கு பெற்றது. மூன்றாவது நிகழ்ச்சி, சிவபெருமானை அமர்நாத்தில் தரிசனம் செய்தது. முதலிரண்டு நிகழ்ச்சிகள் விவேகானந்தரது வாழ்க்கையில் விளைத்த நலன்களை நாம் அறிவோம். மூன்றாவது நிகழ்ச்சி அவருக்கு அனுபூதியை ஏற்படுத்தியது. அமர்நாத்தைத் தரிசித்த பிறகு பல நாள்கள் தொடர்ந்து அவரது பேச்சுகளில் அக் காட்சியே நிலைபெற்றது. 'நான் அமர்நாத் சென்றதிலிருந்து சிவன் எனது மூளையினுள் புகுந்துள்ளான். அவன் புறம் போகான்' என்று விவேகானந்தர் கூறுவதிலிருந்து அக் காட்சி எத்தகையது என்பதை நாம் நன்கு உணரலாம்.

இராமகிருஷ்ண இயக்கத்தைப் பேளூர் என்னும் இடத்தில் 1897ஆம் ஆண்டு விவேகானந்தர் தொடங்கிவைத்தார். 1899ஆம் ஆண்டு அல்மோராவிலிருந்து ஐம்பது மைல் தொலைவில் அழகிய நிலப்பரப்பு வாங்கி அத்துவித ஆசிரமத்தையும் விவேகானந்தர் நிறுவினார். இவ்விரண்டு நிலையங்களையும் தாம் தோற்றுவித்த பின்னரே தமது பணி நிறைவேறியதாக நினைத்தார். தமது உடல் மெலிந்து வருவதை அறிந்தார். தாம் நெடுநாள்களுக்கு இந் நில உலகில் வாழ்தல் இயலாது என்று அறிந்திருந்தார். ஜூலைத்திங்கள் 4ஆம் தேதி 1902ஆம் ஆண்டு அவரது பருவுடல் திடீரென மறைந்தது. அவரது புகழுடல் என்றென்றும் அவர் நிறுவிய இராமகிருஷ்ண இயக்கத்தின் மூலம் நிலைபெறும். இன்றும் அவ் வியக்கம் ஆற்றிவரும் பணிகள் பெரிதும் மதிக்கத் தக்கன.

# 5. இரவீந்திரநாத் தாகூர்

## (1861—1942)

இரவீந்திரர் நெடிய தோற்றம் உடையவர். அவர் உரோமரைப் போன்று நல்ல அழகிய தோற்றம் கொண்டிருந்தார். அவரது தலைமுடி, பாலைப்போன்று வெண்மையுடையதாயிருந்தது. வளையாத முதுகு, உறுதியான நடை, அகன்ற விழி, நீண்ட மூக்கு. அருள் நிறைந்த பார்வை. இத் தோற்றம் அவர் எங்கிருந்தாலும் அவரை வெளிப்படுத்தும். பொதுவாக அவர் தெய்வ இயல்புகள் நிறைந்தவர். ஏசுபெருமானின் உருவத்தோடு பலர் அவரை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். அவர் 1861ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி பிறந்தார். அவர் நிறைவாழ்வு வாழ்ந்தார். அவரை உலகம் தலைசிறந்த கவிஞராக அறியும். அவரது கவிதைகள் கட்டுரைகளினின்று தத்துவக் கருத்துக்களை நாம் பெற இயலும். ஓவியம், இசை ஆகிய துறைகளிலும் அவர் வல்லவராக விளங்கினர். அவர் தமது தாய் மொழியாகிய வங்கத்திலேயே தமது கருத்துகளை எழுதினர். பின்னரே அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் எழுதியவற்றுள் பெரும்பகுதி இன்னும் மொழிபெயர்க்காமலேயே உள்ளது. அவர் தாமே தமது பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது 'கீதாஞ்சலி' என்னும் பெயரிட்டு வெளியிட்டார். இத் தொகுதியே அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.

அவர் பள்ளியில் சேர்ந்து முறையாகக் கல்வி பயின்றிலர். ஆனாலும், அவர் இயற்கை எனும் பெரும் பள்ளியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். புரட்சி என்பது அவரது குருதியில் என்றும் இருந்தது. ஆனால், இப் புரட்சி நமது நாட்டின் பண்பாட்டில் ஊன்றி இருந்தது. அவருக்கு எழுபது ஆண்டுகள் நிறையும்போது அவர் கூறியது: 'எனது கண்கள் நிறைய கண்டுள்ளன. எனினும், அவை சோர்வடையவில்லை; எனது காதுகள் நிறையக்கேட்டுள்ளன. எனினும், மேலும் மேலும் அவாவுகின்றன.' அவர் என்றும் புதிய அனுபவங்கள் பெறுவதற்குத் தணியா வேட்கை கொண்டிருந்தார். வியப்பு என்னும் உணர்வு அவரை விட்டு அகலவில்லை. ஆதலால்,

அவரது வளர்ச்சி என்றும் தடைபடவில்லை. உலகு என்றும் அவரை ஈர்த்தது. எந்த அனுபவத்தையும் அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றார், மகிழ்ந்தார். பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கூர்ந்து அவர் கவனித்தார். இயற்கை அவருக்குப் பெரிய ஆசானாக விளங்கியது. தமது தந்தையாருடன் இமயமலைக்குச் சென்ற பொழுது அவர் இளையவர். இமயமலையின் தோற்றம் அவரது நெஞ்சில் பதிந்தது. அம் மலையின் பெருமையும் பொலிவும் அவரது உள்ளத்தில் நன்கு படிந்தன. அவர் பல துறைகளில் ஈடு பட்டார். ஆதலால் அவர் பயின்ற நூல்கள் பல திறத்தனவாகும். மகாபாரதம், வைணவப் பாடல்கள், கீத கோவிந்தம் இன்னோரன்ன இலக்கியங்களையும் வங்க மொழியில் விளங்கிய அனைத்தையும் பயின்றார். ஷேக்ஸ்பியரது துன்பியல் நாடகங்கள், கிப்பன் எழுதிய 'ரோமபுரியின் எழுச்சியும் வீழ்ச்சியும்', ஆகியவற்றையும் படித் தார். டிக்கன்ஸ், தெக்கரே, ஸ்பென்ஸர், ஷெல்லி, பைரன் போன்ற அந்நாளைய சீரிய ஆசிரியர்களது நூல்களையும் கவிதை களையும் ஊன்றிப் படித்தார். இந்நூல்களைத் தாகூர் தாம் இளமை யில் பயின்றதாக அவர் குறித்துள்ளார்.

இரவீந்திரது வாழ்க்கை புதுமை நிறைந்தது. புறத் தோற்றத் திற்கு அவரது வாழ்வு தனித்து, புற உலகத் தொடர்பின்றி அமைந்ததாக எண்ணுதல் கூடும். ஆனால், கூர்ந்து ஆராய் வோர்க்கு அவரது வாழ்க்கை பல வியப்புகளை நமக்குத் தருவதாக உள்ளது. தாகூரது கருத்துகளை நாம் இன்னவகையினைச் சார்ந்தவை என்று கூற இயலாது. அவர் அடுத்து யாது செய்வார் என்று முன்னரே அறிவிக்க இயலாது. அவரது கலைத் துறைச் சாதனைகளையும் பெயரிட்டு அழைக்க இயலாது. ஆழ்ந்த சிந்தனையில் சில ஆண்டுகள் ஈடுபட்டிருப்பார். பின்னர் சமுதாய அரசியல் இயக்கங்களில் ஈடுபடுவார். கருத்து வேறுபாட்டிற்கு இடந்தரும் இயக்கங்களைப் பற்றி ஆராய முற்படுவார். அறுபது ஆண்டுகள் நிறையும்போது அவர் ஓவியராக உலகிற்கு வெளிப் பட்டார். எழுபது ஆண்டுகள் நிறையும்போது எழுத்துலகில் புதிய துறைகளில் ஈடுபடுவாரானார். எண்பது ஆண்டுகளாகும் போது அவர் தமது இளமை குன்றாத் தத்துவத்தை வெளியிட்டார். அனுபூதியியலின் கூறுகள் நிறைய அவரது பாடல்களில் காணப் பெறுகின்றன என்றாலும், நடைமுறைக்கு ஒவ்வும் கருத்துக்களை அவர் மறந்ததில்லை. விஞ்ஞானம், ஜனநாயகம், பொருளாதாரத் திட்டங்கள் முதலியவற்றை வற்புறுத்தினார். சாந்திநிகேதனில் கனவு கண்டு கொண்டிருக்கின்றார் என்று உலகு எண்ணிக் கொண் டிருக்கும்போது தாகூர் உலகைச் சுற்றி வரப் புறப்படுவார். மேற்கண்டவாறு அவரது வாழ்க்கை அடுத்தடுத்து, மக்களை வியப்பில் ஆழ்த்தியது. இதற்குக் காரணம் கவிஞர் தமது இறுதி

நாள் வரையிலும் புதிய புதிய அனுபவங்களை நாடியதாகும். அவரது கண்களும் காதுகளும் விழிப்புடன் இயங்கின. ஆதலால் அவர் உலகிற்குப புதிய செய்திகளை வகுத்து உரைத்த வண்ணம் விளங்கினர்.

இந்திய மறுமலர்ச்சி இயக்கங்கள் நன்கு வளர்ச்சி பெற்றுப் பரவிய வண்ணம் விளங்கிய காலம் கவிஞர் வாழ்ந்த காலமாகும். இவற்றுள் இலக்கியங்கள் அவரது இல்லத்திலேயே கால் கொண்டன. ஆதலால் இந்திய மறுமலர்ச்சியில் தாகூர் கொண்ட பங்கு பெரியதாகும். தாகூர் வாழ்க்கையைப் பற்றி வகுத்த தத்துவங்கள் எவ்வாறு வரையறையுற்றன என்று இனிக் காண்போம்.

## உபநிடதங்கள்

இரவீந்திரரது இளமைக் காலத்தில் தமது இல்லத்தில் உபநிடதங்கள் படிக்கப் பெற்றதை நன்கு கேட்டுள்ளார். அவரது தந்தையின் வாழ்வில் பெருமாற்றத்தை விளைத்தவை இவ்வுபநிடதங்களே ஆகும். பின்னர் தாகூர் சில உபநிடதங்களைத் தாமே ஊன்றிப் படித்தார். ஈசா, சாந்தோக்யம், ஸ்வேதாஸ்வரம் ஆகிய இவற்றை நன்கு படித்தார். இவ்வுபநிடதங்களிலிருந்து அடுத்தடுத்துப் பல மேற்கோள்களை அவர் தமது உரைகளில் தருவதுண்டு. நைவேத்தியம் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள 57, 58, 60 ஆகிய எண்ணுள்ள பாடல்கள், ஸ்வேதாஸ்வரம், கடோ, தைத்திரிய உபநிடதக் கருத்துகளை நன்கு விளக்குபவையாகும். ஆகவே, தாகூரின் புலன்கடந்த பொருளியற் சிந்தனைக்கு அடிப்படையாக விளங்கியவை உபநிடதங்களாகும். தாகூர் கூறுவது: ''எனக்கு உபநிடத வழிபாடும் புத்தரது போதனையும் மிகவும் பிடித்தவை. இவை ஆன்மாவின் வளர்ச்சிக்குரியவை. ஆதலால் மனித வளர்ச்சிக்கு இவை இன்றியமையாதவை. எல்லையின்றி என்றென்றும் வளர்வதற்கு இவை துணை புரிவன.'' பிரபாத் முகர்ஜி என்பவர், இரவீந்திரரது வாழ்க்கை முழுவதும் உபநிடதக் கருத்துகளின் வளர்ச்சியே என்று கூறுகின்றார். இக்கூற்று மிகையாகத் தோன்றலாம். ஆனால், தாகூருடன் வாழ்ந்தவர்களைவிட இவர் உபநிடதங்களின் உண்மைகளைப்பெரிதும் பயன் படுத்தினர் என்பது உண்மையாகும். ஊக்கம் விளைக்கும் கருத்துகள், மனிதனைப் புனிதப்படுத்தும் கருத்துகள் கொண்ட பெட்டகமாக, வற்றாத ஊற்றாக, உபநிடதங்களைத் தாகூர் கொண்டார். அவை உணர்த்தும் உண்மைகளை முடிந்த முடிபுகளாக அவர் கொள்ளவில்லை. மேலும், இந்தியத்தத்துவத்தின் மேன்மையை உணர்த்துவதற்கும் இவர் உபநிடதங்களைப் பயன் படுத்தவில்லை.

உபநிடதங்களுள் இணக்கும் கருத்துகள் பலவற்றைக் காண்டல் இயலும். ஆத்திக தரிசனங்கள் தத்தம் கருத்துகட்கு ஏற்றவாறு, உபநிடதக் கருத்துகளை விளக்கியுள்ளன. ஐரோப்பிய அறிஞர் உபநிடதங்கள் மாயைக் கொள்கையையும், துன்பத்தையும், உலக மறுப்பையும் உணர்த்துவன என்று கொண்டனர். ஆனால், உபநிடதங்கள் யாவரும் உடன்படும் வகையில் உணர்த்தும் ஆனந்தம் என்பதும் உண்டு. என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழும் வகையை அவை உணர்த்துவன. தனி மனிதன் தன்னை உணர இயலும் என்றும், இறவாப் பெரும் பேறு அடைய இயலும் என்றும் அவை வலியுறுத்துகின்றன. இவ்வுண்மைகளை இரவீந்திரர் தமது பாடல்களில் பெரிதும் பயின்றுள்ளார்.

## பிரம்ம சமாஜம்

தாகூர் வாழ்ந்த நாள்களில் கல்வி பெற்றோரைப் பெரிதும் கவர்ந்த இயக்கம் பிரம்ம சமாஜமாகும். இச் சமாஜமே தாகூருக்குத் தீத்துவத்தில் ஆர்வத்தைப் பிறப்பித்தது எனலாம். பிரம்ம சமாஜம் சாதிப் பிரிவுகள் மரபு வழிக்கொள்கைகள் ஆகியவற்றை எதிர்த்துத் தொடக்கம் கொண்டது. ஆனால், பின்னாளில் அவ் வியக்கம் சிதைந்து அதுவும் ஒரு கொள்கையாகிவிட்டது. சமுதாய சீர் கேடுகளைக் களைய முற்பட்டதில் இவ்வியக்கம் தாகூருக்கு உடன்பாடாகும். பிரம்மசமாஜத்தினைத் தோற்றுவித்த இராஜாராம் மோஹன்ராய் அவர்களும், பின்னே அதனை வளர்த்த கேஷப் சந்திர ஸென் அவர்களும் தாகூரின் சிந்தனைகளைப் பெரிதும் வளர்த்தவராவர். இராய் அவர்கள் திறந்த மனத்துடன் எந்தச் சிக்கலையும் அணுகினார். மரபுவழி அவரது சிந்தனைகள் அமையாது புதிய நோக்கில் அமைந்தன. சமாஜத்தில் எந்தத் தனிப் பிரிவையும் சார்ந்ததாக அவரது கொள்கை அமையவில்லை. இவ் வியல்புகள் தாகூரைக் கவர்ந்தன. ஆனால், ஸென் என்பவர் கிறித்தவ சமய தத்துவங்களைச் சமாஜத்தில் புகுத்தியது தாகூருக்குப் பிடிக்கவில்லை. எட்வொர்டு தாம்ஸென் என்பவர் கூறுவதைப்போல ஸென் அவர்கள் நேரடியாகத் தாகூரின் கருத்துகளை ஊக்கவில்லை எனினும், அவர் தாகூரின் இளமைக் காலத்தில் உள்ளத்தில் படிந்தார் எனல் வேண்டும்.

## கிறித்தவம்

கிறித்தவர்களும் தாகூரும் உலக உண்மையை ஏற்கின்றனர். இறைவனை ஆளுமை சார்ந்தவராகக் கருதுகின்றனர். அத்துவித மாயைக் கொள்கையை மறுக்கின்றனர். ஸான்டர்ஸ் என்பவர் கூறுவது: ''தாகூர் கிறித்தவ இறைக்கொள்கையை நன்கு வெளிப்படுத்துபவராவர். கீதாஞ்சலி உணர்த்தும் இறைவன், அருவமன்று. இந்து சமயம் கருதும் பரம்பொருளைப் போல் அசைவற்று, உறவு

அற்றுத் தனித்து விளங்கும் ஒன்றன்று. இக் கடவுள் கிறித்துவை போன்றவர். இறையருளை (தாகூர்)இறைஞ்சும் போதும், அவரது பேரன்பைப் பேசும்போதும் கிறித்தவச் சமய அடிப்படை உண்மைகளை ஒத்து விளங்குகிறது. தாகூர் கண்ட கிறித்துவம், கீழை நாட்டில் எவ்வாறு வேறுன்ற விளங்கவல்லது என்பதை நிறுவுகிறது எனலாம். அமெரிக்கத் திறனாய்வாளர் ஒருவர் கூறுவது: "தாகூரின் நோக்கு நமக்கு கிறித்தவம் ஒரு காலத்தில் ஆசிய சமயமாக விளங்கியது என்று நினைவுபடுத்துகிறது எனலாம்."

## இறைக் கொள்கையும் மனிதப் பற்றுக் கோட்பாடும்

வங்க நாட்டைச் சேர்ந்த வைணவக் கவிஞரது பாடல்களைத் தாகூர் நன்கு பயின்று இருந்தார். அவர் தமது இருபது வயதில் இடைக்காலத்து வைணவக் கவிதையை ஒத்த பல பாடல்களை எழுதினார். இப் பாடல்களைத் தொகுத்து "பானுசிங்கர் பதவளி" என்ற தலைப்பில் வெளியிட்டார். வைணவ சமய உட்கிடையைத் தாகூர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதை இப் பாடல்கள் நன்கு வெளிப்படுத்துகின்றன. டாக்டர் தாஸ்குப்தா கூறுவது: " நமது பழைய வைணவ கவிஞர் நித்தியமான தெய்வீக அன்பைப் பற்றிப் பாடியுள்ளனர். அவர்கள் பயன்படுத்தியது, நிலவுலகில் நாம் மக்களிடையே காணும் காதலாகும். தாகூர் கவிதையில் நாம் வைணவக் கவிஞரது எதிரொலியைக் காண்கின்றோம். தாகூரின் புதுமையான உணர்ச்சிப் பாடல்களில் ஜயதேவர், வித்யாபதி, சண்டிதாஸர் போன்றவர்களது பாடல்களின் சாயலைக் காண்கின்றோம்."

வைணவச் சிந்தனை தாகூரின் தத்துவத்தில் நடுநாயகமாக விளங்குகின்றது எனலாம். தெய்வத்திற்கும் பக்தனுக்கும் இடையே உள்ள உறவைப் பக்தி என்பர். அன்பு முதிர்ந்து பக்தியாகின்றது. பக்தியையே மோட்சம் பெறுவதற்குரிய வழி என்று வைணவர் கொள்கின்றனர். இறைவனைப் பிரிந்து அவனது காட்சியினின்று விலகி இருக்கின்றபோது ஏற்படுகின்ற ஆற்றாமையை வைணவம் நன்கு புலப்படுத்துகின்றது. தாகூரின் "கீதாமாலயா" என்ற பாடல்களின் தொகுப்பு வைணவ உணர்ச்சிப் பாடல்களாகும். மனித சமுதாயம் குறைகள் பல உடையதாய் விளங்குவதற்குக் காரணம் இறைவனிடமிருந்து பிரிந்து விளங்குவதாகும். பக்தன் துன்புறுகின்றபோது இறையை நீள நினைகின்றான். பின்னர் இறையுடன் ஒன்றுகின்றான். எல்லையற்றப் பரம்பொருளுக்கு அன்பு நிறைவேறும் பொருட்டு எல்லைக்குட்பட்ட மனிதனின் உறவு தேவைப்படுகிறது. இறைவன் பக்தனிடம் அன்பு காரணமாக விளையாடுகின்றான். மனிதனின் அகந்தை உணர்வே இறையோடு உறவு கொள்வதைத் தடை செய்கிறது. தாகூர் ஒரு பாடலில் கூறுவது:

"நான் இனியும் இல்லத்தில் தங்குதல் இயலாது. எனது வீடு வீடாக எனக்குத் தோன்றவில்லை. என்றும் புதியவன் (இறைவன்) சாலை வழியே செல்கின்றான். அவன் நடந்து செல்லும் காலடி சத்தம் எனது நெஞ்சைத் தட்டுகிறது; இது எனக்குத் துன்பத்தைத் தரு கிறது." (Fruit-Gathering)

"பால்" (Bauls) என்று வழங்கிய நாடோடிப் பாடகர்கள், தாகூரைப் பெரிதும் கவர்ந்தனர். கபீர், துக்காராம் போன்றவர் களது பாடல்களிலும் தாகூர் பெரிதும் ஈடுபட்டார். இந்திய சமய சிந்தனையுள், ஒருமைக் கொள்கைக்கு அயலாக, பன்மைக் கொள் கையையோ, இருமைக் கொள்கையையோ வற்புறுத்தியவர்கள், வங்க வைணவக் கவிஞர், இஸ்லாமிய அனுபூதிக் கவிஞர்களாகிய சூபிகள், கபீர், தாது போன்றவர்களாவர். பக்தி இயக்கத்தைப் பரப்பியவர்களனைவரும் ஒருமைக் கொள்கையை எதிர்த்தவர்களா வர். இப் பக்தி இயக்கம் இறைவனை உருவமுடையவனாகக் கருது கிறது. அவனிடத்துப் பெருகிய அன்பும் பக்தியும் செலுத்துமாறு பணிக்கிறது. இது துறவைக் கடுமையாக வற்புறுத்தவில்லை. தத்துவ உலகக் கருத்து வேறுபாடுகளில் பெரிதும் ஈடுபடாது பொறையுடன் அனைத்துக் கருத்துகளையும் ஏற்கிறது. பொதுவாக எல்லாரையும் அன்புடன் தழுவுவதையே வலியுறுத்துகிறது. சமுதா யத்தில் ஏற்றத் தாழ்வுகளை அகற்றுகிறது. தாகூரின் கருத்து களில் வைணவக் கூறுகள் வலுத்து விளங்குகின்றன என்போர் வேத-உபநிடதக் கருத்துகள் வைணவக் கருத்துகளோடு முரணி விளங்குவதாகக் காட்டுகின்றனர். இது தவறாகும். திறனாய்வாளர் களுள் சிலர், தாகூரின் கருத்துகளில் மேற்குறித்த இரு கருத்து களிடையே இடையறாது போராட்டம் இருப்பதாகக் கருதுகின் றனர். பிறர் தாகூரது கருத்துகளில் சில சமயங்களில் வேதக் கருத்துகள் ஓங்கி விளங்குவதாகும். வேறு சமயங்களில் வைண வக் கருத்துகள் ஓங்கி விளங்குவதாகும். இவ்விரு கருத்து களும் மாறி மாறி விளங்குகின்றன என்றும் கூறுகின்றனர். இவ் வாறு நோக்கும்போது தாகூர் இறைக்கொள்கைக்கும், அனைத் திறைக் கொள்கைக்கும் (Pantheism) இடையே அலைப்புண்டதாகத் தெரியவரும். ஆனால் உண்மையாதெனில், தாகூர் இவ்விரு கருத் துகளிலும், உடன்பாட்டு விளங்கியவற்றை எடுத்து வற்புறுத்தி னார் என்பதாகும். வைணவக் கவிஞர் வற்புறுத்தும் பக்தி, இறை யொருமை, அவனது ஆளுமை போன்றவை பக்தனது இதயத் திற்கு நிறைவு தருவனவாகும். இக் கருத்துகளை ஏற்றார். உப நிடதக் கருத்துகளுள் அனுபூதியை கூட்டுவிக்கும் அகவுணர்வை யும், அறக்குறிக்கோள் வாழ்வையும் தாகூர் ஏற்றார்.

## பௌத்தம்

தாகூரது வாழ்க்கையில் பௌத்தம் சிறப்பான இடம் பெறு கின்றது என்று கூறலாம். புத்தரைப் பற்றிக் குறிக்கும்போதெல் லாம், பெரு மதிப்புடனும் உணர்ச்சியுடனும் தாகூர் கூறுகிறுர். தாகூர் தூரக்கிழக்கு நாடுகளுக்குச் சென்று வந்த பிறகு பௌத்தம், ஆசியாவில் எவ்வாறு பண்பாட்டொருமைக் காரண மாக விளங்கியது என்பதை நேரில் கண்டார். தாகூர் தாம் எழுதிய பல கட்டுரைகளிலும், பாடல்களிலும் நாடகங்களிலும் பௌத்தக் கருத்துகளை வலிறுயுத்தியுள்ளார். இங்கேயும் பௌத்தத்தின் சிறந்த கூறுகளையே தாகூர் வற்புறுத்தினுர். பௌத்தத்தைப் பற்றி பெருவழக்காக நாம் அறிவது, அது துன்பியல் கொள்கை என்பதாகும். உலகம் துக்க மயம் என்பதை பௌத்தம் வலியுறுத் தினுலும், துன்ப நீக்கம் இயல்வதொன்றே என்று பௌத்தம் கூறுவதை சிலர் மறுக்கின்றனர்.

பௌத்தத்தின் அடிப்படையில் உள்ள தத்துவக் கொள்கையே மக்களை இணைத்துள்ளது. அது வலியுறுத்தும் நட்பு, இரக்கம், அன்பு போன்றவை மக்களிடையே உள்ள வேறுபாடுகளைத் தவிர்த்துள்ளது என்று தாகூர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். பௌத்தம் செயலற்ற நிலையை என்றும் வற்புறுத்தியதில்லை என்பது தாகூர் கருத்தாகும். எண்ணத்தில் ,சொல்லில், செயலில், தூய்மை நிலவக் காரணமான செயல்களைப் புத்தர் மறுக்கவில்லை. தூய்மைக்கு மாறுன நிலைகளை விளைப்பவை, ஆன்ம நலத்திற்கு ஊறு செய்பவை என்பதால் அவற்றை மறுத்தார்.

உபநிடதங்களின் போதனைகளுள் இரு வேறு கூறுகள் உள என்பது தாகூரின் கருத்து. ஒரு கூறு கடுமையான நோன்புகளால் ஆன்ம உண்மையை மறுப்பதாகும். மற்ருென்று எவ்வுயிரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுதலாகும். அன்பு நெறியைத் தலையாய நெறி யாகப் போற்றுதலாகும். இக் கூறு மஹாயான பௌத்தத்தில் இடம் பெறுகின்றது. பௌத்தத்தை விளக்கியவர்களுள் தாகூர் தனியிடம் பெறுகின்ருர் எனலாம். பௌத்தத்தின் நைராத்மியக் கொள்கை அல்லது ஆன்ம உண்மை மறுப்பு அதன் சீரிய போதனை யாகாது. நிருவாணம் முடிவான நிலையில் அழிவாகாது. முற்றிலும் அழிந்து ஒன்றுமில்லாமல் போகின்ற நிலையாகாது. தாகூருக்குப் பிறகு மற்ற சிந்தனையாளர் ஆன்ம உண்மை மறுப் பிற்கு வேறு விளக்கம் தர முற்பட்டனர். இதேபோல் ''நிருவா ணத்திற்கும்,' உடன்பாடு நிலையில் பேரின்பப் பெருவாழ்வை அது குறிப்பதாகும் என்று கூறினர்.

மேலை நாட்டுச் சிந்தனை, சடக்கொள்கையை அல்லது பொருள் முதற் கொள்கையைச் சிறப்பாக எடுத்தியம்புகிறது என்னும்

கருத்தைத் தாகூர் ஏற்கவில்லை. அறிவியலை உலகிற்கு வழங்கிய பெருஞ்சிறப்பு ஐரோப்பாவிற்கு உண்டு என்று அவர் கூறுகிறார். ஐராப்பிய நாகரிகம், பண்பாடு, நகர தத்துவம் கவிதை இவை யாவும் தாகூர் நன்கு அறிந்தவை என்று பிரெஞ்சு நாட்டு அறிஞர் ஒருவர் கூறி, ஐரோப்பியத் தொடர்பால் அவரது கலையுள்ளம் விரிவுறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்கிறார். கில்பர்ட் மர்ரே என்பவர், தாகூரது வெற்றி ஐரோப்பிய சிந்தனையாளர் கருதுவதை வெளிப்படுத்துவதில் அமைகின்றது என்று கூறுகிறார். க்ரோசே, பெர்க்ஸோன், ஐன்ஸ்டைன், ரோமன் ரோலண்ட், ரஸ்ஸல், ஸ்வைட்ஸர், டியூயி, கெய்சர்லிங் போன்ற தலைசிறந்த ஐரோப்பிய ஆங்கிலேய அமெரிக்க அறிஞர்களோடு தாகூர் உரையாடித் தாம் மேலைநாட்டுக் கருத்தமைவுகளைத் தெளிவு செய்து கொண்டார். இக் காரணத்தால், ஐரோப்பிய இயக்கங்களையும் அந்நாட்டு நட்பையும் தாகூர் நன்கு உணர்ந்திருந்தார்.

## தாகூரின் இறைக் கொள்கை

தாகூர் தலைசிறந்த கவிஞராவார். அவரதுபாடல்களிலிருந்தே நாம் அவரது இறைக்கொள்கையைப் பெற இயலும். அவரது பாடல்கள் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து தோன்றியவை. அவர் அவ்வப் பொழுது தமது அகவுணர்வில் தோன்றியவற்றைப் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அவர் தமது தத்துவ, சமயக் கருத்துகளை வரையறை செய்து, ஒழுங்குபெற அமைத்தாரிலர். அவர் இறைவனைப் பற்றியும் தெளிவாகக் கருத்தை வெளிப்படுத்தவில்லை. வெளிப்படையாக இறைவன் உருவமுடையவன் என்று கூறுகின்ற பகுதிகளும் உள. உருவமுடையவன் என்றால் நம்மைப்போல் கருவி காரணங்களை உடையவரல்ல. அவர் இறைவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் இடமுண்டு. பரம்பொருளாகக் கருதும் போது அருவமான உருவமற்ற தத்துவமாகக் கருதுகின்றார். இவ்வாறு வற்புறுத்துகின்ற இடங்களை எடுத்துக் கொண்டு, இராதாகிருஷ்ணன், தாஸ்குப்தா போன்றவர்கள் தாகூர் பரம்பொருட் கொள்கையை உடையவர் என்று கூறுகின்றனர். எனினும் தத்தா என்கின்ற அறிஞர் தாகூர் பரம்பொருட் கொள்கையை அவர் உடன்படவில்லை என்கின்றார். அவர் கூறுவது: ''இரவீந்திரர் தமது குணத்தால், கடுமையான நோன்பு, துறவு, உருவமற்ற அருவமான ஆளுமையில்லாத பரம்பொருட் கொள்கை எதிர்த்தவராவர். அவர் வைணவர்களைப் போன்று, உபநிடதப் பகுதிகளுள் எவ்வெவை, எல்லையிறந்த இறைவன் தமது அன்பு மிகுந்த நிலையில் உவகையின் காரணமாக எல்லைக்குட்பட்ட உயிர்வகைகளையும் உலகப் பொருள்களையும் படைத்தார் என்றும் கூறுகின்றனவோ அவ்வற்றை அடிப்படையாகக் கொண்டார்.''

தாகூர் தமது இறைக் கொள்கையைத் தெளிவாகக் கூறவில்லை என்று கருதுபவர் அவரது கருத்துகளை ஊன்றி அறியவில்லை என்று கூறலாம். இறைவனை, ஆளுமை சார்ந்த நிலையில் (Personal) கருதுவதும் உண்டு. ஆளுமையற்ற நிலையில் கொள்ளுதலும் உண்டு (Impersonal). இவ்விரு கருத்துகளையும் இணைக்கக் கருதுகிறார், தாகூர். அவர் தமது தத்துவத்தில் இவ்விரு கருத்துகட்கும் இடம் தருகிறார். தாகூரைப் போன்று இவ்விரு இயல்புகளையும் இணைக்க முற்பட்டவர் பயன்படுத்தும் இணைக்கும் முறைகள் வெவ்வேறாக விளங்கக் காண்கின்றோம். இவர்களுள் ஒருசிலர் இறைவனின் ஆளுமை சார்ந்த நிலையை அனுபவத்தில் அமைகின்ற ஒன்றாகக் கொள்கின்றனர். ஆளுமை சார்ந்த கொள்கையை உண்மை என்று கருதுகின்றனர். வேறு சிலர், இவ்விரு கொள்கைகளையும் உண்மை என்றே கொள்கின்றனர். இன்னும் சிலர் உள்பொருளை அல்லது உள்ளதை நாம் கருதக் கூடிய ஒன்றாகவே கொண்டு அதை உடன் பாட்டு நிலையில் கருதுகின்றனர். உபநிடதங்களைப் போன்று 'இதுவன்று, இது வன்று,' என்று விலக்கி வாக்கு மனங்கடந்த ஒன்றாக இறையைக் கருதுவதில்லை.

தாகூர் இறைவனின் உருவ நிலையையும், அருவ நிலையையும் ஒருங்கே ஏற்று இணைக்கின்றார் என்றாலும், அருவ நிலையை இறைவனின் துணைமையான நிலையை இரண்டாவதுபடி நிலையாகக் கொள்கின்றார். 'பரம்பொருள்' (Absolute) என்ற சொல்லைத் தாகூர் யாண்டும் பயின்றிலர். இறைவனுக்கு இரு கூறுகள் உண்டு என்றும், அவை உருவ அருவ நிலைகள் என்றும் குறிக்கின்றார். அருவ நிலை என்று தாகூர் கூறுவது அத்துவிதிகள் கூறும் வெறுமை நிலையன்று. உலகை உண்மையற்ற வெறுந் தோற்றமாகத் தாகூர் கொள்ளவில்லை. தாகூர், இறைவனை நமது அனுபவத்தில் அமையும் ஒன்றாகவே கொள்கின்றார். வொயிட் ஹெட் போன்ற அறிஞர் இறைவனைக் கருதுகோளாகக் (Hypothesis) கொண்டு நிறுவ வேண்டிய ஒன்றாகக் குறிக்கின்றனர். இறையுண்மையை வழக்குரைகளால் அறிவு கொண்டு நிறுவ இயலாது என்று தாகூர் கருதினார். 'நாம் ஒளியை உணர்வதைப் போன்றே இறைவனையும் உணர்கின்றோம்' என்பது தாகூரது கருத்தாகும். நமது அன்றாட வாழ்வில், இறையுண்மையை உணர்வதற்கு வாய்ப்புகள் பல உள. நாம் எல்லைக்குட்பட்டு விளங்குகின்றோம். நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களும் எல்லைக்குட்பட்டவையே யாகும். இவ்வெல்லைக்குட்பட்ட தன்மையை நாம் உணர்வதே எல்லை இறந்த ஒன்று உள்ளது என்பதை நிறுவுகிறது. எல்லை இறந்த ஒன்றினை உணரும்போதுதான், பிற யாவும் எல்லைக்குட்பட்டன என்று உணர இயலும். எல்லைக்குட்பட்டவை நமக்கு

விளக்கம் தரமாட்டா. அது, ஒளியில்லாத விளக்கு போன்றதாகும், வயலின் இனிய ஒலியை எழுப்பாத நிலையில் அது பயனற்றதாகும். எல்லைக்குட்பட்டவையிடையே முரண்பாடு, இகல் போன்றவை மலிந்து விளங்கக் காண்கிறோம். இந் நிலையில் மனம் இவற்றைக் கடந்து, நிலைத்த யாவற்றையும் இணைக்கும் முழுமையைக் கருதாது இருக்க இயலாது. நாம் பிரபஞ்சத்தின் நோக்க அமைவை உணர்கின்றோம். ஒழுங்கு இயற்கையில் உண்டு என்று நாம் உணரும் போது, அவ்வொழுங்கிற்குக் காரணமான மேலான பரம்பொருளை உணருகிறோம். தருமம் என்ற நூலில் தாகூர் அழகியல் அனுபவத்தினின்று இறையுண்மையை நிறுவ முற்படுகின்றார். 'உலகில் நாம் ஓயாது செயற்படுகின்ற நிலையைக் காண்கின்றோம். எனினும் சோர்வின்றி அமைதியுடன், அழகுடன் உலகு விளங்கக் காண்கின்றேன். இயக்கமும் முயற்சியும பெருகி நின்றாலும் வாழ்வு, மரணம், இன்பம், துன்பம் ஆகியவை மாறி மாறி அமைந்தாலும், உலகு சுமை மிகுந்ததாகத் தோன்றவில்லை. அமைதியும் அழகும் உலகிடையே தோன்றக் காண்கிறோம். உலகம் பல்வகைப்பட்ட தன்மையோடு முயற்சியோடு விளங்கினும் அமைதி தோன்றுகிறது. உலகில் எல்லாம் ஓசையாக விளங்காது, இசை ஏன் விளங்குகின்றது? இவற்றிற்கெல்லாம் தரத்தக்க ஒரே விடை 'இறைவன் ஆங்கே, அமைதியாக மரம் போன்று நிற்கின்றான்' என்பதாகும்.

மனிதனின் வாழ்க்கை இடையறாத நிலையில் எல்லையிறந்த ஒன்றை நாடி வருகின்றது. இக் கருத்தை 'பொன்மான்' என்ற பாடலில் தாகூர் விளக்குகின்றார் :

'நான் பொன்மானை வேட்டையாட
மலையும் பள்ளத்தாக்கும் தேடி அலைகின்றேன்;
பெயரில்லாப் பலநிலங்களில் நான் திரிகின்றேன்;
ஏனெனில், பொன்மானை வேட்டையாட (காண)
அலைகின்றேன்.''

மனிதன் மேற்கொள்ளும் முயற்சியின் எல்லையாகப் பரம்பொருளைத் தாகூர் கொள்ளவில்லை. வாழ்வின் அடிப்படைத் தத்துவமாக அவர் கொண்டார். அத் தத்துவமும் வாழ்க்கையோடு இயங்கி வருகின்றது.

'தோட்டக்காரன்' என்னும் பாடல்களின் தொகுப்பில் மற்றொரு கவிதையைக் காண்கின்றோம்:

'அவனது அமைதியான காலடி சத்தத்தை நீ கேட்கவில்லையா ? அவர் வருகிறார் வருகிறார், எப்போதும் வருகின்றார்.

நான் பல்வகையான உள்ளத்தின் நிலைகளில் பாடியுள்ளேன். அவையனைத்தும் அவர் வருகிறார், வருகிறார் என்றும் வருகிறார் என்பதைப் பறை சாற்றுகின்றன.

கதிரவன் ஒளிகளாலும் ஏப்ரல் திங்களில் நறுமணம் மிக்க நாள்களில் காட்டுப்பாதையிலே அவர் வருகிறார், வருகிறார் என்றும் வருகிறார். மழையின் காரணமாக ஜூலைத் திங்களில் இருள் சூழ்ந்த நாள்களில் இடிக்கும் தேரில் மேகங்கள்மீது ஊர்ந்து அவர் வருகிறார், எப்போதும் வருகிறார்.''

தாகூர், அருவ நிலையைவிட உருவ நிலையை அதிகமாக மதிக்கின்றார் என்று கூற இடமுண்டு. உருவ நிலையை 'இறைவன்' (God) என்று குறிப்போம். அருவ நிலையை பரம்பொருள் (Absolute) என்று குறிப்போம். இறைவன் என்பது பரம்பொருளின் தோற்றம் அல்லது வெளிப்பாடன்று, இறைவனே உள் பொருளாகும். பரம்பொருள், துணைமையான, இரண்டாவது படியான நிலையாகும். தாகூர், இறைவனைப் பரம புருஷனாகக் கொள்கிறார். அவன் தூயவன், எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், என்றும் அன்புடையவன். ஆற்றல், குணங்கள், உளதாந் தன்மை யாவற்றிலும் மேலான நிலையில் அவன் விளங்குகின்றான். இவனது (மேற்குறித்த) இயல்புகட்கு ஒப்புமை காண்டல் இயலாது. எல்லை கடந்த நிலையில் ஆளுமையை (Personality) தாகூர் கருதுகின்றார். இதற்குப் பொருள் யாது?

தாகூர் பரம்பொருள் என்னும் பொருளைத் தருகின்ற (Absolute) சொல்லைப் பயிலவில்லை என்று முன்னர் கருதினோம். ஆனால் அவர் 'புருஷ' 'மானுஷ்ய' என்ற சொற்களைத் தயக்கமின்றி பயில்கிறார். ஆனால், இச் சொற்களைப் பயிலும் போது 'என்றுமுள்ள' 'இறவாத' 'நிறைவான' 'பொதுமையான' 'முதன்மையான' 'மேலான' போன்ற சொற்களை முன்னர் அமைத்து 'புருஷ' 'மானுஷ்ய' என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்.

தாகூர் கருத்தை நாம் மேலும் நன்கு விளக்கிக் கொள்ளும் பொருட்டு ஆளுமை சார்ந்த நிலையைப் பாகுபடுத்திக் காணலாம். இவ்விளக்கம் 'ஸ்ரீவத்ஸவா' என்பவர் தருகின்றார். 'இறைவனிடத்து விளங்கும் ஆளுமை, இறைவனது ஆளுமை, ஆளுமை சார்ந்த இறைவன்' என்ற பாகுபாடுகளை நாம் காண்டல் வேண்டும் என்று ஸ்ரீவத்ஸவா கூறுகிறார் (Personality in God, Personality of God, Personal God) இறைவனிடத்து விளங்கும் ஆளுமை என்பது பரம் பொருளிடத்து-விளங்குவதாகும். முழுமையாகக் கருதும்போது அதற்கு ஆளுமையை ஏற்றி அறிய இயலாது. பரம்பொருள், அருவநிலையிலும், எல்லைகடந்த நிலையிலும் விளங்கும், போது, உருவ நிலையில் விளங்கும் இறைவனை உட்படுத்தும்.

'இறைவனது ஆளுமை' என்பது பரம்பொருள் எல்லையற்ற ஆற்றல்களோடு விளங்குகின்ற நிலைமையைக்குறிக்கும். இவ்வாற்றல்கள் இறைவனின் குணங்களாக விளங்குகின்றன. இறைவனின் அமைப்பில் இவை இடம் பெறுவனல்ல. முற்றுமுணர்தல், எல்லாம் வல்லதன்மை, நீதி படைக்கும் ஆற்றல் போன்றவை இறைவனது இயல்பாகும். மேற்குறித்த இவ்விரு கருத்துகட்கு அயலாக, இரவீந்திரர் ஆளுமை சார்ந்த இறைவனை (Personal God) குறிக்கிறார். ஆளுமை என்பது பரம்பொருளின் குணமன்று. அது இறைவனின் இயற்கையாகும். இயற்றிநிலை அல்லது செயலாற்றலிற்குக் காரணமான உள்ள உறுதி உடையவனுக்கு ஆளுமை உண்டு. இறைவன் தாமே உறுதிகொண்டு இயங்க இயலும். தாமே யாவற்றையும் வரையறுத்துக் கொள்ளவும் இயலும். இறைவனின் உளதாம் தன்மையிலேயே, அவன் விளங்குகின்ற நிலையிலேயே படைப்பு ஆற்றல், எல்லாம் வல்ல நிலைபோன்றவை இடம் பெறுகின்றன.

எல்லைக்குட்பட்டு விளங்குகின்ற உயிரினங்கள் யாவற்றையும் இணைக்கும் கடந்த நிலை ஒருமைப்பாடாக ஆளுமையைத் தாகூர் கருதுகின்றார். மக்களுக்கு உள்ள ஆளுமை எல்லைக்குட்பட்டதாகும். 'இறைவனின் ஆளுமை நிறைவானதாகும். நிறைவான ஆளுமை இறைவனிடத்துத்தான் விளங்குகின்றது. மக்களும் பிறவும் இறையின் தோற்ற நிலைகளாகும்' என்று லோட்ஸே கருதுகின்றார். இறைவனுக்கும்-மனிதனுக்கும் இடையே உள்ள நெருக்கத்தைத் தாகூர் விளக்குகின்ற காரணத்தால் அவர் பரம்பொருளின் எல்லையிறந்த தன்மையை வற்புறுத்தாது விடுக்கின்றார் என்று அவரிடத்துக் குறைகாண்கின்றார்கள். தாகூர் இங்கே மிகவும் விழிப்பாக இருக்கின்றார். அவர் 'எல்லைக்குட்பட்ட இறைவனை' (Finite God) இத்தாலிய கருத்துமுதற் கொள்கையினரைப்போல் கொள்ளவில்லை. தாகூர் கருதும் இறைவன் 'சமநிலையில் விளங்குபவரிடையே முதன்மையானவர் (Primus Interpares) என்றும் கொள்வதற்கில்லை. இறைவனுக்கு ஆளுமை உண்டு என்று தாகூர் கூறும்போது, இறைவனை மனித நிலையில் கருதவில்லை. மனிதச் சமுதாயம், மிகவும் உயர்வானதாகவும், சிறந்ததாகவும் எதைக் கருதி இடையறாது முயல்கிறதோ, அதை அது என்றும் அடையாது இருக்கிறதோ அதை இறைவனின் ஆளுமை என்று தாகூர் கூறுகின்றார். 'தனிமனிதனின் ஆளுமையில் உள்பொருள் அடங்கவில்லை. எல்லைக்கடந்த ஆளுமையிலேதான் அது அடங்கியுள்ளது. இக்கருத்து தாகூர் 'ஆளுமை' என்ற தலைப்பிலே எழுதியுள்ளார். பிராட்லி என்கின்ற தத்துவ அறிஞர் ஆளுமை என்னுங் கருத்து, எல்லைக்குட்பட்ட

இறைவனாக இருத்தல் வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை என்றும் தாகூர் கருதுகிறார்.

இறைவனின் இயல்பை நாம் நமது அனுபவத்தைக் கொண்டே அறிதல் இயலும். நாம் மனிதர்களாக (Persons) விளங்குகின்ற நிலையில் இறைவனையும் புருஷனாக மனுஷ்யனாகக் கருத வேண்டியவர்களாகிறோம். மேலும் 'ஆளுமை' என்ற நூலில், இப் பிரபஞ்சம் ஆளுமை சார்ந்த இறைவனின் வெளிப்பாடன்று என்றால் அது பெருத்த ஏமாற்றமாகும். நமக்கும் இறைவனுக்கும் இடையே தோழமை நிலவுவதை நெருக்கமான உறவு விளங்குவதைத் தாகூர் குறிப்பிடுகின்றார். இத்தகைய உறவு நிலவாவிடில், இறைவன் நமக்கு உரியவனாக விளங்கமாட்டான். அந்நிலையில் இறைவன் உளன் என்கின்ற ஒன்றைத்தான் நாம் கூற இயலும்.

உள்பொருள், அல்லது பரம்பொருள் ஆளுமையுடையது என்று தாகூர் கூறினாலும், இக் கருத்து இறைவனின் இயற்கையை முழுமையாக விளக்கியதாகாது. ஆதலால் தாகூர் அத்துவித வேதாந்தம் கூறும் நிர்க்குண பிரம்மத்தை மறுக்கவில்லை. குணங்களோடு கூடிய இறைநிலையாகிய நிர்க்குணத்திற்கும் உருவ நிலைக்கும் அருவநிலைக்கும் இடையே இவ்விரு கருத்துகளும் இயைபத்தக்க கருத்துக்காண விழைந்தவர் தாகூர். முருகியல் அனுபவத்தில் அத்தகைய இயைபு காண இயலும் என்பது தாகூர் கருத்தாகும். 'அன்பு' என்னும் உணர்விலும் உருவ அருவ நிலைகளை நாம் இயைத்துக் காண்டல் இயலும். அன்பில், உருவ நிலையையும் காணலாம். அருவநிலையையும் காணலாம். நிர்க்குணம் அன்பின் ஒரு முனையாகும். மற்றொரு முனை சகுணமாகும். காதலன், தனது காதலிக்காகத் தன்னை அர்ப்பணிக்கவும் இழக்கவும் ஆயத்தமாக உள்ளான். இல்லையேல் அவனது காதல் உண்மையுடையதாகாது. இந் நிலையில் அவனது அகந்தை நீங்குகிறது. தான்கொண்ட காதலின் நிமித்தம், தன்னையே இழக்க அவன் ஆயத்தமாக உள்ளான். மரணம் என்பது அகந்தையின் அழிவேயாகும். நமது ஆன்மாவை, பரமான்மாவை விட மேலாக மதிக்கின்ற நிலையில் மரணம் பயங்கரமானது. வேறு சொற்களில் இறைவனிடத்து நாம் அன்பு செலுத்தாத போது நம்மையே நாம் மதிப்பவர் ஆவோம். அகந்தை இன்னும் நீங்கவில்லை என்பது பொருளாகும். 'மனிதனின் சமயம்' (Religion of man) என்னும் நூலில் தாகூர் இறைவன் மனிதத் தன்மையை ஏற்குமாறு செய்கிறார்; மனிதன் இறைத்தன்மையை ஏற்குமாறு செய்கிறார். (Humanisation of God and the Divinisation of man.) வைணவ சமயத்துள் இறைவன் மனிதனோடு கட்டுண்டு விளங்குவதாகத் துணிந்து கூறக் காண்கின்றோம். இந் நிலைதான்

மனிதனுக்குப் பெருமை தருவதாகும். அழகின் மூலம் மக்களைத்தன் வயப்படுத்துகிருன். ஆற்றலைப் புலப்படுத்துவதற்காகப் படைப்பு நிகழவில்லை. வண்ணம், பாடல், வடிவ அழகுபோன்றவை விளங்கும் இடங்களிலெல்லாம் அன்பின் அழைப்பை நாம் காணலாம். அது அழைப்பே தவிர ஆணையில்லை. அன்பு வற்புறுத்தலினுல் அமைவ தொன்றன்று. இன்பமே மனிதனை இறுதியில் பணிவிப்பது. இன்பம் யாண்டும் உள்ளது. பூமியின்மீது பரந்து இருக்கும் பசுமையான புல், வானத்தில் விளங்கும் நீலப் பரப்பின் அமைதி வஸந்த காலத்தின் மிகையான வெளிப்பாடு நம்முடைய உடலில் பொதிந்துள்ள ஊன் வாழ்க்கை அறிவு பெறுதல், இன்னேரன்ன பலவற்றில் நாம் இன்பத்தைக் காண்கிருேம், நுகர்கிருேம். சட்டங்கள் தனிகளாக விளங்கும்போது, அவற்றை அன்பு கொண்டுதான் விளக்க இயலும். உடலும் உயிரும்போல அவை விளங்குகின்றன. ஒருமையின் உண்மையை உணர்வது இன்பம். நமது ஆன்மாவும் உலகும் உலக ஆன்மாவும் பரம காதலனும் ஒன்றி விளங்குவன என்னும் உண்மையை நாம் உணர்வதே இன்பமாகும்.

தாகூரது சமயம் நான்கு முக்கியக் கூறுகளை உடையது என்று ஏமிய சக்கரவர்த்தி கூறுகிருர். அவையாவன :

(1) சமயம் அகநிலையுடையது. அது ஆன்மீகப் பண்புகளையே போற்றுதல் வேண்டும். சமயம் என்பது நமது வாழ்வின் முழு உண்மையாகும். எல்லையிறந்த பரம் பொருளோடு நாம் கொள்ளும் உறவின் உணர்வாகும். சமயம் நமது வாழ்கையின் ஈர்ப்பு மயமாகும். இவ்வுணர்வு ஆன்மீகப் பண்புகளை வேருன்றச் செய்யும்.

(2) உலகு, இறைவனின் படைப்பில் முக்கிய கூருகும்; இதனைப் புறக்கணித்தல் தகாதது ஆகும். துறவு பூணுதல் படைப்பின் முக்கிய கூறினை மறுத்தலாக முடியும்.

(3) மனித உலக முழுமைக்கு நமது இரக்கம் அமைதல் வேண்டும்.

(4) கீழை மேலை நாடுகளிடையே உள்ள கலாச்சார, பண்பாட்டு வேறுபாடுகள் பொதுவான ஆன்மீகப் பண்புகளைக் கொண்டவையாகும்.

தாகூர் மனிதப் பற்றுக் கோட்பாடுடையவர் என்பதைப் பின்னர் குறித்துள்ளோம். ஆனுல் ஏனையோர் கொள்ளும் மனிதப் பற்றுக் கோட்பாட்டிற்கும் தாகூர் கொள்வதற்கும் வேறுபாடு உண்டு. ஆன்மீகப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு தாகூர் அமைத்தார். சமயம் அதன் உயிர்நாடியாகும்.

தாகூரது சிந்தனை இவ்வுலக வாழ்க்கையைத் தழுவியே அமைகின்றது. அத்துவித முடிவுகளை ஒருபுறம் ஏற்ருலும் இவ்வுலக

உண்மையை ஏற்கின்றது. இவ்வுலகில் நாம் போற்றத் தகுந்த பண்புகளைப் புறக்கணித்தல் கூடாது. துறவும் ஞானயோகமுமே நமக்குச் சிறந்த வழிகள் என்று கொள்வதற்கில்லை. உலகினின்று. தனித்து ஒதுங்குதல் இருமையையே நிலைநாட்டும். அன்பு ஒன்றே நம்மை இணைக்கும். பக்தியை அத்துவிதத்தோடு தாகூர் இணைக் கின்றார். ஆதலால், தாகூரது தத்துவ சிந்தனைக்கும், வல்லபரது சிந்தனைக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. தாகூரும் வல்லபரும், இவ்வுலகை உண்மையன்று என்று ஒதுக்கத் தயங்கின்றர். காரணம் இவ்வுலகு பிரம்மத்தின் வெளிப்பாடு. ஆதலால் இதனை எவ்வாறு புறக்கனிக்க இயலும் என்று கேட்கின்றனர். இறைவனே ஒற்றுமையின் அன்பின் அடிப்படைத் தத்துவமாக விளங்குகின்றான். அன்பின் மூலமே வேறுபாடுகளை நாம் கடத்தல் இயலும் என்று வல்லபர் கூறுகின்றார். தாகூரும் வல்லபரும் பெரிதும் ஒத் திருத்தல் பி. டி. ராஜு என்பவரால் பெரிதும் வற்புறுத்தப் பெறுகிறது.

## ஆன்மா

ஆன்ம உண்மையைத் தாகூர் ஏற்கிறார். தாகூரின் இறைக் கொள்கை ஆன்ம உண்மையையும் அதன் செயலுரிமையையும் முற்கோளாக ஏற்கிறது. மனிதினின் ஆன்மா இறைவனின் பகுதி யாகும். அனைத்து ஆன்மாக்களின் இயைந்த நிலை இறைவனாகும். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு உறுப்புகட்கும் உடலிற்கும் உள்ள உறவைப் போன்றது. இறைவனின் கூறுகளாக, ஆன்மாக்கள் விளங்குகின்றன. ஆதலால் ஆன்மாக்கள் இறை வனைச்சார்ந்து விளங்குகின்றன. சார்ந்து விளங்கினாலும் அவற்றிற்குத் தனித்தன்மை உண்டு.

ஆன்மாக்கள் பலவாகும். இறைவன் எல்லை கடந்தவன். ஆன்மாக்கள் இறைவனிடமிருந்து இன்பம் பெறுகின்றன. இறைவனோடு இயைபுற வாழ்கின்ற காரணத்தால் இன்பம் எய்து கின்றன. ஆளுமை சார்ந்த இறைவனைத் தாகூர் ஏற்பதால், ஆன்மாவிற்குத் தனித்த இருப்பு உண்டு. ஆன்ம உண்மையை ஏற்காவிடில், ஆளுமை என்னும் கருத்தமைவு பொருட் சிறப்பை இழந்துவிடும். 'ஆத்ம பரிச்சயம்' என்னும் நூலில் தாகூர் கூறுவது: 'நான்உளேன், நான் வளர்ச்சி பெறுகிறேன், நான் இயங்குகிறேன். இவையனைத்தும் சிறப்பு வாய்ந்தவை, நான் உளதாதலால் பிற அனைத்தும் உளவாகின்றன. 'கீதாஞ்சலியில் இறைவனும், மனிதனும் இரு தனிப் பொருள்களாக விளக்கப் பெறுகின்றன என்னும் கருத்து விளக்கப்பட்டுள்ளது.

மனிதன் தனித்து விளங்குகின்றான் என்னும் உண்மையை நாம் புறக்கணிக்க இயலாது. மனிதன் தனித்தன்மையை நாம் ஏற்காவிடில் அத்துவிதியைப் போல் ஆத்மனையும் பிரம்மத்தையும்

ஒன்ருகக் கருத வேண்டிவரும். அத்துவித வேதாந்தம், ஆத்மன் பிரம்மம் ஆகிய இவை இரண்டும் முற்றொருமை உடையன என்று கூறுகிறது. தாகூர் ஆன்மாவிற்கு இரு கூறுகள் உண்டு என்று கொள்கிருர். ஒன்று பிரம்மத்திடத்திலிருந்து பிரிந்து இருத்தல். மற்றொன்று பிரம்மத்தோடு ஒருமையுடையதாதல். தாகூர் பல பாடல்களில் தனி ஆத்மா, உலகிற்கும் இறைவனுக்கும் இடையே அலைக்கப்பெறுகிறது என்கிருர். உலகமும் இறைவனும், ஒருங்கே ஆன்மாவை ஈர்க்கின்றன. இவ்விரு ஈர்ப்புகளாலும் ஆன்மா அலைப்புறுகின்றது. மனிதன் எல்லைக்குட்பட்டும் விளங்குகின்ருன். எல்லைக்குட்படாமலும் விளங்குகின்ருன். மனிதன் தான் எல்லைக் குட்பட்டு விளங்குவதை எல்லையிறந்த ஒன்று தன்னிடத்து விளங்கு வதாகத் தான் உணர்கிருன். உலகில் கட்டுண்டு வாழும்போது மனிதன் தான் எல்லைக்குட்பட்டு விளங்குவதை உணர்கிருன். கலை, இலக்கியம், போன்ற துறைகளில், மனிதன் ஆர்வலனுக விளங் கும்போதும் தான் அடைய வேண்டியவை உள என்று எண்ணும் போதும் அவன் எல்லையிறந்த கூறு உடையவனுகின்ருன். ''மனிதன் நிலமடந்தையின் சேய், வானத்தின் வாரிசாக விளங்குகின்ருன்'' என்று கூறுகின்ருர். இக் கருத்து ஆங்கிலேய அறிஞர் கிரீன் என்பவர் கொள்ளும் கருத்தாகும். தாகூர் சாதனு என்னும் நூலில் ஆன்மா தத்துவப்படி எல்லை கடந்தவன், அவன் வெளிப்படுத்தும் போது எல்லைக்குட்பட்டவனுகிருன். நாம் இருவேறு உலகுகளுள் வாழ்கின்றவர்களாகிருேம். நிலவுலகையும், இறைவனையும் சார்ந்து விளங்குகின்ருேம். ஆதலால் இவ்விரு வேறு உலகு களையும் ஏற்க வேண்டியவர்களாகிருேம்.

ஆன்மா, பிரம்மம் ஆகிய இவ்விரண்டு வேறுபாடு என்றும் விளங்குதல் வேண்டும் என்னும் கருத்துடையவராகத் தாகூர் விளங்குகிருர். நாம் எந்தக் குறிக்கோளை நோக்கி இடையருது முயன்று கொண்டிருக்கின்ருேமோ அக் குறிக்கோளாக இறைவன் விளங்குகிருன். இறைவன் என்பது நிறைவு என்றும் குறிக்கோளா கும். இக் குறிக்கோள் எல்லை கடந்ததாகும். நாம் கருதுதற்குரிய தாக விளங்குவதன்று. மனிதன் குறிக்கோளை அடைய இடையருது முயல்கின்ருன். இம்முயற்சி தொடர்ந்து நடைபெறுவதாகும். மனித வாழ்வு முயற்சியாகவும், இறைவன் குறிக்கோளாகவும் விளங்கக் காண்கிருேம்.

பரம்பொருளின் விசேஷனமாக ஆன்மாவைத் தாகூர் கருத வில்லை. ஆன்மா உயர்ந்த பேறு பெறுகின்றபோதும் ஆன்மா நீங்குவதில்லை. இவ்வான்மா பரமான்மாவில் கரைந்தும் போவ தில்லை. தனித்தன்மையை இழப்பதுமில்லை. மோட்சம் என்பது இறைவனேடு உறவாடுவதாகும். இறைவனை இடையருது கண்டு கொண்டு இருப்பதாகும். இக் காட்சியினுல் தொடர்ந்து மகிழ்ச்சி

அடைவதாகும். எல்லைக்குட்பட்ட ஆன்மா, எல்லையிறந்த பரம் பொருளினிடத்தில் தன்னை இழத்தல் மோட்சம் அன்று. ஆன்மா தனது தனித்தன்மையை இழக்காமலிருந்தால்தான் இறைவனோடு உறவுகொள்ள இயலும், அவனது முன்னிலையில் மகிழ்ந்திருக்கலாம். தெய்வீக வாழ்வு, இந்நிலவுலகில் வாழ்தல் இயலும் என்று தாகூர் கருதுகிறார். இறைவனோடு ஆன்மாக்கள், மகிழ்ந்து விளையாடி, உறவாடி இருக்க வேண்டும் என்று தாகூர் விரும்புகிறார். வரையறை பெறாத உள்பொருள் அல்லது பரம் பொருளினிடத்தில் ஆன்மாக்கள் தம்மை இழத்தலைத் தாகூர் விரும்பவில்லை. எல்லைக்குட்பட்ட ஆன்மாக்கள் என்றும் இறைவனாகா. ஏனெனில், அவை எல்லைக்குட்பட்டவை. இறைவன் மேலான, பரமான்மாவாகும்; பகுதி என்றும் முழுமையாகாது. எல்லைக்குட்பட்டவை என்றும் எல்லையிறந்த பரம் பொருளாகாது. வீடு பேற்றில், ஆன்மா, உணர்வோடு விளங்குகின்றது. ஆற்றலை இறைவனிடமிருந்து பெறுகின்றது. பிரம்மம் என்றும் உள்ளது (Being). ஆன்மா பிரம்மம் ஆதல் வேண்டும்; முயன்று இறைவனின், திருமுன் அடைந்து அவனது, திருக்காட்சி பெற்று இன்பம் துய்த்தல் வேண்டும். தத்துவ உலகில் ஒருமைக் கொள்கை (Monism), பன்மைக் கொள்கை (Pluralism) ஆகிய இவ்விரு கொள்கைகளிடையே எக்கொள்கை ஏற்புடைது என்பது பற்றி கருத்து வேறுபாடு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இக்கொள்கைகள் பொருளைக் குறிக்கும் ஆன்மாவைக் குறித்து நிலவி வந்துள்ளன. பொருள் ஒருமைக் கொள்கையை (Materialistic monism) நமது நாளில் சாருவாகார் கொண்டிருந்தனர். இந் நாட்டில் ருஷ்ய நாட்டினர் இக்கொள்கையை உடையவராகின்றனர். இதேபோல், ஆன்ம ஒருமைக் கொள்கையினரும் உண்டு. ஆன்மப் பன்மைக் கொள்கையரும் உண்டு. இந்தியத் தத்துவத்தில் ஆன்ம ஒருமைக் கொள்கையர் அத்துவிதிகள் அவர்கள் பிரமமம் ஒன்றே உள்பொருளென்பர். பிரம்மம், ஆன்மா ஆகிய இவ்விரு சொற்களும் அடிப்படையான உள் பொருள் ஒன்றறையே குறிப்பதாகும். ஆன்மா எல்லைக்குட்பட்ட ஆற்றல், அறிவுடையது. இவ்வெல்லைக்குட்பட்ட தன்மையை யையும், முழுமையின் (பரம்பொருளின்) இயைபையும், ஒருமைப் பாட்டையும் எவ்வாறு இணைப்பது? ஷெல்லிங் என்கின்ற அறிஞர் இங்கு எழுகின்ற நிலையைக் குறிக்கிறார்: ‘இறைவன் உளன் எனில் யான் இல்லை, யான் உளேன் எனில் இறைவன் இலன்.'' இறைவனே உள்பொருள் என்றால், வேறு எப்பொருளும் உள்ளது என்று நாம் எவ்வாறு கூற இயலும்? தாகூர் இக் கேள்விக்கு நடுவு நிலைமையான ஒரு பதிலிறுக்கிறார். ஒருமை, பன்மைக் கொள்கை ஆகிய இவ்விரு கொள்கைகளும் தீவிரமானவை. தாகூர், பன்மை

என்பது உண்மையே என்று கூறி, முழுமையானதின் உறுப் பொருமை பாழ்படாமல் காக்கப்பெறுகின்றது என்று கூறுகிறார். ஒருமை என்பது தாகூர் அவர்களது சிந்தனைக்கு மாறுபட்டதாகும். பன்மைக்கு இடம் தராத, தனியொருமை தாகூர் ஏற்காததாகும். 'மரணமே ஒருமையுடையது; வாழ்க்கை இருமையுடையதாகும்' என்று கூறுகிறார். வாழ்வு பன்மையுடையதே என்பது தாகூர் முடிவாகும். இறைவனிடத்துக் காணும் ஒருமை, தனித்த ஒருமை யன்று. அது வேறுபாடுகட்கு இடம் தருகிறது. 'தொடர்பில்லாத பொருட் பன்மையை' தாகூர் ஏற்கவில்லை. அவர், பன்மையைத் திரிபுக் காட்சி என்று ஒதுக்கவும் இல்லை. உள் பொருளின் ஒருமையை உடன்படுகிறார். ஆன்மப் பன்மையையும், அவற்றின் தனித்தன்மையையும் கருதுகிறார். இப் பன்மை பரம்பொருளின் விருப்பம் என்றே கூறுகிறார். 'சாதனு' என்னும் நூலில் தாகூர் கூறுவது: 'பரம்பொருள் – பொதுவானது, தனது நிறைவினை, தனித்த சிறப்புடைய ஒன்றிலே நாடுகிறது. நாம் தனித்த சிறப்பைக் காக்க முயலும் முயற்சி நம்மிடத்திலிருந்து பரம் பொருள் தூண்டுவதால் நிகழ்வதாகும்.' மேலும் 'கீதாஞ்சலியில்' எல்லைக்குட்பட்டனவற்றின் மூலமே, எல்லையிறந்த பரம்பொருள் தமது வளமையை உணர்த்த இயலும் என்றும் கூறுகிறார்.'' வாழ்க்கையின் அமைப்பே பல்வகைப்பட்ட தன்மையின் மூலமே, ஒருமையைக் காண இயலும் என்பதாகும். பல்வகைப்பட்ட தன்மையைத் தவிர்த்து ஒருமையைக் காண இயலாது. இக் கருத்தை விளக்கத் தாகூர் ஓர் உவமையை ஆளுகின்றார். விதை யானது பூமியின்கீழ் இருக்கும் போது எவ்வித முரண்பாடும் இன்றி விளங்குகின்றது. இவ் விதை முளைத்து எழும்போது பல் வகைப்பட்ட தன்மை தோன்றுகின்றது. அப்பொழுதுதான் மரத்தின் வாழ்க்கை தொடங்குகின்றது. ஆதலால் தாகூர் வேற்றுமையிடையே ஒருமையை வற்புறுத்துகிறார் எனலாம். 'அமர் தர்மா' என்ற நூலில் தாகூர் கூறுவது: ''உண்மையின் ஒரு பகுதியை நாம் மறுப்பது உண்மையை நீக்குவதாகும். உள் பொருளின் அடையாளம் அல்லது இயல்பு. அது அனைத்தையும் உட்படுத்துவதாகும். எதிர் நிலைகள் உள என்றாலும் அடிப்படை யான ஒருமை உள்ளது. இவ்வொருமைப் பகுதிகள் ஒன்றை யொன்று அழித்து விடாமல் தடுக்கின்றன. உண்மைக்கு உள்ளார்ந்த நிலையில் முன்பின் இணைவு உண்டு. இவ்விணைவு வேறு பாடுகளை நீக்குவதன்று; மறுப்பதுமன்று. இவற்றை ஏற்றுக் கடக் கின்றது. இவன் சிவன்; சிவனாக விளங்குதற்குக் காரணம் அவர் நஞ்சுண்டு, அதன் ஆற்றலைக் கெடுத்து விளங்குவதாகும், வேற்றுமைகளை வெறுத்து ஒதுக்குகின்ற உண்மையை நான் ஏற்க மறுக்கின்றேன். இவ்வாறு அமையும் உண்மை செயற்கையான

தொரு ஒருமையை எழுப்புகின்றது. நான் வேறுபாடுகளைக் கண்டு அஞ்சுபவனல்லன்.'

ஒன்றும் பலவும் (One and the many) தாகூர் நமக்குப் புலன் தரு வரவு (Fact) என்று கொள்கிறார். இவை ஒன்றாகவும் பலவாகவும் ஏன் தோன்றுகின்றன? இவை எவ்வாறு தோன்றுகின்றன? இவ்விரு கேள்விகட்கும் தக்க விடை காண்டலரிது. 'ஆளுமை' என்ற நூலில் தாகூர் கூறுவது: 'எல்லை கடந்த பரம்பொருள், எல்லைக்குட்பட்டவற்றுள் தோன்றுவது முரணுரை போன்றதாகும். இம் முரண் படைப்பின் அடிப்படையிலேயே விளங்குவதாகும்.' தாகூர் சில பாடல்களில் இம் முரணுரையை ஏற்று அதற்கு விளக்கம் தராது விடுகிறார்.

'இந்த முதன்மையான படைப்பைச் சார்ந்த புதிரை நான் கவிஞன் என்கின்ற நிலையில் ஏற்க வேண்டும். எனது இதயத்தை எல்லையில்லாத வியப்பில் ஆழ்த்தி வைத்துக் கொள்கின்றேன்.' (உத்சர்கா–பாடல் 82). பிறிதொரு பாடலில் (நைவேத்யம் —பாடல் 88): 'இப் புதிரை நான் ஏற்க வேண்டும். எவ்வாறு ஒன்று இரண்டாகியது என்பதை நான் அறியேன். நான் அறியவும் இயலாது.' இதனை வியத்தகு செயல் என்று விரித்துத் தாகூர் அதற்கு விளக்கம் தராது விடுகிறார்.

'என்றும் உள்ள இவ் வியத்தகு நிலை யாதெனில் எல்லை கடந்த ஒன்று (பரம்பொருள்) எவ்வாறு எல்லைக்குட்பட்டனவற்றுள் வெளிப்படுகிறது என்பது ஆகும்' என்று குறிக்கிறார். விளக்கம் தர இயலவில்லை. வேறிடங்களில் தாகூர் இம் முரணுரையை அறிவிற்கு ஏற்ப, அளவை நெறியில் நின்று விளக்கம் தர இயலாது என்று கூறித் தமது தனி அனுபவத்தினின்று, தான் அனுபவிக்கும் உவகைப் பெருக்காக வைத்து விளக்கம் தர முற்படுகிறார். இறைவன் தனது மகிழ்ச்சியின் காரணமாகவே தன்னை எல்லைக்குட்படுவனவற்றின் மூலம் வெளிப்படுகிறார். அசிந்திய–பேதாபேத கொள்கையினர், வைணவ சிந்தனையாளராவர். இவர்களைப் போல் தாகூர் ஒன்று தானே சரண்புகுகின்றது. இது விளையாட்டாகும். இவ்வாறு செய்தல், இதனால் விளையும் மகிழ்ச்சிக்காகவே என்று தாகூர் கூறுகிறார். லீலை, கிரீடம் என்ற இச் சொற்கள் தாகூரது பாடல்களில் அடுத்தடுத்துக் காணப் பெறுகின்றன. எல்லைக்குட்பட்ட ஆன்மாக்கட்குத் தனித்த இருப்பு வழங்குவதினின்று இறைவன் தமது தோல்வியை ஒப்புகின்றான் எனல் வேண்டும். மல்யுத்த வீரன் தனது மகனோடு மல்யுத்தம் புரிகின்றபோது, தோல்வியை ஏற்று மகிழ்கின்றான். இதேபோல் இறைவனும் ஆன்மாக்கட்கு இருப்பு வழங்கி மகிழ்கின்றான் என்று தாகூர் விளக்கம் தருகிறார்.

'சாதனு' என்னும் நூலில் இறைவன் தமது படைப்பின் மூலம் வெளிப்படுகின்றுன் என்று கூறி உபநிடதப் பகுதிகளை மேற்கோள் காட்டுகிருர். 'ஞானம், ஆற்றல், செயல் ஆகிய இம் மூன்றும் இறைவனது இயற்கை அல்லது சுபாவம்' என்று கூறுகிருர். இறைவன் ஆற்றும் செயல்களெல்லாம் அவன் செயலுரிமையினின்று தோன்றுபவை. இக் கருத்தை வலியுறுத்த மற்ருேர் உபநிடதப் பகுதியை மேற்கோளாகத் தருகிருர். 'இன்பத்தினின்று அனைத்துப் படைப்பும் தோன்றுகின்றன. இவை இன்பத்தைநோக்கி முன்னேறுகின்றன. இன்பத்துள் இவை யாவும் நுழைகின்றன.' இதனுல் படைப்பு இன்றியமையாத காரணத்தால் திகழ்வதொன்றன்று. இறைவனின் முழுமையான இன்பத்தினின்று படைப்புத் தோன்றுகின்றது. அவனது அன்பே படைக்கின்றது. ஆதலால், படைப்பு மூலம் இறைவன் வெளிப்படுகின்றுன்.

அன்பு என்னும் தத்துவத்தின் மூலம் இறைவனின் அருவ-உருவ நிலைகளைத் தாகூர் இயைபு படுத்துகின்ருர். இதேபோல முற்ருெருமையையும் வேறுபாட்டையும் (Identity and difference) அன்புமூலமே இயைபுபடுத்தி விளக்குகின்ருர். அன்பிலே முற்றிலும் மாருனவை எல்லாம் இணைகின்றன. தத்துவச் சிந்தனையுள் ஒருமையும் இருமையும் முரண்படுகின்றன. அன்பு இவ்விரண்டையும் விளக்குகின்றது. அன்பிற்கு இருமை தேவை. இருமையின்றி அன்பு நிறைவு பெருது.

கெத்தே என்கின்ற ஜெர்மானிய அறிஞர் நெடுநாள்களுக்கு முன்னுலேயே 'அன்பு என்பது தெய்வீகத்தின் பிழிவு அல்லது முக்கிய கூறு என்கின்ற உண்மையைக் கடந்து நமது அனுபவம் வேறு எதையும் உணர்த்த இயலாது' என்று கூறியுள்ளார். வார்ட் (Ward) என்பவர் கூறுவது: 'சார்புடைய தீவிர நிலைகளான ஒருமை, இருமை எனப்பெறும் இவ் வெல்லைகளைக் கடத்தல் இயலாதா? இவற்றை இணைக்கவல்ல மேலான புனிதக் கருத்து ஏதும் இல்லையா?' என்று கேட்டுவிட்டு, 'அன்பு என்னும் கருத்தில் கடத்தல் இயலும்; தீவிரக் கொள்கைகளை இணைக்க இயலும்' என்று கூறுகிருர். பிரிங்கில் பேட்டிசன், வார்டு ஆகிய இவ்விருவரும் தாகூர் கருத்தைத் தழுவியே தமது கருத்தைச் சொல்லியுள்ளனர். அன்பு செலுத்தவும் அன்பைப் பெறவும் இருவர்—இருமை—வேண்டுமன்ருே !

தாகூர், அன்பை விரிந்த பொருளில் ஆளுகின்ருர். மாருனவையாகக் கருதப்பெறுகின்ற கருத்துகளை எல்லாம் இணைக்க வல்லது அன்பு என்ற கருத்தைத் தாகூர் கொண்டிருந்தார். அவர் தமது 'ஆத்ம பரிச்சயம்' என்ற நூலில் கூறுவது: 'பரமாத்மன் ஜீவாத்மன் ஆகிய இவ்விரண்டினிடையே நிலவும் அன்பு உறவை

உணர்தலையே சமய உணர்வு என்கின்றோம். இவ்வன்பிற்கு ஒருபுறம் பிரிவு உள்ளது, மறுபுறம் இணைப்பு அல்லது ஒன்றுதல் உள்ளது. இவ்வன்பின் எல்லைக்குட்பட்டதும், எல்லையில்லாததும் இணையக் காண்கின்றோம். சக்திக்கும் அழகிற்கும் இடையே ஒற்றுமை நிலவக் காண்கின்றோம். ரூபத்திற்கும் ரஸத்திற்கும் இடையே இணைப்பு நிலவக் காண்கின்றோம்.'

தாகூர் வைணவ சமயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அச் சமயம் துணிந்து இறைவன் தம்மை மனிதனுடன் பிணைத்துக் கொண்டுள்ளான் என்று கூறுகின்றது என்கின்றார். இணைப்பிலே மனித வாழ்வின் பெருமை அடங்கியுள்ளது. இதனை வியக்கத் தக்க ஒரு திருவிழாவாக உவமித்துத் தாகூர் கூறுகிறார். இறைவன் இப் படைப்பில் தன்னையே அர்ப்பணித்துள்ளான். காதலன், தனது காதலில் தன்னையே இழக்கின்றான். அன்பே இழப்பையும் பெறுதலையும் ஒருங்கே இணைத்துப் பிரிவற இயங்கச் செய்கின்றது. அன்பின் ஒரு முனையில் தன்னலம் நிலவுகிறது. மறுமுனையில் தன்னல இழப்பு நிலவுகின்றது. ஒருபுறம் 'நான் உளேன்' என்கின்றோம்; மறுபுறம் 'நான் இலேன்' என்கின்றோம். அகந்தை இலதேல் அன்பேது ? அகந்தை ஒன்றைக் கொண்டே அன்பு நிகழ்தல் இயலுமா ? அகந்தையின் நீக்கத்தில் தான் அன்பு நிறைவு பெறுகின்றது.

பந்தமும் வீடும் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டனவல்ல. அன்பு கட்டின்றியும் விளங்குகின்றது; அதே சமயம் கட்டுண்டும் விளங்குகின்றது. எல்லைகடந்த பரம்பொருள் தாமே எல்லைக்குட் பட்டு விளங்குகின்ற புதிரை மேற்கொள்கின்றான். எவனொருவன் அன்பு பூண்டு ஒழுகுகின்றானோ அவனிடத்து எல்லைக்குட்பட்டதும், எல்லையில்லாததும் ஒன்றுகின்றன. அண்மைக் காலத்து ஐரோப் பியச் சிந்தனையாளருள் க்ரோசே என்பவரும், பெர்க்ஸோன் என்ப வரும் ஒருங்கே அறிவாற்றலுக்கு முதலிடம் தர மறுத்துள்ளனர். பெர்க்ஸோன் உள்ளுணர்விற்கு முதலிடம் உயரிய இடம் தந்துள் ளார். தாகூர் அவர்களது சிந்தனையும், உணர்விற்கு முதலிடம் தருவதாக அமைகின்றது. அவர் உள்பொருளை அணுகும்போது தொடக்கத்தில் குறித்தது போல் அறிவு கொண்டு அதன் உண் மையை நிறுவ முற்படுகின்றாரிலர். 'ஒளியை நாம் உணர்வதைப் போல இறைவனை உணர்கின்றோம்' என்று கூறுகிறார். நேராகத் தமது அனுபவத்தை அடிப்படையாக அமைத்து இறையுண்மை யைச் சுட்டுகிறார். அவரது பாடல்கள் அனைத்திலும் இயற்கை யோடு உறவு கொண்டு, படைப்பின் பெருமையை—புதிரை—நமக்கு எடுத்து விளக்குகிறார். இந்நிலையில் உணர்விற்கே தாகூர் இடம்தரக் காண்கின்றோம். இதனால் க்ரோசே, பெர்க்ஸோன் ஆகிய இவ்விரு

சிந்தனையாளர்களுடன் தாகூர் இணைந்து உணர்விற்கு முதலிடம் தருகின்றார் எனலாம். ஆனால், அறிவு கொண்டு உள்பொருளையோ தத்துவச் சிக்கல்களையோ அணுகும் முறையைத் தாகூர் வெறுத்து ஒதுக்கினார் என்று கூற இயலாது. சாந்திநிகேதன் தொடர் மூன்றில், தாகூர் நமக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் கூறுவது : 'நாம் அறிவாற்றலைப் பயன்படுத்தும்போது, பொறுமை இழந்து இதயத்தின் உள்பொருளை உணர்ச்சிகளின் மூலம் அணுக முற்படுகிறோம். இதன் விளைவாக உணர்ச்சிப் பெருக்கு நேரு கின்றது. இதனை நாம் பக்தி என்று பிறழ்வாகக் கொள் கின்றோம். இறைவனை உணர்ச்சி மூலம் மட்டும் அணுகுவதானது அவனது கூறுகளுள் ஒன்றை மட்டும் பிறவற்றினின்று பிரித்து அறிவதாகும். மனிதனுக்கு அவனது இதயம் மட்டும் வழிகாட்டு வதில்லை. உடல், உள்ள ஆற்றல்களனைத்தையும் உணர்ச்சி என்னும் பெருவெள்ளத்துள் கலக்க விடுவோமேயானால், நாம் இறைவனோடு ஒன்ற இயலாது. ஏனெனில் இறைவன் நம்முள் முழு மனிதத் தன்மையுடன் விளங்குகின்றான்.' முழுமையான மனிதன் அறிவாற்றல் மட்டும் உடையவனன்று; இதேபோன்று உணர்ச்சிகளின் வடிவம் என்றும் மனிதனைக் கொள்ளுதல் தவறாகும். ஆதலால் முழுமையான மனிதன், அறிவு, ஆற்றல், உணர்ச்சி ஆகிய முக்கூறுகளையும் உடையவன்.

அத்துவித வேதாந்தம் ஞானநெறியைப் பெரிதும் வற்புறுத் தியது. தாகூர் சங்கராச்சாரியாரிடம் பெருமதிப்புக் கொண்டு விளங்கினார் என்றாலும், அவரது ஒருமைக் கொள்கை தீவிர நிலை யில் கடைப்பிடிக்கப்பெற்றதால் தாகூருக்கு உடன்பாடாக அமைய வில்லை. சீரிய சிந்தனையாளராகவும், நடுவுநிலைப் பிறழாத கவிஞ ராகவும், இந் நாட்டுப் பல்வேறு சிந்தனை அமைப்புகளில் தோய்ந்த வராகவும் தாகூர் விளங்கிய காரணத்தால், இருமைக் கொள்கை யினைத் தீவிரமாகப் பின்பற்றுவதால் நேரிடக்கூடிய நிலையை நன்கு உணர்ந்திருந்தார். அவர் கூறுவது : ''இருமைக் கொள் கையர் இந் நாட்டில் அத்துவிதத்தை அஞ்சத்தக்க ஒன்றாகக் கொள்கின்றனர். அவர்களும் பொறையின்றி விளங்குகின்றனர். அத்துவித வேதாந்தத்தில் உள்ள குறைகளையே காண்கின்றனர். அதனிடத்து விளங்கும் உண்மைக் கூறுகளைப் புறக்கணிக் கின்றனர்.'

ஆன்மாக்கள் இறைவனுக்கு வேறானவை. அவை எல்லைக்குட் பட்டும், நிறைவற்றும் விளங்குதலால், வேறானவை. என்றாலும், இறைவனோடு இணைந்து விளங்குகின்றன. இறைவனுக்கும் ஆன்மாக்கட்கும் இடையே நெருங்கிய உறவு நிலவுகின்றது என்று தாகூர் கருதுகிறார். ஆன்மா இறைவனை நாடுகின்றது.

இறைவனும், ஆன்மாவோடு கலக்க விழைகின்றது. இறைவன் ஆன்மாக்களினின்று பிரிந்து விளங்குவானுனல், அவன் செயலற்று, இயக்கமற்று விளங்குவான். ஆன்மாக்களோடு அன்பினுல் பிணைக்கப்பட்டு விளங்குகின்ற காரணத்தால்தான் இறைவன் செயற்படுகின்றுன். தாகூருக்கு இருமை அல்லது பன்மை வாழ்க்கைக்குச் சுவையூட்டுகின்றது. பிரிவும் இயைபும் முன்னேற்றத்திற்குக் காரணமாகின்றன. ஆன்மாக்கள் இறைவனிடமிருந்து பிரிந்திருத்தலால் தொல்லைகட்குள்ளாகின்றன. இறைவனேடு இணைதலால் மகிழ்ச்சிக்குள்ளாகின்றன. ஆன்மீக நிறைவுக்குப் பிரிவும் இணைதலும் ஒருங்கே தேவை. ஒருவன் தன்னுள்ளே கட்டுண்டு, தன்னலத்துடன் வாழும்போது துன்ப அனுபவங்கட்கு உள்ளாகின்றுன். ஆனல், தன்னலத்தைத் துறக்கின்ற அளவில் அவன் இறைவனேடு இணைகின்றுன்.

## உலகு

இயற்கை, பிரிகிருதி, ஜகத் பன்மையுலகு என்று எவ்வாறு வழங்கினுலும் அவை யாவும் இவ்வுலகைக் குறிப்பனவே. எந்த அளவிற்கு நாம் இவ்வுலகில் உண்மையை ஏற்பது? இவ்வுலகு மாறுகின்ற இயல்பு உடையது; பல்வகைப்பட்டதாக விளங்குகின்றது. இவ்வுலகு உண்மை அன்று என்றுல், ஏன் அது தோற்றமளிக்கின்றது? அஃது உண்மை எனில், உள்பொருளாகிய பரம்பொருள் அன்னியில் எந்த அளவில் தனித்த இருப்பு உடையது? இக் கேள்விகட்கு விடைகாணும்போது நாம் 'மாயை' என்னும் கருத்தமைவைப் பயன்படுத்துகின்றேம். இச் சொல், இந்தியச் சிந்தனையாளர் பல பொருள்களில் வழங்கியுள்ளனர். உலகின் உண்மையை அறியவொட்டாது அறிவை மயக்குகின்ற நிலைக்கு மாயை என்கிறேம். உலகிற்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவை விளக்க மாயை என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அத்துவித வேதாந்திகள், பிரம்மமே உள்பொருள், ஆதாரம்; உலகு அவ்வாதாரத்தின்மீது தோன்றுகின்ற ஒன்று என்கின்றனர். உலகின் தோற்றத்தை விளக்க மாயை என்பதனைப் பயன்படுத்துகின்றனர். மாயை உள்பொருளா? பிரம்மமே உள்பொருளாதலால் மாயை உள்பொருளாகாது. அது இல்பொருளா? அது உலகத் தோற்றத்திற்குக் காரணமாக விளங்குகின்றதால் இல்பொருளன்று. அது உள்ளதும் இல்லதும் என்று கூற இயலுமா? இது முரண்படுகின்ற இருவேறு இயல்புகளை ஒருங்கே மாயையிற்கு ஏற்றுவதாகும். ஆதலால், உள்ளது என்றும் இல்லது என்றும் கூற இயலாது. மாயையின் தன்மை, இன்னது என்று வரையறுத்துக் கூற இயலாது என்கின்றதை உணர்த்த அத்துவித வேதாந்திகள் 'அநிர்வசனீயம்' என்கின்றனர். மேலும் 'சதத் அசத்

விலக்ஷணம்' என்றும் கூறுகின்றனர். இந் நிலேதான் அத்துவித வேதாந்திகள் கொள்ளும் கருத்து.

ஆன்மா எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு இவ்வுலகும் உண்மை என்றே தாகூர் கொள்கிறுர். ஆன்மாவிற்குத் தனித்த இருப்பு உண்டு என்று நாம் ஏற்றுக்கொண்டு, உலகிற்குத் தனித்த இருப்பு வழங்க மறுப்பது பொருத்தமில்லே என்பது தாகூர் கருத்தாகும். இயற்கையில் உள்ளார்ந்த நிலேயில் இறைவன் விளங்குகின்றுன். இறைவன் செயலுரிமையோடு இயற்கையை இயக்குகின்றுன். அறிவுகொண்டு இயற்கையை அணுகுவோர், அதனேத் திரிபு காட்சி என்றும், மித்தை என்றும் கூறுவர். ஆனல், நாம் உலகிேைடு உறவு கொண்டு அனுபவிக்கும்போது அஃது உண்மை என்றே நமக்கு அமையக் காண்கின்ருேம். ஒருவன் ஓர்அறையில் தன்னே அடைத்துக் கொள்கிருன். ஜன்னல்களேயும் கதவுகளேயும் உட்புறம் தாளிட்டுக் கொள்கின்ருன். இருளில் அமர்ந்து சிந்திக்கின்ருன். இவன் உலகைச் சாயை என்று கூற முற்படுகின்ருன். இவனது நிலே எள்ளி நகையாடுதற்கு உரிய நிலேயாகும் என்கிருர் தாகூர்.

தாகூர் படிநிலே உண்மையை (Doctrine of degrees) ஏற்கிருர். இறைவன், முழுமையான உண்மையுடையவன். அவனே நோக்க உலகிற்கு அத்துணே உண்மையில்லே. ஆனல், உலகிற்கு உண்மையே இல்லே என்று கூறுதல் இயலாது. தோற்றம் உண்மை நிலேக்கு மாருனதன்று. நாம் அன்ருட வாழ்வில் பயன் படுத்தும் ரூபாய்நோட்டு,வெறுந்தாள்தான்.அத் தாளின்மீது ரிசர்வ் வங்கியின் முத்திரை உள்ளதால்தான் அதற்குச் சிறப்பு உண்டு. முத்திரையின்றியும் தாள் என்பதற்கு இருப்பு அல்லது உண்மை உண்டு. இவ்வுவமையைத் தாகூர் தருகின்ருர். அத்துவித வேதாந்தத்தில் இல்பொருளிற்கும், மித்தையாகத் தோன்று கின்றனவற்றிற்கும் வேறுபாடு காணப்பெறுகின்றது. சிப்பியினிடத்து வெள்ளி தோன்றுகின்றது. வெள்ளி இல்பொருள். இப்பொருள் சிப்பியினிடத்துத் தோன்றுகின்றது. ஆனல், உலகின் தோற்றம் இத்தகையதன்று. தாகூர் தோன்றுகின்ற நிலேயும் உண்மையின் கூருகும் என்கின்ருர். ஆதலால் தாகூர் எல்லேக்குட்பட்ட உலகை ஏற்கிருர். உபநிடதங்களின் பகுதிகள் அத்துவித வேதாந்தத்திற்கு அரண் செய்கின்றன என்று கூறு கின்றனர். ஆனல் உபநிடதங்களேக் கூர்ந்து அறியும்போது அவை, எல்லேக்குட்பட்ட உலகை மறுப்பதைக் கண்டித்துள்ளன என்பதை அறியலாம். ஈசோபனிடதத்தில் 'எல்லேக்குட்பட்ட உலகில் மட்டும் அழுந்தியிருப்பவர்கள் இருள் சூழ்ந்த பகுதியினுள் புகுகின்றனர்; எல்லேயிறந்த பரம்பொருளினிடத்தில் மட்டும்

அழுந்தியிருப்பவர்கள் மேலும் இருள் சூழ்ந்த உலகில் புகுகின்றனர்.' அன்றாட வாழ்வில் நாம் அனுபவத்தில் உணரும் உலகை மறுப்பது, தப்பி ஓடுவதாகும், அறிவு வழியன்று. எல்லையிறந்த பரம்பொருள் தனி நிலையில் விளங்கும்போது அது வெறுமையேயாகும். எல்லைக்குட்பட்டதேனும் நாம் அறியக்கூடிய ஒன்றாகும். காசு ஓலை நாம் வைத்திருந்து, அதற்கு ஏற்ப வங்கியில் பணம் சேமித்து வைத்திராத நிலையை அது ஒத்தது. ஆனால் பரம்பொருளிற்கோ வங்கியில் காசும் இல்லை; காசு ஓலைகளும் இல்லை என்று தாகூர் கூறுகின்றார்.

புற உலகு உண்மை எனில் அதை மாயை என்று விளக்குதல் பொருந்தாது. மாயை என்ற சொல்லைத் தாகூர் வழங்குகின்றார். ஆனால், மரபுவழி வந்துள்ள சிக்கல்களில் அவர் சிக்குறாது அச்சொல்லை வழங்குகின்றார். 'மாயை', 'அவித்தை' என்ற இரு சொற்களையும் ஒரே பொருளில் ஆளுகின்றார். 'சாதனா' என்னும் நூலில் தாகூர் கூறுவது: ''நமது நாட்டுச் சிந்தனையாளருள் சிலர், எல்லைக்குட்பட்ட தன்மை என்று ஏதும் இல்லை. அது மித்தை அல்லது மாயை என்கின்றனர். உண்மையாக விளங்குவது பரம்பொருளே ஆகும். மாயை, இல்பொருளே; எல்லைக்குட்பட்டவை தோன்றுவதற்குக் காரணம். 'மாயை' என்பது பெயரே ஆகும். அது விளக்கமன்று. உண்மையோடு, உண்மையல்லாததும் விளங்குகிறது என்று சொல்வதாகும். எவ்வாறு அவை இரண்டும் ஒருங்கே விளங்குகின்றன என்பது விளக்கப்பெறவில்லை.''

'மாயை' என்னும் கருத்தமைவு தோன்றுகின்ற உலகின் இருப்பை நமக்கு நிறைவு தோன்ற விளக்காவிடினும், புறவுலகை இறைவனுக்கு அயலான இருப்புக்குடையது என்று கருதுவதினின்று நம்மைத் தவிர்க்கின்றது. இயற்கை அல்லது உலகு இறைவனிடமிருந்து பிரிந்து இயங்க இயலாது; உலகும் இறைவனும் முற்றொருமையுடையன என்றும் கொள்ள இயலாது என்பதே தாகூரின் கருத்தாகும். அவர் கூறுவது: 'உலகு இன்றி இறைவன் கற்பனைத் தோற்றமாகும். இறைவனின்றி உலகு குழப்பமாகும்.' 'சத்யம்' என்ற சொல் பரம்பொருளும் உலகும் ஒன்றையொன்று சார்ந்து விளங்குகின்றன என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது. உலகு தன்னளவில் உண்மையுடையது என்ற கருத்தையும், பரம்பொருளும் உலகும் ஒன்றையொன்று சார்ந்து விளங்குகின்றன என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றது. உலகு தன்னளவில் உண்மையுடையது என்ற கருத்தையும், பரம்பொருளோடு எவ்வித் தொடர்புமின்றி விளங்குகின்றது என்ற கருத்தையும் பிழையுடையன என்று 'மாயை' என்ற சொல் வெளிப்படுத்தும். மாயை என்ற சொல் உலகியல் நிகழ்ச்சிகள் நமக்கு எத்தன்மையன என்று

அறிய வொண்ணுத வகையில் நம்மை மயக்குவதை உணர்த்துவ தாகும். நிகழ்ச்சிகள் நிலையற்றவையாக விளங்குகின்றன. அவை எவ்வாறு வருங்காலத்தில் விளங்கும் என்பதையும் உணர்த்த இய லாது. இவற்றை உரைக்கும் சொல் மாயையாகும். உலகு இத் தன்மையது என்று சொல்வது வேறு, அதற்கு உண்மையே இல்லை என்பது வேறு. மாயை என்பது உலகின் உண்மையை மறுப்ப தன்று. கனவு காணும்வரை உண்மையாக விளங்குகின்றது. விழித்தெழுகின்றபோது, கனவு பொய்யாகப் பொருளற்றதாக மாறுகின்றது. படம் வரையப்படும் திரைச் சீலை உறுதியானது. நெடிது நிலவக்கூடியது. ஆனல், அச் சீலைமீது வரையப்பெறும் படமே நமக்குப் பொருளுடையது என்று தாகூர் கூறுகிருர். இவ்வாறு அழகியல் உவமையைக் கொண்டு உலகுண்மையை ஏற்கின்ருர். 'உலகை ஒரு கலைப் பொருளாகக் காண்கின்ருர். அது உள்ளது என்றும், இல்லது என்றும் கூறலாம். அஃது எவ்வாறு விளங்குகின்றதோ அவ்வாறே தோன்றுகின்றது. உலகின் கூறுகள் நமக்கு விளங்காமல் போகலாம். இவற்றை மாயை எனலாம். இதனுல் பெருங்கலைஞனுகிய (இறைவன்) மாயாவினுக்கு எவ் விதத்திலும் குறையில்லை'. 'மாயை' என்னுஞ் சொல்லிற்குத் தாகூர் விரிந்த பொருளைத் தருகின்ருர். அவர் அத்துவிதிகள் கொள் ளும் நிலையை முற்றிலும் மறுக்கவில்லை. அவர் தம்மை முற்றிலும் கவராத கொள்கையையும் விரிந்த மனத்துடன் கருத இயலும் என்பதை நன்கு விளக்குகிருர்: 'மாயா வாதம்' ஏன் இந்தச் சொல்லைக் கேட்டு சினங் கொளல் வேண்டும்? 'மித்தை' என்று ஏதுமில்லையா? உண்மை எப்போதும் நமக்கு மறைப்பின்றி வெளிப் படுகிறதா? எரியும் விறகு கொண்டே தீ எழ இயலும். இதேபோல் உண்மையை உணர மாயையை நாம் வெல்லுதல் வேண்டும். மாயை என்னும் எரிபொருள் உண்மை என்னும் தீயை எரியூட்டும் பணிபுரிகிறது எனலாம். ஆனல், மாயையும் உள்பொருளும் ஒன்றே என்று கூற இயலாது. எரிபொருள் வேறு; தீ வேறு. நிறைவற்ற தன்மைக்கு இரு கூறுகள் உள. ஒன்று அஃது எல்லை இறந்ததை வெளிப்படுத்தும்; மற்றென்று அதை மறைக்கும். இவ்வாறு பரம்பொருளை மறைப்பதைத்தான் மாயை என்கின்ருேம். இந் நிலையில் மாயை என்னும் கொள்கையைக் கண்டனம் செய்வதற்கு உரிமை நமக்கு ஏது?''

## மோட்சம் அல்லது வீடுபேறு

இந்திய தத்துவத்தில் சில தரிசனங்கள் மோட்சம் என்பது இவ்வுலகிற்கு அயலான ஒரு நிலையாகக் கருதுகின்றன. ஆன்மா இறையோடு ஒன்றிவிட்ட பிறகு அதற்கு இவ்வுலக வாழ்க்கை நீங்குகிறது. தன்னுணர்வு பெற்ற ஆன்மா வரையறையுருத பரம்

பொருளிடத்தில் ஒன்றிவிடுகிறது. ஆன்மாக்கள், தம்மை உணர்ந்தவுடன் உடல், உள்ளம் யாவையும் விடுத்துப் பரம்பொருளினிடத்து ஒன்றி விடுகின்றன என்று அத்துவித வேதாந்தம் கூறுகிறது. இவ்வாறு நிறைவு பெற்ற ஆன்மாக்கள் உலகிற்குப் பயன்படுகின்றில.

தாகூர் அவர்கட்கு, ஆன்மாக்கள் என்றென்றும் பரம்பொருளோடு ஒன்றி வாழ்கின்ற வேறு உலகு ஒன்று உண்டு என்பது உடன்பாடன்று. அவருக்கு விடுதலை என்பது இந் நிலவுலகிலேயே தெய்வீக வாழ்வு வாழ்வதாகும். தன்னை உணர்தல் என்பது நிறைவான ஆன்மீக வாழ்வாகும். இறைவனோடு அன்பினால் பிணைக்கப்பெற்று வாழ்கின்ற வாழ்வே ஆன்மீக நலனாகும். உயர்ந்த ஆன்மீக வாழ்வு அல்லது வீடுபேறு பெறுகின்றபோதும் ஆன்மாக்கள் தமது தனித்தன்மையை இழப்பதில்லை என்று தாகூர் கருதுகிறார். ஆன்மாக்கள் இறைவனோடு இவ்வுலகிலேயே ஒன்றி வளமான, நிறைவான தெய்வீக வாழ்வை ஆன்மாக்கள் வாழ்வது தான் வீடுபேறு என்று தாகூர் கருதுகிறார். மோட்சம் என்பது மறுபிறப்புகளினின்று விடுதலை பெறுவதன்று, பிரபஞ்சத்தினின்றும் நீங்குவதன்று, மாறுபாடில்லாத அமைதியான வாழ்க்கையுமன்று என்று தாகூர் கருதுகிறார். கீதாஞ்சலியில் இறைவன் இப் பிரபஞ்சத்தோடு பின்னிப் பிணைந்து விளங்குகிறார். ஆதலால், இவ்வுலகினின்று தப்புதல் இயலாது என்கின்றார். இவ்வுலகப் பந்தங்களும் இறைவனால் ஏற்படுத்தப்பெற்றவை. ஆதலால், கட்டுண்ட நிலையிலேயே நாம் விடுதலை பெறவேண்டும். தாகூர் கீதாஞ்சலியில் கேட்பது: ‘விடுதலை? எங்கே விடுதலை பெற இயலும்? நமது தலைவனே (இறைவன்) படைப்பு என்னும் தளைகளைத் தானே உவந்து மேற்கொண்டுள்ளான். நம்மோடு இணைந்து என்றென்றும் விளங்குகிறான்’ என்பதாகும். இறைவன் இவ்வுலகைப் படைத்திருப்பதே நாம் அன்பினால் அவனுடன் கட்டுண்டு விளங்கவேண்டும் என்பதற்காகவே. ஆதலால், இவ்வுலகைவிட்டு எங்கே நாம் ஓடிவிட இயலும்? இறைவன் யாண்டும் நிறைந்துள்ளான். உண்மையை உலகிடையேதான் உணர இயலும். உலகினின்று நீங்குதல் என்பது இறைவனிடமிருந்து பிரிந்து செல்லுதல் ஆகும். தாகூர் கீதாஞ்சலியில் கூறுவது: ‘எனக்கு விடுதலை துறவிலே அமைவதன்று. எண்ணிறந்த இன்பத் தளைகளிலே நான் செயலுரிமையை உணர்கின்றேன். வெவ்வேறு நிறமுள்ள மணமிக்க மதுவை இவ்வுலக வாழ்க்கை என்னும் கோப்பையில் (இறைவனே) நிறைக்கின்றாய். இவ்வுலகு இறைவனை நாம் கண்கூடாகக் காணக்கூடிய வெளிப்பாடாகும். புலன்களின் மூலம் நாம் இறைவனை உணர்தல் பேரின்ப

மாகும். இறைவன் நமது புலன்களின் மூலம் நம்முள் புகுகின்றான். ஆதலால், புலன்களை நாம் அடைக்க வேண்டுவதிலது. புலன்களை அடைத்து இறைவன் நமக்கு வாரி வழங்குகின்ற இன்பத்தை நாம் மறுக்க வேண்டியதிலது. கீதாஞ்சலியில் தாகூர் கூறுவது: 'நான் எனது புலன்களை அடைக்க மாட்டேன். காட்சி, கேள்வி, தொடுதல் போன்றவற்றால் நான் பெறுகின்ற இன்பம் உன்னை (இறைவனை) எனக்கு உணர்த்து கின்றது. எனது மயக்க உணர்வுகள் எல்லாம் இன்பமாக ஒளி பெறும். எனது விருப்பங்களெல்லாம் அன்பாகப் பழுத்து விளங்கும்.'

இறைவன் நமக்குத் தளையை விதித்துள்ளான் என்றால், நாம் ஏன் விடுதலைக்காக முயலவேண்டும்? இறைவனைச் சார்ந்து அவனோடு இணைந்து அவனுக்குக் கட்டுப்பட்டு விளங்குதலிலே நாம் இன்பம் காண்கின்றோம். இவ்வாறு இறைவனைச் சார்ந்து விளங்குகின்ற நிலையிலே மனிதன் விடுதலை பெறுகின்றான். இக் கொள்கைவைணவநூல்களில் நாம்காண்பதாகும். சூடிக்கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் தமது திருப்பாவையில் 'சிற்றஞ்சிறு காலே' என்று தொடங்குகின்ற பாசுரத்தில் 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமேயாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று அருளுகின்றாள். இறைவனுக்கு ஆட்பட்டுக் குற்றேவல் புரிந்து, அவனது அனந்த கல்யாண குணநலன்களை இடையறாது துய்த்தலையே வைணவர்கள் விடுதலையாக, நாம் பெறத்தக்க பேறாகக் குறித்துள்ளனர். பிறவிகள் எத்துணை அமை யினுஞ் சரி, அத்துணை பிறவிகளுள்ளும் நாம்இறைவனது உறவையே நாடுதல் வேண்டும். அவனுக்கே அடிமையாக விளங்குதல் வேண்டும் என்ற பிரார்த்தனையில் வைணவப் பெருமாட்டியாகிய ஆண்டாள் ஆன்மாக்கள் என்றென்றும் இறையைச் சார்ந்து நிற் கின்ற நிலையை விளக்குகின்றாள்.

வைணவக் கருத்துகள் தாகூரைப் பெரிதும் கவர்ந்தன என்பதை மேற்காட்டிய ஆண்டாளது கருத்தோடு எத்துணைப் பொருத்தமுடையது என்பதன் மூலம் நாம் அறிந்து கொள்ள லாம். விடுதலை என்பது என்றென்றும் நிகழக்கூடியது. மனிதன் இறைநிலையை அறிய முயல்கின்றான். இறைமைக் குணங்கள் இவனிடத்து மிகக் காணலாமே தவிர இவன் என்றும் இறைவ னாதல் இயலாது. 'சாதனா' என்னும் நூலில், 'எல்லைக்குட்பட்ட ஆன்மா, என்றும் பரம்பொருளிடத்தில் கரைந்து, ஒன்றிவிடுவ தன்று. மனிதன் என்றும் நிறைவற்றவனாகவே விளங்குகின்றான். மனிதன் மேலும் மேலும் இறைவனை அணுகுகிறான். ஆனால், என்றும் இறைவனோடு ஒன்றுவதில்லை. ஆத்மனுக்கும் பிரம்மத் திற்கும் இடையே உள்ள இருமை என்றும் நீங்குவதில்லை. வீடு

பேற்றிலும் மனிதன் தனது தனித்தன்மையை இழப்பதில்லை. அனுபூதி நிலையிலே மனிதன் தாற்காலிகமாக இறைவனோடு ஒன்றலாம். அத்தகைய நிலைகள் உயர்ந்த உணர்வு நிலைகளாகும். காதலன், சில தருணங்களில் தனது காதலியோடு ஒன்றி தன்னையே மறக்கின்றான். பிறகு தான் வேறு, காதலி வேறு என்ற உணர்விற்கு மீள்கின்றான். இதேபோல அனுபூதி நிலையில் பரம்பொருளோடு ஒரோவமயம் ஒன்றுதல் உண்டு. இறைவனிடத்து நாம் கொள்ளும் அன்பு நிறைவானதாக முழுமையானதாக எவ்விதப் பற்றின்றி அமையுமானால் அதுவே வீடு பேறாகும். சமய உணர்வு என்பது பரமாத்மனுக்கும், ஜீவாத்மனுக்கும் இடையே உள்ள அன்பை அனுபவித்தலாகும். இவ் வன்பிற்கு ஒருபுறம் பிரிவு உண்டு; மறுபுறம் கூடுதல் உண்டு. ஒருபுறம் தளையுண்டு; மறுபுறம் விடுதலை உண்டு; எல்லைக்குட்பட்டதும் எல்லைக்குட்படாததும், ஆற்றலும் அழகும் (சக்தி, சௌந்தர்யம்), வடிவமும் உணர்ச்சியும் (ரூபம், ரஸம்) அன்பில் ஒன்றுகின்றன.

இறைவனை உணர இரு முறைகளைத் தாகூர் வகுத்துள்ளார். ஒன்று பக்தி நெறி, மற்றொன்று தொண்டு நெறி. வழிபாடு, பிரார்த்தனை, தியானம், சரண்புகுதல், அர்ப்பணித்தல் முதலிய சாதனங்களால் நாம் இறைவனிடத்து இடையறாத அன்பு பூண்டு விளங்குகின்றோம். இதையே அன்புநெறி என்றும், பக்தி என்றும் கூறுகின்றோம். பற்றின்றி நாம் நமது கடமைகளை மேற்கொண்டு இறைவனை உணர்தலும் இயலும். இதனைத் தொண்டு நெறி என்கிறோம். பற்றின்றி செயல்களை மேற்கொள்ளுதல் அருமை. ஆதலால் 'நம் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று அப்பர் அருளுவதைப் போல் நமக்கு அமைந்துள்ள கடமைகளையோ அல்லது விரும்பி மேற்கொள்ளும் செயல்களையோ இறைவனுக்கு என்று அர்ப்பணித்துப் பயன் கருதாத (நிஷ்காம்ய கர்மம்) தொண்டினைக் கரும மார்க்கம் என்று கூறுகிறோம். கீதாஞ்சலியில் தாகூர் இருட்டறையில் தனித்து இருந்து ஜெபமாலையினை உருட்டுகின்றவனைப் பார்த்து அவன் யாரை வழிபடுகின்றான் என்று வினவுகின்றார். அவனை அந்த அறையை விடுத்து வெளியே வந்து கல்லை உடைப்பவனோடு கூடி நின்று பணி செய்யுமாறு அறிவுரை கூறுகின்றார். இறைவனே படைப்பு என்னும் பெரும் பணியை மேற்கொண்டு இடையறாது செயற்படுகின்றான். ஆதலால், இறைவனைப் பின்பற்றி நாமும் செயற்படுதல் வேண்டுமல்லவா ?

தாகூர் தாம் இலக்கியப் பணியினை மேற்கொண்டு தனித்திருந்தார். பரம்பொருளைத் தனியே தியானித்து இருத்தல்

அவருக்கு நிறைவு தரவில்லை. அவர் தாம் நாளும் பயின்று வந்த நூற்பகுதிகள் அவருக்கு ஊக்கந்தரவில்லை. பின்னர் மனிதச் சமுதாயத்திற்குப் பயன்கருதாத தொண்டின் மூலம் தம்மை ஈடு படுத்திக்கொள்ள முற்பட்டதாகக் கூறுகிறார். ஆதலால், பற்றின்றி தொண்டு உகத்தல் என்பது தாகூர் தம் உள்ளுணர்வில் உணர்ந்து நமக்கு வழிகாட்டியதாகும். உபநிடதம் 'ஞானம், சக்தி, செயல் ஆகிய இம்மூன்றும் பிரம்மத்தின் இயல்பு' என்று கூறு வதால் நாம் இவற்றைப் பிரித்தல் கூடாது என்று தாகூர் கூறுகிறார். பணிசெய்வதிலே விளையும் இன்பத்தை நாம் ஊன்றி அறிதல் வேண்டும் என்பது தாகூர் கருத்தாகும். 'சாதனு' என்னும் நூலில் 'செயல் மூலம் இறைவனை உணர்தல்' என்ற பகுதியில் தாகூர் கூறுவது : 'உழவன் கடுமையான நிலப்பகுதியை உழுது, பண்படுத்தி நெல் விதைத்து, நெற்பயிர் வளரக் காண் கின்றான். அங்கே இறைவனது இன்பமே, நெற்பயிரின் பசுமை யாக வெளிப்பட்டு நிற்கின்றது. காடு வெட்டி நிலம் திருத்தி, நல்ல சாலை அமைக்கின்றவனும் அச் செயல்களின் மூலம் இறைவனையே அமைதியில் காண்கின்றான்.'

## தீமை

உலக வாழ்க்கையில் நாம் ஏன் தீமையைக் காண்கின்றோம்? அல்லது ஏன் நிறைவின்மை நேரிடுகின்றது? சுருங்கக் கூறினால் ஏன் படைப்பு நிகழ்கின்றது? தாகூர் இக் கேள்விகள் நமக்குத் தீமையின் இருப்பை உணர்த்துவதோடு, அவை படிமுறையே விளங்குவதையும் காட்டுகின்றார். இங்கு எழுப்பவேண்டிய கேள்வி யாதெனில், நிறைவின்மை முடிவான உண்மையா? என்பதாகும். தீமையை அகற்ற இயலாதா? ஓர் ஆறு இரு கரைகளின் நடுவே ஓடுகின்றது. இருமருங்கும் மேடிட்ட கரைகள் ஆற்றின் ஓட்டத் திற்குத் துணை செய்கின்றன. கரைகள் மட்டும் ஆற்றின் ஓட்டத்தை உணர்த்தமாட்டா. இவ்வுவமைகளைத் தாகூர் குறிப் பிடுகின்றார்.

இறைவனிடத்துத் தீமை இல்லை. ஏனெனில், அவன் நிறை வுடையவன்; எல்லையற்றவன், இன்பமயமானவன். உணர்வு வடிவ மானவன்; உண்மை அவன் சொரூபம். நாம் எல்லைக்குட்பட்டு விளங்குவதால், நிறைவற்று விளங்குவதால், தீமையால் வாடுகின் றோம். வாழ்க்கையில் நாம் காணும் தீமைகள், மரணம், பிணி, மூப்பு, வறுமை போன்றன.

முடிவாக நோக்குமிடத்துத் தீமை என்பதற்கு இருப்பு இல்லை. தீமை உள்பொருளின் அமைப்பில் இடம் பெறுவதின்று. ஆன்மா விற்கு உள்ள தடைகள், அறியாமை முதலியன நீங்குகின்றபோது

அது இன்பம் எய்துகின்றது. இன்பமே முடிபான குறிக்கோளாகும். படைப்பில் தீமை நிலையான இடம் பெறுவதின்று. விஞ்ஞானத்தின் வளர்ச்சியே இப் பிழைகளை அகற்றுகிறது. உண்மையைப் படிமுறையே உணர்கிறோம். இவ்வுண்மையுணர்வையே நாம் நினைவிலிருத்துதல் வேண்டும். நிகழ்ந்த பிழைகளை நாம் மறக்கின்றோம். பிழை என்பது தன்னியற்கையில் நிலையானது அன்று; அஃது உண்மையோடு இயைந்து நில்லாது. இறைவனோடு ஆன்மா ஒன்றுகின்றபோது தீமை விலகுகின்றது. ஆதலால், தீமை தொடக்கத்திலும் இல்லை. முடிபிலும் இல்லை; நிறைவற்ற மனிதர்களிடையே தீமை நிலவுகின்றது.

மரணத்தைப் பெருந் தீமை என்று கருதுகிறோம். ஆனால், இது தவறாகும். ஆன்மா ஒரு பிறவியினின்று மறுபிறவிக்குத்தொடர்ந்து பயணம் செய்கின்றது. ஆன்மாவிற்கு மரணம் என்பது கிடையாது. உடல் நலிவுறுகின்றபோது, அவ்வுடலை நீக்கிப் பிரிதோர் உடலை ஆன்மா எடுத்துக் கொள்கின்றது. மரணம் என்பது தீமைஅன்று. சமய வழக்கில் மரணம் நிகழும்போது விடுதலை எய்துகின்றது என்கின்றோம்.

மரணத்தை வாழ்வோடு இணைத்து அறிய வேண்டும். வாழ்க்கை மரணத்தைத் தீமையாகக் கருதுவதில்லை. வாழ்க்கையில் சிரிக்கிறோம்; விளையாடுகிறோம்; மகிழ்கிறோம். மரணத்தை எப்போதும் நினைவில் வைத்திருத்தலில்லை. உருப்பெருக்கியின் மூலம் ஒரு சிறிய துணியைப் பார்த்தால் அது வலையைப்போன்று விளங்கும். அதில் தோன்றும் துளைகள் பெரிதாகத் தோன்றுகின்றன. இதே போன்று வாழ்க்கையில் நிகழும் துன்பங்களைப் பெரிதாக நாம் மதிக்கின்றோம். மரணம் உண்மையன்று; மரணம் என்பது நிழல்போன்று தொடர்கின்றது. மரணத்தின் இடையீட்டால், ஆன்மா அழிவதின்று. நீலவானம் அதன் கீழ் பறக்கும் பறவையைக் கறைபடுத்துவதில்லை. இதேபோல் மரணம் ஆன்மாவைக் கறைபடுத்தாது. மரணத்தை நாம் தீமை என்று கருதுதல் தவறாகும். மரணம் வாழ்வின் முடிபன்று. பரம்பொருள் மற்றொரு வாழ்விற்கு விடுக்கின்றதோர் அழைப்பே மரணமாகும். தாகூர் இங்கு ஓர் அழகிய உவமையைத் தருகின்றார். மணப்பெண் தன்து இல்லத்தை விடுத்துத் தனது மணாளனை இரவின் தனிமையில் சந்திக்கச் செல்வதைப் போன்று நாம் மரண அழைப்பை ஏற்றுப் புனர் வாழ்வை மேற்கொள்ளச் செல்கின்றோம். மணப்பெண் தனது இவ்வுலக வாழ்க்கையைத் தனது மணாளனுக்கு மாலையிடத் தொடுக்கும் மாலையாகக் கருத வேண்டும். தாய்ப்பால் அருந்தும் சேய் தனது தாய் ஒரு புறம் பால் கொடுத்துவிட்டு மறுபுறம் மாற்றுகின்றபோது

அச் சேய் அழுவதைப்போன்று நாம் அழுகிறோம் என்று தாகூர் விளக்குகிறார். நமது பரிணாமத்தில் மரணம் என்பது ஒரு படிநிலை யாகும். நமது ஆன்மா பல பிறவிகள் எடுத்து அன்பின் பிணைப்பை அறிதல் வேண்டும். ஆன்மா தான் தனித்து இருப்பதாகக் கொள்வது தவறாகும்.

கீதாஞ்சலியில் மரணத்தைச் சேவகனாகத் தாகூர் உருவகிக்கின்றார்: 'அச் சேவகன் வாயிலருகே நிற்கின்றான். அவன் இறைவன் எனக்கு விடுக்கும் அழைப்பைத் தாங்கி வந்து நிற்கின்றான்.' மரணத்தை இறைவனது தூதுவனாகத் தாகூர் கருதுகின்றார். கூப்பிய கரங்களுடன் கண்ணீர் சிந்தி அவனைப் பூசிக்கின்றார். தமது இதயப் பொக்கிஷத்தை அவன் திருவடியில் வைத்துப் பூசிக்கின்றார்.

கீதாஞ்சலியில் பிரிதொரு பாடலில் தாகூர் கூறுவது: 'எமன் உன் கதவைத் தட்டும்போது நீ அவனுக்கு என்ன தருவாய்? ஓ! எனது விருந்தினன் முன்பு எனது வாழ்க்கை நிறைந்த பாண்டத்தையே வைப்பேன். அவனை வெறுங்கையுடன் திரும்ப விடமாட்டேன். என் அந்திய காலத்தில் எமன் வந்து கதவைத் தட்டும் போது, சரத் காலத்திலும், வேனிற் காலத்திலும் நான் சேகரித்த இனிய தேன் அத்தனையையும், ஓயாது வாழ்நாள் முழுதும் தேடிய என் செல்வம் அத்தனையையும் அவன் பாதங்களில் சமர்ப்பிப்பேன்.'

மற்றும் ஒரு பாடலில் கீதாஞ்சலியில், தாகூர் கூறுவது: 'மரணமே! வாழ்வு கடைசியில் உன்னிடம்தான் நிறைவெய்துகிறது. ஆதலால் என் மரணமே, என்னிடம் வந்து என் செவியில் ரகசியம் பேசுவாய். நாள்தோறும் உனக்காகவே காத்து வந்திருக்கிறேன், உனக்காகவே வாழ்வின் இன்பங்களையும் வேதனைகளையும் தாங்கி வந்திருக்கிறேன். உன் இதய இரகசியத்தின் ஆழத்தில் என்னிடம் உள்ள யாவும், என் நம்பிக்கை அனைத்தும் என் காதல் அத்தனையும் உன்னையே நாடி ஓடிவந்துகொண்டிருக்கின்றன. உன் கண்களின் இறுதிப் பார்வையில் என் உயிர் உன்னுள் ஒன்றி உனதேயாகிவிடும்.'

மேற்கண்ட பாடல்களின் மூலம் தாகூர் மரணத்தை எவ்வாறு வரவேற்றார் என்பது தெளிவு. மரணத்தை நினைந்து அஞ்சவில்லை. தான் வெறுங்கையுடனும், ஆர்வ இதயத்துடனுமே தனது யாத்திரை தொடங்குவதாகக் கூறுகிறார். தான் வாழ்க்கையை விரும்புகின்ற காரணத்தாலேயே மரணத்தையும் நேசிப்பதாகக் கூறுகிறார்.

தீமை உலகில் இருந்தாலும் நன்மையையே நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். நமது அறவாழ்விற்குத் தீமை தேவை. துன்பம் போன்ற தீமைகள் பரிணமித்து வருகின்ற உலகில் நாம் பெறத்தக்க இடத்தை ஊன்றி அறிதல் வேண்டும். அன்றாட வாழ்வில் அவற்றின் இடத்தை நோக்கினால், அவை தீமையாகவே தோன்றும். ஆனால், அவை என்றென்றும் நிலவும் வாழ்வில் அவற்றின் இடம் இயைபிற்காக அமைவதை அறியலாம். நமக்கு நேரிடுகின்ற துன்பங்களை நாம் மிகைப்படுத்துகின்றோம். ஆனால், அத் துன்பங்கள் பிரபஞ்ச நோக்கில் காணும்போது அது பெறு கின்ற சிறப்பு வேறாகும். நிறைவு என்பது குறிக்கோளாக அமை கின்றது. நாம் அந் நிறைவை நோக்கித் தொடர்ந்து முயல் கின்றோம்.

வேதாந்தத்துள் தீமைக்கு இடமில்லை. பரம்பொருள் ஒன்றே உள்ளது. தீமையும் பிறவும் நம்மோடு தொடர்பு கொண்டு விளங்குகின்ற அளவில் உண்மையேயாகும். தீமையை வெல்லும் போது அது நீங்குகின்றது என்று வேதாந்திகள் கருதுகின்றனர்.

சுயநலங்களையே நாம் அளவுகோலாகக் கொள்கின்றோம். இச் சுயநலங்கள் நம்மைச் சிறைப்படுத்துகின்றன. நமது ஆசை களால் கட்டுறுகின்றோம். தாகூர் துறவை நாம் ஒரு கலையாகப் பயிலவேண்டுமென்கின்றார். இவ் வாழ்க்கையைத் துறந்து, எங்கேயோ அமையும் விண்ணுலக வாழ்க்கையைப் பெறுவதற் காக நாம் முயலுதல் கூடாது. இவ்வுலக வாழ்க்கையையே நாம் வளமானதாக, பேரின்பம் பயப்பதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது தாகூர் கருத்தாகும். செயலுரிமையோடும் அன்போடும் நம் இல்வாழ்க்கையை வளமானதாக ஆக்க எளிமையை மேற் கொள்ள வேண்டும் என்பது தாகூர் கருத்தாகும். கீதாஞ்சலியில் அவர் வேண்டுவது: 'எனது வாழ்க்கையை எளிமையுடைய தாகவும், நேரியதாகவும் ஆக்க விரும்புகிறேன். நாணலில் குழல் அமைப்பதைப் போன்று எனது வாழ்க்கையை அமைக்கின்றேன் (இறைவா), உனது இசையை நிரப்புக.' ஆன்மீக வளர்ச்சிக்கு ஓரளவு வறுமை தேவை. வறுமை மனிதனை மனிதனுக்குகிறது. உலகுண்மைகளை நன்கு அறியச் செய்கிறது. செல்வம் மிகுந்த வாழ்வு, பொன்கூண்டு போன்றதாகும். சாந்திநிகேதனில் தாகூர் பொருள்களைக் குறைத்தார். இவ்வாறு குறைத்தலால் மக்கள் உலகை நேராக நன்கு அறிதல்கூடும் என்று அவர் கருதினார். தூய, எளிய வாழ்க்கையை மனிதன் வாழ்தல் வேண்டும். ஆனால், தன்னை ஒறுத்துக்கொள்ள வேண்டுவதிலது. வீணான ஆரவாரமான தேவைகள் என்று நாகரிகம் என்பதன் பெயரால் பெருகி இருக்கக் காண்கின்றோம். இத்தகைய வாழ்வு, தாகூரது மனத்தைத் துன்புறுத்தியது.

உடலைத் துன்புறுத்துவது இன்னல் அல்லது இடுக்கண் எனப்படும். ஆன்மாவைத் துன்புறுத்துவது பாவம் எனப்படும். பாவம் என்பதைத் தாகூர் தனித்ததொரு செயலில் மட்டும் காணவில்லை. பாவம் என்பது வாழ்க்கையைப் பற்றிய நோக்க அமைவாகும். இறைவனை ஆளுமை சார்ந்த நிலையில், உருவநிலையில் கொண்டதால் பாவத்தைத் தான் பட்ட கடன் எனவும், வெட்கித் தலைகுனிய வைக்கும் செயல் எனவும், தன்னையும் இறைவனையும் பிரிக்கும் சுவர் எனவும் கொண்டார். பாவம் என்பது நமக்கு அகத்தே—உள்ளே—விளங்கும் தடையெனக் கண்டார். இறைவனை நோக்கி அவர் வேண்டுவது : 'என்னை இச் சிறையினின்று விடுவிக்க விரும்புகின்றேன். பாவங்கள், தன்னலமான பற்றுகள்போன்றவற்றினின்று என்னை விடுதலை செய். என்னை நினது சேயாக ஏற்றுக்கொள்.'

தீமை, பாவம் ஆகிய இவற்றின் தோற்றம் குறித்துப் பொதுவாக மூவேறு கருத்துகளை இந்து சமயம் கொள்வதாக நாம் கருதலாம். தீமையின் தோற்றம் எளிதில் விளங்காத புதிராகும். இறைவனால் நல்லனவாகப் படைக்கப்பெற்றவை எவ்வாறு தீயனவாதல் கூடும்? சைவசித்தாந்தம் தீமையை ஏற்கின்றது. மலம் என்று அதைக் குறிப்பிடுகின்றது. மலம் என்பதும் இறைவனைப் போல் அனாதி என்று கருதுகின்றது. தீமை என ஒன்று இலது என்பது வேதாந்திகளது கருத்தாகும். அறியாமையினால் தோன்றுவதே தீமை என்று வேதாந்திகள் கருதுகின்றன. தீமை, மாயை என்னும் உலகைச் சார்ந்தது. வேறு சில கொள்கைகள் இறைவனையே தீமைக்குக் காரணமாகக் கருதுகின்றனர். தீமை என்பது தாமஸிகக்கூறு என்றும், இக் கூறினின்று தீமை என்பது தோன்றுகின்றது என்றும் சிலர் கூறுகின்றனர்.

தீமை என்றென்றும் உண்டு என்று கொள்வது இறைவன் எல்லாம் வல்லவன் என்ற கருத்தினோடு முரணுவதாகும். தீமையின் இருப்பை நாம் எளிதில் புறக்கணிக்க இயலாது. தீமை திரிபுக் காட்சி என்று கூறவும் இயலாது. இறைவனை நாம் உலகிலுள்ள தீமைகட்குப் பொறுப்பு ஏற்க வைத்தலும் பொருந்தாத ஒன்றாகும். ஏனெனில், இறைவனது தூய அன்பு எத்தகைய தீமைக்கும் மாறானதாகும். செயலுரிமை மனிதச் சமுதாயத்தின் தனித்த சிறப்பாகும். இவ்வுரிமை தெய்வம் தந்த பரிசு ஆகும். செயலுரிமை காரணமாக நாம் பல பிழைகளைச் செய்கின்றோம். தீமையை அவித்தை என்கின்றார். அவித்தையே நமது வாழ்க்கையைக் கட்டுண்டு இருக்கவும், எல்லைக்குட்படுத்தவும் செய்கிறது. நாம் நமது வாழ்க்கையைக் கடந்து பெருவாழ்வைப் பெற இயலும் என்பதை மறக்கச் செய்வது அவித்தையாகும்.

மேலைநாட்டிலும் கோக்ரதர் என்பவர் நன்மையைப் பற்றிய அறியாமை தீமைக்குக் காரணமாகின்றது என்று கொள்கின்றார். அவித்தை மாயைக் கொள்கையோடு தொடர்பு கொண்டிருக்கிறது. தீமையினின்று விடுதலை பெறுவது என்பது எதையும் அழித்தலிலே அடங்கவில்லை. உண்மைக் காட்சியினின்று நம்மைத் தடைசெய்வது தீமை என்று தாகூர் கூறுகிறார். தாகூர் கவிஞராகத் தீமையைக் கருதும்போது தீமையை ஏற்கின்றார். மக்கள் தீமையால் சோர்வுறுகின்றனர் என்கின்றார். செயலுரிமையினால் தீமை நேரிடுகின்றது என்ற கருத்தைத் தாகூர் கூறினாலும், அக் கருத்தை விரிவாக எடுத்து விளக்கவில்லை. இச் செயலுரிமையின் காரணமாக நாம் நல்லதல்லாத ஒரு பாதையைத் தேர்ந்து எடுத்துள்ளோம். இது இறைவனது சித்தத்திற்கு மாறானதாகவும், தாகூரது தத்துவத்தில் மனித உடல்என்றும்பரிணமம்அடையாமல் இருக்கின்றது. உடலிற்குத் துன்பங்கள் என்றும் உண்டு. ஆதலால் தீமை அகலாமல் என்றும் விளங்குவதென்று கருத இடமுண்டு. கட்டுண்ட ஆன்மா, எல்லைக்குட்பட்ட ஆன்மா என்றும் இறைவனோடு ஒன்றி விளங்குகின்றதென்று கருத இயலாது. ஆன்மாக்கள் நிறைவற்று விளங்குதலால்தான் படைப்பே ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் இறைவனோடு ஒன்றி விடுமானால் அவற்றிற்கு இருப்பு அல்லது உண்மை நீங்கும். தாகூர், ஆன்மாக்களும் இறைவனும் என்றும் வெவ்வேறாக விளங்குகின்றனர் என்று உறுதியாக நம்புகிறார். இவ்விருமை வைணவச் சமயத்தினின்று தாகூர் ஏற்றதாகும். மனிதச் சமயம் என்னும் நூலில் தாகூர் "வெளிப்படையாக, நான் தீமையைப் பற்றிய சிக்கலுக்குத் தீர்வு காண இயலாது என்று ஏற்கிறேன்" என்று கூறுகிறார். கிறித்தவர் தீமை, பாவம் என்பனவற்றிற்குத் தருகின்ற விளக்கம் வேறு.

தாகூர் சிற்சில இடங்களில் கிறித்தவ சமயத்தைத் தழுவிய நிலையில் சில கருத்துகளைக் கூறுகிறார் என்று கருத இடமுண்டு. ஆனால், அவர் தீமையைப் பற்றிய சிக்கலை முழுமையாக ஆராயவில்லை. அவர் அவ்வாறு ஆராயும் பணியை மேற்கொண்டாரிலர். ஆனால், சிக்கலை அவர் அணுகும் முறையில் தீமை என்பதன் உண்மையை ஏற்றார் என்பது தெளிவு. வைணவ அத்துவித வேதாந்தக் கொள்கைகளின் தொடர்பு அவர் தருகின்ற விளக்கங்களில் வெளிப்படுகிறது. பௌத்த சமயத்தின் அன்பு நெறி அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. ஆதலால், தீமைகளில் சிலவற்றை அன்பு நெறியால் அகற்ற இயலும் என்கின்றார். இயற்கையையும் மனிதனையும் ஒன்றாகத் தாகூர் கருதவில்லை. மனிதனை இயற்கையின்பாற்படுத்தி மனிதனின் சிறப்பைக் குறைத்துக் கூறவில்லை. இயற்கையை உயர்த்தி ஆன்மிக வாழ்வு தருவதாகவும்

கூறவில்லை. முன்னைய கருத்து இயற்கை வாதமாக முடியும் (Naturalism). பின்னையது அனைத்து மனக்கொள்கை (Pan-Psychism)யாக முடியும். மனிதன் ஆன்மிக வாழ்வு பெறுகின்றபோது, அகவிழிப் புற்று ஆன்மிக உண்மைகளைப் போற்றத் தலைப்படும்போது இயற்கையோடு உறவை நீக்குவதில்லை. இயற்கை ஆன்மாவை, அல்லது இயற்கை அல்லாததைச் சார்ந்து விளங்குகின்றது என்று முன்னர் கண்டோம். இயற்கை, பொருளுடையதாதல், இயற்கை அல்லாத தன் கூட்டுறவாகும். இயற்கையையும், மனிதனையும் இணைக்கும் ஆற்றல் ஒன்று உண்டு என்பது தாகூர் கருத்தாகும். இவ்வாற்றலை நாம் நமது அனுபவத்தில் உணருகிறோம். தாகூர் பல பெயர்கள் கொண்டு விளக்குகிறார். 'ஜீவன்சக்தி', 'ஜீவன்பிரவாஹம்' 'பிராணதாரம்' ஆகிய பெயர்களை வழங்குகிறார். பேராசிரியர் நரவனே இவ்வாற்றலைப் படைப்பாற்றல் என்றும், இயக்கம் சான்றதென்றும் கருதுகிறார். இக் கருத்து பெர்க்ஸோன் கருதும் எலான்வைட்டலை (ElanVital) ஒத்தது. மெக்டூகல் (Mcdougall), யூங் (Jung) போன்ற அறிஞர் மனித குணத்தையும் விலங்கினத்தையும் இணைக்கும் ஆற்றல் என்று கருதுவதை நாம் இங்கே ஒப்பிடலாம் என்றும் கூறுகிறார். தாகூர் இயற்கையில் நிகழ்கின்ற கால மாற்றங்களின் எதிரொலிகள் நம்முடைய செயல்களில் நிகழக் காண்கிறோம். நடாரஜப்பெருமான் தனது ஒரு காலின் மூலம் புற உலகை இயக்குகின்றான். மற்றொரு காலின் மூலம் ஆன்மாவை இயக்குகின்றான். தாகூர் தாம் கலைஞன் ஆனதால், பொதுவான சந்தத்தைத் தான் மந்திரமாக ஏற்கிறான் என்கின்றார். ஜீவன்தேவதா என்று தாகூர் கூறுவது கருத்து வேறுபாடுகட்கு இடம் தந்துள்ளது. பலவித விளக்கங்கள் இக் கருத்திற்குத் தரப்பெற்றுள்ளன. சிலர் இதனை இறை நிலையாக வைத்துக் கருதுகின்றனர். வாழ்க்கையின் தெய்வம் என்ற பொருளில் இச் சொல் ஆளப்பெற்றுள்ளது. 'பிரம்மா,' இறைவன், மேலான இறைவன், மேலான உணர்வு எல்லைகடந்த பரம்பொருள் என்ற சொற்களை தத்துவ சிந்தனைகளில் தாகூர் ஆளுகின்றார். மனித உலகையும் இயற்கையையும் ஒருங்கே இயக்குவது ஜீவன்தேவதாவாகும். இவ்வாற்றல் காணவொண்ணததாகும். அதை உணரலாம். அறிவிற்கு எட்டாதது, ஆனால் நுகரக்கூடியது. இவ்வாற்றலைத் தாகூர் பெரிதும் போற்றிப் புகழ்ந்து அதைத் 'தேவதா' என்று வழங்குகின்றார்.

## மனிதப்பற்றுக் கோட்பாடு

இறையின் வெளிப்பாடுகளுள் மனிதன் மிகச் சிறந்தவன்; அவன் ஈடு இல்லாதவனாக விளங்குகிறான். இறைவன் சிறப்பாக மனிதன் மூலம் வெளிப்படுகின்றான். மனிதன் சிறப்பு எதில்

அடங்கியுள்ளது ? மனிதனின் ஏற்றத்தை அவனது உடல், உள்ள ஆற்றல்களில் மேலை நாட்டினர் காண்கின்றனர். மனிதன் தனக்குக் கீழுள்ள படைப்புகளை அடக்கி ஆளுகின்றான். இயல் பூக்கம் என்பது மனித நிலையில் அறிவாற்றலாகப் பரிணமிக் கின்றது. இந்த அளவில் மனிதனது தனித்தன்மையோ, பெரு மையோ அடங்கி விடுவதாகக் கொள்ளுதல் கூடாது என்பது தாகூர் கருத்து. இயற்கையில், யாவும் வரையறையுற்று விளங்கு கின்றன. அங்கே மாற்றம் விளைதல் அரிது. யாவும் ஒரு சட்டத் திற்கு உட்பட்டு விளங்குவதாகத் தெரிகின்றது. ஆனால், மனித உலகில் செயலுரிமை விளங்குகின்றது. மனிதன் தனது வன்மை யைப் பெருக்குவதில் பயனில்லை என்று உணர்கிறான். அவனது காட்சியை அகத்தே திருப்புகிறான். அவன் புதிது புதிதாகப் பல வற்றைப் படைக்கின்றான். கலைஞனாக விளங்குகின்றான். தனது வாழ்விற்குத் தேவையானவற்றிற்கும் மேலாகச் சில உண்மை களையும் சில பொருள்களையும் காண்கின்றான். இறைவனைப் பரம் புருஷனாக, மேலான உணர்வாகத் தாகூர் கருதுகிறார். இயற்கையை, தோன்றுகின்ற உலகை, மாற்றங்கள் நிகழ்கின்ற உலகு என்று கருதுகிறார். பன்மைக் காட்சியை இவ்வுலகு வழங்கு கின்றது. மனிதனுக்கும் இவ்வுலகிற்கு முள்ள தொடர்பு யாது ? உலகு, இறை, ஆன்மா என்ற மூன்றும் ஒன்றிேனாடொன்று தொடர்பு கொண்டுள்ளன. நம்மைச் சூழ்ந்துள்ள உலகும், நம்மிடத்து விளங்கும் அறிவாற்றலும் ஒரே ஆற்றலின் வெளிப் பாடாகும். இதனால் இயற்கையின் ஒருமையையும், இறைவனோடு நமது மனம் உறவு கொள்கின்றதால் விளையும் ஒருமையையும் நாம் அனுபவிக்கின்றோம். இயற்கையும் ஆன்மாவும் வெவ்வேறாகும். ஆனால், இவற்றிடையே முரண்பாடில்லை என்று தாகூர் கருது கிறார். மொட்டு வேறு என்றும் மலர் வேறு என்றும் பிரித்தல் பொருந்தாதனவாகும். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவை, மேலைநாட்டினர் உணரத் தவறியுள்ளனர் என்பது தாகூர் கருத்தாகும். உறவிற்குப் பதிலாகப் பகைமை நிலவுவ தாகக் கருதுகின்றனர். இந்த மேலை நாட்டுக் கருத்தைத் தாகூர் பல கட்டுரைகளில் விளக்கியுள்ளார். ஷேக்ஸ்பியர் தமது நாடகங் களில், இயற்கையை அவர் புறக்கணிக்கின்றார். இலதேல் அது அயலான ஆற்றல் என்றும், அதை மனிதன் ஒடுக்க வேண்டும் என்றும் கருதுகின்றார். சாகுந்தலம், அல்லது உத்தர ராமசரிதம் போன்ற நாடகங்களில் இயற்கைக்கு உரிமை உண்டு. அதற்கென தொழில் உண்டு. மனித உணர்ச்சிகட்கு அமைதி தர அது முயல்கிறது. அண்மைக் காலத்தில் நகர நாகரிகங்கள் வளர்ச்சி பெற்று வருவதும் மேலை நாட்டுக் கருத்தை வலியுறுத் துகிறது. இயற்கையை ஆட்படுத்தி மனிதன் தனது ஆட்சியின்

கீழ் வைத்துள்ளதாக எண்ணுகிருன். இயற்கையையும் மனிதனையும் பிரித்து இவை இரண்டும் தனித்தனியே நிறைவு பெற்று விளங்குகின்றன என்று கொள்வதால் விளையும் தவறுகள் பல என்கிருர் தாகூர். மனிதன் இயற்கையைச் சார்ந்து விளங்குகிருன். இயற்கையையும் மனிதனைச் சார்ந்து விளங்குகின்றது. ஒன்றிற்கு மற்ருென்று தேவை. இவ்வாறு கொள்வது மனித நிலையில் வைத்து நாம் கருதுவதாகத் தோன்றினுலும், இவ்விரண்டும் ஒன்றையொன்று சார்ந்து விளங்குகின்றன. பயன் ஒன்றைக் கருதியே அவன் பொருள்களைப் போற்றுதலில்லை. அவன் முன்னேற்றத்தைப் பெரிதும் அவாவி நிற்கிருன். அவன் பெரியன, புகழ்வாய்ந்தன, எல்லை கடந்தன ஆகியவற்றை விரும்பி நிற்கின்ருன். அவன் ஏதோ எப்போதோ வருகின்ற, இவ்வுலகிற்கு வருகின்ற விருந்தினன் அல்லன்; சிறப்பு விருந்தாளி என்று அறிகின்ருன். ஓர் அழகிய கவிதையில் தாகூர் கூறுவது: ''பறவைகட்கு நீ பாடல்களைத் தந்தாய், பறவைகள் தாம் பாடல்களை நினக்குத் திருப்பித் தருகின்றன. ......... யாவற்றிற்கும் நீ தந்துள்ளாய், என்னிடம் நீ கேட்கின்ருய்.

எனது வாழ்க்கையின் அறுவடை மழையிலும் வெய்யிலிலும் பிழைக்கின்றது. நான் நீ விதைத்ததைவிட அறுவடை செய்கின்றேன். நீ இது கண்டு மகிழ்கின்ருய். பொன்மயமான களஞ்சியத் தலைவனே'' (Fruit Gathering)

படைப்புலகில் மனிதனின் தலையாய ஏற்றத்தைக் காட்டுதலில் மட்டும் தாகூரின் மனம் நிறைவு கொள்ளவில்லை. உள் பொருள், உண்மை, இறைவன் ஆகியவற்றையும் மனித நிலையில் வைத்துத் தாகூர் விரிக்கின்ருர். ''உள் பொருள் மனிதப் பண்பைப் பெற்றுள்ளது. நாம் அதனை உணர்கிருேம். அதனுல் நாம் பாதிக்கப் பெறுகின்ருேம். அதனை உணர்த்துகின்ருேம்.'' தெய்வீக உண்மை நிறைவு பெறுதற்பொருட்டு மனிதத்தன்மை தேவைகிறது. தாகூர் கூறுவது: 'எனது சமயம், மனிதச் சமயமாகும். இச் சமயத்தில் எல்லை கடந்த பரம்பொருளை, மனிதத் தன்மையின் மூலம் விளக்குகிறேன்.'' இறைவனுக்கு மனிதப் பண்புகளை ஏற்றிக் காணுதல் மட்டுமன்று, இறைவனின் மனிதத் தன்மையை உணர்தலாகும். மனித உலகில்தான் இறைவனது ஆற்றல் நிறைவு பெறுகின்றது. இறைவனையும் மனிதனையும் சில சமயங்களில் தோழர்களாக ஒருங்கே விளையாடுபவர்களாகத் தாகூர் விளக்குகின்ருர். வேறு சில பாடல்களில் இறைவனை மனிதனுக்குக் கடமைப்பட்டவனுகக் (கடனுளி) குறிப்பிட்டு மனிதனின் உதவியின்றி இறைவன் தொடர்ந்து இயங்க இயலாது என்றும் கூறுகிருர்.

## அறம்

ஒழுக்கம் என்பது வாழ்க்கையின் பிற கூறுகளினோடு சேர்ந்த ஒன்றாகத் தாகூர் கருதவில்லை. மனிதனிடத்து விளங்குவனவற்றுள் அற உணர்வு பின்னிப் பிணைந்து நிலவுகின்றது. மனித ஒழுக லாற்றைப் பகுத்து அறியலாம். அது அறச் சார்பற்று என்றும் விளங்குவதில்லை. விலங்கின் வாழ்க்கையை நாம் ஒழுக்கமற்றது என்று கூற இயலாது. ஏனெனில், விலங்கிற்கு அறவுணர்வு கிடையாது. மனிதனின் வாழ்க்கை, ஒழுக்கங்களைப் புறக்கணித்த தாக அமையலாம். மனித நிலையில் ஒழுகலாற்றிற்கு அற அடிப்படை உண்டு. மனிதன் இவ்வொழுக்கத்தால்தான் பிற படைப்புகளினின்று பிரித்து அறியப்படுகின்றான். அவனது உணர்வில் செய்ய வேண்டுவன என்ற அறவுணர்வு விளங்கக் காண்கின்றோம். 'உள்ளன' இவை என்றும், 'செய்ய வேண்டியன' இவை என்றும் பிரித்து அறிகின்ற நிலை மனிதனுக்குத்தான் உண்டு. மேல் வரிச் சட்டம், குறிக்கோள் உணர்வு மனித வாழ்க்கையிலேயே காணப்பெறுகின்றது. எத்தகைய அறச் சூழலிலும் செய்யத்தக்கது இது என்று சுட்டிக் காட்டக்கூடிய நிலை நிலவக் காண்கின்றோம். மனிதன் தான் உயிர்வாழ்வதற்கு இயற்கையைச் சார்ந்து விளங்குகின்றான். அவன் தனது மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு அறவுலகைச் சார்ந்து விளங்குகிறான். இவ்வாறு அறவுலகில் நாம் அடியெடுத்து வைக்கும்போதே நமக்கு ஆளுமை உண்டு என்ற உணர்வைப் பெறுகின்றோம் என்று தாகூர் கூறுகின்றார்.

தாகூர் அறச் சட்டங்கள் பொதுமை வாய்ந்தவை என்ற கருத்தை அடிப்படையாகக் கொள்கிறார். யாண்டும் எப்பொழுதும் அறப் பண்புகள் பொதுவானவை. இவை மனித இயல்பினின்று பிரிக்கவொண்ணாதவை. அறம், மனிதச் சமுதாயத்திற்கே அறங்களைச் சீரிய ஒழுகலாற்றை வகுக்கின்றது. துறவு பற்றி தாகூர் கொண்டிருந்த கருத்துகள் சிறப்பு வாய்ந்தன. இன்று துறவு பெரிதும் வற்புறுத்தப் பெறவில்லை. ஏறக்குறைய எழுபது ஆண்டுகட்கு முன்னர் துறவு பெரிதும் போற்றப் பெற்ற காலம் ஆகும்.

ஆதலால், தாகூர் நமது நாட்டுமக்கள் நிறைவான முழுமை யான வாழ்க்கை வாழ வேண்டும் என்று கருதினார். மேலை நாட்டினர் இந்திய சிந்தனையுள் துறவு பெரிதும் வற்புறுத்தப் பெற்றது என்று குற்றம் சாட்டுகின்றனர். இக் குறையை மேலை நாட்டினர் இந்திய சிந்தனையை ஊன்றிப் பயிலாமல் கூறுகின்றனர் என்று சுட்டி ஒதுக்காமல் இந்திய கலாச்சார வரலாற்றை நன்கு

பயின்று நடுவு நிலைமை பிறழாமல் உண்மையை அறிய வேண்டும் என்று தாகூர் கூறுகிறார். மேலை நாட்டினர் தாம் கொள்ளும் கருத்துக்கு உபநிடதங்களையே சான்றாகத் தருகின்றனர். இதைக் கண்ட தாகூர் உபநிடதங்களில் சில வாழ்க்கை என்பது துன்பம் மயமானது என்று கூறினாலும், வேறு சில உபநிடதங்கள் உலக வாழ்வை நாம் போற்றி நுகர வேண்டும் என்று கூறுவதைத் தாகூர் சுட்டுகிறார். உடலை ஒறுத்தலையோ, வருத்துதலையோ, உபநிடதங்கள் வற்புறுத்தவில்லை என்பதை நன்கு எடுத்துக் காட்டி, வாழ்க்கையைத் துறந்து செல்ல வேண்டுவதில்லை என்கிறார். பௌத்தத்தின் அடிப்படை உண்மைகளைத் தாகூர் நன்கு விளக்கியுள்ளார். அழிவு அல்லது முற்றிலும் நீங்கிப் போதல் என்பது (Extinction or annihilation) பௌத்தத்தின் கருத்தன்று என்பது தாகூர் கருத்தாகும். இடைக்காலத்திலும் அண்மைக் காலத்திலும் சமயத் தலைவர்கள் தோன்றி வாழ்வைத் தக்க முறையில் மதிப்பிட்டுள்ளனர். டாய்ஸன், ஷ்வைட்ஸர் போன்றோர் உலகமறுப்பு, வாழ்க்கை மறுப்புக் கொள்கைகளைச் (World negation and life negation) சிறிது மிகைப்படுத்தியே கூறியுள்ளனர் என்று நாம் கொள்ள வேண்டும். ஷ்வைட்சர் தமது இந்திய சிந்தனையின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது, திருக்குறள் போன்ற நூல்கள் இவ்வுலக வாழ்க்கையையும் இல்லறத்தின் மேன்மையையும் போற்றியுள்ளதை எடுத்துக்காட்ட மறந்திலர். உலக இன்பங்களைத் தீமையாகக் கருதுகின்ற மனப் பான்மை இந்திய மக்களிடத்தில் இருந்ததைத் தாகூர் மறுக்க வில்லை. செயல்மிகுந்த வாழ்வும் தீமையின் சின்னமாகக் கொண் டிருந்தனர். உபநிடதங்களும், பௌத்தமும் நிலையுதல் இல்லாத பொருள்களிடத்துப் பெரும்பற்று வைக்காமல் இருக்கும்படி எச்சரித்துள்ளன. நிலையுதல் உடையன இவை, நிலையுதல் இல்லாதன இவை என்று பிரித்து அறியாத வாழ்வு மருள்நிறைந்த வாழ்வு என்று வள்ளுவரும் கூறியுள்ளார். சமணம் புலனின்பங்களை அறவே அடக்கி ஒடுக்க வேண்டும் என்று கூறுகின்றது. செவிக் கின்பம் நல்கும் இசையையும் சமணர் புறக்கணித்தனர். இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற்றின் நிலையாமையைச் சமணம் வற்புறுத்தியதன் நோக்கம், வாழ்க்கை உள்ளபோதே நிலையான உயர்ந்த பண்புகளைப் போற்ற வேண்டுமென்பதாகும். பற்று மிகுந்த வாழ்வு தகாதது என்று உபநிடதம், பௌத்தம் ஆகிய இவ்விரண்டும் கூற, பின்னே வந்த சிந்தனையாளர் பற்று அறவே கூடாது என்று வற்புறுத்துவராயினர். தாகூர் கூறுவது: தியாகம் அல்லது தன்னலத் துறவாகத் தோன்றியது பின்னை நாளில் வறட்டுத் துறவாக மலர்ந்தது என்று கூறுகிறார். பின்னது சந்நி யாசம், முன்னது தியாகம். சங்கரர் உயர்ந்த குறிக்கோள்

வாழ்வை நமக்கு வகுத்தருளினுர். இந்தியாவின் நான்கு எல்லைகளில் திருமடங்கள் நிறுவி அத்துவித உண்மைகளைப் பரப்ப வழி செய்தார். ஆன்மாக்கள் பலவாகத் தோன்றினுலும், ஆன்ம ஒருமையை வற்புறுத்தினுர். ஆனுல், சங்கரரைப் பின் பற்றியவர்கள் அவரது கொள்கைகளை மறந்து துறவு ஒன்றையே வலியுறுத்தினர். இதனுல் அவரது குறிக்கோள் சிதைவுற்றது. தாகூர் பாரத நாட்டின் முன்னேற்றம் வாழ்க்கையின் முதன்மை, முயற்சி, செயல் நிலை ஆகிய இவற்றை உணர்ந்து போற்றுதலிலே அமைவதை நன்கு உணர்ந்தார். ஆனந்த குமாரசாமி என்பவர் தாகூரது நூல்களில் ''வாழ்க்கை பெருமைப்படுத்தப் பெறுகிறது; மனித சமுதாயத்திற்கு உயரிய பணியுண்டு என்றுகூறப் பெறு கிறது.'' என்று கூறி இக்கருத்துகள் சங்கரரது தத்துவத்திற்கு அயலானவை என்று குறிப்பிடுகிருர். தாகூர் தமது பாடல்கள் பலவற்றில் வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் கூறுகிருர்.

''இங்கிருந்து நான் செல்லும்போது நான் கண்டது வெல்லு தற்கரியது, மேலுஞ் சிறக்க வொண்ணுதது என்பதைப் பிரியும் வார்த்தைகளாகக் கூறிச் செல்கிறேன். தாமரையில் பொதிந் துள்ள தேனை நான் சுவைத்துள்ளேன். இத்தேன் ஒளி வெள்ளத்துள் மேலும் விரிவடைகிறது. இதனுல் நான் புனிதமானேன். பிரியும் போது இதுவே எனது வார்த்தையாகட்டும்.'' இளமையில் தாகூர் பாடிய பாடலொன்றில்:

''இவ்வுலகு இனிமையானது, இவ்வுலகினின்று நாம் பிரிய விரும்பவில்லை. மனித சமுதாயத்தின் இதயத்துள் என்றென்றும் வாழ்வதற்கு விரும்புகிறேன்.''

அறவாழ்வு, உலகப் பற்றுகளனைத்தையும் அறவே துறக்கு மாறு தூண்டுகின்றது என்ற கருத்தை அறவே மறுத்து, தாகூர் தமது முக்கியமான நாடகம் ஒன்றை இயற்கையின் வஞ்சந் தீர்த் தலாகக் கொண்டு எழுதுகிருர். தாகூரது கவிதைகளில் அடுத் தடுத்துக் காணப்பெறும் கருத்து யாதெனில், அவர் மீண்டும் மீண்டும் சமுதாயத்தில் பிறந்து வாழ விரும்புகின்ருர் என்பதாகும். அன்ருட வாழ்வில், அற வாழ்வை, நேரிய நல்வாழ்வை வாழ்தல் வேண்டும் என்று இடையருது முயல்வதே அறம் முன்னேறுவதற்கு வழி செய்வதாகும். துறவி ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு மனித சமுதாயம் இயங்குவதைக் கண்டு எள்ளி நகையாடு கின்ருன். இத் துறவி வாழ்க்கையினின்று தப்பி ஓடி மறைய விரும் பியவன் ஆவான். இவனது செயலிற்கு விடுதலை என்ற பெயரைச் சூட்டிக் கொள்கிருன். தாகூர் தமது விடுதலை துறவில் அமைய வில்லை என்று தெளிவாகக் கூறுகிருர். பிறிதொரு பாடலில் கீதாஞ் சலியில் அவர் கூறுவது: ''ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு.

மந்திரமும் தந்திரமும், ஆடலும் பாடலும் அவனைக் காட்ட மாட்டா. தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கிறாய்? கண்களைத் திறந்து உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள். ''

''கடினமான தரையில் ஏர் கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்போரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான். வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது, உன் காஷாயத்தைக் களைந்தெறி, அவனைப்போலவே நீயும் புழுதியில் இறங்கி வா.''

'விடுதலை? எங்கிருந்து விடுதலை கிடைக்கும்? நம் ஆண்டவனே நம்மீது அருள் சுரந்து சிருஷ்டித் தளைகளைத் தன் திருமேனியில் பூண்டிருக்கிறான், என்றும் நம்மை விட்டுப் பிரிய முடியாமல் அவன் இணைக்கப்பட்டிருக்கிறான்' என்றும் தாகூர் கருதுகிறார்.

''பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா. உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து நின் ஈசனைக் கண்டு கொள்.''

இப்பாடலில் தாகூர் துறவி தனித்திருந்து தியானம்செய்வதை ஒருப்படவில்லை என்று தெளிவாக விளக்குகிறார். உழைத்து, அவ் உழைப்பிலே இறைவனைக் காணவேண்டும் என்று கூறுகிறார்.

'வைராக்யம்' என்றொரு பாடலில் தாகூர் 'ஒரு பக்தன் இறைவனைத் தேடி வீட்டைவிட்டு வெளியேறுகிறான். அவன் வீட்டை விட்டு அகன்று செல்லச் செல்ல இறைவனும் தொலைவில் செல்கின்றான். அவனுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொலைவு மிகுகின்றது. இறுதியில் இறைவன் பக்தன் யாண்டு செல்கின்றான், என்னைத் தவிக்கவிட்டு எங்கே செல்கின்றான்?' என்று கூக்குரல் இடுகின்றான். இப்பாடலில் இறைவன் நம்முடனேயே இருக்கின்றான் என்றும், நமது இதயத்தில் வீற்றிருப்பதை மறந்து எங்கோ இறைவன் இருப்பதாக எண்ணி வீட்டை விட்டுப் புறப்படுகின்றோம் என்று தாகூர் உணர்த்துகிறார். மனிதன் தனது கடமைகளை ஆற்றிக்கொண்டு இவ்வுலகில் இருக்கலாம். கடமைகளைச் செவ்வையாக ஆற்றுவதன் மூலம் இறைவனைக் காணலாம் என்பது தாகூர் கருத்தாகும். இறைவனே படைப்புப் பணிகளை ஆற்றுவதினின்று நாம் நமது கடமைகளை முறையே ஆற்ற வேண்டும் என்பது தெளிவாகின்றது. பற்றின்றி மனிதன் தனது கடமைகளை ஆற்றுவதன் மூலம்—நிஷ்காம்ய கருமம்—இறைவனை அடைய இயலும். தன்னலமற்ற தொண்டு மனிதனால்தான் ஆற்ற இயலும். தன்னலமற்றதாக இருந்தால் மட்டும் அத் தொண்டு சிறக்காது. அது பிறர் நலம் பேணுவதாக அமைதல் வேண்டும். இவ்வாறு பொதுத்

தொண்டை மனிதன் தெரிந்து மேற்கொள்ளுவதிலேதான் அவனது உயர்வு அமைகின்றது. அறவாழ்வில் முன்னேற்றம் காண்பதற்குச் செயல்களை நாம் துறக்க அல்லது நீக்க வேண்டுவதில்லை. செயல் புரியும்போதே பற்றின்றி புரிந்தால் அச் செயலில் நாம் தொடக்குறமாட்டோம். மனிதன் தன்னிடத்துப் பொதிந்து விளங்கும் ஆற்றல்களை வெளிப்படுத்திச்செயல்களில்ஈடுபடுதலால், அவன் தன்னை உணர்ந்து கொள்கிறான். தனது தனித்தன்மையையும் உணர்கிறான். ஆனால், செயல்புரிதல் என்பது ஒரு குறிக்கோளை நோக்கியதாதல் வேண்டும். செயல் புரிதலே நமது குறிக்கோளன்று. செயல்களை அவற்றின் பயன்கொண்டே நாம் அறிதல் சரியன்று. பயன் கருதிச் செயல்புரிதல் நம்மைக் கட்டுப்படுத்தி விடும். நமது வாழ்க்கை இயந்திரம் போன்று இயங்குவதாகி விடும். ''சாதனை'' என்னும் நூலில் 'மேலைநாட்டில் செயல்புரிதலே அந்நாட்டு மக்கள் குறிக்கோளாகக் கொண்டதால், ஆற்றல் (Power) அவர்களை மயக்கி அதன் வயப்படுத்திவிட்டது எனலாம், என்று கூறுகிறார் தாகூர். ஆற்றல் போதை செய்யும் மருந்து அல்லது கள் போன்றது என்று விளக்குகிறார். நமது நாட்டில் செயல்புரியாது தியானத்தில் அமர்வதை நாம் சிறப்பாக நினைக்கின்றோம். இவ்விரு தீவிர நிலைகளும் தவிர்த்தற்குரியன. செயலுக்கு அடிமைப்பட்டுச் செயல் புரிதலையே குறிக்கோளாகக் கொண்டு அச் செயல்களின் பயன்களையே எண்ணி வாழ்தல் தவறாகும். செயல்புரியாது தனித்து தியானித்திருத்தலும் தவறாகும். இவ்விரு நிலைகளையும் தவிர்த்துத் தன்னை அறியமுற்படுதல் அல்லது சாதனையை மேற்கொள்ளுதல் தக்கது என்பது தாகூர் கருத்தாகும். இது நடுவணதான நெறி, தீவிர எல்லைகளின் தவறைத் தவிர்க்கும் நெறி என்று பேராசிரியர் நரவனே விளக்குகிறார்.

உண்மையான ஆன்மீக வாழ்வு நமது மூல திருநூல்களில் கூறப்பெற்றுள்ளன. உண்மைக்கு ஒருபுறம் சட்டம் அல்லது ஒழுங்கு உண்டு; மறுபுறம் இன்பம் அமைகிறது. செயலுரிமை என்பது விதிகட்கு உட்படாதிருந்தால் அமையாது. பிரம்மமும் உண்மையினால் கட்டுண்டு விளங்குகிறான். தாம் அடையும் இன்பத்தில் செயலுரிமையை உணர்கின்றான். நாம் நமது வாழ்வை முற்றிலும் உண்மைக்காகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மையே நமக்குச் சில தளைகளை ஏற்படுத்தியுள்ளன. இத் தளைகளை நாம் விரும்பி ஏற்க வேண்டும். இவ்வாறு ஏற்றலால் உண்மையிலே செயலுரிமை ஏற்பட்டு இன்பம் ஏற்படுகிறது. இசைக்கருவியை நன்கு இயக்குவிப்பது அதில் கட்டப்பெற்றிருக்கும் கம்பிகளாலாகும். இக் கம்பிகள் தளர்ந்து இருக்குமேல் நல்ல இசை அதனின்றும் பிறக்காது. ஆதலால், இசைக் கலைஞன் தனதுஇசை நிகழ்ச்சியைத் தொடங்குமுன் தான் எழுப்ப இருக்கும் இசைக்கு

ஏற்ப கம்பிகளை இசைக்கிருன். வயலின் வாசிப்பவர்கள் இவ்வாறு தமது கருவியை இசைக்கு ஏற்ப கம்பிகளைச் சரி செய்வதைப் பார்த்திருக்கிறோம். ஒருபுறம் இங்கே கட்டுப்பாடு; கம்பிகளின் அமைப்பு சீரியதாக அமைய வேண்டியுள்ளது. மறுபுறம் இசையின் கீர்த்தி இசைக் கலைஞன் தாம் செயலுரிமையுடன் இசையைக் கருவியின் மூலம் பொழிகின்ருன். சாதனு என்னும் நூலில் எப் பணியில் நாம் ஈடுபட்டாலும் அப் பணியினைப் பிரம்மத்திற்கு அர்ப்பணித்து நாம் நம் செயலற்றுப் பணியினை முடிக்க முயலுதல் வேண்டும் என்று அறிவுறுத்துகிருர். மனிதன் தனது செயல்களனைத்தையும் பிரம்மத்திடம் ஒப்படைக்கின்ருன். செயல்கள் மூலம் இறைவனை அணுக முற்படுகின்றபோது இன்பம் ஏற்படுகிறது. வானளாவிய கோபுரம், மனித சமுதாயமாகும். இவ்வாலயத்தை விடுத்து, எங்கோ ஒரு நிலையில் அமர்ந்து தான் தனது கற்பனையுலகில் இன்பம் காணுவதாக நினைப்பது தவருகும். இவ்வாறு தனித்திருந்து தான் இறைவனேடு ஒன்றி இன்பம் துய்ப்பதாக நினைப்பது உயரிய சமயமாகுமா? என்று தாகூர் வினவுகிருர். மேலும் 'சாதனு' என்னும் நூலுள் உபநிடதம் பிரம்மத்தை அறிந்தோருள் தலையாயவர் யார் என்ற கேள்வியை எழுப்புகின்றது. எவனது களியாட்டம் பிரம்மத்திடத்து அமைகின்றதோ, எவன் இடையருது செயற்படுகின்ருனே அவனே பிரம்மத்தை அறிந்தவன். அவனிடத்திலேயே இன்பம் காண்கின்ருன். அவனது செயல்கள் யாவும் பிரம்மத்தை மையமாகக் கொண்டு விளங்குகின்றன. அவன் உண்பனவும் பருகுவனவும் வாழ்க்கையை நாடிச் செய்வனவும் யாவும் பிரம்மத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குவனவாகும். ஆழ்வார்களில் ஒருவர் 'உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் யாவும் கண்ணனே' என்று கூறியுள்ளது ஈண்டு நினைவு கூரத்தக்கது. மேலை நாட்டுத் தத்துவ ஞானியொருவன் நமது வாழ்க்கை இயக்கம், உயிர்ப்பு யாவும் இறைவனிடத்து அமைத்துக் கொளல் வேண்டும் என்கின்ருர். இத்தகைய வாழ்வு, இறைவனை மையமாகக் கொண்ட வாழ்வாகும் (God-centred). கவிஞன் தனது கவிதையிலே இன்பங் காண்கின்ருன். கலைஞன், தனது கலையில், வல்லவன் தனது வல்லபத்தில், அறிஞன் தனது அறிவாற்றலில் என்று கருத வேண்டும். பிரம்மத்தை அறிந்தவன் தனது பெரிய சிறிய செயல்கள் யாவற்றிலும் இறையின்பத்தை அடைகிருன். மனிதன் தான் மேற்கொள்ளத்தக்க உயரிய,செயல் கட்டுப்பாடின்றி ஏற்கும் செயல், தனது செயலுரிமையை இறைவனிடத்து ஒப்புவித்தலாகும் என்று உணர்கின்ருன். மனிதன் தன்னை இறைவன் வருகைக்காக ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். தனது

அகந்தையை நீக்கி உள்ளத்தைத் தூயதாக ஆக்கிக் கொண்டால் இறைவன் ஆங்கு நிறைந்து விளங்குவான்.

தாகூர் இறைவனை மிகுந்த பணிவன்புடன் அணுகுகிறார். தான் தன்னை அணிவகைகளால் அலங்கரித்துக் கொள்ளப் போவதில்லை என்று கூறுகிறார். காரணம் இவ்வணி வகைகள் எழுப்புகின்ற ஒலியினால் இறைவனது குரல் கேட்காமல் போகும் என்கிறார். இறைவனுக்கு உகந்த பணியாளாக ஆதற்பொருட்டு நாம் அகந்தையுணர்வை நீக்கவேண்டும். இணையற்ற செல்வம் இறைவனிடத்து அமைந்துள்ளது. அவன் சிறந்த தோழனும் ஆவான். ஆனால், அவன் வருகைக்கு நம்மை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டாமா ? மேலும், தாகூர் கூறுகிறார் : ''வேண்டாத பொருள்கள் பல எனது அறைகளில் நிறைந்துள்ளன. இவற்றை நான் வெறுக்கின்றேன். இருப்பினும் போற்றுகின்றேன். எனது கடன் சுமை பெரிது. எனது தோல்விகள் பெரியன. குற்றவுணர்வு கனம் மிகுந்தது. உன்னை எனது நலம் வேண்டி கேட்க அஞ்சுகின்றேன். எனது பிரார்த்தனை கேட்கப் பெற்றுவிடுமோ என்று நடுங்குகின்றேன்.'' தாகூர் தைத்திரிய உபநிடதத்தை மேற்கோள் காட்டுகிறார். ''அவன் பிரம்மத்தை ஆனந்தமாகக் கண்டான். ஆனந்தத்தினின்று அனைத்துயிர்களும் தோன்றுகின்றன. அவை தோன்றி ஆனந்தத்தால் நிலை பெறுகின்றன. அவை தோன்றி ஆனந்தத்தை நோக்கி இயங்குகின்றன. இறுதியில் ஆனந்தத்துள் ஒன்றுகின்றன.'' இவ்வுபநிடதக் கருத்து தாகூர் சிந்தனையில் நன்கு பதிந்திருந்தது. இறைவன் தருமம் குறைந்து அதருமம் மேலோங்கும் காலங்களில் அவதரிக்கின்றான் என்பது நமது திருநூல்கள் உணர்த்தும் உண்மை. ஆனால், தாகூர் இறைவன் என்றென்றும் நம்முடனேயே இருப்பதாகக் கருதுகிறார். 'இறைவன் வருகின்றான்; அவனது காலடி ஓசை கேட்கவில்லையா?' என்று கேட்கிறார். இறைவன் ஏதேனும் ஒரு வடிவத்தில் தோன்றுகின்றான் என்று தாகூர் கருதவில்லை. வொர்ட்ஸ்வொர்த் என்கின்ற ஆங்கிலேய கவிஞரைப் போன்று இயற்கையில் இறைவனைக் கண்டார். ஆனால் இயற்கையைக் கடந்தும் இறைவன் விளங்குகின்றான் என்று தாகூர் உணர்ந்தார். இவ்வுலக வாழ்க்கையின் சிறப்பை அவர் உணர்த்தினார். இவ் வாழ்க்கைக்கு நோக்க அமைவு உண்டு என்றும் சுட்டுகிறார். இறைவனை இவ்வுலக வாழ்க்கையிலேயே உணர்தல் இயலும் என்று அவர் கருதினார். ''சாதனா''வில் தாகூர் கூறுவது:

''எனது இல்லத்தை நினது இல்லமாக மாற்றி உன்னைக் காணாது வேறு எங்கு காண இயலும்?

எனது பணியினை நினது பணியாக மாற்றி உன்னைக் காணாது

வேறு எங்கு உன்னோடு கூட இயலும்?

நான் எனது இல்லத்தை விடுத்தலால், நான் உனது இல்லத்தைச் சேர்தல் இயலாது.

நான் பணி செய்யாவிடில் உனது பணியில் நான் பங்கேற்க இயலாது.

நீ என்னுள்ளே குடியிருக்கின்றாய். நான் உன்னுள்ளே இருக்கின்றேன். நீ இன்றி நான் ஏதும் இல்லை. நான் இன்றியும் நீ இல்லை.''

இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் வாழ்ந்த காந்தி அண்ணலும் தாகூரும் இந்தியாவின் இரு கண்களாக அமைகின்றனர். இவ்விரு அறிஞரிடையே நாம் காணக் கூடிய ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காண்டல் இவர்களை நன்கு அறியத் துணை செய்யும். இவ்விருவரிடையே வேற்றுமைகள் இருந்தன. ஆனால், இவ்விருவரும் இந்தியப் பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து உயர்ந்த பண்புகளைப் போற்றினார்கள். அப் பண்புகளை வளம் படுத்தினர். பேராசிரியர் நரவனே என்பவர் இவ்விரு சிந்தனையாளரிடையே உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நன்கு புலப்படுத்தியுள்ளார். அவற்றை முறையே காண்போம்.

காந்தி அண்ணல் வாழ்கையை அணுகிய முறை வேறு, தாகூர் அணுகிய முறை வேறாகும். அண்ணல் இவ்வுலக வாழ்க்கையில் பெரும்பங்கு பற்றினார். துறவு மனப்பான்மை அவரிடம் வேரூன்றி இருந்தது. அறப் பண்புகளை நெறி பிறழாது போற்றினார். தாம் மேற்கொண்டு சிறிதும் பிறழாது அற உண்மைகளைப் போற்றியது போலப் பிறரும் போற்ற வேண்டும் என்று விரும்பினார். தாகூர் அழகியலில் தோய்ந்தவர்; அவர் அழகுக் கண்கொண்டே யாவற்றையும் கண்டார். அவர் துறவு மனப்பான்மையைக் கடிந்து ஒதுக்கினார். மனிதன் குறைகள் உடையவன் என்பதை நன்கு உணர்ந்தார். அக் குறைகளை அவர் பெரிதுபடுத்தவில்லை.

உள்ளது என்பது அழகு வாய்ந்தது என்பது தாகூர் கருத்தாகும். அண்ணலிற்கு நன்மையே உள்ளதாகும். தாகூருக்கு அழகைப் போற்றுதலைவிட உயர்ந்த கடமை வேறின்று. அண்ணலிற்கு கடமையைவிட உயர்ந்த அழகு வேறின்று. காண்ட் (Kant) என்கின்ற ஜெர்மானிய அறிஞர் கூறிய வாக்கியத்தை நாம் பகுத்து அண்ணல் அறச் சட்டத்தின் மேன்மையை அக உலகில் உணர்ந்தார் எனலாம். தாகூர் விண்வெளியில் விளங்கிய உடுக்களின் அழகை உணர்ந்தார் எனலாம். இயற்கை வழங்கும் பல்வகைப் பட்ட காட்சிகளிலோ அல்லது பன்மைக் காட்சிகளிலோ அண்ணல்

தமது கருத்தைச் செலுத்தவில்லை. சோக்ரதர் போன்று மனித வாழ்க்கையில் அண்ணல் ஈடுபட்டு அவற்றிற்குத் தீர்வுகாண முற்பட்டார். தாகூர் இயற்கையினேடு உறவுகொண்டு அதன் நிலைகளை நன்கு உணர்ந்திருந்தார். மாறுகின்ற காலநிலைகள் போன்றவற்றில் திளைத்தார். அண்ணல் பிரபஞ்சம் ஒழுங்குபெற்று விளங்குகின்றது என்று எண்ணினுர். அண்ணல் நிலைபேருன கூறுகளையே இயற்கையிடத்துக் கண்டார். தாகூர் நிலையுதலற்ற மாறும் கூறுகளைக் கண்டார். அம் மாற்றங்களில் தமது மனத்தை ஈடுபடுத்தினுர். மனித வாழ்க்கை உயர்ந்த குறிக்கோளை நோக்கி இயங்குகின்றது என்பது அண்ணலின் கருத்து. அவர் தமது கருத்துகட்கு ஏற்ப த்க்க சான்றுகளை மனித வரலாற்றினின்று எடுத்துக் கூறுகிருர். தாகூர், மனித வாழ்வை ஒரு பெரிய நாடகமாகக் கருதுகிருர். நூற்ருண்டுகளின் கழிவால் விளைந்த நன்மைகளைத் தாகூர் உணர்ந்தார். மனிதச் செயல்களுள் வீரஞ் செறிந்தவற்றையும் அவர் அறிந்தார். துன்பியல் கூறுகளையும் அறிந்தார். காந்தி, இன்றைய உலகில் வாழ்ந்தார். அன்ருட வாழ்வில் அவர் அழுந்தியிருந்தார். தாகூர் தமது கற்பனைச் சிறகு கொண்டு பறந்து கழிந்த காலச் சிறப்பிலேயே திளைத்திருக்க முடிந்தது. மேற்கண்டவை கருத்தியல் வேறுபாடுகளாகும். இவ்விரு அறிஞரும் உள்ளத்துணர்ச்சியில் கொண்டிருந்த வேறு பாடுகளாகும்.

தாகூர், அண்ணலை முதன் முதலாக 'மகாத்மா' என்று அழைத்தார். அண்ணலும் தாகூரின் சிந்தனைகளைக் கூர்ந்து அறிந்து வந்தார். இருவரும் மனிதப் பற்றுக் கோட்பாட்டினர். தனி மனிதனைப் போற்றினர். தன் தகுதியை அறிந்து அவன் உயர்ந்து விளங்க இயலும் என்று கண்டனர்; இறைக் கொள்கையை இருவரும் ஏற்றனர். இருவரும் வைணவ சிந்தனையால் இளமையில் கவரப் பெற்றனர். அன்பு பெரும் பங்கு ஏற்பதை இருவரும் வற்புறுத்தினர். அன்பு மாருன யாவற்றையும் நீக்கி உண்மையின் வாயிலில் நம்மை நிறுத்தும். தொடர்ந்து அன்பு நெறி நின்ருல் உண்மையை உணர இயலும் என்றனர். வாழ்க்கையில் துன்பங்கள் நேர்வதை இருவரும் கண்டனர். ஆனுல், தன்னம்பிக்கையை உடையவராயினர். இருவரும் கல்வியிலே பெரும் புரட்சி விளைத்தனர். இருவரும் மக்களை நன்னெறியில் உய்த்து உயர்ந்த குறிக்கோள் வாழ்வு வாழச் செய்ய இயலும் என்று கருதினர். இருவரும் தத்துவக் கருத்துகளை வரன்முறைக்குட்படுத்தவில்லை. புலன் கடந்த பொருளியல் முடிபுகளைக் காண முற்படவில்லை; அறிவு கொண்டு ஆய்ந்து முறையாக அவற்றிற்குத் தீர்வு காண முயல வில்லை. ஆயினும், தத்துவ சிக்கல்கட்கு விடைகளை அவர்களது சிந்தனைகளில் காண இயலும்.

# 6. காந்தி அண்ணல்

## (1869–1948)

பத்தொன்பதாவது நூற்றுண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி இயக்கம் காந்தி அண்ணலின் வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் உச்சநிலை அடைந்தது என்று கூறலாம். உண்மை, அஹிம்சை ஆகிய இவ்விரண்டு நெறிகளின் வீரத் திருத்தொண்டாக அண்ணல் விளங்கினுர். இந்தியாவின் சுதந்திரத்தை அரும்பாடு பட்டு எவ்வித உயிர்ச் சேதமுமின்றிப் பெற்றுத் தந்தார். இந்தியாவில் அண்ணலை "நாட்டுத் தந்தை" என்று அன்றும் இன்றும் போற்றுகிறுர்கள். உலகெங்கும் அவரை "மகாத்மா" என்று கொண்டாடினுர்கள்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்." (குறள் 294)

என்று திருவள்ளுவர் கூறியதற்கு எடுத்துக்காட்டாக அண்ணலின் வாழ்க்கை அமைந்தது. ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானுனல், அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங் களில் எல்லாம் இருப்பான் என்ற உண்மையை அண்ணலின் வாழ்க்கையில் கண்டோம். அவர் மறைந்தபோது, உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் செய்தி கேட்டு மனம் மிக நொந்தனர்; சிலர் திடுக்கிட்டு இறக்கவும் நேர்ந்தது. அவரது கொள்கைகளை அறியாதவர்கள் கூட அவர்தம் தூய வாழ்க்கையை அறிந்திருந்தனர்.

அண்ணலின் வாழ்க்கையில் நாம் அறியும் சிறந்த உண்மை யாதெனில், மனிதன் தனது குறைகளை உணர்ந்து, அவற்றைக் களைந்து உயரிய தூய வாழ்க்கை வாழ இயலும் என்பதாகும். அண்ணலின் இளமையில் அவரது வருங்கால வாழ்வின் சிறப்பு தோன்றவில்லை. ஆனுல், இளமைப் பருவத்தில் மேற்கொண்ட சில உறுதிகளை வாழ்நாள் முழுமையும் காத்தார். அவர் தமது அன்னையினிடம் தாம் இங்கிலாந்து செல்வதற்கு முன்னர் தந்த வாக்குறுதிகளை வாழ்க்கை முழுவதும் கடைப்பிடித்தார். உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தித் தமது விருப்பப்படி இவையிரண்டும்-

இயங்கும் வகை வாழ்ந்தார். எளிய வாழ்வு, உயரிய சிந்தனை இவ்விரு தொடர்கள் அண்ணலின் வாழ்க்கையை நன்கு உணர்த்துவனவாகும்.

உடலாலும் உள்ளத்தாலும் தூயராய் அண்ணல் வாழ்ந்த காரணத்தினுலேதான் கவிஞர் தாகூர் அவரை "மகாத்மா" என்று மனமாறப் போற்றினுர். இந்து சமய மரபு, இந்தியப் பண்பாடு ஆகியவற்றினின்று பூத்த நறுமலரே அண்ணல் என்று கூறலாம். அவர் சீரிய கருமயோகி; செயலின் நாட்டம் மிக்கவராக விளங்கினுர். "கருமமே கட்டளைக் கல்" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க அண்ணலின் அருமையான செயல்களே அவரது பெருமையை உணர்த்துவன. ஆங்கிலேயப் பேரரசுடன் எவ்விதப் பிணக்குமின்றி இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த ஒன்றே அவரது பெருமையை இந்த நாடு உள்ளளவும் உணர்த்தும். இந் நாட்டு மக்களின் இணையற்ற தலைவராக தமது இறுதி நாள் வரை விளங்கினுர். இச் சிறப்பு உலகில் ஒரு சில தலைவர்கட்கே உரிய ஒன்ருக விளங்கியிருத்தல் நினைவில் கொள்ளத் தக்கது. அண்ணலின் வாழ்க்கையில் தன்னல மறுப்பைக் காண்கிருேம். பயன் கருதாத தொண்டின் சிறப்பைக் காண்கிருேம்.

கோபாலகிருஷ்ண கோகலே, அண்ணலைப் பற்றிக் கூறும் போது அவர் மண்ணினின்று உயர்ந்த வீரர்களைப் படைக்கும் பேராற்றல் மிக்கவர் என்று குறிக்கிருர். சாதாரண மனிதர்களையும் வீரம் மிக்கவராக ஆக்கும் ஆற்றல் அவர்பால் அமைந்திருந்தது என்பது கருத்து. அண்ணலது வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாம் நோக்கும்போது வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாக விளங்குகிருேம். இந் நிலைக்குக் காரணம் அண்ணலது வாழ்க்கையில் அமைந்த தூய்மையாகும். இறை நினைவு சிறிதும் மாருத, வாழ்க்கையாக அது அமைந்தது.

உலகில் தோன்றிய தலைவர்களுள் ஒரு சிலர் மக்களது சிந்தனையைக் கவர்வோராவர். வேறு சிலர் உள்ளத்தைக் கவர்வோராவர். மற்றுஞ் சிலர் மக்களது செயலைத் தூண்டுவோராவர். எண்ணிறந்த மக்கள் இத்தகு தலைவர்களைப் பின்பற்றிச் செயற்படுவர். அண்ணல் மக்களது சிந்தனைகளையும், உள்ளத்துணர்ச்சிகளையும் செயல்களையும் ஒருங்கே கவர்ந்த தனிப் பெருந் தலைவர் என்று கருதலாம். அண்ணலின் எழுத்துகள் அறிவிற்குப் பெருவிருந்தாகும். அவை உள்ளத்தைத் தொடும் தன்மையன. நம்மைச் செயலில் ஊக்குவிப்பன. இவ்வாறு ஆளுமை முழுமையையும் கவரத் தகுந்த தலைவர் இந்தியாவில் இதுகாறும் தோன்றவில்லை என்றே கூறலாம்.

இந்திய நாட்டின் வரலாற்றில் இந்த நூற்றுண்டின் முதற் பாதியில் இணையற்ற தலைவராக காந்தி அண்ணல் விளங்கிஞர். அரசியல் உரிமைப் போரில் தலைமை ஏற்று வெற்றிகரமாக முடித்து நமக்குத் தன்னுரிமை வழங்கிஞர். அண்ணல் அறிவுலகிலுஞ் சரி, சமய உலகிலுஞ் சரி, அஞ்சா நெஞ்சினராக தாம் உணர்ந்த உண்மைகளை எடுத்துரைத்தார். இவ் வகையில் அவர் உலகிற்கு உரியர், உலகச் சிந்தனையாளர்களுள் ஒருவர் எனலாம். மக்கள் வாழ்க்கை அற நிலையில் உயர்வதற்கு உரிய வழிகளைத் தாம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர். அவர் தாம் அறிய நேர்ந்த அல்லது போற்றிய உண்மைகளைச் செயற்படுத்திஞர்; சோதித்துப் பார்த்தார். இவரது வாழ்க்கையே பேருண்மைகளின் சோதனை யாக அமைந்தது. இதனையே அவர் தமது சுயசரிதைக்குத் தலைப் பாக அமைத்தார். அண்ணல் தாம் பிறருக்குப் போதித்த வற்றையே செயற்படுத்திஞர். ''சொல்லும் செயலும்'' ஒருங் கிணைந்த அரிய காட்சியை இவரது வாழ்வில் நாம் காணுகின்றேம். அவரது வாழ்க்கையில் நுட்பமான சிந்தனைகள் ஏதுமில. வாதத் திறன் தோன்ற வழக்காடும் முறைகளும் இல. தமது அகத் தூய்மையினுல் பிறரை எளிதில் இணங்க வைக்குந்திறன் அமைந் திருந்தது. அண்ணலின் சொல்லிலும் செயலிலும் பேராற்றல் விளங்கியதற்குக் காரணம் அவை அறவாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையாகும். இந் நாட்டு ஏழை, எளியவர் களது வாழ்க்கையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இவரது எளிய தோற்றமே, இந் நாட்டு ஏழைக் குடிமகனைப் பிரதிபலிப்ப தாய் அமைந்தது.

அண்ணல் தாம் புதிய தத்துவம் ஏதும் கண்டுபிடித்ததாகவோ, வகுத்ததாகவோ கூறவில்லை. நமது நாட்டுத் தத்துவம் உணர்த்தும் நிலையான உண்மைகளை அன்றுட வாழ்வில் எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்தற்குப் பயன்படுத்தியதாகக் கூறுகிருர். அவர் புதிய தத்துவ அமைப்பு ஏதும் காணவில்லை என்று கூறிஞலும், அவரது சிந்தனையில் புதிய தத்துவ நோக்க அமைவு காணக்கூடியதாக விளங்குகிறது. வாடியா என்கின்ற அறிஞர் காந்தீய சிந்தனை களில் ''பயன்வழி கருத்து முதற் கொள்கை (**Pragmatic Idealism**) விளங்குகின்றது,'' என்று கூறுகிருர்.

மனிதனிடத்து ஆன்மீக நிறைவு பெறுகின்ற வேட்கை வேரூன்றி விளங்குகின்றது. உண்மை அல்லது இறைவனை உணர்தல் மனித இனத்தின் குறிக்கோளாகும். இவ் வுணர்விற்கு மனிதன் சில ஆன்மீக சாதனைகளை மேற்கொள்ள வேண்டும். இன்னுசெய்யாமை, சீரிய ஒழுக்கம், உடைமைகளைக் குறைத்தல், அச்சமின்மை, உழைத்துண்ணல், உண்மையைக் கடைப்பிடித்தல்,

பிறர்பொருள் வெஃகாமை போன்ற சிறப்பு நெறிகளைப் பின்பற்றினால் இறைவனை உணர்தல் இயலும். சமுதாய வாழ்வு சிறக்க அமைதற்கும் இப்பண்புகள் போற்றுதற்குரியன. இப் பண்புகளைச் சிறிதும் பிறழாமல் அண்ணல் தமது வாழ்கையில் போற்றி வாழ்ந்த காரணத்தால், ஜோட் என்கின்ற அறிஞர் அவரை அறஉலகில் ஒரு மேதை என்கிறார். அறவாழ்வில் புரட்சியாளராக விளங்கினார் என்று டாக்டர் வி. பி. வர்மா கூறுகிறார். வாழ்வின் அடிப்படை சீரிய ஒழுகலாறாகும். சீலத்தைப் போற்றும் வாழ்வே அறவாழ்வாகும். மனித இனம் அரசியலிலும் சமுதாய வாழ்விலும் மேன்மைபெற வேண்டுமெனில், அற வாழ்வில் புதிய விழிப்பும் புத்துணர்ச்சியும் பெற வேண்டும். அறவுணர்வே மனிதனின் மனச் சான்றாகும். விழுமிய பேறுகள் பெறுதற்கு வழிகாட்டி மனச்சான்றாகும். மனிதன் தீமை நன்மை ஆகிய இவ்விரண்டின் கலவையாக விளங்குகிறான். மனிதனிடத்துத் தீய விலங்கியல்பு களும் உள. சிறந்த நல்லியல்புகளும் உள. மனிதன் தனது சிந்தனை ஆற்றலால் தீமையை நன்மையினின்று பிரித்து உணர்ந்து தீமைகளைக் களைய வேண்டும். நிலையுதல் உடையன எவை என்றும், நிலையாதன எவை என்றும் அறிந்து நிலையானவற்றைப் போற்றவேண்டும். சீரிய உண்மைகளைக் கடைப்பிடிக்கும்போது இவனது உள்ளம் உறுதியோடு விளங்க வேண்டும். மனிதனிடத்துத் தன்னலம், தன்னல மறுப்பு ஆகிய இவ்விரு இயல்புகளையும் காண லாம். மனித சமுதாயம் மேன்மை பெற ஒருவன் உழைக்கும்போது அவனது தன்னலம் தேய்கிறது. ஒருவனது அறமேன்மையை அவன் மக்கட் சமுதாய நலத்திற்கு ஆற்றுகின்ற தொண்டுகளைக் கொண்டு அறியலாம். அறச் செயல்களை அச்சம் காரணமாகவோ அல்லது மற்றையோர் வற்புறுத்தல் காரணமாகவோ புரிதல் கூடாது. தன்னுரிமையோடு அச்செயல்கள் இயல்பாகத் தோன்ற வேண்டும். இம்மையில் ஆற்றுகின்ற அறச்செயல்கள் மறுமையில் நலம் விளைக்கவல்லன என்ற அடிப்படையிலும் அறச் செயல்களில் ஈடுபடுதல் ஆகாது. வள்ளுவர் கூறுவதைப் போல் "மேலுலகு இல்லெனினும் ஈதலே நன்று." காந்தி அண்ணல் மக்கள் நேரிய அற வாழ்வு வாழ்வதற்குக் சில அடிப்படை நெறிகளை வகுத்தார். இவை நமது சமயத்தால் வற்புறுத்தப்பெற்றன. இவற்றை மேலும் விளக்கி நமக்குத் தந்துள்ளார். இறையுணர்வு எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை, புலனின்பம் தவிர்த்த வாழ்வு, மிகுபொருள் உவவாமை, அச்சமின்மை அக, புறத்தூய்மை ஆகியவற்றைத் தனி வாழ்விலும் பொதுவாழ்விலும் அண்ணல் வற்புறுத்தினார். இவற்றிற்கு அண்ணல் தந்த விளக்கங்களைக் காண்போம்.

## சமயம்

அண்ணலின் சிந்தனையில் கருவாக விளங்கியது அவர் இறைவனைப் பற்றிக்கொண்டிருந்த கருத்தாகும். அவர் வைணவக் குடும்பத்தில் பிறந்தவர். வைணவர்கள் இறையை உருவமுள்ளவர் என்றே கொள்வர். இறைவன் அனந்த கல்யாண குணநலன்கள் உடையவர் என்பது வைணவர் கொள்ளுங் கருத்து. இக் கருத்து சங்கரர் வற்புறுத்திய நிர்குண பிரம்மத்திற்கு மாறுனது ஆகும். இராமானுஜர், நிம்பார்க்கர், மத்வர், வல்லபர் ஆகியோர் இறைவனை எல்லாம் வல்லவராக, எல்லாம் அறிபவராக, பெருங் கருணையாளராகக் கண்டனர். இறைவன் யாவற்றையும் படைத்து, காத்து, அருளுபவனுகக் கருதினர். இளமையில் இறைவனின் திருநாமமாகிய "இராமனை" இடையருது ஓதுதற்குக் கற்ருர். பின்னர் இந் நாமம் தசரதனது மகனுகிய இராமனைக் குறிக்க வில்லை என்று அறிந்த நிலையிலும் ஓதுதலைக் கைவிடவில்லை. அவர் ஹரிஜன் ஏப்ரல் 4, 1946 இதழில் கூறியது: "எனது இராமன்..... வரலாற்று இராமனன்று. அவன் என்றென்றும் உள்ளவன், பிறவாதவன், இரண்டற்றவன். அவனையே நான் வழிபடுகின்றேன்." அண்ணல் தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் தவருது பாடி மகிழ்ந்த பாடலொன்றில் இராமன் ஈஸ்வரன் அல்லா ஆகியவை இறைவனின் திருநாமங்களே என்று வற்புறுத்தினுர். அவரைக் கொடியவன் ஒருவன் சுட்டபொழுதும் அவர் மறவாது நாவினுல் நவின்றது "இராம், இராம்" என்பதேயாகும்.

காந்தி அண்ணல் சமயம் என்ற சொல்லைப் பயன்படுத்திய போதெல்லாம் தனியொரு சமயத்தைக் குறிக்கவில்லை. மரபு வழி அமைந்துள்ள எச் சமயத்தையும் குறித்தாரிலர். அவர் சமயங்களை எல்லாம் கடந்து விளங்குகின்ற நெறியினைக் குறித்தார். எச் சமயம் நம்மை இறைவனேடு தொடர்பு படுத்துகிறதோ அதையே குறிப்பிட்டார். மனிதனின் குறிக்கோளாக இலங்க வேண்டுவது இறையை உணர்தலாகும். அவனது செயல்கள் யாதாயினும் இவ் இறையுணர்வே அடிப்படையாதல் வேண்டும். அண்ணல் தமது வாழ்வின் இலட்சியமாகக் கூறும்போது தம்மை உணரத் தாம் இடையருது முயன்று வருவதாகக் குறிப்பிடுகிருர். இவருக்குச் சமயம் என்பது வாழ்க்கையைப் பற்றிய நோக்கு ஆகும். இக் கருத்து, அவர் பேசியன, எழுதியன, செய்தன யாவற்றிலும் ஊடுருவி நின்றது. சமயம் வாழ்க்கையின் நிலைக்கள மாக விளங்க வேண்டும் என்பது இவர் கருத்தாகும். பரம நிசம் ஒழுங்குபெற நடைபெறுகின்றது என்ற நம்பிக்கையே சமயம் என்று விளக்கியுள்ளார்; வாழ்க்கையில் செயற்படும் ஆற்றல், நம்மை இயக்கும் ஆற்றல் என்று சமயத்தை விளக்கினுர். தமது

சமயம், இந்து சமயம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைக் கடந்து விளங்குவது என்றார். இவற்றிடையே உள்ள வேறுபாடுகளைக் கடந்து இணைப்புக் கூறுகளே தன்னகத்தே கொண்டு விளங்குவது என்று தமது சமயத்தினை மேலும் விளக்கியுள்ளார். வாழ்க்கையை மாற்றி அமைத்து, புனிதப்படுத்தி உயர்நிலையில் உய்க்கவல்லதே சமயம். மனிதனிடத்து மாறாமல் விளங்குகின்ற கூறு சமயமாகும். மனிதனை எந்நிலையிலும் எதையும் அர்ப்பணிக்கவும் இறையை உணர்வதற்கு இடையறாத முயற்சியில் ஈடுபடுத்தவும் வல்லது சமயம் என்பது அண்ணல் கொண்ட கருத்தாகும்.

சமயம் என்பது யாதென்று அறிவதற்கு அல்லது எத்தன்மைத்தாதல் வேண்டும் என்று தெரிந்துகொள்ள இருவகையான அடிப்படைகளை நிறுவினார். சமயம், பகுத்தறிவோடு இயைதல் வேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று ஒழுக்கத்தோடு முரணுதல் கூடாது என்பதாகும். ஆதலால் சமயம் என்பது அறிவிற்குப் பொருந்தி வருதல் வேண்டும். சீரிய ஒழுக்கத்தை வற்புறுத்துவதாதல் வேண்டும். சமயம் செயலற்று இருத்தல் ஆகாது என்பது அணணலின் கருத்து. காந்தீய சமயத்தைப் ப்ற்றிக் கூறும்போது அதை இறைக்கொள்கை என்று கூறுவதோ, அல்லது மனித நலக் கோட்பாடு என்று கூறுவதோ அவரது சமயக் கருத்தினைச் செவ்வையாக விளக்குவதாகாது. தொன்று தொட்டு நிலவி வருகின்ற சமயங்களில் உள்ள சீரிய பண்புகளைப் போற்றுதல் காந்தீய சமயமாகும். சமயங்களின் அடிப்படைகளை அறிவு கொண்டு ஆராய்தல் வேண்டும் என்பது அண்ணலின் கருத்தாகும். ஆதலால், பகுத்தறிவுக்கொள்கை உடையவராகவும் அண்ணல் விளங்கினார். அதே சமயத்தில் அறிவின் எல்லையையும் உணர்ந்திருந்தார். எல்லாம் வல்ல பேராற்றல் அறிவு என்று கொண்டு அறிவை அண்ணல் வழிபடுவோரும் அல்லர். மூட பழக்க வழக்கங்களைச் சமயத்தின் பெயரால் ஏற்கவும் விழைந்தவரும் அல்லர்.

அண்ணலின் அன்னை, பக்தியிற் சிறந்தவர். தூய வாழ்க்கை வாழ்ந்தவர். விரதங்களைத் தவறாமல் கடைப்பிடித்தவர். ஆலய வழிபாடும் உடையவர். இராமாயணம், பாகவதம் போன்ற நூல்கள் அவர் படிக்க, அண்ணல் இளமையில் கேட்டார். அன்னையாரது தூய பக்தி நிறைந்த வாழ்க்கை அவரது இளமையில் படிந்தது. அவரது இல்லத்திற்குச் சமணர், முஸ்லீம்கள் பாரசீகர்கள் முதலியோர் வருதல் உண்டு. பல சமயத்தவரோடும் பழகும் வாய்ப்பு இளமையில் அமைந்தது.

இங்கிலாந்தில் அண்ணல் சட்டப் படிப்பு பயின்றபோது கீதை

என்னும் நூலை அறிய நேர்ந்தது. கீதையில் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள ஒரு பகுதி இவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அது தொடங்கி கீதை அவருடன் பிரியாமல் இருந்து வந்தது. பிளாவட்ஸ்கி அம்மையாரது நூல்களின் வாயிலாக இந்து சமயத்தின் ஏற்றத்தை அறிந்தார். கிறித்தவ நண்பர் ஒருவர் விவிலியம் அவரிடம் தந்தார். பழைய ஏற்பாடு என்னும் விவிலியப் பகுதி அவரைக் கவர்ந்திலது. ஆனால் ''மலைச்சொற் பொழிவு'' உள்ளத்தைத் தொட்டது. பின்னர் அடுத்தடுத்து இப் பகுதியைப் பயின்றார். இப் பகுதியினின்று மேற்கோள்களைத் தவறாமல் எடுத்துக்காட்டினார்.

## இறைவன்

அண்ணல் தாம் கருதிய இறைவனைப் பற்றி விரிவான தெளிவான விளக்கமொன்றை ''யங் இந்தியா'' என்னும் இதழில் (மார்ச்சு 3, 1925) கொடுத்துள்ளார்.

''இறைவன் இத்தன்மையன் என்று வரையறுத்துச் சொல்ல இயலாது. நாம் அனைவரும் இறைவனை உணர்கிறோம். ஆனால், அவனை அறிய இயலவில்லை. எனக்கு இறைவன் அறமும் ஒழுக்கமும் ஆவான். இறை, பயமற்ற நிலையாகும். நமது வாழ்விற்கு முதலாக இறைவன் விளங்குகிறான். ஒளிக்கு மூலமாவான்; எனினும் இறைவன் இவை யாவற்றையும் கடந்து விளங்கினான். இறைவன் வாக்கிற்கும் அறிவிற்கும் அப்பாற் பட்டவன். அவன் உருவத்தோடும் விளங்குகிறான். அனைத்துப் பொருள்களின் சாரமாகவும் அவன் விளங்குகிறான். நம்பிக்கை உடையோருக்கு அவன் உளன்.''

இறைவனை அண்ணல் உண்மை என்று குறிக்கிறார். உண்மை என்ற இச்சொல் உள்பொருளை உள்ளதை, சத்தைக் குறிப்பதாகும். உண்மை என்ற சொல்லிற்குப் பிற பொருள்களும் உண்டு. அறி வாராய்ச்சி இயலில் உண்மை என்ற சொல்லைப் பயன்படுத்து கிறோம். அகக் கருத்து புறத்தே உள்ள பொருளோடு பொருந்து மானால் உண்மை என்கிறோம். புறப் பொருளை நாம் உள்ளவாறு அறியும்போது அதன் உண்மை நிலையை அறிவதாகக் கூறுகிறோம். கிரேக்கரிடமிருந்து அறிதலுக்கும், உள்ளதன் நிலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்துள்ளோம் (Knowing and Being). நாம் உள்பொருளை (Real) எவ்வாறு அறிகிறோம் என்பது ஒன்று. இந்தப் பொருள் தன்னிலையில் எவ்வாறு விளங்குகின்றது என்பது மற்றொன்று. திருவள்ளுவர் இறைவனைக் குறிக்கப் பல சொற்களை ஆள்கின்றார். மெய்ப்பொருள், செம்பொருள், வாலறிவன் போன்ற பலசொற்களுள் உள்ளது என்பதும் ஒன்று. ''உள்ளது'' என்னும் இச் சொல் சமஸ்கிருதத்தில் வழங்கும் ''சத்'' என்ற சொல்லின்

பொருளைக் குறிப்பதாகும். காந்தி அண்ணல் வகுத்துள்ள இறைக் கொள்கையைக் குறிக்கத்தக்க சொல் ''உள்ளது'' ஆகும். அவர் ''சத்'' என்ற சொல்லை உள்பொருளைக் குறிக்கவே பயன்படுத்துகிறார்.

அண்ணலின் எழுபதாவது ஆண்டு பிறந்த நாள் விழாவிற்காகத் தொகுக்கப்பெற்ற கட்டுரைகளுள் ஜே.எச். ம்யூர்ஹெட் என்பவர் ஒன்று எழுதியுள்ளார். அவர் அண்ணலின் இறைக் கொள்கையை நன்கு விளக்கும் பொருட்டு உள்ளது என்னும் சொல்லை உண்மை(Truth)என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்று கூறியுள்ளார். அவரது கட்டுரையினின்று ஒரு பகுதியை நாம் ஊன்றி அறிதல் விளக்கத்திற்கு ஏதுவாகும்.

உண்மை என்பது உள்ளது; பிழை என்பது இல்லாதது. ''இந்து சமயம் உண்மைகளடங்கிய சமயம். உண்மை என்பது இறைவனாகும்.'' இவ்வாக்கியம் அறிதலுக்கும் உள்ளதற்கும் (Knowing and Being) உள்ள அடிப்படையான வேற்றுமையைப் புறக்கணிக்கின்றது. ஆதலால், உண்மை (Truth) என்ற சொல் ஆட்சி பெறுகிற இடங்களில் எல்லாம் நாம் உள்ளது (Being or Real) என்ற சொல்லை ஆளுதல் வேண்டும். உண்மை என்ற சொல்லைப் பயன்படுத்தினால் மனித மனம் அறிகின்ற அளவில் உண்மை அமைகின்றது என்று பொருள்படும். மேலும், சிந்தனையன்றி உள்பொருளைப் பிற வகைகளிலும் உணர்தல்கூடும் என்ற நிலையையும்குறிப்பதாகும். ம்யூர்ஹெட் இங்கேகேட்பது:உள் பொருள் நாம் செய்வன, சிந்திப்பன ஆகியவற்றிலும் ஏன் வெளிப் படுதல் கூடாது? இறைவனின் சித்தத்தோடு நமது செயல்கள் ஒன்றுமானால் அவை சிறப்புடையனவாகும். நேரிய செயல் நேரிய உணர்ச்சியினின்று பிறத்தல் வேண்டும். நமது சிந்தனை சொல் செயல் யாவற்றிலும் இறையுணர்வு வெளிப்படுதல் வேண்டும்: பிளேட்டோ என்கின்ற அறிஞர், அறிவு மூவகை நிலைகளில் அமைவதாகப் பாகுபடுத்திக் காண்கிறார். சாதாரண நிலையில் நாம் அறியும் பொருளுக்கும் நாம் அறிகின்ற முறைக்கும் வேறுபாடு உண்டு. உயர்நிலையில் அறிவு அறிபொருள் என்கின்ற இரண்டும் இணைகிறது. உடனடியாகக் காணும் காட்சி, காணப் பெறுவதால் அழுந்துதல் ஆகிய நிலைகள் இவ்வுயர்நிலையில் எழுகின்றன. இந் நிலையில் உண்மைக்கும் (அறிதலால் எழுகின்ற அறிவு) உள்ளதற்கும் வேறுபாடு நீங்குகிறது. உண்மையான அறிவு, உள்ளத்தோடு இயைகிறது; முற்றொருமை உடையதாகிறது. ம்யூர்ஹெட் விவிலியத்தினின்று மேற்கோள் ஒன்று தருகிறார். 'நீ உண்மையை அறிவாயாக, அவ்வுண்மை உன்னை விடுதலை செய்யும்.' இங்கே உண்மை என்பது அறிவினால் அறியப்படுமொன்றன்று. உள்

பொருளை அல்லது உள்ளதை நாம் உணர்வோமானல் அவ்வுணர்வு நமக்கு விடுதலை நல்கும். ஆதலால் காந்தி அண்ணல் "உண்மை" என்று வழங்கியது உள்பொருளைக் குறித்த நிலையில் என்று கொள்ள வேண்டும்.

இலண்டனில் வட்டமேஜை மாநாட்டிற்குச் சென்று திரும்பும் போது ஸ்விட்சர்லாந்து நகரில் அன்பரொருவர் அண்ணலை நோக்கி அவர் ஏன் இறைவனை உண்மை என்று குறிக்கிருர் என்று கேட்டார். அத்தருணத்தில் அண்ணல் கூறியதைச் சுருக்கி ஈண்டு தருகிறேன். அவரது இளமையில் இந்து சமயத்தின் திருநூல்கள் தொகுத்துள்ள இறைவனின் ஆயிரம் திருநாமங்களை ஓதினுர்; இவ்வாயிரமும் இறையினது புகழை முழுமையாக உணர்த்த மாட்டா. ஆதலால், இறைவனுக்கு நாமம் இல்லை என்று கூறுகிருேம். மணிவாசகர், 'ஒருவரும் ஒரு நாமம் இல்லாதானுக்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேனம் கொட்டாமா,' என்று கூறியுள்ளது ஈண்டு நினைவு கூரத்தக்கது. இஸ்லாம் சமயமும் இறைவனுக்கு பல திருநாமங்களைக் கூறுகிறது. இறைவன் அன்பு வடிவினன் என்று கூறலாம். மனிதன் எம்மொழி வாயிலாகவும் இறைவனது புகழை உணர்த்த இயலாது. ஆதலால் அண்ணல் தாம் "இறைவனை உண்மை வடிவினன்" என்று கூறத் தொடங்கினுர். பின்னர் ஈராண்டுகள் கழித்து "உண்மையே இறைவன்" என்று கருதத் தொடங்கினுர். இவ்விரு வாக்கியங்கட்கும் இடையே உள்ள வேற்றுமையை நாம் அறிதல் வேண்டும். உண்மை என்ற சொல்லிற்குப் பொருள் ஒன்றே. இச் சொல் இரு பொருள்பட யாண்டும் வழங்குவதில்லை. இறைவன் இலன் என்னுங் கொள்கையினர் கூட உண்மையை மறுப்பதில்லை. உண்மையின் ஆற்றலை இவர்கள் உணர்ந்தே உள்ளனர். உண்மை நாட்டத்தில் இவர்களுக்குள்ள ஆர்வம் காரணமாக இறைவனை மறுக்கின்றனர்.

இந்து தத்துவத்தில் இறைவன் ஒருவனே உளன்; இறைக்கு அயலாகப் பிற பொருள்கள் இல. இவ்வுண்மை இஸ்லாம் சமயத்திலும் கூறப்பெற்றுள்ளது, உண்மைஎன்னும் பொருளைக் குறிக்கும் சமஸ்கிருத மொழிச் சொல் "சத்யம்" என்பதாகும். இச் சொல்லிற்குரிய நேரான பொருள் 'உள்ளது,' சத் 'என்பதாகும்.' ஆதலால் அண்ணல் "உண்மையே இறைவன்" என்ருர்.

இறைவனை அன்பு வடிவினன் என்று ஏன் குறித்தலாகாது? அன்பைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் "Love" என்பதற்கு அம்மொழியிலேயே பல பொருள்கள் இருக்கக் காண்கிருேம். மனிதரிடையே தோன்றும் அன்பு இழிவானதாகவும் அமையலாம்; உயர்வானதாகவும் அமையலாம். அன்பை அஹிம்சை என்ற

பொருளில் குறிக்கலாம் என்ருல் அஹிம்சை நெறியை முழுமை யாகப் பின்பற்றுவோர் ஒரு சிலரே ஆவர். ஆதலால் இறைவனை அன்பு வடிவினன் என்று கூருது 'உண்மை வடிவினன்' என்று தாம் கூறுவதாக அண்ணல் குறிக்கின்ருர்.

உண்மை யாது ? இக் கேள்விக்கு எளிதில் விடை காணுதல் இயலாது என்று பதிலிறுத்து அண்ணல் ''அகத்தே இருந்து, உணர்த்தும் ஒரு குரல்'' என்கிருர். உள்ளிருந்து உணர்த்துவது என்கின்றபோது இறைவன் உணர்த்துவதாக அண்ணல் உணர்ந் தார் என்று கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு உண்மையை உள்ளத்தே உணர்த்த உணர்வது என்று குறித்தல் மக்கள் உண்மையை வெவ்வேறு வகையிலும், சில சமயங்களில் மாருன வகையிலும் கொள்கின்றனர் என்ற கேள்வி எழுகின்றது. மனித னிடத்தில் மனம் பல்வேறு வகைகளில் தொழிற்படுகின்றது. மனத்தின் படிமுறை வளர்ச்சியும் யாவரிடத்தும் ஒரே படித்தாக விளங்கவில்லை. ஒருவனுக்கு உண்மையாக விளங்குவது மற்ெரு ருவனுக்குப் பொய்யாகலாம். விஞ்ஞானத்தில் உண்மையை அறிய பரிசோதனைகள் செய்கிருேம். இச் சோதனைகள் செய்ய நாம் முதலில் கற்றுக் கொள்கிருேம். உரிய கருவிகளை இயக்கு வதற்குக் கற்கிருேம். தேர்ந்துள்ள துறையில் நன்கு தேர்ச்சி பெறுகிருேம். பின்னர் சோதனைகளைச் செய்கிருேம்; உண்மைகளை அறிகிருேம். இஃதேபோல் அகத்துணர்கின்ற குரலைப் பற்றி ஒருவன் பேசுவதற்கு முன்னர் சிலவகைகளில் அவன் தன்னை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். உண்மையே இறையின் வடிவம் என்று உணர்வதற்கு நாம் சில விரதங்களை மேற்கொளல் வேண்டும். வாய்மையினை எப்போதும் கடைப்பிடித்தல், புலனின் பங்களில் தோயாதிருத்தல், எவ்வுயிர்க்கும் இன்ன செய்யாமை, வறுமையினை வலிந்து ஏற்றல், உடைமைகளைத் தவிர்த்தல் ஆகிய இவ் ஐவகை நெறிகளிலும் நிற்றல்வேண்டும். இவற்றை மேற்கொண்டு நாம் ஆன்மீகத் துறையில் பரிசோதனைகளைப் புரிதல் வேண்டும்.

இறைவனை ''சச்சிதானந்தம்'' என்றும் அண்ணல் குறித்தார். இது சத், சித், ஆனந்தம் ஆகிய முச்சொற்களால் ஆயது. ''சத்'' உள்ளது என்று பொருள்படும். ''சித்'' என்பது உண்மையான அறிவாகும். உண்மையான அறிவு ஏற்படும் போது ஆனந்தம் ஏற்படும். அளவையியலில் நாம் கொள்ளும் கருத்தும் புறத்தே உள்ள பொருளும் ஒத்திருந்தால் உண்மை என்கின்ருேம்; அல்லது முழுமையினுள் (கருத்துள்) அடங்கியுள்ள பல்வேறு பகுதிகளும் இயைபு பெற அமையுமேயாளுல் அதனை உண்மை என்கின்ருேம். அல்லது அறிவு கொண்டு அமைக்கப் பெறுவது உண்மை என்கின்

றோம். காந்தி அண்ணல் மேற்குறித்த எக் கருத்திலும் உண்மை என்ற சொல்லை ஆளவில்லை. ''அற ஆற்றல்'' என்றும், அது உள்ளிருந்து இயக்குவது என்றும் அண்ணல் கூறுகிறார். உண்மை என்பது உள்ளதனோடு ஒற்றுமையுடையது என்கின்றார்.

இறைவன், காந்தி அண்ணலுக்கு மிகவும் உண்மையானவன். அறையில் உள்ள பொருள்களின் இருப்பைவிட தாம் இறைவனின் இருப்பையே அதிகமாக உணர்வதாகக் கூறுகிறார். இறையின் இருப்பை அவர் இடையறாது உணர்ந்தார்.

## உண்மை

''உண்மை என்ற சொல்லை விரிந்த பொருளில் நாம் அறிதல் வேண்டும். இது வாய்மை மட்டுமன்று, சொல்லிலே ஒருவன் தூய்மையாக விளங்குதல் மட்டும் உண்மை வழிபாடு ஆகாது. ஒருவன் கண்ட நிகழ்ச்சியை அல்லது கேட்ட உண்மையினை உள்ளவாறு திரிக்காமல், கூட்டாமல், குறைக்காமல், மறைக்காமல் அப்படியே கூறுவது வாய்மையின்பாற்படும். அண்ணல் உண்மை என்று குறிப்பது சிந்தனை, சொல், செயல் ஆகிய மூந்நிலைகளிலும் போற்றுதல் ஆகும். உண்மையை நாளும் நமது வாழ்வில் கடைப்பிடித்தல் வேண்டும். இதனின்றும் வழுவுவோமேயானால் நாம் மதிக்கும் ஒருவரிடம் நாம் வழுவியதைக் கூறிக் கழுவாய் தேடுதல் வேண்டும். ஆதலால், உண்மை கருத்தியல்பாக விளங்குவதன்று. வாழ்க்கையில் வழிகாட்டும் ஒன்றையே உண்மை அல்லதுஉள்ளது என்கிறார் அண்ணல்.

## அஹிம்சை

இச் சொல்லையும் அதற்குரிய விரிந்த பொருளிலே அண்ணல் கொள்கின்றார். எதிர்மறைச் சொல்லாகக் கொண்டு இன்னா செய்யாமை என்று பொருள் செய்யலாம். கொல்லாமை, துன்புறுத்தாமை, இடுக்கண் விளைக்காமை என்ற பொருள்களில் வழங்கலாம். ஆனால், உடன்பாட்டுச் சொல்லாகக் கொள்ளும்போது எவ்வுயிரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகுதல் என்று பொருள்படுகிறது. எப்போது அன்புபூண்டு ஒழுகுவோம் என்றால், உயிரினம் அனைத்தும் நம்மோடு உறவு கொண்டு விளங்குகிறது என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். இவ்வுணர்வு தலைப்பட்டால் எவ்வுயிர்க்கும் ஊறு செய்ய மாட்டோம். அன்பு நெறியே உயிரினத்தை வாழவைக்கின்றது. மக்களினம் தழைக்க இவ் வன்பு நெறி மிகவும் தேவையானதாகும். அன்பு நெறி இயந்திர அமைப்பு போன்று இயல்பில் இயங்குவதன்று. வலிந்து, முயன்று நாம் மேற்கொள்ள வேண்டிய தொன்றாகும். அன்பின் ஆற்றல் இயற்கையில் விளங்கும் ஆற்றல்களைவிட நுட்பமானது. ஏனைய ஆற்றல்கள் எல்லாம் ஒருங்கிணைந்

தாலும் அதைவிட மேலானது அஹிம்சையாகும். இன்னு செய்யாமை என்பது என்றும் பிழைத்தல் இலது. பிழைப்பதாயின், பின்பற்றுவோரிடையே உள்ள குறையே காரணம் எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்துதல் என்று சுருங்கச் சொல்லலாம். இவ்வறத்தை சிந்தனை, சொல், செயல் ஆகிய முத்திறத்திலும் போற்ற வேண்டும். நாம் பிறரிடம் பழகுகின்றபோது எண்ணத்தாலோ சொல்லாலோ செயலாலோ எவ்விதத்திலும் பிறருக்கு ஊறு நேராத வகையில் ஒழுகுதலே அஹிம்சையாகும். எவ்விதப் பற்றுமின்றி எவ்வுடைமையுமின்றி பற்றுகளனைத்திலுமிருந்து நீங்கிய ஒருவன் தான் அஹிம்சையை முழுமையாகப் பின்பற்றுதல் இயலும். எல்லோரும் போற்றி ஒழுகத்தக்கது இவ்வறம். துன்பங்களைத் தெரிந்து ஏற்றலும் இவ்வறத்தின் பாற்படும். கொடுங்கோன்மை புரிகின்ற ஒருவன் விருப்பத்திற்கு இணங்கி, பணிந்து, வாளா இருத்தல் அஹிம்சை அன்று. அவனது கொடுமையை நாம் எதிர்க்க வேண்டுமே அன்றி அவனிடத்துப் பகைமை கொள்ளல் ஆகாது. தீமை புரிவோனையும் நேசிக்க வேண்டும். தீமைகளை வெறுத்தல் வேண்டும். பாவம் செய்வோரிடத்தும் அன்பு பூண்டு பழக வேண்டும். அவனது பாவச் செயல்களை வெறுத்து ஒதுக்க வேண்டும். காந்தி அண்ணலின் கருத்துப்படி அஹிம்சை என்பது செயலாகும். தீமையை எதிர்த்த போராட்டமாகும். தீமைக்குத் தீமை புரிதலன்று. தீமையைத் தீமையால் வெல்லுதலரிது. இது மேலும் தீமையைப் பெருக்கும். அஹிம்சையை அண்ணல் தமது வாழ்வின் சட்டமாகக் கொள்கிறார். தமது இதயப் பண்பு என்கிறார். வாழ்வை நெறிப்படுத்தும் தத்துவம் என்று கூறுகிறார். ஆதலால், மூளையைக் கொண்டு அறிவதைவிட இதயங்கொண்டு உணர்ந்து போற்ற வேண்டும். சுருங்கக் கூறின் அஹிம்சையை அறிவு கொண்டு ஆராய்வதைவிட உள்ளத்தில் இவ்வறம் ஊன்றி வாழ்வில் மலர வேண்டும் என்பது அண்ணலின் கருத்தாகும்.

அச்சமின்மையும், பொறுமையும் அஹிம்சையை வாழ்வில் மேற்கொண்டு ஒழுகுவதற்குத் தேவையானவை. இவ்வறம் ஒருவனது தன்மானத்தையும் கௌரவத்தையும் காக்கின்றது. அஹிம்சையைக் கடைப்பிடிப்போர் தோல்வியுறுதல் இல்லை. தியாகம், துன்ப ஏற்பு முதலியன ஒருவன் தன்மானமிழந்து போற்ற வேண்டும் என்பது அஹிம்சையின் பொருளன்று. சிறுவர் வயது வந்தவர் மூப்பு எய்தியவர் அனைவரும் அஹிம்சையைப் பயிலலாம். இவ்வறத்தைப் போற்றுவதற்கு இரு அடிப்படைப் பண்புகள் தேவை. ஒன்று இறைவனிடத்தில் மாறாத நம்பிக்கை. மற்றொன்று மனிதர் அனைவரிடத்தும் ஒத்த அன்பு. உயிர்க்குலம் முழுமையுமே நாம் அன்பு செலுத்துவதற்குரியதென்றாலும், முதலில் மனித இன மளவில் நாம் அன்பு செலுத்துவதற்குப்

பயில்வோம். இல்லறத்தில் அன்பு நெறியில் இனிது பழகுவானே ஆனால், பிறரோடு பழகுதல் எளிதாகும். அஹிம்சை நெறியில் நிற்போனுக்கு உலகமே குடும்பமாகும். இவன் பிறரை அச்சுறுத்தவும் மாட்டான், அஞ்சவும் மாட்டான். தீமை புரிபவனிடத்தும் அன்பு காட்டுபவனே அஹிம்சை நெறியைக் கடைப்பிடிப்பவன் ஆவான்.

உண்மையும் இன்னாசெய்யாமையும் பிரிவற நிற்பன. இவை இரண்டும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து இருத்தலால், இவற்றைப் பிரித்தல் அருமை என்று அண்ணல் கூறுகிறார். ஒரு நாணயத்தின் இரு புறங்களைப் போல, இன்னா செய்யாமையும், உண்மையும் விளங்குகின்றன. உண்மையை முதலில் போற்ற வேண்டும். பின்னர் இன்னாசெய்யாமையைப் போற்ற வேண்டும். உண்மை என்பது முற்கோளாகும். 'இதிலிருந்து பெறப்பெறுவது, இன்னா செய்யாமை மனிதன் விலங்கு நிலை கொண்டு விளங்கும் போது, வன்முறைகளில் ஈடுபடுகிறான். ஆனால், அவன் தனது உண்மை நிலையை உணரும்போது, வன்முறைகளைத் தவிர்க்கிறான். விலங்கு தனது உடல் வன்மையையே அறியும்; விதி அல்லது சட்டம் என்பதனை அறியாது. மனிதன் தனது உயர் பண்பிற்கு ஏற்ப இன்னாசெய்யாமையை அறமாகப் போற்ற வேண்டும்.

இன்னா செய்யாமை, கோழைகளின் ஆயுதமன்று. ஆன்மீகப் பலம் குன்றியவர்கள் பயில்வதன்று. நம்மைத் தாக்குகின்ற ஒருவனை நாம் மீண்டும் தாக்காவிட்டால், அது பலம் குறைந்ததலால் ஏற்படும் நிலை என்று பொதுவாகக் கருதுகிறோம். இது தவறானதாகும். தாக்குபவனை மீளவும் நாம் தாக்கினால் தாக்குதல் மென்மேலும் வளரும்; குறையாது. தனியொருவராக நின்று அண்ணல் ஆங்கிலேய அரசின் கொடுமைகளை எதிர்த்தார். அவருக்கு நேர்ந்த இன்னல்கள் பலவாகும். அவர் பன்முறை சிறைப் படுத்தப்பெற்றார். அச்சத்தை அறவே வாழ்வினின்று நீக்கியவன்தான் அஹிம்சையைக் கடைப்பிடிக்க இயலும். அச்சத்தால் நடுங்குகின்ற ஒருவன் வன்முறைச் செயல்களைத் தவிர்த்தல் இயலாததொன்றாகும். ஹரிஜன் இதழில் அண்ணல் கூறுவது : ''இயலாத சுண்டெலி பூனையினால் உண்ணப் பெறுகின்றதால், துன்புறுத்தாத நிலையில் விளங்குகின்றிலது என்று கூற இயலாது. தன்னைக் கொலைசெய்யும் பூனையையும் தான் உண்ணத் தயாராக இருக்கும். ஆனால் எப்போதும் பூனையைக் கண்டு ஒடி ஒளிவதால் உண்ண இயல்வதில்லை.'' வன்முறைகட்குப் பலமுள்ளது போல் தோன்றும். ஆனால் அதன் பலம் போலியானது. அண்ணல் கூறுவது: ''நிலையான எதையும் வன்முறையின் அடிப்படையில் நாம் எழுப்ப இயலாது.''

இன்னுசெய்யாமை என்னும் அறம் நம்மைச் செயலில் ஊக்குவது வாளா இருத்தலன்று. இன்னு செய்தலைத் தவிர்ப்பதால், இன்னுசெய்வானை வெல்லுதலோடு, நாம் நமது உள்ளத்தில் உயருகின்றோம். நம்மை மற்றவர்களோடு இவ்வறம் பிணிக்கின்றது. ஏனெனில், இன்னு செய்யாமை அன்பை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றதால் உயரிய பண்புகள் நம்மிடத்து முகிழ்க்கும். அஹிம்சை என்றசொல் முதலிலே குறித்ததைப்போல பெருகிய அண்பையும், இரக்கத்தையும் குறிப்பதாகும். அண்ணல் இப் பொருள்களிலே அஹிம்சை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இங்கே அன்பு என்று கூறும்போது விரிந்த பொருளில் இரக்கம், ஈகை, பிழைபொறுத்தல், அருளாளுதல், ஒத்துணர்வு ஆகியவற்றையும் உள்ளடக்கிக் குறிக்கின்றார். அன்பை ஓர் ஆற்றலாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாற்றல் நாம் அறியாத வகையில் தொழில்படுகின்றது. நம்மை உயர்த்துகின்றது. நாம் அன்பு யாதென்று வாழ்க்கையில் உணர்கின்றோம். நமக்கு நெருங்கியவர்களிடம் அன்பு செலுத்துதல் இயல்கிறது. அயலானவர்களிடத்தும், மாற்றாரிடத்தும் அன்பு செலுத்துதல் இயல்வதன்று. ஆனால், உண்மையைப் பற்றி (இறைவன்) ஒரு சிறிதளவே நாம் அறிகிறோம். ஆதலால் நமது அன்பு விரிவடைந்து அனைத்து மக்களிடத்திலும் செலுத்துகின்ற நிலை ஏற்பட வேண்டும்.

இன்னுசெய்யாமையைப் போற்றுவது என்பது ஒருவன் ஏற்கும் துன்பம் என்று அண்ணல் விவரித்துள்ளார். அன்பு நெறி-தியாகத்தில் ஊன்றியுள்ளது. அன்பு நெறியைச் சோதித்தால், துன்பம் பொறுத்தல் அதன் கூறாக விளங்குதல் தெரியும். அன்பு நெறி நிற்பவன் ஏற்கும்துன்பம் கடின சித்தம் உடையவர்களையும் இளக வைக்கும், மாற்றும். ''யங் இந்தியா'' (மே 12, 1920) என்ற இதழில் அண்ணல் துன்பத்தினின்றும் கொடுமையினின்றும் மக்களினம் எவ்வாறு விடுதலை பெறும் வகையில் புத்தரும், ஏசுநாதரும் அன்பு நெறியைப் பின்பற்றினர் என்பதைக் குறிப்பிடுகின்றார். இவ்விரு சமயத் தலைவரும் பணிவிணக்கத்தையும். அன்பையுமே பரப்பினர். புத்தர் தமது போராட்டத்தை துணிந்து தமது எதிரிகளாகிய புரோகிதரிடத்திலே புரிந்தார். இவர் கைக்கொண்ட அன்பு நெறியினால் செருக்கு நிறைந்த புரோகிதம் பணிந்தது. கிறித்துபெருமான் வட்டிக்குப் பணந் தருவோரை எருசலேம் ஆலயத்தினின்று விரட்டினார். வெளி வேடதாரிகள் மீதும் பரிசேயர் மீதும், இறைவனது சாபங்கள் அவரால் கிடைத்தன. கிறித்துவும், புத்தரும், செயலில் ஈடுபட்டார்கள். அவர்கள் கடிந்ததுபோல் புறத்தே தோன்றினும் அவர்களது உள்ளத்தில் அன்பும் இணக்கமுமே விளங்கின.

அஹிம்சை மிகவும் உயர்ந்த நற்குணமாகும். உண்மையை உணர்தற்கு அஹிம்சையே உரியவழி அல்லது நெறியாகும். அண்ணல் உண்மையையே இறைவன் என்று கூறுவதை முன்னர் கண்டோம். இறைவன் உயிர்தோறும் விளங்குகின்ருன். மக்கட்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டாகும். மக்கட்குத் தொண்டு செய்ய அன்புதேவை. அன்பிஞல்தான் இறையை நாம் உணர இயலும். அஹிம்சை, பிற நற்குணங்கள் அனைத்திற்கும் பிறப்பிடமாகும். துறவு, புலனடக்கம், நேர்மை, இறைவனிடம் சரண்புகுதல், பயமின்மை போன்ற நற்பண்புகள் யாவும் அஹிம்சையினின்று தோன்றுவன. உயிர்களைக் கொல்லா திருந்தால்தான் நாம் பிற நற்பண்புகளைப் பயில இயலும். இறைவனை நாம் உணர்வதற்கு அஹிம்சை இன்றியமையாதது. இதஞல் அஹிம்சையை தருமங்களுள் தலையாயது என்றனர்.

## பிரம்மசரியம்

இச் சொல்லிற்கு நேரான பொருள் பிரம்ம நாட்டம் ஆகும். பிரம்மம் எங்கும் நிறைந்தது. மனிதன் தன்னுள் ஆழ்ந்து பிரம் மத்தை உணர வேண்டும். அகத்தே பிரம்மத்தை உணருவதற்குப் புலனடக்கம் தேவை. எண்ணம், சொல், செயல் இம் மூன்று நிலைகளிலும் மனிதன் தனது புலன்களை அடக்க வேண்டும். தனி யொரு புலனையோ சில புலன்களையோ, அடக்குதல் பிரம்மச்சரியம் அன்று. ஐம்புலன்களையும் தன்வயமாக்குவதே பிரம்மசரியமாகும். புலனடக்கமில்லாத வாழ்வு, விலங்கைப் போன்று வாழ்வதாகும். விலங்குகள் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொள்ள இயலாது. மனிதனிடத்து இவ்வாற்றல் உண்டு. இதஞலேயே மனிதன் மனிதஞகிருன். முதலில் உடலைக் கட்டுப்படுத்துகிருன். பின்னர் மனத்தைத் தன் வயமாக்குகிருன். உடலை விட, உள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் அருமையாகும். நமக்கு நலமிக உடல் முதற் தேவையாகும். இதற்குப் புலஞெழுக்கம் தேவை. தீய செயல்களை உடலால் புரியாத நிலையிலும் சிந்தனையில் ஒருவன் தவறுவானே யாஞல் அது பிரம்மசரியம் ஆகாது. வள்ளுவர் கூறுவதைப்போல "உள்ளத்தால் உள்ளலும் தீதே" இப் புலஞெழுக்க நெறியினை நெறிகளுள் தலைமையானது என்றும், நேரியது என்றும், பிரம்மத்தை உணர இந் நெறியே உரிய நெறி என்றும் அண்ணல் கூறுகிருர்.

## உடைமையின்மை–அபரிக்ரகம்

நாம் உடைமைகளைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். தேவைக்குமேல் வைத்துக் கொள்ளுதல் தவருகும். இதனை ‘ மிகு பொருள் உவவாமை’ என்று திரு.வி. கல்யாணசுந்தரஞர் விளக்கு

கின்றார். எளிய வாழ்விற்குப் பெரிதும் துணை செய்வது இவ்வறம். துறவிகள் உடைமைகளின்றி வாழ இயலும். இல்வாழ்வோர் மிகுதியாகப் பொருள்களைச் சேர்த்துக் கொள்ளாமல் தவிர்க்க வேண்டும். காந்தி அண்ணலின் வாழ்க்கை இவ்வறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவரது உடைமைகளை எல்லாம் ஒரு சிறிய பையில் அடக்கி விடலாம். இவற்றுள் வேண்டியன எல்லாம் அடங்கி விடுகின்றன. இறையை நாடுகின்றவன் நாளைக்கென்று எதையும் சேமித்து வைத்துக் கொள்ளமாட்டான். பொருளுடை யாரிடத்து பொருள் குவியவும், வறியவரிடத்து வறுமை மிகவும் இன்று நாம் காண்கின்றோம். செல்வர் தமது உடைமைகளைக் குறைத்து வறியவர்க்கு ஈந்து அவர்களது வறுமையைப் போக்க முற்படல் வேண்டும். திருவள்ளுவரும் இதனை 'வறியார்க்கொன்று ஈவதே ஈகை' என்று கூறுகிறார். 'பாத்தூண்' என்று நமது பழைய இலக்கியம் இவ்வறத்தைக் குறிக்கின்றது. திருவள்ளுவர்,

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை' — (குறள் 322)

என்று கூறுகிறார். மனிதன் தனக்குக் கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல்லுயிர்களையும் காப்பாற்றுதல் அற நூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாகும். அண்ணல் நாகரிகம் என்ற சொல்லிற்கு உரிய நேரிய பொருள் தேவைகளை அளவிற்கு மிகுதியாகப் பெருக்கிக்கொளல் அன்று என்றும், நாம் நமது தேவைகளைக் குறைத்துக் கொளல் வேண்டும் என்றும், இதுவே உண்மையான மகிழ்ச்சியையும் உள்ள நிறைவையும் தொண்டிற்கு உரிய ஆற்றலையும் பெருக்கும் என்றும் கூறுகிறார்.

சிந்தனையிலும் உடைமைகளைக் குறைக்க வேண்டும். தேவையற்றவற்றை வறிதே சிந்தித்தல் அழகன்று. மனிதன் தனது மூளையை வீணானவற்றைக் கொண்டு நிரப்புதல் ஆகாது. பயனற்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும். இறை நெறியினின்று மனிதனை எவ்வெவ்வகையில் விலக்கித் தீய நெறியில் உய்க்கின்றனவோ அவ்வவற்றைக் களைதல் வேண்டும். எவ்வெப் பொருள்களை ஏனையோரும் பெற இயலுமோ அவ்வப் பொருள்களையே நாம் பெற்றிருக்கலாம். நம்மிடம் மிகுதியாக உள்ளனவற்றை உவந்து மக்கட் சமுதாயத்திற்குக் கொடுத்து உதவ வேண்டும்.

உடலும் ஓர் உடைமையாகும். இது தற்காலிக உடைமை. எத் தருணத்திலும் நமது உயிரை இறைவன் எடுத்துக் கொள்ளலாம். ஆதலால், பிறர்க்குத் தொண்டு செய்வதில் நாட்டம்

மிகுதியாக உடையவராதல் வேண்டும். வேண்டுமென்றே வறுமையை நாம் மேற்கொள்ளுதல் தக்கது என்பது அண்ணலின் கருத்து. இதன் பொருள் தேவைகளைக் குறைத்து இன்றியமையாதனவற்றையே உடையோராக விளங்குதல் ஆகும். இவ் அறத்தை 'அபரிக்கிரகம்' என்று ஆன்றோர் போற்றியுள்ளனர். பிறரது பொருளை ஏற்காதிருத்தல் என்பது இதன் பொருள். எப் பொருளையும் தனது உடைமையாகப் போற்றுதிருத்தல் என்ற விளக்கமும் பொருந்தும். துறவிக்கு இவ்வறம் இயல்வதாகும். இல்லறத்தானுக்கு இயல்வதன்று, கிறித்தவர் தமது அன்றாட பிரார்த்தனையில் இறைவன் தமக்கு அந்நாளைய உணவுக்குத் தேவையைத் தருமாறு வேண்டுகின்றனர். நாம் இறைவனிடத்தில் பூரண நம்பிக்கையை வைத்திருந்தால் நமது தேவைகள் நிறைவு பெறும் என்று உறுதியாக இருக்கலாம்.

அன்பும் உடைமையும் ஒருங்கு சேர்ந்து இருக்க இயலாது. நிறைவான அன்பு நம்மிடம் உள்ள எதையும் பிறருக்குக் கொடுத்து உதவ நம்மைத் தூண்டும். நிறைவான அன்பும் உடைமைகளைத் தவிர்த்தலும் நமக்குக் குறிக்கோள்களாக விளங்கும். இவ்விரு அறங்களை நோக்கி நாம் இடையறாது முயலுதல் வேண்டும்.

## கள்ளாமை

இதனை 'அஸ்தேயம்' என்று சமணம் கூறுகிறது. பிறர் உவந்து கொடுக்கும் எப்பொருளையும் நாம் ஏற்கலாம். பிறருடைய உரிமையை மதித்தல் இவ்வறத்தின் அடிப்படையாகும். பிறருடைய உடைமையைக் கவர்தல், அல்லது பறித்தல் என்பது அவனுக்குள்ள உரிமையை மறுத்தலாகும். ஒருவனிடத்து நாம் அன்பு செலுத்துகிறோம் என்றால், அவனுடைய உடைமைகளை நாம் கவர்தல் தவறாகும். நாம் நமது தேவைக்கு மேல் உண்டாலும், உடைகளை வைத்திருந்தாலும், ஆடம்பரச் செலவுகள் செய்தாலும் கள்வர்களே ஆவோம். நம்மைச் சூழ்ந்து வறியவர்கள் இருக்கும் போது, நாம் உடைமைகளைப் பெருக்கிக் கொண்டு வாழ்வது கள்ளத்தனம் ஆகும். பிறரைச் சுரண்டி வாழ்தலும் பெருங் கேடாகும். தொழிலாளிகளது உழைப்பை மூலதனமாகக் கொண்டு முதலாளிகள் செல்வத்தைக் கொழிப்பதும் தவறாகும். இத்தகைய செயல்களினால் பிறருக்கு ஊறு விளைக்கின்றோம். நாம் பிறரது பொருளைக் கவர்ந்தால்தான் திருட்டு என்று பெயரில்லை; பிறருக்கு உரியதை நாம் வைத்திருந்தாலும் அது திருட்டாகும் என்று அண்ணல் கருதுகிறார். ஆதலால் 'அஸ்தேயம்' என்பதும் 'அபரிக்கிரகம்' என்பதும் இங்கே இணைந்து செல்லக் காண்கிறோம். எண்ணத்திலும் தூய்மை

வேண்டும் என்று அண்ணல் விரும்புகிருர். திருவள்ளுவர் 'வெஃகாமை' என்ரொரு அதிகாரம் அமைத்ததன் காரணம் நமக்கு அண்ணலின் விளக்கத்தால் புரிகிறது.

நாம் ஈட்டிய பொருளாயினுஞ்சரி, நமக்கு முன்ஞேர் தேடித் தந்த செல்வமாயினுஞ்சரி, இச் செல்வத்திற்கு நாம் உரியவரல்லர் என்ற உணர்வோடு ஆலய அறங்காவலர் ஆயப் பணிகட்கென்று அவ்வாலயப் பொருளைச் செலவு செய்வதைப் போன்று நமது செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும். நமது செல்வத்திற்கு நாம் அறங்காவலர் போன்றவர்களே. இதைத்தான் 'தருமகர்த்தா கொள்கை' என்று அண்ணல் வழங்குகிருர். நாம் இன்ஞ செய்யாது வாழ்பவர்களாஞல், வறியவன் ஏழை எளியவன் எளிதில் பெற இயலாத எதையும் விரும்புதல் ஆகாது. அண்ணலின் கருத்தைச் சுருக்கி நாம் உணர வேண்டுமெனில், அவர் தந்துள்ள விளக்க மொன்றைக் காணலாம்.

'ஒருவன் திருடுகின்ருன்; மற்ரொருவன் அதற்கு உடந்தையாக இருக்கின்ருன், பிறிதொருவன், திருட நினைக்கின்ருன். இம்மூவரும் திருடர்களே யாவர்.' நம்மில் பலர், பிறருடைமைகளைக் கண்டு ஏங்குகின்ருேம். இது உள்ளத்தளவில் திருட்டேயாகும். பிறரது பொருளை வெஃகுதலாகும். பிறரது உழைப்பைப் பெற்று நாம் உல்லாச வாழ்வை மேற்கொண்டால், இதுவும் திருட்டேயாகும். பிறருக்கு உரியனவற்றைக் கவர்கின்ற குற்றத்தைச் செய்பவர்களாகிருேம். எண்ணம், செயல் ஆகிய இருநிலைகளிலும் தூயராக வாழவேண்டுமென்பதே இவ்வறத்தின் குறிக்கோளாகும். செல்வர் தாமே உவந்து தமது செல்வத்தைத் தம்மைச் சூழ்ந்துள்ள வறியவர்க்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்தல் அறம் என்பது அண்ணலின் கருத்தாகும். அண்ணல் வழி தொண்டாற்றும் விஞேபா அடிகள் நிலம் மிகுந்தவரை நிலத்தைப் பகிர்ந்து கொடுக்கத் தூண்டிஞர். நிலக் கொடையியக்கம் (பூதானம்) இவ்வாறு தோன்றியது. பொருளைக் கொடுத்தல் (சம்பத் தானம்) இதன் வழி அமைந்ததே. கல்வி நலம் உடையார் இல்லாருக்கு வழங்குதல் பொருந்தும். கொடுத்தற்கென்று ஏதும் இல்லையே என்று கவலுதல் வேண்டாம். உடலுழைப்பைப் பிறருக்குத் தரலாம் (சிரமம் தானம்). ஆதலால், நமது வாழ்வைச் சமுதாயத்திற்கென்றே அர்ப்பணித்து வாழ்தல் தலையாய கடஞகும்.

## பயமின்மை

அச்சங்கள் பலவகையாகும். இவ் அச்சங்கள் அனைத்தையும் தவிர்க்க வேண்டும். புறநிலையில் நம்மை அச்சுறுத்தவன மரணம், உடற் தீங்கு, பசி, பழி, கவர்தல், நெருங்கிய உறவினர்,

நண்பர் மறைவு, ஈட்டிய புகழ் நீங்குமோ என்பன போன்றவை அகத்தே நம்மை அச்சுறுத்துவன. பேய் பிசாசு போன்றவற்றை நினைந்து அஞ்சுதலாகும். இவை அனைத்தும் தவிர்க்க வேண்டியன. அஞ்சவேண்டுவதற்கு அஞ்சுதல் வேண்டும்.

திருவள்ளுவர்,

'அஞ்சுவதஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார்த் தொழில்' — (குறள் 428)

அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும். அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும். உள்ளத்துறதியோடு இடையறுது முயன்றால் நம்மைப் புறத்தே அச்சுறுத்துவனவற்றை நீக்கிக் கொள்ளலாம். மனிதனுக்கே அகத்தேயும் பகைவர் உண்டு. கோபம், சினம், காமம், போன்ற விலங்கியல் உணர்வுகளை நாம் முயன்று நீக்கிக் கொளல் வேண்டும். அகப்புறப் பகைகள் யாவும் உடலை அடிப்படையாகக் கொண்டவை. உடலினிடத்துப் பற்று குறையுமானால், அகப்புறம் பகைமைகளை எளிதில் வெல்லலாம் என்பது அண்ணலின் துணிபு. புறத்தே நாம் கண்டு அஞ்சுவன வெல்லாம் நமது கற்பனையாகும். பொருள், குடும்பம், உடல் இவற்றினிடத்து நமது பற்று குறையுமேயானால், அச்சம் நம்மை விட்டு அகலும். பற்றின்றி உலகப் பொருள்களைத் துய்க்குமாறு உபநிடதம் கூறுகின்றது. இவ்வுலகில் எப்பொருளும் நமது உடைமை என்று சொல்ல இயலாது. இறைவனே உடையோனுவான். அனைத்தையும் உடையவன் என்ற எண்ணமும் நமது எளிமை உணர்வும் அச்சத்தை அகற்றுவன. திருநாவுக்கரசர் 'நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று வீரம் ததும்பப் பாடியருளியதற்குக் காரணம் இறைவனே தமக்கு நாயகன் என்ற உணர்வு ஆகும். மனிதன் அச்ச நீக்கத்திற்குத் தன்னைத் தூயவனுக ஆக்கிக் கொளல் வேண்டும். பணிவுடைமை அகந்தூய்மைக்கு அரண் செய்யும். மனவெழுச்சிகள், தீய தூண்டுதல்கள், பற்றுகள் ஆகியவற்றை அறவே தவிர்த்த வாழ்வு அஞ்சாத வாழ்வாகும்.

## உண்ணு நோன்பு

அண்ணல் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள உண்ணு நோன்பை அடுத்தடுத்து மேற்கொண்டார். உண்மையாக நோற்கப்படும் உண்ணு நோன்பு உடலைத் தூயதாக்கும். மனத்தையும் தூய்மைப்படுத்தும். உடலை வாட்டுகின்ற அளவிற்கு ஆன்மா, விடுதலை பெறுகின்றது. உள்ளம் ஒத்துழைக்குமானால், உண்ணு நோன்பு பயனுடையது. அண்ணல் உண்ணு நோன்பை,உடலளவில் அமைவதென்று கொள்ளவில்லை. உள்ளமும் நோன்பினை

கொளல் வேண்டும் என்று கருதினர். உடலுக்கு மறுக்கப்பெறு கின்ற பொருள்களிடத்து உள்ளம் படியாதிருக்குமேயானல். நோன்பு சிறந்த பயனைத் தரும். இல்லையேல் கபடநாடகமாகும். உண்மையைக் கடைப்பிடிப்பவன் உண்ணுநோன்பை இறுதியாக மேற்கொள்ள வேண்டும். இந் நோன்பு தன்னைத் தூயனுக்கிக் கொள்ள விரும்பிச் செய்யும் பிரார்த்தனையாகும். அரசியல் விடுதலைப் போராட்டத்தில் இக்கட்டான நிலைகள் நேர்ந்தபோது அண்ணல் உண்ணுநோன்பை மேற்கொண்டார். தனித்திருந்து உடற் தேவைகளைத் புறக்கணித்து இறைச் சிந்தனையை இடை யருது கொண்டு தம்மைத்தாம் ஆராய்ந்து தாம் மேற்கொண்ட செயல்கள் சரியானவையா என்று பார்த்தார்.

## மௌனம்

அண்ணல் வாரத்தில் ஒருநாள் மௌனம் இருந்தார். இதனைப் பேசாதிருத்தல் என்று பொருள் கொள்கின்றனர். இது புறநிலை யில் நாம் அறிவது. மிகைப்படுத்துதல், உண்மையை மறைத்தல், திரிதல் போன்றவை மனித இயல்பு. இவற்றினின்று நீங்க மௌனம் தேவை. ஆனல், மௌனம் சிந்தையை அடக்குதல் ஆகும். சித்த விருத்திகளை ஒடுக்குதல் ஆகும். சத்தியாகிரகிக்கு மௌன விரதம் தேவை என்கிருர்.

## பற்றற்ற தொண்டு

இதனை அனுசக்தி யோகம் என்றும், நிஷ்காமிய கருமம் என்றும் வழங்குவர். மனம் தூய்மை பெற்ருலன்றி பற்றற்ற தொண்டு புரிய இயலாது. இதற்குத் தன்னலத் துறவு அல்லது தியாகம் தேவை. மற்றவர்கள் நலம் பெறவும் மகிழவும் உயர்ந்த தொண் டில் மனிதன் தன்னை அழித்துக் கொள்கிருன். செயல் புரிதலே நமது கடனுகும். இச் செயல்களது விளைவுகளைப் பற்றி நாம் கவலை கொள்ளுதற் கூடாது. ஆதலால் இதனைப் பயன் கருதாத பற்றற்ற தொண்டு என்று கீதை உரைக்கின்றது. பிறரது நன்மைக்கென்றே செயல்களைப் புரிதல் வேண்டும். உலகியல் ஆன்மீகப் பயன்களையும் எதிர்நோக்காமல் கடமைகளை ஆற்ற வேண்டும்.

## தீமை

காந்தி அண்ணல் இறைவனை எல்லாம் வல்லவராக, எல்லாம் அறிபவராக, படைப்போனுக, உண்மையாக, ஆனந்தமாகக் கருதினர். ஏன் இறைவன் பிரபஞ்சத்தில் தீமையைப் படைக்க வேண்டும்? இறைவன் எல்லாம் வல்லவனுனல் ஏன் தீமையுள்ளது? இக் கேள்விகள் தத்துவ அறிஞர் எழுப்பும் கேள்வி

களாகும். அண்ணல் தீமையின் உண்மையை ஏற்கிருர். மனிதன் தீமையோடு இடையருது போராடி வெற்றி பெற வேண்டும் என்கிருர். மனிதன் தீமையை வெல்ல வேண்டுமென்பதற்காக இறைவன் தீமையைப் படைத்துள்ளான். மனிதனிடத்து, நேர்மை உண்மை, இன்னு செய்யாமை, தியாகம் முதலிய பண்புகள் தோன்றி அவன் தீமையை வென்று முழு மனிதன் ஆதல் வேண்டும். இறைவனின் திட்டங்களே மனிதன் அறிய இயலாது. அண்ணல் கூறுவது: 'தீமையின் இருப்பிற்கு அறிவிற்குப் பொருத்தமான காரணங்காட்டி என்ருல் விளக்க இயலாது. இவ்வாறு காண முற்படுதல், இறைவனேடு என்னேச் சமமாக வைத்துக் கருதுதல் ஆகும். நான் எனது நிலேயை பணிவுணர்வுடன் அறிகிறேன். அவர் தீமையைப் படைத்தாலும் தீமையினுல் தொடக்குகிருர்' என்று தாம் அறிவதாகக் கூறுகிருர்.

கிறித்தவச் சமயத்தில் தீமைக்குத் தனித்த இருப்பு உண்டு. தீமையின் திரண்ட நிலேக்குச் 'சாத்தான்' என்று பெயரிடுகின்றனர் இறைவன் இச் சாத்தானுடன் போராடி வெற்றி பெறுகிருர். 'சுவர்க்க நீக்கத்தில்' மில்டன் இறைவனேத் தோல்வியுறச் செய்கிருர். இக் கருத்து அண்ணலுக்கு ஏற்புடையதன்று. இறைவன் யாண்டும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன் என்று கூறும்போது அவனுக்கு மாருன இயல்புகளே உடைய சாத்தானேப் படைத்தல் இறைவனின் ஆற்றலுக்கு இழுக்காகும். இறைவன் ஒருவனே உளன் என்பது அண்ணலின் முடிவு. சாத்தான் என்றுமுள்ளவன் அல்லன். தீமையும் இறைவனின் ஆற்றலாகும். தீமை நன்மை ஆகிய இவ்விரண்டையும் இறைவன் படைத்துள்ளான். இவ்விரண்டும் இறையின் வெளிப்பாடுகளே ஆகும்.

நற் செயல்கள் இன்பத்தை நல்குகின்றன.
தீய செயல்கள் துன்பத்தைத் தருகின்றன.

அறமல்லாத செயல்கள், பாவச் செயல்கள், கொலே, கொடுமை போன்றவை தீய விளேவுகளே ஏற்படுத்துகின்றன. ஆதலால், தீமை என்பது உண்மையே. காந்தி அண்ணல் கரும நியாயத்தில் நம்பிக்கை கொள்கிருர். மனிதன் புரியும் செயல்கள் நன்மைகளேயும் தீமைகளேயும் விளேக்கின்றன. மனிதன் தான் வாழும் சூழ்நிலேகட்கு அவனே பொறுப்பு.

பீகாரில் 1934-ல் நிகழ்ந்த பெரிய நிலநடுக்கமும், வங்கத்தில் நேர்ந்த பஞ்சமும் நமக்கு இறைவன் தந்த தண்டனேயாகும். மனிதன் அறவாழ்வில் மிகவும் இழிந்த நிலேயில் இருப்பதனுல் தான் இறைவன் பஞ்சம் போன்ற கடுமையான தண்டனேகளே விதிக்கின்ருன். இக் கருத்தை அண்ணல் வெளியிட்டுப் பிறர்

இதனை மூட நம்பிக்கை என்று கொண்டாலும் தாம் அவ்வாறு கொள்ளவில்லை என்று கூறினார்.

தீமை உள்ளதனால்தான் மனிதன் இறைவனை நினைக்கின்றான். மனிதன் தீமையை ஏற்றுத் தனக்கு அது ஓர் அறைகூவல் என்று எண்ணி, அதை வெல்ல வேண்டும். தீமையோடு போராடி வாழ்வை அப் போராட்டத்தில் இழப்பதெனினும் இழக்க விரும்பு கிறான். நாம் மென்மேலும் தூய்மை பெறுவோமேயானால் இறையிடம் நெருங்குகிறோம். தீமையை நாம் நாளும் குறைக்க முற்படல் வேண்டும். தீமையை நன்மையாலும், சினத்தை அன்பாலும், பொய்ம்மையை உண்மையாலும், ஹிம்சையை அஹிம்சையாலும் வெல்ல வேண்டும். தீய எண்ணங்களை அகற்றினாலன்றித் தீயச் செயல்கள் தோன்றாமலிரா.

புத்தரும் யாண்டும் துன்பம் உள்ளது என்றார். அண்ணலும் உலகில் துன்பம் இருப்பது உண்மை என்று ஏற்றார். ஆதலால், ஒருவன் துன்பத்தை ஏற்று வாழத் தயாராக இருக்க வேண்டும். சோக்ரதர், நபிநாயகம் போன்றோர் தம் வாழ்நாளில் எத்துணையளவு துன்பங்களை ஏற்றனர் என்று நாம் அறிவோம். காந்தி அண்ணலும் இந்துவும் முஸ்லீமும் இகல் நீங்கி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று பாடுபட்டார். அவர் இறுதியில் சமயவெறி பிடித்த கோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப் பெற்றதைக் காண்கிறோம். அண்ணல் தாம் கொண்ட உயரிய குறிக்கோளிற் காகத் தம்மையே உயிர்த் தியாகம் செய்ய நேர்ந்தது ஈண்டு குறிக்கத்தக்க சிறப்பாகும்.

பிழை நேர்ந்தவுடன் மனிதன் அதை உணர வேண்டும். தனது குறைகளை இறைவனிடம் முறையிட வேண்டும். அவன் தனது பாவங்கட்குக் கழுவாய்த் தேட வேண்டும். அண்ணலது கருத்தில் தீமைக்கும் நன்மைக்கும் இடையே அடிப்படையான வேற்றுமை யில்லை. ஓரிடத்தில் நன்மையாக விளங்குவது பிறிதோரிடத்தில் தீமையாகலாம். அறவுலகில் போற்றப் பெறும் பண்புகள் என்றென்றும் விளங்குபவை. களவு, கொலை போன்றவை தீயபண்புகள் என்று உலகில் பல சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். இவை எந்நாளும் நல்லனவாதல் இல்லை. தீமையைப் பற்றிய உணர்வு நம்மை விழிப்படையச் செய்கின்றது. இறைவனுக்கும் சாத்தானுக்கும் இடையே நிகழ்வதாகக் கூறப்பெறும் போராட்டம் நமது உள்ளத்திலே நிகழ்வதுதான். இப் போரை உருவகித்து அவ்வாறு கூறுகின்றனர். இதேபோல் கௌரவர்கள்—பாண்டவர் களிடையே நிகழ்ந்ததாகக் கூறும் போராட்டமும் ஆகும். ஸொராஸ்டிரிய சமயமும், அஹ்ரிமானுக்கும், அக்ஷரமாஸ்டா

விற்கும் இடையே தீமைக்கும் நன்மைகளுக்குமிடையே நிகழும் போராட்டமும் இத்தன்மையதே.

## சத்தியாக்ரகம்

காந்தியண்ணலின் வாழ்க்கைக்கும் அவரது போதனைகட்கும் இடையே வேறுபாடு இல்லை என்றும் இயைவு இருந்தது. அவர் நமது நாட்டுச் சிந்தனையில் நன்கு ஊன்றியிருந்தவராதலால், சத்தியாக்கிரகம் என்று ஒரு சொல்லை ஆக்கித் தந்தார். இச் சொல்லின் மூலம் அவர் உலகச் சிந்தனைக்குத் தமது பங்கினை வழங்கினார். இவர் எழுதியவை இவ்வறத்தின் விளக்கமெனில், இவரது வடிவம் இவ்வறத்தின் வடிவம் எனல் வேண்டும். எல்லாச் செயல்களிலும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றார். உண்மையை வற்புறுத்துதல் என்பது சத்யாக்கிரகத்தின் பொருள். இது உண்மையின் ஆற்றல் ஆகும். உண்மை என்பது ஆன்மீக ஆற்றலாகும். இவ்வறத்தின் ஒருபுறம், உண்மையைக் கடைப்பிடித்தலாகும், மறுபுறம் எதிர்ப்பின்மையாகும். ஆன்மீகக் கண்கொண்டு நோக்கும்போது நமக்குப் பகைவனே இல்லை. பிழை செய்பவனிடம் அணுகி அவன் செய்யும் பிழையை உணர்த்தித் திருந்துமாறு செய்தல் நமது கடனாகும். நம்மை நோக்கி ஊறுவிளைத்தவனிடம் நாம் வெகுண்டு அவனுக்கு ஊறு விளைத்தல் அறமன்று.

காந்தி அண்ணல் தமது அரிய தொண்டினால் அரசியலைச் சமய நிலைக்கு உயர்த்தினார். இவர் தமது தற்சரிதத்தில் குறிப்பது போல தமது குறிக்கோள் தம்மையுணர்தல் அல்லது வீடுபேறு பெறுதலாகும் என்றார். இந்நாட்டு மக்கள் அரசியல் விடுதலை பெற வேண்டும் என்று பாடுபட்டு விடுதலையைப் பெற்றார். ஆனால் அவர் அரசியல் தன்னுரிமையைவிட உண்மையையே விரும்பினார். உண்மையின் ஆற்றலை நமக்கு இவர் எண்ணிறந்த பரிசோதனைகள் மூலம் தெரிவித்துள்ளார். வெறுப்பை வெறுப்பு கொண்டும், வன்முறையை வன்முறையைக் கொண்டும், தீமையைத் தீமையைக் கொண்டும் எதிர்த்தலாகாது என்பது இவர் உணர்த்திய உண்மை. தீமையை நாம் எதிர்க்காவிட்டால் அது நமது பலவீனத்தை உணர்த்தாதா? தீமையின் ஒழிப்பில் நாம் அக்கறையற்று இருக்கின்றோம் என்று பொருள்படுமன்றோ? அஹிம்சை என்பது துன்புறுத்தாமை அல்லது இன்னா செய்யாமை மட்டுமன்று இது எதிர்மறை நிலை. உடன்பாட்டில் அன்பு செய்தலுமாகும். தீமை செய்பவனுக்கு நன்மை செய்தலாகும். அஹிம்சையும் உண்மையும், ஒரு நாயணத்தின் இருபுறங்களைப் போல்வதாகும்.

சத்தியாக்ரகம் என்பது செயலில் வன்முறைகளைத் தவிர்த்தலாகும். சத்தியம் என்பது உண்மை; ஆக்ரகம் என்பது தொடர்ந்து கடைப்பிடித்தல் என்று பொருள்படும். ஆதலால், எந் நிலையிலும்

உண்மையினின்று வழுவாது நிற்றல் இவ்வறமாகும், சத்தியாக்ரகி எந்நிலையிலும் உண்மை அல்லாததற்குப் படியமாட்டான். உண்மையல்லாததும் தீமையும் நிலவும்போது உண்மை வெளிப்படும். உண்மையே நிலைபெறுவது. தருமம் எப்போது வெல்லும் என்ற வழக்கு உண்மைக்கு யாண்டும் தோல்வியில்லை என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. உண்மை நமது சிந்தனையையும் செயலையும் கட்டுப்படுத்துமானால் இறுதியில் உண்மைவெல்லும். தீமைகட்கெல்லாம் தக்க தீர்வு சத்தியாக்ரகமே ஆகும். அரசியலுலகில் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை, உண்ணாநோண்பு, வேலைநிறுத்தம் போன்ற முறைகளை அதிருப்தியைப் புலப்படுத்த பயன் படுத்தின. நேரிடும் துன்பங்களை ஏற்று, அன்பு நெறியினின்று வழுவாமல் சத்தியாக்ரகி தீமைகளை எதிர்க்கின்றான். சத்தியாக்ரகி எப்போதும் செயற்படுவன். மனிதன் அமைத்துக் கொண்ட சட்டங்களாயினுஞ் சரி, அரசு அமைத்தவையாயினுஞ் சரி, இச் சட்டங்கள் இறைவனின் சட்டங்களோடு முரணுமானால் இவற்றை மீறுவான். வன்முறைகட்கு இடமளிக்க மாட்டான். எல்லோருக்கும், எப்போதும் அன்பு செலுத்துதலே குறிக்கோளாகும். சத்தியாக்ரகம் எப்போதும் உடன்பாடு, விட்டுக்கொடுப்பு, பொருந்தச் செய்தல் ஆகிய முறைகளைப் பின்பற்றும். ஆனால், உண்மையோடு உடன்படும், பொருந்தும் உண்மையல்லாததோடு என்றும் உடன்படாது; பொருந்தாது சத்தியாக்ரகிக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்று பத்துத் தகுதிகளைச் சர்மா வரையறுத்துள்ளதைக் காண்போம் :

(1) சத்தியாக்ரகி இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவன் இவ்வுலகை ஆள்கிறான் என்று நம்ப வேண்டும். உண்மை இறுதியில் வெற்றி பெறும் என்ற உறுதி வேண்டும்.

(2) மனிதனிடத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும் சத்தியாக்ரகிதான் துன்பம் ஏற்று நீதியை அல்லது உண்மையை நிறுவ முற்படுகின்றான். இதன் மூலம் மனிதனிடத்திலுள்ள உயர்ந்த பண்புகளைத் தூண்ட நினைக்கின்றான். மனிதன் தீமை செய்ய முற்பட்டாலும், தீய நினைவுகளால் உந்தப் பெற்றாலும், அவனிடத்துள்ள தெய்வீகக் கூறினை அறிந்தால் தீமையினின்று விலகுவான் என்பது திண்ணம். ஆதலால், சத்தியாக்ரகி மனிதனிடத்துப் பொதிந்து விளங்குகின்ற தெய்வீக ஆற்றலைத் தூண்டி நல்லனவற்றைச் செய்ய வழி வகுக்கின்றான். இவ்வாறு சத்தியாக்கிரகி செய்யும்போது பொதுமக்களின் ஆதரவைப் பெற வேண்டும்.

(3) சத்தியாக்ரகிக்கு எல்லையற்ற பொறுமை வேண்டும். அவன் மேற்கொள்ளும் அறப்போர் அவனுக்குத் தரும் துன்பங்கள் தொடர்ந்து விளங்கலாம், அறப்போரும் நீண்டதாகலாம். மரணத்தையும் அவன் ஏற்க நேரிடலாம். அவன் இதற்காக உள்ளம் தளராமல் இருக்க வேண்டும். மரணத்தை முக மலர்ச்சியோடு ஏற்கத் தயாராக வேண்டும். தான் மேற்கோண்டுள்ள அறப்போர் இறுதியில் வெல்லும் என்று நம்பவேண்டும். தனது உயிர்த் தியாகத்தால் அறம் வெல்லும் என்ற உறுதி இவனுக்கு இருக்க வேண்டும்.

(4) சத்தியாக்ரகி எவ்விதத் தியாகத்திற்கும் தன்னை ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும். தனது உடைமைகளை இழக்க நேரிடலாம். குடும்பத்தைத் துறக்கவும்; வறியவனாகத் திரியவும் நேரிடலாம். பலவிதத் துன்பங்களை ஏற்க நேரிடும். இவற்றிற் கெல்லாம் அஞ்சாதவனாக விளக்க வேண்டும்.

(5) சத்தியாக்ரகி எவ்வித அச்சத்தையும் கொள்ளக்கூடாது. இறைவனைத்தவிர, மனிதருள் எவரையும் அஞ்சக் கூடாது. அறப் போரில் எதிர்க்கப்பெறும் மனிதன் எவ்வளவு உயர்நிலையில் இருந் தாலும் சரி, ஆற்றல் மிக்கவனாக இருந்தாலும் சரி, இவன் அஞ்சுதல் கூடாது. அரசை எதிர்த்தும் அறப்போர் அமையலாம்; சில நிறுவனங்களை எதிர்த்தும் அமையலாம்.

(6) சத்தியாக்ரகி எவ்விதத்திலும் வன்முறைச் செயல்களைப் பயன்படுத்துதல் தகாதது. எதிர்ப்பவனின் பலவீனங்களைப் பயன் படுத்துதலுங் கூடாது. இல்லையேல் சத்தியாக்ரகம் என்ற நிலை மாறி துராக்ரகமாக ஆகிவிடும்.

(7) சத்தியாக்ரகி உண்மையினின்றும், நேரிய நெறியினின் றும் சிறிதும் பிறழாமல் இருத்தல் வேண்டும். தவறுதலாக முறையல்லாத நெறிகளை மேற்கொள்ள நேரிடின், உடன் அவற்றை மாற்றி மீண்டும் முறையோடு அறப் போரினைத் தொடங்க வேண்டும்.

(8) சத்தியாக்ரகி தான் மேற்கொண்ட அறப் போரில் தனது இதயம் தூய்மையான தென்பதைப் புலப்படுத்த வேண்டும். தனது எதிரியினிடத்து எவ்விதக் கோபமோ, அல்லது மாறான எண்ணங் கள் கொண்டோ அறப்போரில் ஈடுபடவில்லை என்பதை நன்கு உணர்த்த வேண்டும். எச் சந்தர்ப்பத்திலும் வன்முறை மேற் கொள்ளப் பெற மாட்டாது என்ற உறுதியை மேற்கொள்ள வேண்டும்.

(9) சத்தியாக்ரகி எப்போதும் பணிவிணக்க முடையவனாக வும், அன்பு நெறியைப் பின்பற்றுவனாகவும் விளங்க வேண்டும்

சுடுசொற்கள் பிறரைத் துன்புறுத்தும் செயல்கள் எவற்றிலும் ஈடுபடக்கூடாது.

(10) மாற்றுனுடன் உடன்படுவதற்கு வாய்ப்பு இருக்குமாலுல் உடன்பாட்டை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். இது மாற்றுனுக்கு வெற்றியாகலாம். தனக்குத் தோல்வியாகலாம். இருந்தாலும் அறப்போரில் அறம் நிலை நாட்டப் பெறுவதே முக்கியம்.

இவ் வரையறைகளை நோக்கும்போது கீதையின் நிஷ்காமிய கருமம் அல்லது கரும யோகம் செயற்படுகின்ற முறையே சத்தியாக்ரகம் என்பது தெற்றென விளங்கும்.

## காந்தி அண்ணலும் பிற சமயங்களும்

### அண்ணலும் இந்து சமயமும்

அண்ணல் இந்து சமயத்தில் பிறந்தார். பிற சமயங்களை நன்கு பயின்ற போதிலும் மத மாற்றம் விரும்பவில்லை. தம்மை 'சனுதனி இந்து' என்று கூறிக் கொண்டார். தொன்று தொட்டு நிலவி வரும் இந்து சமயத்தைத் தான் சார்ந்து விளங்குதலில் பெருமைப்பட்டார். இந்து சமயத்தில் இருந்த குறைகளைக் கண்டார். இவற்றுள் தலையாயதான தீண்டாமையை அகற்ற அரும்பாடுபட்டார். இவருக்கு முன்னிருந்த இராஜாராம் மோஹன்ராய் போன்றவர்கள் பிற சமுதாயக் கொடுமைகளைக் களைந்ததால் இவர், தீண்டாமை ஒன்றை மட்டும் களைய முற்பட்டார். தாம் இந்துவாக விளங்கிய போதிலும் இஸ்லாம், கிறித்தவம் போன்ற சமயங்களின் சிறந்த உண்மைகளைப் போற்றத் தயங்கவில்லை. இவரது பிரார்த்தனைக் கூட்டங்களில் சமரச மணம் எப்போதும் கமழ்ந்தது. பகவத்கீதையை தமது வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டார். உப நிடதங்களில் சிலவற்றை இடையருது பயின்றுர். இவற்றுள் குறிக்கத்தக்கது ஈஸாவாஸ்ய உபநிடதமாகும். அண்ணல் தமது வாழ்வில் ஒவ்வொரு கணமும் கீதையின் படி வாழ முற்பட்டார் என்று அவரது செயலர் மகாதேவ் தேசாய் கூறுகிறுர். அவர் இங்கிலாந்தில் சட்டம் பயின்ற காலத்தில் படித்த நூல்களில் சில இவரது உள்ளத்தில் ஆழமான உண்மைகளைப் பதித்தன. சங்கரர் அவர்கள் எழுதிய 'தரும விசாரம்' என்ற நூலும், மாக்ஸ்மூலர் எழுதிய 'இந்தியா என்ன பயிற்ற இயலும்' என்ற நூலும், வாஹிவிக்டன் எழுதிய 'முகமது நபியின் வாழ்க்கை' என்ற நூலும், ஜான் ரஸ்கின் எழுதிய 'கடையவனுக்கும் கடைத்தேற்றம்' என்ற நூலும், ஜார துஸ்டிரரது வாய்மைகள் என்ற நூலும் அவரால் பயிலப் பெற்றன. அண்ணல் நூல்களைப் பயின்ற முறையே தனிப்பட்ட சிறப்புடைய

தாகும். லூயிபிஷர் என்பவர் அவர் படைப்பாற்றலோடு பயில்பவர் என்று கூறுகிறார். நூலினுள் அடங்கியிருந்த உண்மைகளைவிட அவர் அவற்றின் வாயிலாக அறிந்தவை நிறைவுடையன. சமணம், கிறித்தவம், இந்து சமயம் ஆகிய சமயங்களைப் பயின்றபோது அவற்றை ஊன்றிப் படித்தார். அவர் உணர்த்தும் உண்மைகளை ஆழமாகச் சிந்தித்தார். சில உண்மைகள் அவையனைத்திற்கும் பொதுமையானவை எனினும், ஒவ்வொரு சமயமும் உணர்த்தும் தனியுண்மைகள் உள என்றும் உணர்ந்தார். இவையே சமயங்கள் தனித்த சிறப்பு உடையனவாக விளங்குதற்குக் காரணமாகும் என்று அறிந்து உணர்த்தினார். வரலாற்றுச் சமயங்களைக் கடந்து தான் பொதுச் சமயம் நிறுவ இயலும் என்பதை அண்ணல் ஏற்கவில்லை.

### அண்ணலும் சமணமும்

அண்ணலது வாழ்க்கையில் அடிப்படை உண்மைகளாக விளங்கிய இன்னா செய்யாமை, சத்யம், பிரம்மசரியம், கள்ளாமை, உடமைகள் தவிர்த்தல் ஆகியவை சமண சமயத்தில் ஐந்து மகா விரதங்களாகும். மகா வீரரது வாழ்க்கையையும் பயின்றதோடு ஹரிபத்ர சூரியவர்கள் எழுதிய 'சத்தரிசன சமுச்சயம்' போன்ற நூல்களையும் படித்திருந்தார். சமண சமயம் உணர்த்தும் ஐந்து மகா விரதங்களையும் அண்ணல் ஏற்றார்: ஆனால் ஏற்றதோடு அவற்றிற்குப் பெருவிளக்கம் தந்தார். இவ்வறங்களைக் காந்தியண்ணல் எவ்வாறு போற்றினார் என்று முன்னர் கண்டோம். அஹிம்சை அண்ணலது வாழ்விலும், எழுத்திலும் பெருவிளக்கம் கண்டது. அஹிம்சையின் ஆற்றலை முழுமையாக உணர்ந்து அரசியலுலகில் பயன்படுத்தி நமக்கு விடுதலை வழங்கியதோடு அன்றாட வாழ்வில் எவ்வாறு பயிலக்கூடுமென்பதையும் உணர்த்தினார்.

### அண்ணலும் பௌத்தமும்

அண்ணல் நமக்கு வழங்கியது அறச்சார்புடைய சமயமாகும். அறவாழ்வே சமயத்தின் அடிப்படையாகும். இவ் வகையில் பௌத்தமும் அறச்சமயமே ஆகும். இறையுண்மையை ஏற்காது அறங்களை, சீரிய நற்பண்புகளையே புத்தர் வற்புறுத்தினார். ஆனால், அண்ணலோ இறைவனை நடுநாயகமாகக் கொண்ட அறச்சமயத்தை வலியுறுத்தினார். புத்தர் அருளிய நான்கு வாய்மைகள், யாண்டும் துன்பம் உள்ளது; இத் துன்பத்திற்குக் காரணம் உண்டு; அதனை அறிந்து துன்பத்தை நீக்குதல் இயலும். அதனை நீக்குதற்குரிய வழியையும் வகுத்தார். தூய ஒழுக்கமே உணர்வைத் தூய்மைப்படுத்தும். நேரிய வாழ்வு வாழாத நிலையில் யோகப் பயிற்சியும் பிறவும் பயனில.

அண்ணல் சாதிப் பாகுபாடுகளையும், பொருளற்ற சடங்கு களையும் ஆராயாமல் பிடிவாதமாகக் கொள்ளும் கொள்கைகளையும் எதிர்த்தார். புத்தரும் தாம் வாழ்ந்த காலத்தில் சாதிப் பாகு பாடுகளை வன்மையாகக் கண்டித்தார். அண்ணலும் இக்காலத்தில் கண்ட சீர்க்கேடுகளைக் களைய விரும்பினர். அண்ணலும், புத்தரும் ஒவ்வொருவனும் தான் விடுதலை பெற விரும்புவது தன்னலமாகும் என்று உணர்த்தினர். மனித இனம் முழுமையும் விடுதலை பெற்றா லன்றி தனியொருவன் விடுதலை பெறுதல் தகாதது என்று அண்ணலும் கூறியுள்ளார். இருவரும் அடுத்தடுத்து பல பிறவிகள் எடுத்தேனும் அனைவரும் விடுதலை பெறும் வரை பாடுபட விரும் பினர். புத்தர் வகுத்த எவ்வகை அறநெறியை அண்ணல் முழுமை யாக ஏற்றார். அண்ணல் அஹிம்சைக்குச் சிறப்பான இடம் தந்தார், புத்தர் பிரான் தோன்றி ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகள் ஆகிவிட்டமையால் அவரது போதனைகளை இந்நாளில் நிலவும் சூழ்நிலைகட்கு ஏற்ப அண்ணல் அமைத்தார். சமயம், அரசியல், பொருளியல். அமைப்பு ஆகிய இவை யாவும் இன்று பெரிதும் மாற்றமடைந்துள்ளன. ஆதலால் இன்றுள்ள நிலைகட்கு ஏற்പ அண்ணல் அறநெறியினை அமைத்தார். அடிப்படையானவற்றில் ஏதும் மாற்றமில்லை. அரசியலுலகில் அஹிம்சை நெறி பெரிதும் பயன்படுத்தப்பெற்று பெருகிய நலன்களை விளைக்கக் கண்டோம்.

### அண்ணலும் இஸ்லாமும்

இஸ்லாம் சமயம் அமைதி நாட்டமுடையது என்பதை அண்ணல் வற்புறுத்தினர். நபிகள் நாயகத்தின் வரலாற்றை நன்கு படித்திருந்தார். முஸ்லீம் அன்பர்கள் அடுத்தடுத்து வாளேந்தும் காட்சியை நாம் கண்டாலும் குரான் வன்முறைகளைக் கடிந்து ஒதுக்குகின்றது என்று அண்ணல் நம்பினர். இஸ்லாமிய சமயம் தோன்றிய சூழ்நிலையில் வன்முறைச் செயல்கள் தேவைப் பட்டிருக்கலாம். இஸ்லாமிய சமயம் என்பது, அகந்தை நீக்கத் தைத்தான் தன் முனைப்பு நீங்க வேண்டுமென்பதை அடிப்படை யாக வலியுறுத்துகிறது என்று அண்ணல் கூறுகிறார். தன் முனைப்பு நீங்கி, இறைவனிடம் சரண்புகுவதை தன்னலமறுப்பை பகவத்கீதையும், குரானும் வலியுறுத்துகின்றன. கீதையினின்று பல ஒத்த பகுதிகளை குரானின் உண்மைகளை விளக்க அண்ணல் எடுத்துக்காட்டுகிறார். இரு திரு நூல்களும், தன்னல மறுப்பு, தியாகம், சரண்புகுதல் ஆகியவற்றை உணர்த்துகின்றன. ‘எவனொருவன் நன்மை புரியும்போது அதன் நோக்கை அல்லா விடம் ஒப்படைக்கின்றானே அவன் உறுதியான கரங்களைப் பற்று கிறான்’ என்று குரான் கூறுகிறது. இஸ்லாம் சமயத்தைப் பின்பற்று கின்றவன் அறச் செயல்களை ஆற்றுகின்ற போது, ஆபத்துகளை

ஏற்க நேரிடும். ஆனால் எவ்விதத் துன்பத்தையும் அவன் ஏற்று உண்மையை நிலைநிறுத்தத் தனது வாழ்வையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறான்.

இறைவன் உளன் என்னும் நம்பிக்கையை இஸ்லாம் உணர்த்துகின்றது என்பது அண்ணலுக்கு உடன்பாடு. மனித உருவில் இறைவனை வழிபடுவதை இஸ்லாம் கண்டிக்கின்றது. விக்கிரகங்கள் எவையும் வைத்து வழிபடலாகாது என்பது இஸ்லாமியரது முக்கியக் கொள்கையாகும். இக்கருத்தும் அண்ண லுக்கு ஏற்புடையதாகும் முகமதுநபி தாம் வெற்றி கண்ட பகை வர்களை மன்னித்தார். சமயப் பொறையை வற்புறுத்தினார். இறைவன் திருமுன் மக்கள் யாவரும் சமமே என்றார். மனிதர் யாவரும் உடன்பிறந்தோர் என்றே கொள்ளுதல் வேண்டும் என்பதும் இஸ்லாமின் அடிப்படைக் கொள்கையாகும். முற்றிலும் இறைவனிடம் சரண்புகுந்து வாழ்தல் வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. மேலே குறித்த இஸ்லாமிய கருத்துகள் யாவும் அண்ணல் ஏற்றவை. உடன்பட்டுத் தமது வாழ்வில் போற்றிய வையாகும்.

### அண்ணலும் கிறித்தவமும்

இளமையில் அண்ணல் கிறித்தவத்தை வெறுத்தார். அப் போது கிறித்தவப் பாதிரிமார்கள் இந்து சமயத்தைப் பழித்தும் இழித்தும் பேசினர். அவர்கள் வன்மையாகக் குறைகளைக் கண்டித்தனர். இதனால் தொடக்கத்தில் கிறித்தவத்தினிடத்தில் அண்ணலுக்கு வெறுப்பு இருந்தது. இங்கிலாந்தில் சட்டம் பயின்ற போது கிறித்தவத்தின் உண்மை நிலைமை அறிய நேர்ந்தது. விவிலியத்தைப் படித்தார். முன்பு கூறியுள்ளதை இங்கு நினைவு கூர்வதானால், பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாடு அவரை மிகவும் கவர்ந்தது. அதிலும் மலைப் பொழிவு அவரது உள்ளத்தைத் தொட்டது. இங்கிலாந்திலிருந்து திரும்பிய பிறகு பல ஆண்டுகள் கழித்து— 'ஏசுநாதர் எனது வாழ்வில் பெரும் பங்கு கொண்டுள்ளார்' என்று கூறுகிறார். மலைப்பொழிவின் விழுமிய கருத்துகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. இக் கருத்துகள் வேறு எங்கும் காணக்கூடவில்லை என்பது இதன் பொருளன்று. ஆனால், விவிலியம் சொல்லுகின்ற முறைமை தனித்த சிறப்புடையது. இச் சிறப்பையே அண்ணல் எடுத்துக் கூறுகிறார். தமது பேச்சுக்களில் அடுத்தடுத்து விவிலியத்தைச் சுட்டினார். கிறித்து பெருமானின் உருவச்சிலையை உரோம் நகரில் துறவி பீடர்ஸ் ஆலயத்தில் கண்டபோது கண்கள் கலங்கினார். கிறித்துவிடனத்தில் அண்ணல் பெருமதிப்புகொண்டு விளங்கினார். திருவுருவம் கண்ட அளவில் அன்னாரது வாழ்க்கையின் உண்மை

களை நினைவுகூர்ந்தார். கண்ணினின்று நீர் பெருகியது. காந்தி அண்ணலின் வரலாற்றை மிகச் சிறப்பாக எழுதிய லூயி பிஷர் என்பவர், அண்ணல் ''கிறித்துவைத் தழுவினார், ஆனால் கிறித்தவத்தை மறுத்தார்'' என்று கூறுகிறார். இக் கருத்து அண்ணலின் நிலையை நன்கு விளக்குகின்றது. விவிலிய உண்மைகளைப் பயின்று கிறித்துவை நன்கு அறிந்த அண்ணல், அவரைத் தழுவியதில் வியப்பில்லை. கிறித்துவச் சமயம் கிறித்துவைச் சரியாக உணர்த்தவில்லை என்பது அண்ணலின் கருத்தாகும். கிறித்துவினிடம் அன்பு என்னும் பேராற்றல் விளங்கியது. கிறித்தவம் மேலைநாடுகளில் பரவ நேர்ந்தபோது உருமாறியது; மன்னர்களது சமயமாகத் திரிந்தது என்று அண்ணல் கருதுகிறார். கிறித்தவச் சமயத்தின் தோற்றம் கீழை நாடுகளிலே அமைந்தது என்பது அண்ணலின் கருத்தாகும். கேஷப்சந்திரஸென் அவர்களும் இவ்வாறே கருதுகிறார். கீழை நாடுகளில் தோற்றம் கொண்ட முற்பட்ட இந்து சமயம் போற்றுகின்ற நற்பண்புகளோடு தொடர்புடையதாக விளங்கியது. கிறித்தவ சமயத்தை உலகெங்கணும் பரப்பிய பேரறிஞராகிய டாக்டர் ஸ்டான்லி ஜோன்ஸ் என்பவர் அண்ணலைப் பற்றிக் கூறும்போது அவர் கிறித்துவைப் போன்றவர் என்றாரே தவிர, அவரைக் கிறித்தவர் என வழங்கவில்லை. கிறித்து பெருமான் போதித்த சீரிய உண்மைகளைக் கடைப்பிடித்த நிலையில் அண்ணல் கிறித்துவைப் போன்றவர் என்று கருதப்பெற்றது. சரியே. ஆனால் கிறித்தவச் சமயத்தைத் தழுவாத காரணத்தால் அண்ணலைக் கிறித்தவர் என்று அவர் விளிக்கவில்லை. இதை ஒரு பெரிய குறையாகக் கருதத் தேவையில்லை.

மலைச் சொற்பொழிவிற்கும் பகவத் கீதைக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்கூறி அண்ணல் அவற்றிடையே தாம் வேறுபாடு காணவில்லை என்று கூறுகிறார். இரு உபதேசங்களும் பற்றற்ற நிலையையும் அறவாழ்வையும் வலியுறுத்துகின்றன.

மலைச் சொற்பொழிவு விரிவாக உணர்த்துவதை கீதை சுருக்கி ஒரு வாய்பாடாகத் தருகிறது. கீதையைத் தாம் இழக்க நேர்ந்து அதன் காரணமாக வாசகங்களை மறக்க நேர்ந்தாலும் மலைப் பொழிவின் மூலம் தாம் கீதையின் மூலம் பெற்ற அதே இன்பத்தைப் பெறுவேன் என்று அண்ணல் கூறுகிறார்.

உயர்ந்த குறிக்கோளுக்காக உயிர்நீத்த உத்தமர் காந்தி அண்ணல், கிறிஸ்துபெருமானும் இவ்வாறே உயிர்த் தியாகி ஆவார். சமய வாழ்வில் பரந்த நோக்கமும், யாவரிடத்தும் அன்பும் பூண்டு வாழ வேண்டும் என்று அண்ணல் வலியுறுத்தியதால் இந்து சமய வெறி பிடித்தவன் ஒருவனால் சுடப்பெற்றார்.

தீண்டாமையை ஒழிக்க 1932-ம் ஆண்டு சாகும்வரை உண்ணு விரதம் இருப்பது என்று அதை மேற் கொண்டார். பின்னர் அறத்தின் அடிப்படையில் அரசு அமைய வேண்டும் என்று ராஜ்காட் என்னும் இடத்தில் இருக்கும் வரையில் உண்ணுவிரதம் இருக்கத் துணிந்தார். இவ்வாறு உயர்ந்த இலட்சியங்கட்காகப் பன்முறை அண்ணல் தமது உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தார். இறுதியில் அவர் சுட்டுக் கொல்லப் பெற்றது அவர் போற்றிய நெறிக்கு முடிமணி போன்றதாகும். அவர் ஒருமுறை அஹிம்சை நெறி நிற்போம் பல்வகைத் தாக்குதல்கட்கிடையே புன்முறுவலுடன் உயர்ந்த குறிக்கோள்கட்காக மரணத்தை வரவேற்பவன் என்று கூறினர். கூறியதற்கு ஏற்ப அண்ணலே. இறைவன் திருநாமத்தை நாவில் நவிற்றியவாறு மரணத்தை ஏற்ருர். சிலுவை தியாகத்தின் சின்னம், சத்தியாகிரகம் தியா கத்தின் முடிமணி. கிறித்துபெருமானின் போதனையை நடை முறையில் கொணரும்போது, சத்தியாக்கிரகம் ஆகிறது. அற வாழ்வை மேற்கொண்ட ஒருவன் மரணத்தை வரவேற்க நேரி டினும் அதற்கு அஞ்ஞான் என்பதே கிறித்துவின் போதனையாகும். தனியொருவனின் வாழ்விலும் சமுதாயத்திலும் நீதிக்காகவும், உண்மைக்காகவும் போராடும்போது, சத்தியாகிரகமே நமக்கு வழிகாட்டுவது.

தனியொருவன் தனது வாழ்வில் கட்டுப்பாட்டுடன் அறநெறி நின்று நிறைவை நோக்கிச் செல்வதை அண்ணலும் கிறித்துவும் வலியுறுத்தினர் என்றாலும் சமுதாயம் அறவாழ்வின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று விரும்பினர். அரசியலுலகத்தைத் திருத்தி அமைக்க முயன்றனர், இருவரும். ஆன்மீக வாழ்விற்கு உகந்த நிலையில் அறச் சட்டங்கள் அமைதல் வேண்டும் என்று இருவரும் விரும்பினர். சகோதரத்துவம், அன்பு, ஈகை, நீதி, சமத்துவம் ஆகியவை சமுதாய அடிப்படைப் பண்புகளாக அமைய புதியதொரு அமைப்பைக் காண அண்ணல் பாடுபட்டார்.

கிறித்தவச் சமயத்துள் பாவம் மனிதனிடத்துப் பொதிந்து விளங்குகின்றது என்பது அடிப்படையான கொள்கை. மனிதன் நிறைவற்றன். ஆதலால், இவன் இக்குறையின் காரணமாகப் பாவச் செயல்களைப் புரிகின்ருன் என்று அண்ணல் கூறுகிருர். ஏசுநாதர், மக்களது பாவச் செயல்கட்காகத் தன்னையே சிலுவையில் மாய்த்துக் கொள்கிருர் என்பது மற்ருெரு கிறித்தவ உண்மை. ஏசுநாதர் மக்களின் மீட்சியின் பொருட்டுச் சிலுவையில் அறையுண்டார் என்பதை அண்ணல் ஏற்கவில்லை. மனிதன் தனது அறமல்லாத செயல்கட்குத் தானே பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும், பாவச் செயல்களின் விளைவுகளைத்தானே அனுபவிக்க

வேண்டுமென்றும் அண்ணல் கருதினர். எவனும் தனது பாவச் களின் வினைவுகளினின்று விடுபட எண்ணுதல் ஆகாது என்பது அண்ணலின் கருத்தாகும். இக் கருத்தை அண்ணல் நன்கு விளக்கி கிறித்தவனின்று வேறுபடுகிறுர்.

ஏசுபெருமான் இறையின் ஒரே அவதாரம் என்பதும் அண்ணனுக்கு உடன்பாடன்று. அவதாரக் கொள்கையை கிறித் தவம் ஏற்பதில்லை. ஆனல், இறைவன் தமது ஒரே மகனை நிலவுல கிற்கு அனுப்பி வைத்து மக்களின் பாவமீட்சிக்கு வகை செய்தார் என்ற கருத்தும் கிறித்தவத்தின் அடிப்படைக் கொள்கையாகும். அண்ணல் சமய வரலாற்றில் தோன்றிய பிற சமயத் தலைவர்களும் இறைவனின் அவதாரங்களாக மதிக்கத்தக்கவர்களே என்று கருதினர்.ஏசுபெருமான் இறைவனின் ஒரே மகனுகவும், இறைவன் அவருக்குத் தந்தையாகவும் இருக்க இயலாது என்று அண்ணல் கருதுகிறுர். .இறைவன் அனைத்துயிர்க்கும் தந்தையாவான். கிறித்துப் பெருமான் தன்னை உயிர்த்தியாகம் செய்தார் என்பது உலகு கண்ட ஒரு பெரிய உண்மையெனினும், இவ்வாறு உயிர் நீத்த பிற பெரியார்களும் உண்டு. இத் தியாகத்தில் புதிராகவோ, வியப்பாகவோ ஏதும் அமைந்திலது என்று அணணல் கூறுகிறுர். கிறித்தவச் சமயமே உண்மையான சமயம் என்னுங் கூற்றும் அண்ணலுக்கு உடன்பாடன்று. தத்துவக் கண் கொண்டு நோக்கினுலும் நமக்கு பிற தத்துவங்கள் வழங்காத நிறைவினைக் கிறித்தவம் தரவில்லை.

அண்ணல் எச்சமயத்தையும் முற்றிலும் நிறைவுடையனதென என்று ஏற்கத் தயங்கினர். சமயங்கள் அனைத்தும் உண்மை நாட்டமுடையவையே எனினும், இவற்றுள் எச் சமயத்தையும் நிறைவானது என்று சொல்ல இயலாது. உண்மையை அறிந்து நமக்கு உணர்த்தியவர்கள் நம்மைப் போன்ற மனிதர்களாவர். இவர்கள் தாம் பெற்ற தகுதியினுல் உண்மையைக் காண இயன்றது. ஆனல், இவர்கள் மனிதர்களாதலால் குறைகளோடுதான் கண்டனர். மனம் நிறைவுடைய கருவியன்று. சமயங்களிடத்து நாம் காணும் குறைகள் எல்லாம் சமயங்களை நிறுவியர்களிடத்தும் பின்பற்றியவர்களிடத்தும் விளங்கிய குறைகளே ஆகும். ஆதலால் தனியொரு சமயத்தை நாம் சுட்டி இதுவே நிறைவானது, பிற சமயங்கள் பொய்யானவை என்று கூறு இயலாது. ஏனைய சமயங் களும் இந்து சமயத்தைப்போல் நல்லன என்று அண்ணல் தமது கருத்துகளைத் தெளிவாக நடுவு நிலைமையினின்று பிறழாமல் கூறினர். ஆதலால், கிறித்துவச் சமயத்தின் தனிச்சிறப்பு என்று எதையும் அண்ணல் ஏற்கவில்லை. தனித்த சிறப்புடையது என்று கிறித்துவ சமயத்தோர் கூறுவதை யெல்லாம், அண்ணல் ஏற்க

மறுத்ததைக் கண்டோம். ஏற்காமைக்குக் காரணம், அண்ணல் சமயப் பொதுமை வாய்ந்தவர் என்பதாகும். அண்ணல் தாம் கூறும் காரணங்களை வெளிப்படையாகக் கூறியுள்ளதால் நாம் அவற்றின் உண்மையை நன்கு அறிகிறோம். அறிவிற்குப் பொருத்தமாகவே காரணங்கள் காட்டி கிறித்தவத்தின் தனிச் சிறப்பை ஏற்க மறுக்கின்றார். கிறித்தவ சமயத்தினை அண்ணல் மதம் மாறித் தழுவவில்லையே தவிர கிறித்தவத்தின் திருநூலாகிய விவிலியத்தில் உள்ள உயிரனைய மலைச் சொற்பொழிவை மனமாறப் போற்றினார். தாம் கண்ட சத்தியாக்ரக நெறியில் அதனை அடிப்படையாக அமைத்தார் என்பதை அறியும்போது நமக்கு அண்ணலின் பரந்த நோக்கம் புலனுகின்றது. சமயம் என்பது ஒருவனது தனிவாழ்க்கையாகும். வொயிட்ஹெட் என்கின்ற பேரறிஞர் கூறியது : ‘தனிமையில் மனிதன் மேற்கொள்வதே சமயம்’ என்பதாகும். அண்ணலும் சமயம் வாழ்க்கையில் தனித்து ஈடுபடுவது என்று கூறுவது வொயிட்ஹெட் கருத்தை ஒத்தது. ‘நாம் பெற்றிருக்கும் ஒளி அல்லது விளக்கத்திற்கு ஏற்ப வாழ வேண்டும். நம்மிடம் உள்ள சிறந்தனவற்றைப் பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டும். இவற்றால் இறையை அடைய மனிதன் மேற்கொண்டுள்ள முயற்சிகளுள் நமது பங்கையும் ஏற்றவராவோம்’ என்பது அண்ணலின் கருத்தாகும். இவ்வடிப்படையில் சமயங்கள் அனைத்தும் தோழமை கொள்ள நேரிடும். அண்ணல் தமது முடிந்த முடிபைக் கூறுகிறார்.

நீண்டகாலப் பயிற்சியினாலும் அனுபவத்தினாலும் நான் இந்த முடிபிற்கு வந்துள்ளேன்.

(1) சமயங்கள் அனைத்தும் உண்மையே

(2) சமயங்கள் அனைத்திலும் ஏதேனும் குறையுண்டு

(3) யான் பிறந்த சமயமாகிய இந்துசமயம் எனக்கு இனிமையானதைப்போல சமயங்கள் அனைத்தும் எனக்கு இனியவையாகும். ஒருவனுக்கு உறவினர் இனியராதலைப்போல அனைத்து மக்களும் இனியராதல் வேண்டும். என்னுடைய சமயத்தை நான் மதிப்பதைப்போல, பிற சமயங்களையும் மதிக்கிறேன். ஆதலால் மத மாற்றம் என்பது இயலாததொன்றாகும்; தேவையற்றதாகும். சமயங்கள் தோழமைகொண்டு விளங்குதல் வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் இந்து மேலும் இத்தோழமையால் சிறந்த இந்துவாதல் வேண்டும். முஸல்மான் மேலும் சிறந்தவனாதல் வேண்டும். இஃதேபோல கிறித்தவனும் சிறக்க வேண்டும்.

சமயங்களைக் குறித்து அண்ணல் கொண்ட கருத்துகளைக் கண்டோம். அண்ணலின் பரந்த நோக்கு புலனாவதோடு சமயத்தின் அடிப்படை இறையுணர்வு என்பதும் அற அடிப்படையில்

எழுகின்ற சமயமே மனிதனை உயர்ந்த நிலையில் உய்க்கும் என்பதும் தெளிவாகின்றன. அறவாழ்வின் இன்றியமையாமையை அண்ணல் தெளிவுறுத்தினார். அன்பு அவ் வாழ்வின் அடிப்படையாதல் வேண்டும்.

## காந்தி அண்ணலின் தத்துவம்

இந்தியாவில் சமயமும் தத்துவமும் இணைந்தே செல்கின்றன. மேலைநாட்டில் தத்துவமும் சமயமும் பிரிந்து தனித்தனியே இயங்குகின்றன. அண்ணல் அவர்களது வாழ்க்கையில் சமயமும் தத்துவமும் பிணைந்து செல்கின்றன. காந்தி அண்ணல் அத்துவிதியா? அதாவது உள்பொருள் ஒன்றே என்று கொள்பவரா? அவ் உள்பொருளும் பிரம்மம் என்றே கொள்கின்றாரா? அல்லது அவர் இறைக்கொள்கையுடையவரா? இறைக்கு உருவம் உண்டு என்று கொள்கிறாரா? இக் கேள்விகட்கு விடை உறுதியாகச் சொல்ல இயலவில்லை. அண்ணலை அத்துவிதி என்பாரும் உளர். இதற்கு மாறாக இறையினை உருவ நிலையில் வைத்துத்தான் அஃவர் எண்ணினார் என்பாரும் உளர். இவ்விரு சாரார் கருத்துகளையும் நாம் ஆராய்ந்து முடிபு காண்பதே நல்லது.

பி. ம. ராஜு என்பவர் அண்ணலை அத்துவிதி என்றும், உள் பொருள் ஒன்றே என்றும் கொள்பவராகக் கூறுகிறார். அண்ணல் இறைவனுக்கு உருவம் உண்டு என்ற கொள்கையை அத்துவிதக் கொள்கையினின்று பிரித்து உணர்த்தாததுதான் நாம் வரையறையாக அவரது கொள்கையைக் கூற இயலாமைக்குக் காரணம். அண்ணல் உலகை மாயை என்றோ, திரிபுக் காட்சி யென்றோ கூறவில்லை. இறைவனுக்கு உருவம் உண்டு என்னும் கொள்கையை ஏற்றார் என்பதற்குரிய சான்றுகளை முதலிலே காண்போம். மனிதன் தன்னை உணர்வதற்கு இறையிடம் சரன்புகுதல் முக்கியமாகும். இதற்கு இறையின் அருள் இன்றியமையாததாகும். இறையின் அருளின்றி மனிதன் இவ்வுலகில் எதையும் எய்துதல் ஆகாது. பிரார்த்தனையின் இன்றியமையாமையையும் அண்ணல் நன்கு உணர்ந்திருந்தார். அவரது பிரார்த்தனைக் கூட்டங்கள் புகழ்வாய்ந்தவை என்பதும் ஈண்டு நினைவு கூறத்தக்கது. ஜீவாத்மா என்றும் பரமாத்மா ஆதல் இயலாது. ஜீவாத்மா இறைவனின் கூறுகும் என்றும், இறைவனுக்குச் சமமாதல் இயாலது என்றும் உறுதியாக இறைக்கொள்கையிளர் கூறுகின்றனர். அண்ணல் கூறுவது: 'நான் கடந்த அரை நூற்றாண்டாக இறைவனாகிய எஜமானனுக்கு உவந்து தொண்டாற்றியுள்ளேன். ஆண்டுகள் கழிகின்ற நிலையில் அவனது குரல் மேலும்மேலும் நன்கு எனது காதுகளில் ஒலிக்கின்றது. என்னை அவன் ஒரு நாளும் கைவிட்டதில்லை. யான் மிகவும் துயருற்ற காலத்

திலும் என்னை அவன் கைவிடவில்லை. என்னைக் காத்துள்ளான். எனக்குச் சுதந்திரம் ஒரு சிறிதும் இல்லை. நான் எந்த அளவிற்கு இறைவனிடம் சரண்புகுந்தேனு அந்த அளவிற்கு மகிழ்ச்சி அடைந்துள்ளேன்' (ஹரிஜன் 6-5-1933-பக். 4). இந்த மேற்கோள் அண்ணலின் கருத்துகளை நன்கு புலப்படுத்துகின்றன. இறைவனை எஜமானனுகவும், தம்மைத் தொண்டனுகவும் கருதினுர் என்று காணுகின்றபோது, ஆண்டான் அடிமை என்ற இருமை நிலவக் காண்கின்றோம். சரண் புகுதலைக் குறித்துள்ளதால் இந்நிலை, இறைவனை உருவமாகக் கொள்கின்ற நிலையில்தான் பொருந்தும். இறைக் கொள்கையின் (Theism) கூறுகளை அனைத்தும் அண்ணலின் சிந்தனையில் விளங்கக் காண்கின்றோம்.

கிறித்தவம் இஸ்லாம் ஆகிய இவ்விரு சமயங்களும் அண்ணலது சமயச் சிந்தனையைப் பெரிதும ஊக்கின; உருவாக்கின எனலாம். இவை இரண்டும் இறைக் கொள்கைகள். வைணவ இறைக்கொள்கையோடு இவை இரண்டும் ஒத்தன. அத்துவிதத்தோடும் ஒருமைக் கொள்கையினேடும் ஒவ்வாதன.

அண்ணல் இராம நாமத்தை இடையருது பயின்ற காரணத்தால், கோட்ஸேயால் சுடப்பெற்ற நிலையிலும் அவரது நாவானது இராமநாமத்தைத் தவருது நவின்றது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி அண்ணல் கூறுவதை நாம் கருதினுல் வைணவத்தோடு அவருக்கு உள்ள நெருக்கத்தை நாம்நன்குணரலாம். அடுத்தடுத்து இறைவனை எஜமானனென்றும், பிரபு என்றும் கூறுகிருர். மனிதன் உண்மையான நிலையில் அவன் தொண்டனே என்றும் கூறுகிருர். இறைவனின் அல்லது இறை ஆற்றலின் அம்சமாக (கூறு) மனிதன் விளங்குகிருன் என்று கூறுகிருர். பிற சமயங்களில் மனிதனை இறைவனின் அவதாரம் என்றும் குறிக்கிருர். (ஜீவ மாத்ர ஈஸவர்க்கே அவதார் ஹை.) இந்திய நாட்டில் பெருவழக்காக இருக்கின்ற முஸ்லீம் வழக்கொன்றை எடுத்துக்காட்டி 'மனிதன் இறைவனல்லன்; ஆனுல் இறையின் ஒளியினின்றி வேறுபட்டவனுமல்லன் என்று கூறுகிருர். (ஆதம் ஹுதா நஹின் லேகின் ஹுதாகே நூர்ஸே ஆதம் ஜுதா நஹின்). அண்ணல் வேற்றுமையிடையே ஒற்றுமையை விரும்புகிருர்.

யங் இந்தியா என்ற பத்திரிகையில் (ஜனவரி 21, 1926) அண்ணல் தமது நண்பரொருவரது கேள்விக்குப் பதிலளிக்கையில் 'நான் அத்வைதி எனினும் துவைதத்தை ஆதரிக்கிறேன். உலகம் கணந்தோறும் மாறுகின்றது. ஆதலால் உண்மையுடையதன்று. உலகிற்கு நிலைபேறு இல்லை. உலகம் இடையருது மாற்றம் அடைந்து வந்தாலும் அதனிடத்து நிலையான கூறு உண்டு. அந்த

அளவில் அது உண்மையுடையதே. ஆதலால் அது உண்மையுடையது என்றும் இல்லாததென்றும் கூறுவதற்கு தடைவிதிக்கவில்லை. இவ்வாறு கூறுவதால் அநேகாந்தவாதி அல்லது சியாத்வாதி என்று யான் அழைக்கப் பெறலாம். ஆனால் எனது சியாத்வாதம் கற்றறிந்தவர்கள் வழங்கும் கருத்தில் வழங்கப் பெறவில்லை. எனக்கே உரிய வழக்கு இதுவாகும்.''

அத்துவிதி, துவைதம், அநேகாந்த வாதம், சியாத் வாதம் ஆகிய சொற்களை அச் சொற்களுக்குரிய சரியான தத்துவப் பொருளில் வழங்குவதாக நாம் கூற இயலாது. ஆனால் அண்ணலது சொற்களைக் கொண்டே நாம் கூறினால், சங்கரரது கருத்தில் அவர் அத்துவிதியல்லர். சங்கரர் துவைதத்தையோ, ஸ்யாத் வாதத்தையோ ஏற்பவரல்லர். இவ்விரண்டையும் அண்ணல் ஏற்பதால் சங்கரரது அத்துவிதத்தை ஏற்கஇயலாது என்பது தெளிவாகும். மேலும், உலக உண்மையை அவர் ஏற்பதோடு இவ்வுலகில் உள்ள துன்பத்தையும் ஏற்கிறார். அண்ணலது கருத்தை ஒரு மேற்கோள் தெளிவுபடுத்துகின்றது. 'மகிழ்ச்சி அல்லது மனிதன் இன்பம் என்று கூறுவது விரைந்து மாறுகின்ற நிலையற்ற உலகில் கனவு போன்றதாகலாம். ஆனால், நம்முடன் வாழும் மக்கள் படுந்துன்பத்தை நாம் பொய்யானது என்று ஒதுக்குவதற்கில்லை. இவ்வாறு ஒதுக்குவதால் நாம் எங்கோ துன்பம் நேரிடுவதாகக் கூறுபவர்களாவோம். கனவுகளும் காணப்பெறும் வரையில் உண்மையுடையன. துன்புறுவோனுக்குத் துன்பம் உண்மையாகும் (ஹரிஜன் ஜூலை 21, 1946). அண்ணல் இங்கே உலகு நிலையுதலுடையதன்று என்று கூறுகிறாரே தவிர, மாயையென்றோ, மித்தை என்றோ கூறவில்லை. மேலும், தமது கருத்தை வலியுறுத்துவதைப் போல் இவ்வுலகில் மக்கள் படுந்துயரம் உண்மையானது என்கின்றார். அத்துவிதிகள் இவ்வுலகைக் கனவு நிலைக்கு ஒப்பிட்டுக் கூறுவார்கள். கனவுகள் காணப்பெறும் வரை அவை உண்மையுடைன என்று கூறி உலகில் துன்புறுவோருக்குத் துன்பம் உண்மையே என்று கூறுவது அண்ணலது கருத்தை நன்கு விளக்குகின்றது. அண்ணல் இவ்வுலகை இறைவனின் லீலை அல்லது விளையாட்டு என்றும் கூறியுள்ளார்.

டாக்டர் தத்தா என்பவர் தாம் எழுதிய 'மகாத்மா காந்தியின் தத்துவம்' என்ற நூலில் அண்ணல் ஆளுமை சார்ந்த இறைக் கொள்கை உடையவர். அவர் அத்துவிதி அல்லர். அவர் சங்கரைப் பின்பற்றவில்லை என்று தெளிவாகக் கூறுகிறார். தத்தா கூறும் காரணங்களை டாக்டர் மகாதேவன் மறுத்தற் பொருட்டு நிரல்படுத்திக் கூறியுள்ளார். அவர் நிரல் படுத்திய

வாறே காண்போம். தத்தா கூறியுள்ளவற்றுள் சில கருத்துகளை முன்னரே நாம் கருதியுள்ளதால் அவற்றை விடுத்துப் பிறவற்றைக் காண்போம்.

(1) வல்லபாச்சாரியாரைப் பின்பற்றிய வைணவக் குடும்பத்தில் அண்ணல் பிறந்தார். வல்லபர் சங்கரரது வேதாந்த விளக்கத்தை ஏற்றவரல்லர். அண்ணல் வாழுள் முழுமையும் வைணவராகவே வாழ்ந்தார். இளமையில் ஜெபிக்கத் தொடங்கிய இராமநாமத்தை இறுதிநாள் வரை ஜெபித்தே வந்தார். இராமனைப் பரம்பொருளாகக் கொண்டார். ஆதலால் ஆளுமை சார்ந்த இறைக்கொள்கையை உடையவராக அண்ணல் விளங்கினாரே அன்றி, அத்துவிதி அல்லர். பிரார்த்தனையின் முழுப்பயனையும் நம்பினார். தெய்வ அருளின் தேவையையும் நம்பினார். அண்ணல் தமது சுயசரிதத்துள் 'நிறைவு அல்லது செயலுரிமை (கட்டற்ற நிலை) இறையருளாலேயே நிகழ்வதாகும். இவ்வருளிற்கு நாம் முற்றிலும் எவ்வித வரையறையுமில்லாமல் சரண் புக வேண்டும். இல்லையேல் நமது சிந்தனைகளை வெல்லுதலரிது என்று கூறுகிறார். இக் கருத்துகள் அண்ணல் ஆளுமை சார்ந்த இறைக் கொள்கையை உடையவர், வைணவர் என்பதை வலியுறுத்தும். சங்கரரும் அவரைப் பின் பற்றுபவர்களும் ஒருமைக் கொள்கையினரும் தெய்வீக அருளை ஏற்பவரல்லர். மேலும், இவர்கள் விடுதலைக்கு ஞானமே சாதனம் என்பர்.

(2) அண்ணலுக்கு இவ்வுலகு ஒரு தோற்றமன்று. சங்கரருக்கு இவ்வுலகு ஒரு தோற்றமாகும். சங்கரர் (தத்தா அவர்களது கருத்தின்படி) இவ்வுலகு தனியொருவனின் அறியாமையின் அடிப் படையில் தோன்றுகின்றது. இவ்வுலகப் படைப்பு, மந்திரவாதி தோற்றுவிப்பது போன்றதாகும். ஆதலால், இவ்வுலகு உண்மையன்று என்று கருதுகிறார். வைணவர், உலகை ஏற்கின்றனர். ஆதலால், இறைவன் இவ்வுலகைப் படைத்தவன் என்று கொள்கின்றனர். அண்ணல் வைணவராதலால் இவ்வுலகை மறுக்கவில்லை. இவ்வுலகின் உண்மையை ஏற்றார்.

அண்ணலிடத்து விளங்கிய கட்டுப்பாட்டுணர்வும் இவ்வுலகை மறுக்கத் தடையாக நின்றது.

(3) சங்கரருக்கு மனிதனும், இறைவனும்–ஆன்மாவும் பிரம்மமும் உண்மையில் முற்றொருமையுடையவை. சங்கரரது அத்துவித முடிபை ஏற்காத வைணவர் ஆன்ம–பிரம்ம முற்றொருமையை ஏற்கமாட்டார்கள்.

(4) வைணவ இறைக் கொள்கை, கிறித்தவம், இஸ்லாம் ஆகியவற்றை ஒத்தது.

(5) அண்ணல் தம்மை அத்துவிதி என்று கூறி துவைதத்தையும் ஆதரிப்பதாகக் கூறினார்.

தத்தா கூறியுள்ள சில காரணங்களை முன்னரே நாம் ஆண்டுள்ளதால், அவற்றைச் சுருக்கி உரைத்தோம். டாக்டர் மகாதேவன் மேற்குறித்த காரணங்களை நிரலே எடுத்து அவற்றிற்கு (டாக்டர் மகாதேவன்) மறுப்பு தெரிவித்துள்ளார்.

(1) ஒருவர் வைணவ குடும்பத்துள் பிறந்த காரணத்தினாலேயே அச்சமயக் கட்டுப்பாட்டினின்று நீங்கி வளர்ச்சி பெற இயலாது என்று கூறுவதற்கில்லை. அண்ணல் இளமையிலேயே சமயத்தின் இன்றியமையாத கூறு எதுவென்றும், அங்ஙனம் அமையாத கூறு எதுவென்றும் பிரித்தறிந்தார். புறத் தூய்மையை வைணவம் வற்புறுத்துகின்றது. அண்ணலின் தந்தை நோய் வாய்ப்பட்டிருந்தார். படுக்கையினின்று குளியலுக்காக எழுந்திருக்கலாகாது என்று மருத்துவர் விதித்திருந்தனர். தந்தை மருத்துவர் சொற்படி நடக்கவில்லை. இதனைப் பின்னர் அண்ணல் பாராட்டியுள்ளார். படுக்கையிலேயே புறத்தூய்மையை நாம் மேனாட்டு முறையில் பெற்றிருக்கலாம் என்று அண்ணல் கருதுகிறார். தூய்மை இன்றியமையாதது. இத் தூய்மையை நாம் மரபுவழி தான் பெற வேண்டுமென்பதில்லை.

இங்கிலாந்தில் அண்ணல் பயின்றபோது கீதையைப் பற்றித் தெரிந்து கொள்ள நேர்ந்தது. 'அண்ணல் கருத்துப்படி—கீதை' என்னும் நூலில் கீதைக்குச் சங்கரரது பாஷ்யத்தைப் பின்பற்றியே மகாதேவ் தேசாய் உரை செய்கிறார். பின்னர் தேசாய் எழுதிய நூலிற்கு முகவுரை தரும்போது அண்ணல் தாம் குஜராத்தி மொழியில் எழுதிய நூலின் ஆங்கில ஆக்கம் அந் நூலென்றும் ஆங்கில மொழிப் பெயர்ச்சி துல்லியமாக அமைந்தது என்றும் கூறுகிறார். இதனால் அத்துவித முடிபுகளை அண்ணல் ஏற்றார் என்பது தெளிவு. அண்ணல் வைணவரன்றோ? வைணவராயின் அத்துவிதியாக அதே நிலையில் எவ்வாறு விளங்குதல் இயலும்? வைணவக் கொள்கை அத்துவிதத்தோடு முரணுவது என்று கொள்வது தவறாகும். அத்துவிதிகளுள் வைணவர், சைவர் பிறரும் உண்டு. சங்கரருக்கு ஷண்மத ஸ்தாபனாச்சாரியர் என்றொரு பட்டமுண்டு. வைணவராகப் பிறந்து அத்துவித முடிபை ஏற்கின்றவர். பரம்பொருள் இரண்டற்றது என்று கொள்ளினும், விஷ்ணுவை வழிபடுந் தெய்வமாகக் கொள்கிறார். புறத்தேயும் வைணவச் சின்னங்களை அணிந்து கொள்கின்றனர்.

காந்தி அண்ணல் ஆளுமை சார்ந்த இறைக்கொள்கை உடையவராயிற்றே? எவ்வாறு அவரை அத்துவிதி என்று கொள்ளலாம்? இக் கேள்வி எழுப்பப் பெற்றுள்ளது. ஒருவன் உருவமுள்ள

இறைவனை நம்பும் அதே சமயத்தில் பரம்பொருள் இரண்டற்ற பிரம்மமாக இருத்தல் கூடும் என்று நம்புதல் இயலாது என்று கருதுகின்றனர். இது சரியன்று. ஆளுமை சார்ந்த கொள்கையைக் கடக்க அத்துவிதம் விரும்புகின்றது. ஆனால், அந்நிலையை நாம் பிறழ இறையிலிக் கொள்கை என்றோ, ஆளுமை சார்ந்த கொள்கையின் மறுப்பு என்றோ கொள்வதற்கில்லை.

பக்தியில் பக்தனுக்கும் பகவானுக்கும் இடையே வேறுபாடு உண்டு. இவ் வேறுபாறு பொருத்தமுடையது; ஏற்கத்தக்கதே. இறைவனைக் கடலென்றால் ஆன்மாவை அக் கடலினுள் எழுகின்ற அலைகள் எனலாம். அலைகள் கடலுக்குரியவை என்று கூறலாமே தவிர, அலைகட்குரியது கடல் என்றுகூறுவது பொருந்தாததன்றோ?

இறைவனுக்கு அத்துவிதத்தில் இடமுண்டு எனில், அதுவும் முக்கிய இடமெனில் இறையருளிற்கும், பிரார்த்தனைக்கும் முக்கிய இடமுண்டு என்பது பெறப்படும். அண்ணல் அருளையும் பிரார்த்தனையையும் வற்புறுத்தியுள்ளமை—அத்துவிதத்தோடு பொருந்துவதாகும். சங்கரர் இறையருளால் தோன்றும் ஞானத்தின் துணையினால் விடுதலை பெற இயலும் என்று கூறுகிறார். உலக இறையின் லீலை என்று கூறுவதற்கு அத்துவிதம் எவ்விதத் தடையும் எழுப்பாது. கௌடபாதர் படைப்புக் கொள்கைகள் பலவற்றைக் கூறும் போது, முடிபான கருத்திற்கு முன்னதாகப் படைப்பு இறைவன் லீலையாகும் என்பதைக் குறிக்கிறார் (கிரீடார்த்தம்).

(3) ஆன்மா, பிரம்மத்தோடு முற்றொருமையுடையது என்ற கருத்து அண்ணலுக்கு ஏற்புடையதன்று என்று கூறப்பெற்றது. அவருக்கு அனைத்துயிரும் ஒன்றாகும். உடற்பன்மையை அடிப்படையாகக் கொண்டு உயிர்ப் பன்மையைப் பேசுதல் கூடாது. அகம் (Ego) பிரம்மத்தோடு ஒற்றுமையுடையதன்று. மஹா வாக்கியத்துள்-நான் என்பது இல்லை. பிரம்மமே உள்ளது. 'நாம்உண்மை என்று கொள்ளும்போது இறைவனுக்கும் நமக்குமிடையே தடை ஏற்படுத்துகிறோம். நாம் நமது உண்மையை மறக்கும்போது இறைவனோடு ஒன்றுகிறோம்' என்று அண்ணல் கூறியுள்ளார்.

(4) சமயங்களின் ஒருமைப்பாட்டை நாம் அறிய சமயங்களைக் கடக்க வேண்டும். சமயங்கள் ஒரே இடத்தில் சந்திக்கும் வெவ்வேறு சாலைகள் என்றால், சந்திக்கின்ற இடம் சாலைகளை விட மேலானதாக விளங்க வேண்டும். சமயங்களின் கடந்த நிலை ஒருமையை அத்துவிதம் வலியுறுத்துகிறது.

(5) காந்தி அண்ணல் தம்மை ஸ்யாத்வாதி என்றும், அநேகாந்தவாதி என்றும் கூறிக் கொள்வது அவரது பொதுமையான நோக்கினை, பரந்த மனப்பான்மையினை வெளிப்படுத்துவதாகும். பிற கொள்கைகளும் ஏற்கத்தக்கன என்ற விரிவான உணர்வைப்

புலப்படுத்துகின்றன. அண்ணல் 'தாம் ஒரு அத்துவிதி என்கிறார். எனினும் துவைதத்தை (இருமைக் கொள்கையை) ஆதரிக்கின்றேன்' என்று கூறுகிறார். இருமைக் கொள்கைகள் அத்துவிதம் தம்மோடு மாறுபட்டது என்று கொள்கின்றன. ஆனால், அத்துவிதமோ அவற்றைத் தன்னோடு மாறுபட்டவையாகக் கொள்ளவில்லை. ஆசாரியர் கௌடபாதர் கூறுவது:

'அத்துவித தரிசனம் பிற எந்த தத்துவக் கொள்கையோடும் சண்டையிடவில்லை. பன்மைக் கொள்கைகள் ஒன்றினோடொன்று முரண்பட்டு நிற்கின்றன. ஆனால், அத்துவிதமோ எக் கருத்தோடும் மாறுபட்டு நிற்கவில்லை. ஒவ்வொரு கொள்கையிலும் உண்மையுண்டு என்று அத்துவிதம் ஏற்கிறது. ஆனால், இவை காணும் உண்மை முழுமையானதன்று. விரோத மனப்பான்மை குறுகிய (சார்பான, குறைவான) காட்சியால் நேர்கின்றது. கௌடபாதர் தத்துவ அமைதியை நாடி-அவிவாதம் நிபோததா என்று கூறுகிறார். அத்துவிதத்தைக் கொள்கைக்குள் ஒன்றாகக் கொண்டு இடர்ப்படுதல் ஆகாது. அத்துவிதம் முழு நிறைவான முழு வடிவான அனுபவம் என்று கொள்ள வேண்டும். இக் கருத்தை டாக்டர் மகாதேவன் வற்புறுத்தி அண்ணல் இத்தகைய முழு அனுபவத்தைப் பெறுவதற்குத் தமது வாழ்நாளெல்லாம் முயன்றார் என்கிறார்.

அண்ணல் அத்துவிதியா, துவிதியா என்ற விவாதத்தில் நாம் முடிவு காண இயலாதவர்களாகிறோம். அத்துவிதம் என்ற சொல்லிற்குப் பெருவழக்காய் உள்ள பொருளை நினைவில் வைத்துப் பார்த்தால் அண்ணல் அத்துவிதி அல்லஎன்ற முடிவிற்கு வர நேரிடும். ஆனால், அத்துவிதம் என்ற சொல்லிற்கு 'நிறைவான அனுபவம்' என்ற பொருளைக் கொள்ளுவோமேயானால் அண்ணல் அத்தகைய அனுபவத்தைப் பெற முயன்றார் என்பதில் ஐயமில்லை. தத்துவ அடிப்படையில் அண்ணலது கருத்திற்கு அத்துவிதம் என்ற பெயர் பொருந்துமா அல்லது இருமை வாதம் என்ற பெயர் பொருந்துமா என்று பார்ப்பதை விடுத்து அவர் இறைக் கொள்கையை உடையவராயிருந்தார் என்று கொள்வது பொருந்தும். அண்ணல் தாம் கொண்டிருந்த தெய்வ நம்பிக்கையைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அக் கருத்தை ஈண்டு நினைவு கூர்தல் தகும்.

'மனித அறிவுக்கு எட்டாத ஒரு சக்தி இருக்கிறது. அஃது எங்கும் நிறைந்து நிற்கிறது. அதைக் காண்டல் இயலாது. ஆனால், அதன் இருப்பை உணர்கிறேன். நீங்களும் நானும் இவ் வறையில் அமர்ந்திருத்தலை நான்உணர்வதைப்போல இறைவனின் இருப்பை உணர்கிறேன். காற்றும் நீருமின்றி யான் வாழினும் வாழ்வேன், ஆனால் கடவுளின்றி என்னால் வாழ்தல் இயலவே

இயலாது. என் கண்களை நீங்கள் பறியுங்கள், என் மூக்கை உடையுங்கள். இச் செயல்கள் என்னைக் கொல்லமாட்டா. என்னிடம் உள்ள கடவுள் நம்பிக்கையை நீங்கள் நீக்கினால் அந் நீக்கமே என்னைக் கொன்று விடும்.

இந்த மேற்கோள் அண்ணலை ஒரு சிறந்த அனுபூதிச் செல்வராகக் காட்டும். இறைவனை மையமாகக் கொண்ட பெருவாழ்வு அண்ணலது வாழ்வு. அண்ணல் வாழ்ந்ததும், இயங்கியதும், நிலைபெற்றதும் இறைவனிடத்திலே என்று அறிகின்றோம். இறையுணர்வு குன்றாத அவர்தம் பெருவாழ்வு உலகிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அரசியல் வாழ்வில் ஈடுபட்டிருந்த அவர் சிறிதும் ஓய்வின்றி வருந்தினார். அரசியல் வாழ்வின் தன்மை வேறு. எனினும், சமய உணர்வு குன்றாதது அவரது அரசியல். அவர் அரசியலில் கொண்டிருந்த பங்கு பெரியதாயினும், அவரது சமய வாழ்வே அடிப்படையானதாகும். அரசியலைத் தூய்மைப்படுத்தினார். சமயப் பிணக்குகளில் அவர் ஈடுபடவில்லை. சமய ஒற்றுமையையே அவர் காண விரும்பினார். சமயங்கள் யாவும் அடிநிலையிலும் முடிநிலையிலும் ஒத்து விளங்குகின்றன என்பதைத் தமது சமயப் பொறையினால் நன்கு நிறுவினார் எனலாம். மூவகைகளில் மனிதன் முழுமை பெற முயல வேண்டும் என்று அண்ணல் கூறுகிறார். அவையாவன :

(1) மனிதன் தனது வாழ்வில் முதலில் இகலுகின்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தித் தன்னுள் இயைபு காண வேண்டும். தாழ்வின் எண்ணங்களையும் இழிவுபடுத்தும் இயல்புகளையும் அறவே நீக்குதல் வேண்டும்.

(2) தன்னோடு வாழும் பிற மக்களோடு இயைபுடன் வாழ வேண்டும். இவ்வாறு வாழ்வதற்கு ஒருமை உணர்வு இன்றியமையாததாகும்.

(3) மனிதன் தனது சுற்றுப்புறச் சூழ்நிலையில், இயைபுற வாழ்தல் வேண்டும்.

செயற்கை, பகட்டான நாகரிக வாழ்க்கையினின்று அவன் நீங்க வேண்டும். எவனொருவன் எவரிடத்தும் பகைமைகொள்ளாது, எவரையும் சுரண்டாது, நேர்மையுடன் தூய மனத்துடன் ஒழுகுகின்றானோ அவனே சமய வாழ்வு வாழ்பவன், மகிழ்ச்சியானவன் என்று அண்ணல் கூறுகின்றார்.

## உயர்ந்த மனிதன்

குறிக்கோள் கொண்டு உன்னத வாழ்வு வாழ்கின்ற மனிதன் எத்தகையவனாக விளங்க வேண்டும் என்பதை அண்ணல்

போற்றும் ஒரு பாடலின் மூலம் அறிகின்றோம். இக் குறிக்கோள் கீதையுணர்த்தும் நால்வகை உயர் மனிதர்களைப் பற்றிய கருத்துகளினின்று திரட்டப் பெற்றதாகும். ஸ்திதப்பிரக்ஞன், யோகாரூடன், பக்தன், குணாதீதன் ஆகிய நால்வகை உயர் மனிதர்களின் இயல்புகளனைத்தையும் ஒருங்கே உடையவனே அண்ணல் கருதும் உயர்ந்த மனிதனாவான்.

நரசிமேத்தா பாடிய பாடலை எப்போதும் அண்ணல் விரும்பிக் கேட்பார். அப் பாடல் வருமாறு:

'எவன் பிறரது துன்பங்களைத் தனது துன்பங்களாக அறிந்து அவற்றை உடனே துடைக்க முற்படுகின்றானோ அவனே எல்லோரிடத்தும் அன்புடையோனாவான். அவன் எப்போதும் தொண்டு உகந்து செய்ய ஆயத்தமாக விளங்குவான். தன்னைப் பற்றி ஒரு போதும் பெருமை கொள்ள மாட்டான். அனைவரிடத்தும் பணிவோடு நடந்து கொள்வான். எவரையும் எக்காரணம் பற்றியும் வெறுக்கமாட்டான். தன் எண்ணம் சொல் செயல் ஆகிய மூந்நிலைகளிலும் தூய நிலையில் வைத்திருப்பான். இத்தகையவனைப் பெற்ற அன்னை நற்பேறு பெற்றவளே ஆவள். அவன் அனைத்து மகளிரையும் தனது தாயாக மதிப்பான். என்றும் பொய் கூறாததால், அவனது வாய் தூய்மை குன்றாது விளங்கும். பிறரது பணத்தைத் தொடமாட்டான். அவனை எப்பற்றும் கட்டுப்படுத்தாது. இராம நாமத்தை ஒருபோதும் மறவாது வாழ்பவன். புனித தலங்கள் அனைத்தும் அவனது உடலிலேயே விளங்குவன. பேராசை, மன வெழுச்சி, சினம் போன்ற தீய குணங்களினின்று அவன் விடுபட்டவன். இத்தகைய சீரிய இயல்புகளனைத்தும் கொண்டவனே உண்மையான வைணவனாவான்.'

காந்தி அண்ணல் தமது செயல்களனைத்தும் மனித இனத்தை விரும்புதலால் தோன்றியவை என்று கூறுகிறார். தாம் பிரார்த்தனையை இடையறாது நாற்பது ஆண்டுகட்கு மேலாகப் பயின்று வந்த காரணத்தால் தாம் எவரையும் பகைத்துக் கொள்ளாத நிலை எய்தியதாகக் கூறுகிறார். மக்களோடு பயிலும்போது எவ்வித வேறுபாட்டுணர்வும் தமது உள்ளத்தில் தோன்றாத நிலையைத் தாம் பெற்றதாகக் கூறுகிறார். இந்நிலையில் மகாவாக்கியங்களை ஒத்த நான்கு வாய்மைகளை அருளுகிறார். அவையாவன:

(1) மனிதரனைவரும் நமது உடன் பிறந்தோரனையர். அனைவரும் வாழ்வில் மேம்பட வேண்டும் என்பதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

(2) உலகம் (புறநிலையில்) ஒருமை எய்தி வருவது கண்கூடு. இவ்வுண்மையை அனைவரும் தமது நெஞ்சத்தில் உணரவேண்டும்.

(3) அனைவரும் இன்பம் எய்தும்வகை செய்தாலன்றி நம்மில் எவருக்கும் இன்பம் இருத்தல் இயலாது.

(4) உலகம் ஒருமை எய்தா நிலையில் நான்வாழ்வதில் மகிழ்ச்சியாக இருக்க இயலாது.

நமது காலத்தில் எழுவகையான பாவச் செயல்கள் நிகழ்கின்றன என்று காந்தி அண்ணல் உரைத்தார். அவரது காலத்தை விட இன்று அவர் கண்ட உண்மைகள் நமக்கு இன்னும் தெளிவாகத் தெரிகின்றன.

(1) கொள்கைகள் அல்லது அடிப்படைத் தத்துவங்கள் இல்லாத அரசியல்
(2) மனச்சான்றில்லாத இன்பம் நுகர்வு
(3) பண்பாடு இல்லாத அறிவு
(4) ஒழுக்கம் இல்லாத வாணிபம்
(5) உழைப்பின்றிச் செல்வம் துய்ப்பு
(6) மனிதப் பண்புகளைப் போற்றாத அறிவியல்
(7) தியாகமில்லாத வழிபாடு

காந்தி அண்ணல் கண்ட சமுதாய அமைப்பு வருங்காலத்தைப் பற்றி அவர் கண்ட கனவு ஆகும். அவர் அதற்குச் 'சர்வோதயம்' என்று பெயரிட்டார். அது அனைவருக்கும் மேம்பாடு, நல்வாழ்வு தரும் அமைப்பாகும். ரஸ்கின் எழுதிய 'கடையவனுக்கும் கடைத் தேற்றம்' (Unto this Last) என்ற நூல் அண்ணலின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. இந்நூல் உடனடியாக இயல்பிலேயே தமது வாழ்க்கையையே மாற்றி அமைத்தது என்று கூறுகிறார். தாம் அந் நூலைக் கற்று அறிந்த உண்மைகளைத் தமது தற்சரிதத்தில் கூறியுள்ளார்.

(1) தனியொருவனது நலம் அனைவரது நலத்திலும் அடங்கியுள்ளது.

(2) வழக்கறிஞரது தொழிலுக்கு உள்ள மதிப்பு நாவிதனது தொழிலுக்கு உள்ள மதிப்பை ஒத்தது. உழைத்து உண்ணும் உரிமை அனைவருக்கும் ஒத்ததாகும்.

(3) உழுதுண்டு வாழ்பவனும் கைத்தொழில் செய்து வாழ்பவனும் போற்றத்தக்கவராவர். உழைத்துண்ணுதலே உகந்தது.

அனைவரது நலத்தையும் போற்றினால் தனியொருவனது நலத்தைத் தனியே நாம் நாட வேண்டுவதிலது. ஒருவன் தனக்கு வேண்டிய ஊதியத்தைத் தான் ஆற்றும் பணியினால் பெறுகின்றான். ஆதலால், வழக்குரைத்தலாகிய பணியாயினுஞ் சரி, நாவிதத்

தொழிலாயினுஞ் சரி, இவையிரண்டும் ஒத்த மதிப்புடையன. உழைத்து உண்பவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், உழவர்களும் கைத்தொழில் செய்பவர்களும் ஆவர். மேற்குறித்த மூவகை உண்மைகளுள் முதல் உண்மையை அண்ணல் முதலிலேயே அறிந்திருந்தார். இரண்டாவது உண்மையைத் தெளிவாக உணரவில்லை. மூன்றுவது அவருக்குத் தோன்றவில்லை.

காந்தி அண்ணல் வகுத்த 'உணவிற்காக உழைத்தல்'(Bread labour)என்ற கருத்து டால்ஸ்டாய், ரஸ்கின் ஆகிய அறிஞரது நூல்களைப் பயின்றதன் விளைவாகும். ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கு உழைக்க வேண்டும் என்றால், இவ்வுழைப்பு உடலால் உழைத்தலையும் உள்ளத்தால் உழைத்தலையும் ஒருங்கே குறிப்பதாகும். அறிவு கொண்டு அலுவலகங்களில் உழைப்பவர்கட்கு உடலுழைப்புத் தேவை என்று அண்ணல் வலியுறுத்துகிறார். அறிவுடையோர் தாம் பெரும் பொருளீட்ட வேண்டும் என்று முயல்வதைவிட மனிதச் சமுதாயம் தனது அறிவினால் பயனெய்துதல் வேண்டும் என்று கருதி உழைக்க முன்வருதல் வேண்டும். உடல் நலமுள்ள ஒவ்வொருவனும் தனது உணவிற்காக உழைக்க வேண்டும். தனது அறிவாற்றலைப் பெரும் பொருள் திரட்டுவதற்குப் பயன்படுத்தல் தகாது. மக்களினத்திற்கு அவனது உழைப்பை நல்க வேண்டும். இங்ஙனம் மக்கள் தொழிற்பட்டால், சமத்துவம் விரைவில் ஏற்படும். உலகில் எவரும் உணவின்றி வருந்த மாட்டார்கள். மிகுபொருள் உவவாமையை அறமாகப் போற்றுதல் வேண்டும். தேவைக்கு மேலே சேமித்து வைத்தல் ஆகாது. சுதேசி மனப்பான்மை அனைவருக்கும் இருத்தல் வேண்டும், இதன்படி ஒருவன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்காகப் பாடுபடுதல் வேண்டும். இதில் தன்னலத்திற்கு இடமே இல்லை. தனியொருவன் தனது குடும்பத்திற்காகப் பாடுபடுகிறான். அதற்காகத் தியாகம் செய்யத் தயாராக உள்ளான். குடும்பம், கிராம நலத்திற்கும், கிராமம் நாட்டிற்கும், நாடு மனிதச் சமுதாயத்திற்கும் தொண்டு செய்வதே சுதேசி தத்துவமாகும்.

அரசு இயங்குவதற்கு இன்று இன்றியமையாதனவாகக் கருதப்பெறுபவை இராணுவம், காவல்துறை, நீதிமன்றங்கள், மூலதனம், பொருள் ஆகியவை. இவற்றை டால்ஸ்டாயும் அண்ணலும் ஒருங்கே தேவையற்றன என்று கூறுகிறார்கள். ஏனெனில் இவை, அன்பு நெறிக்கும் புறம்பானவை. அரசின் ஆற்றல்களைப் பரவலாக அமைக்க வேண்டும். கூட்டுறவைப் பெரிதும் இருவரும் வலியுறுத்தினர். இயந்திரப் பெருக்கமும் இதன்வழி அமையும் நாகரிகமும் அண்ணலால் வெறுக்கப்பெற்றது. சுரண்டலைத் தவிர்க்க வேண்டும் என்றனர். அண்ணல், முறைகளும் தூயன

வாக அமைய வேண்டும் என்கிருர். இவருக்கு முன்னிருந்த நிலை முடிபுகள் தூயதாக இருந்தால் சாலும் என்பதாகும். முறையும் முடிபும் ஒருங்கே தூயனவாக அமையவேண்டும் என்று அண்ணல் வலியுறுத்திஞர். முறைகளையே நாம் தக்கனவாகத் தேர்ந்து எடுக்க இயலும். முடிபுகள் நமக்கு அப்பாற்பட்டவை. நமது நடத்தை தூயதாக அமையவேண்டும் என்று கூறுகிருர்.

இன்று நம்மிடையே வழக்கில் இருக்கும் சாதிக் கட்டுபாடுகள் அஹிம்சை நெறிக்கு மாருனவை என்று அண்ணல் கருதுகிருர். முற்காலத்தில் வருணதருமம் ஏற்பட்டபோது அதன் அடிப் படைகள் வேறு. சாதிகளிடையே திருமணஞ் செய்து கொளல், இருவேறு சாதியினர் ஒருங்கு உண்ணுதல் போன்றவற்றிற்கு இன்று சாதி அமைப்பு விதித்துள்ள கட்டுப்பாடுகளை நோக்கும் போது சமுதாய முன்னேற்றம் பெரிதும் தடைபடும் என்பது உறுதி. மேலும், சாதிகள் பல உட்பிரிவுகளை உடையனவாக உள்ளன. கூட்டு முயற்சி இயலாததாகின்றது. சாதிகளிடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பெற்றுள்ளன. இவையே இன்றுள்ள சாதி அமைப்பில் நாம் காணும் குறைகளாகும். இவற்றை அண்ணல் நன்கு உணர்ந்திருந்தார். இக் குறைகளால் வருண தருமத்தின் அடிப் படைகளை நாம் மறத்தலாகாது. அண்ணலின் கருத்துப்படி அவ் வடிப்படைகள் :

(1) ஆன்மீகத் துறையில் சிக்கனம்

(2) உழைப்பின் அடிப்படையில் பாகுபாடு

(3) பாரம்பரியத்தின் வழி அமைதல்

(4) அனைத்துயிரையும் சமமாகப் பாவித்தல்—அனைத்துயிர் ஒருமை. இந்து சமயத்தின் அடிப்படை உண்மைகளை நன்கு உணர்ந்தார். தீண்டாமையை என்றும் இந்து சமயம் உடன்பட வில்லை என்பது அண்ணல் கருத்து. தீண்டாமை ஒழிப்பு என்பது அவர்கட்கு சமுதாயத்தில் ஒத்த இடம் வழங்குதலில் மட்டும் அடங்குவதன்று. ஆலயங்களில் வழிபட அனுமதிக்கப்பெற்றது, அண்ணலின் தொண்டுகளில் தலை சிறந்ததாகும். தாழ்த்தப் பட்டவர்களைச் சகோதரராகக் கொள்ள வேண்டுமென்றும், உள்ளத்தில் அணுத்துணையும் அவர்கள் இழிந்த சாதியினர் என்ற எண்ணம் ஏற்படலாகாது என்றும் நன்கு வலியுறுத்திஞர்.

தீண்டாமை ஒழிப்பு அண்ணலது தலையாய சமுதாயத் தொண் டாகும். இவ்வொழிப்பின் காரணமாக அவ் வகுப்பினர், பெரிதும் விழிப்படைந்து இன்று சமுதாயத்தில் கல்வி நலம் பெறுவதிலும், அரசு அலுவல்கள் ஏற்பதிலும் கருத்தாக விளங்குகின்றனர்.

## அண்ணலும் எளிமையும்

அண்ணல் எளிமையை விரும்பினர். எளிய வாழ்க்கை மேற்கொண்டார். உடையில் உணவில் எளிமையிருந்தது. அவர் பிரபஞ்சம், இறைவன், மனித வாழ்க்கை ஆகிய இவற்றைப் பற்றிக் கொண்ட கருத்துகள் சிக்கலற்றவையாக, நேரியனவாக, எளிதில் பிறர் உணரத்தக்கனவாக அமைந்தன. மக்கள் தனி நிலையிலுஞ் சரி, நாடுகளாயினுஞ்சரி எப்போதும் பிரிந்து இருப்பவர்களல்லர் என்பது அண்ணலின் கருத்தாகும். இன்றைய உலகில் எழுந்துள்ள சிக்கல்கட்குக் காரணம் மனிதன் எளிமையை மறந்தமையாகும். ஆரவாரமான சிக்கலான அமைப்புகளையே மனிதன் இன்று விரும்புகிருன். இத்தகைய அமைப்புகளே முன்னேற்றத்திற்கு அடையாளம் என்றும் கருதுகிருன். ஆதலால் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வை விரும்ப வேண்டும் என்று அண்ணல் வலியுறுத்தினர். இக் கருக்து ரூசோ அவர்களது கருத்தோடு பொருந்துவதாகும். கிரேக்க காலத்தில் வாழ்ந்த ஸ்டோய் என்பவரது கருத்துகளோடு பெரிதும் அண்ணல் கருத்துகள் ஒத்தன. கடுமையான நோன்புகளை அண்ணல் மேற்கொண்டார். தன்னல மறுப்பு அவரது வாழ்க்கையின் ஒரு சிறந்த கூறுகும். துறவு மனப்பான்மையைக் கலையாகப் பயின்றவர். அண்ணல் எளிமையின் அழகை உணர்ந்தவர். அன்றாட வாழ்வில் செயற்கை முறைகளைத் தவிர்த்த உன்னதமான வாழ்வு அவரது வாழ்வாகும். துறவை வாயளவில் வற்புறுத்தாது வாழ்ந்து காட்டியவர். அண்ணல் துறவை வலியுறுத்தினர் என்னும்போது, துறவு மனப்பான்மையையே குறிக்கின்றேன். அவர் இல்லறத்தைத் துறக்கவில்லை. குடும்பத்தோடு வாழ்ந்தார். மனைவி நெடுங்காலம் அண்ணலுடன் வாழ்து அவர் ஆற்றிய தொண்டுகளிலெல்லாம் பங்கு கொண்டார். அண்ணலது குடும்பம் விஸ்வ குடும்பமாகும். உலக மக்களனைவரும் தமது உறவினர் என்ற உணர்வில் பிறழாமல் வாழ்ந்தார். புலனின்பங்களை அறவே நீக்கிப் புனித வாழ்வு இல் வாழ்வு மேற்கொண்ட நிலையிலும் வாழ்வதற்கு இயலும் என்று எடுத்துக்காட்டிய பெருமை அண்ணலுக்கு என்றும் உண்டு. இயற்கையில் ஓர் அறம் புலனுகின்றது. இவ்வறம் இறையின் வெளிப்பாடு எனலாம். அறவுலகிலும் இத்தகைய அறம் வெளிப்படுகின்றது. ஆதலால், இயற்கை அறவொழுங்கு உடையது. அண்ணல் அறவுலகில் நம்மைக் கட்டுப்படுத்தும் அற ஆணைகள் பல உள என்று எடுத்துக் காட்டினர். அண்ணலது வாழ்க்கை முழுமையும் சில அற ஆணைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். காண்ட் என்கின்ற ஜர்மானிய அறிஞர் தாம் வியந்து மதித்துப் போற்றியவை விண்ணில் நிலவும் உடுக்கள் என்றும், நமது வாழ்வில் உள்ளீடாக விளங்கும் அறச் சட்டம் என்றும்

இரண்டைக் குறித்தார். அண்ணலது வாழ்க்கையில் அறங்கள் பெரிதும் இடம் பெற்றன, விளக்கம் அடைந்தன. கடமையைப் பெருமளவில் வற்புறுத்தினர். அண்ணல் கடனாற்றும்போது பயன் கருதாது ஆற்ற வேண்டும் என்று கீதை காட்டும் செந்நெறியை அடிப்படையாக அமைத்தார். யாண்டும் எக் காலத்தும், எந் நிலையிலும் உண்மையைப் போற்ற வேண்டும் என்பது அண்ணலது கருத்தாகும். இறையுணர்வு குன்றாத வாழ்க்கையே சீரிய வாழ்க்கை. அன்பு நெறி விரிவாக வகுக்கப் பெற்று அன்பினால் ஆகாதது ஏதுமிலது என்று எடுத்துக் காட்டினர். அண்ணல் இன்னாசெய்யாமை என்பதை, துன்பங்கள் அல்லது ஊறுகள் விளைவிக்காமை என்று மட்டும் கொள்ளவில்லை. எவ்வுயிரிடத்தும் அன்புபூண்டு ஒழுகுதலாகிய அத் தன்மையது சிறப்பாக வற்புறுத்திய பெருமையும் அண்ணல் அவர்கட்கு உண்டு. இவ்வகையில் சமண சமயம் வற்புறுத்தும் அஹிம்சை நெறி அண்ணலது வாழ்க்கையினாலும், அவர் செய்த சோதனைகளாலும் பெரு விளக்கம் பெற்றது. முடிபுகளின் தூய்மைக்கு இயையுமாறு முறைகளின் தூய்மையும் போற்றப்பெற வேண்டும் என்று அண்ணல் உணர்த்தினர். இது அவரது தனிச் சிறப்பாகும். உள்பொருளை ஆன்மீக இயல்புடையதாகக் கண்டார். இது அற ஒழுங்கு உடையதாகக் கொண்டார் என்று முன்னர் கண்டோம். இவ்வாறு காண்டல்தான், நன்மையை மக்கள் நாடவேண்டும் என்பது பொருளுடையதாகும். இறைவன் மேலான பரமான ஆன்மாவாகும். இக் கருத்து அடிப்படையானது. இது நிறுவ வேண்டியதொன்றன்று. நாம் முற்கோளாகக் கொள்வதாகும். சமூகம் பல ஆன்மாக்களைக் கொண்டது. மனிதர் உயிர்ப்புடைய உடலோடு கூடியவர்களாக விளங்குவதோடு, அற ஆணைகளை ஏற்று அவற்றின்படி ஒழுகக் கடமைப்பட்டவர்களாவர்.

மனித இன நலக் கோட்பாடு அண்ணலின் தத்துவத்தில் மிகவும் முககியமான கூறாகும். ஆனால், மனித இன நலத்தைப் பொருளாதார அடிப்படையில் மட்டும் அண்ணல் கொள்ளவில்லை. ஆன்மீக அடிப்படையில் கொண்டார். மனிதனின் அன்றாடத் தேவைகளை நாம் வழங்கிவிட்டால் மட்டும் அவன் நிறைவுகொள்ள மாட்டான். இன்றைய உலகில், தேவைகள் பெருமளவிற்கு அமெரிக்க மக்களுக்குப் பூர்த்தியாக உள்ளன. எனினும், அமைதி இழந்து வாழ்வோர் ஒருசிலரை நாம் காண்கின்றோம். ஆதலால் மனிதன் உடற் தேவைகளுக்கு அயலாகப் பிற ஆன்மீக வாழ்வையும் விரும்புகின்றான் என்பதை அறிகின்றோம். மனிதன் இறைவனை உணர்வதற்கு முயல்கின்றான். ஆன்மீக நிறைவு என்பது இறையுணர்விலேதான் முற்றுப்பெறும்.

காந்தி அண்ணலது வாழ்க்கையில் சமயமும் தத்துவமும் இணைந்து செல்கின்றன. சமய வாழ்வு முதலிடம் பெறுகின்றது. அவரது சமயம் மரபு வழி அமையும் சடங்குச் சமயமன்று. அன்னார் கண்ட சமயம், அஹிம்சை நெறி ஆகிய இவ்விரண்டையும் நினைவு கூர்ந்து முடிப்போம்.

சமயம் என்பது வாழ்க்கையில் முழுப் பங்கை ஏற்கும்போது சமயம் என்று கூறத்தகுவதாகிறது. மனிதனின் தன் முனைப்பு, அகந்தை நீங்குகின்றபோது அவ்விடத்தை இறைவன் நிரப்புகிறான். அன்றாட வாழ்வில் போற்றி ஒழுகத்தக்கதே சமயம். சமயமென்பது ஒழுக்கம். நாம் ஒழுக்கத்தைத் துறந்தால் சமய நெறியினின்று பிறழ்ந்தவராகின்றோம். சமயத்தின் சாரம் ஒழுக்கமே. சமயமில்லா வாழ்வு பற்றுக்கோடில்லாதது. நமது சமயம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது. அஃது அன்பன்றி வேறில்லை. அன்பெனின் சுற்றத்தாரையும் நண்பரையும் மட்டும் நேசிப்பதன்று. மாற்றாரையும் நேசிப்பது அன்பு. அஹிம்சை யாவது அயராத அன்பு. அதுவே செந்நெறி. அதன் வாயிலாககவே மனித சமூகத்தைக் காத்தல் இயலும். அது வீரனின் ஆயுதம். அஹிம்சையில் உறுதியுடையவன் ஆண்டவனிடத்தில் உறுதியுடையவன். மனம், மொழி, மெய்யாகிய மூன்றிலும் அஹிம்சை அடிப்படையாக அமைதல் வேண்டும்.

அண்ணல் உண்மையே கடவுள் என்கிறார். 'என்றும் உள்ளது ஒன்று. அது சத். சத்தின் அடியாகப் பிறந்தது, சத்தியம். சத்தியமே (உண்மையே) கடவுள். உண்மையின் முழுமையைத் தெளிவது கடவுளை உணர்வதாகும். அதுவே உயிர்கள் அடையத் தக்க முழுநிலையாகும். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள மெய்ப் பொருளை ஒருவன் காண விரும்புகிறான். அவன் படைப்பில் அமைந்த மிக இழிந்ததையும் அவன் தன்னைப்போல் நேசித்தல் வேண்டும். உயிர்கட்குச் செய்யும் தொண்டே தொண்டாகும். தொண்டு என்பதைத் தூய அன்பு என்றும் கொள்ளலாம்.

'வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க் கியாவது முண்டோ எய்தா அரும் பொருள்' என்று இளங்கோ அடிகள் கூறுகிறார். வாய்மை முறையே வழுவாமல் அண்ணல் போற்றினார். வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார்.

# 7. பகவான் இரமணர்

## (1879—1950)

மதுரைக்குத் தெற்கே திருச்சுழி என்னும் பதியில் இரமணர் பிறந்தார். இத் தலத்திலுள்ள சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மணிவாசகரும் பாடியுள்ளனர். இரமணரது பெற்றோர், சுந்தரம் ஐயர், அழகம்மாள் என்பவராவர். இவர்கள் இறைவனிடத்து இடையறாது பக்தி பூண்டு ஒழுகி வந்தனர். அறங்களினின்று வழுவாது இல்லறத்தை நடத்தினர். இத்தகையவர்கட்கு வேங்கடரமணன் என்றுஒரு குழந்தை 30ஆம்தேதி டிஸம்பர் 1879-ல் பிறந்தது. இவரே பின்னாளில் இரமண மகரிஷி என்ற பெயரோடு விளங்கிய மகான் ஆவர். அவர் பிறந்த அன்று ஆருத்ரா தரிசனம் நன்னாள்; தில்லையில் ஸ்ரீமத் நடராஜர் ஆயிரக் கால் மண்டபத்தில் கொலுவீற்றிருந்து அன்பர்கட்குக் காட்சி வழங்கும் பெருநாள் ஆகும்.

இரமணரது இளமையில் குறிக்கத்தக்க நிகழ்ச்சி ஏதும் இலது. ஆரம்பக் கல்வி திருச்சுழியில் தொடங்கியது. பின்னர் ஓராண்டு திண்டுக்கல்லில் அமைந்தது. இரமணருக்குப் பன்னிரண்டாவது வயதில் அவரது தகப்பனார் மறைந்தார். ஆதலால் அவரது குடும்பம் மதுரைக்குப் பெயர்ந்தது. அங்கு ஸ்காட், நடுத்தர உயர் நிலைப்பள்ளி, அமெரிக்க உயர்நிலைப் பள்ளிகளில் இரமணர் பயின்றார். இரமணருக்குப் படிப்பில் நாட்டம் அதிகம் இல்லை. நல்லுடலும், உடலுறுதியும் வாய்ந்த இளைஞராக விளங்கினார்.

இரமணர் தற்செயலாக திருவண்ணாமலையைப் பற்றிக் கேள்விப்பட்டார். அப்போது அவருக்கு வயது பதினாறு இருக்கும். திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் கிருத்திகை நன்னாளில் பெரிய அகல் ஒன்று குன்றின்மீது ஏற்றி வைப்பார்கள். இதைத் திருவருணை தீபம் என்பர். ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்குத் திரண்டு கண்டு களிப்பர். திருவண்ணாமலைக்கு அருணாசலம் என்ற பெயரும் உண்டு. இரமணரது உறவினர் ஒருவர் அவரது இல்லத்திற்கு வந்திருந்தார். அவரை நோக்கி, அவர் எங்கிருந்து வந்துள்ளார் என்று இரமணர் கேட்டார்.

அவர் தாம் திருவண்ணுமலையினின்று வந்துள்ளதாகப் பதிலிறுத்தார். இப்பதில் இரமணரை ஈர்த்தது. பின்னர் இரமணர் அருணைப்பதியால் எவ்வாறு தாம் ஈர்ப்புண்டார் என்பதைக் குறிக்கின்ருர்: 'எனது மனத்தினை ஒடுக்கி அமைதி உண்டாக்கி என்னைத் தன்பால் இழுத்துக் கொண்டது (அருணுசலம்)' என்று கூறுகின்ருர்: தற்செயலாக அருணுசலம் என்ற பதியைப் பற்றிக் கேள்விப்பட்டது இரமணரது வாழ்வில் பெருமாற்றத்தை விளைத்தது. அவரது சிந்தனைகள் யாவும் அருணுசலத்தைப் பற்றியே அது தொடங்கி அமையலாயின. மற்றுமொரு நிகழ்ச்சி எதிர்பாராமல் அமைந்தது. இரமணர் தமது இல்லத்தில் இருந்த சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தைப் படிக்க நேர்ந்தது. இப் புராணம் சிவனடியார்களைப் பற்றியது. சிவனடியாரது துறவும், பக்தியும் இரமணரது உள்ளத்தில் படிந்தன. தாமும் அத்தகைய தூய துறவு வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினுர். இவ்விழைவு தற்செயலாக அந்நூலைப் படித்த நிலையில் தோன்றியதாகும். இரமணரது வாழ்க்கையில் திருவருள் செயற்படத் தொடங்கியது என்று கொள்ள வேண்டும். உறவினர் ஒருவரது வருகையும் அவர் அருணுசலம் என்ற தலத்தின் பெயரைக் கூறுதலும், சேக்கிழாரது திருத்தொண்டர் புராணத்தைப் படிக்க நேர்தலும் ஆகிய இந் நிகழ்ச்சிகள் புறத்தே நோக்கும் போது தற்செயலாக நிகழ்வன போன்றிருந்தாலும், திருவருள் இரமணரை பக்குவப்படுத்தத் தொடங்கியது என்றே கூற வேண்டும்.

இரமணருக்கு அப்போது வயது பதினேழு இருக்கும். அவர் பெரிதும் விழைந்த ஆன்மீக அனுபவம் அப்போது வாய்த்தது. 1896ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு நாள் இரமணர் தனியே தமது உறவினரது இல்லத்தில் மாடியில் அமர்ந்திருந்தார். அவரது உடல் நலத்தோடு இருந்தது. எவ்விதக் குறைவுமின்றி அவர் அமர்ந்திருக்கும் போது திடீரென்று மரணபயம் அவரைப் பற்றியது. அப்போது அவர் தாம் இறக்க நேரிடும் என்ற நிலையை நீள நினைந்தார். இவ்வச்சம் ஏன் நிகழ வேண்டும் என்பது அவருக்கே புரியவில்லை. மரணம் நேரிடலாம் என்ற எண்ணம் அவரை அச்சுறுத்தவில்லை. அவரது மனம் உள்முகப் பட்டது. அவர் சிந்திக்கலானுர். 'மரணம் யாது?' என்று தொடர்ந்து சித்தித்தார். உடல்தான் அழிகிறது என்ற உணர்வு ஏற்பட்டது. பின்னர் அவர் தமது கைகளையும், கால்களையும் நீட்டிப் படுத்தார். மரணம் நிகழ்ந்தால் கை, கால்கள் அசைவற்றுக்கிடப்பது போல் கிடந்தார். மூச்சைக் கட்டுப்படுத்திஞர்; உதடுகளை இறுக மூடிஞர். இப்போது அவரது உடல் சவம் போன்று கிடந்தது; தொடர்ந்து சிந்தித்தார். உடலைச் சுடுகாட்

டிற்குச் சென்று எரிப்பார்கள். உடல், சாம்பலாகும்; உடல் மடிந்த பிறகு தான் இறந்ததாக எண்ண இயலுமா என்று கருதத் தொடங்கினர். நான் இவ்வுடலா ? உடல் அமைதியுற்று செய லற்றுக் கிடக்கின்றது என்ருலும், அவரது ஆளுமைத்திறன் முழுமையும் தோன்றியது. அவருள் 'நான்' என்னும் உணர்வு தனித்து விளங்கக் கண்டார். தான் என்பது உடலைக் கடந்து, அதற்கு அயலான உணர்வு என்று உணர்ந்தார். உடல் தான் அழியும்; ஆன்மா அழிவற்றது; மரணம் அதை ஒன்றும் செய்யாது என்ற முடிபிற்கு வந்தார். இம் முடிபு அறிவு நிலையில் எழுந்த தன்று. நன்கு உணர்வினின்று முகிழ்த்தது. இவ்வுணர்வு தெளி வாக ஏற்பட்டது; அவரது வாழ்நாள் முழுமையும் நிலைத்திருந்தது. மரண பயம் அறவே நீங்கியது. தான் வேறு, உடல் வேறு என்ற உணர்வு ஊன்றுவதாயிற்று. இவ்வுணர்வே அவரது வாழ்வின் ஆதார சுருதி எனலாம். மிகுந்த சாதனையின்றி அவருக்கு இவ் வுணர்வு எளிதில் கைவந்தது. இவ்வுணர்வின் பின்னர் அவரது வாழ்க்கை பெருமாற்றம் அடைந்தது. அடுத்தடுத்துத் தனியே அமர்ந்து தியானம் செய்யமுற்பட்டார். மதுரையில் தங்கியிருந்த தால் மீனுட்சி அம்மன் ஆலயத்திற்குச் சென்ருர். ஆங்கு தெய் வத்தின் முன்னர் தாம் நிற்கும் போது அவரது உணர்வு உயர்ந்த நிலையில் உலவியது; பேருவகை பிறந்தது. கண்களினின்று நீர் பெருகியது. தாம் பெற்ற புதிய காட்சி அவரது மணக் கண்ணின் முன்பு இடையருது இருந்து வந்தது. அவருக்கு உலகியல் படிப்பில் ஆர்வம் குன்றியது. அவரது போக்கு மற்றவர் கட்குப் பிடிக்கவில்லை. திருவண்ணுமலையைச் சேர வேண்டும் என்ற எண்ணமே முறுகி எழுந்தது. தமது பயணத்திற்கு ரூபாய் மூன்று தேவை என்று அறிந்தார். பள்ளிக் கட்டணத்திற்காகத் தனக்குக் கொடுத்த பணத்தில் ரூபாய் மூன்று எடுத்துக்கொண்டு, எஞ்சிய தொகையையும் கடிதம் ஒன்றையும் விடுத்து அவர் திரு வண்ணுமலைக்குப் புறப்பட்டார். விழுப்புரம் வரை இரயில் பயணம் செய்தார். பின்னர் நடந்து சென்று திருவண்ணுமலையை அடைந் தார். வழியில் அறைகண்ட நல்லூரில் சிவாலய தரிசனம் செய் தார். ஆங்கு ஓர் ஒளிப் பிழம்பு அவ்விடத்தைச் சூழ்ந்துவிளங்கக் கண்டார். இவ்வொளி பௌதிக ஒளியன்று. அவ்வாலயத்தில் ஆழ்ந்த தியானத்தில் நெடுநேரம் அமர்ந்திருந்தார், பின்னர் தமது பயணத்தைத் தொடர்ந்தார். பசியினுல் களைப்புற்ருர். தமது காதணிகளைக் கொடுத்துவிட்டுத் தேவையான பணத்தைப் பெற முடிவு செய்தார். முத்துகிருஷ்ண பாகவதர் என்பவரது இல்லத் தில் தங்கி தமது கருத்தைத் தெரிவித்தார். அவரும் இசைந்து காதணிகளை மதித்து உரிய ரூபாயை இரமணரிடம் தந்தார். அவ்வில்லத்தில் அவருக்கு உணவு படைத்தார்கள். அன்று

கோகுலாஷ்டமி தினம். அவ்வீட்டு அம்மையார் இனிப்பு வகைகளைக் கட்டி இரமணரிடம் தந்தார்கள். செப்டம்பர் முதல் நாள், 1899ஆம் ஆண்டு திருவண்ணாமலையை இரமணர் அடைந்தார். ஆலயத்திற்கு விரைந்து சென்றார். ஈஸ்வரன் முன்பு நின்று தரிசித்தார். தரிசனத்தால் சொல்லொணாத உவகையை இரமணர் பெற்றார்.

இரமணர் முறையாகச் சந்நியாச ஆசிரமத்திற்கு தீக்கை முறைகளைப் பின்பற்றவில்லை. அருணையில் ஈசனை வழிபட்டுத் திரும்பும்போது, தற்செயலாக ஒரு நாவிதன் குடுமி களைந்து விடட்டுமா என்று கேட்டான். இரமணரும் இசைந்தார். பாகவதர் கொடுத்த பணத்தில் தம்மிடம் எஞ்சியிருந்த தொகையையும் இனிப்பு வகைகளையும் அய்யன் குளத்தில் எறிந்தார். தமது பூணூலை யும் களைந்தார். சில வாரங்கள் திருவண்ணாமலை ஆயிரக்கால் மண்டபத்திலேயே கழித்தார். ஆங்கே சிறுவர் தொல்லை இருந்த தால் மறைவான இடங்களைத் தேடி நிட்டையில் அமர்ந்தார். பல நாள்கள் சமாதியில் இருந்து வந்தார். அப்போது ஆங்கு சேஷாத் திரி சுவாமிகள் என்றொரு முதியவர் இருந்தார். அவர் இவருக்குக் காவலாக இருந்து சிறுவர் தரும் தொல்லையைத் தவிர்த்தார். இரமணர் மௌன விரதத்தை மேற்கொண்டார். வாசிஷ்டம், கைவல்ய நவநீதம் போன்ற நூல்கள் அவருக்குப் படிக்கப்பெற்றன. பின்னர் தம்பிரான் சுவாமிகளது விருப்பத்திற்கு இணங்கி குருமூர்த் தம் என்ற இடத்திற்குப் பெயர்ந்தார். இங்கே ஓராண்டுத் தங்கி யிருந்தார். அக் காலத்தில் அவரைப் பிராமண சுவாமி என்றே மற்றவர்கள் அழைத்தனர். மானாமதுரையினின்று நெல்லையப்ப ஐயர் (இரமணரது உறவினர்) அவரை அழைத்துச் செல்ல வந்தார். இரமணர் எவ்விதப் பதிலும் தரவில்லை. அவர் ஏமாற்றம் அடைந்து திரும்பினார். பின்னர் இரமணரது தாயார் தமது மூத்த மகனுடன் வந்து இரமணரை அழைத்துச் செல்ல முயன்றார். இம் முயற்சியும் தோல்வியுற்றது. இரமணரது தாயார் மிகுந்த ஏமாற் றத்துடன் திரும்பினார். பின்னர் விருபாட்ச குகையில் வசிக்கலா னார் இரமணரது புகழ் பரவியது. பலர் வந்து அவரைத் தரிசித் தனர். சங்கரரது விவேக் சூடாமணியை ஓர் அன்பர் கொண்டு வந்தார். பின்னர் இந் நூல் இரமணரால் தமிழில் மொழி பெயர்க் கப்பெற்றது. எச்சம்மாள் தனது கணவன், மகள், மகன் யாவரை யும் இழந்து, மனம் மிக நொந்து இரமணரிடம் ஆறுதல் பெறவும் ஆன்மீக வாழ்விற்கு வழி தேடவும் வந்து சேர்ந்தார்கள். அவ்வம் மையார் நாளும் சுவாமிகளைத் தரிசிப்பதோடு உணவும் கொண்டு வருவதென உறுதி பூண்டார்கள். நாளும் உணவைக் கொணர்ந் தார்கள்.

1903ஆம் ஆண்டு ஸம்ஸ்கிருதத்தில் பெரும் புலமை பெற்றிருந்த கணபதி சாஸ்திரி என்றவர் இரமணரை அணுகித் தமது ஐயங்களை நீக்க முற்பட்டார். இவர் இறையை அன்னை வடிவில் வழிபடுவதில் தேர்ந்தவர். இவர் இரமணரை அணுகி, தாம் கற்க வேண்டுவன அனைத்தும் கற்றதாகவும், ஜபம் நெடுநாள், தமது இதய நிறைவு தோன்றும் வகையில் ஜெபித்ததாகவும் கூறி, தவம் யாது? என்று தாம் அறியவில்லை என்றும் இரமணரை விளக்கும்படிக் கேட்டுக் கொண்டார். அதற்கு இரமணர் அளித்த மறுமொழி வருமாறு: 'நான் என்னும் உணர்வு தோன்றும் இடத்தை ஆராய்ந்து அதனைத் தேர்ந்தால் அங்கே மனம் ஒடுங்கும்; அதுவே தவமாகும். மந்திரங்களைச் ஜெபிக்கும் போதும் அம் மந்திரங்கள் தோன்றும் இடத்தை அறிய வேண்டும். ஆங்கு மனம் ஒடுங்கும்; அதுவே தவமாகும்.' இவ்வுண்மை கணபதி சாஸ்திரிக்குப் பெரு விளக்கமாக அமைந்தது. இவர்தாம் இரமணரை மகரிஷி என்று உலகுக்கு அறிவித்தார். 'இரமணகீதை' என்றொரு நூல் எழுதி அவரது உபதேசங்களை வெளிப்படுத்தினர்.

மானமதுரை திரும்பிய இரமணரது அன்னை தமது மூத்த மகனை இழக்க நேரிட்டது. பின்னர் ஒருமுறை திருவண்ணமலை வந்து சென்றார்கள். ஒருசமயம் இரமணரது அன்னை திருவருணையில் தங்கியிருந்தபோது நோய் வாய்ப்பட்டார்கள். மிகுந்த அன்புடன் இரமணர், தமது தாய்க்கு வேண்டியவை எல்லாம் செய்தார்கள். நலம் பெற்று, மானமதுரை திரும்பினர்கள். சில திங்களுக்குள், இரமணரது அன்னை தமது சிறிய மகனுடன் திருவண்ணமலை வந்து சேர்ந்தார்கள். 1916-ல் அன்னை அருணசலம் வந்து சேர்ந்தார். இரமணர் விருபாட்சம் என்னும் இடத்திலிருந்து ஸ்கந்தாஸ்ரமம் பெயர்ந்தார். அன்னை விரும்பி கல்லாடை ஏற்றார்கள். இரமணரது இளவலும் நாகசுந்தரமும் காவியுடை ஏற்று சந்நியாசி ஆனர். அவரது பெயரே 'நிரஞ்சனனந்தர்' என்பதாகும். 1922-ல் மே மாதம் 19ஆம் தேதி அன்னை மறைந்தார். அவரது உடல் அடக்கம் செய்யப்பெற்றது. நாளும் இரமணர் அந்த இடத்திற்கு வந்து சென்றார். ஆலயம் ஒன்று அன்னை சமாதியின்மீது எழுப்பப் பெற்றது. இரமணரும் உள்ளிருந்து இறையருள் உணர்த்த அன்னை சமாதி எழுந்த இடத்திற்குப் பெயர்ந்தார். இதன் பின்னர் இரமணஸ்ரமம் வளர்ச்சியடைந்தது. இரமணர் நடுநாயகமாக வீற்றிருந்தார். ஆசிரமத்தின் செயலனைத்தும் மற்றவர்களால் கவனிக்கப்பெற்றன. இரமணர் தமது அனுபவத்திலேயே உறைந்து நின்றார் (1).

இரமணரது தூய வாழ்க்கை நிகரற்றது எனலாம். வேதாந்தம் போதிக்கும் நிலைத்த உண்மைகட்கு அவரே சாட்சியாக, விளக்க

மாக அமைந்தார். அத்துவிதம் உருக்கொண்டாலெனத் திகழ்ந் தார். அத்துவிதத்தின் உயரிய இரண்டற்ற அனுபவத்தை அவர் இளமையிலேயே பெற்ருர். அவரது ஆன்மீக ஒளி என்றும் தடை படாது, ஒளிர்ந்து கொண்டிருந்தது. ‘அஹம்’ என்னும் உணர்வு அறவே அவரிடமிருந்து நிலேத்திருந்தது. அவரது ஆன்மா, இயல்பான நிலேயில், ஸகஜ—ஸ்திதியில் இருந்தது. அவர் அறியாமையின் தளேகளே எல்லாம் களேந்த நிலேயில் இருந்தார். அவர் ஜீவன் முக்தராக விளங்கினுர். பிரகிருதியின் முக்குணங்களி னின்று நீங்கி, திரிகுணுதீதராகத் திகழ்த்தார்.

தென்னகத்தில் பக்தி நெறி நெடுங்காலம் ஊன்றித் தழைத்து இருந்தது. இரமணர் இந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் ஞான மார்க்கத்தின் சிறப்பிணேப் போதிக்க வந்தார் எனலாம். இரமண மார்க்கத்தின் குறிக்கோள் இரண்டற்ற உணர்வைக் கைவரப் பெறுதலாகும். இதனேயே ‘அத்வைத ஆனந்தம்’ என்பார்கள். இரமணர் அருளிய நூல்களுள் ஒன்று ‘உள்ளது நாற்பதாகும்’. பின்னர் இந் நூலுக்கு அனுபந்தம் ஒன்றும் அமைந்தது. இந் நூலும் நாற்பது பாடல்களால் ஆனது. இவ் அனுபந்தத்துள் பத்தாவது பாடலாக அமைகிறது.

‘தேகங் கடநிகர் சடமிதற் ககமெனுந் திகழ்விலதா
ருகஞ் சடலமிறு யிலினி றினமுறு நமதியலாற்
கோகங்கரனெவனுள னுணர்ந்துளரு ளக்குகையுள்ளே
சோகம் புரண வருணகிரி சிவவிபு சுயமொளிர்வான்’

இப் பாடலின் திரண்ட கருத்து: ‘தேகமானது மண்பானே போன்றது; இவ்வுடலுக்கு ‘நான்’ என்னும் விளக்கம் இல்லே. ஆழ்ந்த உறக்கத்தில் தேக உணர்வில்லே. ஆனுல், நான் என்ற உணர்வு உண்டு. இந்த ‘நான்’ உடலன்று. இந்த ‘நான்’ என்ற உணர்வு எங்கே இருந்து தோன்றுகின்றது? இதனே ஆய்ந்து உணர்ந்து இருப்பவர்களுடைய இதயக் குகையினுள்ளே ‘அஹம்’ என்னும் உணர்வு மயமாய் அருணுசல சிவவிபு தானே பிரகாசிப் பான்.’

இப் பாடலுள் மூன்று வாக்கியங்கள் நமக்கு இரமணரது உபதேசத்தைச் சுருக்கித் தருகின்றன. நாஹம் தேஹம்—நான் இவ்வுடலன்று. கோஹம்—நான் யார்? ஸோஹம்—அவனே (பரம்பொருளே நான்) முதலுணர்வு, தேஹம் நானல்ல என்ப தாகும். இதற்கு இருகாரணங்கள் தரப்பெறுகின்றன. உடலிற்கு உணர்வில்லே. இது மட்பாண்டத்தைப் போன்றது. ஆழ்ந்த உறக்கத்தில், உடலே நாம் உணர்வதில்லே. ஆனுல் உணர்வு, விழிப்பு, கனவு ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலேகளிலும் விளங்குகிறது. உடல் ஆன்மா அல்ல என்ருல், ஆன்மா யாது?

என்று அடுத்த கேள்வி எழுகின்றது. தொடர்ந்து விசாரித்து ஒருவன் இறைவனே ஆன்மாவாக விளங்குகிருன் என்ற உண்மையை உணர்கிருன் (அவன் இறைவன் தான் ஆன்மாகவாக விளங்குகிருன்). 'உன்னை நீ அறிவாயாக' என்பதே இரமணரது ஆணையாகும். இத்தகைய அறிவுரையைக் கிரேக்க நாட்டில் சோக்ரதர் கூறியுள்ளார். இருந்தபோதிலும், இரமணரது ஆய்வு, ஆழ்ந்து செல்கின்றது. இதற்கு முக்கிய சாதனம், ஞான விசாரமாகும். தான் யார் என்ற விசாரத்தினைத் தொடர்ந்து ஒருவன் தனது ஸ்வருபத்தை அறிய வேண்டும்.

## நான் யார்?

நம்மை நாம் அறிய வேண்டும். நான், இவ் வுடல் ஆகேன். நான் இவ்வுடலை இயக்குகிறேன். இவ்வுடலின்கண் விளங்கும் அறிவுக் கருவிகளைப் பயன்படுத்துகிறேன். செய் கருவிகளைக் கொண்டு இயக்கம் கொள்கிறேன். ஆதலால் நான் இவ்வுடலன்று, அறியும் கருவிகளுமல்ல; செய்கருவிகளுமல்ல. இவ் வுடலினுள்ளிருந்து இயங்கும் ஐவகை வாயுக்களுமல்ல. இவற்றையெல்லாம் சிந்திக்கின்ற மனமுமல்ல. மனம் முதலிய கருவிகளை இயங்குகின்றவன் நான் என்று உணர்கிறேன். உணர்கின்ற நான், உணர்வற்ற, அறியாமையாகிய நிலையாக இருத்தல் இயலாது. உபநிடதங்கள் வகுத்துள்ள முறை 'நேதி' 'நேதி' என்பதாகும். அதாவது, இதுவன்று, இதுவன்று என்று ஒன்ருென்ருக நீக்குவது இவ்வாறு முன்னே சொன்னதுபோன்று, உடலன்று, புலன்களன்று, செய்கருவிகளன்று, மனமுமன்று என்று இவற்றை நீக்கிப் பார்க்கும்போது, ஒருவன் தன்னிலையை உணர்கின்ருன். உடலும், உடலிடத்துத் தொழிற்படும் இந்திரியங்களும் இவற்றைவிட நுண்ணிய நிலையில் தொழிற்படும் மனமும், பிற உட்கருவிகளும் மனிதன் பயன்படுத்தும், புற, அக கருவிகளாகும். இக் கருவிகளையெல்லாம் கடந்து விளங்குவது ஆன்மா. யாவற்றையும் இதுவன்று என்று நீக்கிய பின் நிற்கும் தூய உணர்வே 'நான்' என்று குறிக்கப்பெறுவதாகும். இவ்வுணர்வை நாம் எவ்வாறு அறிகிருேம்? நாளும், நாம் துயில் கொள்ளும்போது இவ்வுணர்வு நமக்கு ஏற்படுகின்றது. ஆழ்ந்த உறக்கத்தினின்று விழித்தெழுகின்ற நாம் நன்கு உறங்கினேம் என்று கூறுகிருேம். உறங்கும்போது அவ்வுணர்வு இலது. விழித்தெழுந்த பின்னரே இவ்வுணர்வு ஏற்படுகிறது. இவ்வுணர்வே ஆன்மாவாகும். இவ்வுணர்வின் இயற்கை, சத், சித், ஆனந்தமாகும். இதை உள்ளது, உணர்வு ஆனந்தம் என்று குறிக்கலாம். என்றுமுள்ள நிலை ஆன்ம நிலை. இதன் இயற்கை உணர்வு அல்லது அறிவு, ஆனந்தமாகும். உண்மை, அறிவு, இன்பம் ஆகிய இவை ஆன்மாவின் இயல்புகள்

என்று குறித்தல் தவருகும். இவையே ஆன்மா முக்கூறுகள் உடையதாக நாம் உணர்கிறோம். ஆனால் மூவியல்புகளும் ஒருங்கிணைந்த நிலையே ஆன்ம நிலையாகும்.

உறக்கத்தில் அனைத்து வடிவங்களும், பெயர்களும் மறையக் காண்கின்றோம். அங்கே (உறக்கத்தில்) அறிவான்—அறிபொருள் என்ற வேற்றுமை கிடையாது; காண்பான் காட்சி என்ற இருமை இல்லை; புறம், அகம் என்று வேறுபாடு கிடையாது. ஆன்மா, தனது இயற்கை நிலையில் உணர்வாக விளங்குகின்றது. இவ்வுறக்க அனுபவத்தைக் கொண்டு, ஆன்மா தூய உணர்வு வடிவினது என்பதை நாம் அறிகின்றோம். இவ்வுறக்கத்தில் உணர்வு புற நிலைப் பட்டுப் புறப் பொருள்களை உணர்த்துதல் இல்லை. உணர்வு, தோன்றுதலும் இல்லை; மறைதலும் இல்லை. இவ் உணர்வு தன்னொளியோடு கூடி எப்போதும் நிலவும்.

ஐவகை கோசங்கள் ஆன்மாவை மறைக்கின்றன. அவை அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம்,ஆனந்த மயம் என்பன. அன்னமய கோசம் என்பது இவ்வுடலாகும் இவ்வுடல் உணவாலானது. இவ்வுடலினிடத்து விளங்கும் கூறுகள் ஐவகை பூதங்களின் தூய நிலையல்ல. அவற்றின் பல்வேறு கூட்டு நிலைகளாகும். பிராணமய கோசத்தின் வெளிப்பாடு மூச்சு ஆகும். இப் பிராணன் ஐவகைத் தொழில்களைப் புரிதலால், ஐவகைப் பெயர்களைப் பெறுகின்றன. ஐவகையாகத் தொழிற்பட்டாலும், பிராணன் என்றே பெயரைப்பெறும். ஐவகையான கர்மேந்திரியங்களும் இக் கோசத்தையே சார்வன. மனோமயம் உணர்வுக் கோசமாகும். விஞ்ஞானமயம், தன்னுணர்வுக் கோசமாகும். இதனைப் புத்தியென்றும் வழங்குவார்கள். செயல்கள் புரிவதற்கும் அச் செயல்களின் பயன்களை நுகர்வதற்கும் காரணமாக விளங்குவது புத்தியாகும். 'செய்வான்' (கர்த்தா) நுகர்வான் (போக்தா) என்றும் கூறலாம். இதுவே ஓருடலை விட்டு மற்றோருடலுக்குள் புகுவது. ஜீவான்மா என்று இதனைக் கூறலாம். அடுத்து அமைவது ஆனந்த மய கோசமாகும். இது பிரம்ம நிலையான ஆனந்தமாகாது. இது போலியான ஆனந்தம்; இது பிறப்பு இறப்புகட்குக் காரணமாகும். அறியாமை அவித்தை என்பன இக் கோசத்திற்கு உள்ள வேறு பெயர்கள்.

ஐவகை கோசங்களை மூவகை உடல்களாகவும் நாம் வேறொரு வகையில் அடக்கிக் கூறலாம். அன்னமயம் தூலசரீரமாகும். பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம் ஆகிய இம் மூன்றும் சூக்கும சரீரமாகும். ஆனந்த மயம் காரண சரீரமாகும். இவ்வகை கோசங்களை அல்லது மூவுடல்களைக் கொண்டுதான் நாம் புற உலகை விழிப்பு நிலையில் அனுபவிக்கின்றோம். கனவு நிலையில்,

தூல அல்லது பருவுடல் தொழிற்படுவதில்லை. ஆனால், சூக்கும காரண உடல்களிரண்டும் கனவு நிலையில் தொழிற்படுகின்றன. பருவுடலின் துணைகொண்டு நுகரப்பெறுவன யாவும் பருமை யானவை. கனவுலகில் நுண்ணிய அனுபவங்கள் அமைகின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் நுகரப்பெறும் பொருள்கள் பருமையானவை யுமல்ல, நுண்மையானவையுமல்ல. விழிப்பு நிலையில் அனுபவிக்கப் பெறுவன போல் பருமையுடையன அல்ல. கனவு நிலையில் அனுப விக்கப் பெறுகின்ற நுண்மையானவையுமல்ல. அறியாமை, காரண உடலால் தொடர்கின்றது. ஆதலால், நாம் கனவு நிலையினின்று விழித்தெழுகின்றோம்.

ஆதலால், ஆன்மா, ஐவகை கோசங்கட்கும் அயலானது, மூவகை உடல்கட்கும் அயலானது. இவ் ஆன்மாவின் உண்மை நிலையை அறிய நாம் 'சுழுத்தி' அல்லது ஆழ்ந்த உறக்கத்தை (பேருறக்கம்) ஆராய்ந்து பார்த்தல் நன்று. இவ்வாறு விசாரத் தால் ஆன்மாவின் உண்மை நிலையை உணர்தல் விடுதலையாகும். தியானம் என்பது, ஆன்மாவைச் சச்சிதானந்த ஸ்வரூபம் என்று தியானிப்பதாகும். தன்னை உணர்ந்த அந் நிலையே விடுதலை யாகும், முத்திப்பேருகும்.

நாம் புற உலகை அறிதற்குரிய வாயிலாக மனமே விளங்கு கிறது. அனைத்துச் செயல்கட்கும் ஆதாரமாக அமைகிறது. இம் மனத்தின் தொழிற்பாடு ஓய்ந்தால் புற உலகக் காட்சியும் ஓய்கிறது. கயிற்றினிடத்துப் பாம்பைக் காணும் வரையில் கயிறு காட்சியினில் அமையாது. இஃதேபோல் புறவுலகக் காட்சியும் நீங்கும் வரையில் கயிறு ஆன்மாவின் உண்மையான இயற்கைநிலை புலப்படாது. ஆன்மாவினிடத்து விளங்கும் தனித்ததொரு ஆற்றல் மனமாகும். அனைத்து எண்ணங்களும் நீங்கிய நிலையில் யாது எஞ்சுகின்றது என்று காரண முற்படில் சிந்தனைக்கு அந்நியமாக மனம் என ஒன்றில்லை என்பது புலனாகும். எண்ணங் களின் திரண்ட நிலையே மனமாகும். மனம் ஏதேனும் ஒரு பருப் பொருளைப் பற்றி நிற்கும். அது தனித்து நிற்காது. மனத்தினின்று தோன்றும் எண்ணங்களுள் முதன்மையானது 'நான்' என்னும் எண்ணமாகும். இவ்வெண்ணம் தோன்றிய பிறகே பிற எண்ணங்கள் தோன்றுகின்றது. தன்னிலையாகிய 'நான்' முன்னிலை யாகிய 'நீ' படர்க்கையாகிய 'அவன்' 'அவள்' 'அது' போன்றவை மும்மை நிலையாகத் தோன்றுகின்றன. முன்னிலையும், படர்க்கையும் தோன்றுவதற்கு ஆதாரம் தன்னிலையாகும். 'நான் யார்' என்ற விசாரணையின் மூலமே மனத்தின் இயக்கத்தை ஒடுக்க இயலும். நான் யார் என்ற உணர்வு ஏற்படும்போது மற்ற நினைவுகளெல்லாம் அழிகின்றன. பின்னர் தானும் அழியும். இதற்கு இரமணர் ஓர்

உவமையைத் தருகின்றார். பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானு மழியும் என்கிறார். எண்ணங்கள் எழும்போதே இவ்வெண்ணங்கள் யாருக்கு உண்டாயின ? என்று விசாரித்தால் மனம் தனது பிறப் பிடத்திற்குத் திரும்பும் ; எழுகின்ற எண்ணங்கள் அடங்கும். மனம் நுண்ணிய ஆற்றல் வாய்ந்தது. மூளை, அறியும் கருவிகளின் வாயிலாக மனம் தொழிற்படும்போது, பெயரும் வடிவமும் உடைய பொருள்கள் தோற்றமளிக்கின்றன. இதயத்தில் மனம் தங்கும் போது, பெயரும் வடிவமும் கொண்ட அனைத்தும் மறை கின்றன. புறப் பொருள்களை நோக்கிச் செல்லும் மனத்தைக் கட்டுப்படுத்தி இதயத்தில் அதனை ஊன்ற வைக்கும் சாதனை அகமுகப்படுத்துதல் 'அந்தர்முக திஷ்டி' என்று பெயர் பெறும். இக் கட்டுப்பாட்டை நீக்கி, மனம் வெளியே செல்லுமாறுல் புற நிலைப்படுதல் அல்லது 'பகிர் முக திருஷ்டி' என்று பெயர் பெறும். மனம் இதயத்தில் தங்குகின்றபோது எண்ணற்ற எண்ணங்கட்கு மூலமான 'நான்' என்பது நீங்குகிறது. 'தான்' மட்டும் விளங்கு கிறது. 'நான்' என்பது எள்ளளவும் இல்லாத இடமே ஆன்மாவின் உண்மை நிலையாகும். அதை 'மௌனம்' என்பர். இதனை அருண கிரியார் 'சும்மாவிருத்தல்' என்று கூறுகிறார்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
'சும்மா இரு சொல்அற' என்றலுமே
அம்மா ! பொருள் ஒன்றும் அறிந்திலனே'
(கந்தரனுபூதி)

'சும்மா இருத்தல்' என்பது மனத்தை ஆன்ம சொரூபத்தில் இருத்துதல். இது தூய உணர்வு ஆகும். அல்லது தூய இருப்பு ஆகும். இவ் உணர்வில் நிலைத்திருப்பதே ஞானக் காட்சியாகும். இதனை இராமலிங்க அடிகளும் 'துன்று மலவெம்மாயை அற்று, வெளிக்குள் வெளி கடந்து சும்மாஇருக்கும் சுகம்' என்று குறிக்கிறார். 'தற்போதம் ஒழிந்த இடம்' என்றும் இராமலிங்கர் கூறுகிறார். தாயுமானவர் 'மனமடங்கும் திறத்தில் கணமேனும் நான் இருந் தறியேன்' என்று கூறுவது மனம் எளிதில் அடங்காது என்பதனை நமக்கு உணர்த்துகிறது. இரமணர் மனமடங்க விசாரணையை, ஞான நெறியினையே நன்கு உணர்த்துகிறார். மனத்தை அடக்க, எண்ணங்களின் தோற்ற இடத்தை அறிய வேண்டும். பிராணன் அடங்கும் போது மனமும் அடங்கும். பிராணனுக்கும் மனத்திற் கும் பிறப்பிடம் ஒன்றே. நாளும் நாம் உறங்குகிறபோது மனமடங்கும். ஆனால், சுழுத்தி நிலையில் பிராணன் அடங்கு வதில்லை. பிராணனை மனத்தின் பருமையான தோற்றம் என்று கூறுவர். மூச்சுப்பயிற்சி (பிராணயாமம்), உருவ வழிபாடு, மந்திர

ஜெபம், உணவுநெறி போன்ற பிற சாதனங்களும் மனத்தை ஒடுக்கும். ஆனால், இவற்றால் மனம் முற்றிலும் ஒடுங்காது. இவற்றால் மனம் ஒருமை எய்தும். இதனை இரமணர் ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிறார். எப்போதும் யானையின் துதிக்கை அசைந்து கொண்டிருக்கும். அதன் துதிக்கையில் ஒரு சங்கிலியைக்கொடுத்தால் அதனைப்பற்றிக் கொண்டிருக்கும். இஃதேபோல் மனத்திற்கும் ஒரு வடிவம் அல்லது தியானப் பொருள் அமையுமானால் அதன் இயக்கம் குன்றும். எல்லா நூல்களும் ஒரு முகமாக மனத்தை அடக்க வேண்டுமென்று சொல்கின்றன. இதனை 'மனோ நிக்ரகம்' என்பர். மனோ நாசம் ஏற்பட வேண்டும் என்பது சாத்திரங்களின் முடிபானால், அந்நூல்களைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. மனத்தினை ஒடுக்க ஒருவன் ஆன்ம விசாரணையில் ஈடுபட வேண்டும். அவ் விசாரத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டும். ஒருவன் தன்னை இன்னான் என்று அறிய கண்ணாடியில் பார்த்து அறிய வேண்டுவதில்லை. 'தான்' யார் என்று அறிய, தனது உண்மை வடிவை அறிய பஞ்சகோசங்களினின்று தன்னைப் பிரித்து, நீக்கி அறிய வேண்டும். இரமணர் 'பந்தத்திலிருக்கும் தான் யாரென்று விசாரித்து, தன் யதார்த்த சொரூபத்தைத் தெரிந்து கொள்வதே முத்தி. சதாகாலமும் மனத்தை ஆத்மாவில் வைத்திருப்பதற்குத்தான் 'ஆத்மவிசாரம்' என்று பெயர்; தியானமோ தன்னை சச்சிதானந்த பிரஹ்மமாக பாவிப்பது'[2] என்று நன்கு விளக்கியுள்ளார். மேலும் இரமணர், இதனை விளக்குகிறார். குப்பை களைய வேண்டிய ஒன்று; அதனை ஆராய்வது பயனின்று. இவ்வாறே ஒருவனை மறைத்துக் கொண்டிருக்கும் தத்துவங்களனைத்தும் களையப்பட வேண்டியனவாகும். தத்துவங்கள் எத்தனை என்றோ, அவற்றின் குணங்கள் யாவை என்றோ ஆராய்வதால் பயனில்லை. ஆகவே, வீணே நூல்களின் வாயிலாகத் தத்துவ விசாரணை செய்வது ஆன்ம உணர்வைப் பெறுதற்குப் பயன் தராது என்று இரமணர் தெளிவு படுத்துகிறார்.

ஆன்மாவின் இயற்கையான வடிவம் ஆனந்தமாகும். இவ்வானந்தமும் ஆன்ம வடிவமும் வேறன்று. உள்ளது, ஆன்ம சுகமேயாகும். உலகப் பொருள்கள் எவற்றிலும் சுகம் கிடையாது. அவை நமக்குச் சுகம் தருவதாக நாம் நினைப்பது நமது அறியாமை. மனம், புறநிலைப்படும்போது துன்பத்தை அனுபவிக்க நேரிடுகின்றது. எண்ணங்கள் ஒடுங்கிய இடத்தில் ஆன்ம சுகம் ஏற்படுகிறது. மனத்தின் இயல்பை நன்குணர்ந்த ஞானிகள் தமது மனத்தைப் பிரம்மத்தை விட்டு நீங்காமல் அதனிடத்தே நிறுத்துகின்றனர். 'நான் யார்' என்னும் விசாரணையின் துணை கொண்டு இதயத்தில் ஆழ்வதுதான் மேலான சாதனையாகும் இச் சாதனை

மேலான தவமுடையார்க்கே கைவரும். மேலான தகுதி பெறுதல் என்பது பற்றுகளனைத்தும் நீங்கப் பெறுதலாகும். விவேக சூடாமணி, இதனை லோகவாஸனை, தேகவாஸனை, சாஸ்திரவாசனை என்று மூன்றாகப் பகுத்துக் கூறும். இவை முறையே உலகக் காட்சி நீங்கப் பெறுதல் என்றும், உடற்தொடர்பு நீங்கப்பெறுதல் என்றும், நூல்களிடத்துப் பற்று நீங்கப் பெறுதல் என்றும் கொள்ளலாம். இப் பற்றுகள், தொடர்புகள் நீங்கப் பக்தியினால் பரமனருளுக்கு உரியவராதல் வேண்டும். பக்திக்கு உபாஸனை தேவையாகும். இரமணர் பக்தி இருவகைப்படும் என்கிறார். அவ்வகைகளை அந்நிய பாவனை என்றும், அநந்நிய பாவனை என்றும் அவர் குறிக்கிறார். அநந்நிய பக்தியில் இறைவன் இதயத்தில் வாழ்பவனாகக் கொள்ளப் பெறுகிறான். இதயத்தில் வாழ்வதால் இறைவனுக்குக் 'குஹேசன்' என்று பெயர். இரமணர் இதயத்தின் இருப்பிடத்தைத் தமது உள்ளது நாற்பது அனுபந்தம் 17, 18 செய்யுட்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இருமுலை நடுமார் படிவயிறிதன்மே
லிருமுப் பொருளுள நிறம்பல விவற்று
ளொருபொருளாம் பலரும் பெனவுள்ளே
யிருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்

அதன்முக மிகலுள தகமுள சிறுதுளை
யதனிலாசாதி யொடமர்ந்துள திருந்தும
மதனையாசி ரித்துள வகிலமா நாடிக
ளதுவளி மனதொளிய வற்றின திருப்பிடம்

இவ்விரு பாடல்களின் திரண்டு கருத்து : 'மார்பில் இருமுலைகளின் நடுவுக்கடியிள்ள வயிற்றுக்கு மேல் பல நிறங்களுள்ள ஆறு பொருள்கள் உள்ளன; இவற்றுள் ஆம்பலின் அரும்பு போல் (நடுவுக்கு) வலதுபுறம் இரண்டு விரல்களுக்கு அப்பால், உள்ளே இருப்பது இதயம். அதன் வாய் மூடியிருக்கிறது; அதன் உள் வெளியில் ஆசை முதல் வாசனைகளடங்கின கனமான இருள் இருக்கும்; அதனிடம் எல்லாப் பெரிய நாடிகளும் சேர்ந்திருக்கும்; பிராணவாயு மனம் (அறிவின்) ஒளி என்னுமவற்றின் இருப்பிடம் அது. இப் பாடல்களினால் இதயம் இடது புறத்தில் இல்லை என்று இரமணர் விளக்குகிறார். இடதுபுறத்திலுள்ளது பௌதிக இதயம். வலது புறத்திலுள்ளது ஆன்மீக இதயம். இதற்கிடம் குறிப்பது தியானத்தின் பொருட்டாகும். இதயமே ஆன்மீகத்தின் இருப்பிடம். இது ஆம்பலின் அரும்புபோல் உள்ளது. இது கீழ் நோக்கி இருக்கின்றது. இதனுள் இருள் அடர்ந்திருக்கிறது. இதுவே உடலுலகத் தோற்றங்களுக்குப் பிறப்பிடம். பிராணன், மனம்,

அறிவு இவற்றின் இருப்பிடம் இந்த இதயம் என்று சொல்லப் பெறுகிறது. இதனிடத்து விளங்கும் ஒளியையே குஹேசன் என்று கொண்டு உபாசிக்க வேண்டும் என்று இதற்கு அடுத்த பாடல் கூறுகிறது.

## அறிவும் அறியாமையும்

உலக வழக்கில் நாம் ஞானம் என்று கூறுவதெல்லாம் உலகப் பொருள்களைப் பற்றியதாகும். இதனை விஷய ஞானம் என்பர். இது உண்மையில் ஞானமாகாது. ஆன்ம ஞானமே ஞானம். பொருள்களைப் பற்றிய அறிவு, அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. உபநிடதங்கள் பரவித்தை என்றும் அபரவித்தை என்றும் இரண்டாகப் பகுத்துக் கூறுகின்றது. பரவித்தை என்பது, ஆன்ம ஞானமாகும். இது மேலானதாகும். அபர வித்தை என்பது உலகப் பொருள்களைப் பற்றிய விஷய ஞானமாகும். அவித்தை அல்லது அறியாமை என்பது உள்பொருளை மறைக்கின்றது. உண்மையல்லாத ஒன்றை இருப்பதாக நமக்கு உணர்த்துகின்றது. இவ்விரு தொழில்களையும் ஆவரணம், விக்ஷேபம் என்று கூறுவர். ஆவரணம் என்றால் மறைத்தல் என்று பொருள், விக்ஷேபம் என்றால் திரிபுரக் காட்சிக்குக் காரணமாதல் என்று பொருள்படும். அறிவும், அறியாமையும் யாருக்கு? என்று தொடங்கி தொடர்ந்து விசாரித்தால் ஆன்மாவைப் பற்றி அறியலாம். இவ்வாறு அறிவதே அறிவு அல்லது ஞானமாகும். அறிபவன், அறியப்படும் பொருள், அறிவு என்னும் மூன்றையும் திரிபுடி என்பர். இவற்றுள் தான் அறிவதாகவும், அறியாததாகவும், ஒருவன் கருதுகிறான். இது ஜீவனின் இயல்பு. அறிவு, அறியாமை என்ற இருமை. அகந்தை 'நான்' என்னும் விருத்தியை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. அறிவையும் அறியாமையையும் அவற்றின் ஆதாரமான உண்மையான உணர்விலிருந்து அறியும் போது அது தூய உணர்வாகிறது. அதுவே ஆன்மாவாகும். ஆங்கு அறிவு அறியாமை என்ற இருமையில்லை. இதனை 'பிரக்ஞானம் பிரம்மம்' என்று உபநிடதம் கூறுகின்றது. ஞானியின் நிலையானது அத்துவிதமானது, ஞானமென்றும் முக்தியென்றும் மௌனம் என்றும் நிஷ்டையென்றும் பலவாறாகக் கூறப்பெறுகின்றது. இந்நிலை திரிபுடிகளும் தொந்தங்களும் அற்ற கேவலஸ்திதி என்றுங் கூறுவர்.

ஆன்மாவைத் துரியம் என்றும் துரியாத்தம் என்றும் சொல்லப் பெறுதற்குரிய காரணம் யாது? என்ற கேள்விக்கு இரமணர் பதிலிறுக்கிறார். துரியம் என்பது 'நான்காவது' என்று பொருள்படும். இதனைச் சதுர்த்தம் என்றுங் கூறுவர். விழிப்பு, கனவு,

ஆழ்ந்த உறக்கம் என்ற மூவகை நிலைகளில் உழல்வது, ஆன்மா அல்ல. இந் நிலைகட்கு உட்படுவது ஜீவன். இந் நிலைகளால் வேறுபாடு அடையாமல், எப்போதும் தான் யாவற்றையும் காணும் நிலையில், சாட்சியாக விளங்குவதே ஆன்மாவாகும். இந் நிலையில் ஆன்மா விளங்கும்போது ஏனைய மூன்று நிலைகளும் இல்லா தொழிந்து போகும். இந் நிலைகளால் ஏற்படும் தொடர்புகளும் இல்லையாகும். ஆதலால் இந் நிலையை துரியாத்தம் என்றும் கூறுவர்.

## பக்தி : ஞானம்

ஒருவன் தனது முக்கரணங்களாகிய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் தூய நிலையில் வைத்துக் கொண்டு இறைவனை தனது எஜமானனாகவும் தன்னை அடிமையாகவும் கருதிச் செயற் படுதலாகும். தன்னுடைய செயல்களாக எவற்றையும் கருதாது எல்லாச் செயல்களும் தனது தலைவனது செயல்களே என்ற உண் மையை உணர்ந்து தன்செயலற்று, அகங்கார மமகாரம் என்பன வற்றினின்று முற்றிலும் நீங்கி, இறைபணி நிற்றல் பக்தியாகும் என்று இரமணர் உபதேச மஞ்சரியில் அருளுகின்றார்.

ஞானம் என்பது, ஒருவன் தனது உண்மை நிலையை அறி தலாகும். தான் என்பது ஈஸ்வரனையன்றி வேறாகவில்லை என்ற உண்மையை உணர்தல் ஆகும். இங்கேயும் அகங்காரம் முற்றும் ஒழிதல் வேண்டும் என்பதை இரமணர் வற்புறுத்தியுள்ளார்.

தற்போதம் என்பது 'நான்'. 'நான்' என்பது அகங்கார வடிவு கொள்ளும் ஜீவனே ஆகும். ஆன்மா 'சித்' அல்லது உணர்வு மய மானது. அதற்கு நானென்னும் எண்ணமில்லை, ஜடமாகிய தேகத் திற்கும் நானென்னும் உணர்வில்லை. இவ்விரண்டுக்கும் இடையே விளங்கும் ஜீவனே எல்லாவித உணர்வுகட்கும் காரணமாகும் ஆதலால் தற்போதம் ஒழிந்தால் உள்ளது உள்ளபடியே விளங்கும். உள்ளதை உள்ளபடி உள்ளுணர்வினாலே உணர்ந்த அந் நிலையே மோட்சம் என்பதாகும். இவ்வாறு ஒருவன் தனது உண்மை நிலையை அறிந்து தானாயிருத்தலையே 'பந்த நிவிருத்தி'யென்றும் 'கிரந்தி நாசம்' என்றும் கூறுவர்.

## மாயை : உள்பொருள்

ஒரு சமயம் சீடர் ஒருவர் பகவான் இரமணரை நோக்கி அவர் மாயையும் உள்பொருளும் ஒன்று என்று கூறுவது எவ்வாறு பொருந் தும் என்று கேட்கிறார். அப்போது அவர் கூறியது: 'சங்கரர் மாயைப் பற்றிக் கூறியதை மக்கள் புரிந்து கொள்ளாமல் அவரைச்

சாடுகின்றனர். அவர் (1) பிரம்மமே உள்ளது (2) பிரபஞ்சம் உண்மை அல்லாதது (3) பிரம்மம் சீவனுக (ஆன்மாவாக) விளங்கு கிறது என மூன்று உண்மைகளைக் கூறுகிருர். சங்கரர் இரண் டாவது கூறியதோடு நிற்கவில்லை. அவர் மூன்ருவதாகக்கூறியது முதலிரண்டு வாக்கியங்களையும் விளக்குகிறது. பிரபஞ்சத்தை ஆன்மாவாகக் காணும்போது அது உண்மை. அப் பிரபஞ்சத்தை ஆன்மாவிற்கு அயலாகக் காணும் போது அது உண்மையில் லாதது. ஆதலால் மாயையும் உள்பொருளும் ஒன்றே' என்று விடையிறுத்தார்.

மேலும், பகவான் ஆன்மாவை அறிதலும் ஆன்மாவாக இருத் தலும் ஒன்றே என்றும் கூறினுர் (Knowing the self is Being the self). இங்கு இருத்தல் (Being) என்பது ஒருவனின் இருப்பு அல்லது நிலைத்தல் என்று பொருள்படும். ஆன்மாவாக நாம் எப்போதும் இருக்கிறோம். உள்பொருள் அல்லது உள்ளது என்றும் உள்ள தாகும் தோற்றம் ஈறின்றி என்றும் விளங்குவது. வடிவம், மாற் றங்கள், ஆற்றல்கள், சடம், சடம்மல்லாதன அனைத்திற்கும் ஆதார மாய் விளங்குவது.

## நான் என்ற உணர்ச்சியும் ஆன்மாவும்

ஒருசமயம் தியோசாபிகல் சங்கத்தின் தலைவரது (ஜீனராஜ தாஸர்) மனைவி 'நான் என்னும் உணர்வை' நன்கு பகுத்து ஆராய விரும்பினுர், பகவானை நோக்கி, 'நான்' என்ற உணர்விற்கும், ஆன்மாவிற்கும் உள்ள வேறுபாட்டைத் தாம்அறிய விரும்புவதாகக் கூறினுர். அதற்குப் பகவான் தந்த பதில்: 'வருதலும் போதலும் தோன்றுதலும் மறைதலும், பிறத்தலும் இறத்தலும் உடையது 'நான்'என்னும் உணர்வு (EGO). என்றும் நிலைத்து மாற்றம் கொள் ளாது, குணங்களற்ற நிலையில் இருப்பது ஆன்மா என்று (SELF) பதில் கூறினுர். (பக். 53 குரு இரமணு).

நான் என்னும் உணர்வு திரிபுக் காட்சி என்ருல், யார் இந்தத் திரிபுக் காட்சியினின்று நீங்குகிருர்கள் என்று மற்றொரு அன்பர் கேட்டார். அதற்குப் பகவான் கூறியது: 'நான் என்பதே திரிபுக் காட்சியை நீக்குகிறது; நீக்கியபின் நான் ஆக நிற்கிறது. இது முரணுரைபோல் தோன்றும். ஞானிக்கு இம் முரண்பாடு தோன்று வதில்லை. பக்தனைக் கருதுவோம். அவன் இறைவனை நோக்கிப் பிரார்த்தித்து அவனுடன் ஒன்றிவிட விரும்புகிருன். அவன் சரண் புகுகிருன். சரண் புகுந்தபின் எஞ்சுவது என்றுமுள்ள 'நான்' என் பதாகும். இந்த 'நான்' பரம்பொருள் என்றும், பரமாத்மா

என்றும் வழங்கப் பெறுகிறது. முதலில் பிரார்த்தித்த 'நான் என்னவாயிற்று? அது உண்மையல்லாதது. ஆதலால் அது மறைந்தது' என்றூர்.4

## குரு

சற்குரு என்று கருதத்தக்கவர் எப்போதும் தமது சொரூபத்தில் நிலைத்து நிற்பவர். அபேத நோக்குடையவர். எப்போதும், எவ்விடத்தும், எக் காரணங்கொண்டும் கலங்காத மனோதிடமுடையவர்.5

பகவான் மற்றொரு சமயம் குருவென்பது மக்கள் நாடும் குறிக்கோளாகும் என்று விளக்கினூர். மக்கள் தமது ஆன்மாவின் உண்மை நிலையை அறிய விரும்புகின்றனர். ஆன்மா மானிட உருவில் வந்துஅவன் அறியாமையை அகற்றுகிறூர் என்றும், இது, மானைக் காட்டி மானைப் பிடித்தல் போல்வதாகும். குரு மானிட உருவில் வந்து மனிதனின் தேகான்ம உணர்ச்சியை நீக்கியருள்கிறூன்.

தத்தாத்ரேயருக்கு இருபத்து நான்கு குருமார்கள் இருந்தனர் என்று பகவான் கூறி அவர்கள் ஐம்பூதம் முதலியனவாகும் என்றூர். உலகில் உள்ள பொருள்கள் யாவும் அவருக்குக் குருவாக அமைந்தன. உபநிடதங்கள் குருவின் இன்றியமையாமையை விளக்குகின்றன. ஆதலால், குரு தேவையே என்றூர் இரமணர். குரு என்பவர் இறைவனே அல்லது பரமாத்மனே ஆவன். தொடக்கத்தில் மனிதன் தனது விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றூன். பின்னர் தனது உலகியல் விருப்பங்கட்காக அவன் முறையிடுவதில்லை. இறைவனுக்காகவே இறையுணர்வு கைவரப்பெற வேண்டும் என்றே முறையிடுகிறூன். இந் நிலையில் இறைவன் ஏதேனும் ஒரு வடிவில் தோன்றி வழிகாட்டுகிறூன். இவ்வடிவு குறித்ததொன்று என்று கூற இயலாது. பிரார்த்தனையின் தன்மைக்கேற்பவும், பிரார்த்தனையின் தேவைகட்கு ஏற்பவும் குருவாக வெளிப்படுதல் அமையும்.

## சமாதி

யோக நெறியில் பல்வகை சமாதி நிலைகள் பேசப் பெறுகின்றன. ஆனூல், பகவான் சகச சமாதியையே குறித்தார். இந் நிலையில் மனம் அமைதியாக விளங்கும். எச் செயல் புரிந்தாலும் சலனமற்று அமைதியுடன் விளங்கும். உள்ளிருந்து ஏதோ இயக்குவிப்பதாக உணர்வு தோன்றும். எவ்விதத் தொல்லை

களோ, கவலைகளோ இருக்காது. ஏனெனில் உடைமைகள் ஏதுமில. ஏதோ ஆற்றல் உள்ளிருந்து இயக்குவதாக உணர்வு தோன்றும். அவ்வாற்றலோடு ஒன்றிய உணர்வு இருத்தலால் அவ் ஆற்றல் யாவற்றையும் செய்வதாகத் தோன்றும்.

உள்பொருளைப் பற்றி நிற்றல் சமாதியாகும்.

இவ்வுள் பொருளைப் பயிற்சியுடன் பற்றி நிற்றல் சவிகற்ப சமாதியாகும்.

அறியாமையில் அழுந்தி, புற உலகை அறியாதிருத்தல் உறக்கமாகும்.

முதன்மையான தூய இயற்கையான நிலையில், முயற்சி இன்றி இருத்தல் சகச நிருவிகற்ப சமாதியாகும்.

## சாதனங்கள்

விவேக சூடாமணி, பிரம்ம விசாரம் செய்கின்றவனுக்கு நால் வகைத் தகுதிகள் இருக்க வேண்டும் என்று வரையறை செய்கின்றது. அவை:

(1) நித்தியாநித்திய வஸ்து விவேகம்.

பிரம்மமே உள்பொருள்; சத்தியம் உலகு மித்தை. இதுவே நித்திய வஸ்துவை அநித்திய வஸ்துக்களினின்று பிரித்து உணர்தல்.

(2) இஹாமுதார்த்த பலபோக விராகம்.

உடல் முதலாக உலகிலுள்ள பொருள்களனைத்தும் நிலையற்றன என்று உணர்தல். அப் பொருள்களினிடத்து விளங்கும் குறைகளை நேராக அறிதல்; அல்லது சமய நூல்களின் வாயிலாக அறிந்து வைராக்கியம் கொள்ளுதல்.

(3) சமாதிஷட்க சம்பத்தி

உலகப் பொருள்களிடத்து உவர்ப்பு கொண்டு மனத்தைத் தனது இலட்சியத்தில் இருத்துதல் சமம்.

அறி, செய்கருவிகளைப் புறத்தே செல்லவொட்டாது, அதனதன் இருப்பிலேயே இருக்கச் செய்தல் தமம்.

மனம் தனது இலட்சியத்தில் ஊன்றி, பிற எவற்றையும் நினையாமல் கருமங்களை விட்டுவிடல் உபரதி.

துன்பங்கள் தொடர்ந்து வரினும் அவற்றைத் தடை செய்யாமலும், இன்பங்கட்காக ஏங்காமலும் தைரியமாகச் சகித்துக் கொள்ளுதல் திதிக்ஷை.

வேதாந்த நூல்கள் நுதலும் உண்மைகளும் குருவின் வாக்கியமும் சத்தியம் எனக்கொண்டு பிரம்ம உணர்விற்கு உகந்த முயற்சிகளில் கண்ணுங் கருத்துமாய் இருத்தல் சிரத்தை.

சித்தத்தைப் பரிசுத்தப் பிரம்மத்திடத்தில் நிலையாக இருத்துதல் சமாதானம்.

(4) ஞானத்தால் அனைத்துப் பந்தங்களையும் தொலைப்பதற்குரிய இச்சையே முமுக்ஷுத்வம்.

இரமணர் மேற்குறித்தவற்றை ஏற்றார். என்றாலும் அவற்றுள் 'நான் யார்' என்ற ஆன்ம விசாரணைக்கு முதலிடம் தந்தார். புற உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்தல் வைராக்கியத்திற்குத் துணைசெய்யும். வைராக்கியம் மேலோங்குமானால் சாதகனிடத்து, பொருள் புகழ் சுகம் ஆகியவற்றினிடத்து விருப்பம் தோன்றாது. நான் என்று தோன்றும் நினைவை அதன் பிறப்பிடமாகிய இதயத்தில் காணுதல் முடிபான குறிக்கோள் ஆகும் என்பார் இரமணர்.

இத்தகைய ஆன்ம விசாரணையை மேற்கொள்ள இயலாதவன் பக்தியை மேற்கொளல் வேண்டும். பக்தி, இறைவனிடம் அல்லது குருவினிடம் அல்லது மக்கட் சமுதாயம் அல்லது அறச் சட்டங்கள் அல்லது அழகுக் குறிக்கோள் ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றனிடம் செலுத்தப் பெறலாம். இப் பக்தி மேலிடும் போது பிற பற்றுகள் நீங்கும். பக்தி மனவொருமைக்கு வழி வகுக்கும்.

ஆன்ம விசாரணையோ அல்லது பக்தியோ ஒருவன் மேற்கொள்ள இயலாவிடில் அவன் பிராணயாமத்தின்மூலம் மனம் அமைதியை நாடலாம். தொடர்ந்து, பயிற்சியால் மனத்தை ஒடுக்கலாம். முன்னர் குறித்தது போல மூச்சுக்கட்டுப்பாடு உள்ளவரையில் மனம் அடங்கும். மேற்குறித்தனவற்றுள் முதலிரண்டும் ஒருவன் ஏற்காவிடில் மூச்சுக்கட்டுப்பாட்டையும் வயது காரணமாக, உடல் நலனின்மை காரணமாக ஒருவன் மேற்கொள்ளாவிடின் கரும மார்க்கத்தை ஏற்கலாம். தற்செயல்களில் ஈடுபட்டுச் சமுதாய நலத்திற்காகத் தொண்டு புரிதல் இந் நெறியாகும். இந் நெறியால் அவனது அகந்தை படிப்படியே தேய்கிறது. இந் நெறியில் பயிற்சி பெற்றவுடன் முதலில் குறித்த நெறிகளுள் எவற்றேனும் ஒன்றைப் பின்பற்றலாம். கரும நெறி நிற்கும்போதே அகவுணர்வு தூண்டப்பெறலாம். அவன் ஆன்ம உணர்வைப் பெறலாம்.

இவ்வாறு பகவான் பக்தர்களின் தரத்திற்கு ஏற்ப நெறிகளை வகுத்துத் தந்தார். அவர் ஆன்ம விசாரணைக்கே முதலிடம்

தந்தார்.7 சாத்துவிக உணவை அளவறிந்து உண்ணுதலையே உணவு நெறியாக இரமணர் நமக்கு வகுத்துத் தந்துள்ளார். உண்ணு நோன்பு உடலை வாட்டுதலாகும். மனத்தை ஓயவைக்கும் நெறியே, நோன்பே சிறந்தது என்பது அவர் கருத்தாகும். மிதா காரம், மித நித்திரை, மித வார்த்தைகள் இவையே நியமங்கள்.

## மறு பிறப்பு

பகவானைச் சில அன்பர்கள் மறு பிறப்புண்மையைப் பற்றிக் கேட்டார்கள். பகவான் அவர்களை நோக்கிப் 'பிறப்பு' யாது என்று அவர்கள் அறிந்துள்ளனரா என்று கேட்டார்கள். ஒருவர் அத்தரு ணத்தில் தாம் இருப்பதை அறிவதாகவும், அவர் வருங்காலத்தில் தாம் இருப்பது பற்றி அறிய விரும்புவதாகவும் பதில் சொன்னார். சென்ற காலம் நிகழ்காலம் வருங்காலம் என்ற மூன்று தொடர் களை பகவான் பின்னர் விளக்கினர். இந் நாள், நேற்றைய நிலையின் விளைவு அல்லது கழிந்த காலத்தின் விளைவு நிகழ்காலம். வருங்காலம் நிகழ்காலத்தின் விளைவாகும். மேலும் பகவான் கூறியது: கழிந்த காலமென்றோ, வருங்காலமென்றோ வேறுபாடு இல்லை. 'நேற்று' என்பது நுகரும்போது இருந்தது. 'நாளை' என்பது நுகர இருப்பது. அனுபவம் என்பது நிகழ்காலத்திலேயே நிகழ்வது. அனுபவத்திற்கு அயலாக ஏதும் இல்லை. நிகழ் காலமும் கற்பனையின் விளைவாகும். கால உணர்வு மனத்தின் பாற்பட்டது. இடவுணர்வும் அவ்வாறே அமைவது. ஆதலால், பிறப்பு மறுபிறப்பு ஆகியவை காலம் இடத்தில் நிகழ்வன. ஆதலால், கற்பனையின் விளைவுகளே.8

## கருமம்

ஓர் அன்பர், பகவானை நோக்கி உலகில் துன்பம், தீமை நிறைந்திருக்கக் காரணம் யாது? தீயோர் நல்லவர்களைவிட வெற்றி பெறுவதற்குக் காரணம் என்ன? கருமமே இவற்றிற் கெல்லாம் காரணமென்னின் யார் அந்தக் கருமத்தைப் படைத்தது? ஏன் வெவ்வேறு நபர்கட்கு வெவ்வேறு வகையான கருமம்? என்பன போன்ற கேள்விகளை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டார். பகவான் சுருக்கமாகவும் தெளிவாகவும் விடையிறுத் தார்: 'கருமத்தைக் குறித்து யாருடைய கருமம்?' என்று பகவான் கேட்டார். இருபடைப்புகள் உள. ஒன்று இறைவ னுடையது; மற்றொன்று மனிதனுடையது. இறைவனது படைப்பு ஒரே வகையானது. கருமங்களினின்று நீங்கியது. மனிதனின் படைப்பு பலவகைப்பட்டது. பல வகைப்பட்ட கருமங்கள் காரண மாகும். மனிதன் தனது படைப்பை நீக்குவானானல், பல்வகைப்

பட்ட மனிதர்கள் இருக்கமாட்டார்கள். பல்வகைப்பட்ட கருமங் களும் இரா. துன்பம் நீங்கும். மனித படைப்பை நீக்குகிறவன் விண்ணுலகையே காண்கிருன். ஏனையோர் நரகத்தினையே காண்கின்றனர். அறிவு படைத்த ஒவ்வொருவனும் தீய செயல்கள் செய்தோனையே சேர்வதை அறிகின்ருன். ஒன்று விரைவில் அவனைச் சேரலாம். அல்லது காலந்தாழ்ந்துச் சேரலாம். ஏன் இது அவ்வாறு நிகழ்தல் வேண்டும்? ஆன்மா யாவருக்கும் ஒன்றே; ஒருபடித்தாய் விளங்குகிறது. மற்றவர்களைக் காணும் போது நீ அவர்கள் வடிவில் காண்கிருய். அயலவனை நீ உன்னை நேசிப்பதுபோல் நேசிப்பாயாக. நீ அவனை ஏன் நேசிக்க வேண்டும். ஏனெனில், அவன் நீயேயாவாய்.''9

கன்மம் மூவகைப்படும். அவை, சஞ்சிதம், பிராரப்தம் ஆகாமியம் என்பன. சஞ்சிதம் நமக்குத் தற்போது பயன்தராது எஞ்சியிருப்பது; பிறவிகள்தோறும் நமக்குச் சேர்ந்துவரும் கன்மத் தொகுதி. பிராரப்தம் தற்போது பயன் தருவது. இன்று நாம் அனுபவித்து வருவனவற்றிற்குக் காரணம், பிராரப்தம் ஆகும். ஆகாமியம் வருகின்ற காலத்திலோ, வருகின்ற பிறவிகளிலோ பயன்தர இருப்பது. இவற்றுள் பிராரப்தம் குறித்துக் கேள்வியொன்று எழுப்பி விடையைத் தந்துள்ளனர். பிராரப்தத்தின்படியே யாவும் நிகழும் எனின், தியானத்திற்கு இடையூருக நிகழும் தடைகளைக் கடப்பது எவ்வாறு? என்ற கேள்வி கேட்கப் பெற்றது. அதற்குப் பகவான் தமது உபதேச மஞ்சரியில், 'பிராரப்தம் என்பது வெளிமுகத்திற்கே யொழிய உள்முகத்திற்கன்று. உள்ளபடி தன்னைத் தேடுவான் எவ்விதத் தடைகளுக்கு மஞ்சான். தடையென்ற நினைவே பெருந் தடையாம்' என்ற விடையைத் தந்துள்ளார். பிறிதோரிடத்தில் 'நானற்ற விடத்துப் பிராரப்தம் இன்று' என்றும் விளக்கியுள்ளார்.

பகவான் இரமணர் ஐம்பது ஆண்டுகள் நம்முடன் வாழ்ந்து உயர்ந்த உண்மைகளைப் போதித்தார். இரமணுஸ்ரமத்தில் தங்கிய அன்பர்கள் அவ்வப்பொழுது கேட்டுத் தெளிந்தனவும், அவ்வையங்களை ஒட்டி எழுந்த விளக்கங்களும் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. பகவான் தம்மை ஈர்த்தத் திருவருணைப் பதியை நினைந்து ஆங்கு ஒளிவடிவாய் உயிர்களை உய்விக்கும் பரம்பொருளைத் தியானித்துப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவர் செய்யுள் வடிவிலே பகவத் கீதாசாரம், தக்ஷிணமூர்த்தி தோத்திரம், அத்தாமலகம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். உரைநடையிலே விவேக சூடாமணி, திருக்குதிருசிய விவேகம் ஆகிய நூல்களையும் தமிழிலே பெயர்த்து நாம் உய்யும்வகை அருளியுள்ளார். இரமணர் அவ்வப்பொழுது அருளிய மொழிகளைத் தொகுத்தும் வெளியிட்டுள்ளனர்.

அயல்நாட்டு அன்பர் பலர் பகவான் இரமணரது சீடர்களாவர். அவர்களுள் முதலில் சீடரானவர் 'ஹம்ப்ரிஸ்' (HUMPHRYS) என்பவர். பால் பிரண்டன் என்பவர் தமது நூல்களுள் பகவானைப் பற்றிய விளக்கங்கள் தந்துள்ளார். ஆர்தர் ஆஸ்பார்ன் (ARTHUR OSBORN) என்பவர் பகவானின் போதனைகளைத் திரட்டி, வகைப்படுத்தித் தந்துள்ளார். இவரது சேவை பெரியதாகும். என்றென்றும் நிலைத்திருக்கக்கூடியதாகும். ஆங்கிலம் மட்டும் அறிவோர்க்கு அவரது நூல்கள் பெரு விருந்தாகும். 'குரு இரமணர்' என்ற தலைப்பில் 'கோஹன்' (S. S. COHEN) எழுதிய நூலும் பகவானது உபதேசங்களைத் திறம்பட திரட்டப் பெற்றதாகும். அண்மைக்காலம் வரையில் அயல் நாட்டவர் இரமணாஸ்ரமத்தில் தங்கியிருந்தனர்.

பகவான் அருளிய நூல்களுள் 'உள்ளது நாற்பது' என்னும் சிறு நூலையும் அந் நூலுக்கு அனுபந்தமாக அமைந்த நாற்பது பாடல்களையும் அடிப்படையாகக் கொண்டு தத்துவப் பேராசிரியர் டாக்டர் மகாதேவன் (Ramana Maharshi and His Philosophy of EXISTENCE) என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். (இரமண மகரிஷியும் அவரது உள்ளது பற்றிய தத்துவ விளக்கமும்) இந்நூல் தத்துவம் பயில்வார் அனைவரும் போற்றிப் புகழும் ஒன்றாகும். இரமணரது போதனைகளைத் திரட்டி உள்ளது நாற்பதென்னும் நூலிற்கு விளக்கமாக இந்நூலை எழுதியுள்ளார். இரமணரது தத்துவத்தை விளக்கி இன்றும் அரிய கட்டுரைகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

தேக வாசனை முற்றிலும் நீங்கி ஆன்ம உணர்விலேயே நின்று அத்துவித இன்பம் இடையறாது நுகர்ந்த பகவான் நமக்குச் சிறந்ததொரு நெறியினை வகுத்துள்ளார். அதுவே 'ஆன்ம விசாரணை' அல்லது 'நான் யார்?' என்று விசாரித்தல். அண்மைக் காலத்தில் பகவான் இரமணருக்கு முன்பும் இத்தகைய ஞான நெறியினை நமக்கு வகுத்தவரிலர். பின்னும் இன்றுவரை இலர் எனத் துணிந்து கூறலாம்.

## மேற்கோள் நூல்கள்

(1) டாக்டர் மகாதேவன் எழுதிய நூலாகிய ''உள்ளது என்பதன் தத்துவம்' என்ற நூலில் அமைந்துள்ள வாழ்க்கைக் குறிப்பு நிரலையே பின்பற்றி எழுதப் பெற்றது.

(2) ஸ்ரீரமண நூற்றிரட்டு பக். 195. ஸ்ரீரமணாஸ்ரமம்—திருவண்ணாமலை.

(3) ,, பக். 229 ,, ,,

(4) குரு இரமணர் — கோஹன் பக். 55

(5) ஸ்ரீரமண நூற்றிரட்டு — பக். 227

(6) குரு இரமணர் பக். 183

(7) உபதேசங்கள்—ஆஸ்பார்ன்

(8) குரு இரமணர் பக். 144

(9) ,, பக். 49

இப் புத்தகத்தில் மேற்காணப்படும் நூல்களினின்று எடுத்தாளப்படும் பகுதிகளாவன :

(1) பக்கம் 226—வரி 37 (நின்றூர்)[1]
(3) பக்கம் 235—வரி 17 (மஞ்சரியில்)[3]
(6) பக்கம் 238—வரி 11 (சமாதியாகும்)[6]

மற்றவை உரிய இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

# 8. அரவிந்தர்

## (1872—1950)

அரவிந்தர் மேற்கு வங்கத்தில் செல்வாக்கு மிகுந்த குடும்பத்தில் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி 1872-ல் பிறந்தார். இவர்தம் தந்தையார் கிருஷ்ணதன் கோஸ். இவர் சிறந்த மருத்துவராக விளங்கினார். மேலை நாட்டுக் கல்வி, நாகரிகம் ஆகியவற்றில் தோய்ந்திருந்தார். பிரம்ம சமாஜத்தின ரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இந்தியக் கல்வி முறையில் நம்பிக்கை இல்லாதவராக விளங்கினார். ஆதலால், தமது மக்களை ஐரோப்பியர் நடத்திய பள்ளிகளில் பயிற்றுவித்துப் பின்னர் இங்கிலாந்திற்கு அனுப்பினார்.

அரவிந்தர் டார்ஜிலிங் என்ற ஊரில் தமது படிப்பைத் தொடங்கினார். ஏழாவது ஆண்டில் இங்கிலாந்து சென்றார். சமயத் துறையில் பணிபுரிந்த 'ட்ருவட்' குடும்பத்தினரோடு தங்கிக் கல்வி பயின்றார். இவர் ட்ருவட் குடும்பத்தில் தங்கியிருந்தபோது விவிலிய நூலை நன்கு பயின்றார். ஷெல்லி கீட்ஸ் ஆகியோரது ஆங்கிலக் கவிதைகளில் நல்ல தேர்ச்சி பெற்றார். பின்னர் ட்ருவட் குடும்பத்தினர் அயல்நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது. இதனால் அரவிந்தர் துறவி பால் பள்ளி-இலண்டனில் படிக்கலானார். இலத்தீன் கிரேக்கம் ஆகிய மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்று அம் மொழிகளில் கவிதை எழுதுகின்ற அளவிற்குத் திறமை பெற்றார். இம் மொழிகளோடு, ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பானிஷ் ஆகிய ஐரோப்பிய மொழிகளிலும் பெரும் புலமை எய்தினார். பள்ளியில் பயிலுங்காலத்தில் பல பரிசுகளைப் பெற்றார். அரசர் கல்லூரி–கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சிறந்த பரிசு பெற்றமை காரணமாக இலவசக் கல்வி பயின்றார். இங்கிலாந்தில் தங்கிய காலத்தில் அவர் தாம் பிற்கால வாழ்வில் அரிய சாதனைகள் புரிவதற்கு ஏற்றகல்வி பெற்றார். இக் காலம் ஆயத்தமாக அவருக்கு அமைந்தது. ஐரோப்பிய கலாசாரம், கலைத்துறை ஆகியவற்றைச் சிறப்பாகப் பயின்று அவர் அவற்றைத் தமதாக்கிக் கொண்டார். ஐ.சி.எஸ். தேர்வில் இவர் வெற்றிபெறவில்லை. அரவிந்தருக்கு அகவை 21 ஆகும்போது அவர் இந்தியா திரும்பினார் 1893–1906 ஆகிய ஆண்டுகளில் பரோடா மாநிலத்தில் பணி

புரிந்தார். இவர் ஆசிரியப் பணியிலும், நிருவாகத் துறையிலும் பரோடாவில் ஈடுபட்டார். முதல் நிலைக் கல்லூரி ஒன்றில் துணைத் தலைவராகப் பணி ஏற்றிருந்தார். பரோடாவில் அரவிந்தர் தங்கியிருந்தபோது சமஸ்க்ருதம், மராத்தி, குஜராத்தி, பெங்காலி ஆகிய மொழிகளில் நல்ல புலமை பெற்றார். சமஸ்க்ருதக் கல்வியின் வாயிலாக இந்தியப் பெரு நூல்களாகிய வேதம், உபநிடதம், கீதை ஆகியவற்றை ஊன்றிப் பயிலும் வாய்ப்பு அவருக்கு அமைந்தது. அரவிந்தரது அன்னையின் முன்னோருள் ஒருவர், வேதாந்தத்தில் புலமையாளராக இருந்தார். பத்தாண்டுகள், இந்திய மூலநூல்களைப் படிப்பதில் கழித்தார். பின்னர் அரசியல் சூறுவளியில் சிக்குண்டார். காந்தியண்ணல் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே ஆங்கிலேய ஆட்சியை அகற்றச் சாத்வீக முறைகளையே ஆளுதல் வேண்டும் என்று அரவிந்தர் கூறினார். 1908ஆம் ஆண்டு அரசியல் கிளர்ச்சியில் அவர் ஈடுபட்டிருந்ததாகக் கருதி அவரைச் சிறைப் படுத்தினார்கள். தலைசிறந்த வழக்கறிஞர் இவரது வழக்கை நடத்தி அரவிந்தரை விடுதலை செய்தார். சிறை வாழ்க்கையில் ஆன்மீகத் துறையில் அரவிந்தருக்கு ஈடுபாடு மிகுந்தது. 1914-1921 ஆகிய ஆண்டுகளில் 'ஆர்ய' என்னும் இதழிற்கு ஆசிரியராக விளங்கினார். இது தத்துவ உண்மைகளை விளக்கும் இதழாகும். அரவிந்தரது கட்டுரைகள் பல தொடர்க் கட்டுரைகளாக இவ்விதழில் வெளிவந்தன. இவ்விதழின் நோக்கங்கள்: ஒன்று, வாழ்க்கையின் முக்கிய சிக்கல்களை முறையாகப் பயிலுதல், இரண்டு, பல்வேறு துறைகளில் நாம் பெற்றுள்ள அறிவை (செய்திகளை) இணைத்தல். இம் முயற்சியின் பயனாகக் கீழை, மேலைநாடுகளில் தோன்றியுள்ள மனித மரபுகள் பலவற்றை இணைத்து அவற்றிடையே இயைபுகாணுதல் நேர்ந்தது. இவ்விரு நோக்கங்களும், அரவிந்தர் ஆர்யா இதழை நடத்திய பத்தாண்டுகளில் சிறப்பாக நிறைவேறின என்று கூறுதல் பொருந்தும். வேதங்கள் உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றை அரவிந்தர் பயின்றபோது அவற்றில் பொதிந்து கிடந்த மறைபொருளான மெய்ப்பொருள்களை உணர்ந்தார்; வெளிப்படுத்தினார். இத்தகைய உண்மைகள் தத்துவம் பயிற்றும் ஆசிரியர்கட்கோ, கல்வியாளருக்கோ எளிதில் புலப்படா. அந் நூல்களுள் ஆழ்ந்து அரும் பெரும் உண்மைகளைக் கண்டு அரவிந்தர் தெளிவுபடுத்தினார். 1921ஆம் ஆண்டு ஆர்யா இதழ் வெளிவருவது நிறுத்தப் பெற்றது. 1910ஆம் ஆண்டு அரவிந்தர் புதுவைக்கு வந்து சேர்ந்தார். இந் நகரில் தமது எஞ்சிய வாழ்க்கைப் பகுதியாகிய நாற்பது ஆண்டுகள் கழித்தார். அவர் டிஸம்பர் மாதம் 5ஆம் தேதி 1950ல் மறைந்தார்.

அரவிந்தர் நமது நாட்டுச் சமய நூல்களைப் பயின்ற காலத்திலும் சரி, பின்னை நாளில் யோகப்பயிற்சி முறைகளை முறையாகப் பயின்ற போதும் சரி, அவர், நிலவுலகத் தொடர்பை விடுத்தாரிலர். அவரது தலைசிறந்த நூலாகக் கருதத் தக்கது, 'தெய்வீக வாழ்க்கை' (Life Divine) என்பதாகும். யோக நெறிகளைப் பயின்ற காரணத்தால் அவற்றின் குறைகளைக் களைந்து நிறைகளைப் போற்றும் வகையில், இணைத்து ஒரு நூல் எழுதினார். அவர் புதுவையில் வந்தபோது சில ஆண்டுகள் ஆசிரமத்தில் தங்கியிருந்தோருடன் நன்கு பழகினார். அவர்களிடையே கலந்து உறவாடினார். பின்னர் தாம் மேற்கொண்ட சாதனைகளுக்காகத் தனித்து இருக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு தனிமையை அவர் நாடிய போதிலும், ஆசிரம அன்பர்களிடையே கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். ஆசிரமத்தார் தாம் மேற்கொண்டிருந்த ஆன்மீக நெறியில் எழுந்த ஐயங்களைக் கடிதங்கள் மூலம் அகற்றிக் கொண்டனர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் கொண்டிருந்த கடிதத் தொடர்பு மூன்று தொகுதிகளாக வெளிவரக் காரணமாயிற்று. இக் கடிதங்களை நாம் பார்க்கும் போது, அரவிந்தரது, பரந்த ஆழ்ந்த கல்வியறிவு புலனாகின்றது. தத்துவம் உள்ளத்தியல், அறவியல், முருகியல், இலக்கியம், அரசியல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நேர்ந்திருந்த வளர்ச்சியை நன்கு அவர் அறிந்திருந்தார் என்பதும் தெளிவாகின்றது. அரவிந்தரது வருங்கால நிகழ்ச்சிகளை முன்னரே உணர்ந்து உரைக்கும் திறனுடையாரக விளங்கினார். அவர் ஒரு சிறந்த அறிஞர்; அவர் ஒழுக்கமானவர், துறவி, அரவிந்தர் தமது வாழ்நாளில் புரிந்த சாதனைகள் பலவாகும். தத்துவ சமய உலகில் ஆழ்ந்த சிந்தனைகளைத் தூண்டினார்; அவரது நூல்களால் அப் பணியை வளர்த்தார். சில வகைகளிலே (அவரது) எழுத்து கருத்துலகப் புரட்சியை விளைத்தது என்றும் கூறவேண்டும். அவர் காலத்தில் மீரா ரிச்சர்ட் என்கின்ற பிரெஞ்சு நாட்டு அம்மையார் அரவிந்தரை வந்தடைந்தார். அவ்வம்மையாரது ஆன்மீக நலன்கள், அவர் அடைவு முதலியன அரவிந்தரை ஈர்த்தது. அரவிந்த ஆசிரம நிருவாகம் அவ்வம்மையாரிடம் ஒப்படைக்கப்பெற்றது. அரவிந்தரது மறைவிற்குப்பின்னுல் ஏறக்குறைய கால் நூற்றாண்டு திறம்பட அவ்வம்மையாரது தலைமையில் ஆசிரமம் செவ்வையாக இயங்கியது. அவ்வம்மையாரை அரவிந்தரின் வழிவந்தவராகக் கருதலாம். அரவிந்த ஆசிரமத்தில் தங்கி அவரவர் மேற்கொள்ளும் சாதனைகள் பல திறத்தனவாகும். இந்தியப் பெரு நிலத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் மக்கள் வந்து ஆசிரமத்திலேயே தங்கியுள்ளனர். அரவிந்தரது சிந்தனைகளைத் திறம்பட விளக்குகின்ற ஒரு சில அறிஞர் நம்மிடையே

உள்ளனர். பல்கலைக் கழகங்களில் தத்துவம் பயிலும் மாணவர்கள் அரவிந்தரது சிந்தனைகளை ஆராய்கின்றனர். ஒருசிலர் இவற்றுள் மிகுந்த தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தற்கால இந்தியா தோற்றுவித்த சிந்தனையாளர்களுள் தலைமை சான்றவர் அரவிந்தர். அவர் சிந்தனைகள் மட்டும் நம்மை கவர வில்லை. அவரது அரிய சாதனைகளும் நம்மைப் பெரிதும் ஈர்ப்பன வாகும். கீழை மேலை நாட்டுச் சிந்தனைகளை இணைக்கும் பணியில் இணையற்று விளங்கினார், அரவிந்தர். அவர் தலைசிறந்த கவிஞராவார். அவரது 'சாவித்திரி' என்கின்ற கவிதைக்காவியம், கவிஞருக்கோர் இனிய விருந்தாகும். அவரது இளமைக்காலம் தேசிய இயக்கத்தில் கழிந்தது. அவர் மனிதப் பற்றுக் கோட் பாடுடையவர். அவரது மிகச் சிறந்த நூல்களாக எல்லோராலும் போற்றப் பெறுபவை, தெய்வீக வாழ்க்கை (இரு தொகுதிகள்) 'யோக இணைப்பு' பற்றிய நூல்கள், கீதையைப் பற்றிய கட்டுரைகள் ஆகியவை. இவை என்றென்றும் நின்று நிலவத்தக்க தகுதி வாய்ந் தவை. இந் நூல்களுள் அரவிந்தர் புலப்படுத்தும் தனித் திறன் வியப்பில் ஆழ்த்துகிறது. அரவிந்தரது சிந்தனைகளின் ஆழத்தை யும் அகலத்தையும் நாம் அறிவதற்கு முறையாக அவரது நூல்களைப் பயில வேண்டும். அவர் பயிலும் ஆங்கில நடை, அழகியதாகும். மிகச்சிறந்த உரைநடை, கவிதையனையது. அவர் தமது கருத்துகளை உணர்த்தப் பல ஆங்கிலச் சொற்களை ஆக்கி உள்ளார். அவரது சிந்தனைகளின் செறிவை ஆங்கில மொழி ஒருவாறு உணர்த்துகின்றது என்று கூறலாம்.

அரவிந்தரது வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள் குறிக் கத்தக்கன. இவை வைகறை என்னும் அரவிந்த ஆஸ்ரமக் காலாண்டு வெளியீட்டில் வெளிவந்தவை.

(1) அரவிந்தர் ஐந்தாவது வயதிலிருந்து ஏழுவயது வரை டார்ஜிலிங்கில் படித்து வந்தார். அப்பொழுது அவர் கண்ட கனவு: ஒரு கனமான இருள் வேகமாகத்தம்மை அணுகி நாலாபக்கத்திலும் சூழ்ந்து கொண்டபின் தன்னுள்ளும் புகுந்ததாகக் கனவு கண்டார். இதே கனவு இங்கிலாந்தில் இருந்த பொழுதும் காணப் பட்டது. பாரதநாடு திரும்பிய பின்னர்தான் நீங்கிற்று.

(2) பதினொன்றாவது வயதில் ஏற்பட்ட இரு ஆன்ம அனுப வங்கள் அரவிந்தரின் பிற்கால வாழ்க்கையின் பெருமையை முன் கூட்டி அறிவித்தன. உலகில் ஒரு புரட்சிகர மாறுதல் ஏற்படப் போகின்றது, அதில் தாம் முக்கியப் பங்கு எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்ற தீவிர உணர்வு ஏற்பட்டது. இதை அரவிந்தர் தம் கடிதத்தின் மூலம் வெளியிட்டார்,

(3) 1893-ல் அரவிந்தர் படிப்பை முடித்துக் கொண்டு பாரதநாடு திரும்பினர். பாரதநாட்டின் விடுதலைக்காகப் போராடத் தீவிர எண்ணம் கொண்டார். இதே ஆண்டு நமது நாட்டின் ஆன்மீக அறிவை மேல் நாட்டிற்களிக்க விவேகானந்தர் இலண்டன் சென்ருர்.

(4) அரவிந்தர், கப்பலிலிருந்து பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கியதும், தம்முள்ளும் தம்மைச் சுற்றிலும் ஆழ்ந்த அமைதியும், நிசப்தமும் திடீரெனத் தோன்றியது. இரண்டு மூன்று நாள்கள் வரை அவ்வாறே இருந்து பின்னர் விலகியது. இதுவே அரவிந்தர் என்னும் தவப் புதல்வனைத் தாய்நாடு வரவேற்ற செயலாகும் எனலாம்.

(5) தாய்நாடு திரும்ப இருந்த அரவிந்தர் முதலில் ஒரு கப்பலில் யயணம் செய்ய இருந்தார். ஆனுல், தெய்வச் செயலாக 'கார்தேஜ்' என்ற மற்ருெரு கப்பலில்தான் வரவேண்டியதாயிற்று. முதலில் பயணம் செய்ய இருந்த கப்பல் கடலில் மூழ்கி விட்டது. அரவிந்தரின் இக் கடல் பயணத்தைப் பற்றிய தவருன செய்தியால் அவர்தம் தந்தை உயிர் துறக்க நேர்ந்தது இறையின் கருணை அரவிந்தரைக் காப்பாற்றியது.

(6) பரோடாவில் தங்கியிருந்தபொழுது அரவிந்தரின் இளைய சகோதரர் பரீந்திரர் கொடிய நோய்வாய்ப்பட்டார். அப்பொழுது எதிர்பாராமல் வந்த ஒரு நாகா சந்நியாசி ஒரு கோப்பையில் மந்திரிக்கப்பட்ட ஜலத்தைக் கொடுத்து அவரை அருந்தச் சொன்னுர். அவரும் அருந்திக் குணம் பெற்ருர். அரவிந்தருக்கும் அரசியல் வெற்றி காண்பதற்கான மந்திரோபதேசமும் வேள்வியும் அவர் செய்து வைத்தார்.

(7) பம்பாயில் தங்கியிருந்த பொழுது அரவிந்தர் உலகில் முக்கிய மொழிகளில் பதிப்பிடப் பெறும் எல்லா நூல்களையும் தமக்குக் கிடைக்கும்படி செய்ய இரு புத்தகக் கம்பெனிகளுக்கு உத்தரவு கொடுத்தார். அவ்வாறு பெற்ற புத்தகங்கள் அதிசயிக்கத்தக்க முறையில் படித்ததுமின்றி ஆச்சிரியத்தை அளிக்கும் வகையில் அப் புத்தகங்களில் கண்ட விஷயங்களை நினைவிலும் கொண்டார். அதே சமயத்தில் பாரத நாட்டுப் பண்பாட்டின் சிறப்பைச் சிறிதேனும் குறைபடாமல் போற்றி வந்தார்.

(8) 1909-ல் அரவிந்தர் சிறையிலிருந்தார். அப்பொழுது அவர் புரிந்து வந்த யோக சாதனையின் பயனுகக் கண்ணனின் திவ்ய தரிசனம் கண்டார். சிறையில் காவலர், கைதிகள், நீதிமன்றம், நீதிபதி ஆகிய யாவும் வாஸுதேவனுகவே இருப்பதைக் கண்ணுரக் கண்டார். கீதையில் கண்ணன் கூறியது முற்றிலும்

உண்மை என்பதை நன்கு உணர்ந்ததுமின்றி அப் பரமனின் கட்டளையையும் ஏற்றார்.

(9) 1950 டிசம்பர் 5ஆம் தேதி அரவிந்தர் மஹாசமாதி நிலை எய்தினார். ஆனால், இம் மாஹசமாதி எய்திய அரவிந்தரின் பூத உடல் டிசம்பர் 9ஆம் தேதிதான் அடக்கம் செய்யப்பட்டது. இதற்கிடையே உள்ள நான்கு நாள்கள் வரை, அவர் தவ வலிமையால் இறக்கம் பெறச் செய்த அதிசயமான சக்தியின் பிரகாசம் அவர் உடலில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. இது, உலகம் இது வரை கண்டிராத அதிசயம். அரவிந்தரது தத்துவ சிந்தனை அமைப்பு முழுமையும் ஓர் அடிப்படையான கொள்கையைக் கொண்டு விளங்குகின்றது. சடமும், சடம் அல்லாததும் (**Matter and Spirit**) ஒருங்கே உண்மையுடையன என்று அரவிந்தர் கருதுகிறார். பொருள் முதன்மை வாதம் ஏற்பவர் பொருள் அல்லாததை ஏற்க மறுக்கின்றனர். சடமல்லாததன் முதன்மையை ஏற்பவர் பொருள் உண்மையை மறுக்கின்றனர். இவ்விரு தீவிர நிலைகளும் பிழையுடையன. இந் நிலவுலக வாழ்விலேயே தெய்வீக வாழ்க்கை வாழ்தல் இயலும் என்பதும், நிலையுதல் இல்லாத வாழ்விடையே என்றும் நிலைத்திருக்கலாம் என்பதும் ஓர் அடிப்படையை ஏற்கின்றது. உடலினுள் என்றும் இறவாத ஆன்மா குடியிருக்கின்றது என்பதை நாம் ஊன்றி, உணர்தல் வேண்டும். வேத காலத்தவர் கூறியதைப் போன்று ‘சடமும் பிரம்மமாகும்’ என்பதை நாம் ஏற்க வேண்டும். சடத்தைச் சடமல்லாததனின்று பிரிப்பது தவறாகும். இவ்விரண்டினுள் ஒன்றை ஏற்றல் சாலும் என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இதனால் சடமல்லாததைக் கற்பனையென்றோ அல்லது அதனால் விளையும் திரிபுக் காட்சி என்றோ கொள்கின்றோம். இதே போன்று சடத்தையும்–புலன்களால் விளையும் திரிபுக் காட்சி என்று கொள்கின்றோம். இவ்விரு தவறான கொள்கைகளால் விளைவது வாழ்க்கையில் கருத்துவறுமை அல்லது ஆன் மீகப் பண்புகளின் இழப்பு ஆகும்.

சடமே உள்பொருள் என்பவன் தனது புலக் காட்சிகளை வைத்தே அவ்வாறு கூறுகின்றான். அவன் புலனறிவிற்கு ஏற்றம் கொடுக்கின்றான். புலனறிவைக் கடந்து செல்லும் அறிவாற்றலை ஏற்பதில்லை. நமது அறிவின் அமைப்பில் மனம் கொள்கின்ற பங்கையோ சடமல்லாததன் உயரிய ஆற்றல்களையோ நாம் மறத்தற்கில்லை. புலனறிவிற்கு எட்டாத துறைகள் பல உள. புலன்கள் தொழிற்படும் துறைகளிலும் கூட, நாம் பெறுகின்ற அறிவு புலன்களால் கட்டுண்டு விளங்குவதின்று. அறிவு தனது அமைப்பிலேயே புலன்களைக் கடந்து விளங்குவதை உணர்த்துகிறது. புலன்களின் மூலமாக நாம் பெறுகின்ற செய்திகளை, மனத்தினால் புனரமைப்புச் செய்தே அறிகிறோம்.

## ஏறுகின்ற இறங்குகின்ற இயக்கம்—படிமுறை வளர்ச்சியும், ஒன்றில் ஒன்று ஒடுங்குகின்ற முறையும்

இயக்கத்தின் இரு கூறுகள் ஒன்று படிமுறை வளர்ச்சியாகும். இதனை உள்ளது சிறத்தல் (Evolution) என்னும் படிமுறையே ஏற்றம் என்றும் குறிக்கலாம். இயக்கத்தின் மறுகூறு உட்புறமாகச் சுருளுதல் ஆகும் (Involution). இதனைப் படிமுறையே இறக்கம் எனக் கூறலாம். சடமல்லாதது (Spirit) உலகில் இறங்காவிடின், உலகு சடமல்லாததில் ஏற்றம் கொள்ளாது. எந்த அளவிற்குச் சடமல்லாதது உலகில் இறங்குகின்றதோ அந்த அளவிற்கு உலகு சடமல்லாததில் ஏற்றம் கொள்ளும். சடமல்லாதது சடத்தினுள்ளும் இறங்குகின்றது. இதன் காரணமாகத்தான் சடம், உயிராற்றலாகப் பரிணமிக்கின்றது. படிமுறையே வளர்ச்சி பெறுகின்றது. சடமல்லாதது உயிராற்றலில் உயிர்த் தத்துவத்தில் (Life) இறங்குகின்றது. இதன் காரணமாக உயிராற்றல் சடத்தைவிட, உயிராற்றலைவிட மேலும் ஏற்றம் பெற படிமுறையே வளர்ச்சி பெற முயல்கின்றது. இதேபோன்று சடமல்லாதது மனத்தினுள் (Mind) இறங்குகின்றது. இதனால் மனமும் அதன் மூலநிலைக்குப் படிமுறையே வளர்ச்சி பெற வேண்டும். இத்தகைய வளர்ச்சியை விஞ்ஞான மனத்தை (Supermind) நோக்கிய வளர்ச்சி என்கின்றோம். படிமுறை வளர்ச்சி விஞ்ஞான மனத்தோடு நிற்பதில்லை. மேலும் தொடர்ந்து பரம புருஷன் அல்லது சச்சிதானந்த நிலைவரை செல்கிறது.

இறங்குமுக வளர்ச்சியை (Involution) உட்புறமாகச் சுருளுதல் என்று கூறலாம். ஏறுமுக படிமுறை வளர்ச்சியை உள்ளது சிறத்தல் என்கின்றோம் (Evolution). இதனைக் கூர்தல் அறம் என்றும் விளக்கலாம். இவ் வகையில் சடம் (Matter) உள்ளது சிறந்து உயிராற்றலாகின்றது (Life). பின்னர் உயிராற்றல் அல்லது உயிர்த் தத்துவம் மனமாகப் பரிணமிக்கின்றது. மனம்-விஞ்ஞான மனமாகப் படிமுறை வளர்ச்சி பெறுகின்றது. பின்னர் சச்சிதானந்தமாக—பரமபுருஷனாக—பரிணமிக்கின்றது. படிமுறை வளர்ச்சி என்பது நிகழ்வதற்கு மேல்நிலையில் உள்ள ஒன்று கீழ்நிலையில் உள்ள ஒன்றினிடத்து ஒடுங்கி விளங்குதல் வேண்டும். சடமல்லாதது, சடத்தினுள் விளங்கினாலன்றி சடம் படிமுறையே சிறத்தல் இயலாது. சடத்தினுள் சடமல்லாதது படிந்திருத்தல் வேண்டும். இல்லையேல் சடம், சடமல்லாததாக வளர்ச்சி பெற இயலாது. இதன் காரணமாகத்தான் சடத்தையும் சடமல்லாத கூறினை உடையதாகக் கருதுகின்றோம். சடத்தை அறவே ஒதுக்குதல் தத்துவக் கொள்கைக்கு ஏலாத ஒன்று என்று கருத வேண்டியுள்ளது. படிமுறை வளர்ச்சியைப் பற்றி நாம் குறிப்பிடும்

போதே சடத்தினுள் சடமல்லாத கூறு உண்டு என்று ஏற்க வேண்டும். ஏற்றம் அல்லது படிமுறை வளர்ச்சி இறக்கம் என்பதனை உட்படுத்தும்.

படிமுறை வளர்ச்சி பின்வருமாறு நிகழ்கின்றது. சடம், உயிராற்றல், ஆன்மா (Psyche) மனம், விஞ்ஞான மனம், ஆனந்தம் உணர்வு, ஆற்றல், இருப்பு அல்லது உண்மை அல்லது உளதாம் தன்மை (Existence) என்பதாக முடியும். இந் நிகழ்ச்சிக்கு மாறுன இறங்கு முகமாக அமையும் முறை, உளதாம் தன்மை, உணர்வு ஆற்றல், ஆனந்தம், விஞ்ஞானம், மனம், ஆன்மா, உயிராற்றல் சடம் என்பதாக முடியும் சடம், உயிர்த்தத்துவம், ஆன்மா மனம் எனப்பெறும் நான்கும் கீழ்ப்பகுதியாகும் (பாத்). விஞ்ஞான மனம், ஆனந்தம், உணர்வு-ஆற்றல், உளதாம் தன்மை அல்லது இருப்பு எனப்பெறும் நான்கும் மேற்பகுதியாகும். மேற்பகுதியையும் கீழ்ப்பகுதியையும் இணைக்கும் முடிச்சு அனையது மனமும் விஞ்ஞான மனமும் சந்திக்கின்ற இடமாகும். இவற்றிடையே திரை போன்ற ஒன்றுள்ளது. இத் திரை நீக்கப்பெற வேண்டும். இதன் நீக்கமே தெய்வீக வாழ்வு மனிதச் சமுதாயத்தில் அமைவதற்கு முதற் காரணமாகும். அரவிந்தர் மனித வாழ்க்கைச் சுழல் (Human cycle) என்றொரு நூல் எழுதியுள்ளார். இந் நூலுள் அடங்கியிருக்கும் கருத்துகள் நெடிது நிலைத்து விளக்கம் தரவல்லன. மேலும், மிகத் தெளிவான கருத்துகளைக் கொண்டு விளங்குகின்றன. தெய்வீக வாழ்க்கை (Life Divine) என்பதைவிட, சிறிது சொற்பெருக்கமும் இந்நூலுள் கிடையாது. உலகைப் பற்றிய புலன் கடந்ததொரு கொள்கையை அரவிந்தர் இந் நூலுள் தருகிருர். சமுதாயம் சார்ந்த தத்துவக் கொள்கையையும், வரலாறு சார்ந்த தத்துவக் கொள்கையையும் தருகின்ருர். இந் நூலுள் அரவிந்தர் விளக்கி யுள்ள கருத்து படிமுறை வளர்ச்சியையும், அதற்கு இணையான—ஆனுல் மாறுன—இறக்க நிகழ்ச்சியையும் நமக்குத் தெளிவு செய் கின்றது.

நாகரிக வளர்ச்சியில் முதல் நிலையில் மனித உணர்வு சடத்தில் பொதிந்து இருந்து அது விளங்கக் கூடிய அனைத்தையும் நன்கு கருதிவிடுகின்றது. உணர்வு, உயிர்த்தத்துவத்தையும் உலகையும் சடத்தின் அடிப்படையிலேயே கருதுகின்றது. மனித உணர்வு இந் நிலையில் கூறப்பெறுவது அன்னம் பிரம்மம் என்பதாகும். அடுத்த படிநிலையில் மனிதன் உளதாம் தன்மையை உயிராற்றல் வெளிப்பட்டுத் தோன்றுவதாக மனித உணர்வு கருதுகின்றது. உயிராற்றலின் துடிப்பை உணர்கிறது. யாவும் சடமே என்று முன்னர் கருதியது தற்போது யாவும் உயிராற்றலே என்று கருதத்தலைப்படுகிறது. இந் நிலையில் கூறப்பெறுவது, 'பிராணன் பிரம்மம்' என்பதாகும். மேலும் உயர்ந்து மனம் தன்னை வெளிப்

படுத்தக்கூடியது. தன்னை அறியவல்லது என்று மனிதன் உணர்கிறான். இந் நிலையில் 'மனோமயம் பிரம்மம்' என்று கூறுகிறான். இந் நிலையில் மனம் மேலும் வளர்ச்சி பெற வேண்டும். "மனமே யாவும்' என்ற நிலையிலிருந்து ஆன்மாவே (சடமல்லாதது; Spirit) என்ற உயரிய உணர்வைப் பெறவேண்டும். இப்போது 'அயம் ஆத்மா பிரம்மம்' என்று கூறுதல் வேண்டும். சமுதாயம் இத்தகைய வளர்ச்சி பெற்றாலன்றி, ஆன்மீக வாழ்வு பெறாது." இவ்வாறு மனித வாழக்கைச் சுழற்சி (Human cycle) என்னும் நூலுள் அரவிந்தர் கூறுகின்றார். தத்துவ வரலாற்றில் பொருள் முதற் கொள்கை(Materialism), உயிர்சார்ந்த கொள்கை (Vitalism), மனமுதற்கொள்கை (Mentalism), விஞ்ஞான முதற்கொள்கை (Intellectualism) ஆகிய யாவும் அவ்வக் காலத்தில் தோன்றி, படைப்பின் உட்கிடையை உணர்த்துவதாகத் தலைப்பட்டன. ஆனால், இவை யாவும் படிநிலைகளாக விளங்கினவே அன்றி படி முறை வளர்ச்சியை முற்றிலும் விளக்கியன அல்ல. உபநிடதத்தில் மனிதனுக்கு ஐவகை கோசங்கள் உண்டு என்று கூறப்பெறு கின்றது. அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்பவை இக் கோசங்களாகும். மனிதன் படிநிலையைக் கடந்து தனது உண்மை ஸ்வரூபத்தை உணர்கின்றான்.

## பரம்பொருள்
## (Absolute)

பரம்பொருள், தன்னியல்பான, வரம்பற்ற முழுமையான நிலையில் கடந்து விளங்குகின்றது. அதன் இயல்பை விளக்க இயலாது. அது சிந்தனையைக் கடந்தது. அது கருதவொண்ணாதது என்று கூறுதல் தவிர வேறு எதையும் அதைப்பற்றி நாம் சொல்ல இயலாது. மனிதன் தனது உணர்வின் மூலம் உணரக் கூடிய நிலையின் பரம்பொருள் முக்கூறுகளையுடையது என்று உணர்த்து கிறது. அப் பரம்பொருளின் இயற்கை ஒற்றுமையாக மட்டும் விளங்குகின்றது என்று கூற இயலாது; அது இருமை மட்டும் அன்று : அது பன்மையுமன்று. அது மூவகை இயல்புகளை ஒருங்கே உடையது. அம் மூன்று இயல்புகளும் வருமாறு: உளதாம் தன்மை; உணர்வு; ஆனந்தம் என்பவை. ஆதலால் அரவிந்தர் பரம் பொருளை சச்சிதானந்தம் என்கிறார். இச் சொல்லைப் பகுத்தால் சத், சித், ஆனந்தம் என்று விரியும். 'சத்' என்பது உளதாந் தன்மை. பொருள்கள் உளதாதற்கு அடிப்படை 'சத்' ஆகும். 'சித்' என்பது உணர்வு; மற்றொன்று 'ஆனந்தம்.'

பரம்பொருள், கடந்தும், கலந்தும் விளங்குகின்றது. எப் பொருளிலும் பரம்பொருள் கலந்து விளங்குகின்றது (Immanence). பரம்பொருள் கலந்த நிலையில் விஞ்ஞானமாக,

மனங்கடந்த ஓராற்றலாக (Supermind) விளங்குகின்றது. பரம் பொருளின் படைப்புக் கூறு விஞ்ஞானம் எனலாம். இதனை இறைவன் (God) என்றும் பிரபஞ்சத்தைப் படைப்போன் எனவும் ஸ்ரீவத்சவா கூறுகிறார். பரம்பொருளாகிய ஒன்று பலவாகப் பரிணமித்து பிரபஞ்சமாக விளங்குகின்ற நிலையென்று இந் நிலையை அவர் குறிக்கின்றார். உள்பொருள் கடந்தும், கலந்தும் வெளிப்படாமலும் வெளிப்பட்டும் (Unmanifest and Manifest) ஒடுங்கியும் படைத்தும் விளங்குகின்றது. இவ்விரு இயல்பு கட்கு இடையே வேறுபாடு கிடையாது. இறைவன் என்பது பரம்பொருளின் பிரபஞ்சக் கூறுகும்; வெளிப் பட்ட நிலையாகும். பரம்பொருளை உள்ள நிலை என்று விளக்கப் பெறுகின்றது. அதுவே உள்ளது (Existence). உள்ளது அல்லது உளதாம் தன்மை, பரம்பொருளிடத்து விளங்கும் ஒரு கூறுகும். அது உள்ளதும், ஆதலும் ஆகும் (Being and Becoming) அது உள்ள தாகவும் ஆகுதலாகவும் வெளிப்படுகிறது. பரம்பொருள் செய லற்ற இருப்பன்று, உண்மையன்று. பரம்பொருள் இயக்கம் சார்ந்த உள்பொருளாகும். இப் பரம்பொருள் ஆற்றலைத் தன்னுள் அடக் கிக்கொண்டு விளங்கும்போது இயக்கமற்ற தூய நிலையில், உள்ள தாக விளங்கும். இது இரயிலை இழுத்துச் செல்லும் இயந்திரம் போன்றது. இது ஒரு நிலையில் நின்றாலும், நீராவியினால் இயக் கத்தோடு விளங்குவதாகும்.

பரம்பொருள் பொருள்களனைத்திற்கும் பொருண்மை தருவ தாகும். பரம்பொருளால்தான் பொருள்கள், பொருள்களாக விளங்குகின்றன. சடம், உயிர்ப்பாற்றல் அல்லது உயிர்த் தத்துவம், மனம் ஆகியவை தெய்வீகத்தன்மையை தம்மியற்கையாகக் கொண்டவையாகும். பன்மை ஒருமையிடத்து விளங்குவதாகும். ஒருமையே பன்மையின் படைப்பிற்குக் காரணமாகும். பிரபஞ் சத்துள் விளங்குகின்ற யாவும் பரம் பொருளின் ஒடுங்கிய நிலைகளா கும். ஆதலால் பரம்பொருளை ஒருமையாக, செயலற்றதாகக் கொள்ளுதல் தவறுகும். பரம்பொருளிற்குப் படிநிலையில் விளங்கும் வடிவங்கள் பல. இவ் வடிவங்களனைத்திலும் பரம் பொருள் உள்ளார்ந்த நிலையில் விளங்குகின்றது. சங்கரர், இவ் வுலகை மாயாவியின் வித்தை என்று கருதினார். இக் கருத்து அரவிந்தருக்கு உடன்பாடன்று. சடமும் அல்லது பொருளும் பிரம்மமே என்பது அரவிந்தர் கருத்தாகும். பரம்பொருள் பல்வகை நிலைகளில் வெளிப்படுகின்றது.

அரவிந்தர் தமது வாழ்க்கைப் பெருநூலாக எழுதிய தெய்வீக வாழ்க்கை என்னும் நூலுள் கூறுவது: 'உண்மையான ஒருமைக் கொள்கை (Monism) உண்மையான அத்துவிதம் அனைத்துப்

பொருள்களையும் பிரம்மமாக ஏற்பதாகும். இக் கொள்கை உளதாம் தன்மையைப் பகுப்பது இல்லை. முரண்படுகின்ற இருபொருள் களாக என்றென்றும் விளங்கும் உண்மை என்றும் என்றென்றும் உண்மையல்லாததென்றும், பிரம்மென்றும், பிரம்மம் அல்லாத தென்றும், ஆன்மா என்றும், ஆன்மா அல்லாததென்றும், உண்மையான ஆன்மா என்றும், உண்மையல்லாததென்றும், தொடர்ந்து விளங்கும் மாயை என்றும் அத்துவிதக் கொள்கை பகுக்க முற்படவில்லை'1.

உளதாம் தன்மை இருவகைகளில் வெளிப்படுகின்றது. ஒன்று உள்ளது (Being) ; மற்றொன்று ஆகுதல் (Becoming) ஆகும். உள் பொருள் உள்ளதாக விளங்குகின்றது என்று கூறும்போது அந் நிலை செயலற்ற நிலையைக் குறிப்பதாகும். உள்பொருளின் ஆதல் நிலையை (Becoming) குறிக்கின்றபோது பல நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகக் குறிப்பிடுகின்றோம். பரம்பொருளின் நிலைத்த இயல்பை அறிவது, பிரபஞ்சத்தின் உண்மையை அறிவதாகும். உள்ளது என்பது பிரபஞ்சம் கடந்த உள்பொருளாகும். படைப் புண்ட உலகின் அடிப்படை உண்மையினை உணர்வதாகும்.

உள்ளது என்பது ஒன்றாகும். இதனிடத்துப் பல்வான தன்மையும், பன்மையும் ஒருங்கே விளங்குகின்றது. ஒருமை என்பது எல்லை கடந்து விளங்குகின்றது. ஒருமை என்பது எல்லை கடந்து விளங்குவது ; முடிவற்றது. இதனிடத்துப் பன்மையும் எல்லை கடந்து விளங்குகின்றது. ஒன்றே பலவாகின்றது. அனைத்தும் உளதாகும் நிலை உள்ளதன் நிலையாகும்.

தத்துவக் கொள்கைகளுட் சில, பரம்பொருளின் கடந்த நிலையைப் புறக்கணிக்கின்றன. இதனால் இக் கொள்கைகள் நிறைவுடையனவாகா. பிரபஞ்சமும் பரம்பொருளும் முற்றொரு மையுடையன என்று இக் கொள்கைகள் கருதுகின்றன. இவை அனைத்திறைக் கொள்கையுடையன (Pantheism) எனலாம். இவை உள்பொருளின் பிரபஞ்சம் கடந்த நிலையினைக் காணாது விடுகின்றன. பரம்பொருள் தனித்த ஜீவான்மாக்களாகும். பிர பஞ்சமாகவும் வெளிப்படுகின்றது. 'தெய்வீக வாழ்க்கையில்' அரவிந்தர் கூறுவது : 'பரம்பொருள் நிலைபேறு, இயக்கம் ஆகிய வற்றைக் கடந்தது. ஒருமை பன்மை ஆகியவற்றையும் கடந்தது. பரம்பொருள் தனது ஒருமை நிலையில் ஊன்றியிருந்து கொண்டு இயக்கம் கொள்கின்றது. இவ்வியக்கம் எல்லை கடந்தது. கருத வொண்ணாதது.''2

பரம்பொருள், அருவமானது, உருவமானது, இவ்விரு இயல்பு களும், இப் பொருளினிடத்து விளங்குகின்றன. அப் பொருள் உயர்ந்த ஆன்மா, பரமான்மாவாகும். யாவற்றிலும் உள்ளார்ந்த

நிலையில் அந்தாரத்மாவாக விளங்குகின்றது. அது அருவமான உள்பொருளாகும். அது உள்ளன அனைத்திற்கும் நிலைக்களம்; மூலம் ஆற்றலாகும். பரம்பொருள் கடந்தும் கலந்தும் விளங்கு கின்ற நிலையை அரவிந்தர் நன்கு வெளிப்படுத்துகின்றார்.

அரவிந்தர் தமது தெய்வீக வாழ்க்கை என்னும் நூலுள், படைப்பு என்னும் சிக்கலை, ஒன்று பலவாகின்ற நிலையையும் நன்கு விளக்குகின்றார். பரம்பொருள், சத், சித் ஆனந்தம் என்ற முக்கூறுகளையும் ஒருங்கே கொண்டு விளங்குகின்ற நிலையில், அனைத்துப் பொருள்கட்கும் ஆதாரமாக நிலைக்களமாக விளங்கு கின்றது. இயக்கம், ஆற்றல், நிகழ்ச்சி என்று கூறப் பெறுவனவும் உண்மையானவை. 'உள்ளது' 'ஆதல்' (Being and Becoming) ஆகிய இவ்விரு அடிப்படை உண்மைகளையும் நாம் ஏற்க வேண்டும். பரம்பொருள் உள்ளதுமன்று, ஆகின்ற நிலையுமன்று. ஒன்றுமன்று, பலவும் அன்று. இவ்விரு நிலைகளையும் கடந்தது. நிலைபேறு, இயக்கம், ஒருமை, பன்மை ஆகிய கருத்தமைவுகளைக் கொண்டு நாம் பரம்பொருளை அறிய முற்படுகின்றோம். இயக்கம், நிலைபேறு, ஒருமை, பன்மை ஆகியவற்றைக் கடந்த நிலையில் பரம்பொருளைக் கருதுதல் அரிதாதலால், நாம் இவ்விரு இயல்புகளையும் ஏற் கிறோம். சிவம், காளி ஆகிய இரண்டையும் ஏற்கிறோம். காலம் இடம் ஆகியவற்றுள் அளவிடற்கரிய இயக்கம் நிகழ்கின்றது. இதன் தன்மை யாது? இவ் வியக்கம் காலங்கடந்த, இடங்கடந்த தூய உள்ளத்தைச் சார்ந்ததாகும். பரம்பொருள் ஒன்றாகவும், நிலையுதல் உடையதாகவும் விளங்குகின்றது. அளவும் அளவற்ற தன்மையும் பரம்பொருளிற்குப் பொருந்தமாட்டா.

பரம்பொருளிடத்து விளங்குகின்ற ஆற்றல் உணர்வுடையதா? உணர்வற்றதா? அரவிந்தர் இவ்வாற்றல் உணர்வுடையது என்கின்றார். சாங்கிய தத்துவம் வகுத்தோர், பிரகிருதியை உணர் வற்றதாகக் கருதுகின்றனர். மேலைநாட்டுப் பொருள் முதற் கொள்கையினர் உணர்வைச் சடத்தினின்று தோன்றியது என்று கருதுகின்றனர். இவ்விரு கொள்கைகளும் இடர்ப்பாடுகளை விளைப் பன. உணர்வு அனைத்தும், மனத்தின் விழிப்பு நிலை என்று பலரும் கூறுகின்றனர். இவ்வாறு கொள்வதால் உணர்வு இயற்கையில் தொழிற்படுவதைப் புரிந்து கொள்ள இவர்கட்கு இயலவில்லை. அரவிந்தர் கருதுவது நமது உணர்வின் உயர்நிலைகள் யாவும் உணர் விற்குக் கீழ் விளங்குவன. நமது உணர்வைக் கடந்து விளங்குவன. இவை ஆழம் உடையன; ஆற்றல் சான்றவை; நனவு நிலையில் விளங்கும் உணர்வைவிட ஆற்றல் மிக்கவை. உணர்விற்குக் கீழ் எல்லையில் உணர்வு நிலைகள் (Subliminal consciousness) விளங்கு வதைப் போன்று உணர்விற்கு மேல் நிலையில் விளங்கும் உணர்வு நிலைகளும் உண்டு.

உள்ளதற்கு உணர்வாற்றல் முக்கிய கூறு என்றால் அது இயக்க மின்றி இருத்தல் இயலாது. அது இயங்கியே தீர வேண்டும். இவ் வாற்றலிற்குத் தனித்த இருப்பு வழங்குதல் இயலாது. உள்ளதில் உள்ளார்ந்த இயல்பாக உணர்வாற்றல் விளங்குகின்றது என்று கொள்வதே பொருத்தம். இவ்வாற்றல் நிலைத்தும் விளங்கலாம். இயக்கமும் கொள்ளலாம்.

இயங்காத நிலையில் ஆற்றல் செறிந்து விளங்குகின்றது. இயங்கும் நிலையில் ஆற்றல் வெளிப்படுகின்றது. இவ்வுணர்வு ஆற்றலை இயக்கம் சான்ற தத்துவமாக அரவிந்தர் கருதுகிறார். உலக நிகழ்ச்சிக்கு, இயக்கத்திற்கு இவ்வுணர்வு ஆற்றல் நிலைக்களமாக விளங்குகின்றது. இதனை அரவிந்தர் 'அன்னை' என்று அழைக்கின்றார். 'அன்னை' என்பது தெய்வீக ஆற்றல் அல்லது சக்தியாகும். இச் சக்தி பிரபஞ்சத்தில் இயக்கத்திற்குக் காரணமாகும். கீழெல்லையில் சடம், உயிர்ப்பாற்றல், மனம் ஆகியவற்றின், எல்லையில் இச் சக்தியானது தொழிற்படும் போது யோகமாயை மறைக்கின்றது. 'ஆதிபரமசக்தி யாவற்றையும் கடந்து விளங்குகின்றது. உலகங்கட்கு அப்பால் விளங்கி வெளிப்படாத மூல ஆற்றலோடு படைப்போடு இணைந்து விளங்குகின்றது. பிரபஞ்ச மகாசக்தி யாவற்றையும் படைத்து ஆதரவாகநின்று, எண்ணிறந்த நிகழ்ச்சிகளை இயக்குகின்றது. மனிதனுடைய ஆளுமையையும் தெய்வீகத்தையும் இணைக்கும் பாலமாக வினங்குகின்றது (அன்னை)[3].

பரம்பொருள் ஏன் படைக்கின்றது? படைப்பு காப்பு ஆகிய இவ்வமைப்புகளின் நோக்கம் யாது? ஆனந்தம் என்பதே இதற்கு விடை. உலகப்படைப்பு சிவனது ஆனந்தத் தாண்டவத்தின் விளைவு. சிவனின் நோக்கம் ஆனந்தத் தாண்டவமேயாகும். இறைவன் களிபேருவகையுடன் நடனமாடுதலில் இவ்வுலகு உளதாகின்றது. நடனத்தில் உள்ள ஆனந்தமே இதன் நோக்கமாகும்.

மனித வாழ்வின் தனிச்சிறப்பு ஒழுகலாறு அல்லது அற வாழ்வாகும். இந்நிலை பரம்பொருளின் இயற்கையாகாது. ஏனெனில், பிராட்லியின் கருத்துப்படி பரம்பொருள் இன்பம், துன்பம் ஆகிய இருமை கடந்தது. ஒழுகலாறு தோற்ற உலகைச் சார்ந்தது என்ற கருத்தைக் கருத்து முதற்கொள்கையினராகிய பிராட்லி, பொஸாங்கே போன்றோர் கொண்டுள்ளனர்.

பரிணாம முறையில் அறவாழ்வு ஒருபடிநிலையாகும். சச்சிதானந்தம் என்ற பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகின்றது. இத் தூண்டுதல் விலங்கின வாழ்வில் அறச்சார்பு அற்றதாக இருக்கின்றது. மனித வாழ்விற்குக் கீழ்ப்பட்டதை

எல்லாம் அறம் அல்லாதனவாக விளங்குவதைப் போன்று, நமக்கு மேல்நிலையில் விளங்குவன அறத்திற்கு அப்பாற்பட்டனவாக விளங்கும் என்று அரவிந்தர் கூறுகின்றார். பொது உணர்வு விழிப்பு நிலையில் நாம் கொண்டுள்ள உணர்வைவிட விரிவானது; யாவற்றையும் உட்படுத்துவது. இதே போன்று இன்பம் என நாம் கொள்வதைவிட, பொதுவான ஆனந்தம் விரிவாக விளங்கி யாவற்றையும் உட்படுத்துவதாகும். இப்பொதுவான ஆனந்தம், இன்பம் துன்பம் ஆகிய இரண்டையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது. இவ்வின்பமும், துன்பமும், உடன்பாட்டு எதிர்மறை நிலைகளாகும். தோற்ற உலகில், விளங்குவனவற்றிற்கும் இன்ப துன்ப இருமை நிலை உண்டு. இவ்விருமை நிலைமையினின்று உயர்ந்த பரம்பொருளின் ஆனந்தமாக விளங்கும்போது, இன்பம் துன்பம் ஆகிய வேறுபாடுகள் நீங்குகின்றன. இன்பம், துன்பம்—இவையல்லாத நிலை ஆகியவை எல்லைக்குட்பட்டு விளங்குகின்ற ஆன்மாவினிடத்து விளங்குபவை. விழிப்பு நிலையில் இவை தோன்றுகின்றன. இவை முன்னிலையாகத் தோன்றி பின்னர் ஆனந்த நிலைக்கு வழி வகுக்கின்றன.

முன்னர் கருதியதுபோல நமது ஆன்மாவைச் சூழ்ந்துள்ள கோசங்களுள் உள்ளே விளங்குவது ஆனந்தமயகோசம். விஞ்ஞானமய கோசத்திற்கும் உள்ளே விளங்குவது ஆனந்தமயகோசம். இந்நிலையில் ஆனந்தமயமாக ஆன்மா விளங்குகின்றது. மனிதன் தன்னை உணரத்தலைப்படும்போது, முறையாகத்தான் சடமன்று, உயிர்தத்துவமன்று, மனமன்று என்று ஒவ்வொன்றாக நீக்கிஆனந்தமயமான ஆன்மா தான் என்று உணர்கிறான். உபநிடதம் கூறுவது: 'ஆனந்தத்தினின்று அனைத்தும் தோன்றுகின்றன. ஆனந்தத்தால் அவை யாவும் நிலைபெறுகின்றன; (ஆன்மாக்கள்) பிரியும் போது ஆனந்தத்துள் புகுகின்றன. இவ்வானந்தமே படைப்பு, படிமுறை வளர்ச்சி, வெளிப்பாடு ஆகியவற்றிற்குக் காரணமாகும். பரம்பொருள் படைப்பின் மூலம் எதையும் அறிய விரும்பவில்லை. பரம்பொருள் நிறையுடையது. ஆதலால் படைப்பின் மூலம் அடைய எதுவும் இல்லை. பரம்பொருள் முழுமையானது. நிறைவின்மை ஏதும் இலது. படைப்பு ஆனந்தத்தின் பொருட்டே மேற்கொள்ளப் பெறுகின்றது.

விஞ்ஞான மனம் (Supermind) இதனை உயர்மனம் என்றும், கடந்த நிலையில் விளங்கும் மனம் என்றும் குறிக்கலாம். சச்சிதானந்தம் என்னும் பரம்பொருளின் படைப்புக்கூறு இவ்வுயர் மனமாகும். பரம்பொருள் எல்லை கடந்த நிலையில், வரம்பற்ற நிலையில், ஆற்றல், உண்மை, ஆனந்தம் இருப்பு அல்லது உளதாந்தன்மை முதலியவற்றை உடையதாதலால், அது யாவற்றையும் ஒருங்கே

ஒரே சமயத்தில் வெளிப்படுத்துவதிலது. யாவற்றையும் ஒருங்கே வெளிப்படுத்தும் ஆற்றல் பரம்பொருளினிடத்துப் பொதிந்து விளங்குகின்றது. உயர்மனம், சிலவற்றைத் தேர்ந்து எடுத்து, அவற்றை மட்டும் வெளிப்படுத்துகின்றது. யாவும் ஒருங்கே வெளிப்படுமாயின், குழப்பம் நேரிடும்; ஒழுங்கு குலையும். படைப்பும் வெளிப்பாடும் உயர்மனத்தின் மூலமே நிகழ்கின்றது. பரம்பொருளினிடத்துக் கடந்த நிலையில் விளங்குவனவற்றை வெளிப்படுத்துவது உயர்மனமாகும்.

சச்சிதானந்தம் பரம்பொருளெனின் இறைவன் (God) என்பது உயர்மனமாகும். அதாவது காலம் இடம் ஆகியவற்றிற்கு உட்பட்டு விளங்குகின்ற இறைநிலையை உயர்மனம் எனலாம். பிரபஞ்சத்தைக் கடந்து அப்பாற்பட்டுப் பரம் பொருள் விளங்குகின்றது என்றால் உயர்மனம், இதன் கலந்த நிலையைக் குறிப்பதாகும். 'தெய்வீக வாழ்க்கை' என்னும் நூலில் அரவிந்தர் கூறுவது: அனைத்தையும் உள்ளடக்கும் அனைத்தின் தோற்றத்திற்குக் காரணமான அனைத்தின் நிறைவான உயர்மனம் தெய்வீக ஆற்றல் வாய்ந்தது. இது பரம்பொருளின் தன்னுண்மை நிலையன்று. அப்பொருள் உலகுகளைப் படைக்கும் தலைவனாக விளங்குகின்ற நிலை உயர்மனமாகும். இதையே நாம் இறைவன் என்று கூறுகிறோம்.''4 உயர் மனம் சச்சிதானந்தத்தையும், பிரபஞ்சத்தையும் இணைப்பது ஆகும். இவ்விணைப்பு மனத்தால் நிகழாது ஏனெனில், 'மனம் அறிவு பெறுகின்ற ஆற்றலன்று. முற்றுமுணர்வதற்குரிய கருவியுமன்று. அறிவு பெறுவதற்குரிய வாயிலாகும். மனம் தன்னால் இயன்ற அளவு தொடர்புடைய சிந்தனைகளைப் பெற்று வெளிப்படுத்த முயலும். அவ்வறிவைச் செயல் நிலைகளில் பயன்படுத்த முற்படும்' என்று அரவிந்தர் கூறுகிறார். ஆதலால், இணைப்பது மனத்திற்கு மேல் நிலையில் உள்ளதாக இருக்க வேண்டும். சச்சிதானந்தத்தின் உண்மை இயல்பைப் பெற்றிருக்க வேண்டும். அப் பொருளை, மறைத்தோ, சிதைத்தோ, குறைத்தோ இவ்வுயர் மனம் வெளிப்படுத்தக் கூடாது. அதே சமயத்தில் மனத்தின் ஆற்றல் நிறைவு பெறுகின்ற, முழுமை பெறுகின்ற வாய்ப்பாகவும் உயர்மனம் அமைய வேண்டும். உயர் மனத்திற்கு அப்பாற்பட்டு விளங்கினால் மட்டும் பயனின்று.

உயர்மனத்தை அரவிந்தர் உண்மையான கருத்து (**Real Idea**) என்று விளக்குகிறார். இப் பெயரை அரவிந்தர் அமைப்பதற்குக் காரணம்: 'உயர்மனம் உணர்வு ஆற்றலின் சக்தியாகும்; உள்பொருளை வெளிப்படுத்துவது; உள்பொருளினின்று வெளிப்படுவது. அதன் இயல்பில் பங்கு பெறுவது. (உயர்மனம்) வெறுமை அல்லது பாழின் சேயன்று. கற்பனைகளின் விளைவன்று.

உயர்மனம் அழியாத, மாற்றம் கொள்ளாத பொருளால் ஆனது. அது உணர்வுடன் மாற்றங் கொள்கின்ற பல வடிவங்களாக வெளிப்படுகின்றது'.5

அரவிந்தர் உயர் மனத்தை உண்மை உணர்வாகும் (Truth-Consciousness) என்று குறிப்பிடுகிருர். இப் பெயரை ரிக் வேதத்தினின்று பெறுகின்ருர். ரிக்வேதத்தில் ரித-சித் என்று வழங்கப்பெறுகின்றது. சத்யத்தின் உண்மை நிலையின் உணர்வாகும். அது முறைமை அல்லது ஒழுங்கு பெற்று செயற்படுகின்ற உள்பொருளின்—ரிதம்—வெளிப்பாடாகும். விரிவுற்ற தன்னுணர்வாகும். இதன் மூலமாகத்தான் உணர்வு இயல்கின்றது. மனத்தின் நிறைவும் முடிவும் உயர் மனமாகும்.

மனத்தின் இயல்பு இவ்வுணர்வாகும். இவ்வாறு உணரப்பெறும் பொருள்களின் வடிவத்தைப் பகுக்கொணுத முழுமையினின்று பகுக்கும் பகுதிகள் தனித்தியங்குவன அல்ல. அவை தனித்து இயங்குகின்றன என்று மனம் கருதுகின்றது. இப் பகுதிகளிலேயே மனம் அடைபட்டு இருக்க விரும்பாது. பகுதிகளைக் கடந்து முழுமையை அடைய ஓயாது முயலும். ஆனுல், இம் முயற்சிகளில் மனம் தோல்வியுறும்.

மனம் பரம்பொருளை அறிய இயலாது. காண்ட் (Kant) என்கின்ற ஜெர்மானிய அறிஞர் கூறுவதைப்போல முழுமையை அறிய மனத்தின் அமைப்பு இடம் தராது. இவ்வியலாமை இதன் அமைப்பிலேயே உள்ளது. மனம், எல்லையற்றதைத் தனது உடைமையாக்க முடியாது. எல்லையற்றதின் உடைமையாகப் பரம்பொருள் விளங்கலாம். மனம் உள்பொருளின் ஒளி பொருந்திய நிழலில் செயலற்றுக் கிடக்கலாம். மனம் எட்ட முடியாத படி நிலைகளில் புதையுண்டு கிடக்கும். காண்ட், மனத்திஞல் பெறக்கூடிய அறிவே மனிதன் பெறக்கூடிய அறிவு என்று கருதினுர். இது பிழையாகும். பரம்பொருளின் இயல்பை இத்தன்மையது என்று மனங்கொண்டு அறிய இயலாது. இவ்வுண்மையைக் காண்ட் உணர்கிருர். இது உண்மையே. முழுமையை உணரும் ஆற்றல் மனத்திற்கு இல்லை. முழுமையைச் சுருக்கித் தொகையாகப் பொருள்களின் கூட்டாக மனம் அறியும். இவ்வாறு முழுமையை அறிய முடியாத இயலாமையே பரம்பொருளை உணர்வதற்குத் தடையாக விளங்குகின்றது.

பெர்க்ஸோன் (Bergson) என்கின்ற ஃபிரஞ்சு அறிஞரும் மேற்கண்ட கருத்தையே மனஅறிவைப் பற்றிக் கொண்டிருந்தார். மனம் அல்லது அறிவாற்றல் கொண்டு அறியுமறிவு ஓர் அடிப்படையான குறையை உடையது என்று அவர் கருதினுர். இவ்வறிவு, எதையும் அறியும்போது அதன் கூறுகளாகப் பகுத்தே

அறியும். இவ்வாறு பகுத்து அறியும்போது முழுமையின் எளிய ஒருமைப்பாடு குலைகிறது. பின்னர் எவ்வளவு முயன்றாலும் பகுப்பு கொண்ட கூறுகள் மீண்டும் இணைந்து முழுமையை அறிவிக்காது. பகுத்தாய்வதால் பெறுகின்ற ஒருமைப்பாடு உண்மையான ஒருமையாகாது. இது ஒட்டுத்தையலாகும். உண்மையான ஒருமை, பகுப்பறியாதது. அது முழுமையானது (Integral Whole).

மனம் உயர் மனத்திற்கு உட்பட்டே இயங்குவதாகும். மனம் பகுப்பாய்வில் நிறைவு பெறாது. மீண்டும் பகுத்த கூறுகளை இணைத்து ஒருமை காண முற்படும். இம் முயற்சியில் மனம் முழு வெற்றி பெறுதல் கிடையாது. இம்முயற்சி உயர் மனத்தின் தூண்டுதலால் நிகழ்வதாகும். மனத்தின் உயர்வும் இம் முயற்சியிலேயே அடங்குகின்றது. மனம் தனது ஆற்றலைக் கடந்து விளங்க முயலும்போது தன்னைக் காத்துக் கொள்வதோடு உயர் மனமாகத் தன்னை மாற்றிக் கொள்கின்றது.

உயர்மன நிலையினின்று வீழ்ந்த நிலையே மனமாகும் ஆதலால், மீண்டும் தான் தனது நிலையை உயர்நிலையைப் பெற முயல்வது இயற்கையே. உயர் மனம், தனது நிலையினின்று தாழ்ந்து, மனமாதல் படைப்பின் இன்றியமையாத கூறாகும். சடமல்லாதது, பிரபஞ்சத்தினுள் இறங்குகின்றது. இவ்விறக்கம் ஆன்மா (SPIRIT) தனது பழைய நிலையைப் பெறுவதன் பொருட்டாகும்.

மேற்கண்ட உண்மைகள் மனத்தின் பொதுவான குறைகளாகும். தனி மனிதனிடத்தில் மேலும் இக் குறைகள் வலுத்து விளங்குகின்றன. மனம் மனித நிலையில் உடலோடு ஒன்றிய நிலையில் தொழிற்படுகின்றது. உடல், மூளை, நரம்பு மண்டல அமைப்பு ஆகியவற்றை இடையறாது தொழிற்படுத்தியே மனம் மனித நிலையில் அறிகின்றது. மனம் மூளை முதலியவற்றைப் பயன்படுத்தித் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முற்படுகிறது. உடல் முதலிய கருவிகளைக் கொண்டு மனம் தனது தூய நிலையை அறிய எப்போதும் முயன்ற வண்ணம் உள்ளது. இவ்வுண்மை மனத்தின் புறநிலைக்குப் பெரிதும் பொருந்தும். ஆனால், மனத்தின் ஆழத்தில் பிறிதொரு நிலையுண்டு. அதனை அடிமனம் (Subliminal Mind) என்று கூறுகிறோம். இவ்வடி மனம் உடல் முதலியவற்றால் கட்டுறாது தொழிற்படும். இவ்வடிமனம் புறமனத்தை உந்தி மேலும் உயர்நிலை அடையத் தூண்டுகிறது. மனம் உயர்மனத்தின் ஒரு வடிமமே ஆகும். இவ்வுயர் மனத்தோடு மனம் தொடர்பு கொண்டே விளங்குகின்றது. மனம் தன்னைத் தாங்கும் எல்லையற்ற தன் உண்மையையும் ஆற்றலையும் உணராது இருக்கின்றது.

மனம் தன் உயர்மனத்தோடு ஒருமைக்கொண்டு இயைந்து தொழிற்படுவதை உணராது இருக்கின்றது. ஆனால், மனம் எல்லைக்குட்பட்ட அறிவையும், அறியாமையையும் கடக்கும் ஆர்வம் உடையதாகின்றது. மனம், ஆன்மீக மனங்கடந்த உணர்வினின்று பிரிக்கப்பெறும்போது அறியாமை ஏற்படுகிறது. மனம் மாற்றம் பெற்றுத் தெய்வீகத்தன்மை பெறுகின்றபோது எல்லையற்ற அறிவைப்பெறுகின்றது. ஆற்றலையும் பெறுகின்றது. உயர் மனம், பகுக்கொணாத, யாவற்றையும் உட்படுத்தும் உணர்வாகும். மனங்கடந்த உணர்வு (Supramental Consciousness) வெளிப்படும்போது மனம், உயிராற்றல், உடல் ஆகிய யாவும் இறைவன் வெளிப்படுவதற்குரிய கருவிகளாகும். மனத்திற்கு மேல்நிலையில் பல உணர்வுப் படிநிலைகள் உள. மேலான மனம், தெளிவு பெற்ற மனம், உள்ளுணர்வான மனம், மிகுமனம் எனப் பல உணர்வு நிலைகள் உள (Higher mind; Illumined mind; Intuitive mind; Over mind). இவை ஒவ்வொன்றாகப் படிமுறையே தனியொருவனிடத்தில் இறங்கி மாற்றம் விளைக்கும். இவ்வுணர் நிலைகளை நோக்க மனம், கீழெல்லையில் உள்ளது உணர்வின் கீழ் எல்லை. உடல் அமைப்பில் தோன்றுகின்ற உணர்வு மனமாகும். உடற் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே மனம் ஈடுபடுகின்றது. மேற்கண்ட உணர்வு நிலைகள் படிமுறையே அறியாமையை அகற்றி அறிவு கொடுக்கும்.

## உயர்மனத்தின் மூவகை நிலை
## (Triple status of the supermind)

உயர் மனத்திற்கு மூவகை நிலை உண்டு. அதன் உயர்ந்த நிலை சச்சிதானந்த பரம்பொருளோடு தொடர்புற்று விளங்குகிறது. இந் நிலை ஒருமையுணர்வாக விளங்குகின்றது. சச்சிதானந்தம் இடம் காலம் ஆகிய எல்லைகட்கு உட்பட்டு விளங்குகின்ற நிலை. உயர்மனத்தின் இரண்டாவது நிலை–பிரபஞ்ச படைப்பு முழுமையும் பொதிந்து விளங்குகின்ற நிலை. இது இரண்ய கர்ப்பம் போன்றது. பிரபஞ்சம் மூட்டை அல்லது விதை போன்றது. இதிலிருந்தே பிரபஞ்சம் தோன்றுகிறது. சச்சிதானந்த ஆற்றல்கள் யாவும் வெளிப்பட்டு நிற்கின்ற நிலை இதுவாகும். உயர் மனத்தின் மூன்றாவது நிலை, மனம் உயிராற்றல், சடம் ஆகியவையாக வெளிப்பட்டு நிற்கின்ற நிலையாகும். இம் மூவகை நிலைகளுக்குள்ளும் உணர்வே முக்கியக்கூறு.

உயர்மனம் மேற்குறித்த நிலைகளுள் முதல் நிலையில் விளங்கும் முழுமையும் ஒருமை நிலையுள் விளங்குகின்றது. பிரபஞ்சம், வெவ்வேறு உள்பொருள்கள் ஆகிய யாவற்றையும் உட்படுத்தி ஒருமை நிலையில் உயர்மனம் உணர்கின்றது. உள்ளார்ந்த நிலையில்

விளங்கிய பன்மை, பலவாந் தன்மை, இரண்டாவது நிலையில் வெளிப்படுகின்றது. சச்சிதானந்தத்துள் பொதிந்து விளங்கு கின்ற நிலைகள் யாவற்றையும் கண்டு இயக்க ஆற்றலுடன் வெளிப் படுத்துவது இந் நிலையாகும். உயர் மனம் தம் உணர்வையும் சச்சிதானந்தத்தினிடமிருந்து பெறுகின்றது.

சச்சிதானந்தம் கடந்த நிலையில் விளங்கி உயர் மனத்தின் மூலம் தொழிற்படுகின்றது. சச்சிதானந்தத்துள் உணர்வு, உளதாந் தன்மையாக விளங்குகின்றது. இத் தன்மை ஆனந்தமாகவும் இருக்கின்றது. ஆனந்தம் உணர்வாகவும் விளங்குகின்றது. உளதாந்தன்மை, உணர்வு, ஆனந்தம் ஆகியவை தனித்தனியே சச்சிதானந்தத்துள் விளங்குவன அல்ல. இவை பிரிப்பின்றி விளங்குவன. படைப்பின் ஊடகமாக விளங்குவது உயர் மன மாகும். இவ்வூடகமின்றிச் சச்சிதானந்தம் தன்னை வெளிப்படுத்த இயலாது.

உயர்மனம் மூவகைகளில், மூன்று நிலைகளிலும் தொழிற்படு கின்றது. முதல் நிலையில் உயர்மனம், காலம், இடம் ஆகியவற் றிற்கு உட்பட்ட சச்சிதானந்தமாகும். இந் நிலை சச்சிதானந் தத்தின் உள்ளார்ந்த நிலையாகும் (Immanent). இரண்டாவது நிலையில் உயர்மனத்தினிடத்து பலவாந்தன்மையும் பன்மையும் தோன்றுகின்றன. ஆனால், இவை ஒருமை நிலையிலேயே விளங்கு கின்றன. உணர்வாற்றல் உயிர்ப்பன்மையாக, இயற்பொருள் பன்மையாக வெளிப்படுகின்றது. இந் நிலையிலும் ஆன்மாக்கள் ஒருமை நிலையிலே விளங்குகின்றன. புருஷன், பிரகிருதி, ஆன் மாக்கள், உள்பொருள் ஆகிய யாவும் இந் நிலையில் பொதிந்து விளங்குகின்றன. இவையனைத்திற்கும் உள்ளார்ந்த ஒருமை நிலவுகின்றது. பல ஒன்றினிடத்து ஒன்றி விளங்குகின்றன; ஒன்று பலவாக வெளிப்படுகின்றன. மூன்றாவது நிலையில் ஆன்ம பன்மை ஏற்படுகின்றது. இவற்றிற்குத் தனித்தனியே இருப்பு உண்டாகின்றது. ஆன்மாக்கள் பிரகிருதியினிடத்துத் தனித் னியே இருப்பிடம் பெறுகின்றன.

## ஆன்மாவும் விடுதலையும்

மனிதனிடத்து இரண்டு ஆன்மாக்கள் உள. ஒன்றை ஆத்மன் என்று வழங்குகின்றோம். மற்றொன்றை ஜீவாத்மன் என்கின்றோம். முன்னதைச் சைதந்ய புருஷன் என்று அரவிந்தர் குறிக்கிறார். ஜீவாத்மன் சச்சிதானந்தத்தின் கூறு ஆகும். தெய்வத்தினின்று சிதறிய ஒளி பரமாத்மனின் கூறு, தனித்தன்மையைக் கடந்து விளங்குவது. அது என்றும் தூய நிலையில் விளங்குவது. ஜீவாத் மன் உலக நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது கிடையாது. அது

என்றுமுள்ளது. மாருதது எல்லாமுணர்வது, ஆனந்தமயமானது. உள்ளது. கடந்த நிலையில் விளங்குவது; ஜீவாத்மன் சாட்சியாக விளங்குவது. தனி வாழ்வின் பின்னுல் அமைவது.

நமக்குப்புற, அக ஆன்மாவென்று இரு ஆன்மாக்கள் உண்டு. அக ஆன்மாவை ஜீவாத்மன் என்று கூறுகிறோம். புற ஆன்மா சைதந்ய புருஷனுமாகும். அரவிந்தர் கூறுவது: 'ஜீவாத்மன் பிரித்தும், இணைத்துமறியலாம். பரம்பொருள் கூறு என்று ஜீவாத்மனைக் கீதை கூறுகிறது. பரம்பொருளின் பரம உணர்வின் பல் வேறு நிலைகளுள் ஜீவாத்மனும் ஒன்று எனலாம். இந்த ஜீவாத்மன் எல்லோரிடத்திலும் ஒரே தன்மையதாய் இருக்கும். உலகப்பற்று ஏதுமில்லாமலிருப்பது; அது கடந்த நிலையில் விளங்குவது. அது தனித்து விளங்கினுலும், அதன் உண்மைநிலை பொதுவானதாகும், ஜீவாத்மாக்களிடையே புறநிலையில் வேறுபாடு இல்லை என்ருலும், அவை தனித்தனியே சுபாவத்தன்மையை வெளிப்படுத்துவன வாகும். நமது ஆன்மாக்கள் ஜீவாத்மனிடத்து ஒன்றுவதில்லை. ஜீவாத்மன் இறையோடு ஒன்றுகின்றது. ஒருமைப்பாடும் உண்டு.

## சைதந்ய புருஷன்

ஜீவாத்மனின் பிரதிநிதியாக சைதந்ய புருஷன் விளக்குகின்றது. சைதந்ய புருஷன் உள்ளார்ந்த நிலையின் வெளிப்பாடு ஆகும். ஜீவாத்மன் சச்சிதானந்தமென்ருல் சைதந்ய புருஷன் நமது ஆன்மாவாகும். அரவிந்தர் கூறுவது: 'இதனை சமஸ்க்ருதத்தில் புருஷன் என்று வழங்குவர். இப் புருஷன் மறைப்புண்டு விளங்குவது; இது இறைவனின் கூருக விளங்குவது. இது கனல் போன்றது. உணர்வற்ற நிலை அடர்ந்து இதன்மீது படிந்து இருத்தலால் இதன் உண்மை நிலை புலப்படுவதில்லை. இறையிடமிருந்து தோன்றிய கனல் இதுவாகும். இது அறியாமையினுள், ஒளியோடுகூடி விளங்குவது. இது வளர்ச்சி பெற்று அறிவைப் பெறுகின்றது. இது மறைந்திருந்து சாட்சியாக விளங்கி உள்ளிருந்து வழிகாட்டுவது. இது அனுபூதித் செல்வரது அகத்தொளிரும் ஒளி. இது பிறவிதோறும் விளங்கி மரணத்தால் தாக்குருது, அழிவு கேடு முதலியன அடையாது என்றென்றும் நிலைத்து நிற்பது. இது அழிக்கவொண்ணுத தெய்வீகப் பொறியாகும்.6

புருஷன் அல்லது ஆத்மன் நமது அன்ருட வாழ்க்கையில் நேர்முகமாகப் பங்கு பெறுதலில்லை. பிறவிதோறும் மாறி மாறி புதிய புதிய உடலினுள் புகுகின்றது. ஆத்மன் நம்மிடத்து நன்கு விளங்குகின்றபோது, அனைத்துச் செயல்கட்கு நடுநாயகமாக விளங்கும். நமது அறியாமையை மாற்றி அறிவை மலரச் செய்யும், அது ஆன்ம வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கும்.

ஒருவன் தனது உண்மை வடிவத்தை உணரும்போது மனம், உயிராற்றல் முதலியன இயக்கும் (யாவற்றையும்) சூழ்நிலையி லுள்ளன. இவை தூய்மையடையும். பின்னர் ஆன்மா இவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்துகின்ற நிலை ஏற்படும். புருஷன் என்பது எரியும் கனலைப் போன்றது. இரு இயக்கமுள்ளது, வளர்ச்சி பெற்று ஆன்மாவுடன் ஒன்றிய உணர்வைப் பெறுகிறது.

இரு ஆன்மாக்கள் என்று நாம் மேலே குறித்ததைப் பிறழ உணரக்கூடாது. ஜீவாத்மன் என்றும், ஆத்மன் என்றும் கூறுவ தற்குப் பொருள் வேறு. நம்முள் உள்ளார்ந்த நிலையில் சச்சிதா னந்தத்துடன் இணைந்து விளங்குவது ஜீவாத்மனாகும். அதற்குப் புறத்தே உள்ளே விளங்குவது புருஷனாகும். உணர்வு, ஆற்றல், உளதாம் தன்மை படைப்பாற்றல் போன்றவை தனித் தனியே விளங்குவனவல்ல. ஆன்மாவின் இருவேறு கூறுகளாகக் கருதும்போது, இவை நமக்குப் புரிகின்றன. நாம் சச்சிதானந்தப் பரம்பொருளோடு ஒன்றுபட்டு விளங்குகிறோம். அதே சமயத்தில் நமக்குத் தனித் தன்மையும் விளங்குகின்றது.

## மோட்சம் அல்லது வீடுபேறு

தன்னுணர்வு என்பது சச்சிதானந்தத்துடன் ஒன்றுதல் என்று பொருள் படாது. அரவிந்தர் கூறுவது ஆத்மனை அறிதல் பிரம் மத்தை உணர்தலன்று. நம்மை உணர்தல் என்றால் சச்சிதானந்த மாக ஆதலாகும். புருஷநிலையை உணர்தல் ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டுவதாகும். சச்சிதானந்த உணர்விற்கு வேண்டிய அளவு உணர்வு வளர்ச்சி பெறவில்லை என்று கூறவேண்டும். பிரபஞ்சத்தினுள் தெய்வீகப் பிறப்பு எடுப்பதே வீடு பேறாகும். இந்நிலையில் தெய்வத்தன்மை பொருந்தியவனாக மோட்சம் பெற்றவன் விளங்குதலால் அவனது உடல், வாழ்வு, மனம், ஆன்மா ஆகிய யாவும் தெய்வ நிலையை எய்துகின்றன. விஞ்ஞான மனத்தோடு இணைந்த பெருவாழ்வு அவன் வாழ்தலால் நிலவுலகில் வாழ்ந்தாலும் தெய்வீக வாழ்வாக அது கருதப்பெறும். விஞ்ஞான மனிதர் (Supermen) பிறக்கும்போதே அறிவாற்றல் களில் சிறந்து விளங்குகின்றனர். அவர்களை அறிவு நெறிக் கோட்பாளர் (Gnostic beings) என்று அரவிந்தர் வழங்குகின்றார். அவர்கள் அனுபூதியறிவு சான்றவர்கள், இவர்களுக்கு எல்லையற்ற உணர்வும் ஆற்றலுமுண்டு. தீய உணர்ச்சிகள் ஏதுமிலராக, அகந்தை உணர்வு சிறிதும் இல்லாதவர்களாக இவர்கள் விளங்கு கின்றனர். இவர்களிடத்து விளங்கும் எல்லையற்ற உணர்வும் ஆற்றலும் நிலையினின்று தாழ்ந்தவர்களை உயர்த்த உதவும். மனித சமுதாயத்தில் உள்ள அறியாமையை அவர்கள் அகற்று வார்கள். அவர்கள் வாழுமுயர்க்குலத்தை விஞ்ஞான மயமாக்கு

வார்கள் (Supramentalisation). ஒருவிளக்கு மற்றொன்றைத் தூண்டுகின்றது; ஒளி பெறச் செய்கிறது. இவ்விளக்கு மற்றொன்றை ஒளிரச் செய்கின்றது. விஞ்ஞான மனம் (Supermind) ஒளிகாலும் விளக்கு போன்றதாகும். அனைத்து ஆன்மாக்களையும் தூண்டித் துலங்கச் செய்யும்.

தெய்வீக விஞ்ஞான மனம் படைத்த ஒருவன் தோன்றினாலும் பிரபஞ்ச படிமுறை வளர்ச்சியில் ஒருநிலை எய்தினோம் என்று பொருளாகும். விஞ்ஞான மனம் படைத்தவன் நிலவுலகில் பிறந்தால் மனிதனின் முழு மாற்றமும் ஏற்றமும் விரைந்து நிகழும். மிகப் பலர் மாற்றங்கொள்வர். பலர் மாற்றம் கொள்வதால் பிரபஞ்ச மாற்றம் விரைந்து நிகழ்வதாகும். மிகப்பலர், விஞ்ஞான மனிதர்களாக மாற்றம் பெறுவர். இவர்கள் பிரபஞ்சத்தின் மாற்றத்தை விரைவுபடுத்துகின்றனர். இவ்வனுபூதிச் செல்வர்கள் மக்களைக் காக்கவும் மீட்கவும் துணைபுரிகின்றனர். மக்களது ஆன்மீக உணர்வு ஓங்குகின்றது. இறுதியில் பிரபஞ்சம் முழுமையும் உய்கின்றது. எல்லோரும் தெய்வத் தன்மை பெறுகின்றனர். நிறைவற்ற நிலை நீங்குகின்றது. விஞ்ஞான மனம் புருஷன்மீது தனது ஆட்சியைச் செலுத்தினால் உணர்வு, உண்மை, ஆனந்தம் ஆற்றல் ஆகியவை மென்மேலும் தொழிற்பட்டுச் சச்சிதானந்தத்துடன் ஒன்ற வழிவகுக்கும். தெய்வீக இடையீடின்றி நாம் மேலான உணர்வைப் பெற இயலாது என்பது அரவிந்தர் கருத்தாகும்.

வீடுபேறு என்பதை உயர்ந்த நிலையில் இருப்பது என்று அரவிந்தர் கருதுகிறார். இது தெய்வீகப் பிறவியாகும். தனி மனிதன் தெய்வீகத் தன்மை பெறுகின்ற போது அல்லது விஞ்ஞான மனிதனாகும் போது எல்லாம் அறிதல், எல்லாம்வல்ல நிலை, தெய்வீக ஆற்றல்கள் ஆகியவற்றை உணர்கிறான். மனிதனின் குறிக்கோள், விஞ்ஞான மனிதனாதல் ஆகும். மனிதன் தெய்வத் தன்மைபெற்று நிலவுலகில் வாழும்போது அவன் நிறைவையும் முழுமையையும் பெறுகின்றான். மோட்சம் என்பது மனிதனிடத்து விளங்குவனயாவும் நிறைவுபெறுதலாகும். தெய்வீக ஆற்றல் தனி மனிதனிடத்து வளர்ச்சி பெறுதலாகும். மோட்சம் என்பது கட்டற்ற நிலையன்று; கட்டுண்ட நிலையினின்று தப்புதலும் அன்று. ஆத்திக தரிசனங்களுள் ஆன்மாவை அடைபட்ட புள்ளாக விளக்கியுள்ளனர். மோட்சம் என்பது புள் தனது சிறையினின்று விடுதலை பெறுதலாகும். பிரகிருதியின் கட்டுப்பாட்டினின்று நீங்குதல் வீடு பேறாகும். அரவிந்தர் கருத்துப்படி இயற்கை கூடன்று, சிறையன்று. இறைவன் இயற்கையாக விளங்குகின்ற காரணத்தால் பிரகிருதியினின்று தப்பி நீங்குதல், வீடு பேறாகாது என்பது

அரவிந்தர் கருத்து. வீடுபேறு என்பது நாம் அறியாத நிலத்தில் தங்குதலுமன்று. உடல், உள்ளம், உயிராற்றல் போன்றவை அழிந்த நிலையில் பெறுதலும் மோட்சமன்று. வீடுபேறு என்னும் நிலையில் மனம் முதலிய யாவும் தெய்வீக உருமாற்றம் பெறுதலாகும். இம் மாற்றத்தால் நிறைவு பெற்ற வாழ்வால், உடல் ஒளி பொருந்தியதாகின்றது; மனம் எல்லாவற்றையும் அறியுந் திறன் பெறுகின்றது; வாழ்வு அமரத்வம் பெறுகின்றது; ஆன்மா விஞ்ஞான மனத்துடன் ஒன்றுகின்றது. அரவிந்தர் பூரண நிலையை வீடுபேற்றிலும் காண்கின்றார். முழுமையான மாற்றம் விஞ்ஞான மனிதனாக விளங்குவது, தெய்வம் நிலவுலகில் நடமாடுவதைப் போன்றதாகும். விஞ்ஞான மனிதனின் உணர்வாற்றல் சடத்தன்மை பொருந்தியதை தெய்வீகத்தன்மை உடையதாக மாற்றுகின்றது. அபர—பிரகிருதி பரா—பிரகிருதி பாக கீதை கூறுவதுபோல் மாற்றம் ஏற்படுகின்றது. விஞ்ஞான மனிதனிற்கு உணர்வு எல்லையற்று விளங்குகின்றது. ஆனால், நிலவுலகு உணர்வோடு தொடர்பு கொண்டு விளங்குதலால், இயற்கையை மாற்றி அதனைத் தன் வழிப்படுத்தி இயக்க இயலுகின்றது. இந்த விஞ்ஞான உணர்வு, தெய்வீக ஒளியை இந்நில உலகில் பரப்புதலால் சடத்தன்மை விரைந்து மாற்றம் கொள்கின்றது.

## மூவகையான விஞ்ஞான மனிதர்

விஞ்ஞான மனிதனுக்கும், சச்சிதானந்தப் பரம்பொருளுக்குமிடையே பல படிநிலைகள் உண்டு. அனுபூதி அறிவு நெறிக் கோட்பாளர், பல நிலைகளில் விளங்குகின்றனர். அவர்கட்கு அகம் என்பது சிறிதும் கிடையாது. நிறைவற்ற நிலை கிடையாது; அறியாமை இல்லை. அவர்களிடம் சர்வவல்லபம், முற்றுணர்தல் போன்றவை விளங்கும். தெளிவு பெறுதலிலும், படிநிலைகள் உண்டு. இஃதேபோன்று பிற ஆற்றல்களிலும் படிநிலைகள் விளங்குகின்றன. இவர்களுட் சிலருக்குக் கூடுதலான நிறைவும் தெய்வத்தன்மையும் உண்டு. விஞ்ஞான மனிதர் படிமுறையே சிறந்து முடிவில் சச்சிதானந்தப் பரம்பொருளாகின்றனர்.

## மூவகையான உருமாற்றம்

இம் மூவகை மாற்றங்களை அரவிந்தர் புருஷ மாற்றம், ஆன்மீக மாற்றம், விஞ்ஞான மாற்றம் என்று குறிக்கின்றார் (Psychic change; Spiritual change; Supramental change).

## புருஷ மாற்றம்

நமது ஆன்மாவை மறைக்கும் திரை நீங்கப் பெறுதலே இம் மாற்றம். ஆன்மாவை என்றும் தூயதாக தெய்வீகக் கனலாக

நம்மிடத்து விளங்குவது என்று அரவிந்தர் விரிக்கின்றார். இவ் வான்மா. வாழ்க்கையில் நிகழ்கின்ற அனுபவங்களால் தாக்குறாது, மங்காமல் விளங்குகின்றது. ஆன்மா மட்டும் தூயதாக விளங்கினால் போதாது. இவ் வான்மாவிடமிருந்து வெளிப்படும் ஒளி நமது இருப்பு முழுமையினிடத்தும் புகுந்து மாற்ற வேண்டும். நமது வாழ்க்கை, மனநிலைகள், சடக்கூறுகள் ஆகிய யாவற்றிலும் ஆன்மவொளி ஊடுருவிப் பாய்தல் வேண்டும். இவ்வாறு பாய்ந்தால் புருஷ மாற்றம் நிகழ்ந்ததாகக் கொள்ள இடமுண்டு. உணர்ச்சிகட்குச் சிறந்த போக்கு வீடு அமைய வேண்டும். அவை பண்படுத்தப்பெற வேண்டும். இவ்வாறு பண்படுத்தலாலேயே உணர்ச்சிகள் மாற்றம் பெற்று ஆன்ம மாற்றத்திற்கு வழிவகுக்கும். யோகப் பயிற்சி இத்தகைய மாற்றத்தை விளைப்பதாகும். இப் பயிற்சி நம்முன் ஆன்மாவை விழித்தெழச் செய்யும்.

இத்தகைய ஆன்ம மாற்றமும் (Psychical change) போதியதாகாது. இதற்குத் துணையாக ஆன்மீகமும் (Spiritual change) தேவையாகின்றது. முன்னர் குறித்ததுபோல் ஆன்மாவில், புற, அக நிலைகள் உண்டு. ஒன்று புறமாற்றம், மற்றொன்று அகமாற்றம். ஆன்மீக மாற்றம் என்பது, உயரிய நிலையில் உள்ள ஒளியானது நமது உடலுள் இறங்குவதாகும். இத்தகைய ஒளியானது நமது உடலுள் புகுந்து தொழிற்படும். இத்தகைய ஒளி புகாவிடில் நமது வாழ்க்கை, சடம், உயிராற்றல், மனம் ஆகியவற்றுள் கட்டுண்டு விளங்கும்; வளர்ச்சி இவற்றினிடத்து நிகழும். முதலிலே கூறிய மாற்றம், பின்னர் கூறிய மாற்றத்திற்குத் துணை செய்வதாகும். புருஷ மாற்றம் ஒரோவமயம் பரம்பொருளைப் பற்றிச் சிற்சில சமயங்களில் நாம் காட்சி பெறத் துணை செய்யலாம். ஆனால், இக் காட்சிகள் நிலையானவையல்ல; மாறுவன. ஆதலால், ஆன்மீக மாற்றம் தேவையாகின்றது. இம் மாற்றத்தால் நமக்குப் பரம்பொருள் உணர்வு நிலைத்ததாகின்றது. நமது இயற்கை விரிவடைகின்றது. இறவாமை என்பது நமக்கு இயல்பான தன்னுணர்வாகின்றது. பரம்பொருள் அண்மையில் இருப்பதாக உணர்கிறோம். அப் பொருளின் ஆட்சியை நாம் உணர்கிறோம். அதன் ஆற்றல், நம்முள்ளும் யாண்டும் தொழிற்பட உணர்கின்றோம். பரம்பொருளின் அமைதி, இன்பம் ஆகியவை நமக்கு இப்போது பருப்பொருள்களாக விளங்குகின்றன. யாண்டும் காண்பனவெல்லாம் என்றுமுள்ள பரம்பொருளாக உள்பொருளாக அமைகின்றது. அரவிந்தர் ஒருசமயம் தமது சீடர்களோடு அளவளாவும்போது கூறியது: 'எடுத்துக் காட்டாக நான் இப்போது இந்த அறையைச் சுற்றி நோக்குங்கால் எங்கெங்கும் பிரம்மத்தையே காண்கின்றேன். இல்லை இது, சிந்தனை மட்டும் அன்று. நிதர்சனமான, கண்கூடான, நிச்சயமான

ஓர் அனுபவம், இந்தச்சுவர், அந்தப் புத்தகக்கள் எல்லாம் பிரம்மம்; இப்போது உன்னை நான் டாக்டர் 'M' ஆகக் காண வில்லை. இறைவனில் வாழும் இறைவனுகவே உன்னைக் காண் கின்றேன். அற்புதமானதோர் அனுபவம் இது–ஆன்மீக மாற் றத்தின் விளைவு, எவ்வுயிரையும் அன்போடு தழுவுகின்ற நிலையாகும். அனைத்து உயிர்களையும் ஒரே பரம்பொருளின் படைப்புகளாகக் கருதுகின்ற நிலை ஏற்படும்.

மூன்ருவதாக நிகழும் மாற்றம் உணர்வற்ற நிலையினின்று அறிவு பெறுவதாகும். இது விஞ்ஞான மாற்றமாகும் (Supramental Change), மனங்கடந்த நிலையில் இம் மாற்றம் நிகழ்வ தாகும். விஞ்ஞான மனம் ஏற்றம் பெறுகின்றது. இவ்வேற்றத் திற்கு ஒத்த இறக்கம் நிகழ்கின்றது. விஞ்ஞான மனம் நம்முள் இறங்குகின்றது. படிமுறை வளர்ச்சியில் உள்ள பல்வேறு படி நிலைகள் விஞ்ஞான மாற்றத்திற்கு முன் நிகழ்பவையாகும். இம் மாற்றம் நிகழ்வதற்கும் ஆயத்தம் செய்யும் படிநிலைகளாகும். உண்மையான மாற்றம் நேரிட நேரடியான, மறைப்பு இல்லாத இடையீடு மேலிருந்து நிகழ வேண்டும். இவ்வாறு மேலிருந்து நாம் துணை அல்லது உதவி பெறுவதற்கு முற்றிலும் நமது கீழ்நிலை உணர்வை ஒப்படைத்தல் வேண்டும்; சரண்புகுதல் வேண்டும்.

### சரண்புகுதலும் இறையருளும்

எவ்விதப் பயமோ ஆபத்தோ இன்றி நாம் இயங்க தெய்வீக அன்னையின் திருவருளும் நம்பிக்கையும் இன்றியமையாதன. நம்மைக் கடந்து விளங்குகின்ற பேராற்றல் ஒன்று உண்டு என்று நாம் உணர்ந்து அதனிடத்து நம்மைப் பூரணமாக ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். நாம் நேரிய நிலையில் எதனையும் எதிர்பார்க் காமல் முழுமையாக முற்றிலும் ஒப்படைக்க வேண்டும். நம்மி டத்து உள்ள அனைத்தும் தெய்வீக அன்னைக்கே உரிமையானவை என்ற உணர்வு முறுகி எழுந்து செயற்படவேண்டும். முற்றிலும் சரண்புகுந்தால்தான் இறையருள் நம்மைக் காக்கத் தலைப்படும். இறையருளில் அணுத்துணை நமக்கு அமைந்தாலும் அதுகளாலும் எவ்வித அச்சமுமின்றி நம்மால் வாழ்தல் இயலும். நாம் நமது முயற்சியினுல் விஞ்ஞான மனத்தை இறங்கச் செய்ய இயலாது. நாம் நம்மை ஆயத்தம் செய்து கொள்ளலாம். விஞ்ஞான மனம் நம்மிடத்துத் தொழிற்படும்போது நமது ஆளுமை முழுமையான மாற்றம் காணும். மாற்றம் நிகழப் பெற்றவர்கள் உணர்வாற் றலின் தொழிற்பாட்டில் பங்குபெறுவர். புருஷன் தனது செயலாற் றலினைத் தானே இயக்கி தன்வழிப்படுத்த இயலும். தான் தன் னுணர்வோடு பிரபஞ்ச ஆற்றலின் செயற்படுத்தும் ஆளாக உணர்வான். இவ்வாற்றலும் முழு மாற்றம் பெற்றவன் மூலம் தொழிற்படும். இவனும் அவ்வாற்றல் மூலம் தொழிற்படுவான்,

## சித்தி

சித்தி என்பது முடிவாகப் பெறுவதாகும். இது நிறைவான நிலையாகும். இந்நிலை ஜீவன் முத்தி நிலையை ஒத்தது. சித்தி பெற்றவன் தனது கடமைகளை ஆற்றிக் கொண்டு ஏனைய மக்களைப் போலவே வாழ்கின்றான். கடமைகளைப் பற்றின்றி ஆற்றுகிறான். 'அகம்' என்பது சிறிதும் அவனிடத்தில்லை. அகங்காரம், மமகாரம் அல்லது 'யான்' 'எனது' என்னும் அகப்பற்று, புறப்பற்றுகள் நீங்கி தொழிற்படுகின்றான். இவன் பேராற்றலின் கருவியாகத் தன்னை உணர்கின்றான். இவன் சாட்சியாக விளங்குகின்றான். இவன் தனது சூழ்நிலையில் நிகழும் எந் நிகழ்ச்சியிலும் தொடக்குறாது வாழ்கின்றான். இத்தகைய நிலையைத்தான் சித்தி என்று வேதாந்தம் குறிப்பிடுகின்றது.

சித்தி கைவரப்பெற்ற ஒருவன் அதனைத் தன்னுடைய உடைமையாக்கிக்கொள்ள தொடர்ந்து சாதனையில் ஈடுபடுதல் வேண்டும். நீண்ட சாதனையின் விளைவாலோ அல்லது இறையருளாலோ ஒருவனுக்குச் சித்தி நேரிடுகின்றது. தன்னுணர்வு ஏற்படும்போது, ஒளியுணர்வைப் போன்றதொரு நிலை ஏற்படும். இவ்வொளி தோன்றி மறைவது, இவ் ஒளியின் தோற்றம் அவனது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றது. ஐயங்களை எல்லாம் அகற்றுகின்றது. வெற்றியை உறுதிப்படுத்துகின்றது. தன்னுணர்வு தொடர்ந்து நிலைபெறுதல் வேண்டும். இது இவனது உணர்வில் நிலையான இடம் பெறவேண்டும். பெற்றால் அது முதிர்ந்து பயன்தரத் தலைப்படும். தன்னுணர்வை ஆத்மா சாட்சாத்காரம் என்பர். சித்த புருஷன் ஆன்மீக நிறைவு பெற்றததால்தான் பரம்பொருளோடு ஒன்றியிருக்கின்ற உணர்வை ஒருபுறம் பெற்றிருந்தாலும் மறுபுறம், தனது உடல், உள்ளம்ஆகியவற்றால் ஈடுபடும் செயல்களால் தன்னை மறக்காமல் தனது ஆன்ம உண்மையில் நிலைபெற்றிருக்கிறான். இதனை ஆத்ம சாட்சி என்பர். சித்த புருஷன் சில சமயங்களில் புறச் செயல்களில் ஈடுபட விரும்பாது தன்னுள் ஆழ்ந்து விளங்குவான். சித்த புருஷன் ஒன்று புறச் செயல்களில் ஈடுபடுவான் அல்லது தன்னுள் ஆழ்ந்து தனது ஆன்ம அனுபவத்தில் இலயித்து விளங்குவான். உபநிடதம், கதை போன்ற நூல்கள் சித்த புருஷன் செயற்படுவதை விரும்புகின்றன. சித்த புருஷன் தனது கடமைகளைப் பற்றின்றி (பயன் தூக்காமல்) தன்னைக் கடந்து விளங்கும் இறைவனது கருவியாக நினைந்து தொழிற்படுவான் என்று கீதை விளக்கி அவனை, மற்றவர்களைவிட மேலானவன் என்று மெச்சுகின்றது. கீதை பல இடங்களில் கரும யோகம், பிற யோகங்களைவிட மேலானது என்று பறை சாற்றுகின்றது. சித்த புருஷன் அமைதியுடன் செயலற்று விளங்கு

பவன் என்று கருதுதல் தவருகும். கன்மத்தால் கட்டுருது பற்றின்றிச் செயல்களைப் புரிபவனே, ஈஸாவாஸ்யம், முண்டகம், கீதை ஆகிய நூல்கள் சிறப்பிக்கின்றன. இத்தகைய நிலை பிரம்மத்தின் நிலையாகும். அவன் செயல்புரிபவனுகவும், செயல் புரியாதவனுகவும் ஒருங்கே விளங்குகின்ருன். அவன் தனது செயல்களால் கட்டுறுவதிலன். அவன் என்றும் எப்போதும் விடுதலை பெற்றவனுக, செயலுரிமை உள்ளவனுக விளங்கு கின்ருன் பெர்க்ஸோன் என்பவர் அத்தகைய செயல்களையே செயலுரிமையோடு, ஆற்றப்பெற்ற செயல்களாகக் கருதுகின்ருர். மலையினின்று இழிந்து செல்லும் ஆறு, மேகங்கள் இருண்டு பொழியும் மழை; மகிழ்ச்சி மிக்க சேய், உணர்ச்சி மிக்க கவிஞன் ஆகியோரது நிலைக்கு பிரம்மத்தின் செயல்கள் ஒத்தன.

சித்தி என்பது ஆத்மனை அல்லது பிரம்மத்தையோ முழுமை யாக உணர்ந்த நிலைக்குப்பின் நிகழ்வது என்று நாம் நினைக்கின் ருேம். பதஞ்சலியின் யோகத்தில் எட்டு வகை நிலைகள் குறிக்கப் பெறுகின்றன. இவ்வெட்டனுள் இறுதியாக அமைவது சமாதி யாகும். இந்நிலை மயக்கமன்று; ஆழ்ந்த துயிலுமன்று, ஒரோவ மயம் நிகழும் மகிழ்ச்சிப் பெருக்குமன்று, ஆழ்ந்த உறக்கத்தில் நமக்கு உணர்வு கிடையாது. உறங்கும் போது புறவுலகையும், அகவுலகையும் ஒருங்கே அறியமாட்டோம். துயில் நீத்தபிறகே, நாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து மீண்டுள்ளோம் என்றும் அவ்வனு பவம் இனியது என்றும், அவ்வனுபவம் நிகழ்ந்தபோது ஏதும் அறிந்திலம் என்றும் அறிகிருேம். இதற்கு மாருனது சமாதிநிலை, யாவற்றையும் ஒருங்கே உணர்கின்ற நிலை இதுவாகும். சமாதி நிலையை நாம் விரும்பி, வருந்தி முயன்று பெறுகின்ருேம். உறக்கம் நமக்கு அன்ருடம் இயல்பில் தோன்றுவதாகும். யோகி, தனது யோக அனுபவ முதிர்ச்சியினுல்தான் விரும்பும்போது சமாதி நிலையை மேற்கொள்கின்ருன். இவனுக்குச் சமாதி நிலை எளிதில் கைக்கூடுகின்றது. சமாதி, நிருவிகல்ப சமாதி என்றும், சவிகல்ப சமாதி என்றும் இருவகைப்படும். இராமகிருஷ்ண பரமஹம்ஸ ருக்குத் தொடக்கத்தில் சவிகல்ப சமாதி எளிதில் அமைந்தது. அன்னை காளியுடன் அவர் ஒன்றினுர். காளி பரம்பொருளின் வடிவ மாகவே திகழ்ந்தாள். இந் நிலைக்கு மேல் செல்லாது அவ்வப் பொழுது அவர் பேருவகையோடு விளங்கினுர். காளியின் இருப்பை இடையருது உணர்ந்தார். பின்னர் தோத்தாபுரி என்பவர் இவ ருக்கு நிருவிகற்ப சமாதியைப் பயிற்றுவித்தார். அவருக்கு மிக விரைவிலும், இலகுவாகவும் இச் சமாதிநிலை கூடியது. இந்நிலையில் மூன்று நாள்கள் தொடர்ந்து நிலைபெற்ருர். இந் நிலையிலே இருக்க அவர் விரும்பினுர். அன்னை காளியின் ஆணை வேருக இருந்தது. புக்தி நெறியின் சிறப்பை அவர் உலகிற்கு உணர்த்தும் பொருட்டு

பக்தி நெறிக்கு மீண்டார். இத்தகைய நிலையை 'நிர்பீஜ சமாதி' என்பார்கள். விதையற்ற சமாதி என்பது இதற்குப் பொருள். கன்மங்கள் மேலும் மேலும் குவிய, பிறப்பு இறப்புகள் தொடரும்; கன்மநாசம் என்பது இதன் பொருள்.

மற்ெருரு வகையான சமாதியை 'சகஜ சமாதி' என்று வழங்குகிறோம். சித்தர்கள் தாம் மேற்கொண்டு விளங்கும் சமாதி நிலை யாதாயினும், அந்நிலையில் எளிதில் தாம் இருக்கப் பெறும்போது அதற்கு 'சகஜ நிலை' என்பர். சாதாரண மனித னுக்கு விழிப்பு நிலை இயற்கையானது. சித்த புருஷனுக்கு சமாதி நிலை இயல்பானது. இத்தகைய நிலையிலுள்ளோருக்குச் சுட்டற்ற பார்வை அமைந்திருக்கும். இவர்களைச் சூழ்ந்துள்ள உலகில் நிகழ்வனவற்றுள் இவருக்கு எத்தகைய ஈடுபாடும் இருக்காது. இவர்களது கருத்தை ஈர்த்துப் புறஉலகில் பதித்தல் வேண்டும். அருணாசலத்தில் ஸ்ரீ இரமணமகரிஷி இத்தகைய சகஜ நிலையில் இருந்தார். பிறிதொரு சமாதி வகையைப் 'பாவசமாதி' என்று வழங்குகின்றோம். இது தூய உணர்ச்சிப் பெருக்கில் அமைவ தாகும். அன்னையிடத்து மாறாத அன்பு கொண்டு பக்திப் பரவசம் எய்தும்போது கூடுகின்ற சமாதி பாவசமாதியாகும். அன்னை காளியைப் பற்றி எவரேனும் குறிப்பிட்டாலோ, அல்லது உயரிய ஆன்மீக உண்மைகளைப் பற்றிப் பேசினாலோ, இராமகிருஷ்ணர் தம்மை மறந்து உணர்ச்சி வயப்பட்டு பாவசமாதி கூடி விடுவார்.

இங்கே கீதை உணர்த்துகின்ற கரும சமாதியைப் பற்றியும் குறிப்பிடுதல் பொருத்தம். அரவிந்தர் கீதையில் பெருத்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் கீதையைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைகள் ஆசாரியர் எழுதியுள்ள பேருரைகட்குச் சமமானவை; பல அரிய, நுட்பமான உண்மைகளை நமக்கு உணர்த்துவன; பகவான் கிருஷ்ணன் 'அனைத்தும் பிரம்மமாகும்' என்று கூறி இவ்வுண்மையை ஒருவன் உணர்ந்து இவ்வுணர்வு மாறாமல் செயற் படுவானேயானால், அவனது செயல்கள் யாவும் பிரம்மத்திற்கு அர்ப்பணிக்கப் பெற்றவை என்றே கூறவேண்டும். அவனது வாழ்வு முழுமையும் வேள்வியாக அமைகின்றது. பிரம்மத்தோடு நாம் ஒன்றிய நிலையில் பெறுகின்ற ஆனந்தானுபவம் என்பது கரும சமாதியின் பொருளாகக் கொள்ள வேண்டும். செயல்களில் ஈடுபடும்போது, பிரம்ம உணர்வு நீங்குவதில்லை. ஆதலால், சமாதி என்றால் தியானம் என்றோ, பக்தி அனுபவத்தின் முதிர்ச்சி என்றோ, கைகால்கள் முதலியவை செயலற்றுக் கிடக்கும் நிலை என்றோ கருதுவதற்கு இல்லை. அரவிந்தர் கருமயோகத்தைப் பற்றிக் கூறுவது: 'என்னை மனத்தில் இருத்தி (என்னை நினைத்துக்கொண்டு) போர் புரி' என்றான் கண்ணன். அதன் தாத்பரியம்என்ன?

அநித்தியமான வாழ்க்கை மோதல்களில் ஆழ்ந்துள்ளது நமது மனம். அவைகள் எல்லாவற்றிலும் நித்தியமான இறைவனை ஒருக்கண மேனும் மறவாமலிருக்கப் பயில வேண்டும்.' இறைவனை மறவாது கடமைகளை ஆற்றுவதை இறைவனது கருவியாகத்தான் நின்று பணிபுரிதலே கருமயோகமாகும்.

சித்தி பெற்றபின் விளங்குகின்ற நிலை யாது? அத்தகைய சித்த புருஷனின் நிலை யாது? சித்தி முழுமையாகப் பெற்றவனைச் சித்தன் நிறைவானவன் என்று கூறுகின்றோம். சித்தாரூட அல்லது யோகாரூட என்றும் அவனைக் குறிக்கலாம். முக்தன் புலன்களது சேட்டைகளின்று விடுதலை பெற்று விளங்குகிறான். அவனைப் புற நிலையில் எதுவும் கட்டுப்படுத்துவதில்லை. ஜீவன் முக்தன் என்பவன் இவ்வுலகில் வாழுகின்றபோதே ஆன்ம விடுதலை பெற்றவன். இயற்கையாக மரணம் நேரிடும் வரை இவ்வுலகில் வாழ்கின்றான். அவனது சஞ்சித கருமம் தொலைக்கப் பெற்றது. ஜீவன் முக்தனை பிறகு கருமம் அவனைப் பந்திக்காது. ஆனால், அவனது பிராரப்த கருமம் மரணம் நேர்ந்த பிறகே நீங்கும். விதேகமுக்தன் உடல் நீங்கிய பிறகு முத்தியைப் பெறுகின்றான். அவனுக்கு மறுபிறப்பு இல்லை. பின்னர் என்றென்றும் விடுதலை பெற்று விளங்குகிறான்.

சித்த புருஷன் உயரிய, நிலையில் தான் இருப்பதாக உணர் கிறான். அவன் இவ்வுன்னத நிலையில் (தன்யபாவம்) தொடர்ந்து இருக்கிறான். அவன் தனது பணியை முடித்தவனாவான். (கிரிதார்த்த) அவன் இந்நிலையில் யாது செய்ய வேண்டும்? அவன் ஒரு கணப்போதும் வீணாக்காது, தெய்வ தியானத்திலேயே கழிக்க விரும்புவான் என்று கூறலாம். இவ்வாறு இருத்தல் சடம் செயலற்று விளங்குகின்ற நிலையை ஒத்ததாகும் (ஜடம்); அல்லது தெய்வ உணர்விலேயே கழிக்க அவன் முற்படலாம். இது குழந் தையின் நிலையை ஒத்தது (பால நிலை). இறையோடு ஒன்றிய உணர்வு தொடர்ந்து நிலைபெறுதலால், தடை படாத ஆனந்தம் மிகுதியாக ஏற்படுவதால் மகிழ்ந்து பாடி, ஆடி, சிரித்துத் தனது வாழ்நாளைக் கழிக்க முற்படலாம். இது இறையுணர்வு மிகுந்து விளங்குகின்ற நிலை. மதுவை அருந்தினோர் மயக்க நிலையில் இருப்பதைப் போன்று இறை ஆனந்தம் என்னும் மதுவை அருந்தி இருக்கின்ற நிலையாதலால், இதனைப் பித்தேறிய நிலை என்பர் (உன்மத்த நிலை). மரபு நிலைகளின்று வழுவித் தனி ஒரு நிலையில் இல்லாது மனம் போன போக்கில் விளங்கும் நிலையொன்றுண்டு. சித்தர் எனினும் தனது அரசுக்கடமைகளைப் பற்றின்றி வழுவாது ஆற்றினார். கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி, சனகரைப் போன்று கடமையை ஆற்றும்படிக் கூறினார். கிருஷ்ணன் தான் செயற்படு வதாலோ, படாமலிருத்தலாலோ அடைய வேண்டுவது ஏதுமிலது

என்றும், தாம் மக்கட்கு எடுத்துக்காட்டாக இலங்குதற் பொருட்டுச் செயல்களைப் புரிந்தவண்ணம் விளங்குவதாகக் கூறுகிறுர். இத்தகைய பின்னணியை நினைவில் வைத்துக் கொண்டு அரவிந்தரது சித்தியைப்பற்றி அறிவோம். அவர் திலிப் குமார் ராய் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் கூறுவது: ‘சித்தயோகிகளுள் சிலர், புறநிலையையும் நிறைவிற்கு உட்படுத்த வேண்டுமென்பதை உணராது விடுக்கின்றனர். தான் குறிக்கோளாகக் கொண்டு அடைய முயல்வது, புற இயற்கையையும் முழு மாற்றத்திற்குட்படுத்த வேண்டுமென்பதாகும். இதுவே நிறைவு-நிறைவாக இருத்தலாகும். இந் நிலையை முயலாதார் அல்லது அடைய முற்படாதார் ஆன்மீகச் சாதனைகளிற் சிறந்தவரல்லர் என்று கூற இயலாது'' என்று அரவிந்தர் கூறுகிறுர். திருமூலர் தமது திருமந்திரத்தில் உடம்பாரழியில் உயிராரழிவர் என்றும், தான் உடம்பை முன்னம் இழுக்கென்று இருந்ததாகவும் பின்னர் உடம்பினுள்ளே உத்தமனைக் கண்டதாகவும் கூறுகிறுர். இராமலிங்க அடிகளும் மூவகை சித்திகளைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். உருவ, அருவ, அருவுருவ சித்தி என்றும், சித்திகளை மூவகைப்படுத்தி பாகுபடுத்திப் பேசியுள்ளனர். நந்தனர், ஆண்டாள், மணிவாசகப் பெருந்தகை ஆகியோர் தமது திருவுருவைக் கரந்தனர். ஞானசம்பந்தர் தமது திருமணத்தில சோதியில் கலந்தார். உருவுடன் கலத்தல் என்பது உண்டு. இவ் வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. அரவிந்தரும் மனங்கடந்த ஒளி ஆற்றல் நமது ஊனுடலுள்ளும் பாய்ந்த உடலிற்கு மாற்றம் விளைக்கும் என்று கூறுகிறுர்.

அரவிந்தரது சாதனை ‘பூரண யோகம்’ என்று பெயர் பெறுகின்றது. ஞானம், பக்தி, கருமம் ஆகிய மூன்றும் ஒருங்கே முழுமையடைகின்ற யோகமுறை இதுவாகும் ஆர்வம் மிகுந்த சாதகன் படிப்படியே முன்னேறி உள்பொருளைத் தனது உடமையாக்குகிற வரை யோகம் பயில்கின்றுன். அரவிந்தரது சாதனை நாளும் விரிவடைந்து வந்தது. பிரம்ம தேஜஸ் பெறுவது ஒரு சூழலில் விளக்கப் பெற்றது. இறையாற்றலை நிலவுலகிற்குக் கொணர்ந்து மனித சமுதாயம் முழுமையையும் விஞ்ஞான மனமயமாக்க முற்பட்டது அரவிந்தரது பூரணயோகத்தின் சிறந்த கூறு.

## அரவிந்தரது போதனை

அரவிந்தர் தமது வாழ்நாளில் அனுபவத்தில் உணர்ந்த உயர்ந்த உண்மைகளையே போதித்தார். அவர் தமது ஆசிரமத்தில் யாது புரிந்தாரோ, எதை அடைய ஓயாது முயன்றுரோ அதையே உலகிற்கு அறிவித்தார். ஒளிபொருந்திய பொருளினின்று ஒளி பரவுவதைப்போன்று அவரது போதனைகள் வெளிப்பட்டன. இந்தியாவில் தோன்றிய தலைசிறந்த வேதாந்திகள் வரிசையில்,

விற்பன்னர் வரிசையில், வைத்துப் போற்றத்தக்க பெற்றி வாய்ந் தவர் அரவிந்தர்.

அரவிந்தரது நூல்கள் பல துறைகளைச் சார்ந்தவை. விஞ்ஞானம், மெய்ப்பொருளியல், சமயம், உயிரியல், பண்பாடு (மேலைகீழைநாடுகளுடைய)ஆகியபல்துறைகளது உண்மைகளையும் அரவிநதர் தமதாக்கிக் கொண்டு எழுதினர். அவரது கருத்துகளை ஊன்றி அறிய அவர் எழுதிய நூல்கள் சாலும். அவரது போதனை விரிவானது. பல துறைகளது உண்மைகளையும் உட்படுத்துவது, அறிவிற்குப் பெருவிருந்தாகும். நமது நாட்டில் தொன்றுதொட்டு விளங்கிய கொள்கைகள் புதிய வடிவம் பெற்று அரவிந்தரால் விளக்கம் பெற்றன; பழைய மரபு நூல்களில் உள்ள பகுதிகளில் அரவிந்தரால் புதிய விளக்கம் பெற்றுச் சிறந்தன என்று கூறு வார்கள். ஆனல், இந்த அளவில் அரவிந்தரது திறமை அமைந்து விடவில்லை. அவர் வேத ரிஷிகள் மரபில் வந்தவர் என்று கருதுவதே பொருந்தும். வேதத்தில் காணப்பெறும் மந்திரங்களின் உட் பொருளை நன்கு விளக்கினர். அவர் நமது ஆசாரியர்களைப்போன்று உபநிடதம், பிரம்ம சூத்திரம் போன்றவற்றிற்குப் பேருரைகள் கண் டாரிலர். ஆயினும், அவரது புகழ் ஓங்கியிருப்பதற்குக் காரணம் பழைய உண்மைகட்கு அவர் தந்த புதிய விளக்கங்களாகும். இந்திய நாட்டுப் பண்பாட்டியலிற்கு ஏற்ப கீழை மேலைநாடுகளி டையே முரண்பாடும், இயைபின்மையும் காண்பதற்குப் பதிலாக அவற்றிடையே ஒருமை கண்டு அவ்விரு பண்பாடுகளையும் இணைத் தார். சடத்தையும் சித்தையும் இணைத்தார். ஒரே பரம்பொரு ளின் வெவ்வேறு வெளிப்பாடுகள் இவை என்று கூறினர். இந் நாளைய அறிவியலையும் வேதாந்தத்தையும் இணைத்துப் பல உண் மைகளை விரித்து எழுதினர். மேலும், இந்திய தத்துவ உலகில் விளங்கும் வேதாந்த மரபுகளையும் இணைத்துக் காட்டினர். முரண் படுவனவற்றிடையே முரண்பாட்டை நீக்கி இயைபு காண்பதே அவரது சீரிய நோக்கமாகும்; பணியாகும். இவ்வாறு காண்பதில் பெருவெற்றி கொண்டார். அரவிந்தர் தலைசிறந்த தேசியவாதி யாக விளங்கினலும், இந்தியாவை அன்னையாகப் போற்றினலும், ஆங்கில மொழியையே தமது கருத்துகளை வெளியிடுவதற்குரிய சிறந்த மொழியாகக் கொண்டார். அரவிந்தர் தமது ஏழாம் ஆண்டி லிருந்து இருபதாண்டு முடிய ஆங்கில நாட்டில் வதிந்து அம் மொழி யில்நன்கு தேர்ச்சி பெற்ற காரணத்தால், அம்மொழியின் மரபுகள் நுணுக்கங்கள் யாவற்றையும் தெரிந்திருந்தார். இந்தியக் கருத் துகள் தத்துவ உண்மைகளை வெளிப்படுத்த சமஸ்கிருத மொழி யின் வாயிலாகவோ அல்லது வேறு இந்திய மொழியை அரவிந்தர் தேர்ந்திருக்கலாம். ஆனல், அவர் கண்ட உண்மைகளை ஆங்கில

மொழியில் எழுதியதனுல் இன்று உலகறியும் வாய்ப்பு உள்ளது. அவரது நூல்கள் அவரது தீர்க்கதரிசனத்தை நமக்கு நன்கு உணர்த்துகின்றன. அவர் பல நூல்கள் எழுதினுர்; அவையனைத்தும் தெளிவாகவும் வரன்முறைக்கு உட்பட்டும் விளங்குகின்றன. அவரது கருத்துகளை அறிய நாம் அவரது நூல்களை நுணுகிப் படித்தல் வேண்டும்.

வருங்கால உலகிற்கு அரவிந்தர் தலைசிறந்த தத்துவக் கோட்பாட்டை மட்டும் வகுத்துச் செல்லவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயரிய குறிக்கோளை எங்ஙனம் அடைதல் கூடும் என்றும் அரவிந்தர் வழி வகுத்து வாழ்ந்து காட்டினுர்; சிறந்த சாதனை முறையை நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் வகுத்த நெறி இன்று புதுமையுடன் விளங்கவில்லை. காரணம், அவரது சீடர்கள் அந்நெறி நின்று அதன் கீர்த்தியினை விளக்கியுள்ளனர். அறிவாற்றலினுல் அறியத்தகுந்த தத்துவம் என்ற நிலையை மாற்றி உண்மையை நேராக ஆன்மீக அனுபவங்களால் அறிதலே சிறந்தது என்று நிறுவினுர். மனிதன் தனது அறிவு ஒன்றை மட்டும் கொண்டு அறிதலைத்தவிர முழுமையாக அறிதல் வேண்டும் என்றும் எடுத்தியம்பினுர். அரவிந்தரது போதனையை இருபெருங் கூறுகளாக வகுக்கலாம். ஒன்று அவரது மெய்ப்பொருளியல்கோட்பாடு; மற்ருென்று யோகம். முன்னையது கருத்தியல்பின்பாற்பட்டது. பின்னது செய்முறைக்கு ஏற்றது. இவற்றை நாம் புரிந்துகொள்ளும் பொருட்டுப் பகுத்துக் கொண்டாலும், இவையிரண்டும் பின்னிப் பிணைந்து பகுப்பற விளங்குகின்றது. ஒன்றிற்கு மற்ருென்று விளக்கமாக பகுப்பற விளங்குகின்றது. ஒன்றிற்கு மற்ருென்று விளக்கமாக அமைகின்றது. நமக்கு உண்மையை நேராக உணரும் அறிவுத் திட்பமும் செயல்முறையில் துணிவும் இருந்தால் அவர் போதித்த உண்மைகளை நமது வாழ்க்கையில் உணரலாம். அரவிந்தரது உள்ளத்தில் மெய்ப்பொருளியலும் யோகமும் இளமையிலே கால்கொண்டன. அவர் தமது வாழ்வுப் பெருநூலாகத் தந்துள்ள 'தெய்வீக வாழ்க்கை' (Life Divine) என்ற நூலுள் அவரது தத்துவ உண்மைகள் விரிந்து கிடக்கின்றன. 'யோகங்களின் இணைப்பு' (Synthesis of yoga) என்ற நூலில் நாம் பின்பற்றக்கூடிய சாதனையைத் தெளிவாக அரவிந்தர் உணர்த்துகிருர். அவர் எழுதிய ஆங்கிலக் கவிதை நூல் 'சாவித்திரி' ஆகும். கவிதையைப் போற்றுவாரும் கற்பனைச் செறிவு உடையாரும் இந் நூலைப் பெரிதும் பயின்று இன்புறுகின்றனர். மேற்குறித்த மூன்று நூல்களையும் முறைமையாகப் பயின்ருல் அவரது மெய்ப் பொருட்கொள்கை இன்னதென்று நன்குவிளங்கும். மேலும், அவரது சிந்தனைகளை நன்கு உணர அவர் தமது சீடர்கட்கு அவ்வப்

பொழுது எழுதிய கடிதங்களைப் பயில வேண்டும். இக் கடிதங்கள் பல சிக்கல்கட்குத் தீர்வுகாண உதவுகின்றன. அவரது நூல்களைப் பயிலும் போது ஏற்படும் ஐயங்கள் எளிதில் இக் கடிதங்களால் தீரும். சீடர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகட்கு மிகுந்த விழிப்புடன் பதில்கள் இறுக்கப்பெற்றுள்ளன. அரவிந்தர் தாம் ஏற்றிருந்த மகத்தான பொறுப்பை உணர்ந்து எண்ணிறந்த சாதகர்கட்கு வழிகாட்டி உள்ளார். இக் கடிதங்கள் நமக்கு இவ்வகையில் பெரிதும் துணைபுரிவனவாகும்.

அரவிந்தரது போதனைகட்கு நிலைக்களனாக விளங்குபவை அவரது அகவுணர்வில் தோன்றிய உண்மைகளும் அனுபவங்களுமாகும். இவை உபநிடதங்கள், கீதை ஆகிய இரண்டு மூல நூல்களை அடிப்படையாகக் கொண்டவை. அவர் வேதங்களைப் பின்னரே பயின்றார். அவர் தாம் கொண்டிருந்த கொள்கைகளை வேதப் பயிற்சி வலியுறுத்தியது. வேதாந்தம், 'ஆன்மாதான் உள்ளது. ஆத்மன் அல்லது பிரம்மத்திற்கு அயலாக வேறு எப்பொருளும் இலது' என்றும் கூறுகின்றது. தோன்றுகின்ற பிற யாவும் பிரம்மத்தின் தோற்றமே. பிரம்மமே உள்பொருள்; அதுவே இரண்டற்றது என்று கூறுகின்றது. இப் பரம்பொருளைச் 'சச்சிதானந்தம்' என்று வழங்குகின்றோம். இப் பொருள் வெளிப்பட்டுத் தோன்றுவன அனைத்திலும் உள்ளார்ந்த நிலையில் விளங்குகின்றது. ஏற்றம் அல்லது பரிணமம் அல்லது படிமுறை வளர்ச்சி (Evolution) என்பது இறக்கம் அல்லது ஒடுக்கம் (Involution) என்பதனை உட்படுத்தும். மனிதப் பிறப்பில் உணர்வு ஒரு நிலையை அடைந்துள்ளது. அதைத் தன்னுணர்வு என்று கூறுகின்றோம். ஆதலால், மனிதன் தன்னை உணரக் கூடியவன் என்பது புலனாகின்றது. மனிதன் தனது உண்மை நிலையைத் தான் 'ஆத்மன் என்பதை அறிவுகொண்டு அறிய இயலாது. உள்ளுணர்வுகொண்டு நேராக அறிய இயலுமே அன்றிப் புறப்பொருள்களை அறிவதைப் போன்று அறிய இயலாது. உபநிடதங்கள், பிரம்மத்தை அறிய முற்பட்டு, 'தயங்கின மயங்கின, என்று கூறப்பெறுவதால் நாம் நமது எல்லைக்குட்பட்ட அறிவைக்கொண்டு அறிதல் இயலாது. மேலும், பிரம்மத்தை உணர்வதற்குரிய ஆற்றல் நமது அறிவிற்கு இல்லை. இது மிக எளிய கருவியாகும். ஆதலால், அறிவின் பயன் எல்லைக்குட்பட்டதாகும். இந் நிலையிலே நமக்கு யோகம் துணைநிற்கின்றது. உபநிடதம் கூறுவது: "ஐம்புலன்கள், மனம், அறிவாற்றல் இவை யாவும் தத்தம் செயலொடுங்குகின்றபோது, உயரிய சமநிலை தோன்றுகின்றது." இச் சமநிலை அல்லது அமைதி தோன்றும்போது தான் 'ஆத்மன்' தன்னை வெளிப்படுத்தும். வெளிப்படுத்தும்போது, ஆத்மன் பிரம்மம் முற்றொருமை

நமக்குப் புலனாகும். பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் யோகப் பயிற்சியின் உட்கிடை', 'சித்தவிருத்தி நிரோதம்' என்று கூறு கின்றது. மனம் ஒடுங்கி அதாவது சித்த விருத்திகள் எல்லாம் நீங்கி, மன ஒருமை எய்தும்போது, மனமும் அம் மனத்தை யுடைய உடலும் ஒருங்கே ஆன்மீக வாழ்க்கைக்கு உரிய பக்குவ நிலையை எய்துகின்றது. அரவிந்தரது வாழ்க்கையில் இறைவன் 'அந்தர்யாமி' யாக இருந்து வழிகாட்டினார் என்று கொள்ள இடமுண்டு. உபநிடதங்கள், பகவத் கீதை போன்ற நூல்கள் அரவிந்தரது சாதனையைத் துரிதப்படுத்தின. அரவிந்தர் தமது சாதனையை அறிவியலுக்கு ஏற்ப நடத்திச் சென்றார். அவர் சாதனை செய்யும்போது ஏற்பட்ட பல்வேறு அனுபவங்களும் அவ ருக்கு மேலும் வழிகாட்டின. இதன் விளைவாக நாம் இன்று அவரது பூரண யோகம் நமக்குச் சீரிய வழிகாட்டியாக விளங்கக் காண் கிறோம். அவரது அனுபவங்களைப் பொறுத்தவரையில் அவரது போதனைகள் மறைமை சார்ந்தனவாக விளங்குகின்றன. ஆனால், அவர் தமது அனுபவங்களை அறிவிற்குப் பொருந்தும் வகையில் விளக்கியுள்ளார். அவரது மெய்ப்பொருளிலும் பூரண யோகமும் அடிப்படையைப் பொறுத்தவரையில் இந்தியத் தத்துவத்தினின்றும் வேதாந்தத்தினின்றும் தோன்றியவை. ஆனால், அவர் திறந்த மனத்துடன் உலகில் உள்ள பல்வேறு சிந்தனை முறைகளையெல் லாம் துருவி ஆராய்ந்தார். தமது கருத்துக்கேற்றவற்றைத் தழு வினார். ஆனால், பல தத்துவங்களின் கலவையாகக் கூட்டாது அவரது சிந்தனைகள் அமையவில்லை. அவரது சிந்தனைக்குட்பட்ட யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் தரம் அறிந்து இணைந்து ஒருமுகப்படுத்தி வழங்குகின்ற பேராற்றல் உடையவ ராகத் திகழ்ந்தார்.

அரவிந்தர் தமது நூலிற்குத் 'தெய்வீக வாழ்க்கை' என்று பெயரிட்டார். இவ்விரு சொற்களும் பொருட் செறிவு உடையன. அவர் கருதிய அனைத்தும் வெளிப்படுத்தவல்ல பெருஞ் சொற் களாக அவை விளங்குகின்றன. உயிர் தத்துவம் அல்லது உயிராற்றல் (Life) என்பது சடத்தினுள்ளும் விளங்குகின்றது. பிற பொருளிடத்தும் அமைந்திருக்கக் காண்கிறோம். மூல புரோடின் அணுவினின்று பல அணுக்களின் கூட்டாகிய வாழ்வு முறை எய்துவதற்கு எண்ணிறந்த ஆண்டுகளாகின்றன. இந் நில வுலகைப் பற்றிய வரையில் மனித படைப்புகளுள் தலைவனாவான். மனிதன் வளர்ச்சியில் உணர்வு (Consciousness) தோன்றி தனித் தனியே ஒவ்வொரு மனிதனிடத்திலும் இவ்வுணர்வு வெளிப்படு கின்றது. இதனால் தன்னுணர்வு தோன்றுகிறது. உள்பொரு ளனைத்திற்கும் மூலமாக விளங்குவது பரம்பொருளாகும். தன்

னுணர்வு இம்மூலத்தையே அடிப்படையாகக்கொண்டு விளங்கு கின்றது. இப் பரம்பொருளின் இயல்புகளை மனிதன் அறியும் போது வியப்பில் ஆழ்கின்றான். பரம் பொருளின் நிறைவு, கடந்த நிலை, எல்லைக் கடந்த நிலை, ஆனந்தம் முதலியவற்றை மனிதன் அறி கின்றபோது, தனது சிறுமையை, நிலையாமையை, துன்ப நிலையை உணர்கின்றான். கீதையில் பகவான் மனிதனை நோக்கித் தன்னி டத்துப் பக்தி பூண்டு ஒழுகினால் அவனது துன்பங்கள் நீங்கும் என் கிறார். பொய்யினின்று நீங்கி உண்மையை நாடவும், இருளி லிருந்து நீங்கி ஒளியைப் பெறவும், மரணத்தினின்று இறவா மையைப் பெறவும் மனிதன் தனக்கு வழி காட்ட வேண்டும் என்று பரம்பொருளை நோக்கி மனிதன் உபநிடதங்கள் அனைத்தில் பிரார்த்திக் கின்றான்.

அரவிந்தர் அருளியுள்ள பூரண யோகத்தின் தனிச்சிறப்பு யாது? மனிதன் முழுமையாகத்தான் நிறைவு பெற இயலும் என்று அரவிந்தர் கூறுகிறார். இந்த யோகம் மனிதச் சமுதாயத்தையே வளர்ச்சிபெறச் செய்யும்; புதிய சமுதாயம் தோன்றுவதற்கு உரிய வழி தமது பூர்ணயோகம் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். மனிதன் வளர்ச்சிபெற்று உயர்நிலை அடைவதற்கு அவனது முயற் சிகள் மட்டும் போதா. இவனுக்கு உதவி பரம்பொருளினிடத் திலிருந்து வருதல் வேண்டும். மனிதன் பரிணும வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம். ஆனால், இவனது முயற்சிகள் நிறைவு பெறு வதற்கு மேலிருந்து ஆற்றல்கள் துணைபுரிய வேண்டும். இக் கருத்தே அரவிந்தரது பூரண யோகத்திற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றது. வாழ்க்கை இயக்கம் சான்றது, படிமுறையே வளர்ந்து வருவது. ஆதலால், வாழ்க்கையைப் பற்றிய தத்துவக் கொள் கையும் இயக்கம் மிக்கதாதல் வேண்டும். மேலும், மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்ய வல்லதாதல் வேண்டும். உயர்ந்த உண்மையை உணரவும், உணர்ந்தவழி ஒழுகவும் மனிதன் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல இயல வேண்டும். இவ்வகையில் துணை புரிகின்ற வழிகாட்டி. உய்யும் நெறியில் உய்க்கவல்லது அரவிந்தரது பூரண யோகமேயாகும். சடமும் சித்தும் முரண்பட்டு விளங்குவனவாகத் தோன்றுகின்றன. அறிவியல் (இன்று சடம் என்பது) பரம்பொருளாகத் தோன்றுவதன்று என்று நிறுவி யுள்ளது. சடமும் நமக்குப் புலப்படாத ஆற்றலின் வடிவமே என்பது இன்றைய உண்மை. உணர்வுக்கூறு ஏதும் இன்றிச் சடம் ஆற்ற லாக விளங்குகின்றது என்பது இன்றைய அறிவியலுண்மை. உணர்வு சடத்தினின்று தோன்றுகிறது. இந்திய நாட்டில் பொருள் முதற்கொள்கையினர் உணர்வு என்ற ஒன்றையே ஏற்று, ஆன்மா என்று ஒன்றில்லை என்று மறுத்தனர். ''வெற்றிலை, பாக்கு,

சுண்ணும்பு ஆகிய முப்பொருளேயும் ஒருங்கே சுவைக்கின்றபோது செம்மை நிறம் நாக்கில் தோன்றுகிறது. செந்நிறம் இம் முப் பொருள்களுள் எதிலும் விளங்கக் காணவில்லே. இம் முப்பொருள் களும் சேர்கின்ற வழி செம்மை நிறம் தோன்றுவதைப் போல, நான்கு பருப்பொருள்களாகிய நிலம், நீர், தீ, வளி ஆகியவை பல்வேறு நிலேகளில் கூட்டுப் பொருள்களாகின்றன. நமது உடலும் இந்நான்கு பொருள்களும் கூடிய நிலேயில் உளதாவதே. இக் கூட்டு, ஒரு நிலேயில் உணர்வைத் தோற்றுவிக்கக் காண்கிருேம்'' என்று சாருவாகர் கூறுகின்றனர். சடம் படிமுறையே வளர்ச்சி பெறும்போது, அதனிடத்து உயிர்ப்பாற்றல் தோன்றுகின்றது. இவ்வாற்றல் தோன்றுவதற்கு இது சடத்தினுள் பொதிந்து விளங் குதல் வேண்டும். மிக நுண்ணிய நிலேயில் பொதிந்து விளங்கலாம். சடமல்லாத சித்தை நாம் அறியவும் இயலாது. பொதுவாக விளக்கவும் இயலாது. இது காட்சிப் பொருளன்று; கருத்துப் பொருளுமன்று; இருமைகள் கடந்தது. ஆத்மனே அறியப் பெருதது என்று உபநிடத அறிஞர் கூறினரே அன்றி அறிய வொண்ணுதது என்று கூறவில்லே. அறிவிற்கு எல்லாம் ஆதார மாக அறியும்பொருளாக விளங்குகின்ற ஆத்மன் அதனே அறிவது யாங்ஙனம் ? என்பதே உபநிடதம் எழுப்பும் கேள்வியாகும். ஆத்மனே உணரலாம்; அனுபவிக்கலாம். எப்போது என்ருல், அதனேடு ஒற்றித்த உணர்வுடைய நிலேயிலே என்று விளக்கு கின்றனர். இதை அனுபவ நிலேயில் உணர்ந்தவர்கள் சத் சித் ஆனந்தம் என்ற முக்கூறுகளேயுடைய பரம்பொருள் என்று விளக் கினர். இது தன்னுண்மையோடு விளங்குவது. காலங்கடந்தது. இதுஇருந்தது, இருப்பது, என்றும் விளங்கக் கூடியது. இதுவே உள்ளது. யாவும் உளதால் இப்பொருள் உள்ளதாதல் ஆகும். பரம்பொருள் உணர்வு வடிவத்தில் விளங்குவது. அறிவு, ஆற்றல் உணர்வு ஆகிய மூன்றனின் கூட்டுறவே பரம் பொருளாகும். பரம் பொருள் கடந்தும் கலந்தும் விளங்குகின்றது. 'யாவையுமாய், அல்லதுமாய்' விளங்குவது. இப் பரம்பொருளின் ஆனந்தக்கூறு படைப்பாக மலர்கின்றது. படைப்பு முழுமையும் பரம்பொருளின் லீலே அல்லது விளேயாட்டாகும். இப் படைப்பு பரம்பொருளின் ஆதற்கூறுகும் (Becoming aspect) இக் கூறும் 'உள்ளது' என்றும் கூற்றைப்போல (Being) என்றும் விளங்குவதாகும். எல்லே கடந்தது எல்லேக்குட்படும் பொழுதுதான் ஆதல் அல்லது படைப்பு நிகழும். விளங்குகின்ற பொருளனேத்தும் எல்லே கடந்த பொருளின் எல்லேக்குட்பட்ட நிலேயாகும். படைப்புண்ட பொருள்கள் யாவும் சச்சிதானந்தப்பொருளின் ஒடுங்கிய நிலேயில் விளங்குவன. விலங்குகளுள் மனிதன் பரிணும ஏணியில் உயர்

படியில் விளங்குகின்முன். அவனிடம் செயலுரிமை விளங்குகின்றது. உணர்வும் ஓரளவிற்குக் கட்டுப்பாடின்றி இயங்கவல்லதாகும். விஞ்ஞான மனிதன் (Superman) தோன்றும் போது அவனது உணர்வு மேலும் கட்டுப்பாடின்றி விளங்கும். விடுதலை அல்லது வீடுபேறு என்பது நமது உணர்வு கட்டின்றி விளங்குதலாகும். பதஞ்சலி தமது யோக சூத்திரத்துள் வீடு பேற்றை 'ஒருவன் தனது உண்மை ஸ்வரூபத்தில் நிலைத்திருப்பது' என்று விளக்குகிருர். சடமும் பரம்பொருளும் ஒரே அமைப்பின் இருமுனைகளாகும். பரம்பொருள் தூய உணர்வாகும். உளதாந் தன்மையும், ஆனந்தமும் இதனுள் அடங்கும். சடம் உணர்வற்றது; அறியாமையின் திரட்சியாகும்.யாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குகின்ற பரம்பொருள் அல்லது புருஷோத்தமன் அல்லது பரமாத்மனிடம் சித்தும் சடமும் இணைகின்றன ; இயைபு கொள்கின்றன, தோன்றுவன அனைத்திற்கும் மூலம், பரம்பொருள்; படைப்பு யாவையும் கடந்தது; மாற்றங்கள் யாவையும் கடந்தது. பரம்பொருள் எவ்வித மாற்றமும் இல்லாதது.

அரவிந்தரது மெய்ப்பொருளியலில் முக்கியக்கூறு, பரம்பொருள் யாவற்றையும் கடந்து, அப்பாற்பட்டு விளங்குவது. மனிதன் கருதக் கூடியதன்று. அப்பொருள் உள்ளது. ஆதல் சடம், சித்து ஆகிய யாவும் இணைந்து விளங்குவது பரம்பொருள். கீதையின் பரம் பொருள் புருஷோத்தமனுகும். அது அழியாதது. அதை 'அக்ஷர' என்று கீதை வழங்குகின்றது மனித உணர்வின் மூலம் பரம் பொருளை அறிகின்றபோது அது சத் சித் ஆனந்தமாக விளங்குகின்றது. சத் சித் ஆனந்தத்தினின்று இறக்கம் தொடங்குகின்றது. இது மும்மையன்று; மும்மையுள் ஒருமையாகும். இஃது ஒருமையுணர்வு. நாம் புரிந்து கொள்வதற்காக, முக்கூறுகள் உள என்று நாம் கூறுகின்ருேம். ஒடுக்கம் (Involution) விஞ்ஞான மனத்தினின்று தொடங்குகின்றது. உண்மை-உணர்வின் ஆற்றல் உண்மையேயாகும். விஞ்ஞான மனத்தின் கீழ், மேல் மனம் விளங்குகின்றது; அதற்குக் கீழ் உயர்மனம். கீழ்நிலையில் உயிராற்றலும் சடமும் விளங்குகின்றன. படிமுறை வளர்ச்சி என்பது உணர்வு, படிமுறையே வளர்ந்து தூய்மை பெற்று சச்சிதானந்தமாக நிறைவு பெறுகின்ற வாய்ப்பை உணர்வதாகும். உள்பொருள் தம்மியல்பில் தூய உணர்வாக இருக்கின்றது. அது எல்லை கடந்தது; இருமை கடந்தது; உறவுகளை எல்லாம் கடந்து விளங்குகின்றது. அப் பொருள் தம் இச்சையினுலேயே ஆனந்தக் கூற்றை வெளிப்படுத்துகின்றது. உள்பொருள் எல்லை கடந்து விளங்குகின்ற காரணத்தால், எவ்விதத்திலும் குறைவுபடாது விளங்குகின்றது. எவ்வளவு ஒடுக்கம் (Involution) நேரிடினும், படைப்பு நிகழ்ந்தாலும், பரம்பொருள் எவ்வித மாற்றமும் அடைவதில்லை.

சச்சிதானந்தத்திற்கும் விஞ்ஞான மனத்திற்கும் இடையே இணைப்பது விஞ்ஞான மனமாகும். இது பரம்பொருளின் ஆற்றலாகும். இது பரம்பொருளின் ஞானம், இயற்றி நிலைகளின் இயக்க ஆற்றலாகும். ஒடுக்கமும், பரிணமமும் ஒருங்கே விஞ்ஞான மனத்தின் மூலம் நிகழ்வதாகும். சச்சிதானந்தத்தின் மூவியல்புகளாகிய சத், சித், ஆனந்தம் ஆகிய மூன்றையும் பிரிக்காது முறையே வளர்ப்பது விஞ்ஞானமனமாகும். அரவிந்தரது தனிச்சிறப்பு இவ்விஞ்ஞான மனத்தின் தொழிற்பாட்டைத் துல்லியமாக உணர்ந்து நமக்கு உணர்த்தியதே ஆகும். மேலும், இதன் தொழிற்பாட்டை விரிவாகவும் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார். மனிதப் படிமுறை வளர்ச்சிக்கு உகந்த சரியான சாதனையை வகுத்தவர் அரவிந்தரே ஆவார். விஞ்ஞான மனத்தின் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் நமக்கு எடுத்தியம்பியுள்ளார். இவ் விஞ்ஞான மனத்தின் துணையின்றி மனம் உயிர்ப்பாற்றல் சடம் முதலியவை முழுமையாக வளர்ச்சி பெற இயலாது; தெய்வத்தன்மையும் எய்துதலும் இயலாது.

அரவிந்தரது பூரணயோகம் (Integral yoga) யோகங்களின் இணைப்பு (Synthesis of yoga) என்றும், அடைக்கல யோகம் அல்லது சரணுகதியோகம் என்றும், விஞ்ஞான மனத்தைப் பற்றிய யோகம் என்றும் வெவ்வேறு பெயர்கள் கொண்டு வழங்கப்படுகின்றன. மனிதனிடத்து வெவ்வேறு ஆற்றல்கள் விளங்குகின்றன. உடல், பிராணன், மனம், அறிவு, ஒழுக்கம் ஆன்மீகம் ஆகியவற்ருல் விளையும் ஆற்றல்களை முறையே வளர்த்து உணர்வு-கடந்ததோர் நிலை (Super consciousness) அடைதல் இயலும் என்பது அரவிந்தரது துணிபு. இவ்வாற்றல்களை வளர்க்கவும் காக்கவும் நெறிப்படுத்தவும், தேக்கவும், இணைக்கவும் கூடும் என்று அரவிந்தர் கண்டார். இவ்வாறு செய்வதன் நோக்கம் உணர்வு கடந்த நிலையை எய்துதலாகும். மேற்குறித்த ஆற்றல்களை நெறிப்படுத்தி தெய்வீக வாழ்விற்குப் பயன்படுத்துதல் வேண்டும். இவ் வாற்றல்களை முழுமையாக வளர்த்தலாகிய நெறிக்கே நாம் யோகம் என்று பெயரிடுகிறோம்.

மனிதனைச் சூழ்ந்து அதாவது அவனது ஆன்மாவைச் சூழ்ந்து விளங்குவன, கோசங்கள். அவை அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்பன. பூரணயோகத்தின் முக்கியக்கூறு அல்லது நிலை விஞ்ஞான மயமாதல் (Supra Mentalisation) ஆகும். விஞ்ஞான மனம் கோசங்களின் அல்லது நிலைகளில் மாற்றங்களை விளைத்து மனம் உயிராற்றல் சடம் முதலியனவற்றைத் தெய்வத் தன்மை பொருந்தியதாக ஆக்கும். தெய்வீக மயமாக்குதல்

என்ருல் யாது? இறைவன் இவற்றைப் பயன்படுத்த இயலும் என்பதா? அல்லது இவற்றின் மூலம் செயற்பட இயலும் என்பதா? அரவிந்தர் கொண்ட பொருள் யாது? உடல், மனம் முதலியன முற்றிலும் தம்மியல்பு மாறி, நுட்பம் பெற்ற அல்லது நுண்ணிய நிலை அடைந்து தூயதாகி விஞ்ஞான மனம் தொழிற்படுவதற்கு ஏற்புடைய நிலை அடைதலாகும். இவ்வாறு உருமாற்றம் அடைந்தே தெய்வீக வாழ்வு பெறுதல் என்பதாகும்.

அரவிந்தரது யோகத்தைப் பூரண யோகம் என்று ஏன் வழங்கு கின்ருேம்? இந்த யோகத்தில் மனிதனிடத்து விளங்குகின்ற ஆற்றல்கள் யாவும் பயன்படுத்தப் பெறுகின்றன. அவ்வாற்றல் களின் குறைகள் யாவும் களையப்பெறுகின்றன. பிற யோகங்கள், மனித ஆற்றல்களுள் எவையேனும் ஒன்றை வளர்க்க முற்படு கின்றன. எல்லா ஆற்றல்களையும் வளர்க்கப் பயன்படுத்த முயல் வதில்லை. பக்தியோகம், மனிதனது உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்தி இறைவனிடத்து அன்பு மீதூற வைக்கின்றது. அன்பு மூலம் இறைவனேடு ஒன்றுதலை இந்த யோகம் வற்புறுத்துகின்றது. பூரண யோகத்தில் சாதகன் தனது ஆற்றல்கள் யாவற்றையும் முழு மனத்துடன் ஒருமுகப்படுத்தி இறைவனை அணுகவும் அறியவும் முற்படுகின்ருன். உணர்வின் பல்வேறு நிலைகளில் எந்நிலையிலும் இறையோடு ஒன்ற சாதகன் முயல்கிருன். இறைவனேடு ஒன்றுதல் மட்டும் சாதகனின் நோக்கமன்று. இறைவனின் ஆற்றலை, உணர்வு ஒடுங்கி விளங்குகின்ற மிகவும் கீழ்நிலை வரைக்கும் கொணர முற் படுகின்ருன், பூரண யோகச்சாதகன். சுருங்கக் கூறின், சாதனம், நெறி, குறிக்கோள் யாவற்றிலும் பூரணமாக விளங்குவதே பூரண யோகமாகும். அரவிந்தரது யோகத்தை யோக மார்க்கங்களின் இணைப்பு என்று கூறுகிருேம். ஞானம், கருமம், பக்தி என்னும் மூவகை யோக நெறிகளும் அரவிந்தரது யோகத்தில் ஒருங்கிணை கின்றன. மனிதனிடத்து அறிவு, உணர்ச்சி, செயல்திறன் மூன்றும் விளங்குகின்றன. இவ்வறிவு எல்லைக்குட்பட்டது. இது வளர்ச்சி பெற்று ஞானமாதல் வேண்டும். உணர்ச்சிகளால் அலைப்புறு கின்ருன் மனிதன். இவை மேலான உணர்ச்சியாகி இறைவனி டத்துச் செலுத்தப்பெறும் மாருத இன்ப அன்பு ஆதல் வேண்டும். செயல்கள் யாவும் பற்றின்றிச் செய்யப்பெறுதல் வேண்டும். இவ் வகையில் மூன்று யோகங்களும் முறையே பயிலப்பெறுதல் வேண்டும். அரவிந்தரது யோகத்தைச் சரணுகதியோகம் என்று கூறுவதேன்? பிற யோகங்களில் ஆத்ம நிவேதனம் அல்லது இறைவ னிடத்துச் சரண்புகுதல் இறுதியில் நிகழும்; சாதனையின் நிறைவில் நிகழ்வதாகும். அரவிந்தரது யோகத்தில் தொடக்கத்திலேயே 'ஆத்ம நிவேதனம்' அல்லது இறைவனிடத்து அடைக்கலம் புகுதல்

நேரிடும். மனிதன் தன்னை முற்றிலும் இறைவனிடத்துச் சமர்ப்பிக்கின்றான். இவ்வகையில் நோக்கும்போது வாழ்க்கையே யோகமாகும். ஞானம், பக்தி முக்கியப் பங்கு ஏற்கின்றன. விஞ்ஞான மன–யோகம் என்று அரவிந்தரது யோகம் வழங்கப்பெறுவதற்குக் காரணம் யாது? விஞ்ஞான மனத்தினோடு தொடர்புகொள்ளப் பெரிதும் முயல்வது இந்த யோகம். அரவிந்தரது யோகத்தில் விஞ்ஞான மனம் (Super mind) மிகச் சிறந்த பங்கு ஏற்கிறது.

உள்பொருளினிடத்து அசையாத நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனைச் சிரத்தை என்றும் கூறலாம். தளராத ஆர்வம் இதைத் தொடர்ந்து அமைய வேண்டும். உயர்ந்த ஆன்மீகக் குறிக்கோள் பெறுவதில் உறுதி வேண்டும். நாம் ஏன் இறைவனிடத்துச் சரண்புக வேண்டும்? என்ற கேள்வி எழலாம். இறைவனின் அருட்பெருக்கைப் பெற்றாலன்றி சாதனைச்சிறக்காது. ஆத்ம சமர்ப்பணம் அல்லது ஆத்ம நிவேதனம் என்பது வாழ்க்கையில் எவ்வித இடையூறு நேர்ந்தாலும் உள்ளது தளராது உயர்ந்த குறிக்கோளிலே ஊன்றியிருத்தலாகும். இவ்வாறு உறுதியுடன் சரண்புகுந்த ஒருவனிடம் ஆற்றல்கள் தூண்டப்பெற்று அவை முழுமை பெறத் தொடங்குகின்றன. அன்னை, ஆதிசக்தி தானே சாதகனது முயற்சியை எடுத்துக் கொண்டு வெற்றிகளை விளைக்கின்றார். இந்நிலையில் சாதகனது சாதனையில் இறையருளின் வீழ்ச்சிக்கு உரிய தருணம் வாய்க்கின்றது. இவனது முயற்சிகள் முழுமைபெறுகின்றன.

'யோகங்களின் இணைப்பு' என்ற நூலில் அரவிந்தர் யோக சித்தி என்பது நால்வகையான பெரிய கருவிகளால் அடையப் பெறுவது என்று கூறுகின்றார். அவை சாஸ்திரம், உத்ஸாகம், குரு, காலம் என்பன. சாஸ்திரம் என்பது யோக சாஸ்திரத்தைக் குறிப்பதாகும். முன்னோர் புரிந்த சாதனைகள் விடுத்துச் சென்றுள்ள மரபுகள் முதலியவற்றை ஆராய்ந்து அவற்றினின்று நாம் பயன் கொள்ளுதலாகும். உத்ஸாகம் என்பது தணியாத ஆர்வமாகும். மேல் நோக்கிச் செல்வதற்குத் தளராத ஊக்கம் இதுவாகும். குரு யோக நெறியில் வல்லவர். நேர்முகமாக சாதகனுக்குப் போதனை புரிவார். அரவிந்தருக்குக் குருமார்களுள் தலைவனாக இருக்கின்ற இறைவனே உள்ளிருந்து வழி காட்டினார். காலம் என்பது உரிய காலத்தில் பயன் தருதல் ஆகும். ஒடுக்கம் நிகழ ஆண்டுகள் பல கழிந்துள. படிமுறை வளர்ச்சி நிகழவும் ஆண்டுகள் பலவாகலாம். யோக நெறி இக் காலக் கழிவைத் தவிர்க்க முயல்கிறது. ஆனால், இதனை அறவே நீக்க இயலாது.

அரவிந்தர் தமது பூரண யோகத்தின் நிறைவைக் குறிப்பிடும் போது கூறுவது ''இந்த யோகத்தின் முடிமணியாக இலங்குவது

பிரபஞ்சம் முழுமையையும் தெய்வீகப் புருஷனின் வெளிப்பாடாக விளையாட்டாக அல்லது லீலையாகக் காண்டலாகும். எல்லோரிடத்தும் அருவமான 'சத்' என்றும் உள்ளதைக் காணுதலன்று. பிரபஞ்சம் இந்த சத்தின் வெளிப்பாடேயாகும். ஆனால், ஸ்ரீ கிருஷ்ணனைக் காணுதலாகும்; தோன்றுகின்ற தோற்றம் கொள்ளாத அனைத்திற்கும் ஆதாரமாயும் அவற்றைக் கடந்தும் ஸ்ரீகிருஷ்ணன் விளங்குவதை அறிதலாகும். அவ்யக்த வியக்த நிலையைக் கடந்த பரநிலையில் விளங்கும் பரமபுருஷனை யாண்டும் காணுதலாகும்.7

ஸ்ரீவத்ஸவா அரவிந்தர் எவ்வாறு சங்கரரது கொள்கைகளிலிருந்து வேறுபடுகிறார் என்பதை விளக்கியுள்ளார். சங்கரர் சச்சிதானந்தம் என்பது மாறாத இருப்பு (உளதாந்தன்மை) உணர்வு, உண்மை, ஆனந்தம் என்று கூறுகிறார். பிரம்மம், மாயையைக் கடந்தது, மாயையின் ஆட்சிக்குட்பட்டவை, எல்லா எல்லைக் குட்பட்டவை. காலக் கூறில் அடங்குபவை. பிரம்மம் மாறுகின்ற உலகின் வேறானவன். இறைவன் (God) என்பது நிமித்தோபாதான காரணமாக விளங்குகிறான். உணர்வு கடந்த நிலையில் விளங்குகின்றபோது, இறைவன் மறைந்து, பரம்பொருள் உணர்வு தலைப்படும்.8

அரவிந்தருக்குச் சச்சிதானந்தம் என்பது நிலையுதலும் இயக்கமும் ஒருங்கே உடையது. அது உள்ளதும் ஆதலும் கூடியது. அத்துவித வேதாந்தத்தில் பரம்பொருளே உள்பொருள். அது 'பாழ்' அல்லது வெறுமைக்குச் சமமாகும். இத்தகைய பரம்பொருட் கொள்கையை அரவிந்தர் மறுக்கிறார். சக்தி பரம்பொருளின் ஆற்றலேயாகும். ஆற்றல் உள்ளதில் ஒடுங்கி உள்ளது. சிவன், காளி, பிரம்மம், சக்தி ஆகியவை ஒன்றே; இரண்டல்ல. இவை பகுக்க ஒண்ணாதன. உள்ளதில் விளங்கும் ஆற்றல் இயங்கலாம் அல்லது நிலைத்திருக்கலாம்.

அத்துவித வேதாந்தம் உலக இயக்கத்தை ஏற்று அது பரம்பொருளினிடத்து இல்லை என்று கூறுகின்றது. பரம்பொருளின் இயல்பான வெளிப்பாடு, லீலையாகும். லீலை பரம்பொருளினிடத்துத் தோன்றுவதென்றால், அது மித்தையாதல் யாங்ஙனம்? என்று அரவிந்தர் வினவுகிறார். தோன்றுகின்ற இப் பிரபஞ்சமும் உள்ளதே. பிரம்மத்தின் தோற்றமாகிய இவ்வுலகு உள்ளதே. பிரபஞ்சத்திற்கும் படிமுறை வளர்ச்சிக்கும் தோற்றநிலை கொடுக்கிறார் சங்கரர். ஆனால், அரவிந்தர் இவற்றிற்கு உண்மை உண்டு என்கிறார். சங்கர் நிலைத்த உணர்வை, பன்மையுலகோடு இணைத்துக் காணுதலில் இடர்பாடு கண்டார். அரவிந்தர் அத்தகைய இடர்ப்பாடு காணவில்லை. உணர்வும் சக்தியே என்று கண்டார். பரம்பொருளைச் சித்-சக்தி என்று அரவிந்தர் கூறுகிறார்.

மாயா வாதத்தை விளக்கக் கயிறு அரவாகத் தோன்று கின்றதை எடுத்துக் கூறுவர். கயிற்றின்மீது அரவு ஏற்றிக் காணப் பெறுகின்றது என்பர். 'அத்யாசத்திற்கு' இரு பொருள்கள் தேவை. ஒன்று கயிறு, மற்றொன்று பாம்பு. உள்பொருள் ஒன்றானால் பிரம்ம மானால் எவ்வாறு மித்தை தோன்கின்றது? இரு நிலைகள் உள என்றும், அவற்றுள் பிரம்மம் ஒன்றென்றும் மற்றொன்று மாயை என்றும் கூறினால், மாயையும் பிரம்மத்தைப் போல் உள்ளதாகும். மித்தை வாதம் அல்லது மாயாவாதத்தை அரவிந்தர் மறுக்கின்றார். உண்மையான அத்துவிதம் அனைத்துப் பொருள்களையும் ஏற்கிறது. உளதாதலை (Existence) இருகூறுகளாகப் பகுத்து ஒன்றை என்றும் உள்ளது என்றும், மற்றொன்று என்றும் பொய் என்றும் விளங்கு வதில்லை. ஆத்மனே உண்மை என்றால், அனைத்தும் ஆத் மனேயாகும்.

சங்கரருக்கும் அரவிந்தருக்கும் மோட்சம் பற்றிய கருத்து வேறுபாடு உண்டு. சங்கரருக்கு வீடுபேற்றில் ஆத்மன் பரம் பொருளோடு ஒன்றிவிடுகின்றது. உடல், உள்ளம், உயிர்ப்பாற்றல் போன்றவை என்றென்றும் ஆத்மனிடமிருந்து பிரிந்து நீங்கி விடு கின்றன. அரவிந்தருக்கு மனிதன் தெய்வீக வாழ்வு அமையப் பெறுதலே மோட்சமாகும். மனிதன், விஞ்ஞான மனிதனாக மாறிப் பிறக்கின்றான். மனிதன் தெய்வீகமாக உருமாற்றம் பெறுதலே வீடுபேறாகும். பூரண மாற்றத்தை அரவிந்தர் மோட்சம் என்று குறிக்கின்றார். மேலும், பிரபஞ்சம் முழுமைக்குமே விடுதலை பெற இயலும் என்கின்றார். அரவிந்தருக்குப் பிரபஞ்சம் முழுவதுமே தெய்வத்தன்மை பெற்று இலங்குதலே மோட்சமாகும். இவ்வாறு சங்கரரது கொள்கைகளினின்று அரவிந்தர் வேறுபடுகிறார். அத் துவித வேதாந்தத்துள் ஆத்மன் செயலற்ற ஒன்று. அரவிந்தர் கருத்துப்படி ஆத்மன் இயக்கம் உடையது. இயற்கைக்கு உயரிய இடத்தை அரவிந்தர் தருகிறார். இயற்கையும் இறையின் வடிவமே என்பது அவர் கருத்து. இயற்கை உணர்வற்றதன்று.

பேராசிரியர் நரவனே9 அரவிந்தர் எழுதிய நூல்களுள் 'மனித சுழற்சி' (Human cycle) என்ற நூலை வெகுவாகப் பாராட்டு கிறார். வருங்கால வரலாற்றாசிரியன் இந்திய தத்துவ ஞானத்தின் உணர்ச்சியை மதிப்பிடும்போது இந் நூலையே மதிப்பிடுவான் என்று கூறுகிறார். மனித இனத்தின் ஆன்மீகக் குறிக்கோளைப் பற்றி அரவிந்தர் குறிப்பிடும்போது அக் குறிக்கோளை அடைவதற்கு மனிதச் சமுதாயம் கடந்து வந்துள்ள நிலைகளைக் குறிப்பிடுகிறார். மிகவும் முற்பட்ட காலத்தில் குறியீட்டு நிலை இருந்தது. இது மனப்பான்மையாக மக்களிடத்து அமைந்திருந்தது. சமுதாய வளர்ச்சியில் இக் குறியீட்டு மனப்பான்மை சமய-கற்பனை முறை

யோடு கலந்து இருந்தது. இதன் காரணமாகப் பிரபஞ்சத்தை அணுகும்போது இயற்கைக்குப் பின்னணியாக உள்பொருள் (தெய்வீகமானது) உண்டு என்று அறிந்ததோடு தனது வாழ்வின் பின்னணியிலும் தெய்வீக உள்பொருள் உண்டு என்றறிந்தான். இக் கருத்தை விளக்கும்போது அரவிந்தர் சடங்குகள், மக்கள் வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றை ஆராய்கிறார். திருநூல்களுள் காணப்பெறும் உருவகங்கட்குச் சாதாரணமாகத் தரப்பெறும் விளக்கத்தைவிட ஆழ்ந்த பொருள் உண்டு என்று அரவிந்தர் கருதுகிறார். உருவகங்களைக் கவிஞரது கற்பனைவளம் என்று ஒதுக்குதல் தகாது என்பது அரவிந்தர் கருத்தாகும். வேத பாடலாகிய புருஷ—சூக்தத்தைக் குறிப்பாகச் சுட்டி, அது கவிஞனின் கற்பனையன்று என்று கூறி, மனிதனையும் பிரபஞ்சத்தையும் உள்ளார்ந்த நிலையினிலிருந்து இயக்கும் உள்பொருளின் அடையாளம் அல்லது குறியீடுகள் என்று குறிக்கின்றார்.

குறியீட்டு நிலைக்கு அடுத்த நிலை உருவமாதிரி நிலை என்று (Typal) அரவிந்தர் குறிக்கின்றார். குறியீட்டு நிலை சமயம் சார்ந்ததாக விளங்கியது. இந் நிலை உள்ளத்தியல், அறவியல் சார்ந்ததாக விளங்குகின்றது. தருமத்தின் குறிக்கோள், ஒழுகலாறு, கட்டுப்பாடு ஆகியவை இந் நிலையில் தோன்றுகின்றன. மனித வளர்ச்சிக்குக் காரணமானவை இவை. இறைவனின் வெளிப்பாடு நேராக இந் நிலையில் அமைவதின்று. சில சமுதாயக் குறிக்கோள்கள் நிறைவேறுவதால் இந் நிலையையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டு: தன்மானம் அல்லது மதிப்பு இந் நிலையில் போற்றப் பெற்றது. மனிதனின் வாழ்வில் அவை ஊன்றி அவனது வாழ்வைச் செம்மைப்படுத்தவில்லை. ஆதலால், மூன்றாவது நிலைக்கு மாற்றம் நிகழ்ந்தது. இந் நிலையை மரபுவழி (Conventional) எனலாம். அதாவது புறநிலைச் சடங்குகள் சிறப்புப் பெறுகின்றன. உண்மையான அறநிறைவு மறக்கப்பெறுகின்றது. மரபு வழிகளைப் பின்பற்றும் இக்காலத்தைப் பொற்காலம் என்றும் கூறலாம். வாழ்க்கை ஓர் ஒழுங்கிற்கு உட்படுகிறது. வரன்முறை பெறுகின்றது. நல்ல அமைப்பு பெறுகிறது. எந்திரப்பொறியொன்றிற்கு எண்ணெய் ஊற்றி நன்கு இயக்கிப் பணி கொள்வது போலாகும். இருப்பினும், அழிவு தவிர்க்கவொண்ணாததாகிறது. ஏச் சடங்காலும் அதன் புறவடிவம் நிலைத்து அகநிலை மறக்கப் பெறுமானால் பயனின்று. அவ்வப்பொழுது பெரியவர்கள் தோன்றுகின்றனர். அழிவைத் தவிர்க்க முற்படுகின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி சிறிது காலம் பயன்தந்து பின்னர் மறைகின்றது. ஆதலால் உண்மைக்கும், மரபிற்கும் இடைவெளி பெருகுகின்றது. இதன் காரணமாகத் தனி மனிதநிலை தோன்றுகின்றது.

இந் நிலையை (Individualistic) ஒத்த உணர்ச்சியுடன் விரிக்கின்றார். அரவிந்தர் இன்றைய உலகில் தனிமனிதன் எவ்வாறு ஏற்றம் பெறுகின்றான் என்பதை ஏற்கின்றார். இந்நிலை ஏற்பட்டாலன்றி எதிர்ப்புணர்ச்சி மரபுகளைப் போற்றாத நிலை போன்றவை தோன்றா. இவை தோன்றுவதற்குச் செயலுரிமை இயக்கம் சார்ந்த அறிவாற்றல் போன்றவை காரணம் என்கிறார். மனிதன் இந் நிலையில் வாழ்க்கை அமைப்புகளை மாற்றி அமைக்க முற்படுகின்றான். அவன் எதையும் ஆராயாது ஏற்பதில்லை. அவன் எதையும் ஆராய்ந்தே ஏற்கின்றான். தலைமை என்பதைக் கேள்விகள் கேட்டுத் தனது அறிவிற்கு ஏற்றதாயின் ஏற்பான். தனது அனுபவம், புலன் தரு வரவு, இவற்றை அடிப்படையாக வைத்து அறிய முற்படுகின்றான். தனது அறிவு விளக்கத்தை மேலானதாகக் கொள்கின்றான். இடைக்காலத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்ட போது மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

'தனிமனித நிலையினுள்ளும்' கேடுகள் உள. தனிமனிதன் தனது தெளிவு அல்லது ஒளியை, அதிகமாகப் பயன்படுத்துகின்ற போது, கருத்துகளிடையே ஒழுங்கின்மை ஏற்படுகின்றது. போற்றப்பெறுகின்ற பண்புகளிடையே அடுத்தடுத்து மாற்றம் நிகழக் காண்கிறோம். கூட்டு வாழ்வில் அல்லது சமுதாயமாக மக்கள் வாழ்கின்ற போது தனிமனிதன் தனது உரிமைகட்காகப் போராடுகின்றான். இவ்வுரிமைகள் சமுதாய நீதியோடு முரணுதல் ஆகாது. இந் நிலையில் முரண்பாடு நிகழக்காண்கிறோம். இருவகையான இன்றியமையாத நிலைகள் ஏற்படுகின்றன. பொதுவாக யாவரும் ஏற்கத்தகுந்த உண்மையைப் பற்றிய வரையறை அல்லது உயர் நிலை (Standard) ஒன்றாகும். மற்றொன்று சமுதாய ஒழுங்கு என்று ஏற்கத்தகுந்த ஒன்றை வரையறுப்பதாகும்.

ஐரோப்பாவில் அறிவியல் கொண்டு சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்க முயன்றனர். அறிவியலுள் பொதுவான உண்மைகள் நாட்டப்பெறுகின்றன. பொது உண்மைகள் தேர்ந்து எடுக்கின்றனர். இவற்றைச் சமுதாய வாழ்வில் பயன்படுத்தினர். இவ்வாறு பயன்படுத்தியது ஐரோப்பியனுக்கு மனநிறைவைத் தந்தது. ஆனால், இதன் விளைவு தனிமனித நிலை நீங்குகின்ற சூழல் ஏற்பட்டது. செயலுரிமையும் குறைவதாயிற்று. முற்பட்ட காலத்தில் புரோகிதன் செல்வாக்குப் பெற்றிருந்தான். தற்போது தொழிற்றுறை விற்பன்னன் பெறுகின்றான். முன்னர் மன்னன் பெற்றான். தற்போது அரசு (State) பெறுகின்றது. இதன் விளைவு தனித் தனியே துறைகள் தெரிந்து அவ்வத்துறைகளில் தேர்ச்சி பெறுவாராயினர். அவ்வத்துறைகள் வளர்ச்சி குன்றுவதாயிற்று.

காரணம் பிற துறைகளோடு தொடர்பின்மை; விளைவு, தனிமனிதன் முறையற்ற முறைகளில் தனது உரிமைகளை நிலைநாட்ட முற்பட்டதாகும்.

அகநிலைக் கொள்கை (Subjectivism) உருவாயிற்று. அகம் (Ego) ஆன்மாவாகாது. தனிமனிதனிடத்துத் தோன்றிய இவ்வக உணர்வு மெல்ல மெல்ல சமுதாய அகத்திற்கு (Social Egoism) இடம் தருவதாயிற்று. உலகில் பல பகுதிகள் தேசிய முதன்மை, சிறப்பு இன முதன்மை அல்லது ஏற்றம் வலுவாகப் பேசப்பெற்றது (National or Racial Superiority). ஐரோப்பாவில் ஜெர்மானியர் தமது இன மேன்மையை வெகுவாகப் போற்றினர். தம்மினம் சாராதவர்களை அவர்கள் மதிக்கவில்லை. அரவிந்தர், இந் நிலையை இன்றைய சமுதாயத்தில் காணக்கூடிய முரண்நிலை என்கிறார். கடந்த நூற்றாண்டில் உயிரியல் அறிஞர் உயிரினத்திடையே உயிர்கள் வாழ்வதற்கு இடையறாது போராடுகின்றன என்றும், இப் போராட்டத்தில் தகுதியுள்ளவையே வெற்றி பெறுகின்றன என்றும் கருதினர். இயற்கையில் இப் போராட்ட மனப்பான்மை காணப்பெறுகின்றது. வன்மை மேலோங்கி இருப்பதாகக் கண்டனர். ஆனால், தனி மனிதனைக் காப்பாற்றாது, அவன் வகையை உருமாதிரியை இயற்கை காக்கின்றது.

இவ்வாறு பலநிலைகளையும் அரவிந்தர் ஆராய்ந்து மனிதனின் படிமுறை வளர்ச்சியில் அறிவிற்கு உரிய தனியான சிறப்பான இடம் உண்டு என்கின்றார். இவ்வறிவாற்றல் மூலமே மனிதன் தனது அக, புறவாழ்வைச் செம்மை செய்து கொள்கின்றான். சூழ்நிலையைத் தனது ஆட்சிக்குட்படுத்துகின்றான். படிப்படியே முன்னேறி வருகின்ற வருங்காலத்தைப் பற்றிக் கருதுகின்றான். வாழ்க்கையின் முன்னேற்றத்தில் நாம் கண்ட, பயன்படுத்திய கருவிகளுள் அறிவாற்றலே தனித்து இருந்து தான் படைத்தவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து அதன் தகுதியை அறிய வல்லதாகும். அறிவு பெறுவதில் மட்டும் ஈடுபட்டு, செயலிலோ உணர்ச்சிப் பெருக்கிலோ சிக்குண்டு சிதறாது இருக்க, அறிவு ஒன்றாலேயே இயல்வதாகும். சித் (Spirit) சடமல்லாதது. ஆன்மா ஒன்றே அறிவாற்றலைவிட ஆற்றல் சான்றது. நாம் தற்போது முக்கிய கட்டத்திற்கு வந்துள்ளோம். அறிவு வாழ்க்கையை வரையறுக்கும் சட்டங்களைப் புறத்தே நோக்கியும், கீழ்நோக்கியும் அறிய இயலும். மற்றொன்று (ஞானக்கண்) மேல்நோக்கவும், அகத்தே நோக்கவும் இயல்வதாகும்.

உண்மையைப் பற்றின்றி தொடரவல்லது அறிவு. ஆயினும், செய்முறைகளில், செயற்கு ஒத்துவருகின்றதா என்று பார்த்தலிலும் அறிவு ஈடுபடுகின்றது. பெர்க்ஸோன் என்கின்றவர் பயன்

நோக்கிய இவ்வறிவின் பணியே சிற்சில சமயங்களில் மேலோங்கிய, அறிவு பெறுகின்ற ஆர்வம் குன்றுகின்றது என்று கூறியுள்ளார். பயன் நோக்குதல் குறைவுடையதன்று. மனிதனைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்களை ஒடுக்குவதற்கு அறிவு தேவை. இப் பணியினைப் புரிந்த பிறகு அறிவு தன்னைத்தான் கடக்க முற்படுகின்றது. வாழ்க்கையின் மூல ஆற்றல்கள் கீழேயும் உள. மேலேயும் உள. கீழேயுள்ள ஆற்றல்கள் தூய்மைப்படுத்தப்பெற்று பண்படுத்தப் பெற்று, பிறகு மேலேயுள்ள ஆற்றல்களை அறிவு அறியத் தொடங்குகின்றது. அது தன்னைச் சூழ்ந்துள்ள ஒளியைப் பிரதி பார்க்கத் தொடங்குகின்றது. அறிவுகடந்த ஒன்று உள்ளது என்பதை (Super-Rational) அறிவு சுட்டுகின்றது. இச் சுட்டு நம்மை இயக்கும் பரம்பொருளை உணரத் தூண்டுகின்றது. இவ்வாறு வரலாற்றுக் கண் கொண்டு தனித்த ஆற்றலோடு மனித வாழ்க்கையில் இதுகாறும் கடந்து வந்த படிநிலைகளை எடுத்தியம்பி, இனி வருங்காலத்தில் எவ்வாறு மனித முன்னேற்றம் அமைதல் வேண்டும் என்றும் அரவிந்தர் கூறியுள்ளார்.

## மேற்கோள் நூல்கள்


1. Vaikarai 1972-73
2. Life Divine P.31
3. ,, ,, P.74
4. Mother P.37
5. Life Divine P.123
6. ,, ,, P.177
7. ,, ,, P.207
8. Srivatsava Contemporary Indian Philosophy pp. 109, 110, 111, 112.
9. Naravane 'Modern Indian Thought' pp. 224, 225, 226.

# 9. இராதாகிருஷ்ணன்
## (1888—1975)

இராதாகிருஷ்ணன் அவர்கள் நம்மிடையே வாழ்ந்து அண்மையில் நம்மை விட்டுச் சென்ற உலகப் பேரறிஞர்களுள் ஒருவராவார். இவர் தலைசிறந்த தத்துவப் பேராசிரியர், அரசியலறிஞர்; பல இந்தியப் பல்கலைக் கழகங்கட்குத் துணைவேந்தராகப் பணியாற்றி அப் பல்கலைக் கழகங்களின் நிலையை உயர்த்தியவர். இந்தியத் துணைக் கண்டத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் தலைவராகவும் பணியாற்றி இந்தியாவின் பெருமையைத் தனது நாவன்மையாலும் எழுத்தாற்றலாலும் உலக நாடுகளிடையே நிலைநாட்டியவராவார். பல அரிய நூல்கட்கு ஆசிரியர். கீழை மேலைநாடுகளின் தத்துவ அமைப்புகளில் நல்ல தேர்ச்சி உடையவர். நடுவு நிலைமை பிறழாத நேரிய சிந்தனையாளர். இவரது தலைசிறந்த நூலென்று போற்றத்தக்கது ''இந்திய மெய்ப் பொருளியல்'' (இரு தொகுதிகள்) என்பதாகும். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இந்திய தத்துவப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். இவரது நூல்கள் 'பல ஆராய்ச்சிகளைத் தூண்டி யுள்ளது. ''வாழ்கின்ற தத்துவ அறிஞர்'' என்று நூல் வரிசையில் ''இராதாகிருஷ்ணன்'' என்ற தலைப்பிலும் ஒரு சிறந்த நூலொன்று வெளிவந்துள்ளது. உலகப்பேரறிஞர் இவரது தத்துவக் கொள்கைகளைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து எழுதியுள்ளனர். இக் கட்டுரைகளில் அடங்கியுள்ள கருத்துகளை ஏற்றும், மறுத்தும் தமது கருத்துகளை இராதாகிருஷ்ணன் இந் நூலுள் எழுதியுள்ளார். ஆகவே, இராதாகிருஷ்ணனது தத்துவக் கொள்கைகளை வரன்முறையாக அறிவதற்கு மேற்குறித்த நூல் பெரிதும் துணை செய்வதாகும்.

இராதாகிருஷ்ணன் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள முருகனுக்கு உகந்த திருப்பதிகளுள் ஒன்றாகிய திருத்தணியில் 1888ஆம் ஆண்டுத் தோன்றினார். இப்பதி இன்றும் யாத்திரிகர் ஆண்டு முழுமையும் முருகப் பெருமானைத் தரிசிக்கக்கூடும் இடமாகும். எட்டு ஆண்டுகள் திருத்தணியில் இவர்தம் இளமைப்பருவம் கழிந்துள்ளது. பின்னர் வேலூரில் ஊரிஸ் கல்லூரியில் உயர்கல்வி பயின்றுள்ளார் (1900—1904). இதற்குப் பிறகு சென்னை

கிறித்தவக் கல்லூரியில் தமது எம்.ஏ. பட்டம் பெற்ருர் (1904—1908). அந் நாளில் உயர்ந்த பட்டம் பெற்ற பிறகு சென்னை மாநிலக் கல்லூரியில் பணிபுரியலாஞர் (1909—1916). கன்பூசியஸ் என்ற சீன அறிஞர் ஆசிரியராகப் பணிபுரியத்தக்கவர் இன்னுர் என்று கூறியுள்ளார்: ‘‘பழையனவற்றைப் புத்துயிர் பெற்று எழச்செய்து, புதிய அறிவைப்பெற வல்லவனே ஆசிரியராகும் தகுதி பெற்றவன்’’ என்கின்ருர். இக் கூற்று இராதாகிருஷ்ணனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும். வேத காலச் சிந்தனைகள், முற்பட்ட கிரேக்க ரோமானியச் சிந்தனைக் கருவூலங்களில் எவ்வளவு இவருக்குத் தேர்ச்சி இருந்ததோ அந்த அளவிற்கு மார்க்ஸியம், இந் நாளைய அளவைமுறை, மெய்ப் பொருளியல் வகைகளிலும் பெரும் புலமை பெற்றிருந்தார். இவரது நினைவாற்றல் பெரிதும் வியக்கத்தக்கது. நாநலத்தை உலக அவைகள் கண்டு வியந்து போற்றியுள்ளது. இவரிடத்து எழுத்தும் பேச்சும் ஒரே தன்மையதாகச்சிறப்புற்று அமைந் துள்ளது. பேச்சாற்றல், எழுத்தாற்றல், உரையாடும் திறன், கல்வி கேள்விகளிற் சிறந்திருந்தமை ஆகிய இன்னேரன்ன நலன்கள் இவரை உலகம் போற்றும் பேரறிஞராகத் திகழ வைத்துள்ளது. இந்தியத் தரிசனங்களுள் அத்துவித தரிசனம் இவரைப் பெரிதும் கவர்ந்தது. சங்கரரது அத்துவித போதனையையே அவர் தமது சிந்தனையின் முடிபாகக் கொண்டாரென்ருலும், மேலை நாட்டுத் தத்துவப் பயிற்சியாலும் தமது சிந்தனை வளத்தாலும் அத்துவித தரிசனத்தை இன்று உலகில் பெரும்பான்மையோருக்கு உகந்ததாக வழங்கினுர். அத்துவித வேதாந்தத்தில் இவருக்கு ஈடுபாடு மிகவும் இருந்த தென்ருலும், பிற வேதாந்த முடிவுகளில் குறிப்பாக இராமானுஜரது விசிஷ்டாத்துவிதத்தில் நல்லதேர்ச்சி இருந்தது. நாத்திக தரிசனங் களாகிய சமணம், பௌத்தம், சாருவாகம் முதலியனவும் இவரது நூல்களில் நல்ல விளக்கம் பெற்றன. இத் தரிசனங்களுள் பௌத்தம் பெருவிளக்கம் கண்டது என்று கூறலாம். பௌத்தம் பிறந்த இந்திய நாட்டில் செல்வாக்கழிந்து அயல் நாடுகளில் சீரோடும் சிறப்போடும் திகழத் தொடங்கியது. இராதாகிருஷ்ணன் அவர்கள் அரசியலிற் பெரும் பொறுப்பு ஏற்றிருந்த காலத்தில் புத்தருக்குப் பெருவிழா கண்டார். இவ் விழாவின் தனிசிறப்பு ‘‘புத்தர் மீண்டும் (இந்தியா) வருகை தருதல்’’ என்பதாகும். புத்தரது தலைசிறந்த போதனைகள் உபநிடதங்களின் முடிவிற்கு ஏற்றவை என்று உலகறிய, தக்க காரணங்களுடன் முதன் முதலில் விளக்கியவர் இவராவார். பௌத்தத்தின் சீரிய கொள்கை களடங்கிய ‘‘தம்மபதம்’’ என்ற நூலைப் பதிப்பித்தார். புத்தர் பெருமானைப் பற்றிய சிறந்த தொரு நூல் தனியே எழுதினுர். இந்தியர்

மூன்று நூல்களைத் தமது தத்துவசமய அறிவிற்கு மூல நூல்களென்று கருதுவர் (பிர்ஸ்தான திரயம்). அவை: உபநிடதங்கள் பகவத்கீதை, பிரம்ம சூத்திரங்கள் ஆகும். உபநிடதங்களைப் பதிப்பித்ததோடு, சிறந்த முறையில் குறிப்புகளோடு, விளக்க உரையோடு நமக்கு அவற்றைத் தந்துள்ளார். இதேபோன்று பகவத்கீதைக்கும் தக்கதொரு உரை கண்டுள்ளார். பிரம்ம சூத்திரங்கட்கும் சங்கரரது பேருரையைத் தழுவிய உரை எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வாறு முப்பெரு நூல்கட்கு உரை கண்டு அவற்றின் கீர்த்தியினை உலகறிய செய்தமையால், ஆச்சாரியர் வரிசையில் இவரை வைத்து எண்ணத்தக்க ஏற்றம் பெற்றுள்ளார்.

இராதாகிருஷ்ணன் அவர்களது நூல்களில் பொதிந்து கிடக்கும் சிறப்பியல்புகளாவன: நடை எளிமை, அழகு, பொதுமை நோக்கு, கீழை மேலை நாடுகளின் நோக்க அமைவுகளின் இணைப்பு, மனிதப் பற்றுக் கோட்பாடு, ஆன்மீகப் பண்புகளுக்கு ஏற்றஅறிவியல், கலையியல்,பண்பியல் ஆகிய துறைகளது முடிவுகளை ஏற்கும் மனப்பான்மை, திறந்த உள்ளத்துடன் கருத்து வேறுபாடுடையவர்களது முடிவுகளையும் ஏற்கும் பரந்த நோக்கு ஆகியவை இவரைச் சிறந்த சிந்தனையாளராக நமக்கும் உலகிற்கும் புலப்படுத்தியுள்ளன.

இராதாகிருஷ்ணனை கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் பேரறிஞராகப் போற்றியுள்ளனர்; இவ்விரு உலகங்களையும் இணைக்கும் பாலமாக விளங்குகின்றார் என்பது உலகறிஞர் துணிபாகும். இவ்வாறு இணைத்தலால் இரு உலகங்களினுள்ளும் உள்ளவர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், வளர்க்கவும் வாய்ப்புகள் நேர்ந்துள்ளன. இவரை ''இரு மொழியறிந்த மெய்யறிஞர்'' (Philosopher bilinguist) என்று வழங்குகின்றனர். மேலை நாட்டினர் தத்துவ, சமயத் துறைகளில் சிந்தித்துத் தெரிந்தனவற்றைக் கீழை நாட்டினர் நன்கு உணரவும், கீழைநாட்டறிஞர் முடிவுகளை மேலை நாட்டினர் நன்கு அறியவும் இராதாகிருஷ்ணனது நூல்கள் பெரிதும் பயன்படுவன. உலகப் பேரறிஞர் இவரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைகளில் இவரது தொண்டு நன்கு புலனுகின்றது. விவேகானந்தருக்குப் பிறகு அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளிடையே நல்ல செல்வாக்கும், புகழும் தமது உரைகளால் தேடியவர் இவர் என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமின்று. கடந்த நூற்றுண்டில் தொடங்கிய இந்திய மறுமலர்ச்சி பல சிந்தனையாளர்களைக் கண்டுள்ளது. அவர்களுள் தத்துவ சமயத் துறைகளில் தேர்ச்சி மிக்கவராக விளங்கியவர் இராதாகிருஷ்ணன் அவர்கள். இவர், இவ்விரு துறைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு மிகவும் சிறந்ததாகும்.

இருபதாம் நூற்றுண்டில் இந்து சமயத்தை நன்கு விளக்கிய வர்களுள் தலையாயவராக இவர் திகழ்ந்தார். சமயத்தின் இன்றி யமையாமையை உணர்ந்து அதற்குரிய இடத்திற்காக தாம் பேச நேர்ந்த இடங்களிலெல்லாம் வழக்குரைத்துள்ளார்; தமது நூல் களில் வற்புறுத்தியுள்ளார். இந்துக்கள் தமது சமயம் பெற்ற விளக்கத்திற்காக இவருக்குக் கடமை பூண்டுள்ளனர். சமய அறிஞர், உலகு எங்கணும் இவருக்குக் கடமைப்பட்டுள்ளனர் என்று கூறுவதும் பொருந்தும். தமது இதயத்திலுணர்ந்த வற்றிற்கு இராதாகிருஷ்ணன் சொல்லுருவம் கொடுத்து அறிவிற்கு ஏற்றவாறு சமய உண்மைகளைப் போதித்துள்ளார். இந்தியப் பண்பாட்டில் திளைத்தவராகிய இராதாகிருஷ்ணன் தனித்த தொரு சமயத்தின் ஏற்றத்தைப் பற்றிப் பேசவில்லை. சமயங் களின் அடிப்படையில் விளங்கும் உண்மைகளையே எடுத்து விரித்து எழுதினுர். சமயத்திற்கு அண்மைக் காலத்தில் நேர்ந்த தாக்குதல்கள் பல திறத்தனவாகும். இயற்பியல், உயிரியல் உள்ளத்தியல், மானிடஇயல், சமுதாய இயல் போன்ற துறை களில் கண்ட உண்மைகள் சமய உண்மைகளுக்கு, ஒவ்வாதன வாகப் பல தோன்றின. இவ்வுண்மைகளைச் சரிவர உணர்ந்து அவற்றின் குறைகளையும் நிறைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து சமயத்தின் சிறப்பியல்புகள் இவ்விவை என்று எடுத்துக்கூறிய சிறப்பு இராதாகிருஷ்ணனையே சாரும். பொது உடைமை வாதி சமயம், மக்கட்கு அபின் போன்றது. மக்கள் அபினை உண்டால் மயங்கி நிற்பர். மக்களது சமுதாய வாழ்வில் நாம் காணும் ஏற்றத் தாழ்வுகளை நிலைபெறச் செய்ய சமயத்தைப் பயன்படுத்துகின்ருேம். சமயத்தின் பெயரில் இவ் வேற்றத்தாழ்வுகள் என்றென்றும் நின்று நிலவுபெறுமாறு செய்கின்ருேம் என்பது பொதுவுடைமை வாதியின் இக் குற்றச் சாட்டையையும் நடைமுறை அரசியல்வாதியின் குற்றச்சாட்டுகளையும் நன்கு ஆராய்ந்து, சமயம் என்பது உண்மை யிலேயே மனிதன் மேம்படுவதற்குரிய சாதனம் என்றும், பொருளா தார ஏற்றத்தாழ்வுகள் அரசியல் முறைகளால் மாற்றி அமைக்க வேண்டுவன என்றும் இவர் கூறியுள்ளார்.

மக்கள் ஆன்மீகப் புத்துணர்ச்சி பெற்று வாழத் தொடங்கினு லன்றி உலகிடையே காணும் சீர்கேடுகளை நீக்க இயலாது என் பதனை வலியுறுத்தி இவர் எழுதியுள்ளார். சமயத்தின் சிறப்பியல்பு களை வற்புறுத்துகின்றபோது, இவர் உலக அனுபூதிச் செல்வர், அறிஞர், தூயோர் ஆகியவர்களது அனுபவங்களையே அடிப்படை யாகக் கொண்டு எழுதுகிருர். நமது நாட்டு முன்னேர் வேதம் போன்றவற்றை வெளிப்பாடு (Revelation) என்று கொண்டு அதன் அடிப்படையில் அவர்கள் கொண்ட சமய உண்மைகட்குச் சிறப்புக்

கண்டனர். மனிதச் சமுதாயம் சமயத்தினிடத்தில் கொண்டுள்ள பற்றை எடுத்துக்கூறவும், எதிர்ப்புகளை ஏற்று, அவற்றிற்கு ஏற்ற மறுமொழி தரவும் இந்திய சிந்தனையாளரால்தான் இயலும். சிறப்பாக இந்துவால்தான் தர இயலும் என்று நிலை நாட்டியவர் இராதாகிருஷ்ணன் அவர்கள். ஏனெனில், சமயங்கள் அனைத்தும் அடிப்படையில் ஒன்றே எனவும், சமயம் என்பதும் பெரிய குடும்பம் அனையது எனவும். வெவ்வேறு சமயங்கள் குடும்ப உறுப்பினர்கள் போன்றன எனவும் அல்லது மரத்தின் வெவ்வேறு கிளைகள் எனவும் இந்துவே கருதுகின்றான். இராமகிருஷ்ணரது சிறந்த சாதனைகள் சமய சாதனைகள். அனைத்துச் சமயமும் ஒரேகுறிக்கோளையுடையன என்று நிலை நாட்டின. சமயங்களிடையே பகைமை நீக்க வேண்டும், ஒற்றுமை நிலவ வேண்டும் என்று இராமகிருஷ்ணரது பெரு வாழ்வு நமக்குச் சீரிய படிப்பினையை நல்குகின்றது. சமயப்பொறை (Religious tolerance) பெரிதும் கடைப்பிடித்து இன்று மக்கள் ஒழுகுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சமய ஒப்பியல் ஆராய்ச்சி வளர்ந்தமையாகும். இராதாகிருஷ்ணன் அவர்களது சீரிய தொண்டுகளும், சமயப்பொறையின் வளர்ச்சிக்குக் காரணமாகும். இதன் காரணமாகச் சமயம் சார்ந்த மெய்யறிஞர்களுள் தலையாயவராக நாம் இராதாகிருஷ்ணனை ஏற்றுப்போற்றுகிறோம்.

இராதாகிருஷ்ணன் படிமுறை வளர்ச்சிக்கு ஆன்மீக விளக்கம் தருகின்றார். படிமுறை வளர்ச்சியின் விளைவாக மிகச்சிறந்தவனாக மனிதன் தோன்றியுள்ளான். இவனது சிறப்பு யாண்டுள்ளது? சிறந்த உடலமைப்பிலா? இல்லை உள்ளத்தின் அமைப்பிலா? ஓரளவிற்கு உடல், உள்ளம் வளர்ச்சியில் மனிதனின் சிறப்பு அமைகின்றது எனலாம். மனிதனின் தோற்றத்திற்குப் பிறகு ஆன்மீகப் பரிணாமம் தொடங்குகின்றது எனல் வேண்டும். மனிதன் இவ்வுலகில் வாழ்தல் உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றற் பொருட்டேயாகும். இவ்வுலகில் வாழ்ந்து மறைதலிலே எந்தச் சிறப்பும் இல்லை. பிறப்பு, வளர்ப்பு இணைவிழைச்சு, மக்கட்பேறு போன்றவற்றில் விலங்குலகினின்று நாம் வேறுபடுவதில்லை. உயர்ந்த குறிக்கோள் மக்களை இயக்க வேண்டும். இதனை அடைய மனிதன் இடையறாது முயல வேண்டும். பிறந்து, வாழ்ந்து மடிதலிலேயே எந்தச் சிறப்பும் கிடையாது. மனிதன் தன்னுணர்வு பெற்றவன். இவ்வுணர்வால் பெறற்கரிய பேறு எது எனக் கண்டு அதை அடைய முற்படல் வேண்டும் என்று இராதாகிருஷ்ணன் கூறுகின்றார். மனிதன் தான் உள்ள நிலையை விட மேம்பட்ட நிலையை அடைய விரும்புகின்றான். நாம் முன்னர் இருந்ததைவிட இன்று சிறந்த நிலையில் விளங்குகின்றோம் என்றால், இந் நிலையைவிட மேலும் சிறந்த நிலையில் விளங்குவதற்கு இயலும் என்பது இதனின்று நாம்

பெறுகின்ற உண்மை. மனித இயற்கை மாற்றங்கட்கு உட்படுவ தொன்று, இம் மாற்றம் புறக் காரணங்களிலும் நிகழ்வது; அகக் காரணங்களாலும் நிகழ்வது. மனிதன் ஆளுமை இருவகைகளில் மாற்றம் கொள்கின்றது. ஒன்று, சுற்றுப்புறச் சூழ்நிலைகளாலும், உள்ளார்ந்த காரணங்களாலும் இயற்கையில் மாற்றம் ஏற்படு கின்றன. இம் மாற்றங்கள் இயந்திர மாற்றங்கள் அல்லன; உணர்வற்றன. மனிதனின் ஆளுமை படிமுறை வளர்ச்சியில் நல்ல முன்னேற்றத்தை விளைத்துள்ளது. மனிதன் தன்னைப் புற உலக நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் தன்னை மறத்தலோ, இழத்தலோ கூடாது. அற இயல், சீரிய ஒழுகலாற்று இயல், மனிதனின் அகத் தூய்மையை வளர்ப்பதாகும். ஒழுக்கத்தால் மனிதன் உயர்ந்த நிலைக்கு உயர இயலும். மனிதனின் சமய வாழ்வு சிறக்க வழி வகைகளை வகுத்தார். இவ் வாழ்வு மேம்பாடு அடையதலிலேதான் மனிதனின் உய்வு உண்டு என்று இராதாகிருஷ்ணன் கூறுகிறார் அவர் சமயத்தைப் பற்றிப் பேசும்போது தனிச் சமயங்களைப் பற்றிக் கருதவில்லை. தனிச் சமயச் சார்பின்றி, சமயங்கள் அனைத்தும் ஒருங்கே போற்றும் உயர்ந்த பண்புகளை அவர் வற்புறுத்தினார். இந்து சமயத்தின் பொதுமைக் கூறுகள் உலகு ஏற்கத் தக்கன என்றார். இச் சமயம் ஆன்மீக வாழ்வின் மேம்பாட்டை வலியுறுத்து வதால் எச் சமயத்தாரும் இதன் துணிபுகளை ஏற்று ஒழுகலாம் என்பது இவரது முடிபு. சம்ஸாரம், ஜகத் என்ற இரு சொற்களைப் பிரபஞ்சத்தின், இயக்க நிலையைக் குறிக்க இந்தியத் தத்துவம் பயன்படுத்துகின்றது. தொடர்ச்சியும் மாற்றமும் இயற்பியல் உலகின் இரு இயல்புகள். இராதாகிருஷ்ணன் படிமுறை வளர்ச்சி கொள் கைகளுள் புதிது விளைதல் கொள்கையைக் (Emergent Evolution) கடைப் பிடிக்கிறார். காரியம் என்பது, விளைவன, தத்தம் காரணத் தினின்று தோன்றுவன என்பது இக் கொள்கையின் கருத்து. பரிணா மத்தில் முன்னர் தோன்றியனவே மீண்டும் மீண்டும் தோன்று கின்றன என்ற கருத்து இக் கொள்கையால் மறுக்கப் பெறுகின்றது. விளைவுகள் தோன்றுகின்ற போது புதிதாகச் சிலவற்றைத்தோற்று விக்கின்றன. இவற்றை இதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றைக் கொண்டு விளக்க இயலாது. அடிப்படையில் இயக்கம் மிக்க, படைப்பாற்றலோடு கூடிய உள்பொருளினின்றுஉடல்,உயிராற்றல், உணர்வு, தன்னுணர்வு முதலியன தோன்றுகின்றன. பிரபஞ்சம் ஒரு செய்முறை நிகழ்ச்சி போன்றது. பிரபஞ்சம் குறித்ததொரு குறிக்கோளை நோக்கி இயங்குகின்றது. ''ஆனந்தம்'' பரிணாம முறையின் இலட்சியமாகும் என்கிறார். உலகு பல்வேறு படிமுறை நிலைகளைக் கடந்து வளர்ந்து வந்துள்ளது. தொடக்கத்தில் சடம் விளங்கியது. சடம் வளர்ந்து உயிராற்றல் அல்லது உயிர்ப்புத் தத்துவம் தோன்றியது. இதன் தோற்றத்தை இதற்கு முன்னிலை

யாகிய சடத்தைக் கொண்டு விளக்க இயலாது. பின்னர் உணர்வு தோன்றியது. உணர்வின் தோற்றத்தையும் இதற்கு முன்னுள்ள உயிராற்றல் (Life) கொண்டு விளக்க இயலாது. பின்னர், மனித நிலையில் தன்னுணர்வு (Self-consciousness) தோன்றியுள்ளது. தன்னுணர்வின் தோற்றத்தின் விளைவாக சிந்தனையாற்றல் நுழை புலம் போன்றவை நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறு படிமுறை வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை இராதாகிருஷ்ணன் ஏற்கிறார்.

பிரபஞ்சத்தின் இருப்பு முதலில் சடமாகத் தோன்றுகின்றது. முன்னோர் சடத்தை (Matter) உயிரற்ற பகுக்கொணாத பொருளாக நுண்ணிய அணுக்களாகக் கண்டனர். இக் கருத்தை இராதாகிருஷ்ணன் ஏற்கவில்லை. தொன்மையான வேதாந்திகளது கருத்து, சடம் படைப்பாற்றல் கொண்டது என்பதாகும். இது பல்வகைப் படைப்பு வகைகளைத் தோற்றுவிக்க வல்லது என்பதாகும். இக் கருத்தை இவர் ஏற்றார். உயிர்ப்பொருளும் (Organism) சுற்றுப்புற சூழ்நிலையும் இயைந்து பல்வேறு மாற்றங்கட்கு வழி வகுக்கின்றன. இடையறுது இயற்கையோடு உயிரினங்கள் போராடி தக்கன நிலைபெறுகின்றன. தகாதன நிலை பெருது அழிந்து ஒழிகின்றன. தகுதியும் தகுதியின்மையும் விலங்கு நிலையில் அவ்வவற்றின் உடற் தகுதியையே குறிக்கின்றன. இயற்கையோடு போராடி உறுப்புகள் வலுப்பெற்று உயிரினங்கள் வாழ்கின்றன. போராட்டத்தில் சில, உடற் தகுதியின்மையால் மடிகின்றன.

மனித நிலையில், சுற்றுப்புறச் சூழ்நிலையோடு நேரடித் தொடர்பு உணர்வு நிலையில் ஏற்படுகின்றது. மனம், உயிராற்றலினின்று தோற்றம் கொண்டாலும், இவ் ஆற்றலை உடலின் இயக்கங் கொண்டு உயிராற்றலின் தொழிற்பாடுகள் விளக்க இயலாது. மனத்திற்குச் சில சிறப்பியல்புகள் உண்டு. மனத்தின் சிறந்த கூறு, உணர்வாகும். மனத்தின் தொழிற்பாடு, நரம்பு மண்டல அமைப்பையும், மூளையையும் சார்ந்தே விளங்குகின்றது. இவற்றிடையே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. எனினும் மனத்தின் தொழில்களை முற்றிலும் மூளையின் இயக்கம் கொண்டே விளங்குதல் இயலாது. இராதாகிருஷ்ணன் கூறுவது: ''நமது உடலியல் அறிவு இன்னும் வளர்ச்சிபெற்றாலும், மனத்தின் தொழில்களை மூளையின் அமைப்பினின்று பெற இயலாது. உயிருடைப் பொருளை முழுமையாக நோக்கும்போது அதன் அக உறுப்பு அமைதி-பிற உயிரற்ற பொருள்களைவிட மேலானதாக விளங்குவதைப் போன்று மனத்தின் அமைப்பும், ஒழுங்கு பெற்றதாகத் தன்னைத்தான் கட்டுப்படுத்திக்கொள்ளக் கூடியதாக விளங்குகின்றது. உணர்வுடைய மனிதன் தனது செயல்களைக் கட்டுப்படுத்தி நெறிப்

படுத்துகின்றுன்; தான் நாடிய குறிக்கோள்களை நோக்கி இயக்கு கின்றுன். இந் நிலையில் இராதாகிருஷ்ணன் கூறுவது, மனிதன் பிரபஞ்சத்தின் கூருக விளங்குகின்றுன் என்றுலும், இப் பிரபஞ்சத் தைக் கடக்கக் கூடியவனுக இருக்கின்றுன் என்பதாகும். அவன் சடமன்று, உயிராற்றல் மட்டுமன்று;. மன ஆற்றல் மட்டுமுடைய வனன்று, இவையனைத்தும் ஒருங்கு கூடிய நிலையுமன்று. இக் கோளில் மனிதனின் தோற்றத்தைப் பற்றி இவர் கூறும் போது தொடர்ந்து தோன்றியுள்ள உயிரினங்களுள் இக் கோளில் மனிதன் இறுதியில் தோன்றியவன். உயிராற்றலினின்று இறுதியாகத் தோன்றியவன் மனிதன் என்று கூற இயலாது. ஏனெனில், அறிய யொணுத ஒன்றனின் வெற்றி பெருத மற்ருெரு சோதனைப் பொருளாக மனிதன் அமையலாமன்ருே? காலக் கழிவில், இயற்கை மனிதனைவிட ஆற்றலில் மேம்பட்ட ஒருவனைப் படைக்க லாம். உலகப் படைப்பில், வியக்கத்தக்க பல்வேறு இனங்கள் தோன்றி மறைந்துள்ளன. இவற்றின் தோற்றத்திற்குக் காரணம் பல நூறு ஆண்டுகளின் படிமுறை வளர்ச்சியாகும். இவ்வாறு தோன்றியவையும் மறைந்தொழிந்தன. எனின், மனிதன் தான் என்றென்றும் நிலைத்து நிற்பவன் என்று எண்ணுதற்கு இடமின்று. இவ்வுலகப் படிமுறை வளர்ச்சியில் மனிதனும் ஒருநாள் மறைதல் கூடும். அவனது நிலவுலக வாழ்க்கையும் முடியக்கூடும் என்று இராதாகிருஷ்ணன் கூறுவதினின்று அவர் மனிதனின் உய்வில் நம்பிக்கை அற்றவர் என்று கருத இடமில்லை. மனிதன் மிகுந்த விழிப்புடன் நடந்து கொண்டு, தான் கொண்ட குறிக்கோளடை தலிலே நாட்டம் மிகுந்தவனுதல் வேண்டும் என்று வலியுறுத்தவே பிற உயிரினங்கள் மடிந்து ஒழிந்ததை நமக்குச் சுட்டுகின்றுர். பிற உயிரினங்களின் அழிவிற்குக் காரணம் அவை தம்மை உணர்ந்து சுற்றுப்புற சூழ்நிலைகட்கு ஏற்ப ஒழுகுகின்ற திறனற்றவையாக இருத்தலாகும்.

மனிதன் பிரபஞ்ச ஒழுங்குகளை இயற்கை நிகழ்ச்சிகளை அமை தியாகக் கண்டு கொண்டு வாளா இருப்பவன் அல்லன். அவன் இயற்கை நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றுன். விலங்கு நிலையி னின்று மனித நிலைக்கு நாம் வரும்பொழுது, படிமுறையான வளர்ச்சியைக் காணவில்லை. திடீரென்று மாற்றத்தைக் காண் கின்ருேம். புதிய அனுபவ வாய்ப்புகளைப் பெற்று மனிதன் இயங்குவதைக் காண்கின்ருேம். மனிதன் இன்று இயற்கையின் நிகழ்ச்சிகளை வென்று தனது தலைமையை ஓரளவு நாட்டி வருகின்றுன் என்றுல், அத் தலைமை அவனது உடலில் உள்ள வன்மையாலன்று. அவனது உடற்காரண மாகத் தோன்றுகின்ற விரைவான இயக்கத் தாலன்று. அவனது

இயல்பூக்கங்கள் விலங்குகளைவிடக் கூர்மையானவை என்று சொல்வதற்கில்லை. மனிதனைவிட உடல்வன்மை மிக்க விலங்குகள் உள. மனிதனைவிட விரைந்து இயங்கும் விலங்குகள் உள. இவ் இயல்பூக்கங்கள் வியககத்தக்க நிலையில் விலங்குகளில் தொழிற்பட நாம் காண்கிறோம். மனிதனின் ஏற்றம் அவனது அறிவுடைமையில் அமைகின்றது. புதிய, மாறுபடுகின்ற சூழ்நிலைகட்கு ஏற்ப ஒழுகுகின்ற திறன் அறிவாற்றலால் மனிதனுக்கு ஏற்படுகின்றது. இத்திறன் மனிதனிடத்து அமைந்தாலும், அவன் விலங்குகளின்று முற்றிலும் மாறுபட்டவனும் அல்லன். மனிதன் தனது உடல் வாழ்வைப் பொறுத்த வரையில் அவன் விலங்கு நீர்மைகளைக் கொண்டே விளங்குகின்றான். மெலிந்த உடல், எல்லைக்குட்பட்ட வாழ்வு, கட்டுப்பாட்டிற்குட்பட்டு இயங்கும் மனம் ஆகியவை இவன் விலங்கினின்று தோன்றியுள்ளான் என்பதைப்புலப்படுத்தும் என்று கூறுகிறார். மனிதன் மனிதத்தன்மையை முற்றிலும் பெறத் தக்கவன். விலங்கியல்புகளை மெல்ல மெல்ல வென்ற வண்ணம் மனிதன் இருக்கிறான். மனிதன் நிறைவான முழுமையான மனிதனாகப் பண்புகளிற் சிறந்தவனாக இன்றும் ஆகவில்லை. இவன் விலங்கியல்புகளினின்று பூரணமாக விடுதலை பெற்றுவிட்டான் என்றும் சொல்வதற்கில்லை. உள்ளத்தியலாருள் ஒருசாரார் நடத்தைக் கொள்கையினர் (**Behaviourists**). மனிதனின் செயல்களனைத்தையும் வரையறையுற்ற அனிச்சைச் செயல்கள் என்று விளக்குதல் இயலும் என்றனர். ஆனால், மனிதனின் அறிவுடைச் செயல்களை இக்கொள்கையினர் முற்றிலும் மனத்திற்கு நிறைவு தரும் வகையில் விளக்க இயலவில்லை. மனிதன் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு அடிமையாக விளங்கவில்லை. தனது செயலுரிமையைப் புலப்படுத்துகின்றான். மனிதன் இயற்கையில் உள்ள ஐம்பூதங்களைத் தனக்குக் கட்டுப்பட்டு இயங்க வைத்து விட்டான் என்று சொல்வதற்கியலாது, நில நடுக்கம், பூகம்பம் போன்றவை உலகின் பல பாகங்களில் நிகழ்ந்தவண்ணம் உள. பெரும் புயல், சூறைக் காற்று போன்றவை அவ்வப்பொழுது தோன்றி மக்கட்கும் அவர் தம் உடமைகட்கும் பெருஞ் சேதம் விளைத்த வண்ணம் உள. மனிதனும் விலங்குகளைப் போன்று வளர்ச்சி, மலர்ச்சி, அழிவு என்ற முத்திரை நிலைகட்கு உட்பட்டே விளங்குகின்றான். மனித நிலையில் அறியப்பெறாத ஒரு சட்டம் (அதிருஷ்டா) என்பது மனித வாழ்வை வரையறுக்கின்றதை நாம் அறிகின்றோம். மனிதன் உண்மை, அழகு, நன்மை என்று கூறப் பெறும் உயரிய பண்புகளை அறியவும், அவற்றை மதிப்பிடவும் கற்றுள்ளான். அவனது படைப்புகள் இம் மதிப்பீட்டுணர்வை நமக்குப் புலப்படுத்துகின்றன. இவ்வுணர்வால் மனிதன் உயரிய இடத்தைப் பிரபஞ்ச அமைப்பில் பெறு

கின்றான். உயர்ந்த இலக்கியங்களை மனிதன் படைத்துள்ளான். அவனது சிந்தனையின் திறத்தால் உயர் சமயங்கள், தத்துவ அமைப்புகள் தோன்றியுள்ளன. என்றாலும், மனிதன் இன்னும் பிரபஞ்சத்தோடு இயைபுடன் வாழவில்லை. மனிதரிடையே சமூக உறவுகள் மலரவில்லை.நாடுகளிடையே எல்லைப் பிரச்சினை இன்னும் இருந்துகொண்டே வரக் காண்கின்றோம். கொடுங்கோன்மை, அராஜகம் போன்ற நிலைகளும் இந்த நூற்றாண்டின் கடைப் பகுதியிலும் நிலவக் காண்கின்றோம். இது மிகவும் வருந்தத் தக்கது. உலக மக்கள் இன்றும் ஒருமைப்படவில்லை. விஞ்ஞான சாதனங்கள் உலகை நெருங்கச் செய்துள்ளன. இடத்தை நாம் வென்றுள்ளோம். தொலைவிலுள்ள நாடுகள் விரைந்து செல்லும் ஜெட் விமானங்களால் அண்டை நாடுகளாக ஆகியுள்ளன. இருந் தாலும் மனிதன் இன்றும் மனிதனாக வாழத் தலைப்படவில்லை. இராதாகிருஷ்ணன் இக் கருத்தை அழகுபடக் கூறுகிறார். நாம் வானில் பறவைகளைப்போல, இயந்திர சிறகுகள் படைத்த வான ஊர்திகளைக் கொண்டு பறக்கின்றோம் ஆழ்கடலில் அஞ்சாது விசைப் படகுகளைச் செலுத்துகின்றோம். பெரிய கப்பல்களை இயக்குகின்றோம். ஆனால் மனிதராக நாம் நிலவுலகில் நடக்க மறந்துவிட்டோம் என்று கூறி இவர் வருந்துகிறார். 'எல்லோரும் ஓர் குலம், ஓரினம் என்று கவிஞர் பாரதி கனவு கண்டார். இவரது கனவு நனவாகின்ற நாளே மனித இனம் தனது குறிக்கோளை அடைகின்ற பொன்னாளாகும். இனிப் போர்கள் மூளுதல் கூடாது. நாடுகளிடையே பிணக்குகள் கூடாது. பிணக்கின்றி இணக்கத் துடன் மனிதச் சமுதாயம் வாழ்தல் வேண்டும். பருவ காலத்தின் மாற்றங்கள் மாறுகின்றன. ஒன்று சில பகுதிகளில் வறட்சி நிலவுகின்றது. மழையின்மை தொடர்ந்து மக்களைத் துன்புறுத்து கின்றது. இல்லையேல், பெருவெள்ளம் மற்ற பகுதிகளில் நேரிடக் காண்கின்றோம். இவ்வாறு பூதங்களுட் சில தமது ஆற்றலை மனிதன் உணருமாறு செய்தாலும், மனிதன் தளராது அஞ்சாது அவற்றை அடக்கி ஆளவே முற்படுகின்றான். பூகம்பங்கள் பல நிகழும் பகுதிகள் நிறைந்த ஜப்பான் கடந்த இரண்டாவது யுத்தத்தின் போதும் பின்னும் அடைந்துள்ள முன் னேற்றம் வியக்கத்தக்கது. காட்டாறு போன்று வெள்ளம் பெருகிப் பாயும் பகுதிகளில் அணைக்கட்டுகளை எழுப்பி, மின் னாற்றலை மனிதன் உற்பத்தி செய்கின்றான். இயற்கை சில இடங் களில் பணிந்து செல்லக் காண்கிறோம். சிற்சில சமயங்களில் சீறி எழக் காண்கின்றோம். வஞ்சமனத்தவனது ஒழுக்கக் கேட் டினைக் கண்டு பூதமைந்தும் அகத்தே நகுகின்றன என்று வள்ளு வர் கூறுகின்றார். 'இயற்கையின் சீற்றத்தைக் காணும் போதெல் லாம் ஐம்பூதங்கள் நம்மைப் புறத்தே கண்டு நகுகின்றனவோ

என்று ஐயப்பட வேண்டுவதாகின்றது. இவ்வாறு இயற்கையின் சில கூறுகளை மனிதன் அடக்க முடியாமல் இருப்பது தவிர்க்க முடியாததாகும். மனிதன் தன்னைப் பொறுத்த வரையில் தனது விலங்கியல்புகளை வெல்லலாமன்றோ? போர்களில் ஈடுபட்டு, நாடுகள் அழியும் வகையில் போருணர்ச்சி வலுத்து விளங்காமல் மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாமன்றோ? ஒவ்வொரு போரும் பொருதப்பெறும்போது, போரை ஒழிக்க அப் போர் புரியப் பெறுவதாகக் கூறுகிறோம். போர் முடிந்த பின்னும் போர்கட்கு வித்திடக் காண்கின்றோம். இரு உலகப் பெரும் போர்களை நாம் கண்டுள்ளோம். இரண்டாவது போர் விளைத்த உயிர்ச்சேதம் நம்மை வெட்கித்தலைகுனிய வைத்துள்ளது. இருஉலக அமைப்புகளைத் தோற்றுவித்து உலகிடையே அமைதியைக் காக்க முற்பட்டோம். இவற்றுள் முன்னையது தோல்வியுற்று மறைந்தது. பின்னர் உலக அமைதிக்காக ஒன்றியைந்த நாடுகளின் அரங்கம் (U.N.O.) இடையறுது முயன்று கொண்டு வருகிறது.

மனிதன் சமய வாழ்வு வாழ்பவன். இறைவனை அல்லது பரம்பொருளை அடைதல் இவனது சமய அனுபவத்தின் குறிக்கோளாகும். பரம்பொருளின் தன்மை மனித அறிவிற்கு அப்பாற்பட்டது என்றாலும், மனிதன் இறையை உணர இடையறுது முயல்கின்றான். அறிவியல் துறையிலே ஒன்றை விளக்க எழுகின்ற பல கொள்கைகளைப் போன்று சமயங்கள் பல தோன்றி இறையியல்பை விளக்க முற்படுகின்றன. மனிதன் இறையுண்மையை நிறுவ முற்படுவது, இயற்பியல் அறிஞன் மின்னணுவைக் கருதுகோளாகக் கொள்வதைப் போன்றதாகும். ஒயிட்ஹெட் என்ற அறிஞர் கூறுவதைப்போன்று நடைமுறையில் பயன்படும் கருதுகோள் (Working hypothesis) இறைக்கொள்கையாகும். இராதாகிருஷ்ணன் கூறுவது : நமது அனுபவங்களில் சிலவற்றுள் (நாம்) இறையுண்மையை ஏற்று விளங்குகின்றோம். நமது கற்பனையில் நாம் கொள்ளும் இறைவன் மின்னணுவைப் போன்று உண்மையுடையதாகலாம். ஆனால், நாம் உடனுகப் புலக் காட்சியில் காணும் பொருள்களைப் போன்று இறையமையாதிருக்கலாம். மனிதன் தனது ஆன்மீக அனுபவங்களை விளக்க இறைக்கொள்கையை அமைத்துக் கொள்கின்றான்.

சமயம் சார்ந்த மெய்ப்பொருளியல் (Philosophy of Religion) மனிதனது சமய அனுபவங்களை ஆராய்கின்றது. சமயம் என்பது பண்புணர்வு மட்டுமன்று. இக் கருத்தைக் கொண்டவர் காண்ட் என்கின்ற ஜெர்மானிய அறிஞர். சமயமும் ஒருவகையான அறிவாகும் என்று ஹெகல் என்கின்ற மற்றொரு ஜெர்மானிய அறிஞர் கருதுகின்றார். இவ்விரு அறிஞர்களது கருத்துகளையும்

இராதாகிருஷ்ணன் ஏற்கவில்லை. சமய அனுபவத்தில் அனுபூதிக் கூறு ஒன்று உண்டு என்றும், அக்கூறு மறைமெய்ம்மை சார்ந்தது என்றும் கூறுகின்றார். இவ்வனுபூதி உள்பொருட் காட்சிக்கு வழி வகுக்கின்றது என்றும், இதனை வாழ்க்கையிலேயே அனுபவித்தல் இயலும் என்றும், உலக அநுபூதிச் செல்வர்கள் அனுபவித்துள்ளனர் என்றும் இவர் சுட்டிக்காட்டி கான்ட், ஹெகல் கருத்துகளை ஏற்க மறுக்கிறார்.

உள் பொருட் காட்சி அல்லது மெய்ப்பொருள் உணர்வு இப் பிறவியிலேயே கைகூடும் என்பது நமது நாட்டுச் சமய தத்துவ அறிஞர் முடிபாகும். இவ்வாறு காட்சி பெற்றோர் ஜீவன் முக்த நிலை எய்தினோர் எனப் பெறுவர். மனிதன் பொருளியல் வாழ்வின் நிறைவிலே சிறப்பிலே மனம் நிறைவு கொள்வதில்லை. மனிதன் ஆன்மீக உலகில் தான் ஓர் உறுப்பினன் என்பதை உணர்கினறான். மனிதன் உண்மை, நன்மை, அழகு ஆகிய குறிக்கோள்களை அடை தற்பொருட்டு தனது உடைமைகளை எல்லாம் துறந்து அல்லற்கட்கு உட்பட்டு, வாழ்தலைக் காண்கின்றோம். ஆதலால், நிலைத்த பண்பு களை அடையும் வரை அவனது ஆர்வம் குன்றுவதில்லை. சமயம் மனிதனுக்குக் கட்டுப்பாட்டை வகுத்துத் தருகின்றது. இக் கட்டுப் பாட்டால் தீமைகளை எதிர்த்துப் போராடுகின்றான். பிரபஞ்சத் தினுள் அவன் ஓர் ஒழுங்கைக் காண்கின்றான். இவ்வொழுங்கு அவனுக்கு எளிதில் புலனாவதில்லை. அது மறைமை சார்ந்ததாக விளங்குகின்றது. இம் மறைமை (Mystery) எல்லாச் சமயங்களிலும் ஏற்கப் பெற்றுள்ளது. இம்மறைமையினை உணர, ஓயாது மனிதன் முயல்கின்றான். சமயம் என்பது சில நம்பிக்கைகளைக் கொண்டு வாழ்தல் மட்டுமன்று. ஆராயாது சில உண்மைகளை ஏற்று (Dogmas) வாழ்தலும் சமயம் ஆகாது. உள்பொருள் அல்லது பரம்பொருளுணர்வுதான் சமயத்தின் உட்கிடையாகும். இப் பரம் பொருளும் நமக்கு அயலே விளங்குவதன்று. நம் உள்ளே விளங்கும் ''ஆத்மனே'' அப் பரம்பொருளாகும். ஆத்மன் (ஆன்மா) வேறு, ஜீவன் வேறு. இவ் ஆத்ம உணர்வு அல்லது காட்சியே பரம்பொருள் காட்சி எனப் பெறுகின்றது. உபநிடதம் உணர்த்தும் உண்மை, பரம்பொருளாகிய பிரம்மமும், ஆத்மனும், முற்றொருமையுடையன என்பதாகும். மனிதன், புற நிலையில் பிரபஞ்சத்தை நுணுகி, ஆராய்ந்து பரம்பொருளே பிரபஞ்சத்தின் மூலம் என்று இறுதியில் உணர்கின்றான். அவன் அக நிலையில் ஆழ்ந்து தான் உடலன்று என்று படிப்படியே ஒவ்வொன்றாக 'இதுவன்று இதுவன்று' என்று களைந்து தான் ஆத்மன் என்று (உணர்வு) உணர்கின்றான். பின்னர் உண்மைநிலையில் பிரம்மமாகிய சத்,சித், ஆனந்தம் என்

கின்ற பொருளும் தானும் ஒற்றித்த இயல்புடையதை உணர்கின்ருன். சமயம் சார்ந்த மெய்ப்பொருளியல் என்பது சமயத்தை அதன் உண்மை நிலையில் உணர்ந்து உணர்த்துகின்றது. சமய அனுபவம் இன்றி சமயத்தைப் பற்றிய மெய்ப்பொருளியல் கொள்கை தோன்ற இயலாது. புலன்தரு வரவை ஒழுங்குபடுத்தி அறிவியல் நமக்கு உண்மைகளைக்காண வழிவகுக்கின்றது. இதே போன்று சமயச் சிந்தனைகளும் சமய அனுபவங்களை முறைமைக்குட் படுத்துகின்றன, விளக்கம் காண முயல்கின்றன. நமது புலன்கள் புற உலகை உணர்த்துவதைப் போன்று அக உணர்வுகள், உள் பொருளை உணர்த்துகின்றன. சமய அறிஞர்கட்கு (அறிவர்) இறையிடத்துச் செலுத்தப்பெறும் அன்பு உண்மையான செய்தியாகும். தாவர இயலறிஞனுக்குப் பச்சைஇலை எந்த அளவிற்கு உண்மை உடையதோ அந்த அளவு உண்மையுடையது இறைவனிடத்து கொள்ளப்பெறும் அன்பாகும். புலன் தரு வரவுகளை ஏற்று, சமய உணர்வு உணர்த்தும் உண்மைகளை மறுப்பது பொருந்தாத செய்கையாகும். சமய உணர்வு சில மக்களிடையே நல்ல வளர்ச்சி பெருத நிலையில் இருப்பது உண்மையே. செவிப் புலன் பழுதுற்றவன் இசையை நுகர முடியாது. கட்புலன் பழுதுள்ளவன் காட்சியின் பங்களை அறிந்து இன்புற முடியாது ஆனுல், இப்புலக் குறைவுடையோர் இசையெனவொன்ருே, நிற உலகென வொன்ருே இலது என்று தமது அனுபவம் கொண்டு வாதிடுதல் அறிவுடைமை யாகாது. சமய உணர்வு குன்றியவர்கள் சமயம் என ஒன்று இலது என்று வாதிடுதல், செவிடன் இசையுலகு என ஒன்று இல்லை என்று வாதிடுவதை ஒக்கும். சமயங்கள் தம்முள் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகளுட் சில அடிப்படையானவை; சில புற வேறுபாடு களாகும். இவ் வேறுபாடுகளின் காரணத்தால் சமய அனுபவமே இலது என்று வாதிடுதலும் சரியன்று. சடப்பொருளின் இயல்பு குறித்து விஞ்ஞான உலகில் பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. இக் கொள்கைப் பன்மை, சடத்தின் இருப்பை மறுப்பதாகாது. மொழிகள் பலவாக விளங்குதற்குக் காரணம் உலகிடையே ஆங்காங்கு வாழும் மக்கள் தத்தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முயல்வதே ஆகும். எவ்வாறு மொழிப் பன்மை உலக மக்களது உணர்ச்சிப் பெருக்கிற்கு, கருத்துச் செறிவிற்குப் போக்குவீடாக அமையக் காண்கின்ருேமோ, அதேபோன்று சமயங்களும் உலகில் பல்வேறு இடங்களில் காலங்களில் தோன்றி மனிதனின் இறைவேட்கையைத் தணிக்கச் செய்துள்ளது. சமயம் சார்ந்த மெய்ப் பொருளியல், சமய அனுபவம் உணர்த்தும் பல்வேறு செய்திகளை ஒழுங்கிற்கு உட்படுத்தும் முயற்சியேயாகும். சமய இயல் (Theology) என்னும் துறை சமயம்தோறும் எழுந்துள்ள சடங்குகள், கொள்கைகள் ஆகியவற்றை விளக்க எழுந்த

பகுதியாகும். இத் துறை சமயம்தோறும் நிலவக்காண்கின்றோம். இந்து சமயத்தில் பிராமணங்கள் (Brahmanas) வேதச் சடங்குகளை விரித்து விளக்க முற்பட்ட பகுதிகளாகும். இவ்வாறே பிற சமயங்களினுள்ளும் சமய இயல் வளர்ச்சிப் பெற்றுள்ளதை நாம் காண்கின்றோம். சமய இயலுள் கற்பனையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கற்பனைச் சமய இயல் (Speculative theology) என ஒரு பிரிவு உண்டு. இப் பிரிவு பொதுவான உண்மைகளினின்று முரண் நிலைத் தடுக்க முறையின் மூலம் (Dialectic) இறைவன் உண்டு என்ற முடிபிற்கு வரும். சமய இயலின் மற்றொரு பிரிவு ஆராயாமல் சில உண்மைகளை ஏற்று ஒரு சில அனுபவங்களையே ஒரு காலத்தில் ஒரு நாட்டில் குறிக்கப் பெற்றவையையே விளக்க முற்படும். இது குறித்ததொரு காலம் நாடு என்ற வரையறையுடன் சில உண்மைகளையே ஆராயாமல் பிறரும் ஏற்கும்படி வற்புறுத்துகின்றது (Dogmatic Theology). சமயம் சார்ந்த மெய்ப்பொருளியல் பல்வகைப்பட்ட சமய அனுபவங்கள் அனைத்தையும் ஏற்கிறது. இவ் வியல் எல்லா நாடுகளிலும் சமய அறிஞர்கள் கண்ட உண்மைகளை ஆராய்கிறது. சமய அனுபவத்தை அறிவியல் முறையில் இவ்வியல் அணுகுகின்றது. நடுவு நிலைமை பிறழாமல் சமய உண்மைகளை ஆராய்கின்றது. மக்கட் சமுதாயத்தில் தொன்று தொட்டு நிலவிவரும் சமயக் கொள்கைகளைக் கோட்டமின்றி ஆராய்வதே கல்வியின் நோக்கமாகும். இவ்வாறு ஆராய்ந்து கண்ட முடிபுகள் யாவை ? மேலை, கீழை நாட்டறிஞர் யாவும் இறைவனை நேராக உணர்ந்துள்ளனர் என்பதாகும். சர்மா என்பவர் தமது தொன்றுதொட்டு நிலவி வரும் இந்து சமயம் (Hinduism through the Ages) என்னும் நூலுள் சமயம் சார்ந்த மெய்ப்பொருளியல் ஆராய்ச்சியில் பெறப்பெற்ற சான்றுகளை நமக்குத் தருகின்றார். (1) ஆன்மீக அனுபவம் என்பது உள்பொருளைப் பற்றி மனிதன் முழுமையாகக் கருதுவதாகும். மனிதனிடத்து அறிவாற்றல் ஒழுக்கஉணர்வு, உணர்ச்சிகள் ஆகியவை தொழிற்படக் காண்கின்றோம். இவையனைத்தும் ஆன்மீக வாழ்வில் தொழிற்படுகின்றன. ஆன்மீக அனுபவம், இவனது அறிவு, ஒழுக்கம், உணர்ச்சிகள் ஆகியவற்றை உட்படுத்துவதோடு அவற்றைக் கடந்தும் விளங்குகின்றது. மனிதன் தான் முழுமையாக இறைவனை அறிதல் என்பதே ஆன்மீக அனுபவம் என்று குறிக்கலாம். இவ்வறிவு கருத்தியல்பானதன்று; பொதுப் பண்புடையதுமன்று. இது பருமையாக இன்ன தன்மைத்து என்று சுட்டியறியக் கூடியது. இவ் வறிவை, அளவை முறைகட்கு உட்படுத்தி வெளியிட முடியாது. ஆத்மனை ஒருவர் அனுபவித்து அறியலாமே அன்றி அதைப்பற்றி விரிவாக நூல்களின் வாயிலாகப் படித்தல மூலம் அறிய முடியாது. அன்பு அல்லது காதலைப் பற்றி

நாம் பிறரிடம் அன்பு பூண்டோ காதல் கொண்டோ, அன்பைப் பற்றி அறிய இயலுமே அன்றி அன்பைப் பற்றிய ஆய்வுரைகள் பல பயின்றாலும் அவை விளக்கம் தரமாட்டா.

(2) ஆன்மீக அனுபவம் முழுமையான அனுபவம் (Integral Experience). இவ் வனுபவம் ஏற்புடையதாதற்கு வேறு எதுவும் தேவையில்லை. தன்னளவிலேயே ஏற்புடைமையைத் தாங்கிக் கொண்டு விளங்குவது. இதனை ஸ்வத—சித்த என்பார்கள். இது தன்னொளியோடு கூடியது. பிற சான்றுகள் இதற்குத் தேவை யில்லை.

(3) இச் சமய அனுபவம் நமக்கு உள்பொருளை (Being) அல்லது உள்ளதை, பரம்பொருளை, என்றுமுள்ள பொருளை அல்லது மெய்ப்பொருளை உணர்த்துகின்றது. இவ்வாறு உள் பொருளை வெளிப்படுத்தும்போது நாம் அதனைக் கருதவோ, அதன் இயல்புகள் இவ்விவை என்று கூறவோ இயலாது. பரம் பொருள், மாற்றம், மனம் கடந்தது என்று மணிவாசகர் மொழியில் கூறலாம். பரம்பொருளைச் சொல்லிறந்த தொல் லோன் என்கின்றோமன்றோ? அனுபூதி நிலை உணர்த்தும் பரம் பொருள் ''நிர்விசேஷ'' ''நிர்க்குணமாகும்.'' உள்ளதன் இயல்பை எதிர்மறைச் சொற்களால்தான் இயம்ப இயலும். இவ்வாறு மாற்றங் கடந்தது என்று கூறுவதன் பொருள் யாது? பரம்பொருளின் உடன்பாட்டு நிலை எல்லை கடந்து விளங்கு கின்றது. சிந்தனை முறைகள் மூலம் அது பொங்கி வழிகின்றது என்பதாகும். நாம் பரம்பொருளை வெறுமை (Nothing), பாழ், சூன்யம் என்று வழங்கக் காரணம் யாது? நாம் படைப்புண்ட உயிர்கள்; நமது மனம் எல்லைக்குட்பட்டது. இந் நிலையில் நாம் படைப்போனை எல்லைகடந்ததாகக் கருதுதல் யாங்ஙனம்? ஆதலால், பாழ், வெறுமை என்று கூறுகின்றோம். இச் சொற்களை அவ்வாறே பொருள் கொள்ளுதல் கூடாது. பிரம்மமானது நிர்க் குணம், நிர்விசேஷம் என்று கூறும்போது, நம்மால் கருதக்கூடிய எதுவும் பிரம்மத்தை வெளிப்படுத்தாது என்று பொருள். ஆனால் உள்ளதன் நிறைவே பிரம்மமாகும் (Fullness of being).

(4) அனுபூதி (அனுபவம்) நிலை-மூன்று சிறப்பியல்புகளைக் கொண்டது. இவை உளதாந்தன்மை, உணர்வு, நிறைவான ஆனந்தம் என்பனவாகும். இவற்றைச் சத், சித், ஆனந்தம் என்று நாம் வழங்குகின்றோம். இக் குணங்களை நாம் பிரித்து அறிகின்றோம். ஆனால், இவை பகுக்கொணாதவை. நாம் நமது வாழ்வில் போற்று கின்ற உயர்ந்த பண்புகளாகிய புனிதத்தன்மை, நீதி, அன்பு, இரக்கம் ஆகியவற்றை இறைக்கு ஏற்றிக் காண்கின்றோம். இப் பன்புகள் மனிதரிடத்து விளங்கும்போது எல்லைக்குட்பட்ட

வையாக அமைகின்றன. இவை இறையிடத்து எல்லையில்லாத நிலையில் அமைகின்றன. இறைவன் இவ்வுயர் பண்புகட்கு நிலைக் களம் என்று கூறுகின்றோம். இதேபோல் பரம்பொருளை உருவ நிலையில் வைத்து நாம் கருதுகிறோம். ஆனால், மனிதனுக்கு அமைந்துள்ள உருவம் போன்றதன்று இறைக்கு உள்ள உருவ நிலை. நாம் நமது வாழ்க்கையில் அறிவது 'ஆளுமை' (Personality). பரம்பொருளையும் ஆளுமைக்குட்படுத்தி உருவ நிலையில் வைத்துக் கருதுகின்றோம். ஆனால், உள்பொருளோ உருவம்அருவம் கடந்தது; உருவநிலையில் வைத்து இறைவனைக் கருதினாலும் அது குறியீடாகும். அப்பர் பெருமான் குணம், குறி கடந்தவன் இறைவன் என்கின்றார். 'இறைவன் உருவம் உடையனும் அல்லன், அருவநிலையினனும் அல்லன்' என்று கூறிச் சைவசமயம் அருவுருவ நிலையைக் கற்பித்துள்ளது. இவ்விரு நிலைகளையும் மறுத்தற்கில்லை; ஏற்பதற்கும் இல்லை. ஆதலால், அருவுருவ நிலையைப்பற்றி இலிங்க வடிவ நிலையை சைவ சமயம் குறிக்கின்றது. இறைவனுக்குத் தன் உண்மை நிலை என ஒன்று உண்டு. நமக்குத் தோன்றுகின்ற நிலை யென மற்றொன்று உண்டு. பரம்பொருள் என்பது மன வாக்கிற்கு அப்பாற்பட்ட நிலை; இது தன்னுண்மை நிலை (Thing in itself).

(5) இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே உள்ள உறவைச் சமய அனுபவம் நமக்கு வற்புறுத்துகின்றது. இவ் அறிவு நிலைகள் நமது வாழ்வில் அமைகின்ற நிலைகளைப் போன்றதாகவும் விளங்கலாம். இறைவனைத் தந்தையாகவும், பக்தன் தன்னைத் தனய னாகவும் கொள்வதுண்டு. இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தொண்டனாகவும் (தாஸன்), சேவகனாகவும் கொள்வதுண்டு. இறை வனைத் தோழனாகவும், தன்னை நண்பனாகவும் கருதுதல் உண்டு. அன்புநெறியில் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாக வும் கொள்ளுதலுண்டு. மேற்குறித்தவற்றைச் சைவ சமயம் சத்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று கூறும். இறைவனைத் தலைவியாகவும், தன்னைத் தலைவனாக வும் பாரதி துணிந்து மரபிற்கு மாறாகத் தமது அன்பு முதிர்ச்சி யைக் 'கண்ணம்மா என் காதலி' என்ற பாடல்களில் உணர்த்து கின்றார். கவிஞர் தாகூரும் தமது கீதாஞ்சலியில் இறைவனைத் தோழன் என்று கூறியுள்ளார்.

பரம்பொருளுணர்வு முறுகி எழுகின்றபோது அனுபூதியின் முதிர்ந்த நிலையில் ஆன்மாவிற்கும் பரம்பொருளிற்கும் இடையே எவ்வித வேறுபாடும் இன்றித் தடைகள் எல்லாம் நீங்குகின்றன. அனுபூதிச் செல்வர் தாம் எங்கும் நிறைந்த பரம்பொருளின் ஒளிச் சிதறலாகத் தம்மைக் கருதுகின்றார். இக் கருத்து உலக அனுபூதி நெறிகளில் அடுத்தடுத்து நாம் காணக் கூடியதாகும். இந்து

சமய அனுபூதி நெறி — சூபிஎளகளது அனுபூதி நெறி, கிறித்தவ அனுபூதி நெறிகளில் இவ் உண்மையைக் காண்கின்றோம். வைணவப் பெருமாட்டியாகிய சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யாகிய ஆண்டாள் 'தாம் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ கில்லேன்' என்று கூறியது அரங்கத்தம்மானிடம் தாம் கொண்டிருந்த அன்பு மீதூறிய நிலையினை உணர்த்துகின்றது. உபநிடதம் 'அது' 'நீ' என்று கூறுகின்றது. ஏசுநாதர் 'தாமும் தமது தந்தையும் ஒன்றே' என்று கூறுகின்றார். உலகின் பல பகுதிகளிலிருந்து அனுபூதிச் செல்வர் பரம்பொருள் ஆன்ம ஒருமையினையே வலியுறுத்துகின்றனர்.

(7) இவ் ஒருமையுணர்வு அனுபூதிச் செல்வரிடத்துத் தொடர்ந்து விளங்குவதில்லை. ஒரோவமயம் தோன்றிச் சிறிது காலம் நிலவி மறைகின்றது. இவ்வாறு தோன்றி மறைவது இவ் அனுபவப் பேற்றை அடைதல்அரிது என்று உணர்த்துகின்றது. தன்னுணர்வு பெறுவதற்குத் தடைகள் பல உள. நன்கு அமைக்கப்பெற்ற சமயங்கள் யாவும் இத் தடைகளைத் தகர்க்கும் வழி வகைகளை நமக்கு உணர்த்துகின்றன. கட்டுப்பாட்டு நெறிகளும், தூய்மைப் படுத்தும் முறைகளும், சமயம் நிறுவிய பெரியார்களால் அவ்வக்காலச் சூழ்நிலைகட்கு ஏற்ப வகுக்கப் பெற்றன. உடலாட்சியினை வெல்லுதல், அக அற நேர்மையினைப் பயிலுதல், நாளும் பிரார்த்தனையில் ஈடுபடுதல், தியான வாழ்வை விரும்பிப் பயிலுதல், ஒத்த அனுபவம் வாய்ந்த பக்தரொடு உறவுகொள்ளுதல் ஆகியவை சமயங்கள் அனைத்திற்கும் பொதுவாக வற்புறுத்தும் நெறிகளாகும்.

(8) அனுபூதிச் செல்வர் தாம் உணர்ந்த அனுபூதியினை உணர்த்த முற்படுங்கால், பல்வகையான குறியீடுகளை மேற்கொண்டுள்ளனர். குறியீடுகள் பலவானாலும், இவை குறிக்கின்றஅனுபவம் ஒன்றேயாகும். இக் குறியீடுகளைக் கடந்து இவை குறிக்கின்ற அனுபவப் பொதுமையினை நாம் அறிய வேண்டும். குறியீடுகளே உண்மையெனக் கொண்டு மயங்கித் தம்முள் கலாம் விளைப்பவர் உண்மையினை உணராதவர்களே ஆவர்.

(9) ஒழுக்கம், அழகு, உண்மை, அன்பு போன்ற உயரிய பண்புகளை நாம் அறிந்து போற்றச் சமய அனுபவம் துணை செய்கின்றது. நமது வாழ்வின் பயனை உணரவும் வழிவகுக்கின்றது. நாம் நமது ஆன்மீகப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு பரம்பொருளை உணரும் நெறியில் நம்மைச் செலுத்துகின்றது. கலை, இலக்கியம், அறிவியல், தொண்டு, அன்பு ஆகிய யாவும் தத்தம் நிலையில் சிறப்பாகப் போற்றத்தக்கன என்றாலும், இவற்றுள் எவையும் சமய அனுபவத்திற்கு ஈடு ஆகமாட்டா.

ஒழுகலாறு, சமயத்தினின்று பிரிக்கஒண்ணுதநிலையில் பிணிப்புண்டு விளங்குகின்றது. இவ் ஒழுக்கமும் சமயத்தின் இடத்தைப் பெற இயலாது. ஆதலால், சமயமே தலைமை ஏற்பது; இலக்கியம் அன்ன பிற, சமய அனுபவத்திற்கு ஆட்பட்டவையே ஆகும்.

சமய அனுபவம் உணர்த்தும் உண்மைகளை மேலே சர்மா அவர்கள் நிரல்படுத்திக் கிளர்ந்தவாறு கண்டோம். இவற்றின் அடிப்படையிலேதான் இராதாகிருஷ்ணன் தமது சமயம் சார்ந்த மெய்ப்பொருளியலை அமைக்கின்ருர்.

1920ஆம் ஆண்டு 'சம காலத்து மெய்ப்பொருட் சிந்தனையில் சமயத்தின் ஆட்சி'(Reign of Religion in Contemporary Philosophy) என்ற நூலை எழுதினுர். இந் நூலுள் இராதாகிருஷ்ணன் அவர்கள் அறிவாற்றலுக்கு உயர்ந்த இடம் தருகிருர். சமய உண்மைகளை அறிவு கொண்டு ஆராய்கிருர். ஆசிரியரது வாதத் திறன் நன்கு புலனுகின்றது. சமயப் பகைமை ஆங்காங்கு தொனிப்பதாக விளங்கியது. பின்னர் ஆசிரியரே தாம் இந்த நூலைப் பற்றிக் குறிப்பிடும்போது தாம் ஆர்வம் மிகுதியான காரணமாகச் சமயத்தை மெய்ப் பொருளியலினின்று பிரித்துணர்த்தியதாகக் கூறுகிருர். ஆசிரியரது மெய்ப்பொருட் கொள்கைக்குத் தகுந்த பெயர் 'கருத்து முதற்கொள்கை' (Idealism) என்பதாகும். இக் கொள்கையினின்று அவர் பிறழவே இல்லை. அவரை ஆன்மீக வாதி (Spiritualist) யெனலாம். ஏனெனில், உள்பொருள் ஆன்மீக மயமானது என்று கூறி, உள்பொருள் சடமன்று, திண்ணிய, தொடர்ந்து விளங்குகின்ற உணர்வற்ற பொருளன்று, அது ஆன்மீக மயமானது என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது. அது சடத் தன்மை அற்றது என்றும் விளக்கியுள்ளார். ஆசிரியர், 'ஆன்மீக வாதம்' (Spiritualism) என்ற சொல்லைவிடக் கருத்து முதற்கொள்கையையே (Idealism) விரும்புகிருர். கருத்துமுதற் கொள்கை யாவரும் ஏற்கத்தக்க தகுதி உடையது என்று ஆசிரியர் கருதுகிருர். உலகு மனமென்ற ஒன்ருல் ஆனது என்ற கருத்தையோ, அறிவாராய்ச்சிக் கொள்கையினுள் 'மனத்தால் அறிவதே அறிவு' என்பதையோ ஆசிரியர் வற்புறுத்தவில்லை. உள்பொருள் அறிவற்றது என்ற கருத்தை ஆசிரியர் ஏற்கவில்லை. அது குறிக்கோளின்றி இயங்குவது என்பது பொருந்துவதன்று. வாழ்க்கை பயனுடையது; சிறப்புடையது என்று கருதுவதாகும். இக் கருத்திற்கு மாருக உள்ள கருத்துகளை ஆசிரியர் மறுத்து ஒதுக்குகிருர். இயற்கையுண்மை வாதம், 'அறிவியல்பான பொருள்முதற் கொள்கை' 'மக்கட் பற்றுக் கொள்கை' ஆகிய கொள்கைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து, அவை ஒவ்வோர் உண்மையை வற்புறுத்துகின்றன; அவை முழுமையும் ஏற்கத்தக்கனவல்ல என்று கூறி மறுக்கின்ருர்.

கருத்து முதற் கொள்கை விரிந்த பொருளுடையது. உலகில் பல்வேறு தனிக் கொள்கைகட்கு இப் பெயரைச் சூட்டியுள்ளனர். இவற்றுள் எவ்வகையை ஆசிரியர் பின்பற்றுகிறார் என்பது இங்கு எழுகின்ற கேள்வியாகும். கருத்துமுதற்கொள்கை பல வடிவங்கள் கொண்டபோதிலும், கீழை மேலை நாடுகளில் விளங்கும் கருத்துமுதற்கொள்கைகளுள் ஆசிரியர் தமக்கு மிகவும் ஏற்றது, வரம்பற்ற கருத்துமுதற்கொள்கையே (Absolute Idealism) என்று விளக்கியுள்ளார். மேலும், தமது கருத்திற்கு மிகவும் அரண் செய்யும் கொள்கை, சங்கரரது கொள்கையாகும் என்றும் கூறியுள்ளார். தமது கருத்தை வலியுறுத்தும் வகையில் ஆசிரியர் கூறுவது: 'உள்ளச்சார்புகளின்றிச் சமயத் துறையில் நடுவு நிலை பிறழாது மெய்ப் பொருள் கருத்துகளை முறையாக ஆராயும்போது அவ் ஆராய்ச்சி வரம்பற்ற கருத்துமுதற் கொள்கையில் முடியும்' என்று கருதுகிறார். ஆசிரியர் லைபினிட்ஸ், வில்லியம் ஜேம்ஸ், பெர்க்ஸோன், பேகன் போன்றாரது கருத்துகளையும் நன்கு ஆராய்ந்து, இவர்கள் ஒருமைக் கொள்கையினை (Monism) மறுப்பதற்குக் காரணம் இவர்களது சமயச் சார்புகளே ஆகும் என்று கூறுகிறார். சமய இயல் தொடர்புகளின்றி, இவர்கள் சிந்தித்திருந்தால் வரம்பற்ற கருத்துமுதற்கொள்கையையே ஏற்றிருப்பார்கள் என்றும் கூறுகிறார். சங்கரர் முடிபு ஏற்கத்தக்கது என்று ஆசிரியர் கொண்டதை மேலே கண்டோம். சங்கரர் அருவமான உருவ மற்ற பரம்பொருளாகிய பிரம்மத்தையே உள் பொருளாக ஏற்கிறார். மெய்ப்பொருட் சிந்தனையுள் உருவ நிலையில் கடவுளைக் கருதுதல் கடக்க வேண்டிய தொன்றாகும். உருவ நிலையில் வைத்துக் கடவுளைக் கருதுதல் சில சமயத் தேவைகளை நிறைவு செய்வதாகும் என்றாலும், பிறதேவைகள் உருவக் கொள்கையால் நிறைவுறுவனவல்ல. உயர்ந்த ஆன்மீக அனுபவத்தில் நமக்கு அமைதி, நிறைவு, முழுமை, என்றென்றும் விளங்குந் தன்மை முதலியன விளங்குகின்றன. இவை பரம்பொருட் கொள்கையால்தான் (அருவநிலை) நிறைவேறும். பரம்பொருள் பிரபஞ்சத் தொல்லைகளை எல்லாம் கடந்து விளங்குவதாகக் கருதுவதில் மனித மனம் நிறைவுறுகின்றது.

மனிதன் பொருள்களின் தன்னுண்மை நிலையை அறிய அவாவுகிறான். காலம் என்னும் தத்துவத்திற்கு உட்படாத முன்னர், பன்மை தோன்றுதற்கு முன்னர்ப் பரம்பொருள் எவ்வாறு விளங்கியது என்று அறிய விரும்புகிறான். பரம்பொருள் தூய நிலையில் தனித்து விளங்குவது, வெளிப்படாதது, குறித்ததொரு பொருளாக விளங்காதது, எல்லாப் பொருளுமாக விளங்குவது, குறித்ததொரு வடிவம் ஏற்காது கடந்து விளங்குவது, அனைத்து வடிவங்

கட்கும் வெளிப்பாடுகட்கும் ஆதாரமாக விளங்குவது, எந்த ஒன்றில் எல்லாவற்றையும் காண இயலுமோ அந்த ஒன்ருக விளங்குவது, அவ் ஒன்றில் அனைத்தும் ஒன்றுவது (மறைவது) என்று அதன் இயல்புகளை விரித்து ஆசிரியர் கூறியுள்ளார். இவ்வாறு கூறுவது நம்மை வியப்பில் ஆழ்த்தும். இங்கு ஆசிரியர் பயின்றுள்ள அடைமொழிகள் ஒருங்கே ஒரே சமயத்தில் ஒரே பொருளிற்குப் பயிலத் தக்கனவா என்ற கேள்வி எழும். ஆனுல், இந் நிலை தவிர்க்க வொண்ணுததாகும். 'பரம்பொருள் நமது கருத்தமைவுகட்கு அப்பாற்பட்டு விளங்குவது. இவற்றைக் கொண்டு அறிய முடியாதது. எதிர்மறைச் சொற்களாலேயே விளக்கக் கூடியது,' என்றும் கூறுகிருர்.

இப் பிரபஞ்சம் பரம்பொருளது இயற்கையின் வெளிப்பாடாகும். இப் பொருள் தூய உணர்வு, செயலுரிமை பூண்டது. எண்ணிறந்த வகைகளில் வெளிப்படக்கூடியது. அவ் வகைகளுள் ஒன்று இவ் உலகாக வெளிப்பட்டுள்ளது. பிரபஞ்ச நிகழ்ச்சிகள் பரம் பொருளின் இயல்பை முற்றிலும் வெளிப்படுத்தமாட்டா. பிரபஞ்ச நிகழ்ச்சியோடு தொடர்புடைய நிலையில் பரம்பொருளை இறைவன் என்கிருேம். இறைவன் இவ் உலகிளுேடு தொடர்புடையவன், பரம் பொருள் தொடர்பற்றவன். எல்லையற்ற பரம்பொருள் தன்னைத் தான் கட்டுப்படுத்திக் கொண்டு எல்லைக்குட்படுகிறது. இவ்வாறு எல்லைக்குட்படுத்துகின்ற காரணம் மாயையாகும்.

## மாயைக் கொள்கை

சங்கரர், உலகை மறுத்தார் என்று கூறுவதற்கில்லை என்கிருர் இராதாகிருஷ்ணன். சங்கரர் உலகைக் கற்பனையின் விளைவு என்று கூறவில்லை. ஆனுல், பரம்பொருள் ஒன்றே உள்பொருள் என்பது அவரது துணிபு. நமது அனுபவத்தில் அமையும் உலகு உள் பொருள் என்ருே, இல்பொருள் என்ருே கூற இயலாது. பரம் பொருளைப் போல் என்றும் உள்ளதாக உலகை ஏற்க முடியாது. மலடியின் மகனைப்போல், ஆகாயத் தாமரையைப் போல், முயற் கொம்பைப்போல் உலகு என்றும் இல்லாத பொருளன்று. உலகு உள்ளதும் இல்லதும் ஆகிய இருவேறு இயல்புகளைக் கொண்டது. நாம் தொடர்பு கொள்கின்றவரை உலகு உள்ளதாகும். பரம் பொருட் காட்சி கைவரும்போது உலகு இல்பொருளாகும், அல்லது உலகக் காட்சி நீங்கும். உலகை மலடி மகனைப்போன்று இல் பொருளெனக் கூறுதல் தவருகும். உலகை 'மித்தை' என்று சங்கரர் கூறுகிருர். பிரம்மம் தோன்றுகின்ற எல்லாப் பொருள் களுக்கும் அடிப்படையானது. உலகின் நிலையை விளக்க உவமை ஒன்றைத் தருகிருர். கயிறு அரவாகத் தோன்றுகின்றது. அரவின்

தோற்றத்திற்குக் காரணம் கயிறுகும். அரவுக் காட்சி நீங்கிய பிறகு விளங்குவது கயிறுகும். அரவின் தோற்றம் பொய்யன்று. அரவு தோன்றி ஒருவனை அச்சுறுத்துவது உண்மையே. ஆதலால், உலகு நமக்குத் தோன்றி, அனுபவங்கட்குக் காரணமாவதை மறுத்தற்கில்லை என்கின்றுர் சங்கரர். இவர் உலகை 'உண்மை அல்லாதது' (Other than real) என்கின்றுர். பரம்பொருளை எதிர்மறைச் சொற்களால் நாம் விளக்க முற்படுகின்றேம். ஏனெனில், பரம்பொருளை இத்தன்மையது என்று உணர்ந்து உடன் பாட்டுச் சொற்களில் கூற இயலாது. இதே போன்று மாயையும் அத்துவிதிகளால் குறித்ததொரு விளக்கத்திற்காகப் பயன் படுத்தப் பெறுகின்றது. மாயையின் தன்மை இத் தன்மையது என்று கூறவொண்ணுததால், 'அநிர்வசனீயம்' என்று கூறுகின்றனர். இதனைச் ''சதசத்விலக்ஷணம்'' என்றும் விளக்குவர். கால தத்துவத்திற்கும், காலங் கடந்த நிலைக்கும் (என்றென்றும் விளங்குகின்ற நிலை) உள்ள தொலைவை வெளிப்படுத்தவும், தோற் றத்திற்கும் உள்பொருளிற்கும் உள்ள இடைவெளியைப் புலப்படுத் தவும், மாயை என்கின்ற கருத்தமைவு பயன்படுத்தப் பெறு கின்றது என்கின்றுர் இராதாகிருஷ்ணன். உலகம் தோன்றும் நிலையுடையது; நமது ஜீவான்மாவும் தோன்றுவது என்னும் கருத்துகளை விளக்க மாயை பயன்படுகின்றது. நமது அனுப வத்தில் அமையும் உலகு, நமது ஜீவான்மாக்கள் ஆகியவை திரிபுக் காட்சி என்று கூறுவதற்கில்லை என்கின்றுர் ஆசிரியர். நமது முயற்சிகள் யாவும் பரம்பொருளை நோக்கியே அமைகின்றன. முயற்சிகள் தொடர்ந்து அமையவும் காரணம், பரம்பொருளே ஆகும். பரமான்மா யாவற்றையும் நீங்கித் தனித்து விளங்குவது என்றுலும், யாவற்றிலும் உட்படுகின்றது எனல் வேண்டும். பரம் பொருள் என்றும் உள்ளது. இப் பொருளை நோக்கப் பிற பொருள்கள் அந்த அளவிற்கு உண்மையுடையனவல்ல. உள்ளதன் நிலைகள் பல என்று நாம் உணர்த்தும் முயற்சியின் விளைவே மாயையாகும். என்றும் உண்மையாக விளங்குகின்ற பரம்பொருளிற்கும் நாம் வெவ்வேறு நிலையில் உணரும் பிற உள்பொருள்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க முற்படுவதே மாயையாகும். நிலையுதல் இல்லாத பொருள்களினின்று நமது கருத்து நிலையுதல் உடைய பரம்பொருளிற்கு மாற்றம் பெற வேண்டும் என்பதை வலியுறுத் துவது மாயையாகும். மாயையின் பிடியினின்று நாம் நீங்க வேண்டும் என்பதன் பொருள் யாது? நிலையில்லாதனவற்றின் பிடியி னின்று நாம் நீங்கவேண்டும் என்பதாகும். உலக நன்மையைப் புறக்கணிக்குமாறு வேதாந்தம் நமக்குக் கூறவில்லை. இவ் வாறு இராதாகிருஷ்ணன் மாயைக்கு விளக்கம் தருவது நமது அறிவிற்கு ஏற்ப அமைத்துக் கூறுவதாகும்.

மாயை என்ற சொல் பல பொருள்களில் அத்துவித நூல்களில் வழங்கப் பெற்றிருக்கின்றன என்று இராதாகிருஷ்ணன் கூறுகிறார். அவற்றுள் சில வருமாறு :

(1) மாயை தோன்றுகின்ற உலகைக் குறிப்பது. நமது அனுபவத்தில் அமையும் உலகை நாம் விளக்க முற்படுகின்ற போது இடர்ப்படுகிறோம். இவ்வுலகு தன்னிலையில் விளக்கம் உடையதன்று. ஆதலால், பரம்பொருள் என ஒன்று உண்டு என்று நாம் கொள்கிறோம். இது தன்னுண்மைப் பொருள் (Thing in itself, Noumenon). இப்பொருளை நோக்க, உலகு தோற்றநிலையுடையது. தோற்ற நிலையை விளக்குவது மாயையாகும்.

(2) பரம்பொருளின் இருப்பை அகவுணர்வினால் உணர்கின்றோம். உலகை நமது அறிவு புலப்படுத்துகின்றது. பரம்பொருளுக்கும் உலகிற்கும் உள்ள உறவு யாது ? இவ் வுறவை நாம் புரிந்துகொள்ள இயலவில்லை. இவ்வாறு அறியொணாத நிலையை விளக்குவது மாயை (Incomprehensibility).

(3) பிரம்மமே உலகின் தோற்றத்திற்குக் காரணம்; தோன்றுகின்ற இவ் உலகு மாயையாலாகும்.

(4) மாயை உலகின் தோற்ற நிலையை உணர்த்துவதாகும். பிரம்மம் உலகைக் கடந்து உள்பொருளாக யாவற்றுக்கும் அடிப்படையாக விளங்குவது.

(5) உலகைப் படைத்துக் காத்துத் துடைக்கும் நிலையில் பரம்பொருள் ஈஸ்வரனாகும். மாயை என்னும் உபாதிகட்கு உட்படுகின்ற நிலை ஈஸ்வரனாகும்.

(6) மாயை என்பது ஈஸ்வரனின் ஆற்றலாகும். மாயை என்பது புதிராகும். புரிய வொண்ணாத நிலையை விளக்குவதாகும். இந்தப் புதிர்த்தன்மையை இராதாகிருஷ்ணன் வற்புறுத்துகின்றார். இத் தன்மை கவிஞரை, கற்பனை வளமுடையவரைக் கவரும். 'நிகழக்கூடிய பல்வகை வாய்ப்புகளைக் கொண்டு விளங்குவது' பரம்பொருளாகும். இவ் வாய்ப்புகளுள் ஒன்று படைப்பாகும். 'இப் படைப்பு ஏன் நிகழ்கிறது? இக் கேள்விக்கு விடைகாண இயலாது. இப் படைப்புப் புதிரை நாம் புரிந்து கொள்ள இயலாது. மெய்ப்பொருளியலின் வரலாற்றில் இந்தியாவிலுஞ் சரி, ஐரோப்பாவிலுஞ் சரி, மனிதன் படைப்புப் புதிரைப் புரிந்து கொள்ள முயன்று தோல்வியுற்றதையே காண்கின்றோம்,' என்று இராதாகிருஷ்ணன் கூறுகிறார். பரம்பொருளின் தன்னுண்மை நிலையையும் வரையறுக்க வொண்ணாதது; இப் பொருள் உலகொடு கொள்ளும் உறவையும் வரையறுக்க வொண்ணாததாகும். 'உள்பொருளினிடத்து தெய்வீக ஒளி என்றென்றும் ஒளிர்ந்து கொண்டு இருக்

கிறது. இவ்வாறு விளங்கினாலும், எல்லோருக்கும் நிலைக்களனாக விளங்குகின்றான் என்பது புதிராக, மாயையாக விளங்குகின்றது என்று இராதாகிருஷ்ணன் விளக்குகிறார். இப் புதிரை நாம் மதிப்புடன் ஏற்கவேண்டும் என்கிறார். மதிப்பை நாம் பெறுவதுடன் வியப்பிலும் ஆழ்கிறோம். மாயையின் - தன்மையை விளக்குகின்ற இடங்களில் தாகூரது கருத்துகள் எதிரொலிக்கின்றன என்று பேராசிரியர் நரவனே கருதுகின்றார்.

பரம்பொருள் எவ்வாறு எல்லைக்குட்பட்ட இவ் உலகில் வெளிப் படுகின்றது என்பது புதிராகும் என்று கண்டோம். இவ் உலகு ஒழுங்கிற்குட்பட்டது என்பது அறிவிற்குப் புலனாகின்றது. ஆனால், இதன் மறைமை சார்ந்த நிலையை அக உணர்வால்தான் உணர இயலும் என்று இராதாகிருஷ்ணன் கூறுகிறார். அறிவாராய்ச்சி யியலுள் நாம் சிந்தனையினால் அறியும் அறிவிற்கும், உடனாக நேர் முகமாக அறியும் அறிவிற்கும் வேறுபாடு காண்கின்றோம். இவ் வேறுபாட்டை இராதாகிருஷ்ணன் விளக்குவது பெரும்பயன் விளைப்பதாகும்.

அகவுணர்வை (Intuition) அறிவாற்றலிற்கு மாறுகோள் (Alternative) என்று கருதுதல் கூடாது என்கின்றார் இராதாகிருஷ்ணன். அனுபூதி நெறியில் பயன்படுவது அக உணர்வு என்றும், மெய்ப் பொருளியலுள் நாம் பயன்படுத்தும் அறிவாற்றலிற்கு வேறானது என்றும் கூறுதல் பொருந்தாது என்கின்றார் நமது ஆசிரியர். அறி வாற்றலிற்கும் அக உணர்விற்கும் இடையே உள்ள உறவை நமது உள்ள நிறைவு தோன்ற ஆசிரியர் விளக்குகின்றார். 'வேதாந் திகள் சங்கரரைப் பின்பற்றி ஆத்மனும் பிரம்மமும் அறிவாற்ற லிற்கு அப்பாற்பட்டன; ஆதலால் அவற்றை அகவுணர்வினாலேயே உணர்தல் இயலும் என்றனர். ஆனால், அக உணர்வு பிரம்மத் தையும் ஆத்மனையும் நேராக உடனாக அறிவிக்கின்றது என்றனர். எவ்வாறு அறிவாற்றல் கொண்டுஅறியும் அறிவிற்கு இவ் உணர்வு அடிப்படையாக விளங்குகின்றது என்பதை அவர்கள் விளக்க வில்லை; அறிவாற்றல் உயரிய அனுபவத்திற்கு மாறுபட்டதன்று. அது அகவுணர்வில் அடங்குவது, அதில் நிறைவு பெறுவதாகும்' என்று பி.டி. ராஜு அவர்கள் அகவுணர்விற்கும் அறிவாற்றலிற்கும் இடையே உள்ள உறவை நமக்குத் தெளிவுபடுத்துகிறார். அக உணர்வும் அறிவு பெறுதற்குரிய முறைகளுள் ஒன்றே என்று நமது ஆசிரியர் கருதுகிறார். இவ்அகவுணர்விற்கு உயர்ந்த இடம் தருகிறார். அனுபூதி நிலையில் உணரும் பரம்பொருளுணர்வைக் குறிக்க இராதாகிருஷ்ணன் அகவுணர்வு என்ற சொல்லைப் பயன் படுத்தினார் என்று கூற இயலாது. இவ் வனுபூதி உணர்வை உணர்த்த முழுமையான அனுபவம் அல்லது பூரண அனுபவம்

(Integral experience) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அக வுணர்வு என்ற சொல், பொதுவாக வழங்கப் பெறுகின்ற கருத்து வேறு, தத்துவ உலகில் பயன்படுத்துகின்ற பொருள் வேறு. அக வுணர்வு என்ற ஒரே சொல்லை அறிவியலில் பேராற்றல்,கவிஞனின் அறஉணர்வு அல்லது மனச்சான்று என்ற பல பொருள்களில் வழங்குகின்றோம் என்பதை நமது ஆசிரியர் சுட்டுகின்றார்.

அகவுணர்வு என்ற சொல் முழுமையான அறிவிற்கு ஆசிரியரால் பயன்படுத்தப் பெறுகின்றது (Integral knowledge). நாம் புறவுலகைப் புலன்களைக்கொண்டு பொறிகளின் வாயிலாக அறிகின்றோம். பின்னர் புலன்வழி அமைந்த செய்திகளைச் சிந்தனை கொண்டுப் பகுத்தும் தொகுத்தும் அறிகின்றோம். இவ்வாறு அறியும் புலனறிவையும் சிந்தனையினால் பெறும் அறிவையும் ஒருங்கே குறிகக அகஉணர்வைஆசிரியர்பயன்படுத்துகின்றார்.உள்பொருளை முழுமையாக அறியத் துணைசெய்வது அகவுணர்வாகும். இவ் உணர்வு முழுநோக்கை நமக்கு நல்குகின்றது. அகவுணர்வு நமது சிந்தனையைச் சார்ந்தே விளங்குவது. அது சிந்தனைக்கு அயலாக விளங்குவதன்று. மேலும், சிந்தனையின் உள்ளமைப்பிலேயே விளங்குவது என்றும் ஆசிரியர் கூறுகிறார். அளவை நெறியில் காணப்பெறும் சிந்தனையினின்று அகவுணர்வு வேறுபடினும்,அதன் தொடர்ச்சியே யாகும். அளவை அறிவும் (Logical knowledge), அகவுணர்வினால் பெறும் அறிவும் நமக்குத் தனித்தனியே பயன்படுவனவாகும். அளவை அறிவு நாம் வாழுகின்ற உலகை அறிவதற்குத் துணை செய்வதாகும்; இவ் உலகை நாம் கட்டுப்படுத்தவும் இயக்கவும் பயன்படுவதாகும். உலகை நாம் முறையாக அறியாவிடில் வெற்றி தோன்ற இயக்க இயலாது. உலகப்பொருள்களை அவற்றின் உண்மை நிலையில் அறிய நாம் பகுத்தறிகின்ற அறிவைக் கடந்து செல்லவேண்டும். ஆதலால், அளவை அறிவை அல்லது அறிவாற்றலை நாம் கடக்க வேண்டுமே அன்றி அதனை நீக்க வேண்டுவதின்று. பேராசிரியர் ஸ்ரீவத்ஸவா தமது 'சமகாலத்திய இந்திய மெய்ப்பொருளியல்' என்ற நூலுள் அகவுணர்வு எவ்வெச் சிறப்பியல்புகளோடு கூடி விளங்குகின்றது என்றும், அறிவாற்றலினின்று எவ்வாறு வேறுபடுகின்றது என்றும் விளக்கியுள்ளார். அவர் தருகின்ற விளக்கம் வருமாறு:

(1) உள்ளுணர்வு அல்லது அகவுணர்வு (Intuition) தன்னுண்மைப் பொருளை (Thing in itself) நமக்கு வெளிப்படுத்துகின்றது.

(2) முழுமைக்கும் பகுதிக்கும் இடையே எத்தகைய உறவு நிலவுகிறதோ, அத்தகைய உறவு அறிவாற்றலிற்கும் அகவுணர்விற்கும் இடையே நிலவு

கின்றது. அகவுணர்வு, புலனறிவு சிந்தனை ஆகிய இவ்விரண்டையும் உட்படுத்தும்.

(3) உள்ளுணர்வு நால்வகை முறைகளை உட்படுத்தும். அவையாவன: (அ) ஆயத்தம், (ஆ) அடைகாத்தல், (இ) ஒளி பெறுதல், (ஈ) சரிபார்த்தல்.

(4) உள்ளுணர்வு அறிவாற்றலைச் சார்ந்துள்ளது. அதனைக் கடந்தும் விளங்குகின்றது.

(5) முற்றொருமையினால் பெறும் அறிவு—அகவுணர்வாகும்.

(6) உள்ளுணர்வு முடிபான மேலான அறிவாகும். அறிவாற்றல் பிழையினின்று நீங்கி உண்மை அறிவைப் பெறும்.

(7) உள்ளுணர்வும் அறிவாற்றலும் ஆன்மாவிற்கு உரியன.

(8) உள்ளுணர்வு தன்னளவிலேயே ஏற்புடைமையைக் கொண்டு விளங்குகின்றது.

(9) உள்ளுணர்வில் தெளியப்படுவன வெளிப்பாட்டின் தன்மையை உடையனவாக விளங்குகின்றன.

(10) திறமை மிக்க நிலையும், படைப்புசார்ந்த தொழில் களும் கலைகளும் உள்ளுணர்வைச் சார்ந்தன.

(11) சமய வாழ்க்கையில் பெறுகின்ற உள்ளுணர்வு அதன் உயரிய நிலையாகும்.

(12) அகவுணர்வே விடுதலைக்கு வழியாகும்.

(13) உள்ளுணர்வின் அடிப்படையில் அமையும் சமயம், அறிவாற்றலின் அடிப்படையில் அமையும் சமயத்தின் வேறானது.

(14) அகவுணர்வுகள் இத்தன்மையன என இயம்ப வொண்ணாதன; உரைக்கவொண்ணாதன.

மேற்கண்ட குறிப்புகளின் விளக்கம் வருமாறு: ஒரு பொருளின் பண்புகளை அறிவாற்றல் உணர்த்தும். அகவுணர்வு அல்லது உள்ளுணர்வு அறிவாற்றலை உள்ளவாறு அதன் குணங்களோடு உணர்த்தும். அகவுணர்வில் அறிவானது உணர்வு அறிபொருளின் வடிவத்தை ஏற்று நேரான, உடனான ஏற்புடைய அறிவைத் தருகின்றது. உள்பொருளின் இயற்கையை உள்ளுணர்வு வெளிப் படுத்துகின்றது.

உள்ளுணர்வு யாவற்றையும் உட்படுத்தும், இணைக்கும், முழுமையான அறிவை நல்கும். அளவை நெறியின் வாயிலாக அறியுமறிவு முழுமையான அறிவின் பகுதியாகும். உணர்வின்

படிநிலைகள் உள்ளுணர்வில் நிறைவு பெறுகின்றன. புலனுணர்வு, அறிவாற்றல், அகவுணர்வு ஆகிய யாவும் ஒன்றையொன்று தழுவியே நிற்பன. இவை ஒன்றில் ஒன்று நிறைந்து விளங்குவன. உள்ளுணர்வினால் பெறுகின்ற அனுபவத்தில் ஆன்ம ஒருமை புலனாகின்றது. மனிதன் மூன்று படிநிலைகளில் அறிவைப் பெறுகிறான். அவை புலனறிவு, சிந்தனை, உள்ளுணர்வு ஆகும். முதலிரண்டும் மூன்றாவதில் முழுமை பெறுகின்றன. இராதாகிருஷ்ணன் கூறுவது: 'மனிதன் புற உலகை அறிகின்றபோது மூவகைகளில் அறிவைப் பெறுகின்றான். புலக் காட்சி (Perceptual) முதல் நிலையாகும். அடுத்து, அளவை நெறியின் மூலம் அறிகிறோம் (Logical). இதனைஅடுத்து அமைவதே அகவுணர்வாகும். இவ் அறிவு வகைகள் முறையே மனம், விஞ்ஞானம், ஆனந்தம் ஆகியவற்றால் அறியப் பெறுகின்றன. ஆனந்தம் என்பது ஆன்மீக உள்ளுணர்வு (Spiritual intuition) எனலாம். இவையனைத்தும் மனித உணர்வின்பாற் படுவன. மனம் பகுதி பகுதியாகத் தொழிற்படுவதின்று. புலக் காட்சியிலும் உள்ளுணர்வு தொழிற்படுதலுண்டு. உள்ளுணர்வில் அறிவாற்றல் தொழிற்படுதலுமுண்டு. உள்ளுணர்வை முழுமையான நுழைபுலக் காட்சி என்று விளக்கும்போது, மனம் முழுமையாகத் தொழிற்படுகின்றது என்பது பொருள். ஆகவே, உள்ளுணர்வு, பொருள்களைப் பற்றிய முழுக் காட்சியைத் தருகின்றது; அறிவாற்றல், பகுதியான காட்சியைத் தருகின்றது. மேலான உணர்விற்கும், கீழ்நிலை உணர்விற்கும் இடையே இடைவெளித் தொடர்பின்மை இல்லை. முன்னையது பின்னையதை உட்படுத்தும். அகக் காட்சி யாவற்றையும் உட்படுத்தும் உணர்வாகும்.

ஹெகல் என்னும் ஜெர்மானிய அறிஞர், உள்ளுணர்வு கருத்தியல்பான, புலச்சார்பற்ற, உறவற்ற அறிவை நல்குகின்றது என்று கூறுகிறார். இவ்வகை அறிவு பொருளற்றது. இராதாகிருஷ்ணன், உள்ளுணர்வு அறிவாற்றலின் புலனறிவின் தொடர்ச்சி என்கின்றார்.

உள்ளுணர்வு நால்வகைகளில் தொழிற்படும். இவ் வகைகள் ஆயத்தம், அடைகாத்தல், ஒளிபெறல், சரிபார்த்தல் ஆகும். உயர்ந்த உணர்வு தோன்றுவதற்கு மனம் ஆயத்தமாதல் வேண்டும். மனம் கட்டுப்பாட்டிற்கு உட்பட வேண்டும். உள்ளத்து உறுதி பண்பட வேண்டும். நமது சிந்தனை உணர்ச்சி, இயற்றி நிலைகள் தூய்மை அடையும்போது மனம் அமைதி பெறுகின்றது. அடைகாத்தலில், மனம் அமைதியாக உள்ளது. சிந்தனை நிகழ்வதில்லை. மூன்றாவது நிலையில் ஒளி பெறுகின்றோம். உள்பொருள் காட்சி நேரிடுகின்றது. இக் காட்சி உடனாக, நேராக அமைவதாகும். ஒளி பெற்றபின் அமையும் அறிவு தனித்தன்மை

வாய்ந்தது. பின்னர் இக் காட்சியினால் அமைவன சரிபார்க்கப் பெறுகின்றன.

உள்ளுணர்வு அறிவாற்றலைச் சார்ந்து விளங்குகின்றது. அதனைக் கடக்கவும் செய்கின்றது. உள்ளுணர்வு, அறிவாற்ற லிற்குத் துணையாக இணையாக நிற்பது மட்டுமன்று; அறிவாற்றலின் நிறைவுமாகும். அறிவும் காட்சியும் ஒருங்கே உயர்ந்த நிலையில் உள்ளுணர்வில் இடம் பெறுகின்றன. அறிவாற்றல் பயன்படுத் தும் கருத்தமைவுகள் இயக்கமற்றன. உள்ளதை அறிய இவை பயன்பெறா. உண்மை அறிவிற்கு அப்பாற்பட்டது.

உள்ளுணர்வு உணர்வின் ஒரு நிலையாகும். இந் நிலையில் அகம் அல்லது ஆன்மா உள்பொருளோடு முற்றொருமையுடன் விளங்கு கின்றது. உள்ளதை உள்ளவாறு உள்ளுணர்வினால்தான் உணர இய லும். உள்ளுணர்வில் அறிவான் தன்னை அறிவானாக மட்டும் அறிவ தில்லை. அறிவானும் அறிபொருளும் முற்றொருமை எய்துகின்றன. இவ் உணர்வில் அறிவான் அறிபொருள் என்ற வேறுபாடு இல்லை. அறிபொருள் அறியும் ஆன்மாவிற்கு அயலாக விளங்காது. அதன் பகுதியாகவே விளங்குகின்றது. அறிவான் அறிபொரு ளோடு ஒற்றித்த உணர்வு பெறும்போது இவற்றின் இருமை நீங்குகின்றது. அன்பு, வெகுளி, அச்சம் போன்ற உணர்ச்சிகளில் மனம் இவ் உணர்ச்சி நிலைகளாக மாறிவிடுகின்றன. சினத்தின் இயல்பை, நாம் சினம் கொள்ளும்போது உணர்கிறோம். தாயன்பினை, குழந்தைகளிடத்து அன்பு செலுத்தும்போது அதன் தன்மையை அறிகிறோம். உள்ளுணர்வே ஆன்மாவைப் பற்றி நமக்கு உணர்த்துகின்றது. ஆன்ம அறிவும் ஆன்ம அனுபவமும் பிரிக்க வொண்ணாதன.

உள்ளுணர்வு மேலான உயர்ந்த அறிவாகும். உள்பொருளை முழுமையாக நமக்கு இவ் உணர்வே உணர்த்துகின்றது. அறிவாற் றலும் உள்ளுணர்வும் அகத்திற்கு உரியன. முன்னது குறித்த தொரு பகுதியாகும். பின்னது ஆன்மாவை முழுமையாகப் பயன் படுத்தும். இவ்விரண்டும் ஆன்மா தொழிற்படும்போது இணை கின்றன. உள்ளுணர்வு தனித்த அறிவு உணர்ச்சி, கற்பனை, இயற்றி நிலை ஆகியவை மட்டும் அல்ல. இவை யாவும் ஒருங் கியைந்து உள்ளுணர்வில் தொழிற்படுகின்றன. உள்ளுணர்வில் நாம் விரிவாகச் சிந்திக்கின்றோம். ஆழமாக உணர்கின்றோம். உடனாகக் காண்கின்றோம். முழுமையான உணர்வுடன் தொழிற் படுவது உள்ளுணர்வாகும்.

உள்ளுணர்வு, உடனாக நமக்குப் பெறும் அறிவாகும். இவ் அறிவு இயல்பாக எழுவது ஆகும். அளவை முறையில் நாம் வருந்தி முடிபுகளைப் பெறுகின்றோம். உள்ளுணர்வு தருகின்ற

உண்மைகள் ஏற்புடையன. வேறு எதையும் கொண்டு இதனை ஏற்புடையதாக்க வேண்டுவதின்று. உள்ளுணர்வினால் நாம் உணர்வன கண்டுபிடிப்பு போல்வது, வெளிப்பாடு (Discovery, Revelation). இது ஊகமன்று; அல்லது படைப்புமன்று. அக வுணர்வு-ஸ்வத சித்த-தானே நிலைபெறுவது; தற்சான்று கொண்டு விளங்குவது; தன்னொளியோடு கூடியது.

சமய அனுபவத்தில் பெறுகின்ற அகவுணர்வே உயர்ந்த தாகும். அது அறம், அழகு, அளவை, அறிவியல் ஆகிய துறை களில் பெறுகின்ற அகவுணர்வுகளைவிட உயர்ந்தது. இச் சமய அக அல்லது உள்ளுணர்வு எல்லாவற்றையும் உள்ளடக்குவது, வாழ்வு முழுமையும் தழுவுவது. சமய வாழ்வில் நிறைவு பெறு கின்றது. இறைக் காட்சியை நமக்கு இவ் உணர்வு நல்குகின்றது. இவ் உணர்வை நாம் பெறுகின்றபோது, எல்லை கடந்த ஆற்றல், உணர்வு, மகிழ்ச்சி அடைகின்றோம். இறையோடு இணைந்து விளங்குகின்றது. இத்தகைய உணர்வு கைவரப் பெற்றோர் பிரம்மமாகவே விளங்குவர். பிரம்மத்தை உணர்தல் என்பது பிரம்மம் ஆதலாகும். நமது ஆசிரியர் இத்தகைய பிரம்ம உணர்வு பெற்றவர்களைப் பற்றிக் கூறுவது: ‘இவர்கள் மாற்றம் பெற்ற வர்கள், புத்துணர்வு பெற்றுப் புதிய வாழ்வு வாழ்பவர்கள். இவர் களது ஆற்றல் முழு எல்லையான வளர்ச்சியைப் பெற்று விளங்கு வது. இவர்கள்மூலம் பிரம்மம் வெளிப்படுகின்றது. இவர்களி டத்தில் பிரம்மம் நன்கு வெளிப்படுகின்றது.’

உள்ளுணர்வுகள் இத்தன்மையன என்று இயம்பவொண்ணா தவை. ‘இவ் உணர்வை புலனனுபவத்தால் உணர்த்த இயலாது. கருத்தமைவுகள் கொண்டு இவ் உணர்வை விளக்க இயலாது. துறவி தெரிஸா அம்மையார் மும்மைக்காட்சி பெற்றார். இக் காட்சியினைப் படித்தறிந்திருந்தார். உள்ளுணர்வின்மூலம் மும்மை யின் முழுப் பொருளையும் அவ் அம்மையார் உணர்ந்தார். துறவி பால் (Saint Paul) ஏசுநாதரைப்பற்றி அறிந்திருந்ததால், டமாஸ் கஸ் சாலையிலே செல்லும்போது, ஏசுவின் குரலைக் கேட்டு அறிந்தார்.

கீழை நாடுகள் உள்ளுணர்வின் ஆற்றலை வளர்க்க வழிவகை களை வகுக்கின்றது. மேலை நாடுகள் அறிவாற்றலைப் பண்படுத்து கின்றது. இராதாகிருஷ்ணன் இவ்விரு நாட்டு இயல்புகளையும் இணைக்கும் சிந்தனையாளர். இந்தியத் தத்துவம் அகவுணர்வை அடிப்படையாகக் கொண்டது. அறிவாற்றலை நாம் பண்படுத்திய பிறகு அகவுணர்வு தோன்றும். அறிவாற்றல் உள்ளுணர்வில் மாற்றம் பெறுகின்றது. அதனை உள்ளடக்கிக் கடந்து உள்ளுணர்வு விளங்குகின்றது.

## அறம்

அற இயல் புலன் கடந்த பொருளியலைச் சார்ந்து விளங்குகின்றது என்பது இராதாகிருஷ்ணனது கருத்தாகும். அறக்கொள்கை புலன் கடந்த பொருளியலை அடிப்படையாகக் கொண்டு விளங்க வேண்டும். மனிதனது ஒழுக்கத்திற்கும் பரம்பொருளிற்கும் இடையே உள்ள உறவைப் பற்றிய கருத்தை நன்கு வரையறை செய்ய வேண்டும். நாம் எவ்வாறு உள் பொருளைப்பற்றிக் கருதுகின்றோமோ, அதற்கு ஏற்ப ஒழுகுகின்றோம். காட்சியும் ஒழுகலாறும் சேர்ந்தே செல்ல வேண்டும் என்பது ஆசிரியரது கருத்தாகும்.

பரம்பொருள் நாம் போற்றும் பண்புகட்கு நிலைக்களமாக விளங்குவது ஆகும். ஆதலால், அறவாழ்வில் நாம் குறிக்கோளைக் கொள்வது உயரிய பண்புகளைப் போற்றுவதாதல் வேண்டும். இக் குறிக்கோள் வாழ்க்கையில் அடையத்தக்கதா? அல்லது கனவு போன்றதா? இவன் குறிக்கோளை அடையும் முயற்சியில் இவனுக்கு மேலான ஒன்றனின் உறுதுணை கிடைக்கின்றதா? வரம்பற்ற கருத்துமுதற்கொள்கையை (Absolute Idealism) ஆசிரியர் ஏற்கின்றார் என்று முன்னர் கண்டோம். இக் கொள்கையின்படி ஒழுகலாற்றிற்குச் சிறப்பு உண்டா? பிரம்மமே உள்பொருள்எனின்,ஒழுகலாறு சம்பந்தமான கேள்விகட்கு உரியஇடம் யாது? இக் கேள்விகள் எல்லைக்குட்பட்டு வாழ்கின்ற ஜீவன்களைப் பொறுத்தன. ஆசிரியர் சில சமயங்களில் தாம் மேற்கொண்ட பரம கருத்து முதற்கொள்கைக்கு ஏற்ப ஒழுகலாற்றை இறுதியில் நாம் கடக்க வேண்டிவரும் என்றும் கூறுகிறார். 'அற இயல் வாழ்க்கையைத் தனியே பிரித்துக் கொள்கின்றது. நாம் கடக்கும்போது அறச் சட்டங்களையும் கடந்தே தீருகிறோம்' என்று ஆசிரியர் கருதுகிறார். நன்மை தீமை என்ற வேறுபாடு செயல்களை அடிப்படையாகக் கொண்டது. நிறைவு (Perfection) என்பது யாவற்றையும் கடந்தது. அங்கே செயல்களிரா. ஆசிரியர், ஆன்மீக வாழ்வை அறவாழ்வைவிட உயர்ந்த நிலையில்வைத்துக் கருதுகிறார். அற நிலையைவிட ஆன்மீக நிலை உயர்ந்தது. உயிர்ப்பாற்றல், சடத்தினின்று தோன்றியது. மனம் உயிர்ப்பாற்றலினின்று தோன்றியது. பண்புகளின் உணர்வு மனத்தினின்று தோன்றியது. இறையுணர்வு பண்புணர்வினின்று தோன்றியது. வீடுபேறு என்பது அறவாழ்வில் தனித் தன்மை நீங்கிப் பொதுத்தன்மையைஆன்மீகவாழ்வில் பெறுதலாகும். காலத் தத்துவத்திற்கு உட்பட்டு எல்லையற்ற முன்னேற்றத்தைக் காண்கிறோம். பின்னர் எல்லையற்று என்றும் விளங்குகின்ற சூழலில் நாம் நமது குறிக்கோளை அடைகின்றோம் என்று ஆசிரியர் விளக்குகின்றார்.

ஞானம் பெறுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளவன் பெற வேண்டிய பயிற்சியை வேதாந்தம் விளக்கியுள்ளது. சிரவணம், மனனம், நிதித்யாசனம் என்ற மூன்று படிநிலைகளை வகுத்துள்ளது. சிரவணம், ஞான நூல்களைத் தக்கார்வாய்க் கேட்டல். பின்னர் கேட்டவற்றைச் சிந்தித்துத் தெளிந்து அவ் உண்மைகளை வாழ்க்கையில் தெளிதல், மனனமாகும். இந் நிலையில் சிந்தித்தல் மட்டும் போதாது, தெளிதலும் வேண்டும் என்பது விளக்கப் பெறுகின்றது. அடுத்தநிலை, நிட்டை கூடுதலுமாகும் (நிதித்யாசனம்). இம் மூன்று நிலைகளைக் கொண்டதே, வேதாந்த சாதனமாகும். இச் சாதனையை மேற்கொள்வதற்கு முன்னர் பொருளல்லனவற்றைப் பொருளாகக் கொள்ளும் புல்லறிவு நீங்க வேண்டும். நிலையுதல் அற்றனவற்றை நிலையுதல் உடையன என்று கொள்ளும் மயக்க அறிவு நீங்க வேண்டும். வீடு பேற்றை அடைதலில் அதாவது, பிரம்ம ஞானம் கைவரப் பெறுதல் வேண்டும் என்பதில் தணியா வேட்கை உடையவராதல் வேண்டும். ஞானமே சிறந்த சாதனம் என்பது வேதாந்தம் உணர்த்தும் உண்மையாகும். மாயை என்கின்ற திரையைக் கிழித்து, உண்மையான ஞானம் பெறவேண்டும். இஞ் ஞானம் அறவுணர்வு மட்டுமன்று, நன்மையைத் தீமையினின்று பிரித்து அறிதல் மட்டுமன்று. ஆனால், சீரிய ஒழுக்கம் ஞானம் தோன்றுவதற்கு அடிப்படையாகும்.

தனியொருவன் தான் வீடு பேறு பெற்ற பின்னரும், பிறர் நலம் பேணுவதைக் காண்கின்றோம். பற்றுகளனைத்தையும் பற்றறத் துறந்தவர் புத்தர். ஒளிபெற்ற பின்னரும், தரும சக்கரத்தை நாற்பது ஆண்டுகள் இயக்கி வந்தார். புத்தர் தமது முழுமையான விடுதலையை ஏறக்குறைய ஐம்பதாண்டுகள் கழித்த பின்னர் கொண்டார். மக்கட் சமுதாயத்தினிடத்து அவர் கொண்டிருந்த பெருங் கருணையன்றோ இதற்குக் காரணம்! புத்தர் தாம் தெளிவு பெற்ற பின்னரும் இவ் உலகில் மக்களிடையே உள்ள உயர்ந்த உண்மைகளைப் போதித்து வந்தார்.

சங்கரரும் தாம் பிரம்ம ஞானத்தை இளமையிலேயே கைவரப் பெற்றார்; பின்னர் இந்தியப் பெருநில முழுமையும் சுற்றி, அத்துவித உண்மைகளை எடுத்துக்கூறி, நான்கு மடங்கள் நிறுவி, ஷண்மதங்களை ஸ்தாபித்து, உலக மக்களது உய்வின் பொருட்டுச் சீரிய தொண்டாற்றியதை நாம் அறிகிறோம். ஆதலால், மக்கட்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளைப் புத்தரும் சங்கரரும் உணர்ந்திருந்தனர். இவர்கள் தத்தம் நிலையில் வீடுபேறு அல்லது விடுதலை பெற்றிருந்தும், உலக மக்கட்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றினார்கள்.

நாம் வாழுமுலகில் அறத்திற்கு இன்றியமையாமை உண்டு. இவ் உலகோடு நாம் உறவு கொண்டு வாழும்வரையில் நமக்கு அறவுணர்வு தேவை. நன்மை-தீமை பாகுபாடு பொருளுள்ள தாகும். ஆனால், விவேகிகட்கு முற்றுந் துறந்த ஞானிகட்கு, இவ் வேறுபாடு கிடையாது. ஏனெனில், இவ் வேறுபாட்டைக் கடந்த நிலையில் அவர்கள் விளங்குகின்றனர். இராதாகிருஷ்ணன் கூறுவது: 'வாழ்க்கை ஒன்றாகும். இதனிடத்துப் புனிதத்திற்கும், புனிதமல்லாததற்கும் வேறுபாடு கிடையாது. நாம் அன்றாடம் ஆற்றும் பல்வேறு அனுபவங்கள், புரியும் தொழில்கள் யாவும் பரம்பொருளுக்கு ஆற்றும் கடமைகளாகும்.' யாவற்றையும் கடந்த பரம்பொருளினிடத்து மாறாத பற்று வைக்கின்றோம். இவ் உலகில் நாம் வாழும்போதும் அப் பற்று குறைவதில்லை. பரம் பொருளுணர்வு, நமது பணிகளிலே பிரதிபலிக்க வேண்டும்.

அற இயலும் சமயமும் மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டு விளங்குகின்றன. இவை ஒன்றையொன்று ஊக்குகின்றன. தருமம் என்ற சொல்லை அதன் பொருள் செறிவு குன்றாத வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலாது. இச் சொல் அறவுலகில் அற நேர்மையை உணர்த்தும். சமய உலகில் நிறைவை உணர்த்தும். ஆதலால், தருமம் என்பது அறம், சமயம் ஆகிய இரண்டும் இணைந்த ஒன்றாகும். தருமம் என்பது உயர்ந்த ஒழுக்கமாகும். உள்ளதை உணர்ந்து அதற்கு ஏற்ப ஒழுகுதலே தருமமாகும். இவ் ஒழுகலாறு உண்மைக்குப் புறம்பானதன்று. இராதாகிருஷ்ணன் அற வாழ்வை என்றும் குறைத்து மதித்த தாகக் குறைகூற இயலாது. இவ் உலக வாழ்விற்கு அறம் தேவை. அறவுணர்வு இன்றியமையாததென்பதை நன்கு வற்புறுத்தியுள்ளார். இவ் உலகிற்கு சமயமும் அறமும் பின்னிப் பிணைந்தே செல்ல வேண்டும் என்பது அவரது கருத்து. மனிதன் தனது உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கு அற வாழ்வை, சமய வாழ்வை, முறைமையாக வாழ வேண்டும். மனிதன் உயர்ந்த நிலையை எய்திய பின்னர், பிரம்ம ஞானம் கைவரப்பெற்ற பின், பிரம்ம உணர்வு தலைப்பட்டவுடன், அறம், சமயம் என்ற இரு நிலையையும் கடக்கின்றான்.

சி. இ. எம். ஜோட் என்பவர் தமது நுலுள் (கீழை நாட்டி னின்று எதிர்ப்புக் குரல் அல்லது மறுமொழி) இராதாகிருஷ்ணன் துன்பம், தீமை ஆகியவற்றிற்குத் தமது தத்துவத்தில் தக்க இடம் தந்து அவற்றிற்குரிய தீர்வு காணவில்லை என்ற குற்றம் சாட்டு கிறார். இக் குற்றச்சாட்டைக் கருத நாம் ஆசிரியரது பிற கருத்துகளைக் கருத வேண்டும். இவற்றுள், முக்கியமானவை கருமக் கொள்கை, மறு பிறப்பு, வீடுபேறு ஆகியவையாகும். இவற்றை முறையே இனிக் காண்போம்.

## கருமம்

கருமம் என்ற சொல் செயலைக் குறிக்கும். செயல்களை நாம் புரியும்போது அவற்றின் விளைவுகள் இரு வகையாகும். ஒன்று, புறவுலகில் விளைபவை. மற்றொன்று நமது அகவாழ்வில் விளைபவை. நமது வாழ்வில் விளைப்பனவற்றைச் சம்ஸ்காரங்கள் என்று கூறுகின்றோம். இவை, சிந்தனை போக்குகளாகும். நமது சிந்தனை, சொல், செயல் ஆகியவை நமது வாழ்வினின்று மலர்பவை. இவை நமது அக வாழ்விற்கு ஓர் அமைப்பைத் தருகின்றன. வள்ளுவர் ''உள்ளத்தனையது உயர்வு'' என்று சொல்லும்போது உள்ளம் எத்தகைய எண்ணங்களை உள்ளுகின்றனவோ அவற்றிற்கு ஏற்ப நமது உள்ளம் அமைகின்றது என்பதை நன்கு உணர்த்துகின்றார். ''உள்ளத்தால் உள்ளலும் தீதே'' என்று மற்றோர் இடத்தில் வள்ளுவர் கூறுவதனால், தீமைகள் உள்ளத்தினின்று களையப் பெற வேண்டும் என்பது நமக்குத் தெளிவாகின்றது பொய், புறங் கூறுதல், பயனில சொல்லுதல் முதலியன சொற்குற்றங்களாகும். இவை, நேராத வகையில் நம்மைக் காத்துக்கொள்ள, நாம் உள்ளத்தில் தூய்மையுடையவராதல் வேண்டும். ஆதலால், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திருக்குறள் ''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்'' என்றது ''கருமமே கட்டளைக்கல்'' என்பதனால், மனிதனின் பெருமையை உணர அவனது செயல்கள் பெரிதும் உதவி புரிகின்றன என்பது தேற்றம். ஆதலால், நற்சிந்தனை, நற்சொல், நற்செயல், நமது பண்புநல ஆக்கத்திற்குத் துணை செய்கின்றன. இப் பண்பின் வளர்ச்சிக்குக் கருமச் சட்டம் மிகவும் துணை புரிகின்றது. வாழ்க்கையை முழுமையாக நோக்க வேண்டும். அடுத்தடுத்து நிகழும் ஒவ்வொரு நிலையும் அதற்கு முன்னர் அமைந்த ஒன்றின் விளைவாகும்.

கருமம், நம்மைக் கழிந்த கால வாழ்வோடு பிணைக்கின்றது. மனிதனுக்குக் கழிந்த கால வாழ்வு எவ்வாறு உண்டு என்று இன்றைய வாழ்வு கொண்டு நிர்ணயிக்கின்றோமோ, அதேபோல் வருங்கால வாழ்வும் உண்டு என்று நாம் கொள்ள வேண்டும். கருமத்திற்கு இரு கூறுகள் உண்டு. ஒன்று பின்னோக்கியது; கழிந்தகால வாழ்வை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது. மற்றொன்று முன்னோக்கியது ; வருங்கால வாழ்வை வரையறுப்பது. கருமச் சட்டத்தைக் குறுகிய நிலையில் நமது செயல்கட்குரிய பலன்களைப் பெறுதல் என்று மட்டும் கொள்ளுதல் தவறாகும் என்பது இராதாகிருஷ்ணனது கருத்தாகும்.

கழிந்த கால கருமங்கள் அல்லது செயல்கள் நமது இந்நாளைய வாழ்வை வரையறுக்கின்றனவா? நமது செயல்கள் கழிந்த காலக்

கருமங்களின் விளைவுதானா? நாம் செயலுரிமையோடு ஆற்றுகின்றவையும் கழிந்த காலக் கருமத்தால் வரையறுக்கப் பெறுகின்றனவா? நமது ஆசிரியர் இக் கேள்விகட்குத் தக்க விடை காண்கின்றார். நாம் வரையறுக்கப்பெற்ற வரிகளாகவும் விளங்குகின்றோம்; செயலுரிமை உடையவர்களாகவும் இருக்கின்றோம். நமது செயல்கள் முன்னிகழ்ந்தவற்றால் வரையறையுறுகின்றன. நாம் ஆற்றும் செயல்கள் நமது பண்பு நலத்தின் (Character) விளைவுகளே என்றாலும், நாம் செயலுரிமை பெற்றே விளங்குகின்றோம்.

செயலுரிமை என்பது, நினைத்தவாறு ஒழுகுதலன்று. நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்வதாகும். நமது செயல்களை நாம் வரையறுத்துக் கொள்ளுதலாகும். ஒருவன் செயலுரிமையோடு ஒரு செயலைப் புரிகின்றான் என்றால், அவன் அச் செயலை வரையறுத்துக் கொள்கின்றான் என்பது பொருளாகும். இயற்றிநிலை (will) என்பது நமது ஆன்மாவின் செயற்படு நிலையாகும். செயலுரிமை என்பது எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நாமே செயல்களை வரையறுத்துச் செய்தலாகும். புறத் தூண்டுதலின்றி, புறக்கட்டுப்பாடின்றி செய்தலாகும். அக வாழ்வினின்றும் கட்டுப்பாடு நிகழலாம். நமது அடிமனம் செயல்களை வரையறுக்கலாம். ஆதலால், நமது பண்புநல அமைப்பில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கூறுகின்றோம்.

வாழ்க்கையைச் சீட்டாட்டத்தினோடு ஒப்பிட்டு இராதாகிருஷ்ணன் ஓர் அறிய உண்மையை வெளிப்படுத்துகிறார். நமக்கு விளையாட்டுச் சீட்டுகள் வழங்கப் பெறுகின்றன. நமக்கு எவை அமையும் என்று தெரியாது. நமக்கு அமைவன கொண்டு நாம் விளையாடுகின்றோம். வெற்றி தோன்ற விளையாடுவது நமது கடமையாகும். சீட்டாட்டத்தில் வல்லவன் ஒருவன் தனக்கு அமைந்த சீட்டுகளை வைத்துக்கொண்டு தான் வெற்றி பெறும் வழியை நாடி விளையாடுகின்றான். விளையாட்டில் தேர்ச்சி இல்லாதவனிடத்தில் நல்ல சீட்டுகள் அமைந்திருக்கலாம். ஆனால், அவற்றைப் பயன்படுத்தித் திறமை தோன்ற விளையாடத் தெரியாதவனாக இருக்கின்றான். தொடக்கத்தில் விளையாடுபவன் செயலுரிமையோடு விளங்குவதாகக் கருதலாம். ஆனால், விளையாடத் தொடங்கிய பிறகு அவன் செயல்கள் வரையறையுறுகின்றன. தொடக்கத்திலேயே இவனுக்கு அமைகின்ற சீட்டுகளில் வரையறை வந்துவிடுகின்றது. ஆனால், தேர்ச்சி மிக்கவன் தனக்கு அமைந்த சீட்டுகளை வைத்துக்கொண்டு திறம்பட விளையாடுகின்றான். வெற்றி பெறுவதே அவனது நோக்கமாகும். இவ் விளையாட்டைப் போன்றதே நமது வாழ்க்கையும். நமக்கு அமையும் உடல், கருவி,

கரணங்கள், அறிவாற்றல், பெற்றோர், மனநிலைமை ஆகியவை நாம் முன்னரே அறிந்து பெறுபவை அல்ல. இவை முன்னரே நமக்காக வரையறுக்கப் பெறுகின்றன. பிறப்பில் மெலிந்த நலிவு மிக்க உடல் பெற்றவர்கள் உணவில், உடற்பயிற்சியில் மிக்க விழிப்புடன் இருந்து வன்மையான உடல்பெற்ற வரலாறுகளை நாம் அறிவோம். அறிபுலன்களில், செய் கருவிகளில் ஊனமுடையோர் வாழ்வில் சிறந்தவர்களாகக் காண்கிறோம். ஹெலன் கெல்லர் என்கின்ற அம்மையார் தமக்கு இருந்த குறைகளை எல்லாம் வென்று நீடுவாழ வில்லையா? இதேபோன்று அறிவாற்றல் குறைந்தவர்களும் வாழ்க்கையில் தமது குறையை உணர்ந்து அக் குறையை நீக்க முற்பட வில்லையா? உலைவின்றித் தாழாது முயன்றால், ஊழையும் புறமுது கிட்டு ஓடச் செய்யலாமன்றோ? நமக்கு அமைந்துவிட்ட குறைகளைப் பற்றி வருந்திப் பயனில்லை. இக் குறைகளை எவ்வாறு களைந்து வெற்றி தோன்ற வாழலாம் என்பதே இங்கு எழுகின்ற கேள்வியாகும். நமக்கு அமைந்துள்ள வாழ்வானது இறைவனால் தரப்பெற்ற அரிய பரிசுப் பொருளாகும்.

இராதாகிருஷ்ணன் இரு தவறான கொள்கைகளை இங்கே தவிர்க்கின்றார். அவற்றுள் ஒன்று கரும நியாயம். கரும நியாயம் என்பது பரிசு தண்டனை என்ற அடிப்படையில் இயங்குவதன்று. நற்பண்புகளைப் போற்றுகின்றோர் இன்பமடைவர் என்றும், தீய பண்புகளைப் பின்பற்றுகின்றோர் துன்பம் அடைவர் என்றும் கருதுதல் பொருந்தாது. அன்பு நெறி நிற்போர் துன்பத்தினை வலிந்து ஏற்றுக் கொள்ளக் காண்கின்றோம். வெறுப்பில், அன்பு அல்லாத நெறிகளில் மன நிறைவு கொள்வோரும் உளர். மேலும், நற்செயல்கள் இம்மை வாழ்க்கையைச் சிறக்கச் செய்கின்றன என்பதையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. தீய செயல்கள் துன்பம் நிறைந்த வாழ்க்கைக்குக் காரணமாகின்றது என்றும் சொல்வதற்கில்லை. கரும நியாயம் என்பதைச் சட்டவரம்பிற்குட்பட்ட பரிசுகளை அல்லது தண்டனைகளை வழங்கும் நியதி என்று கொள்ளுதல் கூடாது என்பது ஆசிரியர் கருத்தாகும். நற்பண்புகளைப் போற்றி வாழ்கின்ற வாழ்விற்குரிய பரிசில் இன்பம் நிறைந்த வாழ்வன்று. பாவச் செயல்கட்குரியது துன்பமுமன்று. இன்பம், துன்பம் ஆகிய இவ்வுணர்வுகள் விலங்குகளின் வாழ்க்கையை வரையறுக்கலாம். மனித நிலையில் இவ் வுணர்வுகளைக்கொண்டு நாம் அறச்செயல்களை மேற்கொள்ளுதல் கூடாது. நன்மையைப் பொருளியல் வாழ்க்கையின் சிறப்பென்றோ, தீமையை உடற் துன்பங்கள் என்றோ கொள்ளுதல் கூடாது. அன்பு வாழ்க்கை இன்ப வாழ்க்கை என்பர். ஆனால், அன்பு பூண்டு ஒழுகும் இல்லறத்தான் தனது மக்களை நன்னிலையில் வளர்த்தலில் அனுபவிக்கும் துன்பங்கட்கு எல்லை

யுண்டா? ஆனால் இத் துன்பங்களை அவன் ஏற்றுத் தனது கடமைகளை ஆற்றுகின்றான்.

அறச் செயல்கள் அல்லது நற்பண்புகளைப் போற்றும் வாழ்க்கை வெற்றியை விளைக்கின்றது என்றும், அறமல்லாத செயல்கள் தோல்வியைத் தோற்றுவிக்கின்றன என்றும் நாம் கருதக்கூடாது என்பது இராதாகிருஷ்ணனது கருத்தாகும். வாழ்க்கையில் நேரிடுகின்ற இடையூறுகள்—வாய்ப்புக் கேடுகள்—பாவத்தினால் விளைபவை என்று கருதுதல் தவறாகும் என்பது ஆசிரியர் கருத்தாகும். முறையற்ற நிலையில் நாம் முயலும்போது வெற்றி தோன்றாது போகலாம். அறியாமை, ஒழுங்கின்மை, பலஹீனம், உறுதியற்ற உள்ளம், தன்னலம் போன்றவற்றால் வாய்ப்புக் கேடுகள் நிகழலாம். ஒருவனது தனி வாழ்க்கையில் உள்ள குறைகளால்—பண்பு நலக் குறைவுகளால்—நற்பேறுகள் வாய்க்காது போகலாம். பொருளாதார அமைப்பு ஒரு நாட்டில் செவ்வையாக அமையவில்லையானால், அந் நாட்டில் வறுமையும் தாழ்வும் ஏற்படுவது உறுதி. பேராசை, அறியாமை, சமூக அநீதி போன்றவற்றால் விளையும் தீமைகட்கு நாம் பொறுப்பேற்றாக வேண்டும். மனிதன் சமுதாயத்தில் உள்ள சீர்க்கேடுகளை ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வு காண்கின்றான். இதேபோன்று அரசியலில் உள்ள இலஞ்ச ஊழல் போன்ற குறைகளையும் கண்டு அவற்றை மாற்ற முற்படுகின்றான். மனிதன் தக்க செயல் என்று ஒன்றைத் தேர்ந்து செயற்பட முயலுகின்றபோது அவனது மனம் உறுதி பூணுகிறது. கருதியது நிறைவேறும்போது அவனது உள்ளம் மகிழ்கின்றது. தக்க அல்லது சீரிய செயல்கள் அவனது நலத்தில் இடம் பெறுகின்றன. இத்தகைய நிலைகளை நோக்கும்போது, மனிதன் விதியின் விளையாட்டுப் பொம்மையாக விளங்குவதில்லை. அவனது சிந்தனை வருங்காலத்தைப் பற்றியதாக அமையும்போது அவன் புத்துணர்ச்சி பெறுகின்றான். அவன் கழிந்தகால விளைவுகளை மாற்றத் தீவிரமாக முயல்கின்றான். கரும நியாயம் என்பது விதிவாதமன்று. விதி நம்மைச் செயலற்றவர்களாக ஆக்குகின்றது. ஆனால், கரும நியதி நமக்குச் செயலுரிமை தந்து வருங்காலத்தை உருவாக்க வைக்கின்றது.

## வீடுபேறு அல்லது மோட்சம்

விடுதலை அல்லது மோட்சம் என்பது வேறு. தொடர்ந்து வாழ்தல் வேறு (Immortality). இம்மை வாழ்வன்றி மறுமையில் தொடர்ந்து நிலைபெறுதல் என்பது வேறு. மோட்சம் மறு பிறப்பினின்று பிரித்துணர்த்தப் பெறுகின்றது என்று இராதாகிருஷ்ணன் கூறுகின்றார்.

மறு பிறப்பு அல்லது தொடர்ந்து பல பிறப்புகள் நாம் பெற்ற லன்றி நமது குறிக்கோளை அடையமுடியாது. ஒரு பிறவியில் நாம் குறிக்கோளைப் பெற இயலாது. அதற்குக் காரணம் ஒரு பிறவியில் மனிதன் தன்னுணர்வு பெற்றுக் குறிக்கோள் இன்னது என்று உணர்ந்து அதனை அடைய முற்படும்போது, அவனுக்கு ஒரு பிறவி போதுமானதாக அமைதல் இல்லை. ஒருவனுக்கு அமைகின்ற ஆயுட்காலம் குறைவு. இறைவனோடு ஒன்றுதல் என்பது எளிதில் பெறக் கூடியதன்று. ஆதலால், தொடர்ந்து பல பிறவி களில் முயன்று அக் குறிக்கோளை அடைகின்றான். மேலும் மனித னிடத்துப் பொதிந்து விளங்கும் ஆற்றல்கள் பலவாகும். இவ் ஆற்றல்களெல்லாம் வெளிப்பட்டு வளர்ச்சியடைந்து நிறைவு பெறுதற்கு ஒரு பிறவி போதாது. ஆசிரியர் மறு பிறவியை உண்மை என்று கொள்கின்றார். அதன் உண்மையை நிலைநாட்ட அறிவுக்குப் பொருத்தமான காரணங்களை எடுத்துக் கூறுகிறார்.

இயற்கை நிகழ்ச்சிகள், பொருள்கள் யாவும் கழிந்த காலத் தோடு தொடர்பு கொண்டு விளங்குகின்றன. பொருள்கள் நிகழ்ச்சிகளிடத்து தற்போது விளங்கும் கூறுகள் வருங்காலத் திலும் அமையக் காண்கிறோம். இதேபோன்று நமது ஆன் மாக்களும் தொடர்ந்து நிலைபெறுகின்றன. ஆதலால், ஆன்மாக் கட்கு இறந்த காலமும் உண்டு, வருங்காலமும் உண்டு.

மறு பிறப்பு உண்மையென்பதை, கீழை மேலை நாட்டறிஞர் யாவரும் ஏற்றுள்ளனர். பிதாகரஸ், பிளேட்டோ போன்ற அறிஞர் கிரேக்கருள் தொடக்க காலத்திலேயே மறுபிறப்பு உண்மை என் பதை விளக்கியுள்ளனர். ஹியூம், ஸோப்பன்ஹவர் போன்றோரும் தொடர்ந்து மறுபிறப்புகள் ஒருவனுக்கு அமைகின்றன என்றும், அவனது ஆன்மா நிலைபெற்றது என்றும் கூறுகின்றனர். வேத காலத்தில் மறுபிறப்புக் கொள்கையை உருவாக்கி இருந்தனர். இந்தியத் தத்துவ தரிசனங்கள் யாவும் மறுபிறப்பு உண்மையை நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்கவில்லை. அதன் உண்மையைப் பல சான்றுகள் கொண்டு நிறுவுகின்றார்.

பொருள்கள் யாவும் தோற்றங்கொள்கின்றன என்றால், அவற் றின் முன்னைய நிலை என ஒன்றிருத்தல் வேண்டும். இதேபோன்று வருங்கால நிலை எனவும் இருத்தல் வேண்டும். பொருள்கள் தொடர்ந்து நிலைபெறவும் காண்கின்றோம். இவை நிலைபெறும் போது அவற்றின் கூறுகள் சில காக்கப் பெறுகின்றன. ஆன்மாக் களும் முன் பிறவிகளில் அமைந்த இயல்புகளோடு இவ்வுலக வாழ்க்கையை வாழ்கின்றன. இவ் வாழ்வில் அமையும் இயல்புகள் வருங்காலத்திலும் அமையும். உலகப் பொருள்கட்குப் பொருந்து கின்ற உண்மை, ஆன்மாவிற்கும் பொருந்துவதே ஆகும்.

ஒருவன் பிறக்கும்போது ஆன்மா என ஒன்று உளதாகிப் பின்னர் அவன் இறக்கும் போது அது மறைந்து விடுகின்றது என்று கொண்டால், நாம் பெறுகின்ற கல்வி அனுபவம் யாவும் பயனற்றுப் போய்விடும். மக்கள் பல திறத்தினராக விளங்குகின்றனர். மக்களிடையே வேறுபாடு நாம் காண்கின்றோம். இந் நிலைகளை விளக்க, முற்பட்ட வாழ்வு இருந்திருத்தல் வேண்டும் என்று கொள்ள வேண்டுவதாகின்றது. பல்வகைப் பிறவிகளை நாம் காண்கிறோம். மக்கள், விலங்குகள், பறவைகள் எனப் பலவகைகளை நாம் பார்க்கும்போது, அவற்றின் உடல் அமைப்பிலே உள்ள வேறு பாடுகளைக் காண்கின்றோம். இப் பிறவிகளின் தொழிற்பாடும் இயற்கையும் வேறுபட நாம் பார்க்கிறோம். இவை நமக்குத் தொடக்கத்திலிருந்தே விளங்குகின்றனவாதலால், இவற்றிற்கு முற்பிறவிகள் இருந்திருக்க வேண்டும்.

சில மக்கள் பிறக்கும்போதே மிகுந்த தேர்ச்சியுடன் பிறக்கக் காண்கின்றோம். சிறு வயதிலேயே ஏதேனும் ஒரு துறையில் தேர்ச்சியுடையவர்களாக விளங்குகின்றனர். பன்னிரு யாண்டுகள் நிரம்பப் பெற்ற ஒருவன் மிகுந்த தேர்ச்சியுடன் வயலின் வாசித்து ஆல்பர்ட் கூடத்தில் தனது திறமையைப் புலப்படுத்தினன். இவர்களை இளைய மேதைகள் (Boy or Girl Prodigies) என்று கருது கின்றோம். ஒருவன் வாழ்நாள் முழுவதும் முயன்றாலும் பெறற் கரிய தேர்ச்சியை இவ்விளைஞன் பன்னீரியாண்டுகளில் பெற்றுள் ளமை, இவ் வாழ்க்கையில் அவன் பிறந்து பெற்ற பயன் என்று கருதுதற்கில்லை. இவன் முன்னைய பிறவியில் பெற்றிருந்த தேர்ச் சியே தற்போது வெளிப்படுகின்றது. பெல்ஜிய நாட்டுக் குழந்தை ஒன்று கணிதத்தில் மிகுந்த நுட்பம் பெற்றிருந்ததைக் காண்கின் றோம். இவ்வாறு உலகு எங்கணும் இளைய மேதைகள் காணப்பெறு கின்றனர். இவர்கள் இளமையிலேயே பெறுகின்ற தேர்ச்சி முற் பிறவிகளில் அடைந்திருந்த தேர்ச்சியின் விளைவு என்றே கூற வேண்டும். இவர்கள் தம்மிடத்துப் பொதிந்து விளங்குகின்ற ஆற்றல்களை நிறைவு பெறுமாறு செய்வதற்கே இப் பிறவியை எடுக்கின்றனர். சாதாரண ஆற்றல்கள் நிறைவு பெறுதற்கு ஒரு பிறவி போதாது என்னும்போது, இறையை யுணர்தற்கு—ஆன்மா தனது உண்மையை உணர்தற்குப்—பல பிறவிகள் தேவை என்பதை எளிதில் பெறப் பெறுகின்றது. பிறவிதோறும் ஆன்மா நிறைவு பெற்று வருதல் கண்கூடு. ஆன்மா, செய லற்று விளங்குவதன்று. இயக்கம் மிக்க உறுப்பமைதியோடு கூடிய முழுமையானது ஆன்மா. ஆன்மா பிறவிதோறும் பெற்று வருகின்ற பண்பு நலமானது, ஒருமை எய்தி தொடர்ந்து விளங்குகின்றது. ஆன்மா தான் பெற்றுள்ள முன்னேற்றத்திற்கு ஏற்பப் பிறவிகள்

அமைகின்றன. மரணம் நேரிடும்போது பழைய நிலை மாறு கின்றது. ஆன்மத் தகுதிக்கு இயைய புதிய நிலைகள் உருவா கின்றன. மரணம் என்பது ஆன்மாவின் பண்பு நலத்தை மாற்றுது. மரணத்தின்போது. புற வடிவம்—பருமையானது— அழிகின்றது. ஆனால், பண்பு நலம் தொடர்ந்து விளங்கும். இப் பிறவி நீங்கியவுடனேயே மறு பிறப்பை, ஆன்மா எடுப்பதில்லை. ஆசிரியரது கருத்து: "நுண்ணிய கருவிகள் ஆகிய நுண்ணுடல் (சூக்கும சரீரம்) வாய்க்கின்றது. இவ்வுடலிற்கு ஏற்றதொரு பரு வுடல் அமைப்பைப் பெறுகின்றது. பின்னரே மறுபிறப்பு நேரிடுகின் றது." மேலும், ஆசிரியரது கருத்து உபநிடதத்தைத் தழுவியதாம். ஆன்மா இவ்வுடலை விட்டு நீக்குகின்றது, அதன் அறிவு, பணி, அனு பவம் யாவும் அதனைத் தொடர்கின்றது (பூர்வ பிரக்ஞை). பிறப்பு கள் பொருளற்ற நிலையில் அமைகின்றன என்று கொள்வதற்கு இல்லை. மறு பிறப்பிற்குப் பொருளுண்டு; பயனுண்டு. பிறவி தோறும் ஆன்மா வளர்ச்சி அடைகின்றது. உள்ளது சிறந்து ஆன்மாவின் முன்னேற்றம் பாழ்படுவதில்லை. நாம் நிறைவு பெறுகின்ற வரையில், பிறவிகள் தொடர்ந்து அமைந்து கொண்டே இருக்கும். ஆன்மாவிற்கு முற் பிறவிகள் உள்ளன போலவே பின்னும் பிறவிகளும் உள. மனித நிலையில் நாம் நமது நிலையை அறிந்து விரைந்து முன்னேற்றம் காண்டற்கியலும்.

ஒருவன் இம்மை வாழ்விலேயே முத்திப் பேற்றை அடைய இயலும். இதனை 'ஜீவன் முக்தி' என்கிறோம். உடல் நீங்கிய பிறகு, மரணத்திற்குப் பின் அடையும் நிலையை 'விதேக முக்தி' என்று வழங்குகிறோம். ஒருவன் இறைவனை உணர்ந்த பிறகும் இவ்வுலகில் தொடர்ந்து செயற்படலாம். அவன் எவ்விதப் பற்று மின்றி இறையுணர்வுடன் செயற்படுதலால், அவனது செயல்கள் வேறுபடுகின்றன. அவன் புதிய வாழ்வு பெற்றிலங்குவது போன்று விளங்குவான். அவன் மற்றவர்களைத் திருத்த, மாற்றி அமைக்க முற்படுவான். இத்தகைய பணிகளில் அவன் ஈடுபடும் போது, அவன் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுபவனாக விளங்குகின்றான். இவ்வாறு நிறைவு பெற்று இறையுணர்வுடன் கூடிய பெரியவர்கள் மக்களைத் தீய நெறியினின்று காப்போராக, மீட்போராக விளங்குகின்றனர். பந்தங்களால் அல்லது தளை களால் கட்டுண்டு வாழ்வோர் அனைவரும் தெய்வீக வாழ்வு பெறும் வரையில், நிறைமாந்தருக்குப் பணியுண்டு. இத்தகைய நிறைவுடையோரும், பிறப்புகள் எடுத்து மக்களை உய்விக் கின்றனர். இவர்கள் இப்பணியில் ஈடுபடுகின்றபோது, பிறவியில் துன்புறுத்தப்பெறுகின்றனர். சமுதாய அமைப்பை மாற்றி, அமைதியும் இன்பமும் நிலவுமாறு செய்தல் எளிதன்று. இருப்

பினும், அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்து-மக்களை நன்னிலையில் நிறுத்துகின்றனர். எல்லையற்ற துன்பங்கட்கு உள்ளாகியே இவர்கள் தாம் மேற்கொண்ட பணியில் வெற்றி பெறுகின்றனர். சிலர் இத்தகைய பணியில் வெற்றி பெறுகின்றனர். சிலர் இத்தகைய பணியில் ஈடுபடும்போது தமது உயிரையும் இழக்க நேரிடுகின்றது. இவர்கள் மக்களிடத்துக் கொண்ட தூய அன்பே மரணத்தையும் வரவேற்கச் செய்கின்றது. உயர்ந்த குறிக்கோளிற்காக உயிர் நீத்த உத்தமர்கள் பலராவர். சமயத் துறையில் உயிர் மறித்தோர் எண்ணிறந்தவர்கள். இவ்வாறு உயிர்த்தியாகம் செய்தோரைப் பற்றி நாம் நூல்களில் பரக்கக் காண்கிறோம். ஆனால், இந்த நூற்றாண்டில் காந்தி அண்ணல், ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக உயிர்த்தியாகம் செய்ததை நாம் அறிவோம். விஞ்ஞானத் துறையில் தாம் கண்ட உண்மையை நிலைநாட்ட முற்பட்டபோது அந் நாளைய சமுதாயம் அவர்கட்கு இழைத்த கொடுமையை நாம் படிக்கின்றோம். இடைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் ப்ரூனோ (Bruno) போன்றோர் பட்ட துன்பங்கட்கு அளவே இல்லை. ஆதலால், அறிஞர் தாம் கண்ட உண்மையை எடுத்துக் கூறும்போது எதிர்ப்புகளை அவர்கள் சந்திக்கின்றனர். இன்றும் இது உண்மையாகும். அறிவியலுலகிலேயே இந் நிலை என்றால், சமய உலகில் எதிர்ப்புத் தோன்றுவது இயல்பே. கிரேக்க அறிஞர், சோக்ரதர் காலந்தொடங்கி காந்தி அண்ணல் காலம் வரை நாம் உண்மைப் பகைவரை, சமயப் பகைவரை கண்டே வந்துள்ளோம். நிறைமாந்தர் உலகில் பற்பல இடங்களில் தோன்றி, வெவ்வேறு காலங்களில் தோன்றி, மக்களை நன்னெறிக்கு உட்படுத்தியுள்ளனர். மக்களுள் பெரும்பாலோர் அறவாழ்வைத் தீவிரமாகப் பின்பற்றித் தியானத்தில் ஆழ்ந்து அனுபூதி நிலையைப் பெற முயலும்போது, அனுபூதிச் செல்வர் தோன்றுகின்றனர். படிப்படியே உலகப் படிமுறை வளர்ச்சியும் முன்னேறி வருகின்றது. அனுபூதிச் செல்வர் அல்லது நிறைவுடைய மக்கள் பெருகப் பெருக எண்ணிறந்த மக்கள் தெய்வீக வாழ்வு வாழத் தலைப்படுகின்றனர். இத்தகைய நிறைமாந்தர் யாவும் ஒரே அளவில் நிறைபெற்றனரல்லர். சிலர் ஏனையோரைப் பார்க்க நிறைவுடையோராக விளங்குகின்றனர். தெய்வீக நலம் மிக்கவர்களுள் படிநிலையைக் காண்கின்றோம் என்று இராமானுஜர் கூறுகிறார். இறையுணர்வு மிகவும் அமைந்தோராக ஒருமையுணர்வு மிகவும் கைவரப்பெற்றவராக விளங்குவோரும் உண்டு. வேறு சிலர் இறைவனிடமிருந்து எட்டியே நிற்பவர் போன்று விளங்குகின்றனர். சிலர் தெய்வீக உணர்வு தனிசிறக்கப் பெற்றவர்களாக இலங்குகின்றனர். ஆற்றல்,

அமைதி, இன்பம் போன்றவை இவர்களிடத்து மிகுதியாகக் காணப்பெறுகின்றது. வேறு சிலர் நிறைவு நோக்கி முன்னேறி வருகின்றனர். நிறைவு என்பது என்றும் அடையப்பெருத குறிக்கோளாக விளங்குகின்றது. அந் நிறைவு நோக்கி நாம் தொடர்ந்து முன்னேறுகின்ருேம். முன்னடைந்த நிலைகளைவிட பின்னே அடையும் நிலைகள் முன்னேற்றம் உடையவை. ஆனல், என்றும் முழுமையான நிறைவு என்பது அடையப்பெருததாகும். அதை நோக்கி நாம் முன்னேறுகிருேம்.

அனுபூதிச் செல்வர் படிப்படியே முன்னேறிப் பரம்பொருளோடு ஒன்றுகின்றனர். இவர்கள் சச்சிதானந்த நிலையை அடைவதற்குப் பிரபஞ்சம் முழுமையும் தெய்வீக மயமாதல் வேண்டும். சச்சிதானந்தம் பிரபஞ்சத்துள் உள்ளார்ந்த நிலையில் வெளிப்படாது விளங்குகின்றது. சர்வ முக்தியே இராதாகிருஷ்ணன் வற்புறுத்துவதாகும. தனியொருவனது முத்திப் பேறு பிரபஞ்ச படிமுறை வளர்ச்சியைப் பொறுத்ததாகும். தனியான்மா அனைத்து ஆன்மாக்களுடனும் பரம்பொருளோடு ஒன்றுவதே முத்தியாகும். அனைத்து ஆன்மாக்களும் என்றென்றும் வாழ்கின்ற நிலையைப் பெறுகின்றன. இவ்வாழ்வு இவ்வுலக இயல்புகள் கடந்த ஆன்மீக வாழ்வாகும். ஒருமை இன்பம், எல்லாம்வல்ல தன்மை, எல்லாமறியும் நிலை போன்றவை ஆன்ம வாழ்வின் இயல்புகளாகும். ஒருமை, பன்மை, ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாடு ஆகியவை நீங்குகின்றன: மறு பிறப்பினின்றும் விடுதலை பெறுகின்றன.

இராமானுஜரது மோட்சக் கொள்கையையும், சங்கரரது மோட்சக் கொள்கையையும் ஒருங்கே இராதாகிருஷ்ணன் இணைக்கிருர். ஆன்மீக—தெய்வீக வாழ்வை—இம்மையில் வாழ்தல் இயலும் என்கின்ற இராமானுஜரது கருத்தை ஆசிரியர் ஏற்கிருர்; அனுபூதிச் செல்வரிடையே படிநிலையுண்டு என்பதையும், அவர்கள் பெறுகின்ற நிறைவில் வேறுபாடு உண்டு என்பதையும் ஆசிரியர் ஏற்கின்ருர். தெய்வீக நலஞ்சான்றவர்கள் முற்றிலும் இறையுணர்வில் தம்மை இழப்பதில்லை. அவர்கள் தொடர்ந்து இறையுண்மையை உணர்வதோடு, அவ் வுணர்வு தமது செயல்களில் தோன்ற விளங்குகின்றனர். அவர்கள் ஆற்றுகின்ற பொதுநலம் பேணும் பணிகளில் அவர்களது சிறப்புப் புலனுகின்றது. முத்திப்பேறும் செயற்படுகின்ற நிலையும் முரணுவன அல்ல. மக்களை உயர்த்துதலில் அவர்கள் இடையருது முயன்று கொண்டேயிருக்கின்றனர்.

ஆன்மாக்கள், பிரம்மத்தோடு ஒன்றித் தமது தன்மையை இழக்கின்றன. பெயரும், வடிவமும், வாழ்க்கையும் அவர்கள்

இழந்த பரம்பொருளோடு ஒன்றுகின்றன. சங்கரரது மோட்சக் கொள்கை சச்சிதானந்தத்துடன் ஒன்றுதலை வற்புறுத்துகின்றது. மறுபிறப்பினின்று விடுதலை பெறுதல், உலக வாழ்க்கையினின்று நீங்குதல், கடந்த நிலை வாழ்வைப் பரம்பொருளிடத்து வாழுதல் ஆகிய சிறப்புக் கூறுகளைக் கொண்டது சங்கரரது கொள்கை யாகும். இக் கருத்தை இராதாகிருஷ்ணன் ஏற்கின்ருர்.

முத்திப் பேறு என்பது இயக்கமிக்க பிரபஞ்ச வாழ்வாகும், பரம் பொருளோடு ஒன்றிய வாழ்வாகும். அனுபூதியில் தலைசிறந்து விளங்குகின்றவர் சச்சிதானந்தத்தில் ஒன்றுகின்றனர். இவ்வாறு முற்றிலும் ஒருமை எய்திய பின்னர் என்றென்றும் அமைதிபெறு கின்றனர். தனியான்மாவின் விடுதலையும், அனைத்தான்மாக் களின் விடுதலையும் ஒருங்கே அமைகின்றன. இவ்வகையில் இராதாகிருஷ்ணன், சங்கரர், இராமாநுஜர் ஆகிய இருவரது கொள்கைகளையும் இணைக்கின்ருர்.

மெய்யறிஞர் என்ருல் கருத்துலகிலேயே உலவிக் கொண்டு தத்துவ விசாரணையில் ஈடுபட்டிருப்பார்கள். இவர்கட்கும் நடை முறை உலகிற்கும் எவ்விதத் தொடர்பும் இராது என்று வழங்கு கின்ற கருத்திற்கு மாருன வாழ்க்கையை உடையவர் இராதா கிருஷ்ணன். இவர் தத்துவ சிந்தனையில் ஆழ்ந்து புறஉலகை மறந்து விளங்குகின்றவர் அன்று. தத்துவ உலகில் எந்த உயரத் திற்குப் பறக்க இயலுமோ அந்த அளவிற்குப் பறந்து தமது சிந்தனைகளை அமைத்துக் கொள்பவர். கீழை மேலை நாடுகளில் எந்த நாட்டுக் கருத்தும் அவருக்குப் புறம்பானதன்று. உலக மெய்ய றிஞர் தம் சிந்தனைகளையெல்லாம் முறையாகப் பயின்று தெளிவா கவும் மற்றவர்களுக்கு எடுத்து உணர்த்தியவர் ஆவர். கருத் துலகில் சஞ்சாரம் செய்து அன்ருட வாழ்வியலைப் புறக்கணிப்ப வரல்லர். ருஷ்ய நாட்டுச் சித்தாந்தத்தைப் புறக்கணிப்பவரல்லர். அந்நாட்டுச் சித்தாந்தமாக விளங்கும் பொருள்முதற் கொள்கையை யும் (**Materialism**), அதன் மூல நூல்களையும் பயின்று அவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறி அதனைத் திறனுய்ந்துள்ளார். கார்ல் மார்க்ஸ் சிந்தனைகளை நன்கு விளக்கி அதிலுள்ள குறைகளையும் புலப்படுத்தினுர்.

கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தத்துவ அறிஞராக விளங்கிய இராதாகிருஷ்ணன் நமது இந்தியக் குடியரசு துணைத் தலைவராகவும் அதற்குப் பிறகு குடியரசுத் தலைவராகவும் பணி யாற்றி அப் பதவிக்குச் சீரும் சிறப்பும் தேடிவைத்தார். பிளேட்டோ கருதியவாறு 'மெய்யறிஞரே நாட்டுத் தலைவராக வருதல் வேண்டும்' என்பதற்கியைய இராதாகிருஷ்ணன் தலைவராக விளங்

கிறார். உலகு கண்டுள்ள உயர் பண்புகளை எல்லாம் ஒருங்கே போற்றினார்; உலகுக்கு அறிவுறுத்தினார்.

மெய்ப்பொருளியல் சிந்தனைகள் ஆழமாக இருந்தால், அவை சுவையற்றனவாதல் வேண்டும் என்பதும் பலர் தவறுகக் கொள்ளும் கருத்தாகும். ஆழ்ந்த சிந்தனையைச் சுவைபெறச் சொல்லவும் எழுதவும் இயலும் என்பதை உணர்த்தியவர் நமது ஆசிரியர். அவரது நடை மிகவும் இனிய, தெளிவான நடையாகும். கருத்துகளைத் தங்குத் தடையின்றி இயல்பாக எடுத்துக் கூறுவதில் வல்லவர். எழுத்தாற்றலும் மிக்கவர். இவர்தம் எழுத்தும் பேச்சும் ஒரு படித்தாய் விளங்கும். உரைநடையில் அமைந்த இவரது தத்துவக் கருத்துகள் படைப்பிலக்கியமாக இன்று அமைந்து விளங்குகின்றது. இவர் எடுத்தாளும் உவமைகள் தெளிவாக அமைவதோடு சிந்தனையில் நின்று என்றும் உண்மையை உணர்த்த வல்லன. கரும நியாயத்தை விளக்க இவர் கையாண்ட சீட்டாட்ட உவமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இவரது கருத்துகள் செல்வாக்கு உடைமைக்குக் காரணம் இவரது நாவன்மையாகும். இதனையே நாநலம் என்று கூறி மேடைப்பேச்சினின்று பிரித்துணர வேண்டும். பல ஆண்டுகள் வருந்தி முயன்று சேகரித்த கருத்துகள் மிக எளிமையாக முயற்சியின்றி அவரது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படும். இவர் எழுதிய நூல்கள் பல. இவற்றுள் மிகச் சிறந்தனவாக அமைவன: இவரது 'இந்திய தத்துவ வரலாறு' ஒன்று; மற்றொன்று, 'கருத்து முதற் கொள்கையானது வாழ்வியல் பற்றிய நோக்கு' (An Idealist view of life). இவர் சமயத்திற்கும்—குறிப்பாக இந்து சமயத்திற்கு—ஆற்றியுள்ள தொண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந் நூற்றாண்டில் சமயத்திற்குரிய இடத்தைத் தமது சிந்தனையின் ஆற்றலாலும் தெளிவாலும் உலகிற்கு உணர்த்தியவர் இராதாகிருஷ்ணன் ஆவார். சமயம் வேறு, தத்துவம் வேறு என்று உணர்த்தத் தொடங்கினார். பின்னர் சமயம் சார்ந்த மெய்ப்பொருளியல் இவ்விரண்டு துறைகளும் எவ்வாறு இயைந்து பணிபுரிய வல்லன என்று காட்டினார். இவரது கொள்கை வரம்பற்ற கருத்து முதற் கொள்கை என்று (Absolute Idealism) முன்னர் கண்டோம். இக் கருத்தை அறிவிற்குப் பொருந்தும் வண்ணம் ஆசிரியர் 'சம காலத் தத்துவ' உலகில் சமயத்தின் ஆட்சி (Reign of Religion in Contempoıary philosophy) என்ற நூலினுள் நன்கு நிறுவியுள்ளார். நமது ஆசிரியர் தாம் முதன்முதலாக, மூலமான பிறிதின் சார்பற்ற கருத்துகளைக் கூறியதாக என்றும் பெருமை கொள்வதில்லை. கவிதையுலகில் புதுமை (Originality) என்பது, சொல்லப்பெறுகின்ற கருத்துகளில் அடங்கும், அல்லது சொல்லுகின்ற முறையில் அமையும். தத்துவ உலகில் மெய்ப்

பொருள் கருத்துகளின் சிறப்பை உணர்ந்து அதனை உணர்த்துவதிலேதான் புதுமை அடங்கும். மெய்ப்பொருளியலில் உள்ள பல்வேறு சிக்கல்கட்குத் தீர்வு பல்வேறு நூல்களில் கண்டுள்ளார். இந்த நூற்றுண்டில் புதுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்திய தத்துவ வரலாறு அமைகின்றது. புலமையின் வளர்ச்சியில் ஓர் சிறந்த பங்காக இந் நூலைத் தத்துவ அறிஞர் உலகு போற்றுகின்றது. இந் நூலின் சிறப்பு இன்றும் குன்றுமல் விளங்குகின்றது. ஆசிரியர் இந் நூலுக்கு வரலாறு என்று தலைப்பு அமைக்கவில்லை என்றாலும், இந்தியத் தத்துவத்தை வரலாற்று முறையிலேயே அமைத்து எழுதியுள்ளார். இத் துறையில் எழுந்த பிற நூல்கள் எல்லாம் இவர் எழுதிய பிறகு எழுந்தவையாகும். மிகவும் விரிவான ஒரு முயற்சி இந் நூல். நூல் முழுமையும் நடையின் சிறப்பு குன்றவில்லை. கற்போர் மனத்தில் நடை அழகும் பொருளழகும் ஒருங்கே பதிகின்றன. பிற வரலாறுகள் செய்திகளால் செறிந்து விளங்கும். அல்லது கருத்து வேறுபாடுகட்கு இடம் தருவனவாக அமையும். எந்தத் தத்துவ அமைப்பை எடுத்துக் கூறினாலும் அந்த அமைப்பில் தோய்ந்தவராக இருந்து அதன் நலன்களை எடுத்துச் சொல்வதில் வல்லவர் இராதாகிருஷ்ணன். பின்னரே அவ்வமைப்பில் உள்ள குறைகள் இடம் பெறும்.

ஒரு நாடு எந்த அளவிற்கு உயரிய பண்புகளைப் போற்றுகின்றதோ அந்த அளவிற்கு நிலைபெறுவதாகும் என்பது ஆசிரியர் கருத்தாகும். நமது நாடும் பிற நாடுகளும் போற்றி வந்துள்ள மதிப்பீடுகளில்—பண்புகளில்—ஒரு மறு மலர்ச்சி தேவை என்று ஆசிரியர் உணர்ந்தார். அம் மறுமலர்ச்சி தோன்றும் வகையிலும் பேசினர், எழுதினர். பொறை (**Toleration**) என்பது இன்று பெருவழக்காக அமைந்துவிட்டது. பொறையின் தேவையை உணர்ந்தாரும் இலர், உணர்த்தாதவர்களும் இலர். எல்லைக்குட்பட்ட மனம் எல்லை யிறந்த பரம்பொருளை உணரத்தலைப்படும்போது அப்பொருள் எல்லையின்றி விரிந்து கொண்டு செல்வதையும் அதனை முற்றிலும் அறிய இயலாது என்பதையும் அறிகின்றது. இவ்வாறு அறிவதன் விளைவே, பிற சிந்தனைகளை நாம் ஏற்று அவற்றின் வெற்றி யாது என்று அறிகின்ற முயற்சியாகும் என்று ஆசிரியர் கருதுகிறார். ஆசிரியர் சிந்தனையாளர்களை மதிப்பிடும்போது அவர்களது சிறந்த சிந்தனைகளையே தேர்ந்து எடுத்து மதிப்பிடுவார். மார்க்ஸிய கருத்துகளையும் இவ்வாறே மதித்துள்ளார் இராதாகிருஷ்ணன் வகுத்த புலன்கடந்த பொருளியற் கொள்கையில் (**Metaphysics**) காட்சிப் பொருள் உண்மை வாதிகள் (**Realists**) கண்ட குறைகளை, ஸ்ரீவத்ஸவா கருதுகின்றார். நமது ஆசிரியர் வகுத்தது, வேதாந்தக் கருத்து முதற்கொள்கையாகும்.

இக் கொள்கை நமக்கு இன்றுள்ள மதச்சார்பற்ற ஜனநாயக அமைப்பில் பயன்படாததாக அமைகின்றது. ஆசிரியர் ஆன்மீகக் கொள்கைகளை வற்புறுத்துகிறார். இவர் மரபு வழியில் தமது சிந்தனையை அமைக்கின்றார். வாழ்விற்கு வழி காட்டவல்ல ஒரு கொள்கையை அவர் வகுக்கவில்லை. இவர் அனுபூதி நெறிகளில் அல்லது மறைமை சார்ந்த கொள்கைகளில் தோய்ந்தவராக இருப்பதால், அன்றாட வாழ்விற்கு ஆசிரியர் வழிவகுக்க வில்லை என்பது காட்சிப்பொருள் உண்மைக் கொள்கையரது கருத்தாகும். காந்தி அண்ணல் இவ்வுலக மக்கட்கு நடைமுறை வாழ்க்கையில் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். உலகு இன்று சிறந்த செயல் முறையை எதிர்பார்க்கின்றது. நமது ஆசிரியர் ஞானயோகியாக விளங்குகின்றார். தோழமை, மனிதப் பண்புகளைப் போற்றுதல், பொருளாதார வளம் இவையே இன்றுள்ள தேவைகள். 'நடைமுறைக்கு ஒவ்வுகின்ற கொள்கையை ஆசிரியர் தரவில்லை. மனிதச் சமுதாயம் மேம்படுவதற்கு உரிய திட்டத்தை ஆசிரியரது தத்துவக் கொள்கைத் தராது' என்பது காட்சிப் பொருள் உண்மை வாதிகளது குற்றச் சாட்டாகும்.

ஆசிரியர், ஆன்மீகப் பண்புகளைப் போற்றுகின்றார் என்பது உண்மையே ஆகும். இவர் பரம கருத்துமுதற் கொள்கையை வேதாந்தத்தின் அடிப்படையில் வகுத்துள்ளார் என்பதும் நாம் அறிந்த ஒன்று. தத்துவ அறிஞராதலால், நடைமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டுவது இவர் பணியன்று. என்றாலும் இவர் ஆற்றிய உரைகளிலும், எழுதிய நூல்களிலும் உலக வாழ்வில் நாம் சந்திக்கும் பிரச்சினைகளை இவர் ஆராயாமல் இல்லை. இவர் தாம் குடியரசுத் தலைவராக விளங்கிய காலத்தில் இந்தியாவை எதிர் நோக்கி இருந்த பிரச்சினைகளைக் கருதாமல் இல்லை. வேதாந்த உண்மைகளை நன்கு தெளிந்திருந்த நிலையில் மனிதன் எவ்வுயிரிடத்தும் பிரம்மத்தையே காண்கின்ற காட்சி அமையப்பெற வேண்டும் என்று வற்புறுத்தினார். கரும நியாயத்தினை எடுத்து விளக்கும் போது மனிதனின் பொறுப்புகளை வற்புறுத்தியுள்ளார். யாவும் வரையறையுற்று விளங்குகின்றன என்று கொண்டு மனிதன் வாளாவிருத்தல் கூடாது என்பது இவரது முடிபாகும். மனிதச் சமுதாயம் பகைமைகளை மறந்து தோழமை நெறியில் இயங்க வேண்டும் என்பது இவர் அடுத்தடுத்து வற்புறுத்துகின்ற உண்மையாகும். காந்தி அண்ணல் பணிபுரிந்தது அரசியலுலகாகும். ஆதலால், அன்றாட வாழ்வியல் பிரசினைகட்கு அவர் வழிகாட்ட வேண்டுவதாயிற்று.

அகவுணர்வு அல்லது உள்ளுணர்வே நமக்கு உண்மையை உணர்த்தும் என்பது இராதாகிருஷ்ணன் வலியுறுத்தும் கருத்தாகும்.

இவ்வக வுணர்வு அறிவானும் அறிபொருளும் ஒருமை எய்துமாறு செய்கின்றது. இத்தகைய ஒருமை, புலன்கடந்த பொருளியலில் நிகழ இயலாது என்று மற்றையோர் சுட்டிக் காட்டுகின்றனர். அறிவு நிகழ்வதற்கு இருமை தேவை, ஒருமையன்று. உள்ளுணர்வு அனுபவம் என்ருல் அது அறிவாகாது. அறிவு நிகழும்போது, அறிவான் அறிபொருளை அறிகின்ருன். உள்ளுணர்வு என்பது நமது உண்மை நிலை என்ருல் அது அறிகின்ற வாயிலாகாது. அது அறிகின்ற முறை எனின், அது உண்மை நிலை ஆகாது என்று எடுத்துக் கூறி ஆசிரியரது அகவுணர்வுக் கருத்தை மறுக்கின் றனர்.

இராதாகிருஷ்ணன் தமது உள்ளுணர்வு பற்றிய கருத்தை நமக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளார். இவ் விளக்கத்தை நாம் முன்னர்க் கண்டுள்ளோம். அகவுணர்வு என்பது புலக் காட்சி, அறிவு கொண்டு அறிதல் ஆகிய இவ்விரு அறிதற்குரிய வாயில்களையும் உட்படுத்துவதாகும். ஆதலால், நாம் உள்ளுணர்வை அறிவாற்றலி னின்று பிரித்துப் பேசுதல் பொருந்தாது. உள்ளுணர்வு மேலான அறிவை நமக்குத் தருகின்றது; ஏற்புடைய அறிவை நமக்கு நல்கு கின்றது; பொருளின் உண்மையை உணர்த்துகின்றது; முழுமை யான அறிவைத் தருகின்றது.

இராதாகிருஷ்ணன் கருத்துமுதற் கொள்கை வாதியவார். இவரது கருத்தின்படி பரம்பொருளே உள்ளது ஆகும். ஆன்மாக் களும் உலகும், இவ்வுள் பொருளைநோக்க உண்மையுடையன அல்ல. டாக்டர் ஒய். மசீ என்பவர் இங்கே எழுப்புகின்ற கேள்வி; 'பரம்பொருளே உள்பொருள் என்பதால், ஆன்மாவின் தனித் தன்மைக்கு இடம் யாது?' ஜீவன்கள் அனைத்தும் மித்தை என்பதும், இவை யாவும் தத்தம் ஜீவத் தன்மையை இறுதியில் இழக்கின்றன என்பதும் நாம் பெறக்கூடிய உண்மைகள். இராதாகிருஷ்ணனது கருத்துமுதற் கொள்கை தனியொருவனது உண்மையை நிறுவ இயலாது. ஆதலால், ஜனநாயகத்திற்கு ஏலாத கொள்கையாகும் என்பதாகும்.

பரம்பொருளே உள்ளது என்பது இராதாகிருஷ்ணன் கருத்து என்ருலும், நாம் வாழுகின்ற உலகிற்கும் ஜீவப் பன்மைக்கும் ஆசிரியர் உண்மை நிலையை வழங்க வில்லை என்பது சரியன்று. உலகு நமது அனுபவ நிலையில் உண்மையே என்பது ஆசிரியரது கருத்தாகும். ஜீவன்களும் பல என்பதும் இவர் ஏற்கின்ற உண்மை. ஆன்மீக வாழ்விற்குப் பரம்பொருளின் உண்மையை ஏற்க வேண்டும். ஜீவப் பன்மை உபாதிகளால் நேரிடுவது. பரம் பொருள் காட்சி அமையும்போது இப் பன்மை நமக்குத் தோற் ருது. உலகுண்மையோ, ஜீவப் பன்மையோ இல்லாமல் போவ

தில்லை. ஆதலால், இவ்வுலக வாழ்வில் நாம் ஆற்ற வேண்டிய கடமைகட்கு கருத்துமுதற் கொள்கை எவ்விதத்திலும் ஊறு விளைக்காது.

இராதாகிருஷ்ணன் தாம் பொதுவான உலகிற்கு ஏற்றதொரு சமயத்தை நிறுவுவதாகக் கூறுகிறார். உலகச் சமயங்களின் கூட்டு அமைப்பு ஒன்றை, இவர் நிறுவ முயன்றார் என்றும், இத்தகைய அமைப்பே மனிதரிடையே தோழமையை நிலவச் செய்யும் என்றும் ஆசிரியர் கருதுகிறார். பல மெய்யறிஞர் பொதுச் சமயம் காண முற்பட்டு, தோல்வியையே கண்டுள்ளனர். ஆசிரியரது பொதுச் சமயமும், இவர் கருதுவதைப் போன்று பொதுத்தன்மை வாய்ந்ததன்று. இவரது தத்துவ அமைப்பு, சங்கரர் இராமானுஜர் ஆகிய இருவரது வேதாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இவரது தத்துவக் கொள்கை கருத்தியல்பானது. சமத்துவம், தோழமை, நேர்மை போன்ற பண்புகளை, யோக தியானத்தாலோ அல்லது அனுபூதி நெறியினாலோ நாம் பயில இயலுமா? என்ற கேள்வி இங்கே எழுப்பப் பெறுகின்றது. காட்சிப் பொருள் உண்மைவாதிகள், இப்பண்புகளை இறைத் தியானத்தாலோ பிரம்மத் தியானத்தாலோ பெற இயலுயாது என்று கூறுகின்றனர். அகத் தூய்மை, பண்பு நலம் ஆகியவற்றைக் கருத்தியல்பான சொற்பொழிவுகளால் பெற இயலாது என்று இவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். தனியொருவன் நிறைவு பெறுவதை இராதாகிருஷ்ணன் புறக்கணிக்கின்றார் என்றும், சமுதாய ஒருமைப்பாடு, நல்லுறவு போன்றவற்றிற்கு ஆசிரியர் வழிகாட்டவில்லை என்றும் கூறுகிறார்கள்.

வேதாந்தம் ஞானத்திற்கு உயர்ந்த இடம் தருகின்றது என்பது உண்மையே என்றாலும், உலகிடையே நாம் வாழும் வரையில் சீரிய ஒழுகலாறு தேவை என்பதை ஏற்கின்றது. ஆசிரியரது நூல்களில் இவ்வுண்மை, நன்கு வலியுறுத்தப் பெறுகின்றது. ஆசிரியர் பௌத்த சமயத்தின் உண்மைகளை நன்கு வற்புறுத்துகின்றார். கருணை, அன்பு முதலியவற்றை நன்கு போதித்துள்ளார். பரம்பொருள் ஒன்றே என்ற உணர்வுடையவன் பன்மை உணர்ச்சிகட்குப் பலியாகமாட்டான். பரம்பொருளாகிய பிரம்மத் தியானத்தால் அவன் பன்மையுணர்வு நீங்கப் பெறுவான். இந்த வேதாந்தத் தெளிவு அவனது இம்மை வாழ்வில் சீருஞ் சிறப்பும் அமைய வழி செய்யும். சமயங்கள் தோன்றிய காலங்களினாலும், சூழ்நிலைகளாலும் பலவாகத் தோன்றுகின்றன. இவை யாவும் அடிப்படையில் சில உண்மைகளை வற்புறுத்துகின்றன. அனுபூதி நிலை சமயத் தலைவர்களை எல்லாம் ஒற்றுமைப்படுத்துகின்றன. பொதுச் சமயம் என்பது எல்லோருக்கும் உடன்பாடாக அமையும் சமயக் கூறு

களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது என்று பொருள். ஆதலால், ஆசிரியரது முயற்சி போற்றற்குரியதே ஆகும். சமய உலகில் வெறுப்பும் பகைமையும் நீங்க வேண்டும் என்று ஆசிரியர் முயன்றதில் வெற்றியே பெற்ருர் என்று கொள்ள வேண்டும். சமயத்தின் புறக்கூறுகளை எல்லாம் கடந்து அகநிலை உண்மைகளை அவர் வற்புறுத்தினுர். இவ்வாறு ஆசிரியர் வலியுறுத்திக் கூறுவதற்கு வேதாந்த நோக்க அமைவு பெரிதும் துணைபுரிகின்றது.

சார்லஸ் ஹார்ட்ஷார்ன் (Charles Heartshorne) என்பவர், இராதாகிருஷ்ணனது பரம்பொருட் கொள்கையையும் இறைக் கொள்கையையும் பற்றி (Absolute and God) தமது கருத்துகளை, ஆசிரியரைப்பற்றித் தொகுக்கப் பெற்ற கட்டுரைத் தொகுதியில் (Philosophy of Sarvapalli Radhakrishnan) கூறியுள்ளார். பரம் பொருட் கொள்கையையும் இறைக் கொள்கையையும் எவ்வாறு இணைப்பது என்பதே இங்கு எழுகின்ற கேள்வியாகும். பரம்பொருள் உறவற்றது, கடந்தது, தூய கருத்தியல்பானது. இறைவனே அல்லது கடவுளோ, உறவுடையது, பிரபஞ்சத்தில் கலந்து விளங்குவது, கருதக் கூடியது. பரம்பொருள் உறவற்றது என்று சொல்வது அதை எதிர்மறையாகக் கருதுவதாகும். இந் நிலையில் பரம்பொருள் வெறுமையாக, பாழாக, விளங்குவது என்பது ஹார்ட்ஷார்ன் கருத்தாகும். மேலும், உறவற்றது எங்ஙனம் உண்மையுடையதாகும் என்பதும் அவரது கேள்வியாகும். இறைவன் கருதக்கூடியது என்ருல் கருதக் கூடாததினின்றும் ஏன் பெறப் பெறுகின்றது? உறவோடும், கருத்துப் பொருளாக ஆற்றலோடும் விளங்கக்கூடிய இறைவன் கருத்திற்கு அப்பாற்பட்ட பரம்பொருளின்று தோன்றுவது அல்லது வெளிப்படுவது என்பது இராதாகிருஷ்ணனுல் நன்கு விளக்கப்பெருத ஒன்ருகும்.

இராதாகிருஷ்ணன் கூறுவது: பரம்பெருளும் இறைவனும் ஒன்றையொன்று நீக்குவனவல்ல. இத் தத்துவங்கள் ஒன்றினின்று மற்ருென்று நீங்கிப் பிரிந்து நிற்பன அல்ல. பரம்பொருள் உள்ளது, ஆதல் தன்மையும் கூடியது (Becoming), நிலைத்து விளங்குவது, உள்ளது, இயங்கவும் வல்லது ஆற்றல் மிக்கது. அவயிக்த நிலையில், வெளிப்படாத நிலையில், பரம்பொருளாக விளங்குகின்றது. வெளிப்பட்ட நிலையில் இறைவனுக விளங்குவது, உள்பொருள் என்பது—பரம்பொருள் இறையாகும். இவ்விரு நிலைகளும் ஒருங்கே இணைந்து நிற்பதுதான் பரம்பொருளின் உளதாம் தன்மையாகும். மாறுபடுகின்ற இருவேறு இயல்புகள் ஒன்றன் பக்கலில் மற்ருென்று நிற்பதாகக் கருதுவது தவருகும். பரம்பொருள் உருவமற்றது; பெயரற்றது. இருந்தாலும், எல்லா வடிவங்களாகவும் பெயர்களாகவும் விளங்கக் கூடியது.

உயர்வற உயர்ந்த உள்பொருளைப் பரம்பொருளென்றும் இறைவனென்றும், ஹிரண்யகர்ப்பம் என்றும் பிரித்தால், ஹார்ட்ஷார்ன் அவர்களது தடை பொருத்தமாகும். உள்பொருளின் பல்வேறு நிலைகளே, பரம்பொருள், இறைவன் ஹிரண்யகர்ப்பமாகும். பரம்பொருள் இறைநிலையையும் ஹிரண்ய கர்ப்பத்தையும் உட்படுத்துவதாகும். பரம்பொருள் உருவ, அருவ நிலைகளில் வெளிப்படக் கூடியது. இருப்பு நிலையிலும் இயங்கு நிலையிலும் விளங்குவது. தோன்றக்கூடிய வாய்ப்புகள் அனைத்தும் ஒருங்கே பரம்பொருளினிடத்து விளங்கும். கடந்த நிலையில் பரம்பொருளென்றும் (பிரம்மம்), படைப்பு நிலையில் ஈஸ்வரன் என்றும், ஞானம், ஆற்றல், அன்பு ஆகிய நிலைகளில் ஹிரண்ய கர்ப்பமென்றும் விளங்குகின்றது. இம் முறை அளவை முறையாகும். காலக்கூறு இதில் இல்லை.

இராதாகிருஷ்ணன் முக்கியமாக வற்புறுத்துகின்ற உண்மையானது பரம்பொருள், உணர்வு, உண்மை ஆனந்தமாகும். சங்கரரது பிரம்மம், கடந்த நிலையில் வரையறுக்க வொண்ணாததாக, அருவமான நிலையில் விளங்குவது. இராதாகிருஷ்ணனது தத்துவத்தில் பிரம்மம் உணர்வு மட்டுமன்று, ஆற்றலும்கூட. பரப்பிரம்மம் வெறுமையன்று. பரம்பொருள் ஒன்று அல்லது ஒருமை என்றாலும், பலவற்றையும் உட்படுத்துவதாகும். இப் பொருள் பிரித்தறியக்கூடிய பல பகுதிகளோடு கூடிய முழுமையானதாகும். சங்கரரது பிரம்மம் ஏதுமற்ற வெறுமையாகும். இராதாகிருஷ்ணன் கருதும் பிரம்மம் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஆற்றல் சான்றதாகும். இப் பொருளில் அடங்கியுள்ள பகுதிகளும் ஆற்றல்களும் பலவிதங்களில் வெளிப்படுகின்றன.

# மேற்கோள் நூற்பட்டியல்

## (BIBLIOGRAPHY)


**Aurobindo**

1. An Introduction to the Philosophy of Sri Aurobindo—S. K. Maitra, Sri Aurobindo Ashram.
2. Mahayoga—R. R. Diwakar, Bhavan's Journal.
3. The Philosophy of Integralism—Haridas Chaudhri.
4. A Critical Study of Sri Aurobindo—L. G. Chincholkar.
5. Riddle of the world — Sri Aurobindo Aurobindo Ashram.
6. Lights on Yoga ,, ,,
7. Synthesis of Yoga ,, ,,
8. Life Divine - (Two volumes) ,, ,,
9. Human Cycle ,, ,,
10. Mother ,, ,,

**Rabindranath Tagore**

1. Religion of Man—Rabindranath Tagore, Unwin publication.
2. 'Manithanin Samayam' (Tamil), R. Tagore, Kalaimagal Publication.
3. Gitanjali ,, ,,
4. ,, (Tamil) ,, ,,
5. Sadhana ,, (Macmillan)
6. Creative personality ,,
7. Presonality ,, ,,
8. Fruit Gathering

9. Tagore Centenary Souvenir—Tagore Memorial Publication.

10. Tagore (A philosophical study)—Naravane.

11. The Religion of Tagore in the Light of the Gospel—Sigfrid Estborn—C. L. Society.

12. Lectures and Addresses by Rabindranath Tagore, Macmillan (Selected by Anthony and Soares).

13. Kavijnar Tagore—Dr. M. Varadarajan.

Mahatma Gandhi

1. My Experiments with Truth — Autobiography By M. K. Gandhi.

2. Indian Philosophical Annual — Vol. V — Proceedings of the Seminar on Gandhian Weltan Chawang, University of Madras.

3. The Philosophy of Mahatma Gandhi —Dhirendra Mohan Datha, Madison, The University of Wiscunsin Press, U.S.A.

4. Gandhi's challenge to Christianity—By S. K. George.

5. Gandhi's view of Life—C. S. Shukla.

6. Gandhi—Louis Fischer.

7. Selections from Gandhi—N. K. Bose.

8. Gandhi Annal—Dr. M. Varadarajan.

Sri Ramana Maharishi

1. Philosophy of Existence—Dr. T. M. P. Mahadevan.

2. Ullathu Narpathu (Tamil)—Sri Ramanar.

3. Talks with Sri Ramana Maharishi— (Three volumes inone) Ramanashramam.

4. Talks with Sri Ramana Maharishi—Osborne.

Sri Ramakrishna Paramahamsa

1. Gospel of Sri Ramakrishna—Ramakrishna Mutt.

2. Ramakrishna Mozhiamutham (Tamil) ,, Madam, Madras.

Saint Ramalingam

1. Thiruvarutpa—Ooran Adigal's Publication.
2. Philosophy of Saint Ramalingam — B. P. Annamalai, Bhavan's Publication.

Dr. Radhakrishnan

1. Religion and Society—(Kamala lectures)— Dr. Radhakrishnan.
2. An Idealist view of life—(HIBBERT lectures).
3. The Philosophy of Rabindranath Tagore— Dr. Radhakrishnan.
4. The Principal Upanisads—Dr. Radhakrishnan.
5. Eastern Religion and Western thought—Dr. Radhakrishnan.
6. Indian Philosophy (Two volumes)— Dr. Radhakrishnan.
7. The Religion we need—Dr. Radhakrishnan.
8. Hindu view of Life—Dr. Radhakrishnan.
9. Idealistic thought in India—P. T. Raju.
10. Counter Attack from the East—C. E. M. Joad.
11. Philosophy of Sarvapalli Radhakrishnan — Library of Living Philosophers, Edited by Schlipp.

Contemporary Indian Philosophy

1. Contemporary Indian Philosophy by Dr. Srivastava, Mumhiram Manohar lal, Delhi.
2. Modern Indian thought—V. S. Naravane, Asia Publishing.
3. Twentieth century Indian Philosophy—Nilima Sarma Bharatiya Vidya Prakasana, Varanasi.
4. Indian thought and its Development—Albert Schweitzer (Jaico Publication).
5. Hinduism through the Ages— D. S. Sarma, Bharathiya Vidya Bhavan.
6. Contemporary Indian Philosophy—Dr. P. Nagaraja Rao.
7. Among the Great—Dilip Kumar Roy.
8. Outlines of Hinduism—Dr. T. M. P. Mahadevan.

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| இஸ்லாமிய அனுபூதி முறை | — Sufism |
| அறிவு வேட்கை | — Intellectual quest |
| அனைத்திறைக் கொள்கை | — Pantheism |
| அனைத்து மனக் கொள்கை | — Pan - psychism |
| அழிவு அல்லது முற்றிலும் நீங்கிப் போதல் | — Extinction or annihilation |
| அறிதலுக்கும் உள்ளதன் நிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு | — Knowing and Being-Difference |
| அகம் ; தான் என்ற உணர்ச்சி ; தன்முனைப்பு | — Ego |
| அடிமனம் | — Subliminal mind |
| அறிவு நெறிக் கோட்பாளர் ஆன்மீக நலமுடையார் | — Gnostic beings |
| அரசு | — State |
| அறிவு கடந்த ஒன்று | — Super - rational |
| அறியொணு நிலை | — Incomprehensibility |
| அக உணர்வு | — Intuition |
| அளவை அறிவு | — Logical knowledge |
| அளவை நெறி | — Logical method |
| ஆன்மீக அடிப்படையில்-அரசியல் | — Spiritualisation of politics |
| ஆளுமை சார்ந்த நிலை | — Personal |
| ஆளுமையற்ற நிலை | — Impersonal |
| ஆளுமை | — Personality |
| ஆளுமை சார்ந்த இறைவன் | — Personal god |
| ஆற்றல் | — Power |
| ஆன்மாவை அறிதலும் ஆன்மா வாக இருத்தலும் ஒன்றே | — Knowing the Self is being the Self |
| ஆன்மா | — Psyche ; spirit |
| ஆதல் நிலை | — Becoming |
| ஆதற் கூறு | — Becoming aspect |
| ஆராயாத சில உண்மைகள், சித்தாந்தங்கள் | — Dogmas |
| ஆன்மீகக் கொள்கையினன் | — Spiritualist |
| ஆன்மீகக் கொள்கை | — Spiritualism |
| ஆன்மீக உள்ளுணர்வு | — Spritual intuition |
| இறைவன் | — God |
| இறைவனிடத்து விளங்கும் ஆளுமை | — Personality in God |
| இறைவனது ஆளுமை | — Personality of God |

இறைவனின் மனிதத் தன்மை — Humanisation of God
இயற்கை வாதம் — Naturalism
இறைவனை மையமாகக் கொள்ளல் — God - centred
இறைக் கொள்கை — Theism
இருத்தல் (உள்ளது) — Being
இரக்கம் அல்லது ஒடுக்கம் — Involution
இயற்றி நிலை — Will
இளைய மேதைகள் — Prodigies
உலக நாடுகளின் ஒன்றியைந்த அரங்கம் — U.N.O.
உலகு ; வாழ்க்கை மறுப்புக் கொள்கைகள் — World and life negation
உள்பொருள் — Real
உண்மை — Truth
உணவிற்காக உழைத்தல் — Bread labour
உள்ளது சிறத்தல் — Evolution
உயிர்த் தத்துவம், உயிராற்றல் — Life
உயிர் சார்ந்த கொள்கை — Vitalism
உளதாம் தன்மை — Existence
உள்ளதும் ஆதலும் — Being and becoming
உணர்வின் கீழ் எல்லைகள் (உணர்வு நிலைகள்) — Subliminal levels of consciousness
உண்மையான கருத்து — Real idea
உண்மை உணர்வு — Truth - consciousness
உயர் மனத்தின் மூவகை நிலை — Triple status of the super-mind
உள்ளார்ந்த நிலை — Immanent
உணர்வு — Consciousness
உணர்வு கடந்ததோர் நிலை — Super - consciousness
உரு - மாதிரி நிலை — Typal
உயர்நிலை — Standard
உயிர்ப்பொருள் — Organism
உள் பொருள் — Being
உள்ளதன் நிறைவு — Fullness of being
உண்மை அல்லாதது — Other than real
உண்மைக் (காட்சிப் பொருள்) கொள்கையினன் — Realist
எல்லைக்குட்பட்ட இறைவன் — Finit God
ஒடுக்கம் — Involution
ஒருமைக் கொள்கை — Monism
ஒன்றும் பலவும் — One and the many

| | |
|---|---|
| கருதுகோள் | — Hypothesis |
| கருத்து முதற்கொள்கை, பரமநிலை | — Absolute idealism |
| கண்டு பிடிப்பு ; வெளிப்பாடு | — Discovery ; revelation |
| கருத்து முதற்கொள்கையின் வாழ்வியல் பற்றிய நோக்கு | — An idealist view of life |
| சடமும் சடமல்லாததும் | — Matter and spirit |
| செய்முறை வேதாந்தம் அல்லது நடைமுறை வேதாந்தம் | — Practical Vedanta |
| சடம் அல்லாதது | — Spirit |
| சடம் | — Matter |
| சமுதாய - அகம் | — Social egoism |
| சமயப் பொறை | — Religious tolerance |
| சமயம் சார்ந்த மெய்ப் பொருளியல் | — Philosophy of religion |
| சமய இயல் | — Theology |
| தன் உணர்வு | — Self - realization |
| தனிமனித நிலை | — Individualistic |
| தேசிய முதன்மை அல்லது சிறப்பு, இன முதன்மை | — National, racial superiority |
| தன் உண்மை நிலை | — Thing - in - itself |
| தொடர்ந்து வாழ்தல் | — Immortality |
| நடத்தைக் கொள்கையினர் | — Behaviourists |
| நடைமுறையில் பயன்படும் கருதுகோள் | — Working Hypothesis |
| நிறைவு | — Perfection |
| நான் என்னும் உணர்வு, தன்முனைப்பு | — Ego |
| படிமுறைத் தோற்றம் | — Evolution |
| படைப்பு சார்ந்த விளக்கம் | — Creative Interpretation |
| பிரும்மஞான சபையினர் | — Theosophists |
| படிமுறை வளர்ச்சித் தத்துவங்கள் | — Evolutionary Theories |
| பால நாடோடிக் கூட்டம் | — Bauls |
| பரம்பொருள் | — Absolute |
| பிரம்மம் | — Being ; Brahman |
| பன்மைக் கொள்கை | — Pluralism |
| பொருள் ஒருமைக் கொள்கை | — Materialistic monism |
| புலன்தகு வரவு | — Fact ; datum |
| படிநிலை உண்மை | — Doctrine of degrees |
| பயன்வழிக் கருத்து முதற் கொள்கை | — Pragmatic Idealism |
| பொருள் முதற் கொள்கை | — Materialism |
| புருஷ மாற்றம் | — Psychic change |

| | |
|---|---|
| ஆன்மீக மாற்றம் | — Spritual change |
| விஞ்ஞான மாற்றம் | — Supra-mental change |
| பூரண யோகம் | — Integral yoga |
| பிராமணங்கள்(வேதத்தின் பகுதி) | — Brahmanas |
| பூரண அனுபவம் | — Integral experience |
| புலக் காட்சி | — Pereeptual |
| பண்பு நலம் | — Character |
| புலன் கடந்த பொருளியற் கொள்கை | — Metaphysics |
| பரம்பொருட் கொள்கையும் இறைக் கொள்கையும் | — Absolute and God |
| மரபுவழிச் சிந்தனைகள் | — Tradition |
| மனிதப் பற்றுக் கோட்பாடு | — Humanism |
| மனிதர்கள் | — Persons |
| மனிதன் - இறைத் தன்மை உடையவனுதல் | — Divinisation of man |
| முற்றொருமையும் வேறுபாடும் | — Identity and difference |
| மனம் | — Mind |
| மனித வாழ்க்கைச் சுழல் | — Human cycle |
| மனம் - முதற் கொள்கை | — Mentalism |
| மனங்கடந்த ஓராற்றல் | — Super-mind |
| முழுமையானது | — Integral whole |
| மனங்கடந்த உணர்வு | — Supramental conciousness |
| மேலான மனம் | — Higher mind |
| தெளிவு பெற்ற மனம் | — Illumined mind |
| உள்ளுணர்வான மனம் | — Intuitive mind |
| மிகு மனம் | — Over mind |
| மறைமை; புதிர் | — Mystery |
| முரண்நிலைத் தருக்கமுறை | — Dialectic |
| முழுமையான அனுபவம் | — Integral experiance |
| மாறுகோள் | — Alternative |
| முழுமையான அறிவு | — Integral knowledge |
| யோகங்களின் இணைப்பு | — Synthesis of yoga |
| விஞ்ஞான மனம் | — Super - mind |
| விஞ்ஞான மன உணர்வு | — Supra - mental consciousness |
| வாழ்க்கையைப்பற்றிய நோக்கு | — Life - view |
| விஞ்ஞான முதற்கொள்கை | — Intellectualism |
| விஞ்ஞான மனிதர் | — Super men |
| விஞ்ஞானமயமாக்குதல் | — Supra - mentalisation |
| விஞ்ஞான மாற்றம் | — Supra - mental change |
| வெளிப்பாடு | — Revelation |
| வெறுமை | — Nothing |
| வரம்பற்ற கருத்து முதற் கொள்கை | — Absolute idealism |

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

1976 ஜனவரிவரை 700 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

மேலும் விரைவில் வெளிவருபவை

| | | | |
|---|---|---|---|
| பொறியியல் | — | 39 | நூல்கள் |
| மருத்துவம் | — | 18 | ,, |
| இயற்பியல் | — | 23 | ,, |
| வேதியியல் | — | 20 | ,, |
| தாவரவியல் | — | 13 | ,, |
| விலங்கியல் | — | 14 | ,, |
| கணிதம் | — | 17 | ,, |
| வணிகவியல் | — | 37 | ,, |
| பொருளாதாரம் | — | 21 | ,, |
| புவியியல் | — | 11 | ,, |
| வரலாறு | — | 29 | ,, |
| மனையியல் | — | 1 | ,, |
| தத்துவம் | — | 4 | ,, |
| உளவியல் | — | 8 | ,, |
| புள்ளியியல் | — | 8 | ,, |
| கல்வி | — | 15 | ,, |
| நிலப்பொதியியல் | — | 6 | ,, |
| அரசியல் | — | 19 | ,, |

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்

சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20 % கழிவு வழங்கப்படும்